உ

சிவமயம்.

பாரதப்புலி

அருணசலக் கவிராயரவர்களியற்றிய

# திருவரஞ்சரத் தலபுராணம்.

இது

திருக்கோவலூர்

உயர்தரக்கலாசாலை

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமான் தி. வடிவேலு முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பெற்றதை

வரஞ்சரம் தேவஸ்தான தர்மகர்த்தா

ஸ்ரீமான் சட்டமுத்துடையார்,

வரஞ்சரம் ஸ்ரீமான் வையாபுரி உடையார்

தியாகை ஸ்ரீமான் ஜெகந்நாத உடையார்,

வரஞ்சரம் ஸ்ரீமதி பழநியம்மா,

ஆகிய இவர்களது பொருளுதவிகொண்டு,

திருக்கோவலூர்.

ஸ்ரீமான் P. வேணுகோபால முதலியார்

அவர்களால்தமது

ஸ்ரீ நாராயண விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1925

௨

திருச்சிற்றம்பலம்.

# சருக்க வகராதி.



| நெ. | சருக்கம். | பக்கம். | பாட்டுகள். |
|---|---|---|---|
| ௧. | பாயிரம். | ௨ | ௨௧ |
| ௨. | திருவாஞ்சரத்தலமகிமைச்சருக்கம். | ௰ | ௬௪ |
| ௩. | பசு பூசைச் சருக்கம். .... | ௨௪ | ௭௩ |
| ௪. | வாலி பூசைச் சருக்கம். .... | ௩௯ | ௬௮ |
| ௫. | இராவணன்கயிலையடைந்த சருக்கம். | ௫௩ | ௩௮ |
| ௬. | திருவாஞ்சரச் சருக்கம். .... | ௬௩ | ௫௰ |
| ௭. | வீரவிரதச் சருக்கம். .... | ௭௩ | ௪௧ |
| ௮. | விபூதி மான்மியச் சருக்கம். | ௮௧ | ௪௩ |
| ௯. | அசனி பூசைச் சருக்கம் .... | ௯௰ | ௫௨ |
| ௰. | தீர்த்தச் சருக்கம். .... | ௱ | ௫௩ |
| ௰௧. | திருநகரச் சருக்கம். .... | ௧௰௧ | ௩௮ |
| ௰௨. | கோமுகி தீர்த்தச் சருக்கம். | ௧௧௮ | ௨௭ |
| ௰௩. | பிரம்மஹத்தி விமோசனச் சருக்கம், | ௧௨௪ | ௪௬ |
| ௰௪ | சுமணிச் சருக்கம். .... | ௧௩௪ | ௫௩ |
| ௰௫. | இருடி பூசைச் சருக்கம் | ௧௪௫ | ௩௰ |



ஆக பாடல்கள். ௬௯௭.

உ

சிவமயம்

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடிவாழ்க.

# முகவுரை.

உலகத்தில் மக்களாகப் பிறந்தார் அடைய வேண்டிய பொருள்களுள் சிறந்தது வீடு. அவ்வீடு ஞானம் ஒன்றானே எய்தற்பாலது. ஞானத்தை வருவிப்பனவற்றுள் நூல் ஒன்று. நூல்கள் பல்வகைய. அவற்றுள் சிறந்தன மூன்று. தலைவன் ஒருவன் தன் அடிமைக்குணர்த்துமாறு விதிமுகத்தானுணர்த்துவது ஒன்று. நண்பன் ஒருவன் தனது நண்பனொருவனுக்குணர்த்துமாறு அன்பு முகத்தானுணர்த்துவது ஒன்று. விளங்கிழை மெல்லியலொருத்தி தன் மகிணனுக்குணர்த்துமாறு காதன் முகத்தானுணர்த்துவது மற்றொன்று. இம்மூன்று வகையுள் நடுநின்றதே இக்காலத்தில் மேலானதெனக்கருதத்தக்கது. இக்காலத்திற் பெரும்பாலார் தலைவர்களால் இடுக்கண் எய்துதல் கூடுமோ என்றெண்ணம் வருங்காலத்தும ஊதியமில்லாதுபோமோ என்றெண்ணம் வருங்காலத்துமே தலைவர்கள் விதிக்குட்பட்டு நடக்கிறார்களென்பது நமதெண்ணம். தம் நிலையும் பிறர் நிலையுமுணர்ந்து கடமை அறிந்து ஒழுகுபவர்கள் சிலரே. காதல் முகத்தானுணர்த்துங்கால் அடங்கி நடப்பவர்கள் உண்டெனினும் அம்முறை உலக சிறு இன்பநுகர்ச்சிக்குக்கருவியே அன்றி வீடு அடைதற்குக்கருவியாகாது. இக்கலிநாளிலும் இருந்து வீடுபெறல் வேண்டுமெனும் நோக்கங்கொண்டயாம் அன்பு முகத்தானுணர்த்தும் புராண நூல்களைத்துணை கொள்ளவேண்டுவது இன்றியமையாததொன்றே. புராண நூல்கள் பழய கதைகளை யுணர்த்தும். இடம் பற்றியும் காலம் பற்றியும தெய்வம் பெரியார் ஆம் இவர் பற்றியும் பழய கதைகளைச் சொல்லும். இடம் பற்றிச்சொல்வனவற்றை ஸ்தல புராணம் என்பர். ஸ்தல புராணங்களுள் கூறப்படும் கதைகள் பாவம் செய்தார் பட்ட துன்பத்தை யுணர்த்து முகத்தால் பாவம் செய்யாமலிருத்தல் வேண்டும் என்பதனையும், புண்ணியம் செய்தார் பெற்ற இன்பத்தை யுணர்த்து முகத்தால் புண்ணியத்தைச் செய்தல் வேண்டும் என்பதனையும், புண்ணியஞ்செய்தாரும் பாவஞ்செய்தாரும் இன்ப துன்பங்களைத் துய்த்துப் பிறந்திறந்துழல்வார் என்பதுணர்த்து முகத்தால் பாவஞ்செய்யாது, புண்ணியத்தைச்செய்து, அப்புண்ணியத்தையும் இறைவனிடஞ்சேர்ப்பிப்பதானே பத்தியைப்பெறல் வேண்டுமென்பதனையும், அப்பத்தியையும் குருலிங்க ஜங்கமங்

களிடத்திற் செய்து ஞானம் பெற்று வீடு எய்தல் வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றன. புராணங்கள் தம்மைப்படிப்பாரது அறிவாற்றல்களுக்கியைய பல பொருள்களைத் தம்மிடத்துடையன. புராணங்கள் சொல்வனவற்றுள் இஃதின்ன வலியது இஃதின்ன வலியது என உணர்ந்து ஒழுகி நலம் பெறல் வேண்டும். இங்ஙனமிருக்க இக்காலத்திற் சிலர் புராணம் பற்றித்தம மனம் செல்லுமாறே விளம்புவர். அவருள்ளுஞ்சிலர் அன்பானே கூறுவர். சிலர் அறியாமையானே கூறுவர். அன்பாற் கூறுவார் கூற்றைக்கைக்கொண்டு ஆராய்ந்தமைக. அறியாமையான் கூறுவார் கூற்றைக்குறிக்கொளாதொழிக.

இதுகாறுங்கூறிப்போந்ததுணையானே புராணங்கள் கொள்ளத்தக்கன என்பதும், இக்காலத்தில் நம் நிலைமைக்கு ஏற்றன என்பதும், புராணங்களால் நாம அடைய வேண்டுவதாய வீட்டையடைதல் கூடும் என்பதையும், சொல்வார் சொற்களெல்லாங் கொள்ளாது, கொள்ள வேண்டுவன தெரிந்து கொள்ளல் வேண்டும் என்பதும் பெறப்படுகின்றன.

நவவடிவிறந்த நாதன் முழுமுதற்கடவுள் முத்திற வுயிர்களுக்கும் எத்திற இன்பத்தினையும் எய்துவிக்குந் திருவருட்பெருக்காலே இப்பூவுலகில் திருக்கோயில் கொண்டருளிய இடங்கள் பலப்பல. அவற்றுள் திருவரஞ்சரம் என்பது ஒன்று. இத்தலத்தில் திருக்கோயில் கொண்டருளும் ஸ்ரீபசுபதீசுரர் திருவெண்ணீறணி அம்மையாருடன் எழுந்தருளி மனமுதலிய மூன்றுனும் வழிபடுவார்க்குப்போகமோக்ஷங்களைத்தந்தருள்வர். இப்பெருமான் பெருமாட்டிகளுடைய பெருமையும் இப்பெருமானையும இப்பெருமாட்டியையும வழிபட்டார் பெருமையும் வழிபட்டார் எய்திய பேறும உணர்ந்தவழியன்றோ இப்பெருமான் பெருமாட்டிகளிடத்தில் அன்புண்டாகும். அன்புண்டாயவழி பெறுத பேறில்லை. மூர்த்திகளிடத்தில் அன்புண்டாயபோது அம்மூர்த்திகள் எழுந்தருளிய இடத்தினிடத்தும் அம்மூர்த்திகள் கொண்டருள் தீர்த்தங்களிடத்தும் அன்பு நிகழும. இங்ஙனம் மூர்த்தி தலம் தீர்த்தங்களிடத்து அன்பு நிகழ்தற்குக் கருவி இத்திருவரஞ்சரத்தலபுராணமே. எத்தலப் புராணமும் வடமொழியிலிருந்து தமிழில் வந்ததென்பது அன்பு நிகழ்வதற்கேதுவாய கொள்கை. வடமொழியிலிருந்த இப்புராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத்தந்தாலொழிய தமிழ் நாட்டினர் பயன் பெறுத லெங்ஙனம். இதனை யுணர்ந்த உபகாரியார் பார்க்கவகுல தீபமாகிய முத்துடையான் மாரிமுத்துடையான் என்பார் இற்றைக்குத்தொண்ணூற்று நான்கு ஆண்டுகளின் முன்னர் தமிழில் ஆக்

குவித்துப்பெருநலன் தாமும் பெற்று நம்மையும் பெறுமாறுசெய்தனர். அக்காலத்தார் உபகார குணத்தை என்னென்றுபுகழ்வாம்.

இப்பெரியார் கருத்தை யறிந்து முடிக்கவந்த புலவர் அருணாசலக்கவிராயர் என்பார். இவர் வீரசைவ சமயத்தினர். தேவாங்ககுலத்தினர். இவரது தமிழ்ச்செய்யுள் சரிதத்தை அழகுபெற உணர்த்துவதேயன்றி அன்பு ததும்ப ஒழுகுகின்றது. படிப்பார்க்கு இன்பத்தை எளிதின் எய்துவிக்கின்றது. இப்புராணத்தை அன்புகொண்டு படிப்பார் எல்லாரும் இவரது செய்யுள் தரும் சுவையினைத் துய்த்து எவ்வகை யின்பத்தினையும் எய்துவரென்பது நிச்சயம். இங்ஙனம் மேம்பட்டு நின்ற இவ்வாஞ்சரத் தலபுராணம் செந்தமிழில் வந்து தொண்ணூற்று நான்காண்டாகியும் இப்புராணத்தை உள்ளதென்றுணர்ந்தவர்களும் படித்தவர்களும் பொருளுணர்ந்தவர்களும் அன்பு செய்தவர்களும் பேறு பெற்றவர்களும் எவ்வளவினர்? இக்காலமுறைக்கியைய அச்சிடாக்குறையானன்றோ அருகி வழங்கநேர்ந்தது. இதனையுணர்ந்து எல்லார்க்கும் பயன் படல வேண்டுமென்பதனையும எல்லாரும் பயன்படல் வேண்டுமென்பதனையும் எண்ணி வாஞ்சரம் ஸ்ரீபசுபதீசுரர் ஆலய தருமகர்த்தா ஸ்ரீமான் சட்டமுத்துடையார், வாஞ்சரம் ஸ்ரீமான் வையாபுரி உடையார், தியாகை ஸ்ரீமான் ஜகந்நாத உடையார், வாஞ்சரம் ஸ்ரீமதி பழநியம்மா ஆகிய இவ்வுபகாரிகள் இத்திருவாஞ்சரத்தல புராணத்தை யச்சிடுவித்துப் பெரும்புகழ் எய்தினர். இவர்கள் போன்று பல அறிஞர் உபகரிக்க முன்வருவரேல் மூலையிற்கிடக்கும் முத்தமிழ் நூல்கள் பல முற்றத்தில் வருமே, முதுதமிழ்ச்சுவை முதுலகில் எவருந் துய்த்தற்கிடமுண்டாகுமே. பொருள் செலவழியாமலா இருக்கின்றது? பொருளா இல்லை? உண்டு. நற்பொருளாக இருப்பின் இன்ன நல்லவைகட்கு உபயோகப்படும்.

இத்திருவாஞ்சரத்தல புராணத்தை யச்சிட விரும்பிய இப்புண்ணியர்கள் கருதியதற்கிணங்கி ஓலையி லெழுதப்பட்டிருந்தனவற்றுளிருந்த எழுத்துப்பிழை முதலியவற்றை ஒதுக்கி ஒழுங்குபெற அச்சிட்டுத்தந்தவர் திருக்கோவலூர் போர்ட் ஹைஸ்கூல் தமிழ் முதற் பண்டிதர் ஸ்ரீமான் தி. வடிவேல் முதலியார் என்பாரே. இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி செந்தமிழ்நூலோர் போற்றத்தக்கது.

இந்நூல் திருவாஞ்சரத்தலத்தில் வசிப்பாரும், செந்தமிழ்ப் பற்றுடையாரும், சைவ சமயானுட்டான முடையாரும், அன்புடை ஏனையரும் போற்றிப் பூசிக்கத்தக்கதே.

உலகம் இந்நூல் பெற்று மகிழ்க. முன்னாள் இந்நூலைச்செய் வித்தாரும் செய்தாரும் இந்நாள் அச்சிடுவித்தாரும் அச்சிடச் செப்பஞ்செய்தாரும் அச்சிட்டாரும் அன்புசெய்வாரும் அமல னருள் பெற்று வேண்டுவன எய்துக. இன்புறுக.

இங்ஙனம் கூட்டுக சிவகுருபரன் திருவருள்.

இங்ஙனம்,

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
ஞானியார் மடாலயம்,
சந்நிதி வீதி, திருப்பாதிரிப்புலியூர்.
திருக்கோவலூர் ஆதீனம்.
இரத்தாட்சி ஞு கடகரவி ௬

உ
சிவமயம்

# பதிப்புரை.

பண்டைக் காலத்திற் பக்தி நூல்களே எங்ஙனும் பரவிக்கிடந்தன அவற்றை ஆவலோடு படிக்கவும் கேட்கவுமே பலரும் விரும்பினர் உயிர்க் குறுதி பயப்பதாகிய கடவுள் பக்தியும், அப்பெருந்தகையாளரைப்பற்றிக் கூறும் சரித வரலாறுகளுமே உலக முழுவதும்ஒளிபெற்றுவிளங்கின. புல வர்களால் புகழப்பெறாத ஆடவரும், புராணங்களால் துதிக்கப்பெறாததலங் களும் அக்காலத்துக் காண்பதருமை. புலவர்களின் வாக்கினின்று அமுத தாரை பொழிவது போன்று வெளிவரும் பாடல்களின் இனிமையையே எவரும் மாந்தி பக்தி பரவசமாயினர் அதனால் புலவர்கள் பலாலும் போற் றப்பட்டு வந்தனர். அவர்களால் தெய்வபக்தி மிகுவதாயிற்று. நாடும் செழுமை யுற்றது.

புராணங்களைப் பொய்க்கதைகளென்று ஒதுக்கித்தள்ளும் இக்காலத் தில் புலவர்களைப் போற்றுவாரில்லை. பக்தியென்பது சொல்லளவில்நிற் கிறது. உயிர்க்குறுதி பயக்கும் உண்மை எது என்பதனைக்காண விழை யாது, உடலை வளர்க்கும் தொழிலே பெரிதும் போற்றப்படுகிறது. தமிழ் மொழியை வளர்ப்பவர் அரியராயினர். பழைய தருமங்கள் தலைகுனிந்து நிற்கலாயின. இந்நிலையில்நாடு செழுமையுறுவதெங்ஙனம்?

ஆனால் சிறு கிராமங்களில் பழையதருமங்கள் இன்னும்நிலவிக்கொண் டிருக்கின்றன. புராணங்களின் மூலமாக பக்தியை வளர்த்தல் கூடுமென் பதும், அதனால்உலகம் சுகமுறும்,என்பதும் அங்குள்ளவர்களின் திடமான நம்பிக்கை. அவ்வுண்மையைப் புலப்படுத்தவே வாஞ்சா நகரத்தார் இப் புராணத்தை அச்சிட்டுப்பரப்ப ஆவல் கொண்டனர்.

வாஞ்சரம் ஸ்ரீமான் காகமுத்து உடையாரிடம் ஓலைச்சுவடியாயிருந்து அரிதிற் கிடைத்த இப்புராணத்தின் பிரதியோடு, தாரனூர் பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண ஐயரிடமிருந்த பிரதியொன்றையுங் கொண்டு ஒப்புநோக்கி, வேறு ஒரு பிரதி எழுதி முடிக்கப்பெற்றது. ஏடுகளில் சில ஒடிந்தும் எழுத்துக்கள் மறைந்தும், பிழைகள் நிறைந்தும் இருந்தமையால், எனது தொழின் முறையில் ஓய்வு பெற்ற காலங்களில் கூடியவரை திருத்தமாக எழுதினேன்.

வாஞ்சரம் ஆலய தர்ம கர்த்தா ஸ்ரீமான் சட்டமுத்து உடையார், வாஞ்சரம் ஸ்ரீமான் வையாபுரி உடையார், தியாகை ஸ்ரீமான் ஜெகந்நாத உடையார், வாஞ்சரம் ஸ்ரீமதி பழநியம்மா முதலிய பக்தர்களின் பொருளுதவி இந்நூல் அச்சேறுவதற்குக் காரணமாக விருந்தது. அச்சிடும்போது ஒப்பு நோக்குவதற்கு உடனிருந்து உதவி புரிவாரொருவருமின்மையால் இதிற் காணப்படும் பிழைகட்கு அறிஞர்கள் பொறுப்பார்களாக.

எளியேன் பிரார்த்தனைக்குத் திருவுளமிசைந்து முகவுரை வரைந்து ஆசீர்வதித்தருளிய புலிசை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் பெருங்கருணையை என்றும் மறவேன்.

இப்பணியைச்செய்து முடிக்குமாறு தூண்டிய கோவல் பிரம்மஸ்ரீ வ. சு. நடேச ஐயர், கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமி பிள்ளை, கோவல் ஸ்ரீமான் கு. கிருஷ்ணசாமி பிள்ளை ஆகிய ஆப்த நண்பர்களுக்கும், அச்சிடுவதில் உதவிபுரிந்த அச்சுக்கூடத் தலைவரான கோவல் ஸ்ரீமான் பி. வேணுகோபால முதலியாரவர்களுக்கும், நன்றி செலுத்தக்கடப்பாடுடையேன்.

ஏதும் அறியாத இச்சிறியனையும் இப்புண்ணிய முயற்சிக்கண் புகுத்தி, தோன்றாத்துணையாய் நின்று அருள்புரியும் திருவாஞ்சரத்தலப்பெருமானை என்மன மொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகின்றேன்.

கோவல்<br>
ரு: ச. ருதூஉஷ். } இங்ஙனம், திருவெண்ணெய்—வடிவேலன்.

# திருவரஞ்சரத்தல புராணம்.

## அச்சிடுதற்குப் பொருள் உபகரித்தோர்.

திருவளர்ந் தோங்கு வரஞ்சர புராணந் திகழ்தர சட்டமுத் துடையார்; பெருமைசேர் வையா புரிஜெகந் நாதப் பெரியரோ டாவல்மிக் குள்ள, அருமைசேர் பழநீ யம்மையென் றிவர்க ளன்புட னரும்பொருந் ளுதவி, யிருமையும் விளங்க வச்சினிற் பதித்தே யெங்கணு மிசைபரப் பினரே.

(இ-ள்) ஸ்ரீ மகாலக்ஷுமி கடாக்ஷம் பொருந்தி விளங்கும் திருவரஞ்சரத் தலபுராணமானது எங்கும் விளங்கும் படியாக, வரஞ்சரம் ஸ்ரீ பசுபதீசுரர் ஆலய தர்மகர்த்தா ஸ்ரீமான் சட்டமுத்துடையார், வரஞ்சரம் ஸ்ரீமான் வையாபுரி உடையார், தியாகை ஸ்ரீமான் ஜெகந்நாத உடையார், வரஞ்சரம் ஸ்ரீமதி பழநீயம்மா ஆகிய இவர்கள் அருமையாகச்சேர்த்த தங்கள் தங்கள் பொருள்களை அன்போடு கொடுத்து இம்மை மறுமை என்னும் இரண்டும் விளக்கமடையும் வண்ணம் அச்சிற் பதிப்பித்து உலகமெங்கும் புகழும்படியான கீர்த்தியைப் பெற்றார்கள்.

---

## அரங்கேற்றினோர் பெயரும் காலமும்.

ஆண்டுறு கலியை யாயிரத் திருபத் தாறிரத் தாட்சிபங் குனியில் வேண்டுமா திரையாம் வளர்பிறை தசமி விழைபுநாள் வரஞ்சையா லயத்திற், காண்டகு வெண்ணெய்ப் பதிவளர் வடிவேற் கவிவலோ னறிஞர்கள் பரவ, மீண்டுமா னந்தப்பேர் வாவியின் கரையின் மேன்மையோ டரங்கிலேற் றினனே.

(இ-ள்) வருடங்கள் நிறைந்த கலியுகம் ஐயாயிரத்தி யிருபத்தாறு இரத்தாட்சி ஞு பங்குனி மீ திருவாதிரை நக்ஷத்திரம் வளர்பிறை தசமி கூடிய சுபதினத்தில், முன் ஆசிரியர் அரங்கேற்றியநூலை, அச்சிட்ட பிறகும் திருவரஞ்சரம் ஸ்ரீ நீறணியம்பிகை சமேத ஸ்ரீ பசுபதி நாதர் ஆலயத்தில் மானந்த தீர்த்தக்கரையில், எல்லோரும் காணத்தக்கதான திருவெண்ணெய் நல்லூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் வசிக்கும் வடிவேலன் என்னும் கவிப்புலவன் அறிவுடையோர் நிரம்பியுள்ள சபையில் மேன்மையாக அரங்கேற்றினன்.

## வாழ்த்து.

இந்நகற் புராண மிசைத்திடக் கேட்டோ ரிசைத்தவர்க் கிரும்பொரு ளீந்தோ, ரந்தமா யச்சிற் றிரம்பெற பதித்தோ ரவர்தமக் காதர வளித்தோர் சிந்தைசெய் திட்டோ ரிவர்களெல் லோருஞ் சிவபிரானருண் மிகப் பெற்றுச், சந்தத மின்பந் துய்த்துபே ரின்பஞ் சார்ந்துநீ டூழிவாழ் குவரே.

  

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாஞ்சாத் தலபுராணம்.

## காப்பு.

அமுத மின்னெழி லாரிள வெண்மதித்
தமது கோடெனத் தாங்குந் தடக்கைமா
விமல னெந்தை வரஞ்சை விநாயகன்
கமல பாதங் கருத்து ளிருத்துவாம்.

(இதன்—பொருள்) அமுதம், ஒளி, அழகு, இளமை, வெண்மை ஆகிய குணங்கணிரம்பிய மூன்றாம் பிறையைத் தமது ஒற்றை மருப்பாகக்கொண் டவரும், விசாலமான துதிக்கையை யுடையவருமான, பரிசுத்தமுள்ள எமது இறைவராகிய, திருவாஞ்சைத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மகா கணபதியின் பாதார விந்தங்களை இருதயத்தில் வைத்துப்போற்றுவோம்.

## பரசிவ வணக்கம்.

அருவுரு வாய்ப்புவி யாக்கல் காக்கல்செய்
தெரிவுறு முத்தொழி லினைகண் மாற்றியுந்
தருசிவ பராபரந் தழைக்குஞ் சின்மயத்
தொருதனி முதலையெம் முள்ளத் துள்குவாம்.

(இ-ள்) அருவமாகியும், உருவமாகியுமிருந்து, உலகை சிருஷ்டித்தல் காத் அழித்தல் ஆகிய முத்தொழில்களைச்செய்து, மீட்டும் உற்பத்தி செய்யும் பரவஸ்துவாம் ஒப்பற்றவஸ்து வைமனத்தினினைத்துத் துதிசெய்வாம்.

## பாயிரம்.

### பசுபதீசுவரர் துதி.

வேறு

*சீர்கொண்ட வருட்செயலாற் றிகழ்சரியை மிகச்செழிப்ப*
*வேர்கொண்ட கிரியைநிறைந் திருமலர்பூத் திடயோகந்*
*தார்கொண்டு காய்ாகித் திங்கிஞ்ஞா னம்பழுக்கும்*
*பார்கொண்ட வரஞ்சைவளர் பசுபதிதாள் தனைப்பணிவாம்.*

(இ-ள்) சிறந்த அருளின் செயலால் தானதர்மங்கள் செழிக்கவும், ஆகம வேதநெறியினோடு பூஜாபலன்கள்பூக்கவும், விடயங்கள் தொடர்பில்லாமல் யோகங்கள்காய்க்கவும், மிகுந்த அறிவின் செயலுண்டாகி மெய்ஞ்ஞானம் பழுக்கவும், இவை நான்கு வகை மகிமையுமுண்டாகிய ஸ்தலமாகிய திருவரஞ்சையில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பசுபதி ஈசருடைய பாதார விந்தங்களைத் துதிப்போம். க.

வேறு

*உலகமரு ளயன்றிருமா லும்பர்களு முணர்வரிய வுருவ மாகி நலமலிகொ ளகரமுத லெழுத்தெல்லா மூவுலகி னடாத்தல் போலுந், தலைமையெனு நால்யோனி தனிலுதித்த வெழுவகையுந் தானு மென்று, நிலைமையுயர் திருவரஞ்சைப் பதியின்வளர் பசுபதிதாளிணைவிற் சேர்ப்பாம்.*

(இ-ள்) புவனங்களை உண்டாக்கிய பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களால் அறிதற்கரிய சின்மயமாய், நன்மை நிறைந்த அகர முதலாகிய அக்கரங்கள் மூவுலகில் நடத்தல்போல நால்வகையோனிகளிலுமுற்பவிக்கு மெழுவகைத்தோற்றமுமாகிய உயிருக்குயிராய் நிறைந்து, புராதன நகரமாகிய திருவரஞ்சை ஸ்தலத்துள் விளங்கும் பசுபதீசுவரருடைய பாதார விந்தங்களைக் கருத்திலிருத்திச் சிந்திப்பாம். உ.

### உமை வணக்கம்.

வேறு

*சீதநிறை மதிமுக்முங் கருணைநோக்குந் திகழ்குமிழம் பிறைநுதலுஞ் செய்ய வாயுங், கோதின்மலர்க் குழலுமிரு காதிற்றோடுங் குறுநகையும் பசுந்தோளுங் கழுநீர்க் கையுஞ், சோதிகொண் மங்கலநாணும் பசும்பொன்னுடைத் துடியிடையுங் கனதனமுந் துணைபொற்றாளு, மோதரிய திருவுருவாய் வரஞ்சைமூதூ ருகந்த வெண்ணீ றணியுமையை யுளத்துட் சேர்ப்பாம்.*

(இ-ள்) குளிர்ச்சி பொருந்திய பூரணசந்திரன் போன்ற முகமும், கிருபையுடைய இரண்டு நேத்திரங்களும், குமிழம் பூபோன்ற நாசியும், மூன்றாம் பிறைபோன்ற நெற்றியும், சிவந்தவாயும், குற்றமற்ற மலர் சூடிய கேசபாரமும், தோடணிந்த இருகாதுகளும், புன்சிரிப்பும், பசுமையான

தோளும், செங்கழுநீர்போன்ற கைகளும், ஜோதிமயமான மங்கலநாணும், பொன்னுடை தாங்கிய உடுக்கை போன்ற இடையும், பூரித்திருக்கும் தன பாரமும், நெருங்கிய இரண்டு பொற்பாதங்களுஞ் சொல்லுதற்கரிய உருவமுமாகத் திருவாஞ்சையெனும் புராதன க்ஷேத்திரத்தி லெழுந்தருளியுள்ள நீறணி உமையைச் சிந்திப்பாம். ௩.

## ஸ்தல விநாயகர் துதி.

### வேறு

பாரின்பம் பெறுவாஞ்சை பசுபதியார் புகழ்ச்சரிதை
சீரின்பத் தமிழ்க்குதவி செயமுனிசொற் பாரதமா
மேரின்பா லெழுதுமொரு வெண்கோட்டு முகத்தந்தி
யாரம்பன் றுணைமலர்த்தா ளிருபோது மிறைஞ்சிடுவாம்.

(இ-ள்) உலகில் இகபர சுகத்தையுடைய திருவாஞ்சையுள் விளங்கிய பசுபதீசுவரரது புகழையுடைய இப்புராணமாகிய தமிழ்; சீர்தளை முதலிய இன்பம் பயக்கும்படி உதவிபுரிய பாரதத்தை மேருவில் எழுதிய ஒற்றை வெள்ளைக்கொம்பும், யானைமுகமுமுடைய விநாயகக்கடவுளுடைய கமல பாதங்களை இருபோதும் வணங்குவாம். ச.

## சுப்பிரமணியர் துதி.

### வேறு.

திரைமருவுஞ் சலதியல றிடவரைகள் கிடுகிடெனத் திசைகடாங்கு, மாவின்முடி நெளியவரு மடலசுரர் பகையிரிய வகல்வானுஞ்சூழ், சுரர்குலிச வரசிதைய மகிழவுறப் புலோமிசைதன் றுயரந் தீரக், கரகமல வயிலுதவு குமரனிரு சரணமலர் கருத்துள் வைப்பாம்.

(இ-ள்) அலைகளையுடைய சமுத்திரங்கள் கலங்கவும், மலைகள் குலுங்கவும், ஆதிசேஷனது பணாமுடி நெளியும் படியும் வரும் அசுரர்களோடு சூரன் முதலாயினோர் செய்யுங்கொடுமைகளை விட்டோடவும், தேவர்களும், தேவேந்திரனும் மகிழ்ச்சியுறவும், இந்திராணியின் துயரந்தீரவும். தனது திருக்கைவேலை ஏவிய குமாரக்கடவுளின் சரணாரவிந்தங்களை இருதயத்துள் வைத்துச் சிந்திப்பாம். ரு.

## திருஞானசம்பந்தர் துதி.

### வேறு

இன்னலகற்றி யருள்கரக்குங் காழி யிறைவ னிடப்பாகக்
கன்னி புளகக் குவட்டிடையி னருவியமுதக் கடன்மாந்திப்
பன்னும் பதினா றாயிரமாம் பதிகக் கருணை மழைபொழிந்து
மன்னு ஞானப்பயிர் தழைக்க வந்த பெருமானடிபணிவாம்.

(இ-ள்) துன்பங்களையகற்றித் திருவருள் பொழியும் சீர்காழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய இடது பாகத்தில் வீற்றிருக்கும் உமையவளது ஸ்தனமாகிய மலையினின்றிழியும் அருவியாகிய அமுதக்கடலையுண்டு பதினாயிரமாகிய திருக்கடைக்காப்பென்னும் கவிமாரி பொழிந்து ஞானப்பயிரை வளர்த்த திருஞான சம்பந்தப்பெருமானது பாதங்களைப் பணிவாம். சு.

## திருநாவுக்கரசர் துதி.

தேவர் முதலைத் துதிசெய்யா திட்சாக் கியர்கற் றூண்மரு ங்கி, னாவி சிதைவுற் றிடப்பிணித்துக் கடல்வா யிடவந் தருளுத வுங், கோவைப் பழிச்சிக் கரைகண்ட குரிசி றனையென் னுளத்தினு நன், னாவிற் புகழ வரியதிரு நாவுக் கரசை போற்றி செய்வாம்.

(இ-ள்) தேவர்களுக்கு முதல்வனாகிய பரமசிவனை வணங்காத திரண்ட சமணர்கள், உயிர்நீங்கும்பொருட்டு கற்றூணிற்பிணித்துகடலிலிட்டபோது சிவனைத்துதித்து கரையேறிய எனது மனத்தினாலும், நாவினாலும் புகழ்தற்கரிய திருநாவுக்கரசென்னும் அரிய திருநாமம் பெற்ற அப்பர் சுவாமிகளைப் போற்றி செய்வோம். ௭.

## ஆலால சுந்தரர் துதி.

கந்தரத்தனைக் கறையணி மிடற்றனைக் கனிவாற்
சிந்துரத்தனை யளித்தருள் சிவபெரு மானைக்
கொந்தலர்க்குழற் பரவைபாற் றூதெனக் கொண்ட
சுந்தரப் பெரு மானிணை யடிமலர் துதிப்பாம்.

(இ-ள்) குமாரக்கடவுளுக்குத் தந்தையும், விஷத்தை கழுத்திலுடைய வரும், விநாயகக்கடவுளை அன்போடு அளித்தவருமான சிவபெருமானை; புஷ்பங்களணிந்த கூந்தலையுடைய பரவை நாச்சியார்பால் தூதனுப்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மலர்போன்ற இருபாதங்களையும் வணங்குவோம்

## மாணிக்க வாசகர் துதி.

தற்பர மாகி யெங்குந் தாணுவாய் நிறைந்தா னந்த
பொற்பொது வதனி லாடும் புனிதனுக் கிசைந்த தாக
வற்புதத் தமிழாற் கோவை யறைந்திடும் வாதவூர
னற்பதந் தலைமேற் கொண்டு நாவினில் வழுத்துவாமே.

(இ-ள்) ஒப்பற்ற பராபர வஸ்துவாய் எங்கும் நிறைந்து பொற்சபையாகிய சிதம்பரத்தில் ஆனந்த நடனம் புரியும் சிவபிரான் மகிழும்படி இனிமையாகிய தமிழினால் 'திருச்சிற்றம்பலக்கோவை' என்னும் அரிய நூலைப்பாடியருளிய திருவாதவூரரென்னும் மாணிக்கவாசகரது பாதத்தைச் சிரத்திலணிந்து நாவினாற்றுதிப்போமாக. ௯

## சண்டேசுரர் துதி.

கந்தமா மலருமின்பக் கனிகளுங் கொணர்ந்து தூய
சிந்தையான் மணற்கொ டாதி சிவனுரு வமைத்தங் காட்ட
வந்தபாற் கலச மெல்லாம் வன்புறக் கவிழ்த்தல் செய்த
தந்தைதாள் தடிந்த மெய்யர் தாளிணை தலைமேற் கொள்வாம்

(இ-ள்) வாசனை மிகுந்த புஷ்பங்களும், மதுரமிகுந்த கனிவர்க்கங்களுங் கொணர்ந்து, தெளிந்த மனத்தோடு மணலினால் சிவலிங்கம் செய்து அத

ற்கு அபிஷேகஞ் செய்வதற்கு வைத்திருந்த பால் கலசங்களைக்கவிழ்த்த தனது தகப்பனுடைய கால் வெட்டிய உண்மை யன்பாகிய சண்டேச ரது உபய பாதங்களையும் சிரசிற்கொண்டு வணங்குவாம். ௧௦.

## திருத்தொண்டர் துதி.

வேறு

சஞ்சி தப்பவக் கடற்றுரைகை வினையெலாந் தழலிற்
பஞ்ச தாக்கிநன் னெறிதரு நந்திதாட் பணிந்து
மிஞ்சு பத்திசெ யறுபத்து மூன்றுமெய் யடியார்
கஞ்ச நாண்மலர்ப் பதங்களைக் கருத்தில்வைத் திடுவாம்.

(இ-ள்) பிராரத்துவ கர்மானுசாரமாக பீடிக்கப்பட்ட பிறவிக்கடலி லுண்டாகிய துன்பங்களையெல்லாம் நெருப்பிற்பட்ட பஞ்சுபோல் பஸ்மீ கரமாக்கி மேன்மையாகிய நல்ல வழியைச்சேருமாறு அருள் புரியும் நந்தி கேசுரரின் பாதங்களைப்பணிந்து, கடவுளிடம் அதிக பக்தி செய்தவர்களா கிய அறுபத்துமூன்று மெய்யடியார்களது தாமரை போன்ற பாதங்களைக் கருத்தில் வைத்துத்துதித்திடுவோம். ௧௧.

## கலைமகள் துதி.

வேறு

தலைமைப்பஞ் சாக்கரத் தருவைச் சார்ந்துநன்
னிலைபெறு மாதவர் நிறைந்து வாழ்த்திட
நலந்தரு வரஞ்சையி னாதன் காதையைக்
கலைமக ளிருபதங் கருதிக் கூறுவாம்.

(இ-ள்) முதன்மை பெற்ற பஞ்சாக்ஷரமென்னுங் கற்பக விருக்ஷத்தைச் சேர்ந்து, அதனால் நல்ல நிலைமையை யடைந்த மகா தவத்தையுடைய மக ரிஷிகள் புடைசூழ்ந்து துதிக்க, அதற்கிரங்கி சுகமளிக்கும் வரஞ்சை நாத னது புகழ்ச்சரிதை மேன்மையுறக்கருதி கலைமகளின் இருபாதங்களையும் வணங்கித் துதித்திடுவாம். ௧௨.

## நகர் வளம்.

வேறு

வானுல கத்துறை தேவ ரிறைக்கண நாதர் வடக்குவளர்
கோனொடு மெண்டிசை பாலர் முனித்திரள் கோடி துதித்திடவே
தேனுரை யாளெழின் மானுமை நீறணி தேவியொ டுஞ்சிவனார்
ஆன்தி யின்கரை மேவு வரஞ்சர மாதி வளம்பதியே.

(இ-ள்) பொன்னுலகத்திலுள்ள தேவர்களும், இந்திரனும், கணநாதரும் குபேரனும், திக்குப்பாலர்களும், கோடிக்கணக்கான முனிவர்களுந் துதி செய்யும்படியாக, தேன்போன்ற மொழியும் அழகும் நிறைந்த, நீறணி யுமையவளோடு பசுபதீசுரர் மகிழ்ந்து வீற்றிருப்பது, கோமுக நதியின் தென்பாலுள்ள திருவரஞ்சை யென்னும் புராதன வளம் பொருந்திய ஸ்தல மாகும். ௧௩.

நறைமலி பங்கய னுரக தலத்திறை நவிலுவ தற்கரிய
ரறிதுயி லுற்றவ னயன மலர்க்கொ டருச்சனை செய்சழலார்
மறைக டுதிப்பவர் சனக முனித்திரள் வருமவ ருக்குரியா
ரிறைவர் விருப்பொ டிருக்கும வரஞ்சைய தெழிலுல வும்பதியே.

(இ-ள்) வாசனை நிறைந்த தாமரை மலரிலுள்ள பிரமதேவனாலும், நாக லோகத்தரசனான ஆதிசேஷனாலும், துதித்தற்கரியவரும், யோகநித்திரை புரியும் மகா விஷ்ணு தனது கண்மலரால் அருச்சனை செய்யப்பெற்றவரும், சனகாதி முனிவர்கள்பால் மிக்க உரிமையுடையவருமான பரமசிவன் மிகுந்த அன்போடு வீற்றிருப்பது அழகுடைய திருவரஞ்சைப் பதியாகும். கச

வேறு

கோகனக மலர்ச்சுரும்பு மடமகளிர் தடங்கண் முகக் குறிகள் காட்டும், மாகனக நாட்டியல்பு நதிநிறைபூங் காவனச்சீர் வளமை காட்டும், பாகுமொழித் திருமருவுஞ் சிறப்புளது வரஞ்சைபதிப் படியின் மேலாந், தோகைநதி சுரபிநதி மாலிகா பரணமெனத் துலங்கு மூதூர்.

(இ-ள்) அந்நகரிலுள்ள தடாகத்தினிறைந்துள்ள தாமரை மலரிலிருக்கும் வண்டுகள் பெண்களின் முகத்திலுள்ள கண்ணினியல்பைக்காட்டுவதாயும், தேவலோகத்தினியல்பை நதி, பசுக்கூட்டம், நந்தவன முதலியவைகள் தெரிவிப்பதாயும், தேன்போன்ற மொழியையுடைய மகாலக்ஷ்மி சதா வாழ்வு பெற்றிருக்கும் சிறப்புளதாயுமுள்ள, திருவரஞ்சைப் பதியானது புவனங்களுக்கு மேற்பட்டதாய், மயூர நதியுங் கோமுகி நதியும் மாலை போல விளங்கும் பழைய ஸ்தலமாம். கடு.

## இறைவன் பெருமை.

பாங்குறுவெண் முல்லைவனப் பசுபதியார் பெரும்புகழைப் பதுமத் தேரனு, மோங்குதிரு நால்வாயி னுரைப்பரிது பாதலத்தி னுரக வேந்து, நீங்கரிதே ராயிரமா நாவானு நிசழ்த்தவொணு நெடுநீர் வைப்பி, னீங்கறிவோர்க் கரும்பொருளை யெம்மனோராலெடுத்தே யிசைக்கற் பாற்றே.

(இ-ள்) பக்கங்களிலே செழித்து வளரும் முல்லைவனத்திலுள்ள பசுபதீசுவரருடைய பெருமையை பிரம்மதேவனுடைய நான்கு நாவாலும் கூறுதற்கு அரியது. ஆதிசேஷனுடைய ஆயிர நாவினாலும் வருணிக்க முடியாது, கடல் சூழ்ந்த வுலகில் அறிஞர்களாலுந்தெளிந்துரைத்தற் கரிதென்னின் எம்போல்வாரால் சுலபமாகக் கூறுந்தன்மையுடையதோ. கசு.

## அவை யடக்கம்.

முத்தமிழின் கடனீந்திச் சுவைதெளிந்த மொழிப்புலவோர் முன்னர் யானுஞ், சிற்றறிவாற் றிருவரஞ்சைப் புராணமதென் புன்சொலியாற் செப்பு மாறு, சுற்றுதிரைக் கடற்புவியை வலம்வருசெங்

கதிரவன்றேர் துன்று வேக, தத்துபரிக் கெதிர்நோக்கி மண்டூக முன்னடக்குந் தகைமை போலும்.

(இ-ள்) இயல் இசை நாடக மென்னும் மூவகைத்தமிழ்க்கடலையும் நீந்தி அதன் சாரங்களை-முழுதுமுணர்ந்த புலவோர்கள்முன் தமியேன் சொற்ப அறிவுகொண்டு திருவாஞ்சைப் புராணத்தைப் புன்சொல்லால் கூறமுன் வந்தது; கடல் சூழ்ந்த உலகை வலம் வரும் சூரியனது தேரிற் பூட்டியுள்ள பச்சைக்குதிரையின் வேகத்திற்கு முன் தவளையானது செல்ல முயற்சித்த தன்மையை ஒக்கும். ௧எ.

திசைமுழுதும் விளங்கியதொன் மணியதனைப் புதுநூலாற் றிகழக் கோத்த. நசைபெருகு மாலிகைத னைக்கழித்து விடுகுவரோ நண்ணுமீச, னிசைவுறுநற் றிருவாஞ்சை யியல்பதனி லிருக்கையினு லிப்புராணம், வசையுரைக்க நினைகுவரோ விதன் செயலின் குறிப்பறிந்த மறைவல்லோரே.

(இ-ள்) சகல உலகங்களிலும் விளங்காநின்ற புராதனமான சோதி மணியை புதிய நூலால் கோவையிட்டால் அதுகாரணமாக மணியை நீக்கி விடுவார்களோ அதுபோல் கீர்த்திக்கு இருப்பிடமான திருவாஞ்சை சிவபெருமானது திவ்விய புராணம் எனது புன்சொல்லால் சொல்லப் பட்டது கொண்டு வேத சாஸ்திர முணர்ந்த அறிஞர்கள் குறைகூற முன் வர மாட்டார்கள். ௧அ.

## முதனூல்.

### வேறு

கயிலைக் கடவு ளிடத்தறிந்த கந்த ருரைக்க நந்தீசன்
செயல்பெற் றுணர்ந்து சநபாலி முனிவர்க்கோதத் திறன்முனிசீர்
வெயின்மா மகுட மதிமரபின் வேந்தன் பிராட்சே னனுக்குரைத்த
தியல்பாற் சரிதை சூதமுனி யிருடியோர்க்கு மொழிந்ததுவே.

(இ-ள்) கயிலாயத்தில் விளங்கியுள்ள பரமசிவன் வாஞ்சைப் புராணத்தை க்குமாரக்கடவுளுக்குச்சொல்ல, அப்பெருமான் நந்திகேசுரருக்கு உபதேசிக்க, நந்தீசரது அருள் பெற்ற சநபாலிமுனிவர்; சந்திர குலத்து வேந்தனுன பிராட்சேன மகாராஜனுக்குக்கூறிய இப்புராணமானது சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குத் தெரிவித்ததாகும். ௧௯

நேருற் றிலங்கு மறைநான்கி னெறியான் முதிருஞ் சுவை மதுர, மீரொன் பதுமா புராணத்தி லிறைவன் புராண மீரைந்திற், சேருங் காந்தத் தினிற்சரிதை க்ஷேத்ரகாண்ட மேழேழிற், சாரு முவரி பாகமதின் வாஞ்சை மகிமை சாற்றிடுமால்.

(இ-ள்) செம்மை மிகுந்த நான்கு வேதங்களின் சாரமாகிய உயர்ந்த பதினெண் புராணங்களுள் சிவ புராணம் பத்தாகும், அதில் ஸ்காந்த புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் நாற்பத்தொன்பதாவது உவரிபாகத்தில் வாஞ்சை புராணத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது. ௨௦.

## சுருக்கத்தொகைக் குறிப்பு.

வேறு

தலமகிமை பசுபூஜை வாலிபூஜை தக்கவிரா வணன்கயிலை சார்தல் வென்றி, யிலகுவாஞ் சரம்வயிராக் கியம்வெண் ணீற்றி னியல்பசனி வழிபாடு இனிய தீர்த்தம், நலமருவுந் திருநகர்மா நதியின்வண்மை நண்ணரிய பிரம்மஹத்தி சுமணி காந்த, நிலை யிருடிபூஜைவிதி யெனும்ஈரேழுநெறிதிகழ் தென் கலையதனு னிகழ்த்த லுற்றேன்.

(இ-ள்) ஸ்தல மகிமைச்சருக்கம், பசு பூஜைச்சருக்கம், வாலிபூஜைச்சருக்கம், இராவணன் கயிலையடைந்தசருக்கம், வாஞ்சரச்சருக்கம், வீரவிரதச் சருக்கம், விபூதி மான்மியச்சருக்கம், அசனி பூஜைச்சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருநகரச்சருக்கம், கோமுக நதிச்சருக்கம், பிரம்மஹத்தி விமோசனச்சருக்கம், சுமணிச்சருக்கம், இருடி பூஜைச்சருக்கம் ஆகிய பதினான்கு வடமொழியிலுள்ளிய சருக்கங்களை ஒழுக்க முடைய தமிழ் மொழியினால் கூறலுற்றேன். உக.

---

## சிறப்புப்பாயிரம். உக்.

---

## ஆக்குவித்தோன்.

வேறு

நன்றின்றிசேர் புராணமிதுண் டாகியநாள் திருவாஞ்சை நகரந் தன்னில், கன்னியுமை நீறணியைப் பசுபதியை மறவாத கருத்தை யுள்ளோன், துன்னுபுகழ் வெள்ளிகுலச் சுடர்விளக்காய் வந்துதித்தோன் துலங்கு நீதி, மன்னுதிறன் முத்துடையான் மாரிமுத் தேந்த்ரனென வாழுங் காலே.

(இ-ள்) மகிமை மிகுந்த வாஞ்சர புராணமுண்டாகிய காலத்திலே, திருவாஞ்சை ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள வாலையாகிய நீறணியுமையவளையும், பசுபதீசுரரையும் என்றும் மறவாத மனதையுடையவனும், மிகுந்த புகழையுடைய வெள்ளிகுலத்திற்கு விளக்குபோன்றவனும், நீதி மார்க்க முணர்ந்தவனுமாகிய முத்துடையான், மாரிமுத்துடையானென வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில்.

முதன்மைபெறுந் தவப்பயனாற் சிவசரிதை நல்லறிவின் முதிர்ச்சி யாலே, மதியிரவி யுள்ளளவு மிகபாசா தகமானமகிமை யோர்ந்து, நிதிமிகுத்த பொருளுதவி நெடுங்காலம் பெருங்கீர்த்தி நிற்ப தாகத், துதிபெருகுந் திருவாஞ்சைப் புராணத்தைத் தமிழதனாற் சொல்க வென்றே.

(இ-ள்) முன்ஜன்மங்களில் செய்த தவத்தின் பலனாக சிவசரிதை கேட்க வேண்டுமெனும் நல்லறிவு மிகுந்து, சந்திர சூரியருள்ளளவும் இகபர சாதனமாகுமென்னும் மகிமையை அறிந்து, ஏராளமாக பொருளை யுதவி நீடூழிகாலம் தனது புகழ் எங்கும் பிரகாசிக்க, துதித்தற்குரிய திருவாஞ்சைப் புராணத்தைத் *தமிழினாலே வகுத்துக் கூறுமாறு வேண்டினனென்க.

## ஆக்கியோன்—அரங்கேற்றல்.

திருவருள்சேர் பட்சகந்த குருவின் சீடன் தேவாங்க குல
னருணா சலன்பார் மீது, தருவெனும்பா ரதப்புலியிப் புராணந்
தன்னை சருக்கமதீ ரேழெனவே தமிழாற் பாடல், மருவுசத மா
றெடுதொன் பானே ழாக்கி வளர்கலிநான் காயிரத்தொன் பது
நூற் றெண்ணான், காவருடந் தைமதியின் வாஞ்சை தன்னிற்
கற்றுணர்ந்தோர் முன்னரரங் கேற்றி னானே.

(இ-ள்) இலட்சுமி கடாட்சம் பெற்ற பட்சகந்த குருமூர்த்தியின் சீடனும், தேவாங்க கோத்திரத்திலுற்பவித்தவனும், பாரதப்புலி யென்னுஞ் சிறப்புப்பெயர்பெற்றவனுமாகிய அருணாசலன்; இந்தப் புராணத்தைச்சருக்கம் பதினான்காகவும், தமிழ்ப்பாடல்கள் அறுநூற்றுத்தொண்ணூற்றேழாகவும் இயற்றி, கலியுகம் நாலாயிரத்துத்தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாவது காவருடம் தை மாதம் நிறைந்த பூச நக்ஷத்திரத்திற்றிருவாஞ்சை தலத்துள் கற்றுணர்ந்த பெரியோர்கள் முன்னிலையில் அரங்கேற்றினான்.

---

## மூன்றாம் பெற்றது.

ஸ்ரீபசுபதி பாலாம்பா துணை.

உ

சிவமயம்

பசுபதி நாதர் துணை.

# திருவரஞ்சரத்தல் மகிமைச் சருக்கம்.

பூசுரா தியர்கட் கெல்லாம் புரிதவப் பயன்க ணல்கு
மாசிலா மணியா யீரே ழுலகினு மருவி யென்றன்
பாசவெவ் வினைக டீர்க்கும் பரமசற் குருவின் செய்ய
தேசுண்டக் கமல பாதஞ் சிந்தைசெய் தியற்றல் செய்வாம்.

(இ-ள்) பிராமணோத்தமர்கள் புரியும் தவத்திற்கியைந்த பலனையளிக்கும் குற்றமற்ற சோதிமணியாய், பதினான்கு உலகங்களிலும் விளங்கியிருந்து என்றுபாசபந்தமாகியப் பிறவித்துன்பங்களைநிவர்த்திக்கும்மேலான சற்குருவின் அழகியபாதகமலங்களைச்சிந்தையில்வைத்துச்சொல்லத்தொடங்குவாம்

மானிலந் தழைப்ப நான்கு மறையருட் பயிர்க ளோங்கத்
தானமுந் தருமஞ் ஞான தவந்திகழ் வாகுஞ் சாலப்
பூனலம் பரவி வாசம் பொலிவுற விளங்கி வைகுங்
கானமொன் றுளது மேலோர் கருத்துறத் துதிப்ப தாமால்.

(இ-ள்) உலகங்கள் தழைக்கவும், நான்குவேதங்களாகிய அருட் பயிர் ஓங்கி வளரவும், தானதருமங்களும், மெய்ஞ்ஞான நிலையும், தவவிரதங்களுஞ் செவ்வையாக விளங்கவும், புஷ்பங்கள் நிறைந்து வாசனை வீசி பிரகாசிக்கும் ஆரணியம் ஒன்று உண்டு. அது பெரியோர்களிருதயத்தில் வைத்துச் சிந்திக்கத் தக்கதாகும். உ.

கார்செறிந் திரவிக் கற்றைக் காலுறா திரும்பூங் காவி
ஞார்சிறை யளிகள் பாடி யுடைவுறா மருங்கு தோறு
நீர் செறி தடமும புள்ளு நிறைந்தருந் தவமெய்ஞ் ஞானச்
சீர் செறி முனிக்கு ழாங்கள் செழிக்குமவ் வனம தன்றே.

(இ-ள்) மேகங்கள் படிந்து, சூரிய கிரணங்கள் உள்ளே நுழையா வண்ணம் நெருங்கித்தழைத்து விளங்கும் பெரிய பூஞ்சோலைகள் தோறும் அடைந்திருக்கும் வண்டினங்கள் கீதம் பாடுவதும், நல்ல நீரையுடைய குளங்களில் பட்சிகள் விளங்குவதும், மெய்ஞ்ஞான நெறியையுடைய முனிவர் கூட்டங்கள் நிறைந்திருப்பதுமாக அந்த வனம் செழித்து மகிமையுற்றிருக்கும். ௩.

நவையறு வளமை சார்ந்த நைமிசா ரணியந் தன்னுட்
பவமறு சௌன காதிப் பழமறை முனிவ ரியருந்
தவமிகு மிருடி சூதன் றாளிணை வணங்கி யேத்திச்
சிவகதைக் கேட்குஞ் சிந்தைச் செயலின ராகிக் கூறும்,

(இ-ள்) குற்றங்களை நீக்குவதாய் சிறப்பு மிகுந்த நைமிசாரணிய மென்று சொல்லப்பட்ட வனத்தில் பாவங்களை நீக்கி வேதங்களை யுணர்ந்தவர்களான சௌனகாதி முனிவர்கள், மிகுந்த தவத்தையுடைய முனிசிரேஷ்டராகிய சூதபௌராணிகரது பாதகமலங்களை வணங்கித் துதித்து சிவசரித்திரத்தைக் கேட்கக் கருத்துடையவர்களாகக் கூறத் தொடங்கினர். ச.

ஓதநீ ராடை வையத் துள்ளொளி விளக்காய் நான்கு
வேதமார் கடலே! கோதில் மெய்த்தவக் கொழுந்தே! ஞான
போதமே யுணரும் புந்தி பொறிவழிப் புகுதாச் சிந்தை
யாதர வெமக்குத் தந்த வையவென் றுகந்து வாழ்த்தி.

(இ-ள்) ஒலிக்கின்ற கடலை உடையாகத்தரித்த பூமியில் விளங்கும் தீபம் போன்று நான்கு வேதங்களையுமுணர்ந்த கடலே, குற்ற மற்ற உண்மையான தவக்கொழுந்தே! எங்களது அறிவானது பொறிகளின் வழி புகுந்து மயங்காமல், ஞான போதத்தைப் பெறுமாறு அருள் பாலித்த ஐயனே என்று துதித்து; ரு.

நிசியகத் திரவி யென்ன நெஞ்சகத் திருளை யோட்டுஞ்
சசிப்புன றரவுங் கொன்றைச் சடைமுடி யண்ணல் மேவா
வசலமும் புவியின் மிக்க வருட்டரு தலங்க ளர்த்த
மிசைவுறு மடியர் பேறு மெழுபவந் தொலைக்கு மாறும்.

(இ-ள்) இருளை ஓட்டுகின்ற சூரியனைப்போல் எங்கள் மனமயக்கமாகிய அஞ்ஞானங்களை நீக்கி அருள் புரியா நின்ற மூன்றாம் பிறையுங் கங்கையுங் கொன்றை மாலையுந்தரித்த சடாபாரத்தையுடைய பரமசிவன் தங்கியுள்ள மலைகளும், பூமியில் மிகுந்த கிருபையுடைய தலங்களும், தீர்த்த மகிமையும், அடியார்களுடைய பெருமையும் மிகுதியான பாபங்களை நீக்கு மியல்பும். சு.

எண்ணின்மா சரிதை நும்மா லிசைத்திடக் கேட்டு யாங்க
ளுண்ணறி வுற்றா மின்னு நுவல்நனி புராணத் துள்ள
வண்ணறன் பெருமை மேவு மருள்வாஞ் சையினற் காதை
நண்ணிய தொகுதி யாவு நலனுற நவிலு மென்றார்.

(இ-ள்) அளவிடக்கூடாத பெருமை பொருந்திய சிவ சரிதைகள் தேவரீர் சொல்லக்கேட்டு நாங்கள் நல்லறிவு பெற்றோம். சொல்லுகின்ற அந்தப் புராணத்திலுள்ளதும் சிவபிரானது பெருமையைக் கூறுவதுமான திருவாஞ்சை தலத்தின் சரிதத்தை நன்மையுண்டாகச் சொல்லவேண்டுமெனக் கேட்டனர் சௌனகாதி முனிவர்கள். எ.

என்றடி வணங்கி யேத்து மிருடியர்க் கிசைந்து வேதக்
குன்றென விளங்குஞ் சூதக் கோமுனி மகிழ்ந்து நீவிர்
நன்றுநன் றுரைத்த வாய்மை நவையின்மா தவங்க ளாற்றி
நின்றவர் தமக்கு மேலா நெறியினைக் கருதிப் பின்னும்.

(இ-ள்) என்று அடிவணங்கிக்கேட்ட முனிவர்கட்கு வேதமலையே என விளங்குஞ் சூதமுனிவர் மனமகிழ்ந்து, சவுனகாதிபரே! நீங்கள் கேட்டது மிகவும் நல்லது என்று; குற்றமற்ற தவங்களைச் செய்தவர்களுக்கு மேலான வழியை யோசித்து மறுபடியும் சொல்லத்தொடங்குவார். அ.

பலகலைக் கடலை நீந்திக் குரவரைப் பணிந்து போற்று
நிலைமையுந் தவறாப் புந்தி நேயமுற் றுணர்ந்த வாற்றாற்
றலம்வாஞ் சையிநற் காதை தானது வினவ லுற்றீர்
மலிவுறு மகிழ்ச்சி மேவா வருத்திடு மாறு கேண்மோ.

(இ-ள்) சகல கலைஞானமென்னுங் கடலை நீந்தி சற்குருவை வணங்கித் துதிக்கும் நிலைமையையும் தவறாத புத்தியும் அன்பும் உடையவர்களானமையால், திருவாஞ்சை நாதர் சரிதங்களைக்கேட்கத்தொடங்கினீர் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லுவதைக் கவனமாகக்கேளுங்களென சூதபுராணிகர் சொல்லலுற்றார். கூ.

காமரு கடவு ளோருங் கதிர்மதி யயன்மால் வாணி
பூமகள் கமல மாது புலோமிசை பணிந்து போற்று
மாமதி முகத்தாள் வெற்பின் மகளொரு பாகன் காதை
தாமறிந் தெம்ம னோராற் சாற்றுதற் கெளிய தன்றே.

(இ-ள்) கற்பகத்தருவினிடத்தில் விளங்குந் தேவர்களும், சூரியன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு, சரஸ்வதி, பூமிதேவி, இலக்குமி, இந்திராணி, முதலானவர்கள் வணங்கித்துதிக்கும் பூரணசந்திரன்போன்ற முகத்தையுடைய பர்வத ராஜகுமாரியாகிய பார்வதியை ஒருபாகத்திற்கொண்ட சிவபெருமானது சரித்திரம் எம்மால் அறிந்து கூறுதற்கு எளிமையுடையதல்ல.

என்னினுங் கயிலை யீச னீன்றநற் புதல்வ ரோடு
முன்னெறி புரியும் வேத முனிவரன் சீட ரானோ
ரன்னவர் தமையும் போற்றி யருட்கலை மடந்தை தாளை
யுன்னிநல் வாஞ்சை காதை யுரைப்பனென் றுவகையானான்.

(இ-ள்) அவ்வாறு சிரமமுடையதாயினும், கயிலைநாதரது திருக்குமாரர்களான கணபதியையுங் குமாரக்கடவுளையும், வணக்கஞ்செய்துகொண்டு முதன்மையாகிய வேதவியாசரையும், அவரது சீடர்களையுந்தொழுது, அருண்மிகுந்த சரஸ்வதியம்மையின் பாதங்களையும் நினைத்து நன்மை பொருந்திய திருவாஞ்சை மகிமையைச்சொல்வேனென்று மகிழ்ந்தார். கக

சந்திர மௌலி முன்னாட் சரவண பவனுக் கோதக்
கந்தர்நந் தீசர்க் கோத கருணைநந் தீசர் தானும்
புந்தியார் சாபா லிக்குப் புகன்றனர் புகழ்ச பாலி
சிந்தைகொள் பிரடசேனன் செவியுறத் தெரித்த தன்றே.

(இ-ள்) சந்திரனை மகுடமாக அணிந்த சிவன் முற்காலத்தில் குமாரக்கடவுளுக்குக்கூற, அவர் நந்திகேசருக்கு அறிவிக்க, அவர் சபாலி முனிவருக்கு போதிக்க, அவரால் பிரடசேன மகாராஜனுக்கு உபதேசித்ததாகும்,

அம்முனி பிரசேனற் கோர்து மருள்திரு வாஞ்சைக் கர்த்த
நம்பினுக் கிசைப்பி னென்றச் சூதனை முனிவர் நோக்கிச்
செம்மலார்? முனிவ னியாவன்? தெரித்திடும் வா றெங்ஙன்?
எம்மினுக் குரைசெய் யென்ன விசைத்தனன் சூத னன்றே.

(இ-ள்) அந்த சாபாலி முனிவர் பிரசேன மகாராஜனுக்குச் சொன்ன அருள் பொருந்திய திருவாஞ்சை மகிமையை எமக்குத் தெரிவிப்பேனென்று கூறிய சூதபுராணிகரை முனிவர்கள் நோக்கி, ஐயனே! அந்த அரசன் யாவன்? முனிவர் யாவர்? அவர் கூறிய விதமெப்படி யெனக்கேட்கச் சூதமா முனிவர் சொல்லத் தொடங்கினார். கரு.

பொங்குநீ ரடை சூழும் புவியிடை விளங்குங் காசி
கங்கையோ டெமுனை யாற்றங் கரையிரு மருங்கி னொப்பண்
திங்களன் மரபின் வந்து செவ்வழி நடாத்துஞ் செங்கோற்
கொங்கலர் தொடைசேர் மார்பின் குரிசில்வந் துதித்தா னன்றே.

(இ-ள்) கடல் சூழ்ந்த பூமியில் விளங்கும் காசிக்கங்கைக்கும் யமுனைநதிக்கும் மத்தியாகிய பர்வதச்சாரலிலே, ஒருகாலத்தில் சந்திரகுலதிலகனுகி மனுமுறை வழுவாமல் செங்கோற் செலுத்திய மலர்மாலை யணிந்த பிரசேன மகாராஜன் வந்துதித்தனன். கசு.

அங்கண்மா ஞாலங் காக்கு மரசனங் கிருக்கு மெல்லை
துங்கநான் மறைக ளோதுந் தொன்முறை கடன்க ளாற்றி
தங்குமெய் விரதம் பூண்டு தவச்செய லாகி யாரும்
பொங்கழற் கருத்தி யாநெய் பொரிகளா குதிகள் செய்தும்.

(இ-ள்) உலகையாளுமரசன் அங்கிருக்குங் காலையில், பரிசுத்தமான நான்கு வேதங்களையும் ஓதி, தங்கள் பழமையான ஆசாரங்களிற் குறைபடாத விரதம் தவம் முதலியவைகளையும், யாகாதி கிருத்தியங்களையும் தவறாது அக்கினிக்குப்பசுநெய், பொரி முதலியவைகளையும் ஆகுதி செய்து கொண்டும். கஎ.

ஆசறு மாயை நீக்கி யைம்புலச் செயலை மாற்றி
மாசறு மனத்தி னாசை மயக்கறத் தவஞ்செய் வோர்கள்
தேசுறு முனிக்கு ழாத்திற் சிறந்தனோன் முனிசா பாலி
பேசருந் தவத்தின் மிக்கப் பெருந்தகை முனிவ னென்பான்.

(இ-ள்) சங்கற்பங்களுக்கு ஹேதுவாகிய மாயையை நீக்கி, ஐம்புலக்குறும்பை மாற்றி, களங்கமுற்ற மனத்தாசைகளைத் தொலைத்துத் தவஞ்செய்யும் முனிக்கூட்டங்களுட் சிறந்தவரும், மேன்மையான தவசிரேட்டருமான சாபாலி முனி என்னும் பெருந்தகைமை யுடையார். கஅ

பவக்கடல் கடந்து ஞான பராபரத் தையம் நீங்கித்
தவக்கடல் நிறைந்தா னந்தத் தண்ணமு தருந்திப் பின்னுஞ்
சிவக்கருத் தினரா யுள்ளஞ் சிறந்தபூ ரணம தாகி
தவக்கறு சிற்சொ ரூபச் சுபாவமே வடிவ மாகி.

(இ-ள்) பிறவிக்கடலைக்கடந்து, ஞானக்கொழுந்தாகிய பராபரத்தின் உண்மை தெரிந்து தவக்கடலாகிய பேரானந்தத்துறையிற் குளிர்ந்த

அமுதை யுண்டு, புனிதமாகிய சிவசிந்தையராய் நிறைந்து, அஞ்ஞானங்களை வேரறக்களையுஞ் சுசுரூபமே வடிவமானவர். ௧எ.

அருந்தவ முனிவர்க் கெல்லா மறநெறி யுறைசெய் கின்ற
பெருந்தவ னெனுஞ்ச பாலிப் பெயர்பெறு முனிவ னோர்காற்
பொருந்திய படைக்கை வீரன் புகழ்பிரட் சேனன் வைகி
யிருந்தவவ் வனத்தி னோர்பா லெய்தினன் னினிதி னன்றே.

(இ-ள்) அரிதாகிய தவத்தைச்செய்கின்ற முனிவர்களுக்குத்தரும நெறியை உபதேசிப்பவரான பெரிய தவத்தையுடைய சபாலி முனிவர் ஒருகால், ஆயுதந்தாங்கி புகழ்பெற்ற பிரடசேனனிருக்கும் வனத்திற்குச் சந்தோடத்துடனே வந்தனர். ௧அ.

எய்திய முனிவன் றன்னை யிறையவ னெதிர்கொண் டேகிக்
கைதிறை மலர்க டூவிக் கழலிணை வணங்கிப் பூசை
செய்துநல் லிருக்கை மேவத் திகழ்தவி சிருத்திப் போற்றி
வெய்தழ லுலைமே லிட்ட மெழுகென வுருகி மேலும்.

(இ-ள்) வந்த சபாலி முனிவரை அரசன் எதிர்கொண்டழைத்து புஷ்பங்களா லர்ச்சித்துப் பாதங்களிற் பணிந்து, ஆசனத்திலிருத்தித் துதித்து அனலிலிட்ட மெழுகுபோல உருகினவனாய். ௧௯.

ஆரண நெறிவ ழாநன்கு றமுறை விதிக ளாற்றுங்
காரண முனியை நோக்கிக் கருதுசேத் திரகாண் டத்திற்
றாரணி யதனின் மேவுந் தலச்செய லுரைத்தி ரைய
சீரணி யுவரி பாக மேழேழிற் சிறந்த காதை.

(இ-ள்) வேதநெறி முறையும் தர்ம விதிமுறையும் தவறாத காரணனாகிய முனிவரைப்பார்த்து க்ஷேத்திர காண்டத்திலுள்ள தலமகிமைகளையெல்லாம் முன்னமே அறிவித்த தேவரீர் சிறப்புப்பொருந்திய உவரி பாகத்தில் நாற்பத்தொன்பதாவதில் சிறந்துள்ள சரிதங்களின். ௨௦.

வளமையை விளம்பு கென்னு மதிகுலத் தரசை நோக்கி
யுளமகிழ்ந் தருளா னந்த முறுபர வசத்த ராய்மெய்
புளகித மெழுந்து ரோமம் பொடிப்பநன் விழிநீர் மல்க
விளமதிச் சடையா னெந்தை யியல்பைநா மிசைக்கற் பாற்றோ.

(இ-ள்) வளமையையும் ஸ்தலங்களின் பெருமையையும் சொல்லவேணுமென்று விரும்பிக்கேட்குஞ் சந்திர குலத்தரசனைப் பார்த்து மனமகிழ்ந்து அருளானந்த பரவசமுடையவராய் மயிர்க்கூச்செறிந்து விழிகளினின்றும் நீர் சொரிய சந்திர சடாதர மூர்த்தியாகிய பரமசிவன் பெருமை எம்மாற் கூறுந் தரத்ததோ? ௨௧.

என்றனன் வரஞ்சை மூது ரிறைகழ லிதயத் தூற்று
நன்றுறச் சிவன்மூ லத்தை நாவசைத் திடாமல் வாழ்த்திச்
சென்றொரு முகூர்த்தங் காறுந் திகைத்துளந் தேறிப் பின்னர்
மன்றலந் தெரிய லார்க்கு மறைமுனி வழங்க லானான்.

(இ-ள்) என்று வரஞ்சைத் தலைவனை மனத்திலினைத்து சூக்கும பஞ்சாக்கரத்தை நாவசையாமல் தியானித்து ஒரு முகூர்த்தமளவும் திர்மலமாய்

திகைத்திருந்து பிறகு மனந்தேறி, வாசனையுடைய மலர் மாலை யணிந்த அரசனுக்கு வேதமுனிவர் கூறத்தொடங்கினர். உஉ.

வகுத்திடுந் தலங்கட் கெல்லா மாசற விளங்கா நிற்ப
துகத்துக முடிவு மாதி யுள்ளன வொளிருஞ் சோதி
மிகுத்தெழு முனிவர் விண்ணோர் வினையிரு டீர்க்க மூன்று
சகத்தினு மதுபோற் றெய்வத் தலமினி வேறுண் டாமோ.

(இ-ள்) வேறுவேறாகக்கூறிய தலங்களுள் குற்றமற்றதாய் விளங்குவதும், யுகாந்தகால மாதியந்த மளவுஞ் சோதிமயங்குன்றாமலோங்கி முனிவர் தேவர் முதலியோரின் வினையிருளை யோட்டுவதும், மூன்று உலகங்களிலும் ஒப்பு வமை சொல்லக்கூடாததுமாகிய தலம் இதைவிட வேறுண்டோ. உ௩.

வேறு

தீதிலா வத்தலஞ் சென்று ளோர்க்கெலாங்
கோதிலா திருந்தி கொடுக்குங் கற்பகங்
காதலா மெனுங்கடற் கலக்கு மந்தாஞ்
சாதலாம் வேதனை தவிர்க்குஞ் சஞ்சிவி.

(இ-ள்) தீமையற்ற அந்த திருவாஞ்சைத் தலத்தைச் சேர்ந்தவர்கட்கு அது குற்றமற்றசெல்வத்தை யளிக்கும் கற்பகத்தரு. ஆசையாகிய பந்தங்கள் நிறைந்த கடலைக் கலக்கும் மந்திரகிரி. இறத்தலாகிய துன்பத்தை நீக்கும் சஞ்சீவி. உச.

போதனு மால்முதற் போற்று மத்தல
நாதனை யேத்தியே நண்ணு வார்க்கெலாம்
வேதனை நோய்களை வீட்டு மூலிகை
வாதனை யாமுகில் மாற்று மாருதம்.

(இ-ள்) பிரம விஷ்ணு முதலியோர் வணங்குந் திருவாஞ்சை நாதனைத் துதித்து வணங்குபவர்களுக்குள்ள நோய்களை நீக்கும் மூலிகையும், துன்பமாகிய மேகங்களை யோட்டும் சண்ட மாருதமாம். உரு.

பாதக நீக்கும்ப் பதியை வாழ்த்துவோர்
தீதகன் றிடுநலந் திகழ ஞானமாம்
போதகம் நல்கிநற் புனித ராக்கிடுஞ்
சாதக மிகபரந் தனக்க தாகுமால்.

(இ-ள்) மகா பாதங்களை நீக்கும் அந்தத்தலத்தைத் துதிப்போருடைய தீங்குகளகன்று, நன்மையும் ஞானமும் உதயமாகி, பரிசுத்தவான்களாய், இகபரமிரண்டிற்கும் சாதகமாக விளங்கும். உசு.

ஏத்தரு மத்தலத் திறைவன் றன்கழல்
காத்தமும் பேறவே நவிற்று வார்க்கெலாம்
மாற்றரும் பிறவியின் வாரி நீந்திடத்
தோற்றருங் கருணையாந் தோணி யுய்க்குமால்.

(இ-ள்) துதித்தற்கருமையாகிய திருவாஞ்சை யிறைவன் பாதத்தை காக்கு தடிக்கும் வண்ணம் துதிப்பவர்களுடைய பிறவி சாகரத்தைத் தாண்டும் கருணையுடைய தோணியாக விருப்பதாம். உஎ.

எத்தலத் தினுந்தொழு தேகி டாத்துய
ரத்தலத் தகல்வதற் கைய மொன்றிலை
சுத்தமா மூவுல கேவர்க்குந் தொன்மையா
முத்தியை யளிப்பது முதன்மை சாலவே.

(இ-ள்) பலதலங்களிலும்தொழுது அதனால் நீங்காத தொந்த வியாதிகள் திருவாஞ்சைத்தலத்தில் நீங்கி விடுவதற்குச்சந்தேகமில்லை. பரிசுத்தமாகிய மூன்று உலகத்தாருக்கும் மேலான மோக்ஷபதவியையளிக்கும் முதன்மை பெற்றது. ௨௮.

கருதிய பொருடருங் காம தேனுவு
மருவுமப் பதிவளம் வகுக்க லாகுமோ
செருவளர் திண்புய வாலி சீர்பெற
புரிதரு வாஞ்சைநற் புகழுண் டானதால்.

(இ-ள்) விரும்பிய பொருளைத்தரும் காமதேனு வந்து தங்கி சிவபூஜை செய்து பேறு பெற்றதும், யுத்தத்தில் வலிமை பெறும் பொருட்டு வாலியானவன் பூசித்து வரம்பெற்றதுமான புகழையுடையதால் இதன் கீர்த்தி சொல்லுமளவினதோ. ௨௯.

துலங்கிய வமரரை வாவி னல்லல்தோய்ந்திடா
திலங்கையி ராவண னியல்பு மாற்றுறா
கலங்கலற் றசனிகண் களிப்ப வேத்திய
தலங்களுண் டோவாஞ் சரமை தன்றியே.

(இ-ள்) மேன்மையான தேவர்கள் துன்பத்தில் மூழ்காமல், இலங்கைக் கரசனான இராவணன் பெற்ற வரத்தை மாற்றியதும், கலக்கம் நீங்கி இடிராஜன் பூஜைசெய்து மகிழ்ச்சியான வரம்பெற்றதுமான திருவாஞ்சைத் தலத்திற்கு நிகராக வேறு தலமும் உண்டோ? ௩௦.

புலைகொலை களவுகட் புணர்தல் செய்பவம்
விலகிட வருடரும் வீட தானது
தலமுறு மிவுளியின் றாள்கள் கொண்டுநன்
னிலையிரு பதங்களால் நேச மானவூர்.

(இ-ள்) பொய் கூறுதல், கொலை செய்தல், களவாடுதல், கட்குடித்தல், கற்பழித்தல் ஆகிய பஞ்சமா பாதகங்களை நீக்கும் அருள் வீடாயதும், பூமியிலுள்ள குதிரையின் பாதங்கள்போல் இரண்டு பாதமும் பொருந்த நின்று அதிசயங்காட்டிய விஷ்ணு, நேசமுற்று விளங்குவதும் இந்தத்தலமாம். ௩௧.

மலருறு முல்லையவ் வனத்து ளாதியன்
னிலையுற விளங்குமா லிலிங்க ரூபமாய்
நலனுய ருகந்தொறு நாமங் கொண்டது
வலமுற மலைமகண் மருவு நற்றலம்.

(இ-ள்) வாசனையோடு புஷ்பித்திருக்கும் முல்லை வனத்துள் ஆதியாய் நிலைமையுற்று மகாலிங்க ரூபமாய் விளங்கிய பரமசிவன் யுகங்கள் தோறும் வெவ்வேறு நாமங்களைக்கொண்டு, பருவதராஜன் குமாரத்தியாகிய உமையவள் வலப்பாகத்தில் மகிழ்ச்சியுடனிருப்பது இத்தலமாம். ௩௨.

புகழ்பெறு தலமதிற் பொருந்து கீழ்திசை
திகழ்வுறு மானதத் தீர்த்த மொன்றதி
லகமகிழ்ந் தமரரு முனிவர் யாவருந்
தொகுவினைப் பற்றறத் தோய்தற் செய்துவார்.

(இ-ள்) புகழ் மிகுந்த திருவாஞ்சைத்தலத்திற்குக்கீழ்த் திசையில் விளங்கும் மானத தீர்த்தில் முனிவர்களும், தேவர்களும் தங்கள் வினைகள் ஒழியும் வண்ணம் வந்து நீராடுவார்கள். ௫௩.

நீறணி யுமையவள் பாகன் நேரிடம்
பேறுயர் கோமுகி பெருகு மாநதி
வீறுடன் றோய்ந்தவர் வெய்ய வல்வினை
பாறிடும் மற்றுமப் பதியின் மன்னனே.

(இ-ள்) அரசனே! நீறணியுமையவளை பாகத்திலுடைய பரமசிவனுக்கு இடதுபக்கத்தில் 'கோமுகி' யென்னுஞ்சிறந்த நதியொன்று ஓடுகிறது. அதில் மூழ்கினவர்களுடைய மாபாதகங்களெல்லாம் பறந்தோடும். ௫௪.

வேறு

தொல்லையிரும் பவ்வவினை சூழாம லெவ்வுயிர்க்கு
மல்லலரும் பரமமுத்தி யளித்திடுதற் கேதுவென
முல்லைவனஞ் செறிந்தளிகள் முயல்வுறுநற் றிருவாஞ்சை
யெல்லையுறு பசுபதியா யெழுந்தருளி நின்றபிரான்.

(இ-ள்) பழய சமுத்திரம் போன்ற பிறவித்துன்பத்தில் மூழ்காமல் எல்லா உயிர்களுக்கும் துன்பத்தை நீக்கி மோட்ச மளித்தற்காரணமாக முல்லை வனத்தில் வண்டுகள் கீதம்பாடும் திருவாஞ்சைப் பதியில் பசுபதீசுரர் எழுந்தருளினார். ௫௫.

ஆதலா லெவ்வுலகி லனைத்துயிரு மமரர்முதற்
காதலாற் றிருவாஞ்சைக் கடிநகரம் விரைந்தெய்திப்
போதுலா நறுந்தடத்தின் புனல்படிந்து நீறணிந்த
மாதுலா வியபாகன் பசுபதிதாள் வணங்கிடுவார்.

(இ-ள்) ஆதலினால் சகலலோகத்திலுமுள்ள மானிடர் முதல் தேவர்களாகவுள்ள பலரும் வந்து மானத தீர்த்தத்தில் நீராடி நீறணி உமையவளை பாகத்திலுடைய பசுபதீசுவரர் பாதத்தை வணங்கிச் செல்வார்கள். ௫௬.

வேறு

சித்தர்குழா மொருமருங்கி னொருமருங்கிற் றேவர்குழாஞ் செறிந்து போற்ற, முத்தர்குழா மொருமருங்கி னொருமருங்கின் முனிவர்குழா மொய்த்துலாவும், பத்தர்குழா மொருமருங்கி னொருமருங்கின் றவநிறைந்த பரமயோகி, சுத்துறவே யெம்மருங்குஞ் சூழ்வாஞ்சி வளமையதாற் றுலங்கு மூதூர்.

(இ-ள்) சித்தர்கணங்கள் ஒருபுறமும், பக்தர் குழாங்கள் ஒரு புறமும், பரம யோகிகள் ஒருபுறமுமாக நிறைந்திருப்பது வாஞ்சையென்னும் பழைய நகரமாகும். ௫௭.

தூம்புருகி தம்பாட நாரதனுஞ் சுருதியினாற் றுதித்துப் போற்றக், கிம்புருடர் கின்னரரு மனுராக கீர்த்தனங்கள் கிளர்த்தி வாழ்த்த, தம்புருவி னிசைகொடுசெந் தாமரைமா தினைய மகட் சரிதங் கூற, உம்பருல கெனவிளங்குந் திருவரஞ்சை மூதூரிவ் வுலகில் வேந்தே.

(இ-ள்) தும்புருவர் சிவகீதம் பாடவும், நாரதர் வேத பாராயணத்தாற் றுதிக்கவும், கின்னர கிம்புருடர் அனுராக கீர்த்தனைகளால் வாழ்த்துக் கூறவும், தம்புரு வீணை முதலிய இசைக்கருவிகொண்டு இலக்குமி பார்வதி தேவியின் சரித்திரத்தைப்புகழ்ந்து கூறவும், தெய்வலோகம் போல் விளங்கும் சிறப்பினை யுடையது இப்பழம்பதியாகும் அரசே! ௬அ.

எத்தலத்தி னெடுங்கால மினிதிருந்தங் கரியதவ மியற்றும் பேறு, இத்தலத்தி ம் கணப்போது செய்யுந்தவப் பேறதனுக்சோ ரிணைய தாமோ, கைத்தலத்தி னமலகக் கனியெனவே யெப்பயனுங் கடிதிநல்கு, மத்தலைத்திற் கிணைவேறு தலமுளதோ வவனிதனி லரச ரேறே.

(இ-ள்) வெவ்வேறாகிய தலங்களில் நெடுங்கால மிருந்து தவஞ்செய்து பெற்ற பேறுகள் இத்தலத்தில் ஒருகடிகை நேரந்தவஞ்செய்து பெற்ற வரங்களுக்குச்சரியாகுமோ? உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எப்பயன்களையும் விரைவில் தரவல்ல இதற்கு உவமையாக வேறொரு தலமுண்டோ அரச சிம்மமே, ௬௯.

நெடியதவம் புரிபவர்க்கு நெறியிருந்து மெய்ஞ்ஞான நிலைகொள் வோர்க்குங், கடியமல மாயையிரு ளகற்றுவார்க்குஞ் சித்தி நலங் கைகொள் வோர்க்குங், கொடியபிறப் பறுப்பவர்க்குங் குறிப்புறாதாய்த் தவம்படரக் கொழுகொம் பாகும், படியின்மிசை திருவரஞ்சைப் பசுபதிதன் னருளையலாற் பயன்வே றுண்டோ.

(இ-ள்) உயர்ந்த தவஞ்செய்வோர்களுக்கும், மெய்ஞ்ஞானநிலை பெறுபவர்களுக்கும், மும்மலமாதிய விருளையகற்றுவோர்களுக்கும், சித்திபெறுபவர்களுக்கும், பிறவிநோயை நீக்குபவர்கட்கும், உண்மையான குறிப்போடு தவஞ்செய்வோர்களுக்கும் கொடிபடருங் கொழுகொம்பு போன்றது பூமியில் திருவரஞ்சை பசுபதிநாதருளன்றி வேறுளதோ. ௭௦.

என்றிறை மகிமைக ளிசைத்த மாதவக்
குன்றிரு பதந்தொழு தேத்திக் கொற்றவன்
றன்றிரு வுளமகிழ் தக்க சிந்தையா
னன்றவ முனியெதிர் நயந்து கூறுவான்.

(இ-ள்) திருவரஞ்சை நாதர் மகிமைகளைக்கூறிய சாபாலி முனிவர் பாதங்களில் வணங்கி பிரடசேன மகாராஜன் சிலவார்த்தைகளைக் கூறத்தொடங்கினன். ௭௧

முன்னெறி யுரைத்தனீ கோடி நான்முறை
யின்னெறி மகிமையாங் கதனு ளில்லையா
லன்னக ரெத்திசை யகலி டத்தினுள்
நன்னிலை தெரிந்திட நவிற்று வாயென.

(இ-ள்) முதன்மையான ஜெறிபுடைய கோடாகோடி நூல்முறை தல மகிமை முதலியவற்றை அனுக்கிரகஞ்செய்தீர். இந்தத்தலத்திற்குள்ள மகிமை வேறெதற்குமில்லையாதலால், இந்தத்தலம் எந்தத்திசையிலுள்ளது அதைக்கூறவேண்டுமென கேட்டுக்கொண்டான் பிரடசேன ராஜன். ௪௨.

போற்றிய குரிசிலுக் குகந்து பொற்புடை
நாற்றிசை யுலகினுள் மகிமை நற்றலந்
தோற்றிய திசையிடந் துலங்க மன்னகேள்
சாற்றுவ மெனமுனி தயவி னோதுவான்.

(இ-ள்) வணங்கிக்கேட்கும் அரசனுக்கு சாபாலிமுனிவர் மனமகிழ்ந்தவராய் அரசனே! மகிமையுற்ற இந்தத்தலத்தின் திசையும் இடமும் சொல்லுவோம் கேளெனச் சொல்லத்தொடங்கினார். ௪௩.

துங்கமா மேருவின் றுலங்கு தென்றிசை
செங்கதிர் வாழ்தரு செம்புத் தீவெனும்
பங்கமில் வளங்கெழு பாத கண்டமார்
கங்கைமா நதிதிகழ் காசி யம்புரி.

(இ-ள்) பரிசுத்தமான மேருமலைக்குத் தெற்கிலுள்ள சூரிய மண்டலத்தையளாவிய நாவல் மரத்தைச்சேர்ந்த நாவலந்தீவில் குறைவற்ற வளமையை யுடைய பாதகண்டத்தில் கங்கை நதிக்கரையில் காசியென்னும் ஒரு ஸ்தலமுண்டு. ௪௪.

அண்டரும் பரவிநீ ராடுங் கங்கையிற்
றிண்டிறற் றென்றிசை சிறக்கு மோர்தல
மண்டுகட் செவியொடு மருவும் வாரணம்
பண்டரன் பூசனை பரிவிற் செய்ததால்.

(இ-ள்) தேவதைகள் முதலானவர்களும் வந்து நீராடும் கங்கை நதிக்குத் தென்றிசையில் சிறப்பாகிய ஒரு தலமுண்டு அதன் பெருமை யாதெனில் பாம்பும் யானையும் முன்னாளில் பரமசிவனை பூசித்த தலமாகும். ௪௫.

சித்தமு மகிழ்ந்தரன் செயல்மிக் காளக
ஹத்தியென் றொருபெய ரமைந்த மால்வரைப்
பற்றிய தென்றிசைப் பாவி யெங்கணுஞ்
சுற்றளி பூம்பொழிற் றொண்டை மண்டலம்.

(இ-ள்) பாம்பும் யானையும் பூசித்ததால் பரமசிவன் மகிழ்ந்து 'காளஹஸ்தி' எனுஞ்சிறப்புப்பெயரளித்த, பெரிய மலையின் தென்றிசை யெங்கும் வண்டுகள் ரீங்காரஞ் செய்யுஞ் சோலைகளை யுடையது தொண்டை மண்டலம். ௪௬.

தங்கவுறு கழனிக டோறுஞ் சங்கினத்
தொகுதிகள் தவழ்தருஞ் சுரர்பொன் னொடென
மகிழ்வது பலவள வனப்பு மாண்பென
புகழ்வதின் றென்றிசைப் பொருந்து மோர்தலம்.

(இ-ள்) வயல்கடோறுஞ் சங்கினந்தவழுவதும், தேவர்கள் பொன்னுடன் மகிழ்வதுமான தொண்டை மண்டத்திற்குத்தென்றிசையில் ஒரு தலமுண்டு. ௪௭.

வேறு

விளைகழனி யிடங்கொள்ளாஞ் சங்கினங் குலவி மணிபுயிர்த்து
மின்னொளி டேய்க்கு, மிளநிலவின் சுடரெறிப்ப மணியமுத மென
விளங்கி யிருக்கு மேன்மை, வளமிகுந்த நிலந்தழைப்புங் குளிர்
சோலை யிருமருங்கு மருவுகம்பை, புவியில் புகழ்பெருகுநதி சூழ்
காஞ்சி புரமுளதொன் றவ்வனி வேந்தே.

(இ-ள்) வயல்களில் இடங்கொள்ளாமல் சங்கினங்கள், பிரகாசிக்கும் முத்துக்களை யீன்று ஒளி வீசுட, சோலைகளில் இருபக்கங்களிலும் கம்பா நதியானது செல்லும் காஞ்சீபுரமென ஒரு தலமுள்ளது. (சஅ.)

மண்ணுலகத் தேழ்புரியுண் டதனின்மிக வாழ்புரியென்
னண்மை மேவும், விண்ணுலகத் தேவர்தொழ் வொருமாவி னிழ
லமர்ந்து விளங்கு மூர்த்தி, யெண்ணுலகத் துயிர்பிழைக்க நல்ல
றங்க ளெண்ணான்கு மியற்றி நாளுநந், தண்ணிலகுந் திருக்கருணை
யம்பிகையுங் களித்திருக்குங் கச்சி மூதூர்.

(இ-ள்) பூவுலகில் மாயா, மதுரா, கயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னுஞ் சப்த தலங்களுட் சிறந்ததும், தேவர்களும் வந்து வணங்குதற்குரியதாய் மாமரநிழலிலமர்ந்த ஏகாம்பர நாதனும், முப்பத்திரண்டறங்களையுஞ் செய்யும் காமாட்சியம்பிகையும் மகிழ்ந்திருப்பது காஞ்சீபுரம். சகூ.

செப்பரிய காஞ்சிபுரத் தென்றிசையி னருட்பாலின் சிறப்பூரா
யோங்கி, யொப்பரிய சிவலிங்க வுருவமென வெழுந்தீரே ழுலகம்
போற்ற, அப்பதனிற் றயின்றவனும் நான்முகனு மிகுத்தேடி
யளவிடாத்தா, யிப்புவியி னொருசோண சயிலமென விளங்கி யெழுந்
திருக்குமாதோ.

(இ-ள்) சொல்லுதற்கரிய காஞ்சீபுரத்திற்குத்தென்றிசையில் சிவலிங்க உருவமாக வளர்ந்து பிரம்ம விஷ்ணுக்களால் தேடி அளவிடப்படாத அருணசல மென்னும் ஒரு திவ்விய தலமுண்டு. ருo.

அந்தமலை யடிதொடங்கி மாவிலிங்க வடிவமதா யண்ணல்
மேவி, வந்துகரு ணைக்கடலா மெனவிளங்கு மப்பதியின் மகிழ்வோ
டெய்திப், பந்தமற வுமையவளுந் தவம்புரிந்தாங் கிறைவரிடப்
பாகஞ் சேர்ந்தாள், சுந்ததமு மறைபுகழு மருணைவளம் பதியெனு
மோர் தலமுண் டாமால்.

(இ-ள்) அந்த மலை தொடங்கிய அடிவாரத்தில் மகாலிங்க சொரூபமாய் பரமசிவன் எழுந்தருளி கருணைக்கடல்போல் விளங்கும் அப்பதிக்கு மகிழ்வுடனே வந்து உமையவள் தவம் புரிந்து இடப்பாகம்பெற்றனள், அன்றியும் நான்கு வேதமும் என்றும் புகழும் பெருமை யுடையது அந்த அருணை வளம் பதியாகும். ருக.

துதிபெறுமத் தலத்தினுக்குத் தென்றிசையி னேராகத் துலங்
கும் பெண்ணை, நதிக்கரையிற் கோவலெனும் வீரட்டம் புரிந்து
சிவ ஞானா நிற்கும், பதியதனிற் றென்றிசையிற் குறுமுனிவன்
முதலானோர் பணிந்து போற்றிக், கதிபெறுமா விருஷபிங்க முனி
விறைறயா டுறையுவளுங் களிக்கு மூதூர்.

(இ-ள்) இவ்வாறு சகலருந் துதிக்குந் தலத்திற்குத் தெற்கில் பெண்ணை நதியின் தென்கரையில் திருக்கோவலூரென்னுந் தலமுண்டு. அதில் வீரட்டம் பொருந்திய பரமசிவன் எழுந்தருளி யிருப்பர். அதற்குத் தெற்கில் அகஸ்தியர் முதலானோர் வணங்கி வீடுபெற்ற இருடிவிந்தமென ஒரு தலமுண்டு. ௫௨

பனிவரைமி னிமயமங்கையர்ன் பணப்புரிதல் காண்கவெனப்
பரனவுண்ட, முனிவரவு கண்டினறவன் விந்தமதியிற் காட்டி
டுவே முயங்கி யேகென், றினிதுரைத்த படியெழுந்தங் கிசைத்த
திருமணக்கோலத் தியல்புகாட்டி, நனிவிளங்குஞ் செயலதனா
லிருடிவிந்த மெனும்தற்கோர் நாமமாமால்.

(இ-ள்) இமைய கிரியிலே சிவன் பார்வதியை மணம் புரியுங்காட்சியைக் காணச்சென்ற அகத்திய முனிவருக்குத் தென்கோடு உயருமென வுணர்ந்த சிவபெருமான் இருடிவிந்தத்தலத்தில் இக்காட்சியை அளிப்போமென வாக்களித்தபடி தெரிசனந்தந்து விளங்கியதால், 'இருடி விந்தம்' என்னுங் காரணப்பெயருடையது அந்தத்தலமாகும். ௫௩

அன்னபதி தென்றிசையிற் பச்சிமஞ்சேர் தடவரையி
னருவி யோடு, மன்னுகழை யீன்றமுத்து மணியினங்கள் பலவா
ன்றி வரையிற் சூழ்ந்து, மின்னுபுனற் றிரைகொழித்துக் குரை
கடலை நோக்கியது விளங்குந் தோற்றந், தன்னுநில மாமடந்தை
கனதனமீ தாரமெனத் துலங்கு மாதோ.

(இ-ள்) அத்தலத்திற்குத் தெற்கில் விசாலமான மலையிலிருந்திழிந்தோடும் அருவியானது, மூங்கிலீன்ற முத்துக்களையும் இரத்தினக் கற்களையும் வாரிக்கொண்டு, அலைவீசி சப்திக்கும் கடல் நோக்கிச் செல்லுந் தோற்றமானது, பூமிதேவியின் மார்பிலணிந்த மணிமாலையைப்போல் விளங்காநிற்கும். ௫௪

முத்தாநதித் தென்றிசையின் மூயங்குநதி யிரண்டுளதா
மொழியுங் காலை, யெத்திசையுங் கீர்த்திபெற விலங்குமொரு
சுரபிநதி யிதனின் றென்பாற், பற்றறவெம் பிறவிவினைப் பகை
யறுக்குந் தோகைநதிப் பண்பு பார்க்கில், அத்தனுறை திருவாஞ்
சைக் கிருபுறமு நதிமாலை யாகு மாதோ.

(இ-ள்) இவ்வாறு கூறிய மணி முத்தா நதிக்குத் தென்றிசையில் இரண்டு நதிகள் செல்லாநிற்கும். அவற்றில் எங்கணும் கீர்த்தி விளங்கும் கோமுக நதியும், அதற்குத் தென்பால் பிறவிப்பிணியை ஒழிக்கும் மயூரநதியும், பரமசிவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவாஞ்சைத் தலத்திற்கு இருபுறமும் மாலைபோல விளங்கும். ௫௫

பழுதகலுந் திரிபதகை யனையதென மூவுலகிற் படிந்தோர்
முத்திக், கழகுதரு முத்தநதி யருளளிக்குஞ் சுரபிநதி யடருமப
பராவப், பிழைபகற்றுந் தோகைநதி யெனுமூன்று மதிதுப்பண்
பெருமை யோங்கித், தழைபும்வாஞ் சையதனுமா தலங்களி
னுஞ், சிறப்புலவுஞ் தலம தன்றே.

(இ-ள்) குற்றமற்ற கங்காநதிக்குச் சமமானதாய் மூவுலகத்தோரும் மூழ்கி முத்திபெறும் மணிமுத்தாநதி, கோமுகநதி, மயூரநதி யென்னும் மூன்று நதிகளுள் மயூரநதிக்கும் கோமுக நதிக்கும் நடுவிலுள்ளது பெருமையுடைய திருவாஞ்சரத் தலமாகும். ௫௬.

தடவரையின் மணிகள்பல கொணர்ந்துவரு தோகைநதி தருக்களார்ந்து, மடுவுலவு முத்தநதி யிடைகலையிங் கலையாகி மருவுஞ்சாலப், படியின்மிசை கோமுகியுஞ் சுழிமுனையாய் வளர்நல்லூர்ப் பதியிற் காட்டு, மடைவுளமா நதிகரப்பண் திருவாஞ்சை யருள்வீட தாகு மாதோ.

(இ-ள்) விசாலமான மலைகளிலிருந்து மணிகளை வாரிக்கொண்டுவரும் மயூரநதி பிங்கலையாகவும், மணிமுத்தாநதி இடைகலையாகவும், கோமுக நதி சுழி முனையாகவும் விளங்கும் இயல்பை நல்லூர் என்னும் பதியிற் றெரிவிக்கும் நதிகளின் மத்தியிலுள்ள திருவாஞ்சை அருள்புரியும் மோட்ச வீடாக விளங்கும். ௫௭.

பெண்ணைநதி நன்னாட்டின் தெற்காகிப் பொன்னிவளம் பெருகு நாட்டின், வண்ணமிகு வடக்கெனவே மலைநாட்டின் கீழ்த் திசையாய் மருவ லார்ந்த, பண்ணளிசூழ் முல்லைவனப் பசுபாச விமோசனராய் பரமா னந்த, வண்ணலுயர் வாஞ்சையதென் றறைந்தமுனிக் கெதிரிசைப்பா னரச ரேறே.

(இ-ள்) பெண்ணை நதி பாயும் நாட்டுக்குத் தெற்கிலும், காவேரி பாயும் சோழநாட்டிற்கு வடக்கிலும், மலைநாட்டிற்குக்கிழக்கிலும், வண்டுகள் இசைபாடும் முல்லை வனத்தில் பசுவாகிய ஜீவன்களுக்குள் பாசத்தைக் களைபவரான பரமானந்த அண்ணலிருப்பது திருவாஞ்சைத் தலமென்று, ஜாபாலி முனிவர்கூற அரசசிம்மமாகிய பிரசேன மகாராஜன் கூறுவான்.

தவமகிமைக் கொழுந்தாகிப் பலகலைநன் னூல்தெரிந்த சலதியென்னும், பவமகற்று மடிகளுயர் வாஞ்சையதி னிலைதெரிந்தேன் பசுபா சந்தீர், சிவனுகங்க டொருநாம பேதமுமா ராசிரமந் தெரிவியென்ன, புவனமொடுங் கினுமொடுங்கா வேதாந்தப் பொருளதனைப் புகல்வ தானான்.

(இ-ள்) தவக்கொழுந்தாகி பலநீதி நூல்களை யுணர்ந்து பவசாகரத்தைப் போக்கும பெரியோரே! உயர்வுடைய திருவாஞ்சைப்பதியின் நிலைமையை அறிந்து கொண்டேன் பசுக்களது பாசத்தைத்தீர்க்கும் சிவன் யுகங்கள் தோறும் நாமம்வேறுகிய விவரமும், அந்தந்த ஆசிரமத்திற் குரியவர் இன்னின்னாரென்பதையும், தெரிவிக்கவேணுமென்ற அரசனுக்கு, உலகங்கள் ஒடுங்கினும் ஒடுங்காமலிருக்கும் வேதாந்த ரகசியத்தைப் போதிக்கத்தொடங்கினார். ௫௮.

பொறை மருவு செழுஞ்சுரபி யமுததாரைகள்பொழிந்து பூசை யாற்றிக், கறையகலும் பெற்றியினாற் பசுபதியா முதலுகத்திற் காட்டா நிற்ப, இறையவயிரண் டாமுகத்தி லிதயமகிழ்ந் தருச்சனைக ளியற்றி வாலி, யுறைபுளவா சிரமமெனும் வாலீசனெனு நாம முயர்ந்த தேயாம்.

(இ-ள்) பொறுமையும் வசீகரமு முடைய காமதேனு பூசித்ததால் முதல் யுகத்தில் பசுபதீசுரமென்றும், இரண்டாம்யுகத்தில் வாலி பூசைசெய்ததால் வாலீச்சுரர் என்னும் வாலியா சிரமமென்றும் வழங்கும். ௬

தடங்கயிலைப் புரத்திலருந் தவமுஞற்றிப் பெற்றவரந் தவிர்த்த லாலவ், வடவிலங்கை யிராவணனும் வயிராக வருந்தவங்க ளாற்றி யேத்திப், புடவிமுழு தும்புகழப் போந்துவரம் பெற்றாக் கன் போத லாலே, திட்டமுள்ளார் வஞ்சைச்சுரமென் றொருநாம முலக மெலாஞ் சிறந்த தேயால்.

(இ-ள்) விசாலம் பொருந்திய கயிலாயத்தில் தவஞ்செய்து பெற்றவரம் தவிர்ந்ததென்று பலமுடைய இலங்காதிபதியான இராவணன் உலகம் புகழவந்து வைராக்கியத்துடன் தவஞ்செய்து வரம் பெற்றுச்சென்றதால் வரஞ்சரமென்னுந் தலத்திற்கு இராவணேசுரமென ஒரு பெயரும் உலகம் போற்றச் சிறப்பாக விளங்குகின்றது. ௬௧.

அசனிசெயு மருச்சனையாற் றவாபரையி னசனீச ராகிப் பின்னு, மிசைபெறுங் கலியுகத்தில் வரஞ்சைநகர் தருமாகி யிருந்த மூதூர், திசைபுகழ வளரூழி காசியெனத் தெரிப்பர் திரிபதகை போல, வசையில் மணி முத்தநதி கோமுகியு மயூரநதி வருத லன்றே.

(இ-ள்) மூன்றாம் யுகமாகிய துவாபரயுகத்தில் இடிராஜன் வந்து பூஜை செய்து வரம் பெற்றதால் அசனீசமென்றும், கலியுகத்தில் வரஞ்சை நகரமென்றும் பெயர் பெற்றுள்ள பழைய நகரானது ஊழி காசியென்று சொல்லத்தகும் பெருமையை யுடையது. எவ்வாறெனின் காசியில் கங்கை, யமுனை, சரஸ்வதியாகிய மூன்று நதிகளுமிருப்பதுபோல அதற்குச்சமமான மணிமுத்தாநதி, கோமுகநதி, மயூரநதி ஆகிய மூன்று நதிகள் பாயும் வளப்பத்தினாலாகும். ௬௨.

மறிமானுங் கரத்திருப்ப நதிமானைச் சிரத்துகந்து வரமா வெண்ணீ, றுறமானை வலத்தினில்வைத் தொளிர்வானை வேண்டு வர முதவு வானை, நெறியாலு நினைவாலு மிருபோது நினைப்ப வர்த மிதயம், நீங்கா விறையோனும் மகிழ் வாகி யெழில்பெருகு வரஞ்சைதனி லிருப்ப தாமே.

(இ-ள்) மழுமானைத்திருக்கரத்திலும், கங்காதேவியை சிரசிலும், நீறணி உமையவளை வலப்பாகத்திலும் வைத்து விளங்கி யிருப்பவரை, அடியார்களுக்கு வேண்டிய வரங்களுதவுந் தனிமுதலை பரிசுத்தமான வழியினாலும், நினைவினாலும் எப்போதும் வணங்குபவருடைய மனதை விட்டு நீங்காம லிருப்பவராகிய பரமசிவன், அழகு பொருந்திய திருவரஞ்சைத் தலத்தில் வீற்றிருப்பார். ௬௩.

சுத்தபவுத் திரமுளதாந் தொன்மையதாய் விளங்கியருட் டோன்று நின்ற, தத்தலமாந் திருவரஞ்சை யுயர்வளமை சபாலி முனிவ னுரைபகக் கேட்டுச், சித்தமகிழ்ந் தன்பினனி பிரட்சேனன் பரவசமாய்த் தெளியுங் காலத, முத்திநிலை யுள்ளிருடி யோர்தம் கந்தசூதமுனி மொழிவ தானன்.

மிக்க பரிசுத்தமானதாய, புராதனமானதாய், அருளுண்டாகி நின்ற திருவரஞ்சைத்தலத்தின் மகிமையை, சாபாலி முனிவர் கூறியதை பிராட்சேன் மகாராஜன் முற்றுங்கேட்டு, பரவசமாய்த்தெளிந்த சரித்திரமென்று முத்தி நிலைமையுடைய சௌனகாதியருக்குச் சூதமகா முனிவர் உபதேசித்தருளியது. கஉ.

தலமகிமைச் சருக்கம் முற்றுப்பெற்றது.
சருக்கம் உ க்குத் திருவிருத்தங்கள் அ௩.

உ
சிவமயம்

# பசு பூசைச் சருக்கம்.

ஓதுகின்றநற் றலங்களி னுயர்வுற விளங்கு
மாதி யான்றிரு வரஞ்சையின் மகிமைக ளறிந்து
கோதில் மன்னவன் மாமுனி குரைகழல் வணங்கித்
தீதிலாப்பசு பூசனை செயலுரை யென்றான்.

(இ-ள்) மேன்மையாகக்கூறப்பட்ட ஸ்தலங்களுக்கு மேலாகி விளங்கும் திருவரஞ்சைத்தல மகிமையை அறிந்த குற்றமற்ற அரசன் சாபாலி முனிவருடைய சப்திக்குந்தண்டையுடைய யணிந்த பாதங்களை வணங்கி தீமையில்லாத தேவப்பசுக்கள் பூசைசெய்த மகிமையைச்சொல்ல வேண்டுமெனக்கேட்டுக் கொண்டான் க.

என்ன வோதிய மன்னவ னினியசொற் கேட்டு
மின்னு மாமலர் முல்லையம் வனத்திடை விருப்போ
டன்ன நற்பசு வடைந்தருள் பெறுஞ்செய லெல்லாம
மன்னு மாமுனி மகிழ்வொடு வகுத்துரைப் பானால்.

(இ-ள்) அரசன் கூறிய இனிமையான மொழியைக்கேட்டு பிரகாசமும் வாசனையுமுடைய முல்லை வனத்துள் விருப்பத்துடன் தேவப்பசுக்கள் வந்து அருள்பெற்ற செயல்களை யெல்லாம் சாபாலி முனிவர் சந்தோஷத்தோடு சொல்லத்தொடங்கினர். உ.

தலங்கள் யாவினு மோரொரு விம்மிதந் தழைவாற்
றுலங்குஞ் சோதியம் பரம்பொருட் சுருதிகண் முடிவி
னிலங்கு ஞானிகள் அடியவ ரிதயமுற் றிருந்து
கலங்கு றாதுல குயிரெலாங் கருணையிற் காக்கும்.

(இ-ள்) ஒவ்வொரு தலங்களிலும் ஒவ்வொரு அதிசயமுண்டாக்கி விளங்கிய சோதியான பரமசிவன் வேதத்தின் முடிவிலும், மெஞ்ஞானிகளாகிய அடியார்களுடைய இருதயத்திலும் வீற்றிருந்து உயிர்கள் வருந்தாவண்ணம் கருணையோடு காப்பார்.

சீரு லாவிய கயிலையம் பொருப்பிடை திகழும்
நீரு லாவிய சடைமுடிப் பொற்புடை நிமலன்
பாரு லாந்திசை யெங்கணும் பரசிவ னுருவம்
நேரு லாவிய பற்பல தலங்களி னிறைந்தே.

(இ-ள்) சிறப்புடைய கயிலையங்கிரியில் விளங்குகின்ற கங்கை யணிந்த சடையையுடைய நிமலனானவர், அஷ்ட திசையெங்கும் பரமசிவனுருவாகவே எல்லா தலங்களிலும் நிறைந்திருப்பார். சு.

நிற்ப தாகிய திருவுளத் தினிதுட் னினைந்து
பொற்ப தாகிய விடபவா கனமுறப் புனிதக்
கற்ப கப்பசு பாசம தகற்றுதல் கருதி
யற்பு தத்திரு வாஞ்சையி லிலிங்கம தானார்.

(இ-ள்) பரமசிவன் ஆதிகாலத்தில் ரிஷபத்தை வாகனமாகக்கொள்ளவும் புனிதமான கற்பகஞ்சேர்ந்த பசுக்களுடைய பாசங்களை அகற்றவேண்டியும் திருவுளங்கொண்டு மகா அற்புதமான திருவாஞ்சைத் தலத்தில் சிவலிங்க சொரூபமாக எழுந்தருளினார். ௫.

இராக லாப்பொன வரும்புக ளிதழ்விரி மதுவுண்
டளிபி னாகநகைத் தாடிய முல்லையார் வனத்தின்
வளமி குந்தமா விலிங்கம தாகியும் வலப்பால்
தெளிபு நன்மொழி மாதொடுந் திகழவீற் றிருந்தார்.

(இ-ள்) மாதர்களின் புன்சிரிப்புக் கொப்பான அரும்புகள் இதழ்களை விரிக்க, வண்டுக்கூட்டங்கள் அதிலுள்ள தேனையுண்டு சந்தோஷித்திருக்கும் படியான முல்லைவனத்தின் வளமையுடைய மகாலிங்கசொரூபமாக, வலப் பாகத்தில் இனிமையான மொழியையுடைய உமையவளுடன் பரமசிவன் எழுந்தருளியுள்ளார். கா.

பிறங்கு தண்ணிளம் பிறைமுடித் தவன்கரச் சூலந்
திறங்கொ டூன்றழி மானத தீர்த்தமொன் றதன்பா
லறங்கு லாவிய வண்ணறன் வலப்புறப் பசுமின்
னிறங்கொ ளம்பிகை நேருற விளங்குமுன் யுகத்தில்.

(இ-ள்) விளங்குகின்ற குளிர்ந்த பிறைச்சந்திரனை முடித்த பரமன் தனது கைச்சூலத்தை ஊன்றினவிடத்தில் மானததீர்த்தமென ஒரு தடாகமுண்டாய்து. அதன் பக்கலில் தரும சொரூபியான பசுபதிநாதர் பச்சை நிறமுடைய அம்பிகையோடு முதல் யுகத்தில் எழுந்தருளியிருப்பார். எ.

அங்கண் மாநிலத் தெழில்பெறு தீர்த்தமு மளிசூழ்
கொங்கு லாமலர் முல்லையஞ் சாரலிற் குலவுந்
துங்க மான்மழு கரதல மருவுறத் தூலங்குந்
திங்கள் வேணியன் செயலினை யாஞ்சில பகர்வேம்.

(இ-ள்) அழகிய பூமியில் எழில்பெறுந்தீர்த்தமும், வண்டினங்கள் சூழ்ந்த பராகங்கள் மிகுந்த முல்லை வனத்தில் வாசமாய், மான் மழு கரத்திலேந்தி இளஞ்சந்திரனைத்தரித்த சடா மகுடத்தையுடைய பசுபதிநாதன் பெருமையை அறிந்தவரை சிலது கூறுவோம். அ.

மண்ட லத்தில்யா வருக்குமா மகங்கள்செய் வதற்கும்
விண்ட லத்தினுஞ் சித்திக டனக்கொரு வீடான்
கன்றி னத்தொடு கற்பகஞ் சேர்ந்துகண் களிக்கு
முண்ட கத்திரு வனேய்த்து முத்திசா தகமே.

(இ-ள்) பூமண்டலத்தில் யாவருக்கும் யாகங்கள் செய்வதற்கும், தேவலோகத்தில் சித்திகளுக்கும் ஒருவீடாக விளங்கும் தேவப் பசுக்கள் கன்றினத்துடன் கற்பகதருவிடஞ் சேர்ந்து மகிழ்ச்சியுடனிருப்பது, தாமரைப் பூவிலுள்ள இலக்குமிக்குச்சமானமானதும் முத்திக்குச்சாதனமான துமாம்.

மாமு னித்திறல் வசிட்டனுக் கில்லறம் வழங்கும்
நாம மாயிர முடையவன் றுயிலிடம் நல்கு
மாம ணிக்கிர ணங்களின் சார்மைதண் மருவுங்
காம தேனுவென் றுயர்மறை நான்கினுங் கழறும்.

(இ-ள்) முனிவர்களிற் சிறந்த வசிட்டருக்கு இல்லறமாகிய செல்வத்தை வழங்குவதும், ஆயிர நாமமுடைய விஷ்ணு பள்ளிகொள்ளும் பாற்கடல்போல் மிகுதியாக பாலை உதவுவதும், நவமணிகளின் ஒளிபோன்றதும், நான்கு வேதங்களாலும் புகழ்ந்த கூறப்படுவதும் காமதேனு வாகும். ௧௦.

ஈன மில்லிளம் புற்களை மேய்ந்தெழில் விரிக்குந்
தூந றும்புனற் பருகிமின் னொளிதிகழ் சுரர்கள்
தான மெய்திய பூம்பொழி னல்லிடஞ் சார்ந்து
தேனி னங்கடன் விழைவொடுங் கிரீடைகள் செயுமால்.

(இ-ள்) செழிப்பாகிய இளம் புற்களை மேய்ந்து; அழகும் பரிசுத்தமானதுமான நீரைப்பருகி பிரகாசம் பொருந்திய தேவலோகத்தருக்களின் நிழலிலிருந்து மிகுந்த ஆவலுடன் கிரீடைசெய்து விளையாடும். ௧௧.

மதர்ச்சி யோடெழு விடைபொருங் காதன்மண் டியதா
விதச்செ யல்கடோய்ந் தறியொணு தினிமைகண் மருவிக்
குதித்தெ ழும்பசு வினங்கண்மெய் பொழுகிய கொழுநீர்
கதிச் செறிந்தவாய் முகத்துறுங் கசடுறக் கலந்தே.

(இ-ள்) இவ்வாறுள்ளவைகளில் ஒரு ரிஷபமானது மிகுந்த போகையினால் இதமகிதந்தோன்றாமல் பசுக்களோடு மருவி துன்பத்திலுண்டான முதநீரானது முகத்திலுண்டான அழுக்கான வியர்வை நீரோடு கலந்து. ௧௨.

மனத்த மூக்குறு பசுக்கடன் வியர்வுமா சுறுநீர்
கனத்த மால்வரை யிடத்தரு வியதெனக் கதுவித்
தொனித்த வண்டுகண் மிகுதியுந் தொடங்கிய முல்லை
வனத்தின் மேவிய சிவன்முடி யுறவழங் கியதால்

(இ-ள்) மன்க்கலக்கமற்ற பசுக்களின் குற்றமுடைய வியர்வை நீரானது பெரியமலையிலிருந்து வரும் அருவிபோல வண்டுகள் சப்தித்துக்கொண்டிருக்கும் முல்லைவனத்துள்ள சிவபெருமான் முடியின்மீது ஒழுகியது. ௧௩.

கங்கை வார்சடை முடிமிசைக் கசடுநீர்க் கலுழி
யங்க மூழ்குற வழிதலி னடியவர் தமக்கு
மிங்கி தந்தரு மெனவிறை யணுசின் னினையாப்
பூங்க மேய்நற் சுவைதரும் பாற்பசுக் களுமே.

(இ-ள்) கங்கையைத் தரித்திருக்கும் சடாமுடியில் அசுத்தமான வியர்வை நீர் அபிஷேக ஜலம்போற் பாவியதால், அடியவர்கள் விரதம் நிறைவேற இங்கிதஞ்செய்வதிதுவோவென சிறிது கோபமுற்றனர். அதனாற் சுவையையுடைய பாற் பசுக்களுக்குத்துன்பமுண்டாயது. கச

மின்னை வென்றெழின் மெய்களை கதுவுற விம்மி
வன்ன பேதமுற் றழல்விடம் மண்டிய தென்னப்
புன்னு கர்ந்திலா தரும்புன் றபருகிடாப் பிணிமேபான்
றின்னல் கொண்டது சிவகுரோ தத்தினு விளைந்தே.

(இ-ள்) மின்னல்போன்ற பிரகாசமுடைய பசுக்களது அழகிய தேகமான்து மெலிந்து, மனங்கலங்கி நிறம்மாறுபட்டு, அக்கினி சுவாலையுடனே விஷமுண்டது போல் புற்களை மேயாமலும், நீருருந்தாமலும், மிகுந்த வியாதியானது சிவகுரோதத்தினாலே விளைந்தது. கரு.

பேணு றுப்பெரி யோருளச் சினத்தனும் பிறழ்வு
தோணு மன்னிடும் பையெனத் தொன்மறை யுரைத்தற்
காணு மாறெனத் தேனினங் காதலால் வருந்திப்
பூணு றுத்துயர் கடலிடைப் புதைந்தன வன்றே.

(இ-ள்) பெரியோர்களைக்கண்டு வணக்கத்துடனே பூசைசெய்யாதபேர்களுக்கு மிகுந்த துன்பம் பொருந்துமென்று வேதநூல்களிலே சொல்லுவதொப்ப, பசுக்கள் ஆன்சைவிழியினாலே வருந்திதுக்க சாகரத்தில் அமிழ்ந்தன.

பீட ழிந்துளங் கசிந்துறு பசியினாற் பெற்றம்
வாடி யும்பசும் புற்களை யருந்துதல் வழங்கில்
லோடி நற்புனல் பருகுத லின்றியோயந் தயர்வாய்
கூடி நின்றிளங் கன்றொடுங் குறைபொறு மையினால்.

(இ-ள்) பசுக்களினது பெருமை குறைந்து மனம் உருகி மிகுந்த பசியினால் வாட்டமுற்று, பசும்புற்களை மேயாமலும் ஓடி ஓடி நல்ல ஜலங்களைப் பருகாமலும், அசதிகொண்டு இளைத்து மருண்ட சிந்தையாய்க் கூடிக்கூடி நின்று இளங்கன்றுகளோடும் சரீரவருத்தம் பொறுக்கமாட்டாமல் பாதவித்தன. கஎ.

நெஞ்ச றிந்தத் தீவினைநினைந் திலேமற நெறியில்
வஞ்ச மாக்களை நோக்கில மறைவிதி பிறழத்
துஞ்சு வோர்தமக் கிதங்கிலே மித்துய ரெய்தற்
கெஞ்செய் தோமெனு நைந்துநைந் துருகுநெஞ் சிடைந்தே.

(இ-ள்) மனதறிந்து ஒருதீவினையும் செய்தறியோம், தர்ம நெறியில் நில்லாத வஞ்சகர்களைக்கண்ணினாலே பார்த்தறியோம், வேதாகமவிதிதப்பி நரகமடைபவரிடம் தர்மப்பொருளைக் கொடுத்து உபகரித்தோமில்லை. இவ்வாறுள்ள நமக்கு இத்துன்பம் அணுகும் மார்க்க மென்னவென பசுக்கள் மயங்கி. கஅ.

அம்ப ரத்திடை வெருவுத லுறுபிணி யதனால்
வெம்ப லுற்றலம் வருமதற் கியல்புற விரிக்கும்
வம்ப றுமலர்ச் சோலைகண் மருங்கெழின் மருவா
வும்ப ருக்கர சறிந்தெதி ரெய்தின னெல்லை.

(இ-ள்) ஆகாயத்திலுள்ள பசுக்கள் இவ்வாறு வியாதியினால் வருந்தி வாசனையுடைய கற்பகத்தருவின் பக்கலில் ஓடிவருவதுகண்டு தேவேந்திரன் விரைவில் அங்குவந்து சேர்ந்தான். கசு.

மேத குத்திறன் மருவிய மெய்ப்பசு வினங்கட்
பேத கந்துய ரெய்துவ தென்கொலப் பிரமன்
சாத கற்பனை யுளவெனி லிவற்றூழி சார்ந்து
வோத வென்றுளங் கருதினன் வாசவ னுகந்தே.

(இ-ள்) மேன்மை பொருந்திய தேகமுடைய பசுக்கூட்டங்கள் துயாமுறுவதுயாது காரணமோ? அல்லது பிரமதேவனுடைய சாதகற்பிதமாயின் இவ்விடம் நேரேவந்து தெரிவிக்கவேண்டுமென இந்திரன் நினைத்தான்.

வேறு.

மிஞ்சுபுகழ் கொள்சுரபி வேதனைக டீர உ0.
நெஞ்சிலுற வாசவ னினைந்தசெய லாலே
கஞ்சமலர் மேவுபிர மன்கடிதி னெய்தி
அஞ்சலஞ்ச லென்னவம ராபதியி லானான்.

(இ-ள்) மிகுந்த புகழையுடைய பசுக்கூட்டங்களின் வேதனைகள் நீங்க தேவேந்திரன் மனதில் நினைத்த மாத்திரத்தில் தாமரையில் வசிக்கும் பிரமன் பயப்படாதே பயப்படாதே யென்று அமராவதிக்குவந்து சேர்ந்தான்.

விண்ணவர் குழாங்களெதிர் மேவிதுதி செய்ய உக.
கண்ணவுறு மென்சுரபி காணவெதிர் நிற்ப
பண்ணிசைகொள் வேதனிரு பாதமலர் போற்றி
நண்ணுந்துய ராவினம் நவின்றன மிகுந்தே.

(இ-ள்) தேவர்கள் எதிர்கொண்டு வணங்கி பசுக்களின் துன்பத்தைக் கூறி நிற்க பசுக்கூட்டங்கள் பிரமனது கமலங்களை வந்தனைசெய்து தங்களுக்குற்ற துன்பங்களைக் கூறத்தொடங்கின. உஉ.

தேவனிரை சொற்றவுரை செவிக்குளுணர் வாகி
யாவினமை தீவினை யகற்றுவ திசைப்பான்
பூவையிம வான்மகள் பொருந்துமொரு பாக
மேவிய சின்னசின வியன்பெருமை கேண்மின்.

(இ-ள்) தேவ பசுக்கள் கூறிய வார்த்தையை செவியுள்ளுணர்ந்து அத்துயரத்தை நீக்கக் கூறுவான் பர்வதராஜன் மகளைப்பாகத்திலுடைய சிவனது கோபத்தில் இது நேர்ந்தது அதைச்சொல்லுகிறோம் கேளும். உங.

நகைத்திரி புரத்தையுண நண்ணியதும் வென்றி
மிகைத்கனு வனங்கனை விழித்துடல் செகுத்து
தகைத்தெருண்ம யூர்தியுயர் தாளுற வுதைத்தோன்
பகைத்தநிலெம் மாற்சில பகர்ந்திடவ தாமோ.

(இ-ள்) சிரித்துத்திரிபுரத்தை எரித்தவரும், வெற்றி மிகுந்த வில்லையுடைய மன்மதனை நெற்றிக்கண்ணால் நீறாக்கியவரும், எருமைக்கடா வாகனமுடைய எமனை மேன்மையான பாதத்திற் பொருந்த உதைத்தவருமான பரம சிவனைப் பகைத்தால் அது சொல்ல முடிவதோவென சில கூறுவார் பிரமதேவன். உச.

வகைப்படவி ரேழுலகு மன்னுமுயிர் யாவுந்
தகைப்படு சராசரந் தனக்குயிர தாகித்
திகைப்பற வனந்தசட சித்தென நிறைந்தே
தொகைப்படு புலன்களின் மறைந்திலகு தொல்லோன்.

(இ-ள்) வேறுவேறாகிய பதினொன்கு லோகங்களிலும் உண்டாகிய உயிர்ப்பிராணிகளான சராசரங்களுக்கெல்லாம் உயிர்க்குயிராகி மயக்கமற் றெண்ணிக்கையற்ற சடங்கள்தோறுஞ் சித்தாய் நிறைந்து தொகையாகிய புலன்களில் மறைந்திருக்கப்பட்ட புராதனன். உரு.

எச்சக மிடத்தினு மிலங்கிய தலங்க
ளுச்சியது வாமென வுகந்திறைவி தானு
மெச்சிய வலப்புறம் விளங்கிடவு மண்ணல்
நிச்சய வரஞ்சைதனி லிலிங்கவடி வானர்.

(இ-ள்) எல்லா லோகங்களிலும் விளங்குகின்ற தலங்களுக்கெல்லாந் தலைமைபூண்டதென உமையானவள் சந்தோஷத்தோடு வலப்புறத்தில் விளங்க நிஜமாய் திருவரஞ்சையில் இலிங்க ரூபமாய் எழுந்தருளியுள்ளார்.

பொன்னிலகு கொன்றைமலர் புன்னைகறுந் தும்பை
மன்னுகலை வெண்பிறைவெவ் வாளரவு மற்று
நன்னதியு மேவுதிரு நாதர்முடி மீதிற்
றன்னுகொழு நீர்வியர்வு தோய்ந்திடலு மாமோ.

(இ-ள்) பொன்போன்ற கொன்றை, புன்னை, தும்பை ஆகிய மலர்களை யும், மூன்றாம்பிறை, நாகம் கங்கை முதலியவற்றையுந்தரித்திருக்கும் சிவ பிரானது திருமுடியில் உங்கள் சரீரத்திலுள்ள வியர்வை நீர்சிந்தி அசுத்தப் படுத்தலாகுமோ. உசா.

சேர்விழைவி னோடுநுஞ் செய்கைமத மாற்ற
லார்வமொ டெனிற்கெழும லானதிரண் மெய்புண்
வேர்வுசிவன் மாமுடியில் வீழலபி டேக
தாரையது வாகியத னாற்சினம தாலோ.

(இ-ள்) சேர்க்கையின் பத்தில் ஆசைகொண்டு மதத்தினால் வெளிப் பட்ட வியர்வை நீரானது மிகுதியாக சரீரத்தை விட்டு சிவனது முடியின் மீது அபிஷேக சலம் போல் ஒழுகியதால் சிவபிரானுக்குச் சிறிது கோபந் தோற்றியது. உஅ.

பொன்னனைய மெய்யிழிவு போன்றதுவு மன்றி
யின்னலொடு வாய்நுகர்த லில்லதுவு மானீர்
தன்னகரி லாதமன முந்தளர்வ தாகிக்
கொன்னையுறு தற்சிவ குரோதமென லாமால்.

(இ-ள்) பொன்போன்ற தேகங்கரைந்து, இளைக்கவும், புண்ணீர் பொரு ந்தி வாயினூற் புல்லுந்தண்ணீரும் உட்கொள்ள முடியாமல் மனந்தளர்ந்து துன்பப்படவும் நேர்ந்தது சிவபிரானிடங்குரோதங் கொண்டதனாலாகும்.

சித்தமறி யாதுபிழை செய்தல்சிவ னுக்குக்
குற்றமில தாயினுநீர் கொண்டபவ நோய்க

ளாத்தவ மியற்றுகினு மெண்ணில்பல கோடி
சித்திபுறி னுங்கொடிய தீவினைய றுதே.

(இ-ள்) மனமறியாமற் செய்த செயலை சிவன் குற்றமாகக்கொள்ளமாட்டாராயினும், பாவச்செயலால் உங்களுடைய சரீரத்துண்டான நோயானது எவ்வகையான தவஞ் செய்யினுஞ், சித்திகளைப்பெற்றாலும் நீங்குவது அரிதாகும். ௩௦

தீதுபுலை கட்களவு செய்கரு வழித்தல்
மாதுபழி பூசுரரை வதைத்தபழி பஞ்ச
பாதக மெனுந்தொகைகள் பற்றறுவ தற்குப்
போதமுறு ஞானசிவ பூசனை புரிந்தே.

(இ-ள்) தீமையாகிய பொய் கூறுதல், கள் குடித்தல், களவு செய்தல், கருவழித்தல், பெண்கள், அந்தணர் முதலியோரை வதைத்தல் ஆகிய பாதகங்கள் பற்றறத்தீரவேண்டுமெனின் அதற்குச் சிவபூஜை செய்தலே தக்கதாம். ௩௧.

ஆனசெய லீதென வடைந்தெழில் வரஞ்சை
தேனொழுகு முல்லைவன தேவையும் வலப்பா
மானையை நோக்கியுமை மாதையும் வணங்கி
தூநறு மலர்க்கணும துற்றமது கொண்டே.

(இ-ள்) ஆகையால் உய்யும் மார்க்கம் இதுவேயென உணர்ந்து. அழகிய திருவரஞ்சையில் தேனொழுகும் முல்லை வனத்திலுள்ள சிவபிரானையும், வலப்பாகத்திலுள்ள அம்பிகையையும் வணங்கி, பரிசுத்தமான மலர்களும், உங்களிடத்துண்டாகிய பால் முதலியவைகளையுங்கொண்டு. ௩௨.

தீங்குசிறி யேம்புரியுந் தீவினைக ளெல்லா
மாங்கது பொறுத்தருள்தி யென்னவர னுக்கே
பாங்குறுநற் றீங்கனிநெய் பாலொடபி டேகம்
பூங்கமழுந் தேனொடு புதுப்புனனீ ராட்டி

(இ-ள்) கொடுமையாக சிறியோர்கள் செய்த தீமையைப் பொருத்தருள வேண்டுமென்ன அவருக்குப் பிரியமான இனிமையுள்ள பழங்கள். நெய், பால், தேன் முதலியவைகளாலுஞ் சுத்த ஜலத்தினாலும் அபிஷேகம் செய்து வைத்து. ௩௩.

போற்றரிய கற்பகம் புதுக்கியபூம் பட்டுஞ்
சேத்தியரிச் சந்தனமுந் தெய்வநறுஞ் சாந்துஞ்
சாத்தியசந் தானமருள் தக்கபணி பூட்டி
தோற்றியமந் தாரமலர் சூட்டியலர் தூற்றி.

(இ-ள்) துதிப்பதற்கரிய கற்பத்தருவினாலளிக்கப்பட்ட பூம்பட்டுவஸ்திரங்களை யணிவித்து, தெய்வநறுஞ்சாந்து முதலிய வாசனைகளையும், சந்தானத் தருவினாலளிக்கப்பட்ட ஆபரணங்களையும் பூட்டி, மந்தாரம் பாரிஜாத முதலிய மலர்களைச்சூட்டி அர்ச்சித்து. ௩௪.

வண்மைநெறி யாகமம் வழங்குமுறை நான்கா
யுண்மைமிகு ருக்கெசரு குற்றமற வோதி

கண்மணிய தானசிவ னைக்கருத லுற்று
திண்மையுயர் பூசனைகள் செய்து வருவாயேல்.

(இ-ள்) வளப்பமுடைய சைவாகம நெறி முறை தவறாமல் ருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களையும் குற்றமறப்பாராயணஞ் செய்து, கண்ணுக்குள் மணிபோல் விளங்கும் சிவபெருமானைக்கருத்தில் நினைத்து உயர்ந்த பூசனை செய்து வந்தால். ௩௫.

அன்பொடு மிகுங்கிருபை யாகுமதி நம்மிற்
றுன்பவினை பாறுமுடல் றூய்நெறிகள் சேரு
மின்பமதை யல்லதினி யேதுசெய லென்றே
முன்பரிகி ரேறுடிவை மொழிந்தயன் மறைந்தான்.

(இ-ள்) இவ்வாறு திருவரஞ்சை க்ஷேத்திரத்தில் பூசை செய்து வந்தால் அன்புடனே கிருபை உண்டாகி சரீரத்திலுள்ள துன்பங்கள் நீங்கி சரீரம் பரிசுத்தமாகும். இதுவே இன்பத்திற்கு வழியன்றி வேறுசெய வேண்டுவ தில்லை யென்று சொல்லி பிரமன் தனது இருப்பிடஞ்சார்ந்தான். ௩௬.

இவ்வியல் புரைத்துவிதி யேகிய வதற்பின்
கவ்வையுறு தேனினங் கருத்துளிசை வாகிச்
செவ்வழி நடந்துசெயல் சேரெழில் வரஞ்சை
மெவ்வலவன சூழலிடை வந்ததுண் மகிழ்ந்தே.

(இ-ள்) இவ்வகை கூறிய பிரமன் துன்பமிகு பசுக்கள் மனமிசைந்து செவ்வையான வரப்பிரசாதமருளும் திருவரஞ்சையடைந்து முல்லை வனத் தில் மகிழ்வுடன் வந்தன. ௩௭.

தண்ணறை யரும்பினொடு தாதுசெறி முல்லை
பெண்ணினொரு பாகனருட் பேறறிவி லாமை
கண்ணலுறு கின்றபசு வைக்கடிகொண் மாதர்
வெண்ணகை புரித்தலென மேவுபொழி லம்மா.

(இ-ள்) குளிர்ச்சியும் வாசனையுமுடைய அரும்புகள் முகைவிள்ளாமல் நெருங்கிய முல்லைகள்; மங்கை பாகனாகிய சிவபிரான் பெருமை யுணரா மல் துன்பமுற்ற பசுக்கூட்டங்களைக்கண்டு பெண்கள் நகைபுரிவது போலி ருந்தது. ௩௮.

கொன்றையணி வேணியன் குறிப்பறிவி லான்மெய்
கன்றிடு மனத்துயர் கடற்சுழி யுழல்போல்
மன்றல்பெறு முல்லைமல ரின்மது மடுக்க
ளூன்றுவரி வண்டின முழுன்றிடுவ தன்றே.

(இ-ள்) கொன்றையை சடையிலணிந்த பரமனது குறிப்பறியாது பசுக் கள் சரீரங்கன்றி துன்பக்கடலில் மறுகி யுழன்றதுபோல, வாசனையுடைய முல்லை மலரிலுள்ள தேனை யுண்டு அத்தேனிலேயே மூழ்கி மயங்கிக்கிடக் கும் வண்டுக் கூட்டங்களை யுடையது அந்த முல்லைவனம். ௩௯.

பூக்கமழும் முல்லையம் பொழிற்செறி வனப்பு
காக்குமியல் மானத கடிக்கமல வாவி
யூக்கமென மருங்குற வுயர்ந்தசிவ லிங்கம்
நோக்கியு முவங்களிகொ ணுண்ணறிவி னாடே.

(இ-ள்) புஷ்பங்கள் நிறைந்த முல்லைவனத்தின் அழகையும், தாமரை மிகுந்த மானத தீர்த்தத்தையும், அதன் பாகத்திலுள்ள உயர்ந்த சிவலிங்கத்தையுங்கண்டு மிகுந்த களிகொண்டன பசுக்கூட்டங்கள். ௬௦.

யாமுறை தலத்தினியல் புக்கதிக மின்றி
தேமலி கடுக்கைபுனை செஞ்சடையன் மேவும்
பூமிசை வரஞ்சைநகர் பொன்னுலகின் மிக்க
நாமமுறை பெற்றதிது நற்றலம தன்றே.

(இ-ள்) நாம் வசிக்கும் தேவலோகத்திற்குச் சிறப்பதிகமில்லை யென்றாலும், கொன்றைமாலை யணிந்த சடாபாரத்தையுடைய பரமசிவன் வீற்றிருத்தலால், திருவரஞ்சை நகரமானது பொன்னுலகத்தினுஞ் சிறந்ததென பசுக்கள் கூறின. ௬௧.

மேவுதட மானத மிகும்புனல் படிந்து
பாவன மொடுஞ்சடல பண்புறுவ தாகி
பூவகை திரட்டிகொடு பூசனை தொடங்கு
மாவரிய பேரறிவு ளாய்நிலைகள் கண்டே.

(இ-ள்) அவிட்டத்திலுள்ள மானத தீர்த்தத்தில் மூழ்கி சரீரம் பரிசுத்தமாகும்படி புஷ்பவகைகளைக்கொண்டு தங்களின் பேரறிவினாலே சிவபூஜை செய்யுங் கருத்துண்டாகி. ௬௨.

வேதனுரை செய்தபடி மிக்கவகை யெல்லாங்
காதலிற் கொணர்ந்திலகு கண்ணுத லனுக்கே
போதமிகு பூசனை புரிந்திடவு மான்கள்
கோதில்நதி வேண்டியே குடதிசை நடந்த.

(இ-ள்) பிரமன்கட்டளையிட்டபடியே சகல திரவியங்களையும் ஆசையுடனே சேகரித்துக்கொண்டு வந்து நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானுக்கு அறிவினாலுயர்ந்த பூசை செய்வதற்கு நதியொன்று வேண்டி பசுக்கள்மேற்குத் திக்சையை யடைந்தன. ௬௩.

வானுலவு வெள்ளிமலை வாய்ந்ததன் முகட்டின்
மேனுலவி வந்திடு விளங்கருவி தன்னை
யானின முகங்கொடுழு தாங்கதுகொ டாறாய்
மானிலங் களிக்கவொரு மாநதி கொணர்ந்தே.

(இ-ள்) ஆகாய மளாவிய வெள்ளிமலைமேல் மேகம் வருஷித்து உச்சியிலிருந்து வழியும் அருவியை தமது முகத்தினாலே உழுது உலகம் சந்தோஷிக்குமாறு பூமியினிடத்தில் ஆறாகக்கொண்டு வந்தன. ௬௪.

ஐயரி பரந்தமைகண் ணுளிறைவர் தம்மைச்
சைவநெறி யாகம விதித்தக வியற்றி
உய்யுமுறை ருக்குயசுர் வேதமதை யோதி
துய்யவமு தக்கடல் சொரிந்தவபி ஷேகம்.

(இ-ள்) அப்படிக்கொண்டுவரப்பட்ட நதியின் சுத்தஜலத்தினாலே செவ்வரிபரந்து மைதீட்டிய கண்ணையுடைய பார்வதிபாகனான பரமசிவனுக்கு சைவாகம நெறிதவறாது பக்தியுடனே தாம் கடைத்தேறும் வண்ணம் வேத மந்திரங்களை ஓதி கடல்போன்ற பாலினால் அபிஷேகஞ்செய்து. ௬௫.

வேறு.

அச்சா லையின்முன் பகீரதனுக் காக வருமக் தாகினிபோற்
றக்கோர் பரவுந் திருவரஞ்சைத் தலைவ னருளாற் குடதிசையின்
மிக்கார் வெள்ளி வரையருவி வெள்ளம பெருகி வருகுதலால்
முக்கா லஞ்செய் தவப்பயனென் றுகந்து பசுக்கண் மொழிந்தனவே.

(இ-ள்) முற்காலத்தில் பகீரதன் செய்த தவத்திற்காக வந்த கங்கை நதி போல், பெரியோர்களால் புகழப்பட்ட திருவரஞ்சைத்தலைவருடைய அருளினாலே மேற்குத்திசையிலுயர்ந்து விளங்கிய வெள்ளிமலையிலிருந்துவரும் அருவி நீரைக்கண்டு இது முற்காலத்திற் செய்த தவத்தின் பயனென பசுக்கள் கூறின. ௪௧.

புளினந் தவழா கறங்குதிரைப் புதுத்தெண் ணீத்தங் சடற்றுடங்கி
யிளமா மதிசெஞ் சடையண்ண லிடப்பா சத்தில விளங்குசெய
லுளமா துமையாள் வலப்பாகத் துறலாற் சிரமா துகந்திதயங்
களிகூர்ந் தெழுந்து வருவனபோற் காட்சி பெருகுங் கருணைநதி.

(இ-ள்) சிறுமணற் குவியல்களைக்கொண்டு சப்தத்துடனே அலைகள் பரவி வரும் பிரவாகமானது சமுத்திரந்தொடங்கி சந்திர சடாதர மூர்த்தியின் இடப்பாகம்வரை விளங்குஞ் செயலானது, உமை வலப்பாகத்திருப்பதை உணர்ந்து சிரத்திலுள்ள கங்காதேவி மனமகிழ்ந்து இடப்பாகத்தில் பரவிவருவதுபோலுமென எல்லோருக்குங்காக்ஷியளித்தது அந்தகருணைநதி.

தழைவார் வரஞ்சைத் தலத்திறைவர் தமக்கு முரித்தா மெனக்
கருத்தின், விழைவாய் நதியின் புனற்கொணர்ந்து விமலர்க் கினிதா
யாட்டியபின், வழுவா தரிச்சந் தனமமைத்து மலர்ப்பூம் பட்டும்
பணியணிவித், தெழுமந் தாரஞ் சண்பகமு மெழிலசேர் பாரி
சாதமலர்.

(இ-ள்) திருவரஞ்சை நாதருக்குகந்ததென மனதிற் சந்தோஷமாய் பசுக்கள் அந்நதியின் சலத்தைக்கொண்டுவந்து சிவனுக்குத் திருமஞ்சனமாட்டி திவ்விய சந்தனங்களணிவித்து பட்டு வஸ்திரஞ்சாத்தி மந்தாரை, சண்பகம், பாரிசாதமலர். ௪௨.

முல்லை மலரோ டிருவாக்ஷி முளரி குவளை செழுங்கொன்றை
வில்வ மறுகு புன்னைமலர் மிகுசெவ் வந்தி நறுந்தும்பை
துல்லை முதலா யனந்தமலர் கொடுவந் தளவி யருச்சனைசெய்
தொல்லி தூப தீபமுடன் றுலங்கு மாரா தனைசெய்து.

(இ-ள்) முல்லை, இருவாக்ஷி, தாமரை, நீலோற்பலம், அழகிய கொன்றை, வில்வம் அறுகு, புன்னை, செவ்வந்தி, வாசனையுடைய தும்பை, துளவ முதலானவைகளால் அர்ச்சனைசெய்து, தூபதீபமுடனே ஆராதனை செய்து. ௪௩.

மிழுவார் கரத்தேம் மண்ணனுள மகிழப் பூசை முறையாற்றி
பழுகாற் செயினு நின்பூசை பரிவாய் செயினு மெமதுபிழை.
முழுதாய்ப் பொறுத்திங் செமையாளு முதல்வா வேன்றே யன்பி
னொடு, தொழுதேத் தியும்பின் றீவினையின் றொகையா நிடவே
துதித்தனவாம,

(இ-ள்) மான் மழு தாங்கிய பெருமானது மனம் மகிழ பூசை செய்து, அடியேங்கள் தவறாக செய்யினும், பரிவுடன் செய்யினும் எமது பிழைகளை முழுதும் பொறுத்து, எம்மையாண்டருளும் முதல்வனே என்று அன்பி னாலே தீவினையொழியும் வண்ணம் துதித்தன. ௯௭.

மேக மிருக்கு மளகமதி மேவு வதனத் தோகை வலப்
பாக மிருக்குஞ் செஞ்சடைமேற் பரவி மிருவண் டினங்களிசை
ராக மிருக்கு நறுங்கொன்றை நருவெண் டலைமா லிகையோடு
நாக மிருக்கு மணிமார்பர் வாஞ்சை வாழும் நம்பானே.

(இ-ள்) மேகம்போன்ற கூந்தலும், சந்திரன் போன்ற முகமும், மயில் போலுஞ் சாயலையுமுடைய பார்வதியை வலப்பாகத்தில் வைத்தும, வண்டு களிசைபாடுங் கொன்றை மாலையும், நருவெண்டலையும், தலை மாலிகை யோடு சர்ப்பாபரணமும் பொருந்திய மணிமார்பனே வாஞ்சையில் வாழும் எம்பானே எனத்துதித்து. ௯௮.

ஆல மிருக்கு மணிமிடற்றோ யமுத மதியின் விரிகிரண
சீலமிருக்குஞ் சடாடவியாய்த் திகழு மொளிமேச் மூவிலைச்
சூல மிருக்கும் காதலத்தோய் துலங்குந் திருவெண் ணீறணிந்த
கோல மிருக்குந் திருமேனி யரனே யெம்மையாட் கொண்டருளே.

(இ-ள்) விஷந்தாங்கிய அழகிய கழுத்தையுடையவரே, அமுதகிரண முடைய சந்திரனை முடியில் தரித்தவரே, மூவிலைச் சூலந்தாங்கிய கரத்தை யுடையவரே, திருவெண்ணீறணிந்த மேனியையுடையவரே எம்மை ஆட் கொள்ளவேண்டும். ௯௯.

சோதியிருக்குஞ் சுடர்வடிவோய் துலங்குங் கலைவாணிறைமதியின்
பாதி யிருக்குஞ் சடாடவியாய் பழமா மறைகள் துதிக்குமருட்
காதி யிருக்குந் திருவடியா யருளா கமத்தின் சைவ நெறி
நீதி யிருக்கு முல்லைவன நிமலா வெங்கட் கிறை யோனே.

(இ-ள்) சோதி வடிவாயுள்ள திருமேனியுடையவரே, விளங்குகின்ற இளம் பிறையணிந்த சடாமகுட மூர்த்தியே, நான்கு வேதங்களாலும் துதி க்கப்பெற்றவரே, அருளுக்கு ஆதியாயுள்ள திருவடியுடையவரே, சைவா கம நெறிக்கு உகந்தவரே, முல்லைவனத்தி லெழுந்தருளியுள்ள நின்மலரே எங்கட்குத் தலைவரே, ௱.

அறிவாற் சிறிய விலங்கினம்யா மடருங் காதற் கொடுமைமிகுஞ்
செறிவா லுனது நிலைதெரியாச் சிறியேஞ் செய்த பிழை பொறுத் துன், நெறியா லெனையாட் கொண்டருள்வா யென்றே நிரைக ணெடுங்காலம், வெறியார் முல்லை வனத்துறையும் விமலன் றனை ப்பூ சித்ததுவே.

(இ-ள்) அறிவில்லாத விலங்கினத்திற் சேர்ந்த யாங்கள் ஆசைமிகுதி யால் தங்கள் நிலைமை தெரியாமல் குற்றங்களைச் செய்தோம். அப்படி தெரியாமற் செய்த பிழையைப் பொறுத்து கிருபையினால் எங்களை ஆட் கொள்ளவேணுமென்று பசுக்கள் முல்லைவனத்துறையும் பரமசிவனைப் பூசித்தன, ௱௧

இவ்வா றியற்று மனத் தருவா யின்புற் றமுது சுரந்தொழுகுஞ்
செவ்வா யுமையாள் பாகனுக்குச் சிந்தை மகிழத் திரட்சிமலர்
மைவார் வரையின் நதியினொடு கொணர்ந்து வணங்கித் தினந்தோறு
மவ்வா வினங்கள் சதவருடம் பூசை யரனுக் காற்றியதே.

(இ-ள்) இவ்வாறு செம்மையான மனத்துடனே, இன்பமாகிய அமுத மொழுகுஞ் சிவந்த வாயினையுடைய உமைபங்கனுக்கு மனமகிழ திரண்ட மலர்களும், மேகந்தவழும் மலையிலிருந்து வரும் நதியின் நீருங் கொண்டு வந்து அபிஷேகித்து நூறு வருஷம் தேவர் பசுக்கள் பூசித்தன. ௫௫.

மூகைத்தண் ணிதழ்மா வுதைந்துமலர் முல்லைவனத்தில் விளங்கு
சிவன், பகைத்த பசுக்கள் பூசனைக்காய்ப் பரவித்தொடரு மந்நதியி,
லகத்தி யனுமா முனிர்குழுவு மார மகிழ்வாற் படியமுத, லுகத்
திற் றிகழுங் கோமுகி யென்றுயர்நா மங்கள் பெற்றதுவால்.

(இ-ள்) வெண்மையுங் குளிர்ச்சியுமான அரும்புகள் வண்டினங்களால் முறுக்குடைந்து மலரும் முல்லைவனத்துள் விளங்கிய சிவனை பகைத்த பசுக்கள் செய்யும் பூசைக்காக பரவிவரும் நதியில் அகத்தியர் முதலான முனிவர் வந்து நீராடிய பெருமையுடையதாகையால் முதல் யுகந்தொடங்கி அந் நதிக்குக் கோமுக நதியெனப் பெயர் வழங்குவதாயிற்று. ௫௬.

தொண்டல் வரையி னருவியெனக் கோவி ன்முதாற் குளிப்பாட்டி
மன்றல் கமழு மலரினொடு வழிபாடாற்று மருச்சனைகள்
பண்டு மறையாற் சதவருடம் பரவுங் காலப் பரமசிவன்
அண்டர் முனிவர் புடைசூழ வருளால் விடைமே லெதிர்நின்றார்.

(இ-ள்) மேகம் மலையின்மீது வருஷித்த அருவிபோல பசுவினங்கள் பாலினால் அபிஷேகித்து வாசனைகமழும் புஷ்பவகையினாலே வழிபாடாற்றி வேத மந்திரங்களால் நூறு வருடம் பரமசிவனுக்குப் பூசைசெய்து வந்தமையால், சிவன் தேவர்கள் புடைசூழ ரிஷபவாகன ரூடராய் எதிர் நின்றார்.

திரிபுண் டரவி லோசனமுந் திகழ்வெண் ணீறுந் திருக்குழையு
மறிமா னபய வரதமொடு மருவுபணிகங் கணகிரணஞ்
செறியு மதியோ டொருபாகஞ் சிறந்த வுமையோ டெதிர் நின்ற
நெறியா வினங்கண் டகமகிழ்ந்து நிமலன் றன்னைத் துதிப்பதுவே.

(இ-ள்) திரிபுண்டரமான விபூதியும், நெற்றிக்கண்ணும், திருக்குழையும், மழுமானும், அபயவரதமும், நாககங்கணமும், மூன்றாம்பிறையும், ஒரு பாகத்தில் உமையவளோடு மெதிர்நின்ற நெறியை பசுவினங்கள் கண்டு மனமகிழ்வோடு சிவனைத்துதிக்கத் தொடங்கின. ௫௮.

அரவு மதியும் பகீரதிப்பும் அலர்ப்பூங் கடுக்கைத் தார்செறிந்து
விரவுஞ் சடில வானவனே விமலா வுனது பெருங்காட்சி
யிரவும் பகலு முனதுபத மிதய நீங்கா திமையவர்கள்
பரவும் பரிசின் றெளியோமாற் பரிந்து காணத் தக்கதுவோ.

(இ-ள்) பாம்பும், பிறையும், கங்கையும், கொன்றைமாலை நெருங்கி விளங் குஞ் சடாபாரத்தையுமுடைய மேலோனே, பரிசுத்தவிமலனே, உனது அருளானந்த ரூபத்தையும், திருவடியையும் தேவர்கள் இருதயத்தில் நீங்காமல் வைத்துத் துதிக்கும் பெருமையை இன்று எங்கள் கண்களாலே காணத்தக்கதோ. ௫௯.

கொஞ்சு மழலைக் கிளியின்மொழி குயிற்பே டன்ன விளங்தோகை,
வஞ்சி யுமையாள் வலப்பாக மருவி யிருக்கும பரஞ்சுடரே
தஞ்ச முனது சரணமலா துண்டோ வெமக்கு தரணிதனி
லஞ்சல் புரிவா ரெனக்காரிங் கரனே யடியா ருளத்தமுதே.

(இ-ள்) கொஞ்சிய சொல்லையுடைய இளங்கிளியும், குயிலும், அன்னப் பேடும், மயிலும் ஒப்பாகிய உமையவள் வலப்பாகம் மருவி யிருக்கும் பரஞ்சுடரே, எங்களுக்கு அடயளிததுக்காப்பது தங்கள் சரணமலால் வேறுண்டோ? அஞ்சலென்று எங்களைக்காரும் அடியார் திருவுளத்தில் மகிழ்ந்திருக்கும் அமுதமே. ௬௧.

கொதிக்கும் விடத்தைக் மிடற்றடக்கிக் கொடிய மழுவைக்கரத் தேந்திச், சதிக்கு மிாலை யொலிசெவியிற் றூக்கா வுழுவையுரிபுனைந்து, மதிக்குங் கரியி னுரிபோர்த்து வளரும் புயங்க மார்பணிந்து, துதிக்கு மடியா ருளத்துறையுந் துயர்தீர்த் தருளுந் தொல்லோனே.

(இ-ள்) கொதிக்கின்ற விஷத்தைக்கண்டத்திலும், கொடுமையான மழுவைக்கரத்திலும், சதிசெய்யும் மாலொலி செவியிற்பட பிடித்தும், புலியை யுரித்து இடையிலே தரித்தும்; யானையின்றோலைப் போர்வையாகத்தரித்தும், அரவாபரண மணிந்தும், அன்பு மிகுந்த அடியார்கள் திருவுளத்தில் குடிகொண்டிருக்கும் புராதனனே! எங்கள் துயரத்தைப்போக்கியருளும்.

அன்பர்க் கினிய வாரமுதே யருமா மறைகள் பழுத்துதிரு
மின்பக் கனியே யருட் சுவையே யினிய வடியா ருளத்திலுறுந்
துன்பத் திமிரங் கடிந்தகலத் துரத்து ஞானச் சுடரொளியே
யன்பில் செயும்பூ சைக்கெம்மை யாளா திருந்தால் வசையுண்டோ.

(இ-ள்) அடியார்களுக்கு இன்பமாகிய அமுதமே, அருமையான வேதத்திற் பழுத்து உதிரும் இன்பக்கனியே, அருள் சுவையே, இனிதாகிய அடியவரின் உள்ளத்திருந்து துன்பக்கலக்க மில்லாமல் ஓட்டிய ஞானதீபமே பரிவில்லாமற்செய்த பூசைக்கிரங்கி எங்களை ஆட்கொண்டால் குறையுண்டாகுமோ. ௬௨.

எந்தாய் போற்றி யுலகமெலா மீன்றாய் போற்றி யெமையாள்வந்தாய் போற்றி யுயிர்பயிர்க்கு மழையாய் போற்றி யுமைக்கொருபால், தந்தாய் போற்றிக் கொடுவினைக்கோர் தழலே போற்றித் தடமலர்ப்பூங், கொந்தார் முல்லைக் காவுறையுங் கோவே யுனது தாள்போற்றி.

(இ-ள்) எம்முடைய கர்த்தனே போற்றி, சகல உலகமுமீன்ற தயாநிதியே போற்றி, எங்களையாட்கொள்ள வந்தவரே போற்றி, உயிராகிய பயிர்களுக்கு மழையானவரே போற்றி, உமைக்கு ஒருபாக மளித்தவரே போற்றி, கொடிதாகிய தீவினைக்கு அக்கினியானவரே போற்றி, விசாலம் பொருந்திய மலர்ப்பூங்கொத்து நிறைந்த முல்லை வனத்திலிருக்குந் தேவனே தங்களது இரண்டு பாதங்களும் போற்றி போற்றி. ௬௩.

அருவே போற்றிக் குணக்கடலி னமுதே போற்றி யருள்பழுக்குந், தருவே போற்றி மெய்யடியார் தவமே போற்றி யருண்ஞான வுருவே போற்றி யடியவர்நல் லுணர்வே போற்றி யோங்கு

மலர், மருவார் பொழில்சூழ் திருவரஞ்சை வாழ்வே மலர்த்தா ளிணைபோற்றி.

(இ-ள்) அருவமானவரே போற்றி, கிருபா சமுத்திரத்தின் அமுதமே போற்றி, அருள் பழுத்திருக்குங் கற்பத்தருவே போற்றி, உண்மையடியார் புரியுந்தவத்தின் கொழுந்தே போற்றி, அருளாகிய ஞானசொரூபமே போற்றி, அன்பர்களின் நல்ல உணர்வானவனே போற்றி, மலர்கள் சூழ்ந்த திருவரஞ்சையில் வாழ்பவரே உமது பாதாரவிந்தங்கள்போற்றி.

என்று வினங்க ளடிபரவி யிருகண் களித்துப் பரவசமாய், நின்று டியுநான் மறைபாடு நெறியால் வரஞ்சை நிமலனுக்குக், குன்று வுவகை மிகுந்தமுதாற் குறைவில் பூசை செய்தநிலம, என்று கியநும் பெருந்துயர்கோ யிறிந்தோ டியதா மெனவுரைத் தார்.

(இ-ள்) என்று துதித்து பசுக்கூட்டங்கள் அடிவணங்கி கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய நான்மறையை ஆடியும் பாடியும் நின்ற நிலைமை யுணர்ந்த திருவரஞ்சை நாதருக்கு மிகுந்த உவகை தோன்ற, பாலினுல் குறைவில்லாமல் பூசைசெய்த அருமைத்திறமான்தால் உங்களுடைய துயரங்கள் இக்ஷணமேபறந்தது எனக்கூறினர். ௬௫.

முன்னோர் யாரு மியற்றரிய முறையாற் செய்த பூசையினி தன்னு லுமது துயர்நீக்கிப் பிழையும் பொறுப்ப தானதுநீ ரென்னு வரம்வேண் டுமென்னு மீசன் றனையும் வலப்பாலின் மின்னு ரியையும் வலம்புரிவந் திறைஞ்சிபசுக்கண் விளம்புதுமால்.

(இ-ள்) இதற்குமுன் யாரும் இவ்வாறு பூசை செய்ததில்லையெனக் கூறும்படி அரியமுறையாற் பூசைசெய்தீர் அதனுலுமது துயரை நீக்கிப் பிழையும் பொறுத்தோம். நீர் இன்னும் என்னவரம் விரும்புகிறீரோ தேனுமெனக்கூறும் பரமசிவனையும் அம்பிகையையும் பிரதக்ஷணஞ்செய்து வணங்கிப் பசுக்கள் கூறத்தொடங்கின. ௬௬.

விண்ணின் விழைவால் யான்செயும்வெம் பிழைப்பும் பொறுத் தென் வினையகற்றுங், கண்ணின் மணியே சுடர்விளக்கே கருணைக் கடலே சிவபுரா, நண்ணு மெமது பதியாக நதிக்கு நாம முளதாக மண்ணி லுயர்ந்த வித்தலத்தின் வரங்களான பெருமிதமும்.

(இ-ள்) தேவலோகத்தில் காமநுகர்ச்சியினுல் நாங்கள் செய்த பிழையைப் பொறுத்து எங்கள் துயரந்தீர்த்தருளிய கண்மணியே, ஒளியின் சுடரே, கருணை சமுத்திரமே, சிவபுரவஸ்துவே, எங்கட்குப் பதியாகவுள்ள இந்நதிக்கு எங்கள் நாமமுண்டாகவும், உலகிலுயர்ந்த இந்நகர்க்கு வரப்பிரசாதமுண்டாகவும் ௬எ.

மகிழ்வா லீன்ற விடையெனுமெம் மைந்த ருனது வாகன மாய்ப்; புகழ்கொண் டேறும் படியுகந்து புவனு காய முள்ளளவு, மிகழ்வில் முருகன் கணபதி யென்றிருமா மகவி னுவமையெனத் திகழும் வரமீ தளித்திடுவாய் சிவனே யென்று பணிந்ததுவே.

(இ-ள்) நாங்கள் மகிழ்வோடு ஈனும் கன்றுகளாகிய இடபங்களைத்தேவரீர் பக்ஷம் வைத்து வாகனமாகக்கொண்டு, பூமியும் ஆகாயமும் உள்ள வரையில்

இகழ்வில்லாத முருகக்கடவுள், கணபதி யென்னும் இரண்டு மைந்தர்களுக்குமொப்பாக கிருபைவைத்து ரக்ஷிக்க வேண்டுமெனக்கேட்டுக்கொண்டன.

சிந்தை நயந்து சிவனுரைப்பார் செயல்செய் பூசை தேனினங்கா, டந்தோம் வரமீ தையமிலை தக்க திருவா மூவுல்சேக, ருந்துங் கொடிய பவப்பிழைக ளோரா யிரங்கள் செய்யினும்பாற் கிந்த மலர்கொ டர்ச்சனைகள் சாண மகிழ்வோம் சத்தியமே.

(இ-ள்) மனங்குழைந்து பரமசிவன் கூறுவார், அரிய பூசைசெய்த தேவப்பசுக்களே நீங்கள் கேட்ட வரத்தை சந்தேகமின்றி யளித்தோம். அன்றியும் பஞ்சமா பாதக முதலாகிய கொடிய வினைகள் ஆயிரமாகச் செய்தாலும், உங்கள் பாலை வாசனையுடைய புஷ்பங்கொண்டு அபிஷேகித்து அர்ச்சனை செய்யின் அவை பஞ்சாய்ப் பறப்பதுமன்றி அவர்கள் செய்யும பூசையைக் கண்டும் மகிழ்வோம் நிச்சயம். ௬௯.

என்றங் குரைத்துச் சிவன்வரஞ்சை யிலிங்க வடிவின் மறைந்ததற்பின், வென்றி யுளதாய் முன்போலும் வெயிலின் கிரண ஒளிவீச, நன்ற ருடல்பெற் றுவினங்கள் நலைவதீர்ந் துயர்ந்த பேறினொடு, மன்றல் கமழுங் கற்பகக்கா வதன்சேர்ந் துள்ள மகிழ்ந்தனவே.

(இ-ள்) என்று பரம சிவன் திருவுளம்பற்றி திருவரஞ்சைத்தலத்துள்ள சிவலிங்க சொரூபத்தில் மறைந்த பிறகு மிக்க ஜெயமுடையதாய், முன்னிலும் அதிக பிரகாசமுள்ளதாய், சரீர சௌக்கியம் பெற்று, குறைதீர்ந்து மிகுந்த பாக்கியத்தோடு வாசனையுடைய கற்பகத்தருவினிடம் சார்ந்து தேவப்பசுக்கள் இன்புற்றிருந்தன. ௭0.

போற்றுங் கருத்தாற் பசுபூசை புரிந்த வாத்தாற் பசுபதியா, மேற்ற வரங்க ணல்குதலா லெழிலார் தலப்பேர் திருவரஞ்சையாற்றின் புனலா வினங்கொணர்ந்தங் கண்ணற் காட்ட கோமுகியாந், தோற்றும் விடைமீ துகந்தசிவ னன்றெட் டொண்ட தொன்மையதே.

(இ-ள்) வந்தனை வழிபாடு செய்யுங்கருத்துக்கொண்டு பசுக்கள் பூசை செய்ததால் அத்தலத்திலுள்ள சிவனுக்குப்பசுபதி யென்றும், அவைகள் வேண்டியபடி வரமளித்தமையால் திருவரஞ்சை யென்னும் பசுக்கள் கொணர்ந்த ஆற்று ஜலத்தினால் பரமசிவனுக்கு அபிஷேகஞ்செய்தமையால் அந்நதிக்கு கோமுகி நதியென்றும், சகல தேவதைகளுங்காண சிவன் ரிஷபத்தை வாகனமாகக்கொண்டமையால் இத்தலம் மிகப்புராதனமென்பதும் இதனாற் பெறப்படுகிறது. ௭௧.

அரிய மறைக ளுரைத்தசெய லாகி விளங்குந் திருவரஞ்சைப்
புரியின் மகிழும் பசுபதியார் புகழ்கண் டெம்மாற் புகலெளிதோ
வுரிய வரங்க டருந்தலமித் தலம்போ லுலகின் வேறுளதோ
தெரிய லணிமார் பிரட்சேன வெனமா முனிவன் செப்பினனால்.

(இ-ள்) அரிதாகிய வேதங்களால் கூறப்படும் மகிமையையுடைய திருவரஞ்சை க்ஷேத்திரத்தில் மகிழ்வெய்தியிருக்கும் பசுபதியின் புகழையறிந்து எம்மாற் கூறும் எளிமையுடையதோ? வேண்டும் வரங்களைத்தடையின்றி கொடுக்குந்தலம் இதையன்றி வேறுண்டோ மாலையணிந்த பிரட்சேன மகாராஜனேயென சாபாலி முனிவர் திருவுளம் பற்றினர். ௭௨.

என்று விருடி யோர்கடமக் கிசைத்தான் சூத முனிவனிவைச், சொன்னோர் கேட்கும் விருப்பமுளார் தொடங்குஞ் சிறிது கருத்தறிந்தோர், பொன்னோர் செல்வ நிறைந்துமிகப் புகழ்பெற் றுயர்ந்த பூங்கமல, மின்னோர் வரஞ்சை நாதனருள் விருப்புற் றுலகில் மேவுவரால்

(இ-ள்) இவ்வாறு பிரட்சேன மகாராஜனுக்குச் சாபாலிமுனிவர் கூறினரென சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்கு அருளிச்செய்தனர். இந்த மகிமையைச் சொன்னவர்களும், கேட்கும் விருப்பமுடையவர்களும் சிறிது கேட்டவர்களும், இம்மையில் குறைவற்ற செல்வமும் புகழுமுற்று தாமரை போன்ற பதத்தையுடைய நீறணியுமையவள் பாகனாகிய திருவரஞ்சைப்பெருமானது அருளுங்கிருபையுமடைந்து, சௌக்கியமாக விருப்பார்கள். எ௩.

பசுபூசைச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௩ க்குத் திருவிருத்தங்கள் ௱௫௮.

திருச்சிற்றம்பலம்,

உ

சிவமயம்.

# வாலி பூசைச் சருக்கம்.

வேறு.

காபாலுயர்கின்ற களிப்புறவே
யபாலொடு பூசனை யாற்றுமவை
பூபாலன் மகிழ்ந்திட வேபுகலுஞ்
சாபாலி முனித்துணை தாள்பணியாம்.

(இ-ள்) கற்பகத்தருவினிடம் உயர்வாகிய மகிழ்வுற் றிருக்கவேண்டி காமதேனுக்கள் தமது பாலமுதத்தோடும், புஷ்பவகையோடும் பூசைசெய்த சரித்திரத்தைக் கேட்ட பிரடசேன மகாராஜன் மனமகிழ்ந்து சாபாலிமுனிவரின் பாதங்களை வணங்கி. க.

பசுபாச விமோசன மும்பரம
னிசைவான வரஞ்சையி னெய்தியது
நசையா லறிவுற்றன னன்பினொடுந்
திசையோர்புகழ் வாலி யெனுந்திறயோ

(இ-ள்) பசுக்களின் பாபவிமோசனமும், பரமசிவன் வாஞ்சைப் பதியில் விருப்புற்றிருப்பதும், விருப்பமுற்று அறிந்துகொண்டேன். அன்போடு எட்டுத் திசையிலுள்ளவர்களும் புகழும்படியான திறமையுள்ள வாலி என்பவன். உ.

ஏதெண்ணி வாஞ்சையி லீசனிரு
பாதந்தொழு பூசனை பண்ணியதிற்
கோதில்லது கொண்டருள் பெற்றதினை
யோதென்ன விருப்பொடு முன்னினனே.

(இ-ள்) வாலி என்பவன் எந்தக் காரியத்தைக் குறித்து வாஞ்சை நாதருடைய பாதத்தைத் தொழுது பூசனை யியற்றி குற்றமற்ற அநுக்கிரகங்களைப் பெற்றான். அதைக் கூறவேண்டுமெனக் கேட்ட அரசனுக்கு முனிவர் கூறுவார். ரு.

இசையும்புகழ் காந்தை யியம்புகெனுஞ்
சசியின்குல மன்னவகேள் தாரணியில்
விசையம்பெறு வாலி யவன்சரிதை
திசையெங்க ணிலங்கவெ செப்புவனால்

(இ-ள்) கீர்த்தியும் புகழுமுண்டாகிய சரித்திரத்தைச் சொல்லுமாறு கூறிய சந்திரகுல அரசனே! கேட்பாயாக. மிகுந்த பலவானாகிய வாலியென்பவன் சரிதத்தை உலகமெங்கும் விளங்கக் கூறுவேன். சா.

திரையாழி வளைந்த சகத்துளுயர்
குருமாமணி மின்னுங் கொழிக்குநகர்
விரைவார்மலி பூம்பொழில் மேவியளி
நிரையின்னிசை யெங்கு நெருங்குறுமே.

(இ-ள்) அலை பரவிய கடல்சூழ்ந்த பூமியில் நவரத்தினங்கள் மிகுந்து பிரகாசிக்கும் ஒரு நகரமுண்டு. அதிலுள்ள சோலையில் வண்டுகள் எங்கும் சங்கீதம் பாடின வண்ணமாக விருக்கும். ௱.

மதிதாரகை என்பன மாமணிகள்
கதிர்போலொளிர் வீசு கனத்தவரைப்
பதியாகினு மிப்பரி சில்லதெனத்
துதிகொண்டது வெண்டிசை யுந்தொகையே.

(இ-ள்) சந்திரன் போலவும், நட்சத்திரக் கூட்டங்கள் போலவும், சூரிய கிரணங்கள் போலவும், ஒளி வீசும் பலபல நவரத்தினங்கள் உண்டாகிய பருவதங்களுடையதுமன்றி உலகில் இந்நகருக்குச் சமமானது வேறில்லையென அஷ்ட திசையோரும் புகழப்பட்டது. சு.

பனைமாவொ டரம்பை திகழ்பனசக்
கனியுங்கனி தேனெதிர் காட்டுமது
தொனிசங்குழு தொன்மரு தக்கழனி
நனிகன்னலை நக்குவ செந்நெலுமே.

(இ-ள்) பனைகளும், மா, வாழை, பலா முதலிய கனிகள் பழுத்து ஒழுகிய தேனனது ஆறாக ஓடி நாற்புறமுமுள்ள வயல்களிற் பாய்ந்து சங்கினங்கள் உழும் மருதநிலத்திலுள்ள கரும்புகளைப் பழிக்குமாறு செந்நெற் பயிர்கள் வளர்ந்தோங்கும். எ.

இமையோர்பதி முன்னெழு காவணமென்
றமுகின்றிறை காட்டிடு காழ்கமுனு

விமுகத்தொடு மாகிய செந்திருவாழ்
கமலத்தட மேவிய சஞ்சமுமே.

(இ-ள்) தேவலோகத்திலிடப்பட்ட பந்தலுக்குக் கால்கள் நாட்டியது போல வரிசையாகவுள்ள பாக்கு மரங்களும் திருப்பாற் கடலில் அமுதங் கடையும்போது உற்பவித்த மகா லட்சுமி வீற்றிருக்கும் தாமரை மலர்கள் நிறைந்திருக்கும் தடாகங்களும். அ.

தளர்வில்லென வுங்கதிர் தாவிவரும்
வளர்சக்கர வாள மிகும்புரிசை
வொளிகட்பணி நேர்தி ருற்றமையா
லளவத்தடை யாகி விளங்கிடுமால்.

(இ-ள்) தளர்ச்சி யில்லாம லோங்கி சூரிய மண்டலத்திற்கு மேலாக வளரப்பட்ட மதிலானது, சூரியனை யாகு திண்டுவதற்கு வருவதுதன்றி சக்ரவாளகிரி தடையாக விருப்பதுபோல் விளங்கிடும். ௯.

புடைகொண்ட கிடங்கு பொருந்துபிலத்
தடியப்புற மாவதெனிற் பணிகண்
டடையுற்றவை நின்றக லச்சலதி
கடலென்ன வளைந்தெயில் காக்குறுமால்.

(இ-ள்) மதிலினடியிலுள்ள அகழியானது பாதாளங்கொண்டு தாழ்ந்து சென்றபோது நாகலோகத்துப் பாம்புகள் தடையாக விருந்தமையால் விரிந்து சமுத்திரம்போல் மதிலைச்சூழ்ந்து காவல் செய்யும். ௧௦.

மணிகொண்டவிர் மாட நெருங்குமதி
லணிகின்ற பதாகையம் மாருதியா
லிணையின்றி யெழுந்து வான்நதியி
னணுகின்றலை போலும் நயப்புறமே.

(இ-ள்) நவமணியழுத்திய மாடமாளிகை தோறும் நெருங்கக்கட்டிய கொடிகள் காற்றிலலைசைவது ஆகாய கங்கையின்அலைபோலத் தோன்றி நின்றது. ௧௧.

கனிபல்வள வாவண முன்னவையின்
றுனிசாளர மாளிகை பைந்தொடியா
ரினிதாய்நட மாடு மரங்கியல்புந்
தனதன்பதி வெட்குவ தக்கதுவே.

(இ-ள்) பலவளங்களும் மிகுதியாகவுடையகடைவீதியின் முன்பக்கத்திலுள்ள உயர்ந்த மாடியின் சாளர வாயில்களில் பெண்கள் இனிமையாக நடனஞ்செய்து பாடுவது அளகாபுரியையும் வெட்கப்படச்செய்யும் இயல்பினது. ௧௨.

வேறு.

அல்கதிர்க் கூடங்கே ருயர்மதிள் கடக்க வரிதென வவிர்மணிச் சுடர்க, ளில்குபொற் கதவந் திறந்திடக் கிரண விரவியு மவ்வழி நோக்குங், குலவுவெண் மதிபுஞ் சாளர வழியிற் கூட

திசை நோக்குவ னென்று, லுலகிலிந் நகர வளமையை நிகர்க்க வுரைப்பதற் குவமைவே றுளதோ.

(இ-ள்) விரிந்த கிரணங்களையுடையசூரியனது தேரானது, அந்நகரத்தி லுள்ள உயர்ந்த மாளிகைகளைத்தாண்டுவதரிதென வெண்ணி, நவரத்தினங் களிழைத்த மாடியிலுள்ள பொற்கதவுகள் திறந்தவுடனே அவ்வழி செல் வன் அன்றியும், சந்திரன் முதலிய கிரகங்களும் சாளரவழியாகவே மேற்குத் திசை செல்வ தென்றால் உலகில் இந்நகருக்குச்சமமாய் ஒப்பு கூறுவதற்கு வேறொரு நகரமுண்டோ. கங.

கட்புலன் களுக்கு மகன்றபே ரகழி கட்செவி சிரோமணி மடுவிற், கொட்பிலத் தொளையிற் சுடரொளி காட்டுங் குடவளை யின்மணி கொழிக்கும், விட்புலத் திறுநன் னகருநக் காட்டு மேவிய பொலன்சிறை யன்னப், புட்குலங் கமலப் பொகுட்டடை கிடக்கும் புனலுடுத் திலங்குமா நகரம்.

(இ-ள்) கண்களால் குறித்துப்பார்ப்பதற் கருமையாகிய ஆழமுடைய பெரிய அகழியிலுள்ள நாகங்களினுடைய சிரோரத்தினங்களின் பிரகாசங் கள், தீபச்சுடர்போல் விளங்கவும், சங்கினங்கள் ஈன்ற முத்துக்கள் நக்ஷத் திரக்கூட்டம்போல் ஒளிவீசி தேவலோகத்தினியல்பை விளக்கவும், அழ கிய சிறகையுடைய அன்னப்பக்ஷிகள் தாமரை மலர்களிலிருந்து அடை காப்பது மாகிய அகழியை உடையாக உடுத்தியது அந்நகரமென்க. கச.

வேறு

வரைகானகம் வையம தன்றியும்
திரையாழி யிடங்கள் செனித்தபொருள்
தரையாவு நிறைந்த தகைப்பல்வள
முரைகூறரி தென்றெனிர் வாவணமே.

(இ-ள்) மலைபடு திரவியம், காடுபடுதிரவியம், நாடுபடு திரவியம், கடல் படுதிரவியும் ஆகிய பொருள்களெல்லாம் தரையிடங் கொள்ளாமல் மிகுதி யாக பெருமையும் வளமும் சொல்லுதற்கரிதாகவுடையது கடைவீதி. கரு.

சட்கன்ம விதித்தொழி லோர்கள்தலங்
கட்குந்திர லான தடங்களிகொள்
புட்குந்திய பொன்னுல கென்னவளர்
கிட்கிந்தை யெனுங் கெழுவும்பதியே,

(இ-ள்) அறுவகைத் தொழிலாளரான அந்தணர்களுள்ள நகரங்களிலும் மிகச்சிறந்ததாய் தடாகங்களில் அன்னப்பக்ஷிகள் தங்கி விளையாடும் தேவ லோக மிதுவென்ன கூறத்தகும் கிஷ்கிந்தையெனும் மேலான ஒரு தல முண்டு. கசு.

எழிலப்பதி யாளு மிறைப்புடவி
தழிரிக்கரசென் றலைமைப் பெயரா
னழிவில்பெரு வானர ருக்கரசா
யுழிபொற்பொ டிகந்து முறைந்திடுநாள்.

(இ-ள்)-அழகுடைய அந்நகரையாளு மரசன் பூமியெங்குஞ்சார்புடைய இக்கரசனென்னும் பெருமையுடையான் அழிவில்லாத வானரங்களுக்கு அரசனாக இருந்துதெகரண்டு மேன்மையாக வாழ்ந்து வரும் நாளில். கஎ.

பண்டோர்முனி சாப விதிப்படியா
லொண்டாவுழி யோர்வன முள்ளுறையும்
வண்டார்கம லஞ்செறி வாவிநிலை
கண்டான் மதிரிக் கரசன் கணினே.

(இ-ள்) முன்னொரு காலத்தில் ஒருமுனிவன் சாபத்தால் ஒருவரும் புகாத வனத்தில் வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் தாமரைகள் நிறைந்த தடாக மொன்றை இராக்கரசன் கண்ணுற் கண்டான். கஅ.

தண்ணார்புன லுள்ளுறு தன்வதனங்
கண்ணுறெழில் வாவியிற் கண்டமையால்
நண்ணாரிவ ரீங்குழி நண்ணியதென்
றண்ணார்புனல் பாய்ந்துடல் தோய்ந்தனனே.

(இ-ள்) குளிர்ச்சியுள்ள அந்த ஜலத்தில் தனது முகம் தோன்றுவதுவதைக்கண்டு விரோதிகள் அங்குள்ளதாகக்கருதி ஜலத்திற்குதித்து மூழ்கி எழுந்து வந்தான். கக.

தோய்ந்தான்புனல் தொல்லுரு மாற்றியபின்
வாய்ந்தேயெழில் மங்கை யுருக்கொளலால்
காய்ந்தேமதன் விட்ட கடுங்கணைகள்
பாய்ந்தே வுளமும் பரிவாயினனே.

(இ-ள்) அந்தச்சலத்திலே மூழ்கி எதிரியைக்காணமல் கரையேறின வுடன் தனது உருவம் மாறி அழகிய பெண் உருவங்கொண்டவன், வசந்த காலமானதால் மன்மதத் தாபத்தால் பொறுக்க முடியாத விரகதாபமுற்றான்.

மேகக்குழ லாமை விழித்திருவை
நாகத்தர சன்பி னயந்துதழீஇ
போகசுகு றியோடு பொருந்துதலால்
வாகைத்திறல் வாலி யுதித்தனனே.

(இ-ள்) கருமேகப்போன்ற அளகமும், மைதீட்டிய விழியும் இலக்குமி போன்ற அழகமுடைய அப்பெண்ணரசை தேவேந்திரன் கண்டு மகிழ்ச்சியுடன் சுகபோகங்கூய்த்தமையால் மிக்க பலமுள்ள வாலியுதித்தான். உக.

ஒளிசெங் கதிர்பின் னுறவாகியணைந்
திளையோ னெனவெய் திகல்சுக்கிரிவன்
வளையுற்றகை மாதர் மனோகரராய்
விளைவுற்றிறல் வீரிய ராயினரால்.

(இ-ள்) வாலியுதித்தபின் இந்திரன் போக சூரியன் அக்கன்னிகையை யணைய இளையவனாகிய சுக்கிரீவன் பிறந்தான். இவ்விரு புதல்வர்களும் வளர்ந்து கன்னியர் காமுறுங்காளையராய் மிக்க வீரத்துடன் வளர்வாராயினர். உஉ.

அன்னார்மொழி யாகி யரிக்கரசன்
முன்னாண்முனி யோது மொழிப்படியே

மின்னா ளுரு வாக்கும் வியன்புனலிற்
றன்னார் குடி துற்றவை தோய்ந்தனனே.

(இ-ள்) பெண்ணுருவமான அரிக்கிரசன் நாரத முனிவர் சொற்படியே பெண்ணுருவாக்கிய அப்புனலில் மீண்டும் மூழ்கினன். ௨௩.

தோய்ந்தே யெழில்தொல் லுருவாகியபின்
வாய்ந்தேயிரு மைந்தர்க டம்முடனும்
ஆய்ந்தோர்புக ழாருற வேமணியால்
வேய்ந்தேதிகழ் தன்னகர் மேவினனால்,

(இ-ள்) மறுபடியும் மூழ்கினவுடன் தனது தொல்லுருவம் பெற்று தனது இருகுழந்தைகளுடன் நூல்களறிந்தோர் புகழும் நவமணிகளிழைத்த தனது நகரத்திற்குச்சென்றான் ௨௪.

வேறு.

அந்தத் தடத்தின் மூழ்கியிட ஆண்பெண் ணாகிப் பெண்ணாணாய்
மந்த விதங்கொண் டிக்கரச னெழில்கிட் கிந்தை யரசாள்வோன்
வந்த வகைதா னிற்கிவ்வண் மைந்த ரிருவர் தங்கடனில்
முந்துந் தனையன் வாலிசெயல் மொழிவ மிவைகேண் முனிவேந்தே.

(இ-ள்) இக்கரசனாவன் குளத்தில் மூழ்கி பெண்ணாகவும், பின் ஆணாகவும் மாறிய பின் இரு பிள்ளைகளோடும் அழகிய கிஷ்கிந்தையிலிருக்க மூத்தவனாகிய வாலியின் சரித்திரத்தைச் சொல்லுகிறோம் கேளுமென்று முனிவர் சொல்லத்தொடங்கினார். ௨௫.

இழைசேர் மார்ப னிகல்வாலிக் கிணைவே றொருவ ரெதிரில்லா னுழுவைத் திறலோன் மனவலிய னுயர்மால் வரைக ணிகர்புயத்தான், கழைசேர் குடுமி நெடுங்குவட்டைக் கரத்தி லெடுத்துக் காங்காட்டுந், தழையும் புவன மனைத்தினையுந் தடவு நெடுவா லுள வீரன்

(இ-ள்) ஆபரணமணிந்த வெற்றிவீரனான வாலிக்கு, உலகிலொருவருமே எதிரில்லை புலிபோன்ற பலமும், மனவலிமையும், மலைபோன்ற தோளையுமுடையான். மூங்கில்கள் வளர்ந்துள்ள நீண்ட சிகரங்களுள்ள மலைகளைக் கையினாலெடுத்துப் பம்பரம்போற் சுழற்றும் வலியுடையான். இப்பூமண்டலங்களை முழுவதையும் அளவிடும் நீண்டவாலையுடைய வீரன்.

விற்போர் தொடங்கி வெகுண்டுவரும் வேந்தர் குலங்கள் விண்புகுக, மற்போர் தொடங்கும் புயவலியன் மடங்க லனையா னவுணருடன், கற்போர் தொடங்கிப் பெரும்பகடூர் காலனகரங் குடியேற்றுஞ், சொற்பே ரிசைகொண் டுலகனைத்துந் துதிக்குஞ் செயல்பெற் றுயர்வோனே.

(இ-ள்) கோபத்தோடு வில்கொண்டு சண்டை செய்யவரும் மன்னர் கூட்டங்களை மல்யுத்தத்தால் தேவலோகத்திற் கனுப்பும் புயவலியுடையவன் ஆண்சிங்கம்போல், மலைகளை வேரோடுபிடுங்கி அரக்கர்களை எருமை ஏறும் இயமனுலகிற்குக் குடியேற்றுபவன். உலகமெலாம் புகழும் பலமும் பராக்கிரமுமுடைய பலவான். ௨௭.

புவனத் தரச ரியக்கர்குழாம் பொருந்தும் மவுண ரிராக்கதரி
லெவருண் டிவனுக் கிணையென வியாரு மேத்த விவன் றந்தை
யவன்றன் னகருக் கரசாள்வா னருளான் முகலை யுருகமழைத்துக்
கவியின் குலஞ்சேர் தானைக்கு காவலாகென் றருள் செய்தான்.

(இ-ள்) பூமண்டலத்துள்ள அரசர், இயக்கர் கூட்டங்கள், அசுரர், அரக்கர் முதலியவர்களிலும் இவனுக்கு இணையான பேர்கள் இல்லையென்று எவருந்துதிக்க, இவனது தந்தையாகிய இக்கரசன் வாலியை அருகழைத்துத் தானாண்டிருந்த கிஷ்கிந்தாபுரியை அவனிடமளித்து அங்குள்ள வானர சேனைகட்கு அதிபதியாகுமாறு திட்டஞ்செய்தான். ௨அ.

கணையார் தனுக்கொள் கரத்தரசர் முதலோர் யாருங் கவிவேந்தருக், கிணையா ரெனவே புகழ்ந்தேத்து மெழில்சேர் வாலியெனுந் திறலோன், பணையார் தடந்தோள் படைத்தலைவர் முதலோர்யுள்ள பரிவாரத், துணையா யெழும்வா னரச்சேனை தம்மை நோக்கிச் சொல்லுவனால்.

(இ-ள்) அம்புடைய வில்லேந்து மரசர்களில் வானரவீரனுக்கு எதிரில்லையென்று புகழும் அழகுடைய வாலியெனும் பலவான் விசாலமான பருத்த தோளையுடைய படைவீரர்களனி வானர சேனை வீரர்களை நோக்கிக் கூறுவான். ௨௯.

வேறு.

திசையெங்கணு நீடு திறற்கதுவா
விசையஞ்செய வேணு மெனக்கருதி
வசமாகிய வானரர் தங்குழுவை
யிசைவாகென வாலி யியம்பினனால்

(இ-ள்) அஷ்டதிசையெங்குந் தனது வீரம் புலப்படவேண்டி திக்குவிசையஞ் செய்யவேண்டியபடியால் எல்லா வீரர்களையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டான் ௩௦.

பின்பாரணி மார்பன் விளம்புமொழி
யன்போடினி தென்றவை யார்வமுடன்
வன்போர்புரி வானரர் சூழவெழுந்
தென்பாரிசை சென்றனன் வாலியுமே.

(இ-ள்) பிரகாசிக்கும் ஆபரணமணிந்த மார்பன் கூறிய மொழியை அன்பாக நல்லதென வுட்கொண்டுவரும் வானரசேனையை அழைத்துக்கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்டான். ௩௧.

காரென்ன வெகுண்டு கதித்தருமு
நேரென்ன வெதிர்ந்து நெருங்குமவர்
தேரென்ன வடர்த்துழி வாலியெதிர்
பாரென்றொரு வீர னுறும்பகையால்.

(இ-ள்) மேககர்ச்சனைபோல கோபித்து முன்வருபவரையெல்லாம் தேர்ந்தச்செய்யும் வாலியின்முன் வீரம் பிரதாபம் பேசிக்கொண்டு பகையாகிய ஒரு வீரன். ௩௨.

காலேரிர்தங் கடலிப் பொருந்தும்
வேலாயுத னென்ன விறற்படையான்
மாலானுறுமன் மதனே யனேயான்
கோலாபன் வெகுண்டிவை கூறுவனால்.

௪. (இ-ள்) குத்துக்கால்கள் நின்றந்த இரதத்தைச் செலுத்திக்கொண்டு சண்டைசெய்வதில் முருகக்கடவுளுக்குச் சமானமான வீரமும், அழகில் மன்மதனுக்குச் சமானமானவனுமான கோலாபன்மிகுந்த கோபத்துடன் வாலியைப்பார்த்து இது கூறுவான். ௩௩.

நீவானர ஞரணி யங்கடனிற்
ருவாமர நன்கனி தின்றுத்தழை
மேவாயுறை கின்றவன் மேதினியி
லோவாவிசை யஞ்செய வுற்றிடுமோ.

(இ-ள்) நீ வானரன், ஆரணியங்களிலுள்ள மரங்களிற்றாவி அதிலுள்ள கனி தழைகளைத் தின்று தங்கி இராமல் கெடாத பூமியில் திக்குவிசயஞ் செய்யத் தகுமோ. ௩௪.

புவியாளர சற்குறு பொற்பிவைகள்
கவியோபெறு வாயென வுங்கதுவி
யிவைகூறிய கந்திரு வன்றனைதிர்
குவையோடுறு வாலி கொதித்துரையா.

(இ-ள்) பூமியை யாளும் அரசர்களுக்குள்ள மேன்மைகளை குரங்காகிய நீயோ பெறுவது? எனக்கூறிய கோலாபனென்னுங் கந்தருவனை நோக்கி சேனையோடுள்ள வாலி கோபித்துக் கூறுவான். ௩௫.

வேறு.

மதியாதிவை மொழிவாயுன வலியாவையு மிகலிச்
சிதைவாயுட லுயிர்வேறது செய்வேனென வெகுளாக்
கொதிவோடெழு மற்போரொடு குனிவிற்படை போர்செய்
தெதிராகிய கோலாபனு மெழில்வாலியு மெனவே.

(இ-ள்) மதியாமல் இவ்வாறு கூறிய உனது பராக்கிரமங்களை அழித்து உடலையும் உயிரையு வேறு பிரிப்பேனென்று மிகுந்த கோபத்துடன் கூறிய வாலியுங்கோலாபனும் மற்போரும் விற்போரும் விளைத்தார்கள். ௩௬.

விற்போர்புரி முறையாலவன் மிகுவெஞ்சின மூள
மற்போர்களி ன்கிரிவ்லெனை வலிபெற்றுயர் வாலி
கற்போரினு மிருவர்க்கிணை காணேமென வமரர்
சொற்போர்புரி தொழிலார்திறல் தோர்வில்லவை செய்தார்.

(இ-ள்) விற்போரில் வல்லவனாகிய கோலாபன் மிகுந்த கொபத்தோடு பல அம்புகளை வாலியின்மேல் எய்யவும், மற்போரில் வல்லவனாகிய வாலி பல குன்றுகளை கோலாபன்மீது எறியவுமாக இவர்கட்கு வேறெவருஞ்சமானமில்லையென் தேவர்கள் புகழும் வண்ணம் தோல்வியின்றி இருவரும் போர்புரிந்தனர். ௩௭.

இடியேயெறன வதிர்வாலி யெழுந்தோடினன் வாலால்
மிடவுந்தட வரையொன்றது வேரொடு பிடுங்கி
கொடியுந்திக ழிரதத்துறு கோலாபனை மோதக்
கடிதோடினன் வெருவுற்றெழு கடலப்புற மாதோ.

(இ-ள்) இவ்வாறு போர் புரியும்போது வாலியானவன் யுகாந்த காலத்து இடிபோல் கர்ச்சித்து, தனது வாலால் பெரிய மலையொன்றினை வேரோடு கொண்டுவந்து கோலாபனது ரதத்தின்மேல் மோத ரதம் தூள் தூளாகி விட்டது. அதுகண்ட கோலாபன் பயந்து எழு சமுத்திரத்திற்கப்பால் ஓடிப்போனான் ௬௮

தாண்டாதினி வெனவேயெதிர் சமராடுகோலாப
னீண்டேரொழு கடலப்புற நின்றேநனி வெருளா
தூண்டும்பரி யிரதத்தொடு தோன்றிச் சமர்செய்து
மீண்டேகினன் முன்போலுயர் மிகுவாலிசெய் யமரால்.

(இ-ள்) கடல்களைத் தாண்டி வரமாட்டானென்று யுத்தஞ்செய்த் கோலாபன் மீண்டும் கோபித்து தேர் குதிரை இவற்றோடு வந்து சண்டைசெய்து தோல்வியடைந்து திரும்பி வாலியின் யுத்தத்திற்குப் பயந்து ஓட்டம்பிடித்தான். ௬௯.

வீரந்தனி லிருவோர்களு மரியேயெறன வெருவும்
பாருந்திறல் பேவுந்திசை யோருப்பணி மகுடஞ்
சோரும்படி கோலாபனொ டெதிர்வாலி தொடங்கி
யீரைந்துட னொரைந்தெனும் வருடத்திகல் செய்தார்.

(இ-ள்) ஆண்மையில் சிங்கம்போன்ற இருவரும் பூமியிலுள்ளோரும், அஷ்டதிசையிலுள்ளோரும், ஆதிசேஷனது பணாமகுடமும் சோர்வடையும்படி யுத்தந்தொடங்கி பதினைந்து வருடம் தொடர்ந்து போர்செய்தார்கள்.

திக்கெங்கணு மிகலிபொரு செருவாற்றட வரைக
ணைக்குண்டுயர் முகடண்டமு நெகிழும்படி நெளியு
மெக்குன்றினு மிவைமொய்ம்பென விசைத்தேசட வரையால்
மிக்கென்பவ ரிருவோர்களு மேவிச்சம ருற்றார்.

(இ-ள்) எல்லா திசைகளிலும் போர் புரிந்ததினால் பெரிய மலைகளெல்லாம் தூளாகி அண்டகடாகமும் தளர்ச்சியுற்றதால் இனி எந்த பர்வதமும் தாங்காதென்று மிருந்த பலமுடைய சடவரையின் பாரிசத்திலே பலவான்களாகிய இருவரும் யுத்தஞ்செய்யத் தொடங்கினர் ௭௧.

ஆர்த்தாரெழு பகிரண்டமு மதிரும்படி வரையூ
றார்த்தாரெழு கடலுந்திசை வெற்புந்துகளாக
மேற்றாவின ரகல்வானவர் வெருவப்புவி மீதே
சேர்த்தார்கர மற்போரவர் செய்தார்புய வலியால்

(இ-ள்) அண்டபகிரண்டம் அதிரும்படி கர்ச்சித்தார்கள். மலைகளினால் கடல்களைத் தூர்த்தனர், அஷ்டகுல பர்வதங்கள் தூளாகும்படி மேலே சூரிய மண்டலம்வரை தாண்டினர், தேவர்கள் பயந்தமையால் பூமியில்வந்து மல்யுத்தஞ் செய்தனர். ௭௨.

கொங்குற்ற நறுந்தாரணி கோலாபனும் வெருவுற்
றங்கங்குறை வுறவாலிகை யடிபுண்டிரி வாகி
பங்கத்தொடு சடைமால்வரை குணபாலொடு சயிலஞ்
சங்கந்தவி ழுறுமாநதி தென்பாலவண் சார்ந்தான்.

(இ-ள்) வாசனை பொருந்திய மலர்மாலையணிந்த கோலாபன் பயந்து, வாலி கையாற்பட்ட அடியால் குறைபட்ட தேகத்தோடு அவமானமுற்றவ னாய் சடைமால்வரையின் கிழக்குப்பக்கமுள்ளதும், கோமுகநதியின் தென் பக்கமுள்ளதுமான ஒரு மலையில் வந்து சேர்ந்தான்.

கந்தார்கட கரிமேலரி கதுவாமென வேலொடுஞ்
சிந்தாகுல கோலாபனை சீறித்திறல் வாலி
முந்தாதவ வரையூடவன் முடிவேறு பறித்துப்
பந்தாமென குணபாலுற வீசிப்பகை வென்றான்.

(இ-ள்) கட்டுத்தறியையுடைய மதயானையின்மேல் சிங்கம் வேகத்தோடு பாய்ந்ததென்ன வருந்தி ஓடிவந்த கோலாபனை வாலி மிகுந்த கோபத்தோடு அந்த மலையில் அடித்துத் தலையை வேறாகப் பிடுங்கி பந்துபோல் கிழக்குத் திசையில் வீசியெறிந்து தன்து பகையை வென்றான். ௪௪.

மட்டார்புய கோலாபன் மரிக்குங்கிரி யதுகோ
லட்டானம தென்றேமிக வழைவுற்றது நாமங்
கட்டாண்மைகொண் முடிபற்றிய வாலித்திற லிருகை
விட்டேகது வீழ்கம்மலை கம்பைப்பெயர் மேவும்.

(இ-ள்) வாசனை கமழும் புயத்தையுடைய கோலாபன் மரித்த இடமாகை யால் அம்மலைக்குக் 'கோலட்டானம்' என்றும், கட்டாண்மையுடைய அந் தருவனின் சிரசை வாலி கையால் பறித்த இடமாகையால் அம்மலைக்கு 'கம்பை மலை' என்றும் நாமம் வழங்குவதாயிற்று. ௪௫.

வென்றானடு விறல்வெம்பகை மிகுவெண்டிசை யதனிற்
குன்றாதுயர் வாலிக்கியல் மேவுஞ்செயல் கொண்டு
நன்றாகுறு திசையீதென நன்மாதவ முன்னோ
ருண்டோவென திசைநான்குறு பார்வுற்றவை காண்பான்.

(இ-ள்) அஷ்ட திசையிலுஞ் சயம்பெற்ற வாலி தீராத பகையை இங்கே தீர்த்ததனால் மிக்க சந்தோஷத்தோடு இது நல்ல இடமாகுமென்றும், மகா தவசிரேஷ்டர்களிருந்த புண்ணிய விடமோவென்றும் ஐயுற்று அதைப் பார்க்கவேண்டி நான்கு திசையும் நாடி நடந்தான். ௪௬

தென்பால்மயில் நதிகண்டதில் திகழுத்தர திசையின்
முன்கோமுக நதிகண்டான்மணி முத்தாநதி கண்டான்
நண்கோபுர முதுகுன்றமு நல்லூர்நிலை கண்டு
தன்கையடி யுற்றுவீழ்ந்தலை மலைகண்டவன் சார்ந்தான்.

(இ-ள்) வாலியானவன் நாற்றிசையும் பார்த்துவருகையில் தெற்கில் மயூர நதியும், வடக்கில் கோமுகிநதியும், மணிமுத்தாநதியும், கிழக்கில் கோபுர முடைய விருத்தாசலத்தையும், நல்லூரையுங்கண்டு, நடுவேயுள்ள நிலைமை யைச் சோதிக்க மேற்குநோக்கி வரும்போது தன் கையால் அடியுண்டு விழு ந்தான் மலையின் பக்கமாக வருகிறபோது ௪௭.

சுவடுற்றன புவிமிக்கது சுழலும்படி யேகா
குவடுற்றன தலையுங்குலுங்கானது வருநோ
வையுற்றன பெயர்தம்பைய தாமென்றதன் குடபாற்
றிவடுற்றிரு வரஞ்சைப் பெயர் திகழ்மாநகர் கண்டான்.

(இ-ள்) காலடி வைக்குமிடமும் பூமியுஞ் சுழலும்படி வாலி வருகிற வேகத்தைக்கண்ட மலைபோற்கிடந்த தலையானது நடுக்கமுற்றதைக்கண்டு இதன் துர்ப்பலமென்றறிந்து கம்பை எனக்கூறி மேற்பாலுள்ள தீபவொளி யொன்ற திருவாஞ்சைத் தலத்தைக் கண்டான். ௪௮.

நிறைகோமுகி தன்பாலரு ணிலைகொண்டிடு முல்லை
வெறியார்மல ரளிசூழ்வன மேவும்மவை கண்டான்
சிறையோதிம மிருமானத தீர்த்தத்தட வியல்பு
மிறைமேவு மிலிங்கத்துட னெழின்மா துமை கண்டான்,

(இ-ள்) நிறைவுற்று நின்ற கோமுகியும், அதன் தென்பால் அருள்குடி கொண்ட முல்லைவனத்தில் வண்டுகள் தேனையுண்டுசங்கீதம் பாடுவதையும் அன்னபக்ஷிகளிருக்கும் மானத தீர்த்தத்தையும், மகாலிங்க சொரூபமாக பரமசிவனோடு அம்பிகை எழுந்தருளியுள்ள வியல்பையுங் கண்டான்.

பாங்கெய்திய நதியுந்திகழ் படர்கின்றன திசைக
ளோன்குந்திற மதனிற்றிரி பதகைச்செய வன்னோ
வோங்குஞ்செயல் புகலூழிகொ ளுயர்காசியி னுமந்
தாங்குந்திரு வரஞ்சைப்பெயர் தலமென்று நினைந்தான்.

(இ-ள்) பக்கத்திலோடும்நதி, நாற்றிசையிலுஞ்சிறப்புடைய கங்கைநதிக்குச் சமானமென்றும், ஊழிகாசியென்று சொல்லத்தக்கது திருவாஞ்சைப் பதியென்றும் மனத்தில் நினைந்தான். ௫௰

தலைமைத்திற மருவுந்தல மிதிலாரிறை தன்னை
மலர்தூவிய நெறிபூசனை வழிபாடு மிசைந்தே
கொலையுற்றவை யகலத்திகழ் குலவுஞ்செயல் கொள்வா
னலமுற்றொழி லுறுகோமுகி நதியாடின னம்மா.

(இ-ள்) தலைமைபெற்ற இந்த தலத்தில் வீற்றிருக்கும் பரமசிவனை புஷ்பங்களால் பூசைசெய்து கொலைசெய்த பாவந்தீரும்படி பரிசுத்தமான கோமுகிநதியில் ஸ்நானஞ்செய்தனன். ௫௧.

புனிதத்தொடு முயலாகம விதிநீறது புனையா
வினிதத்திகழ் நறுமாமலர் வகைவில்வ மெடுத்து
நனிபஞ்சக வியசந்தன நன்மஞ்சன மாட்டி
கனிகொண்டுள முருகர்ச்சனை கைமாமுறை செய்தே.

(இ-ள்) நதியில் மூழ்கி பரிசுத்தமாக விதிதவறாமல் திருநீறு புனைந்து புஷ்பம், வில்வம், பஞ்சகவியம், சந்தனம் முதலியவற்றால் அபிஷேகித்து உருகிய மன்முடையவராக அர்ச்சனைபுரிந்து. ௫௨

நன்சோடச தூபத்தொளிர் தீபத்திர ளல்கி
மின்சேர்சடை முடியார்வல மேவும்பர மொளிரி

தன்சீறடி பரவாமுறை வலமாய்வரு தகவோ
டின்சார்வுறு மறையார்துதி செய்வானெதிர் நின்றே

(இ-ள்) நன்மையாகிய சோடசோபசார தீபாராதனை நைவேத்தியம் முதலியவை கொடுத்து, மின்னல்போன்ற முடியையுடைய பரமசிவன் இடப் பாகத்திலிருக்கும், உமையவள் சிறு அடிகளில்வணங்கி வலம்வந்து வேத மந்திரங்களால் துதித்து. ௩௩

வேறு

சலமருவு மிளமதிசெஞ் சடாமௌலி யெழுங்கனகச்
சிலைவளைத்து முப்புரமுஞ் சிரித்தெரிக்குஞ் சேவகனே
மலைமகளை யகலாத வானந்த வாரிதியே
தொலைவிலெழும் பரஞ்சோதி யெம்மையாளுந் தொன்மையனே.

(இ-ள்) கங்கையும், மூன்றாம் பிறையுமணிந்த சடாமகுடத்தையுடையவரே! மேருவை வில்லாக வளைத்துத் திரிபுரதகனஞ் செய்த வீரரே! பார்வதியை நீங்காத ஆனந்தக்கடலே! தொலைபாத ஜோதியே! எம்மை ஆட்கொள்ளும் புராதனரே ௩௪.

சமன்மார்பி லுதைத்தருளுந் தாளானே யுலகொடுங்க
வமர்பொருத மந்தகனை யட்டானை யுரிபோர்த்தி
யிமையவர்க்குப் பொன்னுலக மீந்தோனை யறிவறியா
தமியேனின் சரணடைந்தே னருளெனக்குத் தருவாயே.

(இ-ள்) எமனை மார்பிலே உதைத்து விழத்தள்ளிய கமலபாதரே! சகல லோகமும் அடங்கும்படிக்கு நிஷ்கண்டகஞ் செய்யப்பட்ட அந்தகாசுரனை சம்மரித்து யானையை உரித்துப் போர்த்திக்கொண்டவரே! தேவர்களுக்குத் தேவலோகமளித்ததவரே! தமியேற்கு அருள்தாரும். ௩௫

வரியுழுவை யதளுடுத்து மருங்கினிற்கிண் கிணிபொலிப்ப
வரவமணி மார்பகத்தி லொளிவீசு மாதியனே
கருநீல விடமிருக்குங் கந்தரத்தோய் கமலமல
ரிருசரண மெமதுசிர மீதிலுற வைத்தருள்வாய்.

(இ-ள்) வரிகளையுடைய புலித்தோலை இடையிலே தரித்து அதன்மீது கிண்கிணி மாலை தரித்தவரே! அரவாபரணமணிந்த மார்பில் ரத்தினஹாரம் தரித்த ஒளிவீசும் ஆதியே, விஷமிருக்கும் கழுத்தையுடையவரே, தேவரீரது இருபாதங்களையும் எமது சிரசின்மீது வைத்தருள்வீர். ௩௬.

பொய்யாக்கை நரம்பிசைதோல் போர்த்துடலை பெறிபுலனால்
லைவாக்குங் கொடியமனத் தழுக்காற்று நாயேனை
வெய்யோன்முன் பனிக்குழுபோல் வெவ்வினையின் றாட்டறுத்திங்
குய்வாக வடியேன்முன் னுகந்தாவெளிப் படுவாயே.

(இ-ள்) அநித்யமாகிய சரீரத்தை நரம்பாற் பின்னி தோலால் மூடி ஐம்புலனால் அலைக்கப்பட்டு கைந்து பொறாமைகொண்ட இழிபிறப்போனாகிய எனது வினைத்தொடர்பை சூரியன்முன் பனிக்கட்டிகளைப்போல் வேரறுத்து நான் உய்யும்படி எழுந்தருளுதல் வேண்டும். ௩௭.

வழிபாடு செய்த தவ மார்க்கண்ட முனிவரன் றன்
பழுக்கத வயுவென்றும் பதினாறென் றளித்தோனே.
யழிவில்பொரு ளாய்நின்ற வானந்த வாரிதியே
தொழுமவர்தம் வெய்யவினைத் தொடரகற்றும் பசுபதியே.

(இ-ள்) வந்தனைசெய்து வழிபட்ட மார்க்கண்ட முனிவரது ஆயுளை என்றும் பதினாறாகச் செய்தவரே, அழிவில்லாத பொருளாயுள்ள ஆனந்தக் கடலே. வணங்குவோருடைய கொடிய வினையைத் தீர்க்கும் பசுபதியே.

வேதாந்த மதில்விளங்குந் திருவரஞ்சை மெய்ப்பொருளே
போதாரு மருச்சனைசெய் திப்பரிசிற் போற்றுதலிற்
சேதாருஞ் சடாமௌலிச் சிவபெருமான் சேவகத்தின்
மீதாகிப் பசுங்கொடிமா துமையோடு மேவிநின்றார்.

(இ-ள்) வேதங்களில் பிரகாசிக்குந் திருவரஞ்சை உண்மைப்பொருளே! என வாலி புஷ்பங்களால் அர்ச்சித்து வணங்கி நிற்க, சிவந்த சடாபாரத்தை யுடைய சிவபெருமான் ரிஷபவாகனரூடராய் கொடிபோன்ற உமாதேவியோடு பிரத்தியக்ஷமானார். ௫௯.

கணங்களொடு முனிக்குழுவும் புடைசூழக் கருணைவள
ரணங்கினுட னின்றபர மானந்தச் சுடரொளியை
மணங்கமழு மலர்தூவி மாமறையாற் றுதித்தேத்தி
வணங்கியிரு கரங்கூப்பி வாலிபர வசமானான்.

(இ-ள்) சிவகணங்களும், முனிவர் கூட்டங்களும் பக்கத்தில் சூழ்ந்து நிற்க கருணையுருவான பார்வதிதேவியோடு கூடிநின்ற சுடரொளியை வாசனையுடைய மலர்களாலர்ச்சித்து வேதமந்திரங்களாற் றுதித்து இருகைகளை கூப்பினவனாய் வாலி ஆனந்தபரவசமானான். ௬௦.

மும்மலத்தி னிருட்பாண்ட மதின்மயங்கிப் பொறிபுலனு
மம்மர்பொருந் திடுவேனை வசமாக்கி யருளுதவுஞ்
செம்மலதிரு வரஞ்சைவாழ் தேசிகனே மலர்விரிஞ்சன்
கம்பிருங் கரதலத்தோ யுனதுகழ லிணைசரணம்.

(இ-ள்) மும்மலமாகிய பொருந்திய இருட்பாண்டத்தி லுழன்று பொறி புலன்களின் மயக்கிலகப்பட்ட என்னை உன் வசமாக்கி கிருபை செய்தருளும் திருவரஞ்சை குருமூர்த்தியே; பிரம்ம கபாலத்தைக்கொண்ட திருக்கரத்தோய் உனது பாதமே கதியாக சரணம்செய்கிறேன். ௬௧.

தேசிருக்குங் கரதலத்தின் றிரிசூலப் படையானே
மாசகற்று முரகமணி மார்பகமு மறிமானும்
பூசுதிரு நீற்றொளியும் பொற்பார்ந்த வுருவின்மணம்
வீசுபர மானந்த மெய்ப்பொருளா னவசரணம்.

(இ-ள்) அழகுபொருந்திய கரத்தில் சூலப்படையைத் தாங்கியவரே; குற்றமற்ற நாகமும், ரத்தினகண்டிகையு மணிந்த மார்பும். மான்மழுவோடு திருநீறணிந்த மேனியில் வாசனைவீசும் பரமானந்த உண்மைப் பொருளானவரே சரணம். ௬௨

வம்பவிழு மலர்தூவி மாமறைநூன் முறையினொடுஞ்
சம்பாங்கொண் டருச்சித்துத் தாள்வணங்கும் வாலியைப்பார்த்
தும்பர்பிரா னுளமகிழ்ந்தெவ் வரம்வேண்டு முனக்கென்ன
நம்பனடி யுறவீழ்ந்தே யெழுந்திவைக ணயந்துரைப்பான்.

(இ-ள்) வாசனையுடைய மலர்களைத் தூவி வேதநூன் முறைப்படி சுத்த ஜலங்கொண்டு அருச்சனைசெய்து வணங்கும் வாலியைப பார்த்து தேவ தேவனுன் பரமசிவன் மனமகிழ்ந்து உனக்கு என்ன வரம் வேண்டுமென்ன சிவனடியில் விழுந்து எழுந்து வாலி நயமாகக் கூறுவான். சுஙு

போகிமுடி மிசைவிளங்கும் புவனவளை வுழுசத்த
சாகரங்கடாண்டிடவுந் தரியலா ரெனையெதிர்த்து
நாகரயன் முதலினர்கள் நண்ணுதலி னண்ணலர்கள்
வாலகபுய வலியெனக்கு வந்திடவும் வஞ்சமர்முன்
னுகவரு வான்றலைகள் துகளாக வேண்டுமென.

(இ-ள்) ஆதிசேஷன் தாங்கிய பூமண்டலத்தை வளையாநின்ற சப்த சமுத்திரங்களையும் நிமிடத்திற் றாண்டவும், எனஎதிர்க்கும் விரோதிகள் தேவாதிகள் பிரம்மதேவன் முதலினோராயினும் அவர்களது வலிமை முழுதுமெனக்கு வரவும் யுத்தமுகத்தில் என்னெதிரில் வந்து நிற்போருடைய சிரசு சின்னபின்னமாகவும் வேண்டும். சுச.

சாலவளர் புவியிலெரு சுடன்கழித்துத் தக்கதெல்லா
மாலுறவிங் கனுபவித்திங் கானதற்பின் றிருவரஞ்சை
கோலமுறு நாயகன்ற ளகலாது கொடுப்பதென
வாலியுரைத் திடநீல மணிமிடற்றோன் மகிழ்ந்துரைப்பார்.

(இ-ள்) பூலோகத்திலுள்ள அரிய சுகங்களையெல்லா மனுபவித்து பிறகு திருவரஞ்சை நாயகனே உமது பாதகமலங்களில் நீங்காமலிருக்க அனுக்கிரகிக்க வேண்டுமென்று வாலி கூற நீலகண்டராகிய பரமசிவன் சந்தோஷத்தோடு கூறுவார். சுரு.

முன்பசரு மறைகண்வழா முறைபூசை நெறியாற்று
மன்பரினுக் கதிகமதாய் நன்வழிபா டருச்சித்தா
யின்பமுற வேண்டுவர மினிதளித்தோ மெனவின்றவன்
அன்புநிகழ் வாலியென வுரைத்துலிங்கத் தமர்ந்தனரால்.

(இ-ள்) வேதமுறை வழுவாது பூசைசெய்து எம்மைவழிபடும் அன்பர்களுக்கு வந்தனைபுரிந்து நம்மையும் அருச்சித்தாய் ஆதலினால் நீ சுகமுற வேண்டிய வரங்களை அளித்தோம். அன்புடைய வாலியேயெனக் கூறி சிவபெருமான் சிவலிங்கத்துள் மறைந்தனர்.

வென்றியுறு பெற்றியினால் விண்ணவர்க்கு மண்ணவர்க்குங்
குன்றிலுயர் திண்மைநலங் கொண்டிகல்வா லியுநெடுநாட்
கன்றில்மனத் தவனாகி யொன்னலரைக் கட்டழித்து
மன்றநிகழ் முல்லைவன நாயகன்றாள் வந்தடைந்தான்.

(இ-ள்) வெற்றியடையும் வரம்பெற்றதனால் தேவர்களுக்கும், பூவுலகிலுள்ளவர்களுக்கும் மேலான பலமுண்டாயவனாய் வல்லமையோடு விளங்கிய வாலி, நெடுங்காலம் பகைவர்களையழித்து வாசனைமிகுந்த முல்லைவன நாதருடைய திருவடியடைந்து இன்புற்றான். சுஎ.

ஆகலினால் வாலீச னெனநாமம் புனைந்தரனார்
காதலொடுந் திருவாஞ்சை யுமையோடுங் களித்தசெயல்
கோதகலச் சபாலிமுனி குரிசிலினுக் குரைத்ததென
தீதிலிரு டியர்தமக்குச் சூதமுனி செப்பினனால்.

(இ-ள்) ஆகையினால் வாலீசனென்ன நாமம்பெற்ற, பரமசிவன் திருவா ஞ்சை க்ஷேத்திரத்தில் உமாதேவியோடு களித்திருக்கும் செயலை பாப விமோசனமாகும்படி சாபாலி முனிவர் பிராட்சேன மகாராஜனுக்குக் கூறியதை சூதபுராணிகர் சௌனகாதி மகரிஷிகளுக்கு உபதேசித்தனர்.

வாலி பூசைச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௪-க்குத் திருவிருத்தங்கள் ௨௨௯.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

# இராவணன் கயிலையடைந்த சருக்கம்.

அணிதிகழ் வாலி யடுபகை துரந்து அருள்திரு வாஞ்சைநா யகனை, மணமலி மலர்கொண் டருச்சனை வழங்கி முறையொடும் பூசனை புரிந்து, பணிதவிற் பெரும்பே றுரைதரத் தெரிந்தே னிராவணன் கைலையம் பரனை, நணுகிய செயல்கண் விளம்புகென் றரசன் முனிவனை நயந்தடி பணிந்தான்.

(இ-ள்) அழகிய வாலியானவன் தன்னை யடுத்தபகைவரைத் தொலைத்து கிருபையுடைய திருவாஞ்சை நாதனை வாசனை மலர்கொண் டருச்சித்து பூசைசெய்து பெற்ற மகிமையை தேவரீர் சொல்ல அறிந்தேன்; இராவ ணன் கயிலை நாயகனை அணுகிய செயலை தெரிவிக்கவேணுமென அரசன் முனிவரிடம் அடிபணிந்து கேட்டுக்கொண்டான். ௧.

மகிழ்வுறக் கேட்ட மன்பிராட் சேனன் வதனந்தா மரையெதிர் நோக்கி, நெகிழ்வில்லாக் கருணை முனிவரன் சாபா லியுமன நெக்கு நெக் குருகி, புகழ்பெறு மிலங்கை யிராவணன் கயிலை பொருப்பின் வந் தருந்தவ மியற்றித், திகழுமா வரம்பெற் றகன்றநற் காதைச் செயலினைத் தெரிக்கலுற் றனனால்.

(இ-ள்) மகிழ்வோடு கேட்கும் பிராட்சேன மகாராஜன் முகத்தைநோக்கி மிகுந்த கருணையுடைய சாபாலி முனிவர் மனமுருகி இலங்கையையாளும் இராவணன் கயிலாயம் அணுகி தவஞ்செய்து பேறுபெற்ற சரித்திரத்தைக் கூறத் தொடங்கினர். ௨.

தலைமையழ கியமா விரதவாய் மையினுந் தவறிலாச் சுகேச னென் றுரவோன், மலிமதி வதன மாதுநற் றேவ வதியொடுங் கலந்தவள் வயிற்றிற், குலவுமெய் கருப்ப மதிற்பிறங் துயர்ந்த

குவலயத் திணுமிசைத் தொள்வோ ரிலகுமா லியவான் மாலிசு மாலி
யெனுந்திற லோரவ தரித்தார்.

(இ-ள்) முதன்மையாகிய விரதங்களைத்தவறாது அனுஷ்டிக்கும் சுகேச னென்பவன் சந்திரன்போன்ற முகத்தையுடைய தேவவதியோடுங் கூடிய தால் அவள் கருப்பத்திலுதித்தோர் உலகில் கீர்த்திபெற்ற மாலியவான், மாலி, சுமாலி என்னும் மூன்று பிள்ளைகளாவர். ௩.

கதுவுசெந் தழன்மே னின்றருந் தவங்கள் கருதுமிம் மூவருக்
கிசைந்து, விதியுவன் றேன்றிய நளுதல் வரத்தால் வென்றிகொண்
டேழுல கொடுங்கச், சதிபுரிந் தனவா லமரரும் வெருவித் தண்
டுழாய் மார்பனுக் குரைப்ப, உதயமென் னேமிப் படையொடுந்
திருமா லுடன்றுபோர் தொடங்கின னன்றே.

(இ-ள்) மூவரும் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவஞ்செய்து, பிரமதேவ னிடம் வரம்பெற்று, ஏழுலகங்களுக்கும் தீமைசெய்து வந்ததால் தேவர்கள் திருமாலிடம் முறையிட அவர் பிரகாசமுடைய தமது சக்கராயுதத்துடனே வர இருவரும் போர்செய்யத் தொடங்கினர். ௪.

மாலிமுன் மடியக் கண்டுசு மாலி மாலிய வானொடும் வெரு
வித், தாலம்விட் டகன்று பாதலத் தொளித்தா னவனுறு தவத்
தினி லீன்ற சேலினும் விழிசே ரோதிம நடையாள் செவ்விதழ்க்
கைகசி யென்பாள், பாலனுற் பயக்கும் பொருட்டினுற் றந்தை
பணித்தசொற் புரிவுறக் கொண்டே.

(இ-ள்) அச்சண்டையில் மாலியென்பவன் மடிந்தனன். அதுகண்ட சுமாலி மாலியவானுடன் பயந்து பூமியை விட்டுப் பாதலத்தில் ஓடி ஒளித் துக்கொண்டனன். சுமாலி செய்த தவத்தா லுற்பவித்தவளும், மீன்போ ன்றவிழியையும், அன்னம்போன்ற நடையையும், சிவந்த இதழையுமு டைய கைகசி என்பவள் பிள்ளைப்பேறு குறித்துத் தந்தை கூறிய கட்டளை க்குச் சம்மதித்தவளாய். ௫

இலங்குநற் றவஞ்செய் புலத்திய னீன்ற வெழின்மக வெனுந்
திறலிருடி, நலங்கொள்விச் சிரவா வெனும்புகழ்ப் படைத்த நலனுறக்
கைகசி வேட்டுத், துலங்கிரா வணனேர் கும்பகன் னனையும் வீடண
னெனுஞ்சுத ரளித்தாள், கலங்குறா விதய விராவண னெனும்போன்
கருத்துறத் தவஞ்செய நினைந்தே.

(இ-ள்) விளங்குகின்ற நல்ல தவஞ்செய்யும் புலத்திய மகரிஷியின் புத் திரனும், அழகும் வல்லமையுமுடையவனும் நன்மை செய்வதால் விச்சிர வாவென புகழப்பட்டவனுமானவனைக் கைகசி சேர்ந்து துலக்கமாகிய இராவணன், செம்மையுடைய கும்பகர்ணன், விபீஷணன் ஆகிய மூன்று பிள்ளைகளைப் பெற்றாள் அவர்களில் கலங்காத மனதுடைய இராவணன் தவஞ்செய நினைத்தான். ௬.

ஆர்கலி நடுவோ ராயிர வருட மாகவி லோர்சிர மழலிற்
சேர்வுற மாட்டி யையிரண் டதனைச் சிந்திமா தவம்புரி காலைப்
பார்தரு விரிஞ்ச னெல்லைவந் தணுகி வேண்டிய பரிசளித் திடலுங்
கார்செறி கடலு ளிலங்கைமா நகரங் காக்குமன் னாகினன் களித்தே.

(இ-ள்) தவநினைவுகொண்ட இராவணன் கடலிலுள்ள வடவாமுகாக் கினி மத்தியில் அரிதாகிய தவத்தைக்கோரி ஆயிரம் வருடஞ் செய்தால் ஒரு

தலையை ஒரு கண்டத்தில் வீழ்த்தி, இம்மாதிரியே தன் சிரங்களையெல்லாம் கொய்துகொண்டு வர, பத்தாவது சிரம் விழுகிற தருணத்தில் உலகத்தைப் படைத்த பிரமதேவன் விரைவில் வந்து வேண்டிய வரங்களையெல்லா மளித்துச் சென்றபின் கருத்த கடலிலுள்ள இலங்காபுரிக்கு அரசனானான் ௭.

எழிருந் நிலத்து மிவன்றனக் கிணையே றிலையெனப் புயவலி யார்க்க, வழிகூ ழுலக நடுங்குற முனிவ ரமரரு மிரிதரப் பொருந்தி, யூழிமா ருதம்போ லளகைமன் வெருவ வோங்கிய விமானமுங் கவர்ந்து சூழொளி தவழுங் கைலைய மலையை வேரொடுந் தூக்குற வெடுத்தான்

(இ-ள்) பதினாலுலகத்திலும் இவனுக்குச் சமானமானவ ரில்லையென்னும்படியும், முனிவர்களும், தேவர்களும் பயந்து ஓடும்படியும் இருந்து, ஊழிக்காற்றைப்போற் கோபித்து குபேரன் நடுங்க அவனது புஷ்பக விமானத்தைக் கைப்பற்றிக்கொண்டு, பிரகாசமுள்ள கைலை மலையையும் வேரோடு அசைத்தெடுத்தான் அ.

கங்கைவார் சடையான் றனுனிக் கொழுந்தாற் கலங்கியே பாதலத் தழுந்தி, யங்கநெக் குருகிமலர்க்கரத் தியாழி னேழிசை யாற்றுதி செய்ப. மங்கையோர் பாகன் கருணையா லெழுந்து வரமென்ன வரக்கனும் வணங்கி, யெங்களுயகனே யிலங்கையி னமைப்பதி லிங்கமொன் றருளென விசைத்தான்.

(இ-ள்) கைலையை எடுப்பதைக் கண்ட சங்காதரன் தனது கால் நுனி விரலாலழுத்த, பாதலத்திலழுந்தி வருந்திய இராவணன் தனது சிரசிலொன்றைத் திருகி கையொன்றிற் செருகி நரம்பினால் வீணை செய்து சாமவேதம் பாட பார்வதிநாயகன் மனமிரங்கி, வேண்டிய வரம் கேளென்ன, இலங்கையி லமைக்கச் சிவலிங்கமொன்று கொடுத்தருள வேண்டுமென்று வணங்கிக் கேட்டுக்கொண்டான் ௯.

அளித்தன னிலிங்கந் துணைகரத் தேந்தி யன்பமுறக் கொண்டு பேர்தலின் முன், னிளைத்தவா னவரோ டிந்திரன் வெருவி யிலங்கையு முறமைக் கினியே, தொளித்திட லென்றமு முலக மோரடி யளந்தவர்க் குரைப்பக், களிதுவண் டினஞ்சூழ் பைந் துழாய் மார்பன் கடிதிலங் கரத்தனை விடுத்தான்.

(இ-ள்) அதற்கிசைந்து சிவபிரானளித்த ஒரு மகாலிங்கத்தை இருகரத்திலுமேந்திக்கொண்டு போவதைக்கண்ட தேவர்களும் இந்திரனும் இனி இலங்கை மேன்மையுறும் நாம் ஓடி ஒளிக்கவேண்டியதுதானென்று உலகமளந்த திருமாலுக்குணர்த்த அவர் விநாயகக்கடவுளை அனுப்பினார். ௧௦.

ஆகுவா கனத்தோ னவ்வருக் கரந்தே யந்தணன் போலெதிர் வரலு, மேகுமிவ் வரக்க னியமமுற் றிடவென் றேந்திய விலிங்கம் வேதியன்கை, வாகுற வளித்தே தன்கடன் கழித்து வருதன் முன் னிலமுற வைத்தா, ராகமூ ருருவி யோடின பருவோர் நண்ணின மாபெல விலிங்கம்.

(இ-ள்) பெருச்சாளி வாகனமுடைய விநாயகக்கடவுளும் தனது சுயரூபத்தை மறைத்து பிராமண வேடந்தரித்து எதிர்வரலும், இராவணன் தனது காலைக் கடனைக் கழிப்பான் கையிலேந்திய சிவலிங்கத்தை அப்பிராமண

ளிடமளிக்க, அப்பிராமணன் காலைக்கடனை முடிப்பதற்குள் மும்முறை அழைத்துவிட்டு பூமியின்மேல் வைத்துவிடலும், சிவலிங்கமானது பாதாளமளவும் வேரோடி நிலைபெற்றுவிட்டது. ௧௧.

தாங்குமா லிலிங்கந் தந்தவன் றடக்கைத் தலமுறு தலத்தின் வைத்திடலா, லோங்குவா ளரக்கன் முனிவனைச் சினந்து வொல்லைவந் தெடுத்தன னெழாதா, லாங்குறு மிலிங்க மிருபது கரத்தா லணைத்திழுத் திளைத்தன னெஞ்சம், நீங்குற மீட்டு முறுத்திழுத் தத்தனால் நிமிர்ந்து கோவினற் செவிபோல்.

(இ-ள்) கையில் வாங்கிய லிங்கத்தை கொடுத்தவன் மீட்டும் பெறுதபடி பூமியில் வைத்ததால் அரக்கன் பிராமணன்மீது கோபங்கொண்டு விரைவில் வந்து எடுத்தும் எடுக்கமுடியாததால், தனது இருபது கைகளினாலும் இழுத்து நெஞ்சந் தளர்ந்து மறுபடியும் பலமாக இழுத்ததனால் சிவலிங்கம் நெளிவுற்று பசுவின் செவிபோல் நீண்டுவிட்டது. ௧௨

தொடுத்தநம் கடுக்கை யிளமதி யரவஞ் சூழ்சடைப் பரமன் வாழ் கைலை, யெடுத்தவன் பெறும்பே றிருந்தவத் தலமே ரிலங்குகோ கன்னமென் றிசைத்தே, யடுத்தநீ ராடை யிலங்கைசென் றடைந்தா னுலகமூன் றினுக்குயர் வாகிக், கொடுத்தருள் வரங் கட்கினிமையித் தலம்போற் குவலயந் தன்னில்வே றுண்டோ.

(இ-ள்) கொன்றை மாலையையும் மூன்றாம் பிறையையும், பாம்பையும் தாங்கிய சடாபாரத்தையுடைய பரமசிவன் வாழும் கைலையை எடுத்தவன பேறுபெற்ற மகாலிங்கந் தடையாகவிருந்த அந்தத் தலத்திற்குக் கோகன்னமென நாமஞ்சூட்டி விட்டு இலங்கையை யடைந்தான். ஆகையால் மூன்று உலகத்திற்கும் உயர்வாகிய வரங்களை யளிக்கும் இன்பமாகிய இந்த தலத்திற்கு பூவுலகத்தில் வேறொன்றும் நிகரில்லை. ௧௩.

மீளுமவ் வரக்கனப செயம்பெறலால் வென்றி கொன்றிடு மவைநினைந்தென், நாளுநற் செயல்பெற் றிடுமிமை யோர்களு நிலத் தவர்களும் வெருவக், கோளரி யெனவே யெழுந்தவ னொருகாற் குலவுமுத் தரதிசைக் குறுகி, நீளும்பொன் றரங்கத் தினமணி கொழிக்கு நெறிபுனற் கங்கைவந் தடைந்தான்.

(இ-ள்) அபஜெயமடைந்த இராவணன் மீளவும் தான் ஜெயம்பெற நினைத்து, என்றும் சுகமடையும் தேவர்களும் மனிதர்களும் நடுங்கும் வண்ணம் ஆண்சிங்கம்போல் கர்ச்சித்துக்கொண்டு, ஒரு சமயம் வடதிசையை அடைந்து அழகிய அலைகளில் நவரத்தினங்களை சேர்க்கும் சிறப்பினையுடைய கங்கைநதியின் கரையை யடைந்தான். ௧௪

அடைந்தவர்க் கிடுக்கண் களைந்துமெய்ப் புனித மாக்கிநல் லருடருங் கங்கை, படிந்தவ னியம முடித்துபன் மலராற் பரமனைப் பூசனை புரிவான், றொடர்ந்துழி யிருந்தங் கியற்றிடுகாலை சுரிவளை யிளந்தவழ் தருநீர், கடந்தொழு கருது நிறைந்ததேங் கிடலாற் கடவுள்பூ சனைக்கிடர் காணு.

(இ-ள்) தன்னை யடைந்தவர்களின் துயரத்தை நீக்கி வரப்பிரசாதமளிக்கும் கங்கைநதியில் மூழ்கி தனது நியமங்களை முடித்துக்கொண்டு பல புஷ்பங்களால் சிவபூஜை செய்ய ஆரம்பிக்கும்போது சங்கினங்கள் தவழும் கங்

னைகீரானது ஓட்டமின்றி தயங்கி நிற்பதால் கடவுள் பூஜைக்கு இடையூறு நேர்ந்ததைக் கண்டான். கடு.

சுழிபுனற் பெருக்க மானதெவ் வகையென் றூதனை நோக்கென றவனு, மொழிதனைக் கொள்ளா நதிவழி யேகி முயன்றவந் தெண்டிசை புரப்போன், எழில்பெறு கார்த்த வீரியார்ச் சுன னென் றியல்புரா குரிசிறன் காத்தா, லொழிவில்வந் திடுநீர் மறித்ததென் றிடக்கேட் டடன்றுபோர் தொடங்கின னெல்லே.

(இ-ள்) தனது தூதனை அழைத்துச் சுழித்து ஓடும் ஜலம் பெருகி நிற்கும் காரண மென்னென்று வினவ, அவன் நதி வழியே சென்று வந்து அஷ்ட திசையும் ஆளும் அழகுபெர்ருந்திய கார்த்த வீரியார்ச்சுனன் தனது கரத்தால் சகிமார்களோடு ஜலக்கிரீடை யாடும்பொருட்டு மறித்தனனென வும் கோபித்து அவன்மீது உடனே சண்டைக்குச் சென்றான். கசு.

போரது தொடங்கு மரக்கன்மேற் கனன்று பூதலத் திசை பெருங் கார்த்த, வீரியன் வலியால் வீரனை யடக்கி மேவருஞ் சிறையில் வைத்திடு நாள், ஆருறு தவஞ்செய் புலத்திய னறிந்தவ் வரசனுக் கிங்கித முரைத்துப், போனுக் கிடுக்கண் தீர்த்தகன் றத ன்பின் பிறங்குநீ டிமயம்வந் துற்றான்.

(இ-ள்) சண்டைக்கு வந்த இராவணனை, கோபித்து கார்த்தவீரியார்ச்சுனன் அடக்கிச் சிறை செய்ததை யறிந்த புலத்திய மகரிஷி அவ்வரசனுக்கு ஆறுதல் கூறி தனது பௌத்திரனது சிறையை நீக்குவித்தலும், இராவணன் மகமேருகிரிக்கு வந்து சேர்ந்தான். கஎ.

மின்னெளி திகழு மிமையமால் வரையின் மெய்த்தவ விரதனோர் முனிவன், றன்னிக ரில்லான் றலேவியுந் தானு மேதகு தவத்தினி லீன்ற கன்னியை வலிதிற் புல்லுதற் கணுகுங் காலேயி லாக்கனே நோக்கி, மன்னுநற் றவஞ்செய் கற்புடை வேத வதியுமோர் மாற்றமுற் றுரைப்பாள்.

(இ-ள்) மின்னலேப்போல் பிரகாசிக்கும் அந்த இமயமலேயில் தவஞ்செய்து கொண்டிருந்த பிராமணனும் அவனது மனேவியும் செய்த தவத்தின் மகிமையால் ஒரு பெண்ணேப் பெற்றனர். தவஞ்செய்து கொண்டிருந்த அப்பெண்ணே இராவணன் வலிய கற்பழிக்க முயலுதலேக்கண்ட வேதவதி யென்னும் அப்பெண் ஒருவார்த்தைக்கூறினள். கஅ.

தந்தையுந் தாயு மிரித்தன ரதனுற் றவஞ்செய்தித் தரணியோர்க் கிசையாச், சிந்தையி னெடுமால் மருவுதற் குகந்தேன் தீண்டனீ யென்றலுஞ் சினந்துக், கொந்தல் ரளகம் பற்றின னரக்கன் கொடுஞ்சினந் தவிர்வுறக் கூறி, யுந்திய தேரய் மாடிவந் திடுவா னுரைத்தெழுந் தரும்புனற் படிந்தாள்.

(இ-ள்) எனது தாயுந்தந்தையுமிறந்தனர். அதனல் தவஞ்செய்து பூமியிலுள்ளவர்களே விரும்பாது மகாவிஷ்ணுவை அடைவதற்கு ஆவலுற்றேன் நீ தீண்டாதே என்றதும் அரக்கன் கோபித்து மயிரைப்பிடிக்க அவனது கோபந்தணியுமாறு இதங்கூறி ஸ்நானஞ் செய்து வருவதாக எழுந்து சென்று ஒரு தடாகத்தில் மூழ்கினள். கக.

நீர்படிந் தெழுந்தே யழலினை வளர்த்து நெறியிலா வரக்கனை நோக்கிச், சீர்பெறு புவிக்கண் மீளவந் துதித்துன் சேனையுந் தன்னையுஞ் செகுத்து. வேர்பட வழிப்ப னென்றுதியீ தென்னச் சாபமும் வெகுளிகொண் டியம்பிப், பார்பெறு தழலின் வீழ்ந்தத னிறந்தாள் பண்புசேர் கற்புடைப் பாவை.

(இ-ள்) ஸ்நானஞ்செய்து வந்தபின் தீயைவளர்த்து ஒழுக்கமில்லாத அரக்கனைப்பார்த்து நான் மீளவும் பூமியில் தோன்றி உன்னையும் உனது சேனைகளையும் அடியோடு ஒழிப்பேனென்று கூறி அக்கினியில் விழுந்திறந்தாள் அந்த கற்புடைய வேதவதி, ௨௦.

தீதினைக்கொண் டடலரக்கன் இமையம் நீங்கித் திகழ்பசும் பொன் றடவரையிற் சேர்ந்த காலை, கோதில்குண வதியரம்பை யென்பா ளந்த கொம்பனையை யணுகவவள் குபேர னீன்ற. சாதன் மக னென்னுந்திறலோற் கிசைந்த மாதென் கைதொடே லெனவலி திற் கலந்தா னந்த, நீதிநளகூபரனிவ் வாறு கேட்டு நெஞ்சழன்று சினங்கதுவ வெழுந்து கூறும்.

(இ-ள்) தீமையை யுடைய அந்த இராவணன் இமையமலையை விட்டு மேருமலையை யடைந்தான் அங்கு ரம்பையைக்கண்டு அவளை நெருங்குதலும் நான் குபேரனது மகனான நளகூபரன் மனைவி உனக்கு மருமகள் முறையானதால் என்னைத்தீண்டாதே யென்று கூறவும் அதைக்கேளாமல் வலிதில் அவளைக்கலந்தான் அதையறிந்த நளகூபரன் மனங்கொதித்து கோபத்தோடு கூறத்தொடங்கினான். ௨௧.

அரம்பையைப்புல் லியவரக்கன் றன்னைநோக்கி யவனிதனின் மாதர்தமை யடாது செய்யி, லுரம்படுமீ ரைந்துசிரஞ் சிதைந்து மாய்கவுறுதியெனக் கொடுஞ்சாப முரைத்துப்போனா, னிரம்பியகா விரதமுடை யரக்கன் சால நிமலனுறை கைலைநெடு வரையிற் சால பரம்புகட லொலியெனவே மறைக ளெங்கும் பகர்ந்திடுமெய்த் தவமுனிவர் பக்கஞ் சார்ந்தான்.

(இ-ள்) அரம்பையை யணைந்த அரக்கனைநோக்கி பூமியிலுள்ள பெண்களை வலிதிற் கற்பழித்தால் உனது பத்து சிரங்களும் வெடித்து மாளக்கடவாயென சாபமிட்டுப்போனான் பிறகு இராவணன் விமானத்திலேறிக் கொண்டு கடலொலிபோல் வேதத்தை கோஷிக்கும் முனிவர்களுள்ள கைலைமலையை யடைந்தான். ௨௨.

பூண்டனனிக் கொடுஞ்சாபத் திலங்கை வேந்தன் புகலரிய கயிலைவரைப் புகுவான் றன்னை, நீண்டசடை முடிப்பரம னருள்பெற் றோங்கு நெறியுடைநந் தியும்மிடையி னிறுத்தல் செய்து, தாண்டவ ஞ்செய் பவனடியார் மிகுந்து வாழுந் தவச்சார்பில் விமானமொடு மேக லென்னக்; காண்டமொழிக் கரக்கனுளஞ் சினந்துநீமற் கடவதனைத் தோய்நிறுத்தற் கருத்தோ வென்றான்.

(இ-ள்) சாபத்தைப்பெற்றுக்கொண்ட இராவணன் கயிலை மலையுட் புகும்போது நந்திகேசுரர் எதிர் நின்று அடியார்கள் தவஞ்செய்யும் இவ்விடத்திற்கு விமானத்தோடு வரலாகாதென மறுக்க, அதைக்கேட்ட இராவணன் கோபித்து குரங்கு முகமுடைய நீயோ என்னை நிறுத்தத்தக்கவனென்றான். ௨௩.

அடாதுரைசெ யிராவணன்மேம் கனன்றுசீறி யவனிதனின் மற்கடத் தொகுதி தன்னுற், படாதுப்படு நின்கிளையு நீயு'மென்னப் பகர்வுறசா பமும்வழங்கிப் பர்மன் றன்பால், விடாதுதெரிந் திதை யமதிற் றுதிகள் செய்து விமலனிரு பதமல்ரை விருப்போ டுன்னச், சடாமவுலி வரவறிந்து விடுமின் னென்ன வதைய்றிந்து நந்திவழி தருகின் றுனல்.

(இ-ள்) அடாத வார்த்தைகளேக்கூறிய இராவணனேக்கண்டு நந்தியெம் பெருமான் கோபித்து என்னே குரங்குமுகமென்ற நீயும் உனது சுற்றமும் குரங்குக் கூட்டங்களினுலே மடியக்கடவதென சாபம் வழங்கினர். தன்னே உள்விடாதது கண்டு அரக்கன் சிவபெருமானே மனதில் தியானிக்க சிவ பெருமானது திருவுள்ளக்கருத்தை யறிந்த நந்திகேசுவரர் இராவணனுக்கு உள்ளே போக வழிவிட்டனர். உச.

நந்தியருள் வழிகொண்டு கைலே யீச னற்பதபங் கயமதனே நாவினுலுஞ், சிந்தையுறப் பொறிபுலன்க ளடக்கி மேலுந் திகழ் கோடி யாகமத்தின் செய்கை யாலும், நாந்தவிழு மலராலு மிருடி யோர்கள் குறித்தறிவுக் கரியவொணுக் குறிப்பை யோர்ந்து, முந் நியமா மறையினுயர் சாமவேத முறைமையினு யிரவருட முதலே யேத்தி.

(இ-ள்) நந்திகேசுவரர் உத்தரவின்மேல் உட்சென்ற இராவணன் பரம சிவத்தினது பதமலரைத்தியானித்து, பஞ்சேந்திரியங்களேயுமடக்கி ஆகம ப்பிரகாரம் சாமவேத கீர்த்தைபாடிக்கொண்டு ஆயிரவருடமிருந்தான். உரு

பூக்கமலத் தயனெடுமால் முனிவர் விண்ணேர் புகலரிய பரம் பொருளாய்ப் புவிக ளெங்கும், நீக்கரிய உயிர்க்குயிராய் நிறைந்த மூர்த்தி நீறணியும் திருவுருவாய் நிமலா வெந்தன், பாக்கியநின் கிருபையுள தல்ல துண்டோ பரவினவர்க் கருளுதவும் பரமசோதி காக்குமிள மதிபுனேந்தோய் தமியேன் வேண்டுங் காட்சியளித் திடுகவெனக் கருதி னுனே.

(இ-ள்) பிர்ம்மா, விஷ்ணு, முனிவர், தேவர் முதலியோரால் சொல்லு தற்கரிய மேலானவஸ்துவே, பூமியிலுள்ள உயிர்களுக்கு உயிராயிருக்கப் பட்ட மூர்த்தியே, திருநீறணிந்தவரே பரிசுத்தமானவரே உனது கிருபை யன்றி எனக்குச் செல்வமுண்டோ? வணங்கினவர்கட்குதவும் மேலான சோதி. சந்திரசேகரா அடியேன் விரும்பும் தெரிசனமளிக்க வேண்டு மென மனத்தினினைத்தன். உசு.

தத்துவத்தின் முடிவான பரமா னந்தத் தனிமுதல்வன் றனே ப்பரவுந் தகைமை கண்டே, யத்தியுரிப் போர்வைதிகழ் புனித மேனி யண்ணலெழுந் தெதிர்தோன்றி யருளா னேக்கி, நித்திய சின் மயதீப மேத்துகின்றய் நின்கருத்துக் கிணையாவர் நிகரே, துந் தன், சித்தமெவை வேண்டுகினுந் தருவ மென்னச் சிவனரக்கன் றனக்குறுதி செப்பி னுரால்.

(இ-ள்) தத்துவத்தின் முடிவிலிருக்கும் ஆனந்தரூபியான ஒப்பற்ற முதல் வனே வணங்குந் தகைமையை யுணர்ந்த, யானேத்தோல்போர்த்திய பரம

சிவன் எதிரில் தோன்றி, தினம் சின்மயமான தீபத்தை யேத்தகின்
ரூய் உனக்கிணையாவார் யாவர்? நீ எதை விரும்பினும் தருவோம் என அர
க்கனுக்கு வாக்களித்தனர். ௨௭

செப்பியகண் ணுதலுரைகேட் டரக்கன் றன்னுட் சிந்தை
தெளி வுறக்கருதித் திசைக ளெட்டு, மெப்புவியு மெக்கடலு மெல்
லாந்தானு யெவ்வுயிர்க்கு முயிராகு மிறைவ ளுகி, யொப்பரிய்
திருவுருவ வுமையைச் சேரி னுற்செயலென் றேரகமறை புண்மை
தன்னு, லப்பரிசி னுடனிலங்கைக் கருளா யீச னுயிழையை வேண்
டுகவென் றகத்துட் கொண்டான்.

(இ-ள்) அவ்வார்த்தையைக் கேட்ட ராவணன் ஆலோசித்து அஷ்ட
திசைகளும், எல்லா உலகமும், எல்லா கடலும், எல்லாம் தானுய் எல்லா
வுயிருக்குமுயிராய் தோன்றும் சிவன் உமாதேவியைச் சேர்ந்ததாலடைந்த
தென்று வேதமுறையிலேதனுல் இலங்கையும் அவ்வாருக பார்வதி தேவி
யைக் கேட்கவேண்டுமென மனத்தினினைத்தான். ௨அ

எண்ணியகின் கருத்திசைத லீவோ மென்ற வீசனடி யிணை
வணங்கி யிலங்கை மூதூர், நண்ணியவி ராவணயீ சுரனென் றேது
நாமமிசை வுறவேதன் முதலோ ராகி. விண்ணவரு மண்ணகத்து
ளவரு மஞ்சி வெருவுறமா நிதியோங்கி வென்றி மேவப், பண்ணி
னஞ்சொற் பசுங்கிளியுன் வாம பாகப் பார்ப்பதியைத் தருதிரெ
னப் பகர்ந்தான் பின்னும்.

(இ-ள்) உனதிஷ்டப்படியே அளிப்போமென்ற ஈசனடி வணங்கி, இல
ங்கை இராவணேசுரனென்று கீர்த்திபெருகவும், தேவலோகத்திலுள்ளவர்
களும் பூலோகத்திலுள்ளவர்களும் பயப்படவும், செல்வம் பெருகவும், வெற்
றியுண்டாகவும் கிளிபோன்று உமது வாமபாகத்திலுள்ள பார்வதியைத்
தரவேணுமென்று கேட்டுப் பின்னும் கூறுவான். ௨௯

காலமொரு மூன்றினுமிக் கயிலை தன்னுட் காட்சியென வில
ங்கைதனிற் கனகபீட, மேலுறவைத் தருணவெயிற் கிரணம்
பூத்த விமானமதி னுகமணி விளக்கு மேத்திச், சீலவுமை தனைப்
பூசை செய்வே ளுகிற் றிசையனைத்து மொருகுடைக்கீ ழாள
யானின், பாலுறுமெய்த் தவப்பயனும் பலிக்கு மென்றன் பாக்கிய
மென் ருன்விதியின் பயனி லாதான்.

(இ-ள்) காலை. பகல், மாலை என்னும் மூன்று வேளையும் கயிலையைப்
போல் இலங்கையில் பொன்னுசனத்தின்மேல் வைத்து, சூரியன்போல்
பிரகாசிக்கும் விமானத்தில் மாணிக்க விளக்கேற்றி அம்பிகையை பூஜை
செய்வேனுகில் அஷ்ட திசைகளையும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்தியை
யும் அடைவேன் எனது தவப்பயனும் பலிக்குமென்ருன், ௩௦

அசலமுறு புயத்தரக்க னுரைத்த மாற்ற மாதிரா யனுளத்தி
லறிந்து நோக்கி, யிசைவிலெவை யெனுங்கேட்ட தளிப்போ
மென்றே யியம்பியதா லிறைவியைநின் னிடத்தி லீய்வேம், விசை
யமுறு கவுரியைக்கை விடுத்தா லுன்றன் வென்றியெலா மிழப்பை

யென்னா விமலன் கூற, திசைப்புகழிப் பொருளினைக்கை விடுவே னோநீர் செப்பு மொழி தக்கதெனச் செப்பினான்.

(இ-ள்) மலைபோன்ற புயத்தையுடைய இராவண னுரைத்த மொழியை யறிந்த பெருமான் நாம் முன்னமே எது கேட்டாலும் மளிப்போமெனக் கூறி யுள்ளபடியால் இப்பொழுது கவுரியைக்கொடுக்கிறோம் நீ இதைக் கைவிட்டால் இதற்கு முன்னால் நீ அடைந்துள்ள வல்லமையெல்லாமழிந்து போகுமென்ன, இராவணன் நான் இந்த வரப்பிரசாதத்தைக்கை விடேன் விட்டால் தங்களிஷ்டப்படியே யாகட்டுமென்றான். ௫௧.

ஆங்கரக்சன் றனக்குரிய தளிக்குமீச னம்பிகையை நோக்கி யருந் தவஞ்செய் வோர்கள், பாங்குடனெவ் வரங்கேட்கி லளிக்க வேண்டும் பரிவுடன்முன் பெறும்பேறு பலித்தி டாமற், றீங்குறு தற் குன்பொருட்டுண் டேகென் றோதுஞ் சிவனுரைகேட் டுமைய வளுஞ் சிந்தை மாழ்கி, நீங்கிலனியா னரக்கன்வி ர கறியா னென்ற நேரிழைநீ கேட்டியென நிமலன் கூறும்.

(இ-ள்) இராவணன் விரும்பியதை அளிக்கவேண்டுமெனும் நோக்கத்தோடு பரமசிவன் பார்வதியைப்பார்த்துத் தவஞ்செய்பவர்கள் விரும்பியதை மறக்காமல் கொடுக்கவேண்டியது எனது கடமை. அவன் உன்னைக்கேட்பதாலும், உன்னால் அவனது பாக்கியத்திற்குத்தீங்கு வரவேண்டியிருப்பதாலும் தடையின்றி அவனுடன் போவென்ற சுவாமியின் வார்த்தையைக் கேட்டுமனம் வருந்தி, அவன் அரக்கனாதலால் இங்கிதமின்றி நடப்பானே அவனுடன் எவ்வாறு செல்வேனென சுவாமி பின்னுங்கூறுவார், ௫௨.

கூறுவதொன் றுண்டவைகேள் முன்னாள் நம்மிற் குலவுதிரு மேனியுறக் கொண்ட பால்வெண், ணீறவையின் பெருஞ்செயலை வினவல் செய்தா யாதலா லதன்மகிமை நெறிகள் யாவும், பேறிசைகொள் வாஞ்சைதனிற் றெரிவித் தெம்மைப் பிரியாதங் களிப்பமெனப் பேச வீசன், றேறுதல்கொண் டாளுலக மெல்லாம் போற்ற சித்தியினுள் வித்தாகிச் சிறந்த சத்தி.

(இ-ள்) நாம் கூறுவதொன்றுண்டு அது என்னவெனில் முன்னாளையிலே நாமணிந்துள்ள திருநீற்றின் பெருமைகளைக் கேட்டாயல்லவா? அவைகளை இப்பொழுது திருவாஞ்சைத் தலத்திலே தெரிவிப்பதுமன்றி இனி எம்மை விட்டுப்பிரியாவரமுந்தருவோ மென்றனர். அது கேட்டு மனந்தெளிந்தனள் உலகமெல்லாம் போற்றுஞ் சித்திகளுக்கெல்லாம் விதையாக விளங்கும் பராசத்தி. ௫௫.

மந்தணமுற் றரன்கௌரிக் குரைத்த பின்னர் வாளரக்க னாறு பயனின் வரவு காட்டா, அந்திபும்வந் துலகனைத்து மிருண்ட காலை யச்சுதனிங் காகவென வருளா லுன்னுஞ், சுந்தரிமுன் பாய்த்திருமால் தோன்று நிற்ப தொன்மையனவ் வழியுரைத்த தெல்லாஞ் சொல்லிப், புந்தியுறு நெறியறிவி லவன்பாற் புக்கப் போதுமோ வெனப்புகன்று புழுங்கி னாளே.

(இ-ள்) தனித்திருந்து சிவபிரான் கூறியபின், அரக்கனடையுந்தீமைபோல் மாலைக்காலம் வந்து இருள் சூழ்ந்தது. அம்பிகை மகா விஷ்ணுவை நினைக்க அவரும் உடனே தோன்றினார். அரன் கூறிய மொழிகளை அவ

ரிடம் உரைத்து அறிவற்றவனுடன் நான் போதல் நியாயமோவென வருத்தத்தோடு கூறினள். ௬௪.

மைதீற்றுந் தடங்கண்ணா யிரங்கி யுன்றன் மனமருகேல் யாவர்களும் வருந்தி நாளுஞ், செய்தவத்தோ ரெக்கருமம் விரும்பி யீய்தல் செவ்வழியி னிலையெமக்குத் தெரிதல் காணாய், நைத லொழி நங்காயுன் றஞ்சல் செய்து நாரணனு மகன்றதற்பி னளின கஞ்சத், தெய்துமுகை வாய்மலர்த்துங் கிரணம் பூத்த விரவிகுண பால்விளங்கி யெழுந்த தாலோ.

(இ-ள்) மைதீட்டிய கண்களையுடைய தங்காய் வருந்தாதே தவஞ் செய்தோர் எவராயினும் அவர்கள் விரும்பியதைக்கொடுத்தலே உத்தம மார்க்கம். இதுபற்றி நீதுயரப்படாதேயம்மாவென்றுகூறி மகா விஷ்ணு வானவர் சென்றபின் தாமரை யரும்புகளை மலரச்செய்யும் சூரியன் கிழக்கே உதயமானான். ௬௫.

எழுந்திரவி தனைப்போற்றி நியம முற்று மிலங்கைரா வணனெதிரோர் முனிவனாகித், தொழுந்த கைமூன் றரைக்கோடி ஆயுள் பெற்றாய் தோர்விலரைக் கோடிபெறிற் றொடங்குங் காந்தக், கொழுந்துமுடி வதின்மூவர் விளங்குமாறு குரைகடலின் புதுமைதெரிந் திடுவாயென்னச், செழுந்துளவ மாலுரைப்பக் கடிதிற் புக்கிச் சிவனடித்தா மரைவணங்கிச் செப்புகின்றான்.

(இ-ள்) காலையிலெழுந்து நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு வரும் இராவணனெதிரில் மகா விஷ்ணு ஒரு பிராமணன்போல் வந்து, நீ மிகுந்த பலவானானபடியால் மூன்றரைக்கோடி வயதைப்பெற்றாய் இன்னும் அரைக்கோடியையும் பெறுவாயாகில் யுகமுடிவில் மும்மூர்த்திகளின் நிலையையும் கடலின் நிலையையும் அறிவாயென்றுகூற உடனே அரக்கன் விரைவாகச்சென்று சிவபிரானைத்தொழுதுசொல்ல ஆரம்பித்தான். ௬௬.

முன்பெறுமூன் றரைக்கோடி யொழிய வின்னு முயற்சியுள வரைக்கோடி ஆயுளதை, யின்பமுற வளித்தியென விறைஞ்சுங் காலை இறையவனும் நகைத்துமையாள் தன்னை நோக்கி, வன்பணியா சனன்செய்கை யெனக்கண் டீய்ந்தார் வாளரக்க னரைக்கோடி வயதும் பெற்று, இன்பமுடன் விமானமிசை முதல்வ னீய்ந்த விறைவியொடுந் தென்றிசையி னேகினானால்.

(இ-ள்) முன்னாலே பெற்ற மூன்றரைக்கோடி வயதுபோக இன்னும் அரைக்கோடி வயது வேண்டுமென்று வணங்க, பரமசிவன் நகைத்து உமையவளைப்பார்த்து இதுபாம்பை பாயலாகவுடைய விஷ்ணுவின் செய்கையெனக்கூறி, அவன் விரும்பியபடியே ஆகுகவென வரமீந்தனர். அரக்கன் அரைக்கோடி வயதைப்பெற்றுக்கொண்டு சிவனளித்த உமாதேவியையும் விமானத்தில் வைத்துக்கொண்டு தென்றிசை நோக்கிப்போனான். ௬௭.

விறலக்கன் கயிலைவரை யடைந்து பெற்ற வென்றியுறு காதைதனை வேந்துங் கேட்ப, நெறியுடைநற் சாபாலி முனிவ னோதும் நேர்மையெலாந் தெரிந்துணர்ந்து நீதி யோங்கிப், பொறைமருவு நைமிசா ரணியந் தன்னிற் புலனுண்டமா தவச்சவுன காதியர்க்கு,

மறைதிகழுஞ் சூதமுனி தெளிவா னுன்னி மலரிதைய மகிழ்ச்சியுற வகுத்திட் டானல்.

(இ-ள்) வெற்றிபொருந்திய இராவணன் கைலைமலையை யடைந்து பெற்ற சரித்திரத்தை பிராட்சேன மகாராஜன் கேட்க சாபாலி முனிவர் சொன்னதை யெல்லாம் தெரிந்து, நீதியும் பொறுமையுமுடைய நைமிசாரணிய வாசிகளான சௌனகாதி முனிவர்களுக்கு வேதமூர்த்தியாகிய சூத மகாமுனிவர் தெளிவாகிய சிந்தையினலே சந்தோஷமாகும்படி சொல்லத் தொடங்கினர். ௬அ.

இராவணன் கயிலையடைந்த சருக்கம் முற்றுப்பெற்றது.

**சருக்கம் ரு—க்குத் திருவிருத்தங்கள் உ௬ச.**

---

உ

சிவமயம்

# திருவரஞ்சரச் சருக்கம்.

வேறு.

பஞ்சமலைக் கிடுந்தழல்போற் பரிந்தவுடற் பேராசை
நெஞ்சுறமும் மலச்சுவட்டை நீறுக்குஞ் சிவகாதை
யெஞ்சலுறு தருள்செயென வெழில்வேந்தன் மாமுனியின்
கஞ்சமலர் தாளிணையைக் கைதொழுதங் கோதுவனல்.

(இ-ள்) பஞ்சமலையிற்பட்ட நெருப்புப்போல மனதிலுள்ள மண், பெண் பொன் ஆகிய மூவித ஆசைகளையும் பஸ்மீகரப்படுத்தும் சிவசரித்திரத்தைச் சொல்லும் வண்ணம் பிரரட்சேன மகாராஜன் முனிவனது பாதங்களைக் கைதொழுது சொல்லுவான். க.

நாட்டுமிசை யிலங்கையிரா வணன்கயிலை யடைந்துநலந்
தீட்டியமா மறைத்துதியா னுளமகிழ்ந்து சிவனருளும்
நீட்டுவரஞ் சரமான நெறியுரைக்க வேண்டுமெனக்
கேட்டவர சுளமகிழக் கிருபையுடன் முனியுரைப்பான்.

(இ-ள்) மிக்க கீர்த்தியையுடைய இராவணன் கைலையை யடைந்து சாம வேதம் பாடினமையால் மகிழ்ந்த சிவபிரானளித்த வரம் தவறின மார்க்கத்தை அரசன் மகிழ முனிவர் அருளிச்செய்வார். உ.

இளமதிச்செஞ் சடைப்பரம னிடத்தாளை யருந்தவத்தோ
ருளமதனிற் பிரியாத வொளியாளை வெளியாளைத்
தளிமமளி யுருவாளைச் சுகமுழுது மீன்றளிக்கும்
வளமிகுந்த கருணைபா மானந்த வாரிதியை.

(இ-ள்) பிறை சூடிய பரமனிடத்திலுள்ளவளை, ஞானிகளின் இருதய கமலத்திலுள்ளவளை, சோதிவடிவாகவுள்ளவளை, திகம்பரமான வெளியிலே ஏகமாயிருக்கப்பட்டவளை, அழகின் உருவானவளை, உலகமெல்லாம்

படைத்துக்காப்பாற்றும் கருணைக்கிருப்பிடமான பரமானந்த கடலாக விருப்பவளை. ௩.

கஞ்சமல ரடியாளைக் கற்பகப்பூங் கொம்பனையைக்
கிஞ்சுகவா யுடையாளைக் கிருபையெனுங் கடலாளை
வஞ்சியிளஞ் சாயலுறு மயிற்பெடையோ திமநடையா
ளஞ்சநறுங் கரத்தாளை யருள்விளைக்கும் பராபரையை.

(இ-ள்) தாமரைபோன்ற பாதமுடையவளை, கற்பக விருக்ஷம் போன்ற செயலுடையவளை, கிளிபோன்ற சிவந்தவாயாளை, கிருபாசமுத்திரமானவளை, வல்லி சாதக்கொடியும் இளஞ்சாயலுமுடைய மயில்போன்றவளை, அன்னநடையும். அபயாஸ்த மளிக்குங்கையையுமுடையவளை, கிருபையை விளைவிக்கும் பராபரையானவளை. ௪.

செம்பொன் மணி விமானத்திற் சிவனளிக்குந் தவக்கனியை
வம்பவிழு மலர்தூவி மாதுமையைப் போற்றிசெய்து
நம்புமிலங் கையினரக்க னடாத்தினன்றென் றிசைப் பரிதி
யம்பரத்தே ரெனுங்கிரண மாயிரம்போ லொளிதவழ.

(இ-ள்) பசும்பொன்னிலே நவமணிகள் பதித்த விமானத்தில் சிவபிரான் கொடுத்த தவத்தின் கனியாகிய உமையவளை வைத்து வாசனை வீசுகின்ற மலர்களைத்தூவி துதித்து, நம்பிக்கையுடன் இராவணன் நடத்திக்கொண்டு தென்திசை நோக்கி வருவது, சூரியனுடைய ரதம் ஆகாயத்தில் வருவதுபோலவும், ஆகாயத்தில் ஆயிரம் சூரியன் பிரகாசிப்பதுபோலவும், ஒளி வீசிற்று. ௫.

கார்விரவும் பொழில்புடைசூழ் கனவரையுங் கான்யாறும்
பார்தவழு நெடும்பழனப் பதிவளமுங் கண்டுநனி
சீர்தவழு முனிவர்கணஞ் சித்தர்கள்வந் தடிபரவ
மேருதவழ் விளக்கொளிபோல் விமானமதின் மேற்சென்றாள்

(இ-ள்) மேகம் தவழும் சோலைகள் நெருங்கிய பர்வதங்களையும், காட்டாறுகளையும், வயல்களையும், பட்டணங்களையும் பார்த்துக்கொண்டு முனிவர்களும், சித்தர்களும் அடிவணங்கும்படி மகமேரு கிரியின்மேல் தவழும் விளக்கொளிபோல் அம்பிகை விமானத்தின் மீது சென்றனள், ௬.

தின்றிறன்மா மேருவின்றென் றிசைபிறங்கு நிடதவரைக்
குன்றினுயர்ந் திடுமேம கூடமொடும் பலகுவடு
நின்றநெறி கண்டிருபா னெடும்பொழிற்பூ மாரிபெய்ய
வென்றியிம வான்பொருப்பின் விம்மிதங்கண் டாளிறைவி,

(இ-ள்) விசாலமும் பலமும் பொருந்திய மகம்மேருமலையையும், அதன் தெற்கிலுள்ளநிடத பருவதத்தையும், உயர்ந்த ஏமகூடபர்வதத்தையும் பார்த்துக்கொண்டு இரண்டு புறங்களிலும் சோலைகள் புஷ்பமாரி பெய்யும்படியான வெற்றியையுடைய இமயமலைக்கண்டு பார்வதி சந்தோஷங்கொண்டாள். ௭,

பொற்புமலி பூங்கொடியைப் புரிதவத்தா லீன்றருளும்
வெற்பினைக்கண் டகமகிழு மின்னெழில்சே ரன்னைதனக்

கற்புதங்கொண் டோங்கிமய மதுகடந்தங் கருளுதவுங்
கற்பகநாடெ னவிளங்குங் காசிவள நாடுகண்டாள்.

(இ-ள்) அழகு மிகுந்த பூங்கொடிபோன்ற பார்வதியை தவத்திலீன்ற மலையைக்கண்டு மனமகிழ்ந்து, அவிடத்திலுள்ள அற்புதங்களைக்கண்டபின் அருள் கொடுக்கும் கற்பக விருக்ஷத்திற்குச்சமானமான நாடாகிய காசி க்ஷேத்திரத்தைக்கண்டனள் அம்பிகை. ௮.

தேங்குபுகழ் காசிநகர் தென்றிசை கடப்ப
தூங்கிசைதெள் வண்டினஞ் சுரும்பிசைகொள் பாடும்
பூங்கமல வாவிகளும் போதலர் பிறங்கா
வீங்குகதிர் கற்றைநுழை யாதவனு மேவா.

(இ-ள்) புகழ் மிகுந்த காசி நாட்டிற்குத்தென்திசை நோக்கிவருகிற போது அங்கு இசைபாடும் வண்டுகள் கீதம் பாடும் தாமரை நிறைந்த தடாகங்களையும், புஷ்பங்கள் மலர்ந்து சூரியனொளி உட்புகாத வனங்களையும் பார்த்துக்கொண்டு வருகிறாள் அம்பிகை. ௯.

நன்னகர முண்டுசில நாடுசிறு காடு
துன்னுக ருண்டுசில துர்க்கையொடு காளி
மன்னுதிரு வாலயம் வனஞ்செறிசிற் றூர்கள்
பன்னுமுவர் நீருறவெண் பாலையது கண்டாள்.

(இ-ள்) வழியில் நல்ல நகரங்கள், சிலநாடுகள், சிறுகாடுகள் நெருங்கிய பட்டணங்கள், துர்க்கை, காளி முதலியவர்களின் ஆலயங்கள், சிற்றூர்கள், பாலை வனங்கள் முதலியவைகளைப்பார்த்தாள் பார்வதிதேவி. ௧௦.

பாலைநில தென்றிசையிற் பன்னுநில நெய்தல்
காலையினு மாலையுங் களித்திடுநல் வண்டு
சோலையொடு காவுகள் துலங்கவிசை பாடும்
வேலையொடு சூழ்கரைக ளாறுகள் விளங்கும்.

(இ-ள்) பாலை நிலங்கடந்து தெற்கு நோக்கி வருகிறபோது நெய்தல் நிலங்களில் காலையும் மாலையும் வண்டுகள் களித்து ரீங்காரம் செய்யும் சோலைகளும், வனங்களும், சமுத்திரக்கரைகளும், ஆறுகளும் விளங்கி யிருந்தன. ௧௧.

ஆங்கது கடந்ததன் றென்றிசை கடப்பப்
பாங்குபெறு முல்லைநிலம் பண்புற விளங்கு
நீங்கரிய வானினம் நிறைக்குழு குழாங்கள்
தேங்குவன் மெங்கணுஞ் சிறப்புளது கண்டாள்.

(இ-ள்) நெய்தல் நிலந்தாண்டி தெற்குத்திசையிலுள்ள முல்லை நிலத்தில், பசுக்கூட்டங்கள் நிறைந்து விளையாடுவதும், ஆயர்கள் குழல் வாசிப்பது மாகியசிறப்புக்களைப்பார்த்தனள். ௧௨.

தீன்சில மகன்றவைக ளெங்கணு நிரம்பி
வேணுவொலி காணகமுழ் வெற்பருவி யாறுந்

தானுப்தி யுஞ்சிலது சாரல்களை வாயும்
யாணுறு குறிஞ்சிநில வண்மையது கண்டாள்.

(இ-ள்) முல்லை நிலந்தாண்டி வரும்போது மூங்கில் விளையும் காடுகளும், மலைகளும், அருவிகளும், ஆறுகளும், பெரிய மலைச்சாரல்களும் நிறைந்துள்ள குறிஞ்சி நில அழகைக்கண்டாள். ௧௨

இன்னநில தென்றிசை யிலங்கெழில் வளங்கள்
மன்னுசிலை தேனளிகள் யாழின்முரல் வண்டு
துன்னியிசை பாடியுழு துண்மலர் விரிக்கும்
தன்னிகரில் காவுகள் தடம்பல விளங்கும்.

(இ-ள்) குறிஞ்சி நிலத்தின் தெற்கில் அழகு பொருந்திய வண்டுகள் பாடிக்கொண்டு அரும்புகளை மலர்த்தும் மலர் வனங்கள் பலவற்றைப்பார்த்துக்கொண்டு சென்றனள். ௧௪.

தண்பணைகள் தோறுலவு சங்கின முயிர்த்த
வெண்மணி தன் முட்டையென வெண்குருகணைத்துத்
தண்கழி பொதும்பரிடை தானடை கிடக்கும்
வண்மைவளமாகுமரு தப்புதுமை கண்டாள்.

(இ-ள்) குளிர்ச்சிபொருந்திய வயல்கள்தோறுமுள்ள சங்குகள் ஈன்ற வெண்முத்துக்களை நாரைகள் தனதுமுட்டையென அணைத்து அடைகிடக்கும் சோலைகள் சூழ்ந்த மருதநிலத்தின் புதுமைகளைப்பார்த்தாள் அம்பிகை.

தண்டெழில்கொள் தென்றிசையிற் கம்பைநதி கண்டாள்,
மண்டுபுனல் பெண்ணைவள மாநதி சடந்து
புண்டரிக வாவிபல பூம்பொழில் வளஞ்சீர்
கொண்டுலவு தென்றிசை குறித்துவரு காலை.

(இ-ள்) மருதநிலத்திலுள்ள அழகுகளைப் பார்த்துக்கொண்டு தெற்குத் திசையிலுள்ள கம்பைநதியின் அழகைக் கண்டு அதன்பின் நீரோட்ட மிகுந்த பெண்ணைநதியின் வளப்பங்களையும் தாமரைத் தடாகங்களையும், சோலைகளையும் பார்த்துக்கொண்டு தென்றிசை வரும்போது ௧௬

வேறு.

மேற்கடுகட் செவியணையால் வெம்மையுறு மெய்திகழப்
பாற்கடலிற் றுயின்றிடுவோ னிவைதெரிந்து பார்ப்பதியாட்
கேற்கைவழங் குறுமெனமுன் னிசைத்தசெயன் முடிப்பதற்காய்
ஆற்குமட லரக்கனுழை யதிவேகத் துடனணைந்தான்.

(இ-ள்) விஷத்தையுடைய பாம்பின்மேல் படுத்திருக்கும் உஷ்ணம் தணிய பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமால் அம்மை வருவதை யறிந்து முன்னமே பார்வதிக்குத் தக்கது செய்வோமென்று கூறிய வாக்கை நிறைவேற்றும்படி ஆரவாரிக்கும் இராவணன் வரும் வழியில் விரைவாக வந்து சேர்ந்தார் ௧௭

மாவிரிவி மானம்வரும் வழிநெருங்கி யிருமருங்கும்
கார்விரவு புதுமையெலாங் கண்டுமணி மூக்காறு

தாவியதன் றென்றிசையிற் றனியிரதத் தபனனென
மேவுபசுங் கொடியுமையாண் மின்னெழில்மங் கலம் கண்டான்.

(இ-ள்) அழகுமிகுந்த விமானம் வரும் வழியின் இரண்டு பக்கங்களிலும் பூஞ்சோலைகளிருக்கும் புதுமைகளைப் பார்த்துக்கொண்டு மணிமுத்தாநதிக்குத் தெற்கில் வரும்போது தனி ரதத்தின்மீது வரும் சூரியன்போல் விளங்கும் அம்பிகையினுடைய திருமங்கலியத்தை மகாவிஷ்ணு கண்டார். ௧௮

கண்டாச்சி மங்கலநாண் கனகவெயி லழகெறிப்ப
வண்டாரு முல்லைவன மருங்காவி னதியதன்பாற்
கொண்டேகு மரக்கனுழி குறுகிநனி தவச்சாலை
யுண்டாக்கித் தோகைநதி யொருபாற்சென் றுகந்தனன்மால்.

(இ-ள்) ஆச்சியின் பிரகாசம்பொருந்திய மங்கல நாணைக்கண்ட விடமாகையால் அதற்குக் கண்டாச்சிமங்கலமெனப் பெயர் பெற்றது. வண்டினங்கள் நிறைந்த முல்லைவனத்தின் பக்கத்திலுள்ள கோமுகநதியின் சார்பாக விமானம் வரும்போது முன்னாகவந்து மயூரநதியின் பக்கத்தில் ஒரு தவச்சாலை இயற்றிக்கொண்டு அவ்விடம் தங்கியிருந்தார் மகாவிஷ்ணு. ௧௯

குடதிசைபாற் சடவரையிற் கொண்டல்பொழிந் திடுதாரை
கடிமலர்சந் தனத்தருவுங் கதிரொளிகொண் மணிவாரி
படிமகடன் மார்பிலணி பசுங்கலாப மேகலைபூண்
டிடைவிதென வருந்தோகை யாற்றின்வள மினிதுரைப்பாம்.

(இ-ள்) மேற்குத் திசையிலுள்ள சடைவரையின்மீது மேகம் பொழிவதனாலுண்டான நீரானது வாசனைபொருந்திய புஷ்பங்கள், சந்தன விருக்ஷங்கள் ஆகியவற்றின் மணங்களை வீசிக்கொண்டும், பிரகாசம்பொருந்திய மணிகளைக் கொழித்துக்கொண்டும் பூமியாகிய பெண்மகளது மார்பிலணிந்த மேகலாபரணம்போல் வரும் மயூரநதியின் சிறப்பைச் சிறிது கூறுவாம்.

நீலநிறம் பரவிவரு நெடுஞ்சிறையார்ந் திருமருங்கும்
பீலிநடு வுற்றெழுந்து நாற்றிசையும் பெறநோக்கி
வேலுலவி வள்ளியிட மேவியதா லாறுமுகக்
கோலமுறு மயூரமெனக் கொண்டதிருப் பேர்யாறு. ௨௰

(இ-ள்) நீலநிறம் பொருந்திய நீரோட்டமும், நடுவில் கண்ணாடிபோல் சுழித்து ஓடுவதையும், ஆற்றின் ஓரங்களில் வேலமரங்களும், வள்ளிக்கொடிகளும் படர்ந்திருப்பதால் ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுள் விளங்கியிருக்கும் மயில்போன்றது மயூரநதி. ௨௧.

இருமருங்கும் பலதருக்க ளெழுந்தவைவி னெடுஞ்சினைக்கை
விரைமலர்சிந் தியதொடர்பு மேவுதல்மா லிகையென்ன
குருமணிதெள் ளரிபணிலங் குலவுமெழி லுருவமைந்த
அரமகடன் விழியெனச்சே லார்வுறுமத் தோகைநதி.

(இ-ள்) இரண்டு பக்கங்களிலுமுள்ள விருக்ஷங்களின் கிளைகளிலிருந்து சிந்தும் புஷ்பங்கள் தொடர்பாக ஓடுவது மாலை போலவும், பிரகாசம் பொருந்திய மணிகள் அடித்துக்கொண்டுவருவது ஹாரம்போலவும், சங்குகள் தவழ்வது கண்டம்போலவும். குமிழிகள் தனபாரம் போலவும், சேல் கண்டைகள் விழிகள்போலவுமாக அழகமைந்த தெய்வமகளிர்போல் விளங்கும் அந்த மயூரநதி. ௨௨.

தாதுநிறைப் பூங்கொன்றைத் தருவரையுஞ் சைவலந்தந்
தாதரவுற் றடைபுயங்க மாருமழவெண் ணுரைத்தவழக்
காதவிளம் பசுந்தோகை காட்டுக்கின் றெருங்குந்நலாற்
சேர்திமலி வேணியனை மானுவ்வத் தோன்றுநதி.

(இ-ள்) கொன்றை மரங்களிலுள்ள மகரந்தப் பொடியையுடைய புஷ்பங்கள் தங்கிய பாசிகள் சடைபோலவும். அதிலுள்ள பாம்புகள் ஆபரணம்போலவும், மான்கள் கரத்திலுள்ள மான்போலவும், நுரைகள் விபூதி போலவும், மயில்கள் பார்வதிபோலவும், அழகை விளக்கி சிவபெருமானைப் போல் விளங்கியது அம்மயூரநதி. உ௪

மாம்பொழில்சூழ் மேகமென்னும் வல்லிருளை நீக்குதலாற்
காம்புதிர்க்கு முத்துநிலாக் கற்றைநிறையொளி காட்டலுறத்
தேட்பின்மது கரத்தொகுதி சிந்தியதே னூற்றெடுக்கும்
பூம்பொழின்மா யூரநதி புனிதமின்விளங் கியதன்றே

(இ-ள்) இருபக்கங்களிலுமுள்ள மாமரங்கள் அடர்ந்து மேகம்போல் இருள் சூழ்ந்திருப்பதால், மூங்கிலினின்று விழும் முத்துகளின் ஒளி அவ்விருளை நீக்க, புஷ்பங்களிலிருந்து உண்ட தேன்களை வண்டுகள் சிந்துவதால் அத்தேன் ஊற்றெடுத்து ஓடப்பட்ட சோலைகள் சூழ்ந்தது அந்த மயூரநதி.

காங்கயன்முன் சூர்தடிந்த பிரமகத்தி கழித்திடுவான்
ஓங்குசிவ பூசனையை நல்லூரி னுக்கந்திடுநா
ளீங்குநதி வேண்டுமென வெற்றிமயிற் கொணர்ந்துடல்
தீங்குறுவல் வினையகற்றும் மயூரமெனச் செப்புநதி.

(இ-ள்) சூரபத்மனை சம்மரித்த குமாரக்கடவுள் தன் பிரஹத்தி தோஷம் நீங்க நல்லூரில் சிவபூஜை செய்வதற்கு நதிவேண்டுமென அப்பொழுது மயிலினால் கொண்டுவரப்பட்டது, சகல பாவங்களையும் போக்குவது அந்த மயூர நதி. உ௫

விளங்குசெய லந்நதியின் வடகரைதொடங்கி
வளங்கதுவும் பெயர்முள்ளி வனம்பரவிச் சிரங்கீழா
யிளங்கனிகா யிலைசிறப்ப வியற்கையுள வதன்பாங்க
ருளங்கனியுந் தவமுனிபோ லுற்றிருந்தார் செங்கிருமால்.

(இ-ள்) மயூரநதியின் வடகரை தொடங்கி வளப்பம் பொருந்திய முள்ளி வனமொன்றிருந்தது அதிலுள்ள விருக்ஷங்கள் தலைகீழாகவும், வேர்மேலாகவுமாக காய்த்துப் பழுத்திருந்தது அதன் பக்கத்தில் மகா விஷ்ணு தவ முனிவர்போல் தங்கியிருந்தார். உ௬

வேறு.

பாடு நல்லிசை யாற்பர மன்கழற்
றேடி ராவணன் சித்திகொள் சத்தியு
மோடு வேக விமான மொடுற்றுற்
நாடி னான் மயூர நதிக்கரை.

(இ-ள்) இன்னிசையால் பரமன் திருவடியைப்பாடும் இராவணன் சித்திகளை யளிக்கும் பராசத்தியுடன் வேகமாக செல்லும் விமானத்தைச்செலுத்திக்கொண்டு மயூர நதியை நாடிவந்தான். உ௭

காவி ருந்தவை காட்சியுந் தேனுகர்
பூவி ருந்த பொலிவுமத் தன்புடை
தேவ ரும்படிந் தேகுநதிப்புற
மேவ ருந்தவன் வேட்டமு நோக்கியே.

(இ-ள்) பூங்காவனத்தின் காட்சியும், புஷ்பங்களின் அழகும், அதன் பக்கத்தில் தேவர்களும் வந்து நீராடிச்செல்லும் மயூர நதியும், அதன் கரையிலுள்ள தவச்சாலையையும், முனிவரையும் கண்டான். ௨௮

கள்ளி ருந்த கடிமலர் சோலைகு
ழுள்ள வாறு முழுதா ராய்ந்தபின்
முள்ளி நேர்வன முன்னுற் றிம்மிதந்
தெள்ளு சிந்தையி னுற்றெளிந் தானரோ.

(இ-ள்) தேன் மிகுந்து வாசனை வீசும் அந்தச் சோலைகள் முழுவதையும் பார்த்தபின் முள்ளி வனத்தையுங்கண்டு தெளிந்தனன். ௨௯

கொண்ட கோல குறிப்புறு மாதவ
வெண்டி சைக்க ணிடத்திலுங் காண்கிலேன்
கண்ட முள்ளியிக் காய்தலைக் கீழதா
யுண்ட தான துரைத்திடு கென்னவே.

(இ-ள்) முனிவரை நோக்கி அழகினையுடைய குறிப்புணரு மாதவரே! தலை கீழாகவுள்ள இந்த முள்ளியைப்போல் நான் எட்டு திசைகளிலும் கண்டதில்லை இது எவ்வாறுண்டாயிற்றென்று அவ்வதிசயத்தை வினவினன் இராவணன். ௩௰

கேட்ட வாளரக் கன்கிளை மாமுக
நாட்ட மாயுறு மாதவ னக்குறு
தீட்டு வேல்விழிச் சேயிழை யார்கொனீ
மீட்டும் யாவன் விளம்புக வென்னவே

(இ-ள்) கேட்ட அரக்கனைப்பார்த்து முனிவன் சிரித்து அழகிய கண்களையுடைய இந்தப்பெண் யார்? நீயாவன் எனக்கேட்டனர். ௩௧

இவ்வு ரைகளி சைத்திடக் கேட்டசீ
ரவ்வி மானத் தரக்க னருந்தவச்
செவ்வி யால்வரு செய்கையி தென்றனன்
தவ்வ மாதவன் றானதற் கோதுவான்.

(இ-ள்) அதைக்கேட்ட அரக்கன் அரிதாகிய தவம் செய்து அம்பிகையைப்பெற்றேனென்றும், தானின்னாரென்றும் கூறினன். ௩௨

அறம்பு ரிந்தவர் நோக்கினுக் கந்தக
னறம்பொ ருந்து மரசெனத் தோன்றுவான்
மறம்பு ரிந்துபின் மாய்பவர் கண்ணினுக்
குறுமெ யிற்கொ டகோர வுருக்கொளா

(இ-ள்) தர்மம் செய்த புண்ணியவான்களுக்கு எமன் தர்ம சொரூபியான அரசன்போல் தோற்றுவான். பாவஞ்செய்து மடிபவர் கண்களுக்கு இயமன் அகோரவடிவோடு தோன்றுவான். ௩௩

ஈது காணான் நேரிழை யாறெனக்
கோதில் மாயை கொடுத்திட வாங்கிநீ
போத லோடு பொருந்துத லுற்றவச்
சூது காட்டத் தொடங்கின முள்ளியே.

(இ-ள்) அதுபோல் சிவன் தனது மனைவியென்று குற்றமுடைய மாயையைக்கொடுக்க. அதை நீ வாங்கிக்கொண்டுவந்தபடியால் அந்தச்சூதைத்தெரிவிப்பதற்கு முள்ளிச்செடியானது உனக்குத் தலைகீழாகத் தோன்றுகிறதென்றனர் முனிவர். ௬௪

என்ன நின்பய னென்றிகழ் மாதவன்
சொன்ன வாய்மையி னுன்மனச் சோர்வுறா
மின்னு கின்றவி மானம்விட் டேகிவந்
தன்ன வன்பதம் போற்றி யறைகுவான்.

(இ-ள்) உனது தவப்பயன் என்னவாயிற்றென்று கூறிய வார்த்தையைக் கேட்டு மனம் வருந்திய இராவணன் விமானம் விட்டு இழிந்துவந்து முனிவரது பாதத்தை வணங்கிக்கூறுவான். ௬௫

வியன்மி குத்தவி மானத்தின் மேவிய
நயமி குத்தருள் நாரியைக் காக்கல்செய்
நியம முற்றிய பின்னுறு நின்னுழை
பயனை யுற்றெம் பதியுறு வேனென.

(இ-ள்) பெருமையுடைய இந்த விமானத்திலுள்ள சத்தியைப்பார்த்துக்கொள்ளும், எனது நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு பின் உண்மையான சத்தியையும் பெற்றுக்கொண்டு எனது நகரம் அடைவேன் எனக் கூறினன் இராவணன். ௬௬

உறுதி யென்ன வுரைத்துவி மானமேல்
நறுமலர்ப்பத நாரியை வைத்துப்பின்
விறலு டைக்கரு மங்களின் மேவுற
மறுவில் சீர்வள மாநதி யெய்தினான்.

(இ-ள்) அம்பிகையைப்பார்த்துக்கொள்ளுமாறு உறுதிகூறிவிட்டு மலர் போன்ற பாதத்தையுடைய பார்வதியை விமானத்தில் வைத்துவிட்டு நித்திய கருமங்களை முடிக்க நதிக்குச்சென்றனன். ௬௭

ஆய காலையி லாழிக் கரத்தனுந்
தூய மாதவ வேடந் துறந்துபின்
நேய மாவடி நேரிரு தாளுறப்
பாயு வேக முடன்பரி யாகியே.

(இ-ள்) அந்த சமயத்தில் விஷ்ணுவானவர் தனது முனிவர் வேஷத்தைத் துறந்து, வேகமாகச்செல்லும் இரண்டுகால்களையுடைய குதிரை வடிவை எடுத்துக்கொண்டனர். ௬௮

இலகு கின்றவி மானத் திறைவியைத்
தலம தாக்கித் தழைவிரி பூம்பொழில்

விலகி மாயனு மேதகு சத்தியும்
நலனுயர்ந்தவ ரஞ்சையி னண்ணினார்.

(இ-ள்) விமானத்திலிருந்து இறைவியைத்தரையிலிறக்கி, அப்பூஞ்சோலையைவிட்டு, மாயவனும் சத்தியும் நன்மை மிகுந்த திருவாஞ்சரமென்னும் க்ஷேத்திரத்தை அடைந்தனர். ௧௯

கண்ணு மம்பிகை நாட்டிய சீர்பத
மண்ணின் மீதுற வைத்தடி மாற்றியுங்
கண்ணன் வாசியின் கால்இரு காற்சுவ
டொண்ணு மக்குறி யுண்டெனக் காட்டியே.

(இ-ள்) திருவாஞ்சரத்தையடையும் அம்பிகையின் காற்சுவடு பூமியில் தோன்றுதபடி மாதவன் அப்பாதச்சுவட்டின்மேல் தனது குதிரைபோன்ற பாதங்களை வைத்து குதிரையடிமிட்டும் தெரியும்படி செய்து விட்டனர்.

தேறல் கொண்டலர் முல்லை வனஞ்செறிக்
தாற ணிச்சடை யண்ணல் வலப்புறப்
பேற தாகப் பிறங்கு முமைக்கெயில்
நீறு கொள்கைய தாகி நிமிர்ந்ததே.

(இ-ள்) மதுரமிகுந்து மலரும் முல்லை வனத்தில் விளங்கும் சிவபிரானது வலது பாகத்தில் அம்பிகை வந்திருந்தனள். திருநீற்றினால் அம்பிகைக்குத்திருமதிலமைந்தது. ௨௧

எயில்வ ளைந்தவெண் ணீற்றெறுழி லெய்துறுஞ்
செயல்ப ராபரச் செல்வியைக் காக்கென
வயின தேயனை வைத்தரு ளண்ணல்பா
னயமு றத்திரு மாலிட னண்ணினார்.

(இ-ள்) திரு நீற்று மதிலுக்குள்ளிருக்கும் சத்தியைப்பார்த்துக்கொள்ளும்படி கருடபகவானைக்காவல் வைத்து விட்டு, மகாவிஷ்ணுவானவர் சிவபிரானுக்கு இடது பக்கத்திலிருந்தனர். ௨௨

ஈது நிற்க விராவண னென்பவன்
தீதி லந்நதி யாடித் திகழ்மறை
யோதிச் செய்கட னுள்ள தியற்றியுங்
கோதின் மாதவன் சாலை குறுகியே.

(இ-ள்) இது இவ்வாறாக ஸ்நானத்திற்குச்சென்ற இராவணன் நதியில் நீராடி வேதபாராயணஞ்செய்து நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு முனிவனிருக்கும் சாலையணுகினான். ௨௩

நாடி நாடி மயூர நதிக்கரை
யோடி யோடியங் குற்றெழு காவெலாந்
தேடி யீரிரு பாலுந் திகைப்புற
வாடி னான் செயல் வைத்த மருங்கரோ.

(இ-ள்) தவச்சாலையில் முனிவரையும், பராசத்தியையும் காணாமல் மயூர நதியின் கரையிலும், சோலைகளிலுமாக எல்லா பக்கங்களிலும் தேடியும் அகப்படாமல் மிகுந்த வாட்டத்துடன் முனிவரிருந்த தவச்சாலையை மீளவும் வந்து சேர்ந்தான். ௨௪

கரைக டந்த கருத்துடை மாதவ
னுரைதெ ரிந்துணர்ந் திலன் பேதைமைப்
பிருவி சும்பிடை மாயையிசென் றேகினல்
மருவ ருந்தவ மாமுனி யெங்ஙனம்.

(இ-ள்) விசாலமான அறிவையுடைய முனிவரின் வார்த்தையைக்கேட்டு அறியாமையினால் உணர்விழந்தேன், மாயாசத்தி ஆகாயத்தினிடம் சென்றிருப்பின் முனிவரெங்கே என இராவணன் வருத்தமுற்றனன். ௪௫

கங்கை வேணிக் கடவு ளளித்தசி
லிங்க மேவிநி லத்துறு வச்சிவன்
மங்கை யீந்தது வானுறு மாறுமுன்
பங்க யத்திறை யோன்பழு தென்னவே.

(இ-ள்) கங்காதரனாகிய பரமசிவனளித்த இலிங்கம் நிலத்தில் ஊன்றிவிச் சென்றதும், அச்சிவனளித்த அம்பிகை ஆகாயத்திற் சென்றதும் பிரமதேவனுடைய தற்பனையோவென்று மயக்கமுற்றனன். ௪௬

இவ்வ கைத்திறன் மாழ்கி யிராவணன்
கவ்வை தீர்க்குஞ் செயலைக் கருத்துறச்
செவ்வி காண்வழி யாதெனச் சிந்தியா
தவ்வு ழிக்க ணயர்ந்திருந் தானரோ.

(இ-ள்) இவ்வாறு மயங்கிய ராவணன் தனது துன்பம் தீரும்வழியாதென்று சிந்தித்து, அதைநிவர்த்திக்கும் வழியுணராது அயர்ந்திருந்தனன்.

ஈச னார்வலப் பாகம் தேந்திழை
மாசி லாளிட மாவடி கொண்டுமால்
தேசொ டுற்ற வாஞ்சைச் செயலென்ன
பேசு மாமறை யென்றிவை பேசியே.

(இ-ள்) வலப்பாகம் பார்வதி யிருக்கவும், சிவனது இடபாகத்திலே குதிரை பாதத்தையுடைய மகா விஷ்ணு இருக்கவும் வாய்த்தது திருவாஞ்சைத்தலத்தின் மகிமையென்று வேதங்கள் கூறுகின்றனவென்றார் சாபாலி முனிவர். ௪௮

வரத ராஜனென் றோதுமம் மாயனைப்
புரித வத்தினர் பூமிசை வாழ்குநர்
கருது கார்த்திகைக் காண்பரு வத்துயர்
விரத மாய்ப்பணிந் தேத்திட வெற்றியாம்.

(இ-ள்) வரதராஜனென்னும் மகாவிஷ்ணுவை, தவமுடையவர்களாயினும், பூமியில் வாழப்பட்ட எவராயினும் கார்த்திகை மாதத்திலுண்டாகும் பருவத்தன்று விரதமிருந்து தோத்திரஞ்செய்து வணங்குபவர்கட்குச் சகல காரியங்களும் வெற்றியாகும். ௪௯

காது வேலிறை வாவிது காண்டியென்
றோது காதையி னுள்ள வியப்பெலாந்
தீதி லாச்சவு னகிதெளி வுறச்
சூத மாமுனி சொற்றன னென்பவே.

(இ-ள்) துஷ்டர்களை அழிக்கும் வேலாயுதந்தாங்கிய அரசனே கேளு மென்று கூறிய சிவ சரித்திரத்தின் மகிமையை யெல்லாம் குற்றமற்ற சவுனகாதியருக்குத் தெளிவுபெற சூதமகாமுனிவர் திருவுளம் பற்றினார். ௫௦

திருவரஞ்சரச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௬—க்குத் திருவிருத்தங்கள் ௩௱௪.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

# வீர விரதச் சருக்கம்.

---

வேறு

இம்மகிமைக்கதை யோதிய மாமுனி யிருபத முந்தொழுது செம்மைய மனுநெறி மன்ன னெனும்பிரட் சேனன் மகிழ்ச்சி யொடு, விம்முறு பூண்முலை மாதுமை யைக்கை விடுத்தவி ராவண னும், கம்பிய சிந்தை யுறுஞ்செய லின்னென் கூறுகென் றனனால்

(இ-ள்) மகிமை பொருந்திய இக்கதையைக்கூறிய சாபாலி முனிவரது இரண்டு பாதங்களையும், ஒழுக்கமுடைய மனுநெறிதவறாத பிரட்சேன மகாராஜன் தொழுது பூரித்த ஸ்தன பாரங்களையுடைய பாசுத்தியைக் கைவிட்டு வருந்தும் இராவணன் செயலைத்தெரிவிக்கும் வண்ணம் வேண்டிக் கொண்டனன். க

வாளையில் வன்படை மன்னவர் நீதி வழங்குவ னென்னும் வரைத், தோளுடை வென்றியு ளோய்மதி யின்றிறற் றூய்மை நினக்குளவால். நீளுவ செஞ்சடை நாதர் வரஞ்சையி னீர்மையு றும் புதுமை, கேளுதி வேந்தென மாமுனி வன்சிவ கிருபை யுணர்த் திடுவான்.

(இ-ள்) வாள் வேல் முதலிய படையுடைய அரசர்களை நீதிமார்க்கங்களிற் செலுத்த வல்ல புஜபல-பராக்கிரம முடையவனே! அறிவின் பரிசுத்தம் உமக்குள்ளதானதால் இக்கதையைக்கேட்டீர். நீண்ட சடா மகுடத்தை யுடைய பரமசிவன் திருவரஞ்சைப்பதியிற் செய்த அதிசயத்தைக்கேளும் என சொல்லத்தொடங்கினார். உ

வானதி மானு மயூர நதிக்கரை வந்த வரக்கன் மலி
வானதி யற்புடை பூம்பொழி லெய்த வருந்து தவங்கடவிர்
வானதி னைந்து திகைத்துற மாவடி மண்ணி னுகந்துதிகழ்
வானதி னூடு செலும்பரி யாகி வடக்குற வாகினனே.

(இ-ள்) ஆகாய கங்கைக்குச் சமானமாகிய மயூர நதிக்கரைவந்த இராவணன் அதிக அழகுடைய பூஞ்சோலையடைந்து, வருந்தித்தவஞ்செய்து பெற்றது தவறிய வருத்தத்தால் திகைத்து நிற்பவன் பூமியில் தோன்றிய குதிரையின் அடிச்சுவட்டை நோக்கி அதைப்பின் தொடர்ந்து மீண்டும் வடக்கு நோக்கி வந்தனன். ௩

வேணு நெருங்கி வளர்ந்து விரிந்து விளங்கயல் மேவுதலை
கீணுடை முள்ளி வனஞ்செறி கின்ற மருங்கு நடந்தெதிராய்த்
தோணுறு வாகி யடிச்சுவ டொன்ற தொடங்கு தலங்களினு
மாணுறு சோலை வனப்பு மலிந்த வரஞ்சர நோக்கினனால்.

(இ-ள்) மூங்கில்கள் ஓங்கிவளர்ந்துள்ளவைகட்குப் பக்கத்திலுள்ளதும் தலை கீழாக வளர்ந்ததுமான முள்ளிவனத்திநேராய் நடந்து வரும்போது எதிரே தோன்றும் குதிரையின் அடிச்சுவடு தொடர்ந்துள்ளதும், அழகிய சோலைகளினால் அழகு மிகுந்ததுமான வாஞ்சாஸ்தலத்தை இராவணன் கண்ணுற்றான். ௪

மிஞ்ச வளர்ந்தெழு புன்னை வனங்களின் மேவு பசுங்கிளிகள்
கொஞ்ச விரைந்தெழு சூத விளந்தளிர் கோதுகுயிற்றெனியே
விஞ்சை யுறுந்தவ மாமுனி வோர்கள் விழிப்புரு வென்னமலர்
கிஞ்சுக மோது நிறங்கொ ளசோக வளங்கெழு மிப்பரவா.

(இ-ள்) தழைத்தோங்கிய புன்னை மரங்களில் கிளிகள் கூடி விளையாடின. மா மரங்களின் தளிர்களைக்குயில்கள் கோதிக்கொண்டு கூவின. கலைஞானமுடைய தவமுனிவர்களின் கண்களைப்போல் சிவந்த புஷ்பங்களையுடைய அசோக மரங்கள் நெருங்கி யிருந்தன. ௫

நீடு குலிங்க மலர்த்திரள் சிந்தி நெருங்கி மருங்கினிரு
ளோட விளங்குதல் வானக மின்னு முடுக்கண மீதெனவே
யாடர வத்தொடு மின்னிசை யாலழ கார்வுறு பூம்பொழிலிற்
பாடளி யுண்டுமிழ் தேறல் வழிந்து படிந்தெழு மாநதியே.

(இ-ள்) நீண்டு வளர்ந்துள்ள இலுப்பை மரத்தின் புஷ்பங்கள் சிந்திப்பக்கங்களிலுள்ள இருளை ஓட்டிவிட்டு பிரகாசமாக விளங்குதல் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரக்கூட்டம் போலவிருந்தது. காற்றினால் மரங்கள் அசைவதனால் உண்டாகும் சப்தம் இனிமையான ஓசையைத்தந்து அழகாக விளங்கும் அச்சோலையிலுள்ள வண்டுகள் உண்டு உமிழ்ந்த தேன் நிறைவுற்று கோமுகி நதியானது ஓடியது. ௬

பண்புடை மத்தள முற்றவை கொட்டுவ ரெனபல மற்கடகந்
தண்பன சக்கனி யுண்டு மிகுந்த தனைக்கர மொத்தடியா
நண்புறு கண்ணுதல் தன்னடி யார்மெய் நலந்திகழ் நீறெளிபோல்
வெண்பொடி கொண்டு மடற்படு வாசம் விளங்கிய கேதகையே.

(இ-ள்) அழகுடைய மத்தளங்களை யடிப்பதுபோல் குரங்குகள் பலாக்கனிகளை யுண்டு மிகுதியைக்கையில் வைத்துக்கொண்டு அடித்தன. சிவபிரானது அடியார்களின் தேகத்தில் விளங்கும் திருவெண்ணீறு போல் பராகங்கள் நிறைந்த தாழை மடல்கள் வாசனையோடு விளங்கின. ௭

நேசன் வரஞ்சையி னாதர் தமக்கிசை நேரென வெண்கவரி
வீசுத லாமென தண்கமு கஞ்செறி பாளை விரிந்துலவு
மாசில் மடந்தையர் பூண்முலை கொண்டு வருந்து மருங்குலைபோற்
றேசுறு பச்சிலை நீர்நிறை கின்றவை தெங்கு மிகுந்ததுவே.

(இ-ள்) அன்புள்ள வரஞ்சை நாதருக்கு இருபுறங்களிலும் கவரிவீசுவது போல் பாக்கு மரங்களில் பாளைகள் விரிந்தும், ஸ்தனபாரத்தைத் தாங்காமல் வருந்தும் இடையையுடைய பெண்களைப்போல் தென்னை மரங்களில் இளநீர்கள் நிறைந்தும் விளங்கின. ௮

மாமதி கொண்டு மலர்ந்தெழு முல்லை வனப்புடை யிற்றிகழும்
கோமுகி கங்கையை மானு மெனுங்குறி கோல வியப்புணர்வான்
நாமதி புற்றிசை யாரும் வரஞ்சர நாதன் விளங்குசெய
லாமித னிற்பெற லாமினி துற்றவை யாக நினைத்தனனே.

(இ-ள்) வண்டுகளின் பாதங்களால் மலர்த்தப்பட்ட புஷ்பங்களையுடைய முல்லை வனத்தின் பக்கத்திலுள்ள கோமுகி நதியானது ஆகாய கங்கை போல் விளங்கும் அழகு கண்டு, புகழ்தற்குரிய வரஞ்சரநாதன் திருவருளால் நாம் நாடி வந்ததனைப் பெறலாமென நினைத்தனன். க

சங்கரி மேவு தனக்குரி தென்று தடம்பொழி லுடியதி
லெங்கணு நண்ணுத லில்லென வெண்ணி யிருந்தள வானவையிற்
றிங்க ளிளம்பிறை கொன்றை வழங்குறு செஞ்சடை யாதிசிவ
லிங்கம் விளங்கி யிருந்தது கண்டடி நேசமு டன்பணியா.

(இ-ள்) உமாதேவி தங்கியிருப்பதற்கு இடமாயிருக்கலாமென்று தேடிக் காணுமல் தயங்கும்போது மூன்றாம் பிறைச்சந்திரனையும், கொன்றை மாலையை யணிந்த சடையையுமுடைய சிவலிங்கத்தைக்கண்டு அன்புடன் பணிந்தான். ௧0

வெள்ளி யெனுங்கயி லாய மிருந்து விளங்கு பதிற்பரிவாய்
வள்ள லிராவணன் முன்னவை தோன்றும் வரஞ்சர நாயகனை
யுள்ள விசால விருப்பொடு முன்னி யுகந்தினி தானவரங்
கள்ள முறுஞ்செயன் பாவை யளித்தனை கண்ணுத லேயெனவும்.

(இ-ள்) கயிலாயத்திலிருப்பதைக் காட்டிலும் மிகுந்த அன்புடன் தோன்றிய வரஞ்சரநாதனை அன்பொடு வணங்கி, எனக்கு மனமுவந்த வரமளியாமல் சூதான வரத்தை யளித்ததேன் கண்ணுதலே என்றான். கக

மின்பய னுமென வஞ்சக மாயைகை விட்டக லப்பெறுவ
தென்பய னீயருள் பெற்றி யிழந்தினி யேகுவ தெவ்வகையான்
வன்புய முஞ்சிர சுஞ்சிதை வுற்றிடு மாறு வருந்தியதி
னின்பய னுண்டவை வென்றுவ தல்லது வேறு நினைந்திடுமோ.

(இ-ள்) மின்னலைப்போல் மறைகின்ற வஞ்சகமுடைய மாயையானவள் கைவிட்டு அகலப்போனமையால் தேவரீரளித்த வரப்பிரசாதத்தை இழந்து எப்படிச் செல்லுவேன்? எனது சிரங்களும் தோள்களும் வேறுவேறாகப் போகும்படி வருந்தித்தவஞ் செய்து, தாங்கள் மனமுவந்து அளிக்கும் பிரசாதத்தைப்பெறுவதேயன்றி வேறுண்டோ. கஉ

பூசுரர் மாதவர் யோகியர் சித்தர் பொருந்து பிலத்துரகர்
வாசவ னாதியர் விஞ்சையர் கந்திரு வாதியர் கின்னரருந்
தேசுறு நன்னெறி வாழ்வது நின்னரு ளல்லது வேறுசெய
லீச பரம்பர நேச வெனுங்கயி லாச வெனத்தொழுதான்.

(இ-ள்) அந்தணர், தவசியர், யோகிகள், சித்தர்கள், நாகர், தேவர், விஞ்சையர், கந்தருவர், கின்னரர் முதலானவர்களெல்லாம் வாழ்வது நினது செயலேயன்றி வேறுளதோ? ஈசனே! பரப்பிரம்மரூபமாய் நேசமுற்று கைலையிலிருக்கப்பட்டவரே என்று தொழுதான். கங

வேறு

தூய்ய மலர்ப்பொழின் முல்லை தொடங்கி
வெய்யவ னென்ன விளங்கொளி மேவு
மைய னிருந்துழி யார்வல மாகி
மையுரு மேனி வருத்துதல் கொண்டான்.

(இ-ள்) பரிசுத்தமான புஷ்பங்கள் மலரும் முல்லை வனத்தில் சூரியன் போல் பிரகாசிக்கும் மகா லிங்கத்தைப்பிரதக்ஷணம் செய்து, தனது கருமையான தேகத்தை வருத்த நினைத்தான். ௧௪

கிளைத்த முடித்தலை கீழுறு கண்டம்
வளைத்த மலர்த்திரண் மாலிகை யென்ன
இளைத்த மதிச்சடை யீச விலிங்க
நெளித்திட மாட்டினன் நேரரி கண்டம்.

(இ-ள்) தனது பத்துத்தலைக்குங்கீழுள்ள கழுத்தில் மலர்மாலை போல அரிகண்டத்தை மாட்டி சந்திரசடாதர மூர்த்தியாகிய சிவலிங்கத்தில் நெளியும்படி மாட்டினான் ௧௫

அறங்கிளை யாக்கு மதன்செய லன்றி
மறங்கிளை யாக்கிட மாதவ முற்றோன்
திறங்கிளை யுற்றெழு சேர்முடி பத்து
முறுங்கள மற்றிட வோங்கின னம்மா.

(இ-ள்) தர்மத்தை வளர்க்காமல் கொடுமை வளர்க்கத்தவஞ் செய்யும் இராவணன் தனதுபத்து முடிகளுடன் கழுத்து அறுபட்டு விழுமாறு நிமிர்ந்து நின்றனன். ௧௬

கருதரி யாவரி கண்ட முறுத்திச்
சொரிதரு சோரியி னுஞ்சுளி வில்லான்
புரிதவ மாக்கள் புரிந்தில வீர
விரத மெவர்க்கும் விளம்பரி தாமால்.

(இ-ள்) நினைக்க வரிதாகிய அரிகண்ட முறுத்துவதனால் வழியும் படியான இரத்தத்தைக்கண்டு சிறிதும் முகஞ்சுளிக்காமலிருந்தான். இதற்கு முன் தவஞ்செய்தவர்களும் இம்மாதிரி வருத்தப்பட்டவரில்லை யென்று சொல்லும்படி வீரவிரதமிருந்தான், ௧௭

வண்ண மலிந்தெழு கந்தரம் வாட்டும்
புண்ணெழு வாயரி வாளுரு போன்று
நண்ணு கருத்தவை நல்குதி யாயேல்
கண்ணுத லேயுயிர் காக்கில னென்றான்.

(இ-ள்) அழகு மிகுந்த கழுத்திலே புண்வாயில் அரிவாள் போல் அறுப்புண்ட சமயத்தில் இராவணன் சிறிதும் முகஞ்சுளியாதவனாகி நெற்றிக் கண்ணையுடைய பெருமானே! எனது கருத்தைத்தேவரீர் முற்றுவிக்காவிடில் என்து உயிரை விட்டுவிடுவேனென்றான். ௧௮

பணியணி கங்கண பாவக ரூப
துணையொரு பாகந் தோகையு லாச

மணியார கிண்கிணி மருவு விலாசப்
பணிகமல பாத மெழில்பெறு மீச.

(இ-ள்) பாம்பை யணிந்த சொரூபரே துணையாக ஒருபாகத்திலே உல்லாசமாய் உமையவளை வைத்திருப்பவரே! மணியாரமும் கிண்கிணியும் இடையிலே விளங்குபவரே! இரண்டு பாதகமலங்களையுடைய சிவனே. கக

அடையலர் முப்புர மனலெழ மூட்டிக்
கடிமத னீறெழ காட்டிய கண்ணா
படிமிசை நின்னடி யாருடை நாப்பண்
குடியக லாதமெய்ஞ் ஞானக் கொழுந்தே

(இ-ள்) திரிபுராதிகளைத் தகித்து, மன்மதனை நீறுபடக்கண்ணினாலே எரித்து பூமியிலுள்ள அடியவர்களின் மத்தியில் நீங்காமலிருக்கும் உண்மை ஞானமாகிய கொழுந்து போன்றவரே. உ0

செல்கரி யீருரி போர்வை திருந்தாக்
கொல்புலி தன்னதள் சேர்வுறை கொண்டு
பல்விட நாக மணிப்பரி வுற்றோய்
நல்கு வெனக்கருள் நல்வர மென்றான்.

(இ-ள்) மேகம்போன்ற யானையை யுரித்துப்போர்வையாகக் கொண்டு, கொலைபுரியப்பட்ட புலியின்தோலை இடையிலே யணிந்து, விஷமிகுந்த பாம்பைக்கங்கண மாகத்தரித்த அன்புடையவரே! எனக்கு நல்ல வரப்பிரசாதம் அளித்தருளுதல் வேண்டும். உக

நசையி னுழுஞ்செய லூடி யிலங்கை
யசைவி லரக்க னரிய தவத்தா
லிசைகொண் வரஞ்சர மீதியல் புற்ற
பசுபதி யீசர் பகர்ந்திட லானார்.

(இ-ள்) விரும்பிய பொருளை அடைய விருப்பங்கொண்டு இலங்கை இராவணன் செய்த அரிய தவத்தினால் கீர்த்திபெற்ற வரஞ்சர ஸ்தலத்திலுள்ள பசுபதி நாதர் கிருபையுடனே திருவாய் மலர்ந்தருளுவார். உஉ

ஆற்றும் வருத்த மகற்றவி வண்ணால்
தோற்றுவ தாழ்வின் டோன்றுறை யாகி
கோற்றெழு நாண்வலி கொண்டவெவ் வீர
வேற்றவை வென்றுவ் தேதுரை யென்றார்.

(இ-ள்) ஆறுதல் கூறி வருத்தத்தை நீக்கும்பொருட்டு சிவபெருமான் ஆகாயத்தில் தோன்றி, அரிகண்டம் பூண்டவீரனே! உனக்கு வேண்டும் வரம் யாது சொல்லுக என்றார். உங

என்று விசும்பி னெழுந்துரை கேளா
கன்றிய வுள்ளக் கருத்தி னரக்கன்
வென்றியு ளாய விருப்பினை யுன்னி
நன்றிகொண் வாய்மை நவின்றிட லானான்.

(இ-ள்) ஆகாயத்தினெழுந்த சொல்லைக்கேட்டு வருந்திய மனத்தை யுடைய இராவணன், வெற்றியுடையதும், தனக்கு விருப்பமுள்ளதுமான வார்த்தையைக் கூறத்தொடங்கினன். உச

மேதகு வம்பிகை வேண்டின னெந்தா
யாதர வொன்றிலி மாயை யளித்தா
யேதுவு மின்றி யிரிந்திட லாலே
காதிய வன்னரி கண்ட மிழைத்தேன்.

(இ-ள்) மேலான அம்பிகையை வேண்டினன், ஆதரவற்ற மாயையை யளித்தீர் அதுவும் என்னை விட்டு நீங்கியது. அதனால் தேகத்தை யழிக்கும் அரிகண்டம் பூண்டேன். உரு

பாங்குறு மாதவன் பங்கயத் தோனு
மேங்கு தலைத்திற லெய்துவ தாய
வீங்குடை வாளயில் வெம்படை யோடு
வாங்கி யிழந்த வரந்தரு கென்றான்.

(இ-ள்) உலக சார்பாகிய விஷ்ணு, பிரம்மா முதலானவர்கள் எனக்கு ஒடுங்கி நிற்கவும் தேவரீரிடம் பெற்ற வாள், வேல் முதலிய ஆயுதங்களை இழந்து விட்டதால அவை மீளவும் வரவும் வரந்தரவேணுமென்றான், உசு

சாம்புதி ராவண சாற்றுவன் கேண்மின்
மேம்படு பேறின் மிகுஞ்செய லேனு
மாம்பொழு தொப்பனை யாகும தன்றிப்
போம்பொழு துண்மை பொருந்தில தன்றே.

(இ-ள்) உயிரை விடும்படியான வைராக்கியஞ் செய்யும் ராவணா? மேலாகிய வரப்பிரசாதம் கைவசமானாலும், அதினால் ஜெயமுண்டானாலும், ஆகுங் காலத்தில் ஆவதும், போகுங்காலத்தில் போவதும் உண்மையாகும், உள

ஈந்த வரங்க ளிழக்கின்முன் வென்றி
மாய்ந்திடு மென்ற வழக்கி னுகந்தா
யாய்ந்தசொ னாரி யுகன்றன னொன்றால்
வாய்ந்த வுனக்கெழு வாறுள தென்றே.

(இ-ள்) உனக்கு வரமளிக்கும்போது இதைக்கைவிட்டால் முன்னால் பெற்ற புகழெல்லாம் ஒழியுமென்றதற்கு உடன் பட்டாய், இப்பொழுது பார்வதி உன்னை விட்டகன்றால். உனக்குள்ள வழியே சரியென்றார். உஅ

முன்னவு ணாதி முயங்கரி தென்னு
மன்ன தவத்தின் வருந்து மரக்கன்
மன்னிதை யத்தின் வரங்களு மாறு
புன்னு வரஞ்சர நாத னுகந்தே.

(இ-ள்) முன் அரக்கர்களாலும் செய்தற்கரிதென்று சொல்லும் வண்ணம் வீரவிரதம் புரிந்து வருந்தும் இராவணன் மனப்படியே மாறின வரங் கொடுக்க இசைந்தனர். உகூ

சித்தி விளைப்ப திருந்துமை யைப்பெற
பெற்று மிழந்தயர் பேதைய னுக்கே

அத்தவ வாளு மயிற்படை மாயா
சத்தியை வென்றிவை தாவென வீந்தார்.

(இ-ள்) சர்வ சித்திகளையும் உண்டாக்கும் பராசத்தியைப்பெற்றும் கைவிட்ட பேதையனாகிய இராவணனுக்கு அவன் கேட்டபடியே வாளும், வேலும், மாயா சத்தியையுமளித்து, நீ வேண்டிய வரமிதுவே யென்றார் பரமசிவன். ௬0

நைபு மனத்து ளரக்க னயத்தாற்
றூய்ய மலர்த்திரள் கொண்டு சொரிந்து
ஐயன் வரஞ்சர வண்ணலை வாழ்த்திக்
கையினை கூப்பிக் களிப்பி னுரைப்பான்.

(இ-ள்) வருந்துகின்ற மனத்தையுடைய இராவணன் அன்போடு புஷ்பங்களினால் அர்ச்சனை செய்து, ஐயனாகிய வரஞ்சர நாயகனை வாழ்த்தி, கைகூப்பி சந்தோஷத்தோடுரைப்பான். ௬க

தந்திவை யெண்டிரு தன்னரு ளியாவும்
வந்தெ னிலங்கை வழங்குவ தும்பின்
எந்தை வரஞ்சர வீச விலிங்கத்
துந்தும் வடுக்குறி யோங்குக வென்றான்.

(இ-ள்) தேவரீரருளிய வரத்தால் அஷ்ட லக்ஷ்மி கடாக்ஷம் எனது இலங்கைக்கு உண்டாகவும், அரிகண்டம் மாட்டியகுறி இலிங்கத்தில் தெரியவும் வரஞ்சரவீசனே அருள்செய்யுமென்றான். ௬௨

எண்ணினை யின்படி யீச னளித்து
விண்ணின் மறைந்தன ராகி விளங்கும்
புண்ணிய வண்ணல் பொருந்து விலிங்கம்
நண்ணி வரஞ்சர நாத னிருந்தார்.

(இ-ள்) இராவணன் விருப்பப்படியே அருள்புரிந்து, ஆகாயத்தில் மறைந்ததுபோல் காட்டி சிவலிங்கத்தில் மறைந்தருளினார் வரஞ்சரநாதர்.

## வேறு

மாறு பாடுற வாங்கி யேகும் வரங்க டன்னை வழங்கென
கூறு கின்றவி ராவ ணன்கருத் தொத்த வாறு கொடுத்தபின்
தேறுகின்ற தெனத்தெ ளிந்துகை சேறு மாயை யொடிந்திசழ்
ஏறு கின்றவி மான முற்றுயர் தென்னி லங்கையை நோக்கினன்.

(இ-ள்) தன் கருத்தின்படி மாறுபாடான வரங்களை வேண்டுமென்று வாங்கிக்கொண்டு, உண்மை சத்தி இதுவேயென மாயை விமானத்தில் வைத்துக்கொண்டு இலங்கையை நோக்கி வந்தான். ௬௪

கைத வத்தவ னேகு மவ்வழி கண்ட முள்ளியு நேருற
மெய்த வத்தியல் பென்ன வுன்னி மயூர மானதி மேவினன்
மைத வழ்த்திரு மாலு மாமுனி யாகி வந்தெதிர் மன்னுறச்
செய்த வத்தவ னைப்ப ணிந்துவி ராவ ணன்சில செப்புவான்.

(இ-ள்) இராவணன் தெற்கு நோக்கி வரும்போது வழியில் முன்னால் தலை கீழாக விருந்த முள்ளிச்செடி நேராக நிற்பதைக்கண்டு, உண்மையான

வாமிதுவே யென்று நினைத்து அங்கு முன்போல் தவஞ்செய்து கொண்டிருக்கும் விஷ்ணுவான் முனிவனை நோக்கிச்சில சொல்லலுற்றான். ௬௫

கடிதி னித்திய கரும முற்றி யிடைந்து னிவ்வழி காண்டில
படிக ளொழுகுறை வான தென்னரு ளான பேற்றள தெங்ஙனம்
படியி னுற்றவை தெரித ருஞ்செயல் பகருவா யென மாதவன்
வடிவ முற்றெழில் கௌரிதன் னுருமாறு பாடு வழங்குவான்.

(இ-ள்) விரைவில் நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு இங்கு வந்தபோது தேவரீர் எங்கெழுந்தருளியிருந்தீர்? நான் தவஞ்செய்து பெற்ற பெண்ணெங்குற்றது? தெரிவிக்கவேண்டுமெனக்கேட்ட இராவணனுக்கு மகா விஷ்ணு உமை மாறுபட்டதைக் கூறுவார். ௬௬

பீடு கொண்ட வரங்கொ ளாமையி னூற்பெ ருந்துய ரெய்தியே
தேடு கின்றனை யானு நின்னிரு நோக்கு நேர்வழி சேர்கிலன்
நீடு மிவ்வன முள்ளி யுந்தலை கீழ தாகவெ நின்றது
ஓடு மின்செயன் மாயை யானதி யாவு மாயையோ டொக்குமால்.

(இ-ள்) முன்பெற்ற வரமானது உண்மையில்லாமையால், நீ வருந்தித் தேடியும் நானும் உனது கண்களுக்குத் தெரியவில்லை, முள்ளியுந்தலை கீழாக விருந்தது. ஆகையால் அவை மாயா சம்பந்தமேயாகும். ௬௭

பூண்ட மெய்யுறு தவமி ழைத்தனை யாத லானுயிர் பொற்புறும்
ஆண்ட கைத்திற லான் திவ்வர மைய மொன்றிலை யறிதி நீ
காண்ட முள்ளி குறிப்பி னாலினி கடிதி னேகென மாதவன்
வேண்டி நின்றவ னுக்கு ரைத்திட மெய்மை யென்று மகிழ்ந்துளான்.

(இ-ள்) சரீரம் வருந்த நீ இப்போது செய்த தவத்தால் உயர்ந்த அழகிய பராசத்தியைப்பெற்றாய். இதில் சந்தேகமில்லை. முள்ளிச்செடிநேராக விருப்பதனாலேயே இதையறியலாம் எனக்கூறி விடையளித்த விஷ்ணுவின் வார்த்தையை உண்மையென்று நம்பி மகிழ்ந்தான். ௬௮

அன்ன வன்றனக் கீச னாருளாயுள் வாளயில் சத்தியு
மின்ன லொத்த விமான மோடுயர் விண்ப றந்திடு மேருவெனப்
பொன்னி நாடியர் சன்னி நாடு புகுந்து வெண்டிரைப் புணரிசூழ்
தென்னி லங்கையி னேகி னன்பெரு செயன்மிகுந்திட வெண்ணியே.

(இ-ள்) இராவணன் தனக்கு ஈசனருளித்த அரைக்கோடி வயது, வாள், வேல் மாயாசத்தி இவைகளைக்கைக்கொண்டு மின்போன்ற விமானமேறி மேருகிரி ஆகாயத்திற் செல்வதுபோல் சோழநாடு பாண்டிய நாடு இவைகளைத்தாண்டி, அலைகள் மோதும் சமுத்திரம் சூழ்ந்த இலங்கையை அடைந்தனன். ௬௯

நிசிய கற்றிய மதிமு கத்துமை நெஞ்ச கத்தின் மூனெய்திய
வசைய கற்றுவ தாக வந்த மயூர மாநதி மாதவ
ரசுல பாதகி லாச னென்றுல கோரு நான்மறை யறைவுற
விசைக ளாரும் வரஞ்ச ரத்திறை யோனி டப்புற மெய்தினார்..

(இ-ள்) இருளை நீக்கும் சந்திரன் போன்ற முகத்தையுடைய அம்பிகைக்குள்ள அபவாதத்தை நீக்க மயூரநதியோரம் வந்து தவஞ் செய்த மாதவ

ஆகிய விஷ்ணு அசுவபாதரென்ற பெயரோடு உலகமேத்த புகழ் நிறை வரஞ்சை நாயகனது இடப்பாகமமர்ந்தனர் ௪௦

என்பதாகிய மகிமை கொண்ட வரஞ்சை நகரி னியற்கைநல்
லன்பி னோர்பிர யாகை மத்தியி லரச னுக்குயர் முனிவர
னின்ப மாக வுரைத்த காதையை சவுன காதிப ரினிதுறத்
துன்ப நீக்குவ தான தென்றிசை சூத மாமுனி யோதினார்.

(இ-ள்) இவ்வாறு மகிமை பெற்ற வரஞ்சாததலத்தின் இயற்கையை நல்லன்போடு சாபாலி முனிவர் பிரயாகை மத்தியில் பிராட்சேனனுக்கு ஓதியதை சௌனகாதியர் கேட்டு மகிழ்ச்சியுறச் சூதமுனிவர் உபதேசித்தருளினார். ௪௧

வீர விரதச்சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௭-க்குத் திருவிருத்தங்கள் ௩௫௫.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# விபூதி மான்மிய சருக்கம்.

வேறு.

இன்ன வாறுதென் னிலங்கையி ராவண னியற்கை
சொன்ன மாமுனி பதமல ராசனுந் தொழுது
மன்னு நீறெழிற் புரிசையை மருவுற விருந்த
அன்ன மார்துமை செயலெலா மறைகுதி யென்றான்.

(இ-ள்) இராவணனது செய்கையை உரைத்த சாபாலி முனிவரது பாத கமலங்களைத்தொழுது பிராட்சேன மகாராஜன் நீற்றினால் அழகு பெற விருக்கும் மதிலினுள் எழுந்தருளிய அம்பிகையின் செய்கையைத்தெரிவிக்குமாறு வேண்டினான். ௧

தூய மாமலர் முல்லையங் காவுறை தொல்லோன்
நேய மாய்வலப் பாகம திருந்துவெண் ணீற்றின்
மேய வாறுமை கேட்டது மரன்விளம் பியதும்
ஆயு மாமுனி யரசனுக் கெடுத்துரைப் பானால்.

(இ-ள்) பரிசுத்தமாகிய முல்லைவனத்தினுள்ள ஆதியாகிய சிவபெருமானை வலப்பாகத்திலுள்ள அம்பிகை விபூதியின் மான்மியத்தைக்கூறும் வண்ணம் கேட்டதும், அதற்குச் சிவபெருமான் விடையளித்ததும், விவரமாகச் சாபாலி முனி அரசனுக்குக் கூறினார். ௨

அரக்க னத்தலத் தடைந்துமெய்த் தவஞ்செயும் பேறிற்
 செருக்கு மிக்கொளா விமானமுற் றிலங்கைசென் றதற்பின்

மருக்க மழ்ந்தசெஞ் சடாடவிப் பசுபதி வலப்பா
லிருக்கு மாதுமை யிறைவனை வணங்கியீ திசைப்பாள்.

(இ-ள்) இராவணன் வரஞ்சரமடைந்து தவஞ்செய்து பேறுபெற்ற சந்தோஷத்தோடு விமானமேறி இலங்கை சென்றபின், வாசனை மிகுந்த சடாபாரத்தையுடைய சிவபிரானது வலப்பாகத்திலுள்ள உமை சுவாமியை நோக்கிக்கூறலுற்றாள். ௩

கொண்டல் மேனியவ் வரக்கனிவ் வுழிகுறித் தெம்மைக்
கண்டு கண்டில தாகிய தென்னெனக் கழற
வண்டு றைந்தபூங் குழலுமை மகிழ்முக நோக்கி
அண்டர் நாயன் திருவுள மகிழ்ந்தினி தறைவார்.

(இ-ள்) மேகம்போன்ற நிறமுடைய இராவணன் இவிடம்வந்து என்னைப்பார்த்தும் அவன் கண்ணுக்கு நான் புலப்படாமல் போன காரணமென்னவென அம்பிகை கேட்க, சிவபெருமான் மனமகிழ்ந்து கூறலுற்றார். ௪

படர்ந்த வெண்டிரைப் புணரிசூ ழுலகெலாம் பரவித்
தொடங்கு மீரிரு சுருதியா கமங்களிற் றுலங்குஞ்
சடங்கொ ருத்திடு முனிவரர்க் கருடருந் தருவாய்க்
கடந்த தத்துவ முடிவினுங் கருணையாய் விளங்கும்.

(இ-ள்) கடல் சூழ்ந்த உலகமெல்லாம் வியாபித்திருப்பதும், நான்கு வேதங்களிலும், ஆகமங்களிலும் விளங்குவதும். தேக சம்பந்தமற்ற முனிவர்களுக்குக் கற்பகத்தரு போன்றதும், கடந்த தத்துவ முடிவிற்குக்கருணை சமுத்திரமாய் விளங்குவதும் ௫

ஏத முற்றவர்க் கிருவிழிக் கரியதா யின்பப்
போத முற்றவர்க் குள்ளொளி விளக்கதாய்ப் பொருந்துந்
தீத கற்றுதற் கியல்பதாய் நன்னெறிச் செயலாய்
மேத குந்திரு நீறினை யன்றிவே றிலையால்.

(இ-ள்) குற்றமுடையவர் கண்களுக்குப் புலப்படாததும், இன்பமாகிய ஞானவான்களுக்கு உள்ளே சுடரொளி விளக்குபோல்வதும். பாவங்களை நீக்குமியல்புள்ளதும், நல்ல நெறியில் உய்ப்பதால் மேன்மையுடையதுமானது திருநீறினையன்றி வேறுண்டோ. ௬

ஆன நீறனை மருவுற விருக்கையா லரக்கன்
ஊன நாட்டமுற் றெய்துறு தொழிந்தன னினிய
பான லங்கொள்செவ் வாயுமை கேட்டியாம் பகர்வேம்
மான லந்திகழ் நீறதின் மகிமைகண் மற்றும்.

(இ-ள்) அத்தகைய திருநீறானது உன்னைச் சூழ்ந்திருந்ததால் ஊனக்கண்ணுடைய அரக்கனுக்குத்தெரியவில்லை. இனிமையும் செவ்வல்லி போன்றதுமான இதழையுமுடைய அம்பிகையே! அத்திரு நீற்றின் மகிமையைச் சொல்வோம் கேட்பாயாக. ௭

வேறு

மிக்க தாகிய பாகதிக்குயர் வீட தாகுவ தைந்தெனு
முக்க ரங்கள் விளங்கு மாறியல் பானதைம்புலன் மேவுறுந்

தக்க மாதவர் தங்க ளுக்குமொர் தலைமை யானது தகைவுள
தொக்க நான்மறை யாக மங்கடு திக்கு மேன்மை தொடங்குமால்.

(இ-ள்) மேலான பாகதிக்கு இடமாக விருப்பது பஞ்சாக்ஷரமாக விளங்குவது, பஞ்சேந்திரியங்களை யடக்கிய முனிவர்கட்கு முதன்மையாக விளங்குவது, வேதங்களாலும் ஆகமங்களாலும் துதிக்கப்பெற்றது. ௮

விதிமு றைச்செயல் தவறி ழைத்தவ விரத மும்கெட நினை
குவார், சதிபு லைக்கள வதின்மி குங்கொலை தக்க காமியர் கள்ளு
ணல், கதிகெ ரித்திடு குரவர் நிந்தனை கடவு ணிந்தனை செய்பவர்,
முதிரு கின்றவெண் ணீறு கண்டுடன் மூடு மத்துய ரோடுமே.

(இ-ள்) விதிமுறை தவறுதல், தவவிரதங்களை அழிக்க நினைத்தல், வஞ்சனை, புலை, களவு, கொலை, காமம், கள், குரு நிந்தனை முதலிய பாவங்களைச் செய்வதால் சூழும் பாவங்களால் வரும் துயரங்கள் வெண்ணீறு கண்டவுடன் ஓட்டம் பிடிக்கும். ௯

எரிவி ழிக்கோடு பிறையெ யிற்றிர ளெனவி ருண்டெழு
மெழிலிகொண், டுருவி னிற்பல கோடி பூதமு டன்று சீறுமி ராக்
கதர், விரித லைக்குற ளலகை மாரண மேவு சூனிய மிவையெலாம்,
பரிதி முன்பனி போலு நீறொளி பரவில் கண்டுட னிரியுமே.

(இ-ள்) எரியும் கண்ணும், பிறையொத்தபல்லும் திரண்டு இருண்டு எழும் மேகம்போன்ற உருவமும் கொண்டு இடிபோல் கர்ச்சித்து வரும் பூதங்கள், கோபித்து வரும் அரக்கர்கள், விரித்ததலையோடு குறுகிய காலையுடைய பிசாசுகள், மாரண உச்சாடனங்களால் வரும் சூனியம் முதலிய யாவும் திருநீற்றின் ஒளிபரவக்கண்ட விடங்களில் நில்லாமல் சூரியன் முன், பனிபோலகலும். ௧௦

முடுகி மேல்வரு மிருக சாதிகள் முனைகொ ளாயுத படைக
ளும், மிடிக ளானவை யிடரு தீவினை வளிகொண் மாமுகி லிடி
மழை, கொடிய பாசகை மறலி தூதுவர் குவல யங்களின் மிகு
விடக், கடிய ராவொடு புனித நீறினைக் கண்ட போதிவை யகலுமே.

(இ-ள்) மிருகங்கள், ஆயுதப்படைகள், வறுமைகள், விபத்துக்கள், தீவினைகள், காற்று, மேகம், இடி, மழை இவைகளாலுண்டாகுந்துன்பங்கள், பாசத்தைக்கையில் தரித்த எமதூதர், பாம்பு விஷம் முதலிய யாவும் திருநீறு கண்டவுடன் நீங்கிவிடும். ௧௧

குலைந டுங்குற வுயிர்வ தைப்பகை கொடிய கூன்குருடூமையுந்
தலைம யக்குவி டாவெதுப்புகள் சஞ்ச லஞ்செய் பெரும்பிணி
வலிய சூலைகி ராணி யும்மதி சாரகுன்ம வயிற்றுநோய்
நிலைக லக்கிய மந்த காசமு நீறு கண்டுட னேகுமே.

(இ-ள்) குடல் நடுங்க உயிர்வதை செய்யும் தோஷம், கூன், குருடு, ஊமை, தலை மயக்கம், விடாத ஜுரம், வியாகூலம், பெருவியாதி, சூலைநோய், கிராணி, அதிசாரம், குன்மம், வயிற்றுவலி, காசம் முதலிய வியாதிகளெல்லாம் திருநீறு கண்டவுடன் போய்விடும். ௧௨

வேறு வேறுரு வான தெய்வ மிகுந்த னேக மிருக்கினுங்
கூறு கின்ற பலவி தம்படு மூலி கைத்திரள் கூடினுங்

வேறு கின்றன மந்தி ரங்க ளனந்த கோடி சிறப்பினும்
நீறி னுக்கிணை யோவெ னத்திகழ் நேச மாமறை பேசுமால்.

(இ-ள்) வேறு வேறான தெய்வங்களிருப்பினும், பலவகையான பூஜைகளிருப்பினும், எண்ணிக்கையற்ற மந்திரங்களிருப்பினும், அவைகளெல்லாம் திருநீறுக்குச் சமானமாகாதென வேதம் கூறும். ௧௩

ஞான வெண்டிரு நீற தின்செய லியாவு மாகி விளங்குவ
தீன மான தகற்று விப்பது எண்ணில் பேத வுயிர்க்கெலா
மோன ஞான சொரூப கார ண மோக்ஷ வீட ருளுய்ப்பது
தேனு லைறந்தெழு நறும லர்க்குழல் திகழு மன்புறு தேவியே.

(இ-ள்) உலகம் விளங்குவதும், ஈனத்துவம் நீங்குவதும், எண்ணிக்கையற்ற பேதமான உயிர்களுக்கெல்லாம் மவுன ஞான சொருப காரணமாய் மோக்ஷ வீடளிப்பதும், திருநீற்றின் செயலையென உணர்வாய் மலரணிந்த கூந்தலையுடைய அன்புநிரம்பிய தேவியே ௧௪

இன்ன வாறியல் பாகி யெம்மி னிலங்கு நீறினை யுன்னியே,
முன்ன நீயெமை வினவ லாலதின் முதன்மை யின்னெறி காட்டி
னம், இன்னினி நீற்றி ந நாம முந்திகழ் நீறணிந்துமை யென்னவே
மின்னெ நிற்பெறு திருவ ரஞ்சையு ளீசர் மற்றும் விளம்புவார்.

(இ-ள்) இவ்வகையாக என்னிடம் விளங்குகின்ற திருநீற்றின் மகிமையைக் கூறுமாறு முன்னமே கேட்ட படியால் அதன் முதன்மையான பெருமையைக்காட்டினோம் உனது நாமமும் இனி 'நீறணியுமையவள்' என விளங்கும் என இசைத்த திருவரஞ்சை நாதர் பின்னுங்கூறுவார். ௧௫

இசைபெ ரும்புகழ் திருவ ரஞ்சையி னெய்தி நின்பத மேற்று
வோர், வசையு றாவகை மேத குந்திறல் வாழ்வு மென்சுக போக
மும, அசைவி லாவிற லுட லு மாயுளு மறிவு ஞானமு மேவுவார்,
திசைகள் யாவையு மீன்ற சின்மய வுருவ மாகிய தேவியே.

(இ-ள்) கீர்த்தி நிரம்பிய திருவரஞ்சை வந்து உன்னைத்துதிப்போர் இகழ்ச்சியுறாமல், மேலான வாழ்வும், சுகபோகமும், நித்தியமான வெற்றியுடைய தேகமும், வயதும், புத்தியும் ஞானமுமடைவார்கள். உலகமெல்லாம் பெற்ற சின்மய ரூபமான அம்பிகையே ௧௬

கங்கை யாடிய பேறு மேதகு மாத வத்துறு காட்சியும், அங்க
முற்றெழு சாந்தி ராயண விரத சீல பயன்களுந். துங்க மேன்மை
யு மித்த லத்துனை தொழுப வர்க்குத வென்றுதன், பங்கி னீறணி
யென்று மேவிய பார்வ திக்கர னோதினார்.

(இ-ள்) கங்கையாடிய பேறும், மேன்மையுடைய தவத்தாலுண்டாகும் காக்ஷியும், சாந்திராயண விரதத்தால் வரும் நன்மையும் பரிசுத்தமாகிய இந்தத்தலத்தில் உன்னைவணங்கினவர்கட்கு அருள்புரியென்று நீறணியுமை என்னும் அம்பிகைக்கரன் ஓதினார். ௧௭

பூதி மான்மிய மினிது கேட்டருள் புனித முற்றெழி லுமை
யவள், காத லாகி வரஞ்சை யிற்றிகழ் கருணை யோடிறை கட
வுடன், சீத நாண்மலர் ரம்பு யஞ்செறி செய்ய தாளிணை சிந்தையு,
ளாத ரம்பெற வேவ லப்புற மாகி நின்று விளங்கினாள்.

(இ-ள்) விபூதி மான்மியத்தை அன்புடன் கேட்டமையால் பரிசுத்த முற்ற உமையவள் திருவாஞ்சாத்தில் கருணையோடு விளங்கும் சிவபெருமானது தாமரைபோன்ற பாதங்களைச்சிந்தித்து அன்புடன் வலப்பாகத்தில் எழுந்தருளி விளங்கினள் ௧௮

வேறு.

விளங்குந் திருவெண் ணீற்றியல்பு விமல னுமையாட் குரைத்ததனை, யுளங்கொண் டரசன் முனிவனைப்பார்த் துலகில் யாவன் வெண்ணீற்றால், வளங்கொண் டுயர்பேர் பெற்றதைவ வழங்குகெனவு மகிழ்ந்து சிரந், துளக்கா நனிமுன் னொருகாதை யுளதென் றெடுத்துச் சொற்றிடுவான.

(இ-ள்) திருவெண்ணீற்றின் மகிமையை பரமசிவன் பார்வதிக்குபதேசித்ததை அன்போடு கேட்ட அரசன் முனிவரைப்பார்த்து உலகத்தில் யாரேனும் திருவெண்ணீற்றினால் மேன்மையுற்றார்களோ? என்று கேட்க ஒரு கதை யுண்டென முனிவர் சொல்லத்தொடங்கினார். ௧௯

பூவிற் றுறவோர் தமிலொருவன் புனித தகையுற் றுளந்தேறி, மேவும் பொறியி னிடமாறு விடையப் பகுதி யறநீத்தோன், தூவு மலர்கொண் டரன்பூசை தொடங்கு நெறிகொண் டவன்வாமதேவ னெனுமெய் நீறணிந்து திகழு முனியோர் வனம் வந்தான்.

(இ-ள்) பூமியிலுள்ள தவசிகளிலொருவனும், பரிசுத்தமான மனந்தெறி பஞ்சேந்திரியங்களினால் உண்டாகும் விஷயங்களை அறவே ஒழித்தவனும், சிவ பூஜையில் வழுவாதவனுமான வாமதேவனென்னும் முனிவன் தனது தேக முழுதும் திருநீறணிந்து ஒரு வனத்திற்கு வந்தான். ௨௰

வந்த முனிவ னவ்வனத்தின் மருங்குற் றிடுகா ரோரரக்கன், உந்து மெழிலி யுருவத்த னுருமே றென்ன வெழுங்குரலான், சிந்து வடவைத் தீவிழியன் சேகாரந் திடுகுஞ் சிபன்பிறைபோல், முந்து வெயிற்ற னெடுவளையின் முழைபோல் விரிவுற்றிடுவாயான்.

(இ-ள்) வாமதேவர் வந்த அவ்வனத்தில், மேகம்போன்ற உருவமும், இடிபோன்ற குரலும், வடவாமுகாக்கினிபோன்ற கண்களும், சிவந்த மயிரும், பிறைபோன்ற பற்களும், மலைக்குகைபோன்ற வாயையுமுடைய ஒரு ராட்சசன். ௨௧

நீல வுரைகால் கொடுநடந்த தெனவு நெடுந்தாள் வல்லரக்கன், சால நடந்து தவமுனிவன் றன்னைச் செகுப்பா னெனத்தெண்ணி, மேலைத் தடந்தோள் கொட்டிநெடுங் காத்தாற் றழுவி விசித்திடலுங், கோலத் திருநீறு படவரக்கன் மதன்போலுருவங் கொண்டெழுந்தான்.

(இ-ள்) நீலமலை கால்கொண்டு வருவதுபோல் நீண்ட தாளையுடைய அந்த அரக்கன் விரைவாக வந்து, முனிவனையணுகி கொல்ல நினைத்து, தனது தோள்களைக்கொட்டி கையினாலணைத்து இருக்கும்பொது முனிவனணிந்திருந்த திருநீறு அரக்கன் மேற்பட்டபடியால், தனது உருவம் நீங்கி மன்மதன் போல் உருவம் பெற்று நின்றனன். ௨௨

கதுவுற் றழலிற் கலந்ததெலாங் கடிதிற் றிகழுங் கனல்போலப் புலைதயுங் கரிய வுருநீங்கிப் பொற்பார்ந் துயர்ந்து முற்புவத்தின்

மதிபுற் றுரைக்குந் தோற்றமுடன் மறைமா முனிவ னடிவணங்கி
யிதுகேட் டீடுயென் றவனியற்கை யெல்லா மெதிர்நின் றிசைப்பானால்.

(இ-ள்) எரியும் அக்கினியிற் பட்டதெல்லாம் அக்கினிமயமாக விளங்குவது போல், புதை பட்டிருந்த கரிய உருவம் நீங்கி, அழகுள்ளவனாய், தனது முற்பிறப்பின் அறிவு தோன்றி முனிவனடிவணங்கிக்கூறுவான். ௨௫

நிசியின் கரிய வுருத்தாங்கி நெடுங்கான் றிரிந்து வெப்பினூறு, பசியா லுழன்று கொலைத்தொழிலிற் பரிவாய் மிகுத்த பிழைசெய்தேன், சுசியா ருனது விழிக்கருணை தோற்றத் தினிமைபெற்ற வெனை, யிசைவாய் புரப்ப துன்கடனென் றிறைஞ்சமுனிவ னியம்புவனால்.

(இ-ள்) இருள்போன்ற கரியவுருவம் தாங்கிக் காட்டிற் றிரிந்து, பசியினால் வருந்தி, கொலைத்தொழிலாகிய பிழையைச் செய்த நான், தங்கள் கருணையால் புனிததேக முற்றேன் என்னைக் காப்பது தங்கள் கடமையென்ன, முனிவர் கூறுவார். ௨௬

மறமே புரிந்து நெடுங்கான மருவு மரக்க மாநிலத்தி
லுறுநாட் டெவனீ யீங்கெம்மு னுற்ற கருத்தே ததுவன்றி
திறம்பி னவையாற் கொலைபுரியுந் தீய வுருவந் தாங்குகொடு
முற்றமை யதுவே தியற்றினையாங் கதனைத் தெரிய மொழியென்றான்.

(இ-ள்) பாவமாகிய கொலைத்தொழில் செய்துகொண்டு காட்டில் வசிக்கும் அரக்கனே! உனது நாடெது? நீயார்? இங்கு வந்து என்னை வணங்குவது எதற்காக? தவிர இத்தகைய கொடுந்தொழிலைச்செய்யும் உருவந்தாங்குவதற்கு என்னதீமை இழைத்தனை அதனைக்கூறுகவென முனிவர் கேட்டார்.

மொழிதல் கேட்ட வரக்கனக முழுதுங் குளிர்ந்தே மகிழ்வெய்தி யழிவில் முனிவ னின்னருள்கண் டதனால் விழுமத் துயர்தீர்ந்து பழமைச் செனனந் தமியேன்செய் பாவமுழுதம் பகர்வெனைனத் தொழுதன் னவன்முன் விழைந்துசெயுந் தொகையா னவைகள் சொற்றிடுவான்.

(இ-ள்) அரக்கன் மனமகிழ்ந்து. அழிவில்லாத தவசிரேட்டரே தங்கள் கருணையால் எனது துன்பம் நீங்கிற்று, எனது பழைய சென்மங்களில் செய்த பாவச்செய்கைகளைக்கூறுவேனெனச்சொல்லத் தொடங்கினான். ௨௭

வடிவம் பொருந்து மிப்பிறவிக் கையைந் தாமுன் வருந்தோற்ற, மிடைவுற் றெழுந்த மிலேச்சருக்கு வேந்த னாகிக் கொடுங்கோல் செய், புடவி புரக்குந் துச்சயனென் றொருபேர் புனைந்து பெருங் காதல், அடைவுற் றரிய கற்புடையோ ரளப்பில் மாதர் தமைத் தோய்ந்தேன்.

(இ-ள்) இச்சென்மத்திற்கு இருபத்தைந்தாவது சென்மத்தில், மிலேச்சர்களுக்கு அரசனாகவிருந்து, கொடுங்கோலுடைய துச்சயனென்னும் பெயருடன், காமாந்தகாரத்தில் வலிய பல பெண்களைக்கற்பழித்தேன். ௨௭

என்னா லாற்றற் கரியதெனு மினிய காமப் பெருநோய்கள்
தன்னால் நாட்டத் தெதிராகு மடவார் தமையுந் தொழுகுலத்து
மின்னார் முதலாய்ப் பலவருண மகளிர் நடுங்க மிகத்தோய்ந்து
முன்னே நீணாக்கு மொழிகேள்ளா தொழிந்தேன் வேட்கை முயல்வுற்றே.

(இ-ள்) என்னால் சகிக்க முடியாத காம நோயினால் என் கண் முன் எதிர்ப்பட்ட பெண்களையும், பிராமணர் முதல் பலவகுப்புப்பெண்களையும் அக்கிரமாகக்கற்பழித்தேன். எனது ஆசை மிகுதியால் பெரியோர்களுடைய வார்த்தையையும் கேட்காமற் போனேன். உஅ

எண்ணில் வருண மகளிர்தமை வலிதிற் றோய்ந்திங் செழுங்காதல்
நண்ணு மொழியாப் பெற்றிமையால் வெய்ய பிணியி னலிவெய்தி
மண்ணு ளிறந்த வெனைக்காலன் வலிய தூதர் பாச மதாற்
றுண்ணுற் றயா வீக்கியபின் னிருப்புத் தூண்டிற் றாக்கினரால்.

(இ-ள்) கணக்கற்ற பெண்களை வலிய சேர்ந்தும் ஆவல் தணியாதபடியினால், வியாதியிற் சிக்கி இறந்தேன். என்னை இயம தூதர் பாசத்தாற் பிணித்து இரும்புத் தூண்டிமுள்ளிற் கோத்துத்தூக்கினார்கள். உகூ

கடிதிற் கொடுபோ யந்தகன்முன் காட்டு மளவிற் சினங்கதுவிக்
கொடியோ னிவனை யாழ்நிரயக் கும்பி யிடையில் வீழ்த்துமென
இடிபோற் கால னுரைத்ததுகேட் டெனையாழ்நிரயத்தழுத்தினரவ்
வடைவோ டையா யிரம்வருட மதனி லுழன்றேன் மாதவத்தோய்!

(இ-ள்) தூதர்கள் என்னை இயமதர்மனிடம் கொண்டுபோய்விட, அவன் மிகுந்த கோபமுடையவனாய் இடிபோல் கர்ச்சித்து இக்கொடியவனை நரகக் குழியில் தள்ளுங்களென, அவர்கள் அவ்வாறே தள்ளினர். அந்த நரகக் குழியில் ஐயாயிரவருடம் துன்பமனுபவித்தேன். ௩0

நலிவுற் றிருப்ப தலாத நரக மகன்று நானிலத்திற்
குலவு பெருமான் குறிகோடி கொண்ட பிலமுயா முடற்சுமந்து
பலகா லெங்குந் திரிந்திடுவெம் பசாச வுருவ மெடுத்திமையோர்
நிலையார் வருடஞ் சுதமெ னுமங்கெடுநா ளலைந்தேன் நிகரில்லோய்.

(இ-ள்) உபத்திரவ நீங்காத நரகமகன்று பூமியில், கோடி வீணைதண்டம் பொருந்தியது போன்ற உடலைத்தாங்கி எங்குந்திரியும் பைசாச ரூபத்தோடு தேவ வருடம் ஐயாயிரம் கழித்தேன். ௩௧

எழுமவ் வுருவம் மகற்றியபின் னிகல்வெஞ் சீற்ற மிருக்கும்வரி
யுழுவை வடிவ மெடுத்தொழித்து முயர்வண் கிரியின் முழைப்பணியா
யிழிவுற் றதற்பின் மயிர்ச்செந்நா யெனவும் வடிவுற் றிருந்துமல
மொழிவற் றருந்தும் பன்றியதா யுதித்து மாண்டே னுணர்மேலோய்

(இ-ள்) அலையும் அந்த பைசாச உருவம் நீங்கியபின் புலியின் உருவமெடுத்துப்பல நாளிருந்து இறந்து, மலைப்பாம்பாகப்பிறந்து நெடுநாளிருந்து பின் செந்நாயாகப்பிறந்து அநேக காலம் போக்கி அவ்வடிவம் நீங்கி மலம் புசிக்கும் பன்றி யுருவம் பெற்று வெகுநாளுழன்று இறந்தேன். ௩௨

மற்று நரியாய்த் திரிந்தேன்பின் முயலாய் வந்தேன் மானுருவ
முற்று பிறந்து வானரமா யுதித்தேன் சிறைகங் கமுமானேன்
கொற்ற மதமா வுருவோடு மெண்ணத் தொலையா கொடுவிலங்காய்ப்
பெற்று மதற்பின் னரக்கனுரு வெடுத்திங் கடைந்தேன் பெரியோனே.

(இ-ள்) நரியாகவும், முயலாகவும், வானரமாகவும், கழுகாகவும், காட்டு யானையாகவும், எண்ணிக்கையற்ற பல துஷ்ட மிருகங்களாகவும், பிறந்து இறந்து பின் அரக்கனுருவங்கொண்டு இங்கு வந்தேன் பெரியோனே. ௩௩

நின்னைக் கதியென் கொடுமையுரு நீங்கிற் றதற்கியான்முன் செய்தவ, மென்னை வறியே னடிகளெனா விசைத்த வரக்கன் முக நோக்கி, பன்னாட் டுதித்துங் காண்பரிய பரமன் றிருநீற் பட்ட துன்மேற், றன்னா லன்றோ விகழ்வுற்றா யென்றோர் காதை முனி சாற்றும்.

(இ-ள்) தேவரீர் கருணை நோக்கத்தால் எனது கொடுமையான உருவம் நீங்கியதற்கு நான் என்ன தவம் செய்தேனோவெனக்கூறிய அரக்கனை நோக்கிப்பல நாள் துதித்தும் காண்பதற்கு அரிய சிவபெருமான் திருநீறு உன்மேற் பட்ட புண்ணியத்தால் இவ்வுருவடைந்தாய் என்று வாமதேவர் ஒரு கதை கூறுவார் ௫௪

சிறப்புத் திருவெண் ணீற்றியல்பு தெரித்தற் கரிதா யினுஞ் சிலகேள், குறிப்பிற் றிசைதென் னவன்றமிழ்நா டதனின் மறை யோர் குலத்தொருவ, னெறிபெற் றியாகமத்தோடு நியம விதமு முயர் மறைகண், மறப்புற் றுலகி னெடுங்காலம் வசைபாக சரு மத் திசைகொண்டான்.

(இ-ள் சிறப்புடைய திருநீற்றின் மகிமை சொல்லுவதற்கருமையுடையதாயினும் சிலசொல்லுவோம் கேள் தமிழ் நாட்டிலே பிராமண குலத்திலே பிறந்த ஒருவன், ஆகமம், நியமம், வேதம் இவைகளை மறந்தானாகி உலகம் பழிக்க நெடுநாள் வாழ்ந்தான் ௫௫

பொய்ச்சூ தாடிக் களவிழைத்துப் பொருள்கள் கவர்ந்தும் புன் மதியான், மெய்ச்சார் பொழிந்து கொடியபெருவேட்கை யதனின் முயன்றிடுநாள், மைச்சார் தடங்கண் புலைச்சியவள் மனைசேர்ந்திர வில் புணர்ந்திடலுங், கைச்சார் வாளா லவள்மகிணன் கண்டு கடி திற் றடிந்தானே.

(இ-ள்) அந்த அசடன் பொய்ச்சூதாடியும், திருடியும் அற்ப குணத்தால் நல்வழி கெட்டு தீயவழி யொழுகி ஆசைமேலீட்டால் ஒருநாளிரவு ஒரு நீச்ச ஸ்திரியோடு ஆலிங்கனம் செய்ய, அதை அறிந்த அவள் புருஷன் கைவாளினாலே ஒரே வெட்டாக வெட்டி விட்டான். ௫௬

தடிந்தே யவன்றன் றாள்பற்றித் தடமுள் வேலிப் புறத்தெறி யக், கிடந்த காலை யடலையுடற் கெழுவு சுணங்க னுறுபசியாற், றொடர்ந்தப் பிணத்தின் மேற்றாவித் தசைகொண் டிழுத்துத் துய்த் திடுபோ, தடர்ந்து மறலி விடுதூத ரடுபாசத்தால் வீக்கினரால்.

(இ-ள்) வெட்டுண்ட அந்த தேகத்தின் காலைப்பற்றி முள் வேலிக்கப் புறமெறிந்தான். அது சமயம் சாய்பலிற்கிடந்த நாயொன்று பசியினாலே அப்பிணத்தின்மேல் ஏறி சதையைப்பற்றி யிழுத்து உண்ணும் போது இயமதூதர்கள் பாசத்தாற் கட்டினர். ௫௭

வீக்கி நிரயக்கும்பியிடை வீழ்த்தக் கொடுபோந் திடுகாலை, நோக்கற் கரிய சிவகணங்க ளெய்தி னணுகி நிரையமதி, லாக்கத் தகுமோ விவனையென வலர்வி மானத் தேற்றேற்றிக், காக்கொண் டிருக்கும் பொன்னுலகிற் கடிதிற் கொடுசென் றிடும்பொழுதில்,

(இ-ள்) ப்ரசத்தாற் கட்டி நரகத்திற்றள்ளக்கொண்டு போகும்போது காணடற்கரிய சிவ கணங்கள் நரகத்திற்றள்ளலாமோவென அவனை புஷ்ப விமானத்திலேற்றிக்கொண்டு கற்பக விருக்ஷமுள்ள பொன்னுலகத்திற்குக் கொண்டு சென்றனர். கூஅ

காலனெழுந்து மிகசீற்றங் கதுவக் கரியு பகரேர்ந்து
சாலக் கணங்கள் முன்னெய்தி யெவ்வா றிவனைத் தாழாது
சீல மொளிருஞ் சிவன்றிருமுன் காட்டுந் தகவோ ஓசப்புகெனக்
கோல மருவுங் கணங்கள்குழா மறலி யறியக் கூறுவரால்.

(இ-ள்) இதையறிந்த இயமதர்மன் மிகுந்தகோபத்தோடு கடாவின் மீதேறி சிவகணங்கள் முன்னே சென்று, இவனை நரகத்திற்றள்ளாது சிவ பெருமான் சந்நிதியிற்கொண்டுபோகத்தகுமோவென, சிவகணங்கள் கூறு வார். கூகூ

வேறு.

மேற்படு சுணங்கன் றேய்ந்த வெண்பொடி பிரேத வங்கங்
காற்பட விருத்த லாலே யாங்களுங் கருதிக் கொண்ட
தாற்பொலி மார்ப வென்னச் சமனுறிந் தஞ்சி மீண்டான்
பாற்பொலி வெண்ணீற் றண்ணல் பரிவுறு கணங்கள் சென்றார்.

(இ-ள்) சாம்பலிற் புரண்ட நாயொன்று பிரேதத்தின்மீது ஏறியதால் அதன் கால்களிற்பட்டிருந்த நீறு பிரேத முழுவதும் பட்டு புனிதமாக்கி விட்டது மாலையணிந்த மார்பனே! அதனால் நாங்கள் கொண்டுபோகிறோ மென; இயமனஞ்சி திரும்பினன், சிவகணங்களும் கயிலையங்கிரி சென் றனர். சா0

இவ்விதச் செயல்வெண் ணீறு எமதுமெய் யிருத்த லால்நீ
வெளவியு போதுன் னங்க மருவுறக் கொடிய பாவக்
கௌவைபு நீங்கிற் றெந்தை கறைமிடற் றண்ண லார்தஞ்
செவ்விய நீற்றின் செய்கைத் தெரிகிலா யரக்க வென்றான்.

(இ-ள்) இத்தகைய திருவெண்ணீறு எமது தேகத்திலிருந்து, நீ கட்டியபோது உனது தேகத்திற் பட்டதால் பாவங்களெல்லாம் பறந்தோடிவிட்டது. நீலகண்டத்தையுடைய சிவபிரானது திருநீற்றின் மகிமையை நீ அறியாயோ அரக்கனே யென்றார் வாமதேவர். சாக

இனிதுற மகிழ்ந்து கேட்ட வரக்கனு மியல்பாற் புந்தி
தனிவுற வாமதேவன் கழலிணை வணங்கி யேத்தித்
தனதுநற் பதியிற் புக்கா னுதலாற் சதுர்வே தங்கள்
தொனியுறத் துதிக்கு நீற்றை யாவரே சொல்லற் பாலார்.

(இ-ள்) மகிழ்ச்சியுடன் கேட்ட அரக்கன் இயல்பாகவே மனங்கனிந்து, வாமதேவனது பாதங்களில் வீழ்ந்து துதித்துதனது நகரமடைந்தான். ஆதலால் நான்கு வேதங்களும் சந்தத்துடன் தோத்தரிக்கும் திருநீற்றின் மகிமையையாரே சொல்லவல்லார். சா௨

நீடுருட் புனிதமோங்கு நீறதன் செயலீ தென்ன
12 ஏடவிழ் மூலத்தில் சூழ்மார் பிறைவனுக் குரைத்தான் சூரன்

வீடுறு முனிவ னென்ன மிகுதவச் சூதன் றானும்
பீடுறு சௌன காதி முனிவர்க்குப் பேசி னானால்.

(இ-ள் மிக்க பரிசுத்தமான திருநீற்றின் மகிமை இதுவென்று மாலை யணிந்த பிரடசேன மகாராஜனுக்குச் சாபாலி முனிவர் உரைத்தாரென்று சூதமுனிவர் சௌனகாதி ரிஷிகளுக்கு உபதேசித்தார். ௪௧

விபூதி மான்மியச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் அ—க்குத் திருவிருத்தங்கள் ௩௯௮,

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# அசனி பூசைச் சருக்கம்.

வேறு

உரைத்த மாக்கதை வியப்புறுஞ் செயலெலா முகந்துநற் றெளிவுற்று, கருத்தி னாலுய ராசனு மாமுனி கழலிணை பணிந் தேத்தி, விரித்த மூற்சுட ரசனியத் தலத்திடை விமலனை யடி பேணிப், பரித்த பூசனை செய்ததிற் பெரும்பயன் பகருதி யெனக் கேட்டான்.

(இ-ள்) அன்புடன் கூறிய சிவகதைகளிலுள்ள வியப்பெல்லாம் சந்தோஷத்தோடு கேட்டு மனந்தெளிந்தவனான பிரடசேன மகாராஜன் சாபாலி முனிவரது பாதங்களில் வணங்கித்துதித்து அக்கினி சுவாலை வீசும இடிராஜன் அந்தத்தலத்தில் சிவபூஜை செய்து பயன் பெற்றதெவ்வாறெனக் கேட்டனன்.

கேள்வி யானிது கேட்டலுங் கசிவுறக் கெழுவுசிந் தையனாகி, வளமெ லாந்திகழ் மணிமுடி புனைந்திடு மன்னவன் முகநோக்கி, அளவில் மாபுகழ் வாஞ்சையி னண்ணல்பா லசனிவந்தினிதேத்தித், தளர்வி லாவரம் பெற்றுயர்ந் தமைதனி சாற்றுதற் கியல்பானான்.

(இ-ள்) அரசன் கேட்க, கேள்வியாலுயர்ந்த முனிவர் மகிழ்ச்சியுடன் மணிமுடி மன்னவனைப்பார்த்து, மிகுந்த புகழுடைய திருவாஞ்சை நாதனிடம் இடிராஜன் வந்து பூசித்து வரம்பெற்றதைக்கூறும் மனமுடையவரானார். ௨

தெளிவில் சிந்தையர் வெவ்வினைத் தொடர்பினர் செறிந்த வைம் பொறிவாழ்க்கை, தளைகுருதவர் மாதவத் தியல்பினைக் கருத்

நற் றிறமில்லார், தளர்வு காட்டிய வறுமையான் மெலிகுனர் தன மிலா தவரேனும், வளம லிந்துயர் வரஞ்சையி னொருதின மருவா ரருள் சேர்வார்.

(இ-ள்) தெளிவில்லாத மனமுடையவர், வியாதியுடையவர், ஐம்பொறி யடக்காதவர், தவத்தைக்கருதாதவர், வறுமையினுலிளைத்தவர், திரவிய மில்லாதவர், முதலியோர் யாவராயினும் வளப்பம் பொருந்திய திருவரஞ்சை ஸ்தலத்தில் ஒருதின மிருந்தவர் இறைவன் அருளைப்பெறுவார்கள். ௩

கோதில் நீறணி யுமையொடுங் கயிலையிற் குலவுத லெனக்கோலச் சோதி தண்ணிளம் பிறைமுடிப் பரமனும் வரஞ்சையின் மகிழ் தொன்மை, யாதியந்தமு மாயருட் டிருவுரு வாகுமத் தலமன்றி, யேது வாகிய தலங்களுண்டாயினு மதற்கிணை யெனலாமோ.

(இ-ள்) குற்றமற்ற நீறணி உமையுடனே கைலாயத்திலிருப்பது போல், பிரகாசம் பொருந்திய மூன்றாம் பிறையை முடியிலணிந்த பரமன் வரஞ்சைத்தலத்தில் ஆதிகாலந்தொட்டு அருளுருவாகவிருக்கும் அந்தத்தலத்திற்குச் சமமாக வேறு தலமுண்டோ. ௪

உன்னி யத்தலத் தசனிபூ சனைகள்செய் துயர்வுறு பயன் கேட்டி மன்னு நீடலை வாரிதி சூழ்புவி மனுமுறை புரப்பாரு மின்னு வேற்கரத் தலைவரி னிசைபெறு மிருமதி குலத்தோரிற் முன்னு வன்புகழ் குருகுலத் தோர்கதை துவாபர யுகந்தன்னில்.

(இ-ள்) நற்சிந்தையோடு அந்தத்தலத்திற்கு இடிவந்து பூசை செய்து மேன்மையுற்ற செயலைக்கேளும் மகாராஜனே! கடல் சூழ்ந்த பூமியில் மனு முறை தவறாது வேலாயுதந்தாங்கி அரசுசெலுத்திய அரசர்களில் சந்திரவம்சத்தில் புகழ்படைத்து ஆண்டவர்களை ஒவ்வொன்ராய்ச்சொல்லுகிறோம். ௫

பிரதை யென்றுயர் சூரன்மா மகவெனும் புவியிடை பெருஞ் செல்வ, மருவு நற்றவக் கவுந்தியைக் குருகுலப் பாண்டுமன் னவன்வேட்டு, விரதமாகிய முன்னுறு தவப்பயன் தலைவிமெய் யுதரத்தைந், தருவ தென்னுமா முதிட்டிரன் றன்னொடு மைவர்வந் துதித்தாரே.

(இ-ள்) பிரதையென்ற பெயருடன் உயர்ந்த சூரசேன மகாராஜன் புதல்வியாய், பூமியில் மிக்க செல்வமுற்றிருந்த குந்தியை குருகுலத்திலுள்ள பாண்டு மகாராஜன் மணக்க அவள் வயிற்றில் முன்செய்த தவத்தின் பயன் போலவும், பஞ்ச தருக்கள்போலவும் உதிஷ்டிரன் முதல் ஐவர் பிறந்தனர். ௬

உதித்த மைந்தருங் கவுந்தியு மத்தின புரியினுற் றிடுநாளின் மதித்த நூற்றுவ ரென்னகாந் தாரிதன் வயின்வரு மகவோரிற், கொதித்த சொல்லுடைச் சுயோதனன் முதல்வனுய்ப் பாரிடங் கொள வெண்ணிச், சதித்தற் கொன்றின னொருகுலந் தனில்வருந் துணைவர்தங் களுக்கம்மா.

(இ-ள்) பாண்டவரைவரும், குந்தியும் அத்தினபுரியில் வாழ்கின்றநாளில் காந்தாரிவயிற்றிற் பிறந்த நூறுபிள்ளைகளுள் முதல்வனாகிய திரியோதனன் ராஜ்ய முழுவதும் தானே ஆளவேண்டுமென்னும் பேராசையுடன் ஒரு குலத்திற் பிறந்த சகோதரர்களுக்கு சதியாலோசனை செய்ய நினைத்தனன்.

எய்த நீர்த்தடங் கழுவினும் விடங்கொடுத் திருந்துகங்கைப்பின்
மாய்வு, செய்த வஞ்சகம் பலித்தில தென்றுமா துலனொடுந் தேர்
வுற்று, உய்தி லாவரக் கிழைவுறு மாளிகை யொப்பனை யுளதாக்கி,
மெய்த வத்தினை வரை யாயொடு மாளிகை யுறவித்தார்.

(இ-ள்) தடாகத்தில் வசிக்கழுவுகள் நிறுத்தியும், விஷங்கொடுத்தும், கங்கையிலெறிந்தும், கொல்ல நினைந்த வஞ்சனைகள் நிறைவேறாமையினால், மாமனாகிய சகுனியோடு ஆலோசித்து, அரக்குமாளிகை யொன்றுகட்டி, அதில் குந்தியோடு ஐவர்களையும் குடிவைத்தார்கள் அ

மெழுகி னாலயத் திருந்தவை காளும்வ வேந்தரை நிசிகண்டுத்
தழல்கொ ளுத்திட துயில்புரி வோர்களைச் சமீரணி கரத்தேந்தி,
வழியு டைக்குகை நீணெறி யடைந்துமோர் வனத்தின்வைத்
ததின் பின்னர், ஒழிவி லாக்கதிர் வரவறிந் தனர்வினை யுள்ள
சூட்சியு மாதோ.

(இ-ள்) அந்த மெழுகினாலாகிய மாளிகையிலிருந்தவர்களை இரவு நேரத்தில் தீ வைத்துக்கொல்ல நினைத்ததை யறிந்த வீமசேனன் தனது சகோதரர்களையும், தாயையும், எடுத்துக்கொண்டு குகைவழியாகச்சென்று ஒரு வனத்தில் வைத்தான். சூரியனுதித்தபின் வஞ்சனையை உணர்ந்தனர். கூ

காடு கண்டிடு மறன்மக னிளைஞருங் கவுந்தியுங் கருத்தாற்றம்
வீட தெனக்குறித் திருந்தநா ளிடும்பனை வீமன்வெம் பகைதீர்த்து
நாடு கின்றனை யிடும்பியை வியாதமா முனிவர னயவின்சொல்
லோடு நன்மணம் புரிந்துவே தியரென வைவரு முருக்கொண்டார்.

(இ-ள்) பஞ்சவர்களும் குந்தியும் அந்தக்காட்டை வீடுபோல் பாவித்து வசித்திருக்கும்போது, எதிர்த்து வந்த இடும்பனை வீமன் கொன்று அவனது தங்கையாகிய இடும்பியை வியாசமுனிவரின் உத்திரவுப்படி திருமணம் புரிந்து கொண்டான். பின் ஐவரும் வேதியர் உருவந்தாங்கினர். க0

ஆயு மைந்தர்கள் ஐவரும் வைகுநீ டடவிதன் னிலை நீங்கி
நேய முண்டெனும் வேத்திர கியமென் னெறிகொளப் பதிமேவா
தூய வேதியர் நீங்கிலாப் பகன்றனைத் தொலைத்துமே தகுகேள்வி
ஓய்வி லந்தண ராசிபெற் றிருந்தன ருயர்குரு குலத்தோரே.

(இ-ள்) குந்தியும் பாண்டவரும் அந்தக்காட்டை விட்டு பிராமண வேடத்தோடு வேத்திரகீயம் சென்று, அங்கு ஏக சக்கரவனத்திலிருந்து கொண்டு பிராமணர்களுக்குத்துன்பமியற்றிய பகாசூரனைக்கொன்று அந்தணர் வாழ்த்த அங்கிருந்தனர். கக

வாகை கொண்டதோ ளருச்சுனன் விற்குரு தக்கணை வழங்
காக, வேங்கை முன்னிர தத்திடைப் பிணித்துயர் துரோணர்தன் னிட
ஞ்செல்நாள், யாகசேனனு மொழிந்தவஞ் சினமுடிப் பான்றகப்
பொருட்டாலே, யிகை யுற்றமர் மகத்தொடங் கியுமத னேந்திழை
யாம்பெற்றான்.

(இ-ள்) வெற்றிகொண்ட அருச்சுனன் தனது வில்லாசிரியருக்குத் தக்ஷிணைகொடுக்கப் பாஞ்சாலனை ரதத்திற் பிணித்து வந்து துரோணர் முன்விட

யாகசேனன் கோபமுற்று துரோணரைக்கொல்ல ஒரு பிள்ளையையும், அருச்சுனனுக்குக்கொடுக்க ஒரு பெண்ணையும் யாகஞ்செய்துபெற்றான். ௧௨

எதுவ பிற்றரு கன்னியைச் சுயவரங் கண்டகா வலர்க்கின்ப
வதுவை யெண்டிசைத் தூதும்போக் கினனெழில் மங்கைநல் வரம்
பெற்றோன், புதுமலர்த்தொடை மணிமுடி யரசர்கோ டியதெனப்
புடைசூழ்ந்தப், பதியின் வாறெலா மறிந்தனர் விறலுடைப்
பாண்டு செய் தவத்தோரே;

(இ-ள்) அக்கினியிற் பிறந்த பெண்ணுக்குச் சுயவரம் என்று எல்லா அரசர்களுக்கும் யாகசேனன் தூதனுப்பினான். அதையறிந்த மணிமுடியரசர்கள் கோடிக்கணக்காக பாஞ்சாலன் நகரில் சூழ்ந்திருப்பதை வெற்றியையுடைய பாண்டு மைந்தர்கள் அறிந்தனர். ௧௩

அறிந்த மன்னவ ரைவருங் குந்தியு மருமறையவரெனச்,
செறிந்த வேதியர் தம்மொடுந் துருபதன் செல்வமா நகரெய்தி,
நிறைந்த சீர்பெறு மாவண மருங்கெழு நிருபர்சேனையுநோக்கி,
மறைந்த செய்கைய ரன்னையைக் குலாலன் வாழ்மனையில் வைத்
தன ரன்றே.

(இ-ள்) பஞ்சபாண்டவருங் குந்தியும் வேதியர் வேடங்கொண்டு, பாஞ்சாலன் நகரமெய்தி, அங்குள்ள கடைவீதிகளையும், அரசர் சேனைகளையும் பார்த்துக்கொண்டு, அன்னையை ஒரு குயவன் வீட்டில் வைத்தனர். ௧௪

வைத்த வேதிய ருருவினர் மணிமுடி மன்னவை யருகார்ந்து
சைத்த னுப்படு வீரருக் கிசைவுறு விலக்கினைக் கணையொன்றாற்
றைத்து வீழ்வுறக் காட்டிய விசயன்மேல் வருசம ரினையோட்டி
மெய்த்த வத்தெழிற் றுரோபதி தனைமணம் வேட்டனர் மகிழ்ந்தாரே

(இ-ள்) பின் ஐவரும் அரச சபை அணுகி, வீரர் பலராலும் வளைக்கப்படாத காண்டீபத்தை வளைத்து, இலக்கை ஒரே கணையினால் விழச்செய்து, எதிர்த்து வந்த அரசர்களை வெற்றிகொண்டு, துரோபதையை மணம் புரிந்தனர். ௧௫

வேறு

உரக கேதன னொடுந்திற லநேக வரசர்
கருகு நெஞ்சுடை யராய்க்கடிதி னோடு மளவில்
மருவு மத்துருபதேயன் வள மாநகரியிற்
பரவு மோர்வருட மந்தண ரெனப்ப கரவே.

(இ-ள்) துரியோதனனோடு பல அரசர்களும் மனம் வருந்தி, முதுகிட்டு ஓடியபின் பாண்டவர்கள் பிராம்மண வடிவத்துடனே ஒரு வருஷம் பாஞ்சால தேசத்திலேயே இருந்தனர். ௧௬

குயவ னில்லிடை யுகந்து திகழ் குந்தி மகிழா
சுயவ ரத்திடை மணம்பெறு துரோ பதியொடு
நயம லிந்தறன் மகன்றனினை யோரு நவையில்
இயல்தி ருந்துவள மாநகரி யெய்தி னனரோ.

(இ-ள்) குயவன் வீட்டிலிருந்த குந்தி மகிழும்படி சுயவரத்திற் பெற்ற துரோபதையோடு தர்மராஜனும் தம்பியர் நால்வரும் குற்றமின்றி அப் பட்டணத்திலிருந்தனர். ௧௭

தார்ப்பொ லிந்தவரை மார்புடை சமீர ணியொடு
வேற்படுங்கர கிரீடிவிறல் மேவு மிளைஞ
ரேற்ப துத சுத்திருங்கை பர்த்திரமோ டில்லிடை தொறுஞ்
சேற்ப ரிந்துதவு முபாதான மருந்தி வருநாள்.

(இ-ள்) மாலை யணிந்த மலைபோன்ற மார்புடைய வீமசேனனும், வேல் தாங்கிய கையை யுடைய அருச்சுனனும், கையில் பாத்திரமேந்தி வீடுகள் தோறும் உபாதானம் வாங்கிப்புசித்து வரும் நாளில். ௧௮

மங்குல் வாரிதியின் வெண்டிரைகண் மேய்ந்தும் வருவார்
துங்க மின்னைவை தொடங்குதிசை யூடு பொதுளி
வெங்கு மாரிபொழி கின்றவதி லெழுந்த வசனி
பங்கு னன்கையுறு பாத்திர மதிற்ப டியவே.

(இ-ள்) மேகம், சமுத்திரத்திலுள்ள நீரைக்குடித்து, ஆகாயத்தில் மின்னி திசைகள் இருண்டு, மழைபொழிந்து கொண்டிருக்கும்போது இடித்த இடியானது, உபாதானத்திற்குச்சென்ற அருச்சுனன் பாத்திரத்தில் விழுந்தது. ௧௯

படிவு கண்டிடு மருச்சுனன் வெகுண்டு பகையா
விடியி னைக்கர தலத்துற விருக்கி யெனது
அடிசில் பாத்திர மதிற்படுவ தென்னை யறிவால்
மடிவு காட்டிடுமிவ் வாறினை வகுத்தி டெனவே.

(இ-ள்) பாத்திரத்தில் விழுந்த இடியை அருச்சுனன் கையினாலே இறுக்கிப் பிடித்துக்கொண்டு, என்ன புத்திகொண்டு எனது உபாதான பாத்திரத்தில் நீ விழுந்தாய் எனக்கோபத்தோடு கூறினான். ௨௦

வன்ப ழிந்துதிகை யுற்றொளி மழுங்கி யசனி
முன்பு ரைத்தவிசை யன்றன்முக நோக்கி முனைகொள்
வின்பொ ருந்துகர வேந்துரு விடுத்து மறையோ
னென்ப வந்திடுநின் வீரமது காண்ட லெனுமால்.

(இ-ள்) இடி பலம் ஒடுங்கி திகைத்து விஜயனது முகத்தைப்பார்த்து, காண்டீபனே! அரசனது உருவை மாற்றி அந்தணனாகவிருக்கும் உன்னை பரிசோதிக்கவே இங்கு வந்தேன். ௨௧

நாடு கின்றது கிரீடிநனி யுன்றன் வலியால்
வாடு கின்றலைவ தவிர்ப்பது வழங்கி யெனது
வீடு கண்டிடு மறம்புரியு மென்று வெருவிப்
பாடு மன்புகழை நாவிடை பரிந்த சனியே.

(இ-ள்) பரிசோதனைக்குவந்த நான் உனது பலத்தால் மிகவும் மெலிவுற்றிருக்கிறேன்! கிரீடியே! நான் எனது இருப்பிடம் அடையும்படி தயவு செய்யவேண்டுமென இடி புகழ்ந்து கூறியது. ௨௨

கொடுமை செய்குநர் சரண்புகிற் கண்டு குறையை
விடுவ தூங்கரும மென்னமனு வின்மு றைந்றனோ
ருடைய ருச்சுனன் மனக்கொதிப் பொடுக்கி வரைகள்
பொடிப டுத்துமிடி யோடுசில வாய்மை புகல்வான்.

(இ-ள்) கொடுமை செய்பவர்களும் தமது குறையை யுணர்ந்து சரண் புகுவார்களாயின்; அவர்களை மன்னித்து விடவேண்டுமென்றுள்ள மனு முறையை அறிந்த அருச்சுனன் கோபமடங்கி, மலையைத்தகர்க்கும் இடியைப்பார்த்துக்கூறுவான். உங

மஞ்செர் டுங்கதுவி யார்த்துவரு காலை புலகி
லெஞ்சு மாக்களியல் பாகியவென் னூம மதனை
நெஞ்சி னூடிவிரி நாவொடு விரித்து நவில்வோர்க்
கஞ்சல் தந்திருகை யம்பர் மடைந்தி டுதியால்.

(இ-ள்) மேகத்தோடுங் கூடி ஆர்ப்பரித்து வரும்போது, பூமியிலுள்ளவர்கள் பயந்து எனது இயல்பான பெயரை மனதிலே நினைத்தாலும், நாவினாலே துதித்தாலும், அவர்கட்கு அபயாஸ்தமளித்து உனது இருப்பிடம் சேர்வாயோவென்றனன். உச

என்ற உண்மையுரை சிந்தையி லிருத்தி யசனி
நன்று நன்றுறுதி யாயிவை நடப்ப னெனநேர்
வென்றி கொண்டவிசை யற்குரைசெய் தேகி மிருவான்
சென்ற போதுதிக ழிந்திர னறிந்துரை செய்வான்.

(இ-ள்) என்ற மொழியைக்கேட்ட இடி நல்லது அவ்வாறே நடப்பேனென அருச்சுனனுக்கு வாக்குத்தத்தம் செய்து விட்டு தனது இருப்பிடஞ் செல்ல, இதையறிந்த இந்திரன் கூறுவான் உரு

வாசவன்கடிய கோபமுடனென்றன் மகவை
நீசெகுப்பது நினைந்துமிடர் செய்தனையெனு
வேசி நன்குரு துரோகியென சாப மிடவே
மாசு கொண்டசனி மாழ்குமன தாகி மெலிவான்.

(இ-ள்) இந்திரன் மிகுந்த கோபத்தோடு, எனது மகனைக்கொல்ல நினைந்தனையோ? குருத்துரோகி! எனவைது சாபமிட்டபோது, மனங்கலங்கி இடிராஜன் வியாகூல முற்றான். உசு

இந்தி ரன்பகைய தாகியிடு சாப மதனிற்
புந்தி கொண்டதுய ரான்மெலிவு பொங்கி யவதி
நொந்து நொந்துசுரர் தன்குரவ னோடுரை செய்தின்
னிந்தை யைத்தவிர்த லாநெறி யுரைத்தி யெனவே.

(இ-ள்) தேவேந்திரன் கோபித்து இட்ட சாபத்தினால் மனநொந்து வியாகூலத்துடனே தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவானிடம் போய் வணங்கி எனது பிழையைப்பொறுத்து அனுக்கிரகிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டான். உஎ

துதிகொண் டேயர செனச்சுருதி யாயு முரவோன்
மதிம ருண்டசனி மாற்றமு மறிந்து பகர்வான்.

சதிபுலைக்களவின் மேவுதல் தகாதவெனினும்
விதிவ சத்தின்வழி யாவரினும் வெல்ல வரிதே.

(இ-ள்) துதித்துக்கூறிய மொழியைக்கேட்ட பிரகஸ்பதி பகவான் மனம் வருந்தி, இடியின் வார்த்தையையும் அறிந்து சொல்வார். மோசம், பொய், களவு முதலியன புரிதல் தகாததாயினும், விதிவசத்தை வெல்லுதல் அரியதாகும். உஅ

போகி மாமுடி மிசைப்பரவு பூமகடனக்
காக லாதுமிகு பாரம தகற்று வதெ)ன
மேக வண்ணமுறு விண்டுவு மிரண்டு ருவுமாய்
பாக சாதன னளித்தசேய் பார்த்தி பனுமே.

(இ-ள்) ஆதிசேடனது முடியிலுள்ள பூமிதேவிக்குள்ள பாரத்தைக் குறைக்க விஷ்ணு இரண்டு உருவமாய் வந்தவரில் இந்திரனளித்த பிள்ளை அருச்சுனன். உகூ

நரனு நாரணனு மாயவ தரித்தனர் நறை
விரவு நற்றுளப மாலிகைத ரித்த விமலன்
குரைக டற்பெறு துவாரகை யிற்கு டியுளா
னரனு டைப்பகையின் விசையனுரு மாற லுளதால்.

(இ-ள்) நரனும் நாரணனுமாய் அவதரித்த துளபமாலை யணிந்த விஷ்ணு வானவர் கடல் நடுவிலுள்ள த்வாரகையிலிருக்கிறார். பகையாளி வஞ்சனையில் அருச்சுனன் உருமாறி யிருக்கிறான். ௩0

ஆத லான்மகிமை பெற்றிடு மருச்சு னனைநீ
தீது கண்டனை புரந்தரன் சினங்க துவியே
யோது றச்சபிதல் சாமிகொடு துரோகி யெனவே
யீத கற்றுநெறி மேவுசிவ பூசை யெனுமால்.

(இ-ள்) ஆதலால் மகிமைபெற்ற அருச்சுனனுக்குத் தீங்கிழைத்தனை அதை அறிந்த இந்திரன் குருத்துரோகியென சபித்தனன். சிவபூசையே இதை நீக்கத்தக்க வழியாகும். ௩௧

தகைவு பெற்றபசு பாசம தகற்றி யதலம்
மகிமை நேருற விளங்கிய வரஞ்சை யதனின்
மிகவு மாதவர் விருப்பொடு நிறைந்து பணிவா
ரிகப ரத்தினு மியற்கைய தளிக்கு மிசைவார்.

(இ-ள்) சிவ பூசைக்குரிய ஸ்தலம் பசுபாச மகற்றும் திருவரஞ்சரத்தலமாகும். அதில் மகா தவத்தையுடைய முனிவர்கள்வந்து வணங்கி இகபர சாதகம் பெறுவர். ௩௨

அத்த லத்திலரு ளாகிவளர் நீற ணியொடுஞ்
சுத்த மேவுசிவ பூசனை தொடங்கி யிதைய
புத்தி யோடுமறை யாகம விதிப்ப டிவழா
துற்ற கர்லையி லருத்தியு டோடு மெனவே.

(இ-ள்) அத்தலத்தில் நீறணி யுமையவளோடுங்கூடிய பரிசுத்தமாகிய பரம சிவனை ஆகம விதிப்படி பக்தியோடு பூசித்து வந்தால் நீங்காத துன்பங்களெல்லாம் பறந்தோடும். ௩௩

கண்டு மேவுசிவ பூசனை கடைப்பிடியெனு
வண்டர் தங்குரவ ரோதுமரு ளைக்கருதியே
யெண்டிசா முகமனைத்தினு மிலங்கு மகிமை
கொண்ட நற்றிரு வாஞ்சையிடம் வந்து குறியா.

(இ-ள்) கூறியதை அறிந்து சிவபூஜையைக் கடைப்பிடிப்பாயென்று தேவகுருவான வியாழபகவான் கூறிய நெறியை நினைத்து அஷ்ட திசைகளிலும் மேலான மகிமைபூண்ட திருவாஞ்சியத் தலத்திற்குக் குறிப்பாக வந்தான் இடிராஜன். ௧௪

காட்டெ ழிற்பரவு முல்லைகடி மேவு வனமும்
மாட்டு நன்புனித மானத வருட்புனலுமா
நீட்டு வன்புகழ் சிறந்துவளர் கோமுகி யொடும்
பாட்டி சைக்குமளி யாடுபொழில கண்டு பரிவாய்.

(இ-ள்) அழகு விளங்குதலால் வாசனை வீசும் முல்லைவனமும், புனிதமாகிய மானத தீர்த்தமும், புகழுடைய கோமுகி நதியும், வண்டுகள் பாடும் சிங்காரத்தோப்பும் கண்டான். ௧௫

மலைம டந்தையை வலப்புற முவந்து மருவும்
நிலவி ளம்பிறை சடாமகுட முற்ற நிமல
னிலவு சோதிதிகழ் பசுபதி யிலிங்க வுருவாய்
மலிவு கண்டடி வணங்கியுரு மாச கலவே.

(இ-ள்) பருவதராஜன் குமாரத்தியை வலப்பாகத்தில் வைத்திருப்பவரும் மூன்றாம் பிறையை சடையிலணிந்தவருமாகிய பசுபதீசுரர், இலிங்கவடிவாக விருப்பதைக்கண்டு, களங்கந்தீரும்படி அடிவணங்கினான். ௧௬

மாற்ற லாதபிழை யோட்டுமத்து மான தமெனுந்
தீர்த்த மாடியு நியாசவிதி யோடு திகழ்வா
ரேத்து மாமறைக ளாகமவியற்கை நெறியே
நீற்று ருவடிவ மெங்கணு நிரப்பி யபினும்.

(இ-ள்) நீக்குதற் கரிய பிழையை ஓட்டும் மானதவாவியில் நீராடி நியாசவிதிமுறை தவறாமல் வேதாகம விதிப்படி தேக முழுவதும் திருவெண்ணீறணிந்துகொண்டான்.

அங்க நன்புனித மாகியபி ஷேக முறையா
லிங்கி தம்படு செழுங்கனிக டேற லிளநீர்
பங்க மிற்சுரபி பாலரிய பஞ்ச கவியந்
துங்க மானபல சுகந்தமொடு தொடங்கி மிகவும்.

(இ-ள்) சரீரம் பரிசுத்தமான பிறகு அபிஷேக முறைப்படி கனிகளின் ரசம் இளநீர், பசும்பால், பஞ்ச கவியம, வாசனையுடைய அபிஷேக திரவியங்கள் முதலாகக்கொண்டு. ௧௮

செறிகொள் சண்பகவெண் மாலதிபு னகமலரு
மறுகு தும்பைபதிக மாரவெள் ளெருக்கு வகையான்
வெறியு டம்புதிய மாமல ரனேக விதமு
மிறைவ னுக்குரிய சைவமுறை யாற்றியிலசவாக்ல.

(இ-ள்) சண்பக மலர், முல்லை மலர், புன்னை மலர், அறுகு, தும்பை மலர், ஆத்தி மலர், வெள்ளெருக்கு மலர் ஆகிய வாசனையுடைய பலவகையான புஷ்பங்களால் சைவ முறைப்படி அர்ச்சித்து. ௩௯

## வேறு.

அசனி யன்பினோ டுயர்முறை பூசனை யாற்றியர்க் கியத்தோடு
மிசைகொ ணாரிகே ளரமொடு பலகனி வகையினி துறவீந்து
கசிவு கொண்டுளம் பரவச மாகிய காலைநேர் வலமாகிப்
பசுமி ளங்கொடி நீறணி பாகனை பழிச்சுதல் புரிவுற்றே.

(இ-ள்) இடியானது அன்போடு பூசித்து அர்க்கியமுதவி, தேங்காயோடு பலகனிவர்க்கங்களும் நிவேதித்து, மனமிளகி மயிர்க்கூச்செறிய வலம்வந்து நீறணி உமைபாகனைத் தோத்திரஞ்செய்து. ௪௦

கொல்லு லைக்கனலி னுங்கொடி தெனுமழு மானிரு கரங்கொண்டு
வல்லி யத்துரி மருங்குறக் கிண்கிணி வாய்யொலி யிசையார்ப்ப
அல்லெ னுங்களி யானையின் றோல்புய வங்கமார் பணியாடுந்
தொல்லை நாயக பசுபதி வாஞ்சையிற் றோன்றுமென் னுளத்தேவே.

(இ-ள்) கொல்லனுலையினுங் கொடிதாகிய மான்மழுவைக்கரத்திலேந்தியும், புலித்தோலை இடையிலணிந்தும், அதன்மேல் சப்திக்கும் கிண்கிணி தரித்தும், யானைத்தோலைப்போர்த்தும், மார்பில் அரவம் மாலையாக ஆடவும் பெற்ற புராதனனே! பசுபதி நாதனாக வாஞ்சையில் தோன்றி எனது மனத்திற்கவர்ந்த தேவனே. ௪௧

பரிதி யாயிரங் கிரணச்செஞ் சடாமுடிப் பரமநீ றணிபாகச்
சுருதி யின்சிர மருவுசெவ் வழிச்சிவ சுடரொளி விளக்குள்ளாய்
கருது வார்தமக் கருடரு பசுபதி காலகா லகங்காளா
எருது கந்துமீ ரேழுல குயிர்க்குயி ராகிய வெம்மானே.

(இ-ள்) ஆயிரஞ் சூரியன்போன்ற பிரகாசமுடைய சடாமகுடமுடைய பரமனே! நீறணி யுமைபங்கனே! வேதத்தின் சிரத்திலுள்ள சுடரொளி தீபமே! மனதினினைப்பவர்க்கு அருள்தரும் காலகாலனே! கங்காளரூபனே! இடபத்தின்மீது ஏறியவா! பதினான்கு உலகுக்கும் உயிருக்குயிராயிருக்கப்பட்டவெமது கர்த்தனே. ௪௨

## வேறு

கறங்கு வெண்டிரை தவழ்கரு கடல்விட மருந்தி
யறம்பெரு ருந்தவா னிமையவர்க் காருயி ரளித்தாய்
பிறங்கு மூவிலைச் சூலபா சாங்குச பினாக
முறுங்க ரத்தொடு விளங்குமா வாஞ்சையி னுயர்வோய்.

(இ-ள்) சப்திக்கும் கடல்விஷ மருந்தி, தர்ம மோங்க தேவர்களுக்கு ஆருயிரளித்தவரே! சூலம், பாசம், அங்குசம், பினாக முதலியவற்றைக்காத்திலேந்தி வாஞ்சையில் விளங்கும் உயர்ச்சி யுடையவரே. ௪௩

பகைத்த முப்புரா தியர்தமை யழற்படுத் துதலாய்
நகைத்த னங்கனை நீறெழக் காட்டிய நயனக்

தகைத்த மூன்றுடைச் சிவபர சச்சிதா னந்த
விகத்தி னும்பரத் திலங்குநீ றணியுமை யிடத்தோய்.

(இ-ள்) விரோதித்த திரிபுராதியரைத்தீயெழச்சிரித்து, மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்த முக்கண்ணரே! சிவபர சச்சிதானந்த சொரூபரே! இவ்வுலகத்தில் மேற்பட்ட நீறணியம்பிகையை இடப்பாகத்திலுடையவரே!

பிரம னாதியர்க் கறியொணாப் பேரொளி விளக்கே
பரம சுந்தர சங்கர தேவகற் பகமே
அரிய நான்மறை யாகம புராணகா ரணனே
தரும முற்றிடா தமியனிந் தனைதவிர்த் தருளே.

(இ-ள்) பிரமன் முதலிய தேவர்களாலும் அறியப்படாத ஒளி விளக்கே! பரமானந்த சுந்தரனே! சங்கரனே! கற்பகத்தருவே! வேதாகம புராண காரண வடிவே! தர்ம சிந்தனையற்ற அடியேனது நிந்தையை நீக்கிக்கிருபை செய்ய வேண்டும். ௪௫

என்ன வாதியாம் பிரணவந் தொடங்கியைந் தெழுத்தும்
பன்னு சிந்தைய னாகிய பரவசத் தசனி
முன்னு கந்திரு வாஞ்சையி னினிதுறை முதல்வன்
மின்னு நீறணி யுமையொடும் விடையின்மே னின்றார்."

(இ-ள்) என்று பிரணவத்தை முதலாகக்கொண்ட பஞ்சாக்ஷரத்தை மனதில் தியானித்து, பரவசமாகி நிற்கும் இடிராஜன்முன், வாஞ்சாரத்தில் விளங்கும் தலைவன் உமையோடு இடபவாகனரூடராய் நின்றார். ௪௬

அளப்பில் சீர்சிவன் றனைமல ரடிகளி னிறைஞ்சி
யுளப்பெ ருக்கெழு முவகைகொள் தனாதொலி முழக்கான்
வளப்பொ லிந்துடை யிந்திரன் முனிவுற மாழ்கு
மிளைப்பொ ழிந்திட வருளுதி யென்றிசைத் தனனால்.

(இ-ள்) மிகுந்த சிறப்புடைய சிவபிரானது அடிகளில் வணங்கி, மனம் மிகுந்த மகிழ்ச்சி பொங்க, ஆரவாரித்து, இந்திரனது கோபத்தால் வருந்தும் எனது துன்பத்தை நீக்கியருள வேண்டுமெனப்பிரார்த்தித்தான். ௪௭

பஞ்ச பாதகம் புரிகுனர் தனதடி பரவா
அஞ்சல் தந்திடு மாதியாம் பசுபதி யண்ணல்
லெஞ்சி நின்றிடு மசனியன் புறவா மீந்து
கொஞ்சு நீறணி யுமையொடுங் குறிப்பிடை மறைந்தார்.

(இ-ள்) பஞ்சமா பாதகஞ் செய்தவர்களும் தனதடி வணங்குவாராயின் அவர்களுக்கு அபயாஸ்தம் கொடுக்கும் பெருமான், இடிராஜன் மகிழும்படி வேண்டிய வரங்களை யளித்து அம்பிகையோடு இலிங்க வடிவில் மறைந்தருளினார். ௪௮

மருண்ட புன்மையை மாற்றிய பூசனை வழங்கித
திரண்ட சீர்திரு வாஞ்சையி னிறையருட் செயலான்
வெருண்டு உகவரும் நடுக்குற முழக்கொலி விம்மி
யிருண்ட வாரிநீர் முகந்தெழு மெழிலியுற் றுளவால்.

(இ-ள்) களங்கமாகிய சிறுமைகளை நீக்க மிகுந்த வழிபாடு செய்து, வரஞ்சைநாதனருளால் பேறுபெற்ற இடியானது, யாவரும் நடுங்கும்படி சப்தித்துக்கடல் நீருண்ட மேகத்தினிடம் போய்ச்சேர்ந்தது. ௯

மேதகு லாந்திரு வரஞ்சையிற் றிகழ்பசு பதியார்
பூசனைக்கடை பிடித்துய ரசனிதன் புகழைப்
பேசி னார்புனை முனிவருந் தேவரும் பெரிது
வாச வன்னிவை தெரிந்துதன் றிருவுள மகிழ்ந்தான்.

(இ-ள்) அழகிய திருவரஞ்சையிலுள்ள பசுபதிநாதரைப்பூசித்து இடிராஜன் பேறுபெற்றதை முனிவர்களும் தேவர்களும் புகழ்ந்து கூறினர். அதையறிந்த தேவேந்திரன் மகிழ்ந்தான். ௰

நனுகி யிக்கதை கேட்குந ருரைக்குநர் நவையூ
டணுகி டாதொலி யிடிபுனற் பகையதி னழுந்தார்
பணிகள் வெவ்விடப் பகையுறார் பசுபதி யீச
னிணைமலர்ப்பதத் தருள்பெறு வாரிசை யினுமே.

(இ-ள்) விருப்பொடு இக்கதையைக்கேட்பவர், படிப்பவர் முதலியோர், இடி, நீர், பாம்பு, பகை முதலிய அச்சங்களுக்கு வருந்தாது, பசுபதிநாதரருள் பெற்று கீர்த்தியோடு வாழ்வார். ௧௧

ஆத லாலச னீசரென் றருள்வரஞ் சையினிற்
சோதி நீறணி யுமையொடுந் தோன்றிய தொன்மைக்
காதை மேலவ னாசர்க்குக் கழறிய செயலைச்
சூத மாமுனி சௌனகா திபருழி சொற்றான்.

(இ-ள்) ஆகையால் அசனீசரென்று திருவரஞ்சையில் நீறணியுமையோடு மகிழ்வுற்றிருக்கும் செயலை முனிவர் பிராட்சேனனுக்குக் கூறியதை சூதமா முனிவர் சௌனகாதியருக்குக்கூறினர். ௧௨

அசனி பூசைச்சருக்கம் முற்றுப்பெற்றது.

**சருக்கம் ௯—க்குத் திருவிருத்தங்கள் சஉய.**

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்

# தீர்த்தச் சருக்கம்.

---

வேறு.

நவைய கற்று மசனி பூசை நலமு ரைத்த வருளின்மா
தவெண்மலர்ப் பதம்ப ணிந்த தரணி பன்ற னுளமகிழ்ந்
தெயவன்வ ரஞ்சை மானதத் தெழிற்பு னற்ப டிந்துறும்
பயம கற்றி னைதைப் பகர்ந்தி டென்ன வுரைசெய்வான்.

(இ-ள்) குற்றங்களை நீக்கும் இடிராஜன் பூசைசெய்ததை யுரைத்த சாபாலி முனிவரது பாதத்தை வணங்கி, பிரசேன மகாராஜன் திருவாருகையிலுள்ள மானத தீர்த்தத்தில் நீராடி எவன் பாவங்களை நீக்கினான் அதைக்கூறவேண்டுமென முனிவர் கூறுவார். ௧

மேதி னிக்கு ளாய்வி ளங்கி மேவு கோடி தீர்த்தமா
யாதி யான தலைமை பெற்ற வதில்வி லங்கு பறவைகள்
தோது வான சீவ செந்து தாவ ரங்கள் தோயின்மா
போத முற்ற மானி டப்பி றப்ப தாய்ப்பொ ருந்துமே.

(இ-ள்) உலகில் கோடிக்கணக்கான தீர்த்தங்களுண்டு, அவற்றில் தலைமை பெற்ற தீர்த்தத்தில் மூழ்கும் விலங்கு பறவை முதலானவைகள் அறிவுடைய மனிதப்பிறவியை எடுக்கும். ௨

பொருந்து மாக மங்களிற் புலன்ப டுத்து மாதலாற்
றிருந்து நேச வீசர் பூசை செய்வ தாகி நெறியொடும்
பெருந்து வந்த லைப்ப டும்பி றப்பொ ழிந்து சிவபதத்
திருந்து வாழ்வ துறுதி யென்றி யம்பி மற்று முரைசெய்வான்.

(இ-ள்) மானிடப் பிறவியில் வேதாகம சாரங்களிற் புலமை மிகுந்து, சிவபூசை செய்து, அதனால் பிறவித்துன்பம் நீங்கி, நிலைபெற்ற சிவபதத்திலேயே வாழ்ந்திருப்பார்கள். ௩

தேறு கின்ற ஆக மங்கள் திகழு நாட தொன்றதே
ரோடு கின்ற நெடிய வீதி யிரும ருங்கு மாளிகை
தோறு மேலெ ழுந்து மாட மீதி ருந்த தோகைமார்
வேறு கொண்ட வதன மதிகள் விரவு கோல மானுமே.

(இ-ள்) ஆகமங்கள் ஒழுங்குபெற நடக்கும் ஒரு நாடுண்டு, அதில் தேரோடும் வீதிகளில் இருபக்கங்களிலும் நிறைந்துள்ள பெண்களின் முகங்கள் பல சந்திரன்கள்போல் தோன்றும். ௪

மஞ்சு சூழ்வி சால மேவு மதிலு டுத்த மாளிகை
மிஞ்சு கோபு ரங்கள் தாவி விண்ணை யெச்சு மிகுதியா
லெஞ்சி நாணி நிகவு மும்ப ருலக மவர்னி லேகுறக்
அஞ்ச மாம லர்த்த டங்கள் காட்டு கின்ற வளமையே.

(இ-ள்) மேகமண்டலம் வரையிலுள்ள மதில்கள் சூழ்ந்த மாளிகையை மிகுதியாக வளர்ந்த கோபுரம், தேவலோகத்தைத் தாண்டிச்சென்று விட்டதைக்காணின் அந்நகரத்தின் அழகுக்கு நாணி தேவலோகம் மேலே சென்றதாக நினைக்கும் வண்ணக் குளங்களில் புஷ்பங்கள் மலர்ந்து செழித்திருக்கும். ௫

அளவில் சீர்நி ரம்ப லான வான ணங்க ணெடியமால்
வளமி குந்த புவிக ளுண்ட வயிறு தேய்க்கு நவமணி
யொளிகண் மிஞ்சு பாரி சங்க ளுலவு சங்க முழுவயல்
விளைவு சாலி கதிர்கள் மாதர் விரவு நாண மானுமே.

(இ-ள்) மிகுந்த சிறப்பமைந்த கடைவீதியானது, உலகை யுண்ட மகா விஷ்ணுவின் வயிறுபோலவும், சங்குகளாலுழப்பட்ட வயல்களில் வளர்ந்த செந்நெற்கதிர் வளைந்திருப்பது நாணமுள்ள பெண்கள் தலை குனிந்திருப்பதையும் ஒக்கும். ௬

துதிக ளான சிவத லந்தொ டங்கு மேவு சுருதியோ
ர்திக மாய்வி ளங்கு சோலை யமரர் காவு நிகரெனப்
பதிக ளீபா வுமாநகை யைப்ப ழிக்கும் மேன்மை பகர்வுறும்
புதுவ ளஞ்சு ரக்கு நாடு பொன்னி நாட தென்னுமால்.

(இ-ள்) துதிக்கத்தக்க சிவாலயங்களும், வேதமோதும் விப்பிரர்களும், கற்பத்தருபோன்ற விருக்ஷங்கள் நிறைந்த சோலைகளும்; குபேரனது அளகாபுரி போன்ற நகரங்களும், மேம்பட்ட செல்வத்தால் நிரம்பியிருப்பது காவிரி சூழ்ந்த சோழ நாடாகும். எ

என்னு நாட்டி னைப்பு ரக்கு மிரவி தன்கு லத்துளான்
மன்னர் மன்ன னுண்மை தண்மை மருவு துங்க வளவனென்
றன்னு பூத லத்தி லோங்கு முறையு ராதி மகிபதி
தன்னு டைக்கு லத்தில் வந்து யர்ந்த கேள்வி தக்கவன்.

(இ-ள்) அந்த நாட்டை யாளுபவன் சூரிய குலத்தவன், உறையூரை ராஜதானியாகக்கொண்ட சோழவம்சத்தில் உதித்தவன், உண்மையும் கிருபையுமுடையவன், தொன்று தொட்டுவரும் கல்வி கேள்விகளில் நிறைந்தவன். அ

நேரி வெற்ப னென்றி சைக்கு நெறிகொள் பொன்னி நிலையுளா
னார மாலை யணிபு மார்ப னனங்க னென்னு முவமையான்
வீர வெம்பு லிப்ப தாகை விருது பெற்று மிவுளியிற்
கோர மேப ரிப்ப வாகை கொண்ட செங்கை வேலினான்.

(இ-ள்) நேரிமலையையும், பொன்னிநதியையுமுடையவன் மன்மதனுக்கு உவமை சொல்லத்தக்கவன். புலிக்கொடியையும், வேகமுள்ள கோரமென்னும் குதிரையுமுடையவன். வெற்றிமாலை சூடிய வேலாயுதத்தான். கூ

அங்க தேய முதல தான வவனி தன்னு ளுயர் குலத்
துங்க நாம மேபு னைந்த சோழ மன்ன வன்புக
ழெங்கு மேவு மனுமு றைக்க ணெறிவ ழாதி யற்கையாற்
செங்கொ லோச்சி முழும திக்கு டைக்குள் வாழ்வு சேர்ந்துளான்.

(இ-ள்) அங்கதேச முதலான தேசங்களுக்குள் உயர்ந்த பூமியில் குலோத்துங்கனெனும் பெயரையுடையவன். எங்கும் மனுநீதி தவறாது செங்கோல் செலுத்தி சந்திரவட்டக்குடைக்கீழ் நீங்காமலிருப்பவன் க௦

தெவ்வர் வாழ்வு முயிரு நீங்க செய்து பாவ லர்க்கெலாங்
கவ்வை யோட நிதிய ளித்தி லங்கு பூமி காக்குநாள்
செவ்வி பூண்ட வுடல மியாவு நலிவ தான மெலிவுசெய்
வெவ்வி னைக்கு ளாய ழுந்தும் விதியின் வாற தாயினான்.

(இ-ள்) பகைவரது உயிரையும் வாழ்வையும் ஒழித்தும், புலவர்களுக்கு வறுமை நீங்க நிதியளித்தும், பூமியை ஆளும் நாளையில் அழகிய தேகம் ...ந்து விதிவசத்தால் பெருவியாதி வந்தடைந்தது. கக

கண்பெ ருந்து முருவ மைந்த வளவன் மேனி கரைவுற
வெண்பெ ரும்பி ணித்தொ டர்ந்து மேவு காளவ் வாசனு
மெண்பு விக்கு ளடவி கண்ட திலைத டிந்தூமெழினகர்
திண்பொ ருந்து மீசர் கோயில் செய்து பூசை யாற்றுநாள்,

(இ-ள்) பார்வைக்கு அழகை யளிக்கும் தேகம் கரைந்து; வெண்குஷ்டம் படர ஆரம்பித்தது; அதனால் வருந்திய அரசன் காடுகளிலுள்ள மரங்களைக்கொணர்ந்து சிவாலயமமைத்து சிவபூஜை செய்து வரும் நாளில். ௧௨

கான வேட்ட மாடு வான்க ருத்து கந்த மைச்சரை
சேனை யோடு வருக வென்று ரைத்த வாய்மை சென்னிமீ
தான வீரர் சேனை காவ லதிபர் மேவு கரிபரித்
தானை சூழ வளவ னுந்த ரத்தி னெல்லை சாரவே.

(இ-ள்) ஒரு நாள் காட்டில் வேட்டையாட கருத்துடையவனாக அமைச்சரையழைத்து சதுரங்க சேனைகளோடு வருகவெனலும், அரசனாணையைச் சிரசாக வகித்து அனைவரும் வர வடக்கு திசையாக நடந்தனர். ௧௩

பலவ கைத்தி றத்தின் மேவு படைகொ ளாயு தங்களு
மிலகு சூலம் வாள்க ணேமி யீட்டி வேலெ டுப்பவர்
குலவை கொண்டு பறைய றைந்து கோடி கான கத்தினோர்
விலகி யோடும் மிருக மியாவும் வேட்டை யாடி மிகவுமே.

(இ-ள்) பலவகைப்பட்ட ஆயுதங்களும், சூலம், வாள் சக்கரம் முதலான ஆயுதங்களை ஏந்தியவர்கள் பறையடித்துக்கொண்டு போவதால் விலகி ஓடும் மிருகங்களை வேட்டையாடிக்கொண்டும் ௧௪

நெருங்கு கான கங்க ளைந்து நெடிய வீதி நகரமு,
மருங்கி லீச் னாலயம் வகுத்து வந்த னைப்படி
கருங்கு வித்தி றைஞ்சல் செய்து கான நாரி யென்பவ
னொருங்கு சேனை யோடு பின்னு முத்த ரத்தின் மேவினான்.

(இ-ள்) காடுகளை வெட்டி நகரமுண்டாக்கி, ஆலயம் அமைத்து வந்தனை வழிபாடு செய்துகொண்டு, கானநாரி யென்பவன் அதற்கு மேலும் வடக்கு நோக்கி வேட்டையாடிக்கொண்டு வந்தான். ௧௫

அதிரு கின்ற வோதை யோடு மடவி சூழ்ம யூரமா
நதிக டந்து வருதல் கண்டு வுடன டுங்கு கேழலொன்
றெதிரெ ழுந்த ததனை மன்ன னெய்த வாளி புதைவுறு
மதிம ருண்டு மிரியல் சென்று வஞ்சை யெல்லை நாடுமால்.

(இ-ள்) மிகுந்த சத்தத்தோடு காட்டில் ஓடுகின்ற மயூர நதியைத்தாண்டி சேனைகள் வருவதைக்கண்டு நடுங்கிய ஒரு பன்றியானது எதிர்த்துவர, அதனைக்கண்ட அரசன் ஒரு அம்புவிட மருண்ட பன்றி வஞ்சா எல்லையை யடைந்தது. ௧௬

நாடு கின்ற கேழல் தன்னை நணுகி வேட்டை ஞமலியுங்
கூடு முன்பொ தும்பு சூழல் கொண்ட மான தத்துளா
யோடு மேன பதில்வி ழுந்தொ டுங்கு றாது மேகலாற்
றேடு ஞாளி யுவ்வு ழிக்கு ளடைவு கொண்டு செல்லுமே,

(இ-ள்) வஞ்சையினெல்லையில் வரும் பன்றியின்பின் வேட்டைநாய் தொடர்ந்து ஓடி, அதைப்பிடிக்குமுன் சோலை சூழ்ந்த மானத தீர்த்தத்தில் விழுந்து ஓடிற்று. பின்சென்ற நாயும் அதில் விழுந்து விடாமல் தொடர்ந்தது. ௧௭

செல்லு கேழ லுடல மின்ன செம்பொ னாகி ஞமலியு
மொல்லை சான்றி விரியல் கண்டு கந்து கான நாரிமன்
னெல்லை நேர மைச்ச ரோடு ரைத்த வற்றின் விம்பித
மெல்லை தன்னுள் நோக்கி வந்தி சைக்க வென்றி யம்பினான்.

(இ-ள்) ஓடுகின்ற பன்றியும், பின்தொடரும் நாயும் பொன்போன்ற சரீரத்தைப்பெற்றுச்செல்வதைக்கண்ட அரசன் மந்திரியை அழைத்து, அவைகளவ்வாறான காரணத்தை விரைவில் அறிந்து கூறுமாறு கட்டளையிட்டனன். ௧௮

அமைச்ச ரேவல் கொண்டு வேட்டை யாடு வன்கி ராதர்க
ளிமைப்பி னீடு சான கங்க ளெய்தி மான தப்புன
லமைப்பு றுவந் நிலைமை கண்ட வுற்று வின்ப மாகியே
தமைப்பு ரக்கு மரசனார் தாள்ப ணிந்து சாற்றினார்.

(இ-ள்) மந்திரியின் உத்திரவுபடி வேடர்கள் காடு முழுவதும் அலைந்து திரிந்து, மானத தீர்த்தக்கரையிற் சென்று அங்குகண்ட நிலைமையால் சந்தோஷமுற்றவர்களாய் அரசன் பாதத்திற் பணிந்து தாங்கள் கண்டதைக்கூறினர். ௧௯

சாற்றல் கேட்டு ளம்ம கிழ்ந்த மைச்ச ரோடுந் தாணிபன்
தோற்றல் செய்கி ராதர் பின்தொ டர்ந்து முல்லை சூழலுள்
மாற்று யர்ந்த செம்பொ னாத மகிமை காட்டு மானதத்
தீர்த்த மீதெ னத்தெ ரிந்து திகழும் வாய்மை செப்புவான்.

(இ-ள்) அரசன் கேட்டு மகிழ்ந்தவனாக, மந்திரிகளை அழைத்துக்கொண்டு வேடர்பின் செல்ல, அவர்கள் காட்ட முல்லை வனத்துள் எல்லாவற்றினும் செம்பொன்னுக்கும் மகிமையையுடைய மானத தீர்த்தத்தைக்கண்டு கூறுவான். ௨௦

சூகரத்தொ டுந்தொ டர்ந்த ஞமலி தன்ன டிச்சுவ
டாகு மீதி வற்றுள் வீழ்ந்த ழுந்து ரும லேகலிற்
றேக மியாவு மிரணி யஞ்செ றிந்த சோதி ஞமலியும்
வாதை கொண்ட மைச்ச வெல்லை மற்று மன்ன னுரைசெய்வான்.

(இ-ள்) மந்திரிமார்களே! இது பன்றியின் அடிச்சுவடு, இது அதன்பின் சென்ற நாயினுடையது. அவைகள் இந்த தீர்த்தத்தில் விழுந்து எழுந்து ஓடினதால் தேகமுழுதும் பொன்னிறமாக மாறிவிட்டதென்பது தெரிகிறது. ௨௧

செம்மை யாகு மகிமை கொண்ட தீர்த்த மாகு முன்பவ
மம்மர் நோயின் மெலிவு ளாய்வ ருந்து கின்ற வலியுடல்
வெம்மை தீரு மிதனின் மூழ்கி னென்ன வெண்ணி வேந்தனு
மிம்மை நேரி லங்கு திண்மை யெய்து கோல மருவவே.

(இ-ள்) இது மிகுந்த மகிமை பொருந்திய தீர்த்தமாகக்காணப்படுவதால் எனக்குக் கர்மானுசாரமாக நேர்ந்த இந்த வியாதியும், இதில் மூழ்குவோமாயின் நீங்குமெனக்கருதினான். ௨௨

புலவு றைந்த புன்பொ ருது புரவ லன்ற னிருகர
மலர்வி ரித்து வதன செங்க மலம றைத்து மூழ்கினான்

நலிவு கொண்ட வுடல் மியாவு நவையி லாத விரணியப்
பொலிவு பெற்று வதன முற்ற புரைபொ ருந்து துறையுளான்.

(இ-ள்) புலால் நாற்றம் வீசும் அந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்யக் கூசி, முகத்தை மட்டில் மறைத்துக்கொண்டு மூழ்கினான் அதனால் தேகமெல்லாம் பொன்மயமாக பிரகாசிக்க, முகம் மட்டில் இகழத்தக்கவாறு முன்போலவே யிருந்தது ௨௩

திகழு கின்ற மான தத்தி லங்கு தீர்த்த தேவிமா
முகம றைத்து சோழ ராஜன் மூழ்கி னானெ னுஞ்சினத்
தகைவி னின்ற குறைசு மந்து தானை வீரர் சூழவு
மிகழ்வி னோடு திருவ ரஞ்சை யெல்லை யுற்றி ருந்தநாள்.

(இ-ள்) விளங்குகின்ற மானததீர்த்தமாகிய தேவியானவள், சோழராஜன் தனது முகத்தை மறைத்துக்கொண்டு மூழ்கினான் என்னுங்கோபத்தினால் அவ்வாறு செய்ததால், அக்குறையோடு, சேனைகள் சூழ அரசன் வாஞ்சாத்திலேயே தங்கி யிருந்தான் ௨௪

சூழ நின்ற மைச்ச ரோடு சோழன் மற்று முரைசெய்வான்
கேழல் ஞாளி யுடலி ரண்டுங் கேழ்வு செம்பொன் மருவுறத்
தாழி ருந்த முன்பு போல வதன நோய் தரிப்பதென்
னூழ முற்றி லங்கு தீர்த்த வதச யங்க ளென்றனன்.

(இ-ள்) அமைச்சர்களைப்பார்த்து சோழன், முன் பன்றியும் நாயும் மூழ்கியதால்தன் உடலிரண்டும் பொன்போலாகியதை நாம் கண்டும், எனது முக மட்டில் இவ்வாறிருக்கும் ஆச்சரியம் யாதோ வென்றனன். ௨௫

வேறு

தேசற நெருக்கும் வெய்ய தீங்குறு பிணியால் நைந்து
மாசுடை வதனத் தொன்மை வளவனுள் வருந்துங் காலை
காசிபன் முதலா யுள்ள முனிவரர் கருது கின்ற
வாசமார் பொதிகை யென்னு மலைமுனி வருதல் கண்டான்.

(இ-ள்) அழகைக் குறைக்கும் பிணியினால் வருந்தி களங்கமுடைய முகத்தோடு சோழன் வியாகூலத்துடன் இருக்கும் காலையில் காசிபர் முதலான ரிஷிகளோடு பொதிகை மலையிலிருக்கும் அகஸ்திய முனி வருவதைக் கண்டான். ௨௬

அறிவினை நடாத்துஞ் சொஞ்சொ லாக்கிய கடவு ளென்னுங்
குறுமுனி வரவு கண்டு மகிழ்வொடுங் கோழி வேந்தன்
செறிவனச் சாரல் தன்னில் திகழ்வுறு தவிசி லேற்றி
நறுமலர்த் திரள்க டூவி நற்பதம் பணிந்து வாழ்த்தி.

(இ-ள்) தமிழ்க்கடவுளெனச் சிறப்பித்துச் சொல்லப்படும் அகஸ்திய முனிவரின் வருகையைக்கண்ட சோழன் அவ்வனத்தில் அவருக்கு ஆசன மளித்து புஷ்பங்களால் பாதங்களை அர்ச்சித்து வணங்கித்துதித்து. ௨௭

மெய்யுறு பயனுட் டோய்ந்து நான்மறை விரும்புகின்ற
வையநின் கருத்தா லுன்னி யிவ்வழி யடைவு யான்முன்
செய்யுநற் றவத்தா லன்றோ வென்னுடல் சிறந்த வண்ண
மையுறு பிணியா னைந்த வாறெலா முரைத்தி யென்றான்.

(இ-ள்) உண்மையான வேதமுணர்ந்த தேவரீர் இங்குவந்தது நான்முன் சென்மங்களிற் செய்த தவமேயாகும். எனது சரீரம் இவ்வாறு துன்ப மடைய நேர்ந்த காரணம் யாது? தெரிவிக்க வேண்டுமெனக்கேட்டுக் கொண்டான். உ௯

வீரனென் றுரைக்குஞ் சென்னி விளம்பிய மாற்றங் கேட்டு
நீருறு புணரி யேழு மொருகர நெருக்கு மைய
ஞருமுற் பவத்தின் வந்த வரும்பிணி யுடல்விட் டேகிச்
சீரணி வதனத் துள்ள வாறெலாந் தெரிக்க லுற்றான்.

(இ-ள்) வீரனாகிய சோழன் கூறிய வார்த்தையைக்கேட்டு சப்தசாகரங் களையும் ஒரு கையிலடக்கும் அகஸ்திய முனிவர் முன் சென்மத்தில் செய்த பாபத்தால் பிணிவந்ததும், பின் அது நீங்கி முகத்தில் மட்டிலிருப்பதும் விவரமாகக் கூறத்தொடங்கினார். ௨௬

ஞானமா நயனந் தன்னால் நாடிய செயலோன் கூறுங்
கானகங் களையும் வேந்தே கேட்டிநீ கமலப் புத்தேள்
மானிலந் தனையுண் டாக்கிச் சராசரம் வகுத்த போதி
லானதம் மறிவாற் றான்செய் தவையனு பவிக்கு மாதோ.

(இ-ள்) அகஸ்தியர் ஞானதிருஷ்டியாற் கூறுவார். காட்டை வெட்டி ஆலயங்களமைக்குமரசனே! பிரம்மா சிருஷ்டித்த பூமியிலுள்ள ஜீவராசி கள் அவரவர்கள் அறிவுகொண்டு செய்த புண்ணிய பாவங்களை அவரவர் களே அநுபவிப்பார்கள். ௩0

என்பது முணராய் முன்ன மெய்திய தோற்றந் தன்னில்
வின்படு பறவை யூனை யருந்திய வேட னாகி
வன்புடை நெடிய கானம் மருவுற வாழும் நாளிற்
பொன்பெறு மொளிசேர் விந்த மால்வரைப் புலத்திற் சேர்ந்தாய்.

(இ-ள்) இவ்விஷயம் அறியீரோ? முன்சென்மத்தில் பறவைகளை யுண் ணும வேடனாக காட்டில் வசிக்குங்காலத்தில் பொன்போல் பிரகாசிக்கும் விந்திய மலைப்பக்கம் சேர்ந்தீர். ௩௧

அண்டந்திரி பறவை வேட்ட மாடுநா ளவற்றின் வாசத்
தடம்பொழின் மருவும் விந்த மால்வரை யிடத்தோர் சார்பி
னுடைதவ முனிக்கு ழாங்க ளுயர்கமண் டலமுஞ் செய்ய
மடிதவழ் தூசி னோடு மரவுரி கவர்ந்தாய் மன்னோ.

(இ-ள்) அங்கு பயந்தோடும் பறவைகளை வேட்டையாடிக்கொண்டிருக் கும்போது, தடாகத்தினருகிலுள்ள மலைச்சார்பில் தவஞ்செய்து கொண் டிருக்கும் மகரிஷிகளின் கமண்டலத்தையும் மரவுரியையும் எடுத்துக்கொ ண்டு சென்றீர். ௩௨

வெவ்விய வுரியோ டேக வரையுறை முனிவர் நோக்கி
வெவ்வினைப் பிணியால் நைந்து மெலிவுற சாப மீந்தார்
அவ்வுரை கேட்டே யஞ்சி யாருடல் நடுக்க முற்று
செவ்வைமா தவத்தோர் பாதஞ் சென்னிமீ திருத்தல் செய்தாய்.

(இ-ள்) முனிவர்கள் பொருளைத் திருடிச்சென்றதை யறிந்த அவர்கள் கொடிய நோயினால் வருந்தும் வண்ணம் சாப மீந்தனர். அதைக்கேட்டு உடல் நடுங்கிநீர் அவர்களது பாதத்தில் வீழ்ந்தீர். ௩௩

திருந்தில்சிந் தையினாற் செய்த தீங்கது பொறுத்தி யென்ன
பொருந்துறக் கவர்ந்த தெல்லாம் வைத்துமுன் போற்றலாலே
யருந்தவ முனிவ ரிம்மை யானபின் மறுமை தன்னிற்
பெருந்துய ரடைந்து நீங்கும் வாறது பேச லானார்.

(இ-ள்) அறிவில்லாமல் அற்ப புத்தியானாலே செய்த தீமையைப் பொறுக்க வேண்டுமென அபகரித்த பொருள்களையும் வைத்துப்பிராத்திக்க் முனிவர்கள், இந்த சன்மத்திலில்லையாயினும் மறுசன்மத்திலாவது அனுபவித்துத்தீரவேண்டுமென, அதைக்கூறுவார். ௫௪

வளவனென் றுரைக்கும் மன்னர் மரபினிற் றோற்றஞ் செய்து
களைவொடுங் கானத் தெல்லை கடவுளா லயமுஞ் செவ்வி
யுளநக ரமைத்துப் பின்னர் வேட்டையி னுகந்து மேவுந்
தளநிறை யோடு மேகி வரஞ்சையிற் சாரு நாளில்.

(இ-ள்) சோழன் வமிசத்தில் தோன்றி காடுகளைவெட்டி நகரங்களும் ஆலயங்களுமமைத்து, வேட்டையாடும் பொருட்டுச்சென்று வரஞ்சா க்ஷேத்திரத்தில் தங்கியிருக்கும் நாளையில், ௫௫

தேவர்தம் முதல்வன் செங்கை திகழ்வுற விளங்குஞ் சோதி
மூவிலைச் சூலத் தோங்கு முனையுற விளங்கு தீர்த்த
மேவிமா னதமென் றோது மிகுபுனற் படிவால் வெய்ய
தீவினைத் தொடர்பு நீங்கு மென்றனர் திறத்தின் மிக்கோர்.

(இ-ள்) தேவாதி தேவனை சிவபெருமானது சூலத்தின் முனையால் உண்டாக்கப்பட்ட மானத தீர்த்தத்தில் மூழ்கினால் வியாதி நீங்கு மென்று முனிவர்கள் கூறினர். ௫௬

கூறவை கருதி மீண்டுங் கொடுமரங் கரத்திற் றாங்கி
வீறுடை விந்தை நீங்கி வேறொரு வனத்திற் சென்றாய்
பேரொரு தடத்தி னெய்தி பெரும்பசி யுருத்த லாலே
தேறுடைக் கமலப் பூவைக் கவ்வியோ ரன்னஞ் சென்றே.

(இ-ள்) முனிவர்கள் கூறிய மொழியைக் கேட்டபின் வில்லைக்கையிற் றாங்கி விந்திய பர்வதத்தை விட்டு வேறொரு வனத்திற்போனபோது அங்குள்ள தடாகத்திலிருந்த தாமரை மலரை ஒரு அன்னப்பக்ஷியானது தனது பசியின் பொருட்டு வாயிற்கவ்விக்கொண்டு சென்றது. ௫௭

விண்ணகத் திரிய நோக்கி விற்கணைத் தொடுத்த போதின்
மண்ணகத் தெகினம் வீழ வாயுறு கமலப் பூவார்த்
தண்ணுறைத் திவலை யோடுந் தரையிலோ ரிலிங்கச் சென்னி
நண்ணிய வத்தை வீச னாரியோ டுளம கிழ்ந்தே.

(இ-ள்) ஆகாயத்திற்செல்லும் அன்னப்பக்ஷியின் மீது அம்பெய்தீர். அந்த அன்னப்பக்ஷி அம்பு பட்டு பூமியின் மீதிருந்த சிவலிங்கத்தின் மீது விழ, அதன் வாயிலிருந்த தாமரை புஷ்பமும் நீர்த்துளியும் தலையிற்பட்டதைக்கண்ட அம்பிகையோடு சுவாமி மகிழ்ந்து. ௫௮

கிராதன வுருவங் கொண்ட நின்னெதிர் கிருபை கூர்ந்து
புராதனன் விடைமே லாகிப் புகன்றவை யாதோ வென்னிற்

சராச்சரம் விளங்கு கின்ற தாரணி யிவற்றின் முன்னு
ணிராமயம் பொருந்தா நின்ற வாலயம் நிறைந்த தொன்மை.

(இ-ள்) வேடவுருவங்கொண்ட உமது எதிரில் சிவபெருமான் இடப வாகனு ரூடராய் தோன்றிக்கூறுவார்; உலகம் உண்டான நாள் தொடங்கி இங்கு ஒரு ஆலய முண்டு. ௩௯

சிதைவுற வீரா றென்னு முகாந்தநாட் சென்னி காய்ந்தே
யுதயவன் கிரணச் சாயை யுருத்துமிவ் வெளியி னின்றே
மிதயமுற் றுகந்து நேம மியற்றிடு மன்பர் நின்போற
புதுமலர் கொண்டு பூசை புரிந்தவ ரில்லை யாமால்.

(இ-ள்) ஆலயம் அழிந்து போக, பன்னிரெண்டு யுகாந்த காலமாக சூரிய கிரணத்தின் உஷ்ணத்தில் இந்த வெளியிலிருக்கிறோம். இதுவரை உன் போல் அன்பாகப் புதுமலர்கொண்டு பூசித்தவர்களில்லை. ௪0

இன்றெமக் கியல்பு செய்தா யாதலா லெளிமை யாரும்
புன்றொழி லுருவ நீங்கிப் புவியிடை வளவ னாகி
வென்றிகொண் டிருத்தி யென்ன விமலன்முன் னுரைத்த லாலே
குன்றெனப் பொலிந்த தோளா யரசிடைக் குறிப்பி னின்றாய்.

(இ-ள்) இன்று எமக்கு பூசித்தாயாகையால் உனது இழிவான வேட உருவம் நீங்கி சோழ மன்னனாகுக. என சிவபிரான் கூறியுள்ள படியால் அதன்படியே நீர் அரசனானீர். ௪௧

கொற்றவ னாகி மெய்யுட் குறைவுநேர் முனிவர் சாப
முற்றுறி லான வாறு மிவ்வன முயர்ந்த பண்பு
பெற்றமா னதத்தின் மூழ்கிப் பெரும்பிணி யதனை நீங்கில்
கற்றிரள் தோளாய் நின்றன் கரமலர் புதைத்த தன்றே.

(இ-ள்) சோழனாகிய உமக்கு முனிவரிட்ட சாபப்படி வியாதி நேர்ந்து மகிமை பொருந்திய மானத தீர்த்தத்தில் மூழ்கியும், கையினால் முகத்தை மூடிக்கொண்டமையால் முகத்தில் மாத்திரம் வியாதி நீங்காமலிருக்கிறது.

நாவெழு மறையோர் தம்மால் விதிவழி முறையி னண்ணி
மாவிரைந் துலவுங் காலை வருகதிர் மலர்த்துங் கஞ்சப்
பூவுறை வாச மேவு மானதப் புனலுட் டோயிற்
றீவினை யகன்று மேனி தேசுறத் திகழ்வ தாமால்.

(இ-ள்) வேதம் வல்ல வேதியர்களால் ஒழுங்குபடி கிரியைசெய்து, சூரியன் உதிக்கும் சமயத்தில் மானததீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வீராகில் உமது துன்பமெல்லாம் பறந்தோடுவது மன்றி தேக முழுதும் அழகு பெற விளங்கும். ௪௩

ஆன்விப் புனிதத் தெல்லை யாதிநற் கயிலை யீசன்
றேனுறு மொழியா ளோடு மிவ்வழி சிறப்புற் றோன்று
மானத தீர்த்த மென்னு மருங்குவெண் முல்லை சூழ்ந்த
கானக மிலங்கு தொன்மை கடிநகர் வரஞ்சை மூதூர்.

(இ-ள்) இந்த பரிசுத்தமான இடத்தில் பரமசிவன் பார்வதியோடு எழுந்தருளி யிருக்கிறார். மானத தீர்த்தமும், அதன் பக்கத்தில் முல்லைவனஞ்

சூழ்ந்த வாசனையுள்ளதுமான நகரம் திருவாஞ்சாமென்னும் புராதன நகரமாகும். ௪௪

திசைகளின் மகிமை பூண்ட சிவஸ்தலங் களுக்கு மேலா
மிசைபெறு நதியுண் டென்னிற் கோமுகி யினிமை சால
நசையுடை தீர்த்தந் தன்னின் மானத நவைக டீர்க்கும்
பசுவுறு பாச மாற்றும் பதிவளர் தலமி தாமால்.

(இ-ள்) அஷ்ட திசைகளிலும் உள்ள சிவஸ்தலங்களுக்கெல்லாம் மேலான புகழுடைய நதி கோமுகி நதியாகும். குற்றங்களை நிவர்த்திக் கும் தீர்த்தம் மானத தீர்த்தமாகும். ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கி மோட்ச வீடளிப்பது பசுபதிநாதர் வளரும் திருவாஞ்சை தலமாகும். ௪௫

நேரிவை யறிந்து சூழ னிலைபெறுங் கொடிய கானம்
வேரறக் களைந்து மீச னாலயம் வியப்புறத் துக்க
காருறை மதிளார் மண்டங் கடிநக ரமைத்துங் கங்கைச்
சீருற முடித்தான் பூசை செய்தடி பணிந்த பின்னர்.

(இ-ள்) இதை யறிந்து சூழ்ந்துள்ள காடுகளை வெட்டி, கடவுளாலயமும், மதில் சூழ்ந்த நகரமுமமைத்து கங்கை முடித்த சிவபெருமானுக்குப் பூசை செய்து வணங்கின பிறகு. ௪௬

இன்னல்கொண் டுழலா வண்ண மினிமைபூண் டிலங்கு நன்னீர்
பொன்னிநா டதனை யாண்டு புகழ்வளம் பெறுதி யென்ன
சொன்னமா தவனு மீசன் றாளையடி வணங்கித் தேசார்
மின்னொளி விரிக்கும் விஞ்சை விந்தைமால் வரையைச் சார்ந்தான்.

(இ-ள்) துன்பத்தில் வருந்தாமல் காவிரி சூழ்ந்த சோழநாட்டையாண்டு பகழடைவாயென்று அகஸ்திய முனிவர் ஆசீர்வதித்து விட்டு, முனிவர் புடைசூழ வாஞ்சை நாதனை வணங்கித்துதித்த பிறகு விந்திய பர்வத மடைந்தனர். ௪௭

மகத்துவம் பொருந்தா நின்ற வாஞ்சையி னாதி யாவு
மகத்திய னுரைத்த மாற்ற மறிவுடை வளவன் கேட்டுச்
செகத்தினி லுயர்ந்த கேள்வித் திறலுடை மறையோர் தம்மாற்
சுகத்துறு நியமய முற்றிச் சுருதியா கமங்கள் செய்தான்.

(இ-ள்) மகத்துவம் பொருந்திய திருவாஞ்சை க்ஷேத்திரத்தின் பழைய சரித்திரங்களை அகத்திய முனிவர் கூறக்கேட்ட சோழன், வேதமுணர்ந்த பிராமணர்களைக்கொண்டு ஆகம விதிப்படி நியம நிஷ்டைகளை முடித்துக் கொண்டு. ௪௮

அற்புத மருவா நின்ற வரியமா னதத்திற் றோய்ந்து
முற்பவத் துறவு பூண்ட முதுக்குறைப் பிணிக ணீங்கிக்
கற்பகக் கரத்தி னோனவே லரசனுங் களிப்பி னோர்ந்து
பொற்பெழு முருவந் தாங்கி புனிதமுற் றிருந்த பின்னர்.

(இ-ள்) அற்புத மாகிய மானத தீர்த்தத்தில் மூழ்கி, சன்மாந்திர கன்மத் தாலுண்டாகிய வியாதியானது நீங்க, கற்பகம்போல் கொடுக்கும் அரசன் மகிழ்ந்து அழகிய சரீரத்தோடு சுகமுற்றிருக்கையில். ௪௯

மாக்கட லுடுத்த வைய மருவுறு தீர்த்தங் கானி
லாக்கிய தலத்தும் நம்மி லணுகிய பிணியின் வாதை
போக்கில விவற்று ளாரும் புண்ணிய தீர்த்தந் தன்னாற்
பாக்கியம் பலித்த தென்ன பசுபதி மருங்கிற் சார்ந்தான்.

(இ-ள்) கடல் சூழ்ந்த உலகிலும் காட்டிலுமுள்ள தீர்த்தங்களில் நீராடினும் ஒன்றினாலும் நமது பிணி நீங்க வில்லை. புண்ணிய தீர்த்தமாகிய இதனாலல்லவோ நமது துன்பம் நிவர்த்தியாயிற்றென்று பசுபதி நாதரிடம் சேர்ந்தான். ௫௰

வெள்ளிவே தண்டத் தீச னுமையொடு விருப்புற் றென்ன
கள்ளவிழ் படர்ச்சி முல்லை கடிமலர் கானந் தன்னுள்
வள்ளலற் புதத்தின் மேவு வரஞ்சையு ளாதி தன்னை
யுள்ளமார் மகிழ்ச்சி யோடு நோக்கின னுரையூ ருள்ளான்.

(இ-ள்) வெள்ளி மலையில் இருப்பதுபோல் தேனொழுகும்படி படர்ந்து வாசனை வீசும் முல்லை வனம் சூழ்ந்த திருவரஞ்சையில் அம்பிகையோடு மனமகிழ்ந்திருக்கும் அற்புதத்தை உரையூரின் ஆளும் சோழன் கண்டான்.

குறிப்பொடு வலமாய்ச் செங்கை குவித்தடி வணங்கி யேத்தி
நறைப்புது மலரின் காவு நணுகிய வளமும் பாங்கு
நிறைப்புனற் றவழா நின்ற கோமுகி நெறியு மோர்ந்து
சிறப்பினை வளர்ப்பா னெண்ணி நினைத்தனன் சென்னி வேந்தன்.

(இ-ள்) மிகுந்த பக்தியோடு பிரதக்ஷணஞ்செய்து துதித்து, வாசனையுடைய மலர்கள் நிறைந்த சோலையும், நீர் நிறைந்த கோமுகி நதியின் அழகையுங்கண்டு அதன் அழகை அதிகமாக்க நினைத்தான். ௫௨

புகழ்ந்தவத் தீர்த்தந் தன்னாற் புரையுடன் முழுதும் பொற்பு
மிகுந்தவா றவைச பாலி விளம்பிய காதை தன்னை
தகைந்தநே ரறிவு ளாய சவுனகா தியர்க டம்மி
னுகந்துயர் தவத்தா னென்னுஞ் சூதமா முனியு ரைத்தான்.

(இ-ள்) புகழ்தற்குரிய அந்த தீர்த்தத்தால் குற்றமுள்ள சரீரம் அழகு பெற்று விளங்கிய சரிதத்தைச் சாபாலிமுனி கூறியபடி சவுனகாதியர்கட்கு சூதமாமுனிவர் அருளிச்செய்தனர். ௫௩

தீர்த்தச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௰-க்குத் திருவிருத்தங்கள் ௫௱௩.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# திருநகரச் சருக்கம்.

வேறு

மாசகற்றுந் தூய மானதநீ ராடியுடற்
றேசுளநற் காதை செப்புமுயர் சாபாலி
பூசுரன்றன் பாதம் போற்றும்பிரட் சேனனுளத்
தாசையொடு நகர மானவள மோதென்றான்.

(இ-ள்) குற்றங்களை நீக்கும் பரிசுத்தமான மானத தீர்த்தத்தில் நீராடி திருமேனி யழகுற்ற கதையைக்கூறிய சாபாலி முனிவரை வணங்கி பிரட்சேன மகாராஜன் நகரமுண்டான விதத்தைக்கூறும் வண்ணம் கேட்டான்.

எத்திசைக்கும் போற்று மிசைபொருந்து வேளனையான்
தத்திச் சொரியு மருவிமலைச் சார்பினெறிப்
பத்தியுடன் வினவும் பார்வேந்தன் கண்களிக்க
சித்திக்குஞ் சித்தி தெரிக்குமுனி கூறுவனால்

(இ-ள்) எல்லா திசைகளும் புகழும் மன்மதனுக்குச் சமானமானவன் மேகம் பொழியும் மலைச்சாலிலிருந்து பக்தியுடன் கேட்கும் அரசன் களிக்க சாபாலி முனிகூறுவார். ௨

புயங்கம் பருகி யுமிழ்மதியம் போல்வதனந்
தயங்கும் வளவ னமைச்சர் தமைநோக்கி
கயங்கிருடி வாழுங் கானங் களைந்திடுதற்
கியங்குபணி மாக்க டமைக்கொணர்மி னென்றிசைத்தான்.

(இ-ள்) இராகு உண்டு உமிழ்ந்த சந்திரன் போன்ற முகத்தையுடைய சோழன் யானை, பன்றி முதலியவைகள் வாழுங்காட்டை வெட்டுதற்கு ஆள்களைக்கொண்டுவரும்படி மந்திரிகட்குக் கட்டளை யிட்டான். ௩

வேந்தன் மொழிகண்ட விறலமைச்ச ரோரிமைப்பி
னேந்து படையோ ரெதிர்வணங்கும் வரவுரைப்பச்
சேர்ந்த கொடுங்கானஞ் சிதைவுபட வோர்களைந்து
பூந்தருக்கள் மேவும் புதுவளமை யாக்கென்றான்.

(இ-ள்) அரசனுடைய உத்திரவு பெற்ற மந்திரிகள் க்ஷணப்பொழுதில் அவர்கள் வந்து வணங்குவதை அறிவிக்க, அரசன் நெருங்கியுள்ள காடுகளை வெட்டி பூங்காவனமாக்குங்கனெனக் கட்டளை யிட்டனன். ௪

மணத்தில்திகழ் நன்னூல் வளமுறைமை சிறப்பநெறி
யினத்தபதி மெக்க டமையழைத்து மிவ்வுழியார்
தனத்தாகை யென்ன வெழிமபதியுஞ் சங்கரர்க்குக்
கனத்தமணி மண்டபத் திருக்கோயிற் கட்டுகென்றான்.

(இ-ள்) நல்ல சாஸ்திரங்களை யறிந்த சிற்ப சாஸ்திரிகளை யழைத்து இவிடத்தில் குபேரனுடைய அளகாபுரிக்குச் சமமான ஒரு நகரமும், சிவ பெருமானுக்கு ஒரு ஆலயமும் கட்டுமாறு உத்திரவிட்டான் ௫

தொல்லார்ந்த பொன்னித் துறைநாடன் சொற்படியே
நல்லாக மத்தி னுயர்ந்தநிதி நாண்மருவு
கல்லா லுயர்ந்த கனத்தமணி மண்டபமொடுஞ்
சொல்லார் வலமாம் பிரகாரம் மூன்றுசெய்தே.

(இ-ள்) சோழன் உத்திரவின்படியே ஆகமப் பிரகாரம் நல்ல திதி வார நக்ஷத்திரத்தில் முகூர்த்தம் செய்து பெரிய மண்டபமும் மூன்று பிரகாரமும் கட்டி முடித்து ௬

செங்கனகக் கும்பச் சிகரமிகு மண்டபமும்
சங்கரனும் வெண்ணீ றணியுமையுந் தான்மகிழ
வெங்கு நிறைத்தூ ணொழும்புதிய வாலயத்திற்
பொங்குமொளி தீபம் பொற்புநிறை மேன்மாடம்.

(இ-ள்) தங்கக்கலசம் வைத்த மண்டபமும், சங்கரனும், நீறணி யம்பிகை யும் மகிழ வரிசையான தூண்கள் நிறைந்த புதிய ஆலயமும் அதற்கு ரத்தின தீபங்கள் வைக்கும் மேல்மாடமும். ௭

தந்திமுகன் கந்தன் தமக்குரிய தாயிலங்குஞ்
சிந்தையுறச் சூழுந் தேவதைக ளாலயமும்
உந்து பரித்தா ளுற்றநெடு மால்தனக்குக்
கந்தமுறு மண்டந் திகழ்வுபெறக் காட்டினார்.

(இ-ள்- யானைமுகன், கந்தன் முதலிய பரிவார தேவதைகளுக்கு ஆலய மும், குதிரைப்பாதமுடைய விஷ்ணு ஆலயமும், மண்டபமும அழகாகக் கட்டினார். ௮

ஆலயமு நேரா யமைத்துமதிட் கோபுரமும்
மேலரிய செம்பொன் விளங்கியிடு மாறிழைத்துச்
சீலமுறு மக்கள் செழித்துமறை யார்வமெழுங்
கோலநெடு வீதிப் புரிவளமை கூறுவாம்.

(இ-ள்) சிகர மண்டப ஆலயம், மதிள், கோபுரம் முதலியவைகளைப் பொன்போற் பிரகாசிக்கும்படி அமைத்தார். ஆசாரமுடைய அந்தணர் வேதமோதும் அழகிய வீதியின் அழகைக் கூறுவோம். ௯

வேறு

விரித்தெழு மூர்தர ணுயர்ந்தவா னிமிர்ந்ததின் மிகுதி
நிறைத்த பன்மணி மாடமா ளிகைநெருக் கார்ந்து
பொருத்த நூல்விதி நெறிவழாப் புரநெடு வீதி
கருத்தி னேருறச் சமைத்தனன் கடிகொண்மா நகரம்.

(இ-ள்) விரிவான அரண்மதிள் ஆகாயத்தை யளாவி யிருந்தது. அத னுள் நவரத்தினங்கள் பதித்த மாடமாளிகைகள் நெருங்கி நூல்முறை தவ றாது அமைத்த ஒழுங்கான வீதிகள் மனதிற்கு ஒழுங்காகத் தோற்றும் வண்ணம் நகரத்தை அமைத்தனர். ௧0

விளங்கு நான்மறை யந்தணர் மிருமனை யொருசார்
வளங்கொண் மாமுடி மன்னவர் மாளிகை யொருசார்
களங்கு றுதசிர் வைஸ்யர்தங் கடிமனை யொருசார்
தளர்வி லாதநற் சூத்திரர் தழைமனை யொருசார்

(இ-ள்) நான்கு வேதமும் விளங்கும் வேதியர் வீதி ஒரு புறமும், வளப்பம் பொருந்திய அரசா வீதி ஒரு புறமும், களங்கமற்ற வைசியர் வீதி ஒரு புறமுமிருந்தது. கக

பலவி தத்தொழின் மக்கடன் னுயர்மனை பரப்புந்
தலைமை யாகிய பதிகளி லுயர்வெனச் சாற்று
மிலகு மாவண மாநெடு வீதியுண் மறுகுந்
தொலைவி லாவளங் காட்டிய தூநக ராமால்.

(இ-ள்) பலவகைத்தொழில் செய்பவர் வீடுகளும் நெருங்கி பெரிய நகரங்களிலும் சிறந்ததென்க்கூறும் வண்ணம் கடைவீதிகளும் சிறுவீதிகளும நிறைந்தது பரிசுத்தமான நகரம் க௨

திருமடந்தைவாழ் வளநகர் மருங்கெலாஞ் சிறந்த
விரைமலர்த்தடஞ் சூழ்ந்திடும் பூம்பொழில் விரிந்து
மருவ ரம்பையுந் தேங்கொடு பூகமும் வளர்ந்து
முருகு விம்முதண் பனசமுஞ் சூதமு முயங்கும்.

(இ-ள்) இலக்ஷுமி வாழும் நகர்ப்புறங்களில் தாமரை தடாகங்கள் பூஞ்சோலைகள், வாழை மரங்கள், தென்னை மரங்கள், பாக்கு மரங்கள், தேன் நிறைந்த பலாமரங்கள், மாமரங்கள் முதலியவைகள் நெருங்கி விளங்கும். க௩

தேனு திப்பெருக் கிருகரை தவழ்ந்துசே தரம்பைக்
கானி டத்தினு மருதநன் னிலத்தினுங் கழனிப்
பூனி றைத்தடம் பொழிலெலாம் புதுப்புனற் பரவி
மானி லத்தினுக் குயர்ந்ததா கியவள மருவும்.

(இ-ள்) கோமுக நதியில் இருகரையும் பெருகி ஓடும் நீர்; செவ்வாழை மரங்கள், வயல் காடுகள், பூஞ்சோலைகள், தாமரை தாடாகங்கள் முதலிய விடங்களில் பரவி, உலகிற் சிறந்ததாகிய வளப்பமளித்தது. க௪

பூட்டு மேருடை மள்ளர்முன் பொருந்துவெண் சங்கங்
காட்டு ழுந்திறற் கம்பலை வளர்ந்தெழு செந்நெற்
கூட்ட முற்றநற் கன்னலென் றிசைவுறுங் குறிகொண்
டீட்ட மெய்திய கடைசியர் களைகழுந் திடுவார்.

(இ-ள்) ஏர்பூட்டி உழும் உழவர்களுக்குமுன், வயல்களில் சங்குகள் உழுததினால் வளர்ந்த செந்நெற் பயிர்களைக்கண்டு கரும்பென நினைத்து உழத்தியர் களைபறித்திடுவார்கள். க௫

பூவின் வண்டினம் புனலுறும் புட்குலந் தேமா
காவி னிற்செழுங் குயிற்குலங் கடைசியர் கழனி
மேவு தண்புறந் தேனிரைக் கானெலாம் விழைந்து
தாவு மாமயிற் றடந்தொறு மோதிமந் தயங்கும்

(இ-ள்) புஷ்பங்களில் வண்டுக்கூட்டங்களும், தடாகங்களில் பக்ஷிக ளும், மாமரங்களில் குயில்களும், கழனிகளில் உழத்தியர்களும், வெளிப்புறங் களில் பசுக்கூட்டங்களும், காடுகளில் மயில்களும், தடாகங்களில் அன்னப் பக்ஷிகளும் சந்தோஷத்தோடு தங்கியிருக்கும். கசு

களைக டிந்தெழு கடைசியர் கண்ணிணைக் கருதி
யளிபி னங்கணீ லோற்பல மென்றலம் வருஞ்செ
யுளவன் றொண்டைநா டுறபதி தன்னிலு முயர்ந்த
வளம தாமெனு வுயர்வுறும் வரஞ்சைமா நகரம்.

(இ-ள்) கழனிகளில் களைபறிக்கும் பெண்களின் கண்களை வண்டுக்கூட் டங்கள் நீலோற்பலமென நினைத்து சுழன்று வரும் வயல்கள் நிரம்பி, தொண்டை மண்டலத்திலும் உயர்ந்து விளங்குவது திருவரஞ்சரமாகிய நகரம். கஎ

சிறப்பு லாவிய நகரமுஞ் சினகரக் குணபாற்
குறிப்பி னுற்றட மானதங் குலவுகற் படிகண்
நிறைப்பு றுவள நிறைவுறு தீர்த்தமண் டபங்க
ளுறுப்பு வாய்ந்தெழு நிலமகட் குரிமைசெய் தெனவே.

(இ-ள்) அழகிய நகரமும், ஆலயமும், அதற்குக்கிழக்கில் மானஸ தீர்த்தப் படித்துறையும், நிறைந்த வளமுடைய தீர்த்த மண்டபங்களும் நிறைந்திரு ப்பது அழகிய நிலமகட்கு மணக்கோலஞ்செய்தது போலிருந்தது. கஅ

சிகர கோபுர வாலயந் திகழ்வுறத் திருத்தி
மகர தோரண மணிமறு கெங்கணும் வயங்க
முகிலு லாவெழு மாடமா ளிகைநகர் முழுது
நகவி லாசமோ டலங்கரித் தரசன்முன் நவின்றார்.

(இ-ள்) கலசங்கள் நிறைந்த கோபுர முதலாகிய ஆலயத்தை அழகாக அமைத்து, மகர தோரண முடைய வீதிகளையும், மேகந்தவழும் மாளிகை களையும் அழகாக அலங்கரித்து, ஸ்தபதிகள் அரசனுக்கு அறிவித்தனர். கக

மிகுந்த செய்கையா ரந்நகர் கண்டெழில் வேந்தன்
தகுந்த மாமறை தெரிந்திடு வேதியர் தம்மிற்
சுகந்த வாசநன் மலரொடு புனிதநீர் தொடங்கி
யுகந்து மீசனைப் பூசனை புரிகென வுரைத்தே.

(இ-ள்) மிகுந்த அழகுடைய அந்நகரைக்கண்ட அரசன் வேதியர்களை அழைத்து மணமுடைய மலர்களாலும் பரிசுத்தமான நீராலும் வரஞ்சை நாதனைப் பூசிக்குமாறு கட்டளையிட்டனன். உ0

சகங்கொண் மாமறை தவறின்மா தவத்தவர் தம்மான்
மகங்க ளாற்றியு மன்னதா னமுமிக வழங்கி
யகங்கு ழைந்தபே ரன்பினு லரசனிக் கலியி
னுகங்க ளிற்றிரு வரஞ்சையி லிறைவனுக் குகந்தே.

(இ-ள்) உலகில் தவறில்லாத வேத முணர்ந்த வேதியரை யழைத்து யாகம் புரிந்தும், அன்னதானஞ் செய்தும், அரசன் மனங்கசிந்த பேரன்பி னல் கலியுகத்தில் திருவரஞ்சை நாதனுக்கு. உக

இச்சை யாகிய திருவிழா வியற்றுதற் கெண்ணி
யுச்ச வாதியாந் தேவதை யுருவுற விழைக்குந்
தச்ச ராதியர் தம்மொடு நுவல்தரச் சமைத்தார்
மெச்சு மாலய னறியொணு விமலன்மெய் யுருவம்.

(இ-ள்) அன்புடன் திருவிழா செய்வதற்கு நினைத்து, உற்சவ மூர்த்திகளையியற்றும் சிற்பிகளிடம் கூற அவர்கள் பிரம்ம விஷ்ணுக்களா லறியவொண்ணுத தேவதேவன் உருவத்தை யமைத்தனர். உஉ

இயற்று கின்றநற் றேவதைக் கினிமையிற் சாந்தி
செயத்த குந்திக ழாகமா தியின்படி செய்து
நயத்தெ ழும்பல வாகனத் திரள்களி நனுகா
வுயர்த்தி மாநகர் வலம்வரக் கண்டுபின் னுரவோன்.

(இ-ள்) இயற்றிய உற்சவ மூர்த்திகளுக்குச் சாந்தி, சமாராதனை,யாகாதிகர்ம முதலியதுஞ் செய்வித்து, ஆகம விதிப்படி பல வாகனங்கள் செய்து அதில் தேவதைகளை எழுந்தருளச்செய்து வீதிவலம் வந்தபின் அரசன். உ௩

கடிகொள் சந்தனக் கலவைமெய் கமழ்வொடு மெகின
நடையை வாட்டிய வியல்புடைக் கணிகையோர் நடிப்ப
விடிமு ழக்கென முழங்கொலி யெழுந்திரு போதும்
படருகின்றது பசுபதி பரிவுறுங் கோயில்.

(இ-ள்) மணங்கமழும் கலவைச்சாந்தணிந்து அன்னமென்ன நடக்கும் தேவதாசிகளைக்கொண்டு ஆடல் செய்வித்தும், நால்வகை வாத்தியங்களும் இடிமுழக்கம்போல் இருவேளையும் சப்தித்துக்கொண்டிருந்தது பசுபதி நாதராலயத்தில். உச

பங்கு னித்திகழ் திங்களிற் சுக்கில பக்கந்
தங்கு மேதகு பரணிநாள் வாஸ்துசா ந்தியுமா
யிங்கி தம்பெறு கார்த்திகை யிலங்கிய தினத்தில்
அங்கு ரார்ப்பண முதலிய சாங்கிய மாற்றி.

(இ-ள்) பங்குனி மாதம் சுக்கில பக்ஷம் பரணியில் வாஸ்துசாந்தியும், கிருத்திகையில் அங்குரார்ப்பண முதலிய சடங்குகளும் செய்து. உ௫

தக்க தாயசித் தாந்தமா மந்திரந் தனையுற்
றெக்க ரோகிணி நாளதிற் றுவசவா ரோண
மிக்க தாகிய காமிகா கமங்களின் வேள்வித்
திக்கு நாலிரண் டடைவுற வாகுதி செய்தார்.

(இ-ள்) சித்தாந்த மந்திரத்தை ஒதி உரோகிணி நக்ஷத்திரத்தில் துவஜாரோகணஞ்செய்து, காமிகாகமவிதிப்படி யாகமியற்றி அஷ்டபந்தனஞ் செய்தனர். உ௬

வேறு

காலமூன் றினுமரன் களிப்ப தாகிய
சீலமார் பூசனை திரணை வேத்தியம்
மாலுற வனிதையர் நடிப்ப வீதிவாய்
கோலமா நகர் வலங் குலாவக் காட்டியே.

(இ-ள்) காலை, பகல், மாலை யென்னும் மூன்று காலங்களிலும் ஒழுக்கத்துடன் நைவேத்தியம் புரிந்து, அன்புடன் நடனமாதர் நாட்டியஞ்செய்ய ஊர்வலம் வந்து. உஎ

காட்டுநா விருதினங் கலந்த பூரநாள்
நாட்டுமைங் கரன்குகன் சிவனை நாரியை
பூட்டுகாற் றேர்மிசைப் பொருந்தச் செய்துபின்
னீட்டுமுத் தரத்திசை யோர்நெ ருங்கவே.

(இ-ள்) இவ்வாறு ஏட்டு தினங்கள் வீதிவலம் வந்து பூர நக்ஷத்திரத்தில் விநாயகர், குமாரதேவர், பரசிவம், அம்பிகை முதலானவர்களை ரதத்தில் எழுந்தருளச்செய்து, உத்திர நக்ஷத்திரத்தில் அஷ்டதிசையோரும் புடைசூழ. உஅ

பேரிகை முழங்கொலி பிறங்கு மத்தளந்
தாரைசின் னங்களார் தவண்டை மல்லரி
பாரதிர் சங்கொலி பஞ்ச வாத்தியம்
வாரிசூ ழொலியினை மறைக்கு மென்னவே.

(இ-ள்) பேரிகை சப்தமும், மத்தளம், தாரை சின்னங்கள், தவண்டை மல்லரி, சங்கு முதலிய பஞ்ச வாத்தியங்கள் சமுத்திரம்போல் ஆரவாரித்தன. உகூ

ஓவியஞ் சிறப்பெழு முயர்ந்த மாடநீள்
மேவிய வீதிவாய் விளங்கு தேரினைக்
காவிரி நாடனுட் களிந்த சிந்தையா
னாவிரி பறையொடு நடாத்தி னனரோ.

(இ-ள்) சித்திரங்கள் அழகாக விளங்கும் மாளிகைகள் நிறைந்த வீதியில் ரதத்தை காவிரிநாடன் உள்ளன்புடன் வேதவொலி முழங்கத்தேரை நடத்தினன். கூ0

நடத்திய திருவிழா நாளி லம்புய
மடற்றிகழ் மலரயன் மாய னிந்திர
னிட்டத்துறை யமரரெண் டிசைகொள் பாலர்வா
னடுத்தவ வசுக்கள்வந் தனுகி வாழ்த்தினர்.

(இ-ள்) திருவிழா இவ்வாறு சிறப்பாக நடந்த நாளில் பிரம்மா, விஷ்ணு, திக்குபாலகர், அஷ்ட வசுக்கள் முதலியோர் வந்து வணங்கித்துதித்தனர்.

இறைஞ்சிய பிரமன்மா லிந்தி ராதிமுன்
றிறஞ்செயு நதிச்சடா மவுலி செப்புவார்
புறம்படு தலத்துளெம் பொருந்த லாயினும்
அறந்திகழ் வாஞ்சையி லினிமை யாதலால்.

(இ-ள்) வணங்கிய தேவதைகளைப்பார்த்து சிவன் கூறுவார். அநேக தலங்களில் நாம் வாசஞ்செய்யினும் தர்மம் விளங்கும் இந்த திருவரஞ்சரமே எமக்கு இனிமை யளிப்பது ஆகையால். கூஉ

இத்தலத் தடைந்தெமை யிறைஞ்சு வோர்க்கெலாங்
கைத்தலக் கனியெனக் காட்சி காட்டுவோம்

மெய்த்திற விதுவென விளம்பக் கண்டுளோர்
பத்தியின் விழாதொறும் பரவி நண்ணுவார்.

(இ-ள்) இந்த தலத்தில்வந்து எம்மை வணங்குவோர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனியென உடனே காட்சியளிப்போம் எனக்கூறியதை யறிந்த தேவாதிகளெல்லாம் திருவிழாதோறும் பத்தியோடு வந்து வணங்குவாராயினர். ௩௩

நண்ணிய கடவுளர் நடந்த பின்னரவ்
வண்ணமுற் றுயர்ந்தசீர் வளவன் மாமறை
யுண்ணெறி வழாதிற லுத்தி ரத்தினுட்
புண்ணிய விதிமுறை பொருந்தல் செய்துளான்.

(இ-ள்) தேவதைகள் அவரவர் சாயலில் அடைந்த பின் அழகிய சோழ ராஜன் வேதவிதி தவறாமல் உத்திர தினத்தில் தான் தருமங்கள் செய்தான்.

தூயமா னதப்புனல் தோய்ந்து தொன்மைமே
லாயகோ முகிநதி யதனி லியாவருந்
தீயவை யகன்றிட தீர்த்த நல்கிநன்
னேயமுற் றாலயம் நிமல னண்ணினார்.

(இ-ள்) பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து புராதனகால முதல் மேன்மையுற்ற கோமுகி தீர்த்தத்தில் யாவரும் தீர்த்தப் பிரசாதம் பெற்றுக்கொண்டு, துன்பங்களை நீக்க வரப்பிரசாத மளித்த சிவபிரானும் மனமகிழ்ந்து ஆலயஞ்சென்று வீற்றிருந்தனர். ௩௫

காரதி ரொலியெனக் கரங்கு மாமறை
யேருறு துவசமு மிறக்கி யாகமம்
ஆருறு கணங்களும் புலவ ராதியர்
சீருறு வாழிமங் கலமுஞ் செப்பினார்.

(இ-ள்) மேகம் கர்ச்சிப்பதுபோல் வேதகோஷ்டம் முழங்க துவசமிறக்கி ஆகமாதியான தணங்களும் தேவர்களும் திருவாழி திருமங்களம் பாடினார்கள். ௩௬

கானரிந் திடுபெயர் கான நாரிமன்
தானமுந் தருமமும் பெருகத் தந்துமுன்
தேனுபூ வரஞ்சையின் றேவைப் போற்றிபின்
மானதி பொன்னிநா டணுகி வாழ்ந்தனன்.

(இ-ள்) காடுகளை வெட்டி நகரமாக்குவோனாகிய கானநாரி யென்னும் குலோத்துங்க சோழன் ஏராளமான தான தருமங்கள் செய்து, காமதேனு பூசித்த வரஞ்சை நாதனைத்துதித்து காவிரி சூழ்ந்த தனது நாட்டை யணுகி வாழ்ந்திருந்தனன். ௩௭

அடவிகொய் தெழில்வரஞ் சையுட்சி வாலயத்
தடமதி லியற்றிய சரித மாதவ
முடையவ னுறைத்ததென் றுயர்ந்த சூதநற்
றிடமிகு சவுனகா தியர்க்குச் செப்பினன்.

(இ-ள்) கானகங்களைக் களைந்து அழகுடைய வரஞ்சை மாநகரமும், சிவாலயமும், உண்டுபண்ணிய சரித்தத்தைச் சாபாலி முனிவர் கூறியதனை சூதமாமுனிவர் சௌனகாதியருக்குத் திருவுளம் பற்றினர். ௯அ

திருநகரச் சருக்கம் முற்றுப்பெற்றது.

**சருக்கம் கக—க்குத் திருவிருத்தங்கள் ௫சக.**

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# கோமுகி தீர்த்தச் சருக்கம்.

வேறு

சிகர மணிமண் டபங்கோயிற் செழிக்கும் பொழில்சூழ் திருவரஞ்சை, நகரப் புதுமை தனையறிந்த நகுமா முடிபன் னடிவணங்கிப், புகலுந் தலத்தி னியல்போடும் புகழ்மா நதியின் விளங்குநெறி மகிமை தெரிய உரைத்தியென மகிழ்வான் முனிவன் வகுப்பானல்.

(இ-ள்) ஸ்தூபி, மண்டபம் நிறைந்தகோயிலும், பூஞ்சோலை சூழ்ந்த திருவரஞ்சை நகரத்தின் புதுமையையும் அறிந்துகொண்ட பிரகாசயான முடியுடைய அரசன் வணங்கி, கோமுகி நதியின் மகிமையைத் தெரிவிக்க வேண்டுமெனக்கேட்க, சாபாலி முனிவர் மகிழ்ந்து கூறுவார். க

செழுமா விதழிச் சடையண்ணற் றிலக நுதனீ றணியினொடும், குழைவார்ந திலங்கும் வரஞ்சைதனிற் கோதி லருளாற் குலவுஞ்செயல, வழுவா துரைக்கிற் சதவருடம் வகுத்து முடியா மகிமைதனை, யெழுநா வதனாற் சிலவறிந்த திசைப்பனிதய முறக்கேண்மோ.

(இ-ள்) செழித்த கொன்றை யணிந்த பசுபதி நாதர் நீறணி யுமையவளோடு திருவரஞ்சை க்ஷேத்திரத்தில் விளங்கும் மகிமையைக்கூறுவதாயின் நூறு வருடங்கள் செல்லும். நாமறிந்த வரையில் சில சொல்லுவோம் மனமகிழ்ந்து கேளுமெனக் கூறுவார். உ

இளமா மதிச்செஞ் சடைப்பெருமா னிருதா ளிறைஞ்சா வரஞ்சைதனை, யுளமே கருதி யாதொருவ ருகந்து வரும்பே ாதிடையதனிற் றளர்வா லயர்ந்து விதிவசத்தான் மரண முறினுந் தாழாமல், வளமாம் பரம சிவகதியி லடைவார் மறுகாற் பிறவாரே.

(இ-ள்) மூன்றும் பிறையை யணிந்த பசுபதி நாதரை திருவரஞ்சை க்ஷேத்திரத்திற்கண்டு வணங்க வேண்டுமெனக் கருதிவருவோர் வழியில் விதிவசத்தால் மரணமுற்றாலும் சிவகதியையே யடைவார்கள். மீண்டும் பிறவியில் அழுந்தார். ௩

நெறியா லொருகாற் பசுபதியார் வலமா முமைமீ றணிபதமு
மறிவார் தெரிசிப் பவர்கொடிய வினையு மகலு மதுவன்றிக்
குறியா யிருபோ தறவாகக் குலவு வலம்வந் தனுதினமு
மறவா துதிக்கு மவர்பேறு வழுத்த முடியா ததுவென்னில்.

(இ-ள்) ஒழுக்கமுடன் பசுபதிநாதரையும் அம்பிகையையும் ஒருதரம் வலமாக வந்து தரிசிப்பவர்களின் கொடிய வினைகளெல்லாம் அகலும். இருவேளையும் தவறாது வலம்வந்து வணங்குவோர் அடையும் பாக்கியத்தைச் சொல்ல முடியாது. ௪

பகரு மறையா லாகுதிகள் பலவு மழல்சேர்ந் தவ்வுருவ
நிகரா மகிமை யொடுமிசைந்த தெனுமா நிமல னடிசேருந்
தகுமா வளஞ்சேர் திருவாஞ்சைச் சரித மறவா விதயமுளோர்
தொகைசேர் கொடிய பாவவினைத் துயர நீங்கித் துலங்குவரால்.

(இ-ள்) வேத விதிப்படி அக்கினியிலளிக்கும் ஆகுதிகள் அக்கினி மயமாகி பரிசுத்த மாவதுபோல், மகிமை பொருந்திய திருவாஞ்சை நாதனது சரிதத்தை மறவாமல் தியானிப்போர் வினைகள் நீங்கி பரிசுத்தவான்களாக விளங்குவார்கள். ௫

ஆசா ரங்கண் டிலனேனும் அபகா ரஞ்செய் திடுபவனுந்
தூசா ரங்க யீனமுளோன் துயர மிகுத்தோன் துர்க்குணத்தோன்
மாசார் திழன்ற பாதகரும் வறுமை யாளர் முதலாகத்
தேசார் வாஞ்சை யெனவொருகாற் செப்பத் திகழுநெறிசேர்வார்.

(இ-ள்) ஆசார மில்லாதவன், அபகாரஞ்செய்பவன், அங்கவீனன், துக்கமுடையோன், துர்க்குணத்தோன், குற்றமுடைய பாதகன், தரித்திரன் முதலாகிய யாவரேனும் 'திருவாஞ்சை' என ஒருதரம் சொல்லுவார்களாயின் அவர்கள் மேன்மையான நெறியை அடைவார்கள். ௬

தளவஞ் செறிந்த திருவாஞ்சைத் தலைவர் கோயிற் றிருப்பணிக்கா
யெளிய பொருளீந் தவர்க்குமலி நிதியா ரிருநான் கிலக்குமிநே
ருளவா மொருபோ தொருதீப முயர்சந் நிதியி லிடுவாரேல்
வளமா முடலந் திகழ்வெய்தி வன்போ டுயர்ந்த வாழ்வுறுமால்.

(இ-ள்) முல்லைவனஞ்சூழ்ந்த திருவாஞ்சை நாதர் கோயில் திருப்பணிக்குச்சிறிது பொருளுதவி செய்வோரும் அஷ்ட லக்ஷ்மி கடாக்ஷம் பெறுவர். ஆலயத்தில் ஒரு வேளை ஒரு விளக்கு வைத்தவர் சரீரதிடத்துடன் சுகமான வாழ்வு பெறுவார்கள். ௭

கனியா வினங்கண் மறையோர்க ணணுகுஞ் சீவ ராசியுணும்
புனல்சேர் வாவி தடஞ்செய்தோர் வேறோர் தலத்திற் புரிந்தபல
னினுமாங் கோடி யதிகமதா யியற்கை பெறுவர் வாஞ்சையுறிற்
பனியா தவன்முன் னிரிவாகும் படிபோற் பாவ மகன்றிடுமே.

(இ-ள்) பசுக்கூட்டங்கள், பிராமணர், ஜீவராசிகள் முதலியோர் நீருண்ணத்தக்க தடாகங்கள், சிறுகுளங்கள் வெட்டினோர் மற்ற ஸ்தலங்களிற் புரிந்து பெறும் புண்ணியத்தைவிட நூறு பங்கு அதிகமாம். திருவாஞ்சை ஸ்தலத்திற்குவந்தவர்களுடையபாவங்கள்சூரியன்முன்பனிபோல் அகலும்.

தேனார் பொழில்சூழ் வரஞ்சையினிற் றிகழ்பூ வனங்க ளுறவைத் துக், காளுர் மலரொன் றெடுத்தமலன் கமல பதத்தி லருச்சிக்க, மானார் கரத்தெம் பெருமானை மற்றோர் தலத்திற் கனகமலர், தா னேர் கோடி யருச்சனையாற் றரும்பே றதனிற் றுனடைவார்.

(இ-ள்) வண்டுகள் நிறைந்த திருவரஞ்சரத்தில் பூங்காவனம் வைத்து, அதில் ஒரு மலரெடுத்து சிவபிரானது பாதகமலத்தில் அர்ச்சித்தோர், சிவபிரானை வேறொருதலத்தில் பொன்னலாகிய புஷ்பத்தால் கோடி முறை அருச்சித்த பலனையடைவார்கள். ௯

வம்பார் முல்லை வனநாதர் மருவி யிலங்கும் வரஞ்சைதனிற் கொம்போ டுயர்ந்த பலகாவிற் குறித்தோர் தருவுண் டாக்கினவர் அம்போ ருகமா தருண்மேவா வவனி யதனில் வாழ்ந்ததற்பி னும்போ ருலகின் றருநீழ லுறுவாழ் வதனைப் பெறுவாரே.

(இ-ள்) மணம் வீசும் முல்லை வனநாதரிருக்கும் திருவரஞ்சையிலுள்ள சோலையில் ஒரு மரம் வைத்தவர்கள் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்றுவாழ்ந் திருப்பார்கள். க௦

கன்னல் மொழிமா துமைப்பாகன் களிப்பாரந் திருக்கும் வரஞ்சை தனி, லன்ன மொருவர்க் கீய்ந்திடிலங் கதுவோர் கோடி மறைய வருக், குன்னி யளித்த தானபல னுதவுஞ் சிவனுக் குயர்சிவிகை, யின்னுஞ் சிறப்போ டளிப்பவர்கள் மெய்வீ டதனை மேவுவரால்.

(இ-ள்) கரும்புபோல இனிக்கும் மொழியையுடைய அம்பிகைபாகன் மகிழ திருவரஞ்சரத்தில் ஒருவருக்கு அன்னமளித்தவர் கோடி பிராமணர் களுக்கு அன்னமளித்த பலனைப்பெறுவர். சிவபிரானுக்கு பல்லக்கு செய்து வைப்போர் முத்தி வீட்டை யடைவர். கக

கருத்தி லுணர்ந்து திருவரஞ்சைக் கடவுள் சரிதை சிந்தனையி லிருத்து நலத்தோர் சாயுச்ய மெய்தி யிருப்பர் திண்ணமதாம் பொருத்த மறையோ ருடுகலைக ளளித்தோர் புவியி னெடுங்காலம் வருத்த மிலராய் வாழ்ந்ததற்பின் வெளமா மகப்பே றடைகுவரால்.

(இ-ள்) திருவரஞ்சை நாதர் சரித்திரத்தை சிந்தனையுட்கொண்டவர்கள் சாயுச்சிய பதவி யடைவார்கள். அந்தணர்களுக்கு வஸ்திரதானஞ்செய் தோர் வருத்தமின்றி வாழ்ந்து அசுவமேத யாகஞ்செய்த பலனைப்பெறு வார்கள். கஉ

புவிமீ தெழுமத் தலங்களினுங் கோடி யறங்கள் புரிந்தபலன், றவ மார்ந் திலங்கும் வரஞ்சைதனி லணுமாத் திரஞ்செய்திடத்தருமா, லவையே தென்னி னெடுங்கால மரியவிரதஞ் செயும்பேறு, செவை கொண் டிலங்கு மத்தலத்தின் நாம மதுவாய்த் திருந்தியதால்.

(இ-ள்) உலகிலுள்ள ஸ்தலங்களில் கோடிக் கணக்கான தானதர்மங்கள் செய்த பலன் திருவரஞ்சையில் அணுமாத்திரஞ் செய்தவர்களுக்கு உண் டாகும். ஏனெனில் அநேக கோடி காலம் தவஞ்செய்து பெற்ற வரமே அந்த ஸ்தலத்திற்குப்பேராகவமைந்த மகிமையினலாகும். கந

தீரா விழும மகற்றுதல்கொண் டிலங்குஞ் செயலார் வரஞ்சைதனி னாரா வமுதஞ் சுரந்தானுக் கபிஷே கஞ்செய் தலைநாளில

நேரா வெள்ளி மலையருவி நீத்தங் கொணர்கோ முகியென்னும்
பேரார் பரவு மதன்பெருமை சிலநாம் பேச மிவகேண்மோ.

(இ-ள்) தீராத துன்பத்தை நீக்கும் வரஞ்சரத்தில் தேவபசுக்கள் தமது பாலினால் அபிஷேகஞ் செய்த காலத்தில், வெள்ளிமலைப்புறமிருந்து அருவி ஜலம் கொண்டு வந்ததால் கோமுகி எனப்பெயர் பெற்ற அந்நதியின் பெருமையிற் சிலது கூறுவோம் கேளுமென முனிவர் கூறுவார். கச

மேடங் கடகந் துலாமகர மீன மதியப் பிரவேச
நாடன் னீறு விதிபாத யோகந் திகழ்புண் ணியநாள்க
ணீட்டட் டமியே காதேசி நிகரில் சதுர்த்த சியுமபருவந்
தேட்டற் கரிய வமாவாசை சிறந்த தினமா மதிற்பின்னும்.

(இ-ள்) சித்திரை மாதம், ஆடி மாதம், ஐப்பசி மாதம், தை மாதம், பங்குனி மாதம் ஆகிய மாதங்களின் பிரவேசங்களினும், அஷ்டமி, ஏகாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசை முதலிய உயர்ந்த தினங்களிலும். கரு

இரவி மதியை யரவுறுநா ளொழுமா பிரதோ டாதியொடு
விரவிற் றுதய மாவுதயம் விளங்குநாள்க ளிலைகடனிற்
குரவற் கரிய தவறிழைத்தோர கோறல் புரிந்தோர் முதலாகப்
பரவி வருகோ முகியதனிற் படிந்தாற் பாவம் பற்றறமே.

(இ-ள்) சூரிய சந்திர கிரஹணம், பிரதோஷம், அர்த்தோதய மகோதயம் முதலிய புண்ணிய காலங்களில், குரு நிந்தனை புரிந்தோர், கொலை பாதகஞ் செய்தோர் முதலான பஞ்சமா பாதகர்களாயினும்; கோமுகி நதியில் நீராடுவார்களாயின் அவர்கள் பாவமெல்லாம் பறந்தோடும். கசு

கூனல் குருடூ மைகள்செவிடு குறைநோ யாளர் கொடிதிழைப்போர், தேனே டசுவஞ் சிசுவனிதை திகழ்மா மறையோர் தமைச்செகுத்தோ, ரூனை யருந்தி விதிமுறைமை யொடுக்கி நடப்போரிவர்கண்முதற், றானீர் பரவும் கோமுகியிற் றோய்ந்தாற் பாவத் தொடக்கறுமே.

(இ-ள்) கூன், குருடு, ஊமை, செவிடு, முடம் முதலிய நோயாளரும், தீங்கு செய்வோர், பசு, குதிரை, சிசு, பெண், வேதியர் முதலியோரைக் கொன்றவர், புலாலுண்போர், நெறிமுறை தவறி நடப்போர் முதலானவர்கள் பரிசுத்தமான கோமுகி நதியில் நீராடுவார்களாயின் அவர்கள் பாவம் தொலையும். கஎ

வெதுப்பு வயிறே யுறுகாசம் விழிநோய் தொழுநோய் வெண்குட்டஞ், சதிப்புத் தொடர்மே காதிவினை தாலு வறட்சி யெழுசூலை, கதிப்புற் றுடலி லெழுநோய்கள் கண்ட மாலை கயரோகங், கொதிப்புத் துயர்தீர்ந் தினிதடைவார் கோநன் னதிநீர் குடைவோரே.

(இ-ள்) வெப்பு ஜுரம், வயிற்றுவலி, காசம், கண்ணோய், பெருவியாதி, வெண்குட்டம், மேகம், நாவறட்சி, சூலை, சரீரத்திலுண்டாகும் சிறு வியாதிகள், கண்டமாலை, க்ஷய ரோகம் முதலிய வியாதியுடையவர்கள் கோமுகி நதியில் நீராடின் துன்பம் நீங்கி இன்பமடைவார்கள். கஅ

சுமலி. யுருந்தல் நன்றிகொலத் துணிதல் வேள்விக் கிடர் புரிதல்; நிமலன் கோயிற் புணர்ந்திடுதல் நெறிபோய் மயங்கும் வெறியுறு தல், தமிய ஞொடு வந்தடைந்தோர் தமைக்கா தியவெம் பிழைகளெ லாந். கமல மலிவாங் கோமுகியிற் கடிதி னகலும் படிவோர்க்கே.

(இ-ள்) கள்ளருந்தல், நன்றிகொல்லல், யாகத்தைக்கெடுத்தல், சிவாலயத் தில் புணர்தல், நிதானந்தவறிய வெறியுடைமை, தனித்து அபயமடைந் தோரைக்கொல்லல் முதலாகிய பிழைகளெல்லாம் தாமரை மிகுந்த கோமு கியில் மூழ்கின் பாவம் நீங்கிச் சுகமடைவர். கக

கருப்பற் றுதலி லாமடவார் வேறோர் விரதஞ் சருத்தின்றி விருப்பத் துடனே கந்தர்சஷ்டி மேவு தினத்திற் கோமுகியி லொருப்பட் டதனிற் றான்மூழ்க வுயர்மா மகவைப் பெறுமாயுள் தரிப்ப வோங்கு நிதிபெருகித் தரணி மீது தழைத்திடுவார்.

(இ-ள்) பிள்ளைப்பேறில்லாத பெண்கள், வேறொரு விரதமு மனுஷ்டியா மல் அன்போடு கந்த சஷ்டியில் கோமுகியில் நீராடுவார்களாயின் மேன்மை யுடைய குழந்தைகளைப்பெற்று, நிறைந்த ஆயுளும் செல்வமும் பெற்றுவாழ் வார்கள். உ0

வேறு

தரவுஞ்செறி காவட வித்தலமுந்
தேவின்புறு கோசல முந்திகழ்வால்
மேவுங்குட பாக்தரு மேன்மையினு
லாவென்பது வாமரு ளங்கதியே.

(இ-ள்) பூமியிலுள்ள சோலை காடு முதலிய வற்றில் பரவிவருவதனாலும், தேவதைகளுக்குக் கோசல மளித்தலாலும், குடங்கள் நிறைய பால் வழங்கு வதனாலும் பசு என்பது அங்கதிக்குப்பொருந்தியதே. உக

வையந்திகழ் மாமதி ளாலயமுந்
துய்யப்புனல வாவிகள் சூழ்பொழிலு
மெய்யந்தணர் வேள்வி யிடப்புனிதஞ்
செய்யுந்தகை தேனதி யென்பதுவே.

(இ-ள்) உலகில் தேவாலயம், தடாகம், சோலை, அந்தணர் யாகசாலை முதலியவைகளைப் பரிசுத்தம் செய்யும் தகைமையுடைய தாகையாலே அந் நற்குக் கோமுகி யெனப்பெயர் வாய்த்தது பொருந்தியதே. உஉ

பீனத்தன மெய்திய பெண்பருவ
மூனப்படு பூப்பு மொடிங்கினவர்
வானப்புனன் மாநதி யாடுவரேல்
லீனத்துய ரோடி யெழிற்பெறுமே.

(இ-ள்) பருத்த தனபாரங்களையுடைய பெண்கள் பருவகாலத்தில் பூப் படையாமல் வருந்துவார்களாயின், அவர்கள் ஆகாய கங்கைபோன்ற கோமுகி நதியில் நீராடின் துன்பமகலப்பெறுவார்கள், உங

மிருகாதிகள் புள்ளின மெய்யிலநீ
ரொர்ருகாலுறி லவ்வுரு மாறியபின்

கருவாவித யத்தொடு காசினியில்
வருவார்திறன் மானிட ராகியுமே.

(இ-ள்) மிருகாதிகள், பக்ஷிக்கூட்டங்கள் முதலியவைகளின்மீது அந்த ஜலம் ஒரு சமயம் பட்டுவிடின் அந்த உருவம்மாறி மானிடராகப் பிறப்பார்கள். ௨௪

மறுமாநதி கோடி வளங்களினுந்
திறன்மாதவர் கோமுகி சேருவரால்
நெறியாதெனி லான்வயி னின்றுசெனிப்
புறுவான்பினே ருறு வேதியரால்.

(இ-ள்) உலகில் கோடிகணக்கான வேறு நதிகள் வளப்பத்தோடிருப்பினும், முனிவர் கோமுகி நதியையே நாடிவருவார்கள். ஏனெனில்; நான்கு வருணத்திலு முயர்ந்த பிராமண வருணத்தில் பிறப்போர் பசுவின் வயிற்றில் சனித்த பிறகே பிரம்ம குலத்தில் பிறக்கிறார்கள் என்னும் உறுதி பற்றியாம். ௨௫

அதுபோல வளங்கெழு மிப்பரவா
நதியாடு மவர்க்கிலை துன்பநனி
துதியோடுயர் தொல்லுல காளுமதி
பதியாகுவ ரென்று பகர்ந்தனனே.

(இ-ள்) அவ்வாறு வளப்பம் பொருந்திய கோமுகி நதியில் மூழ்கினவர்களுக்குத் துன்பமே இல்லை; கீர்த்தியுடைய அரசனாவார்கள் என்றனர்.

இப்பார்பெறு மன்னவ னுக்கியல்பே
தப்பாதவ சீர்முனி சாற்றுமவை
யொப்பாய்சவு னதிய ருக்குணர்வா
யப்பான்மை யறைந்தனன் சூதனுமே.

(இ-ள்) இவ்வுலகையாளும் பிராட்சேன மகாராஜனுக்குத் தவறாமல் சாபாலி முனிவர் கூறியதை சூதபுராணிகர் சவுனகாதியருக்குத் திருவுளம் பற்றினர். ௨௭

கோமுகி தீர்த்தச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் ௧௨—க்குத் திருவிருத்தங்கள் ௫௮.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# பிரம்மஹத்தி விமோசனச் சருக்கம்.

வேறு

ஓங்கிய கோமுகி யுண்மை யுணர்ந்தே யோதிய மாதவ வங்கதி நன்னீ, ராங்கதி லாடி யருந்துய ரின்றி யாகுலம் யாவ ரகற்றின ரையா, பாங்குற வீங்கு பகர்ந்திடு கென்னும் பார்த்திபன் வாண்முக பங்கய நோக்கித், தீங்குறு வன்பிரம கத்தி யகன்ற காதைக ளொன்றவை செப்புவ தானுன்.

(இ-ள்) கோமுகி நதியின் பெருமையை யுணர்ந்த அரசன் மாதவரே! அந்நதியில் மூழ்கி துயர நன்றோர்யாவர்? அருள்செய்ய வேண்டுமெனும அரசனை நோக்கிப் பிரம்மகத்தியகன்ற காதைகளில் ஒன்றை சாபாலி முனிவர் கூறத்தொடங்கினர். க

எண்ணுறு மாநதி கோடிய தாகி யிருந்தத னிற்செய லெய்தியதேனும், விண்ணுறு மாநதி மானுவ தாகி விரிந்தெழு கோமுகி மேவு வியப்பாற், கண்ணுறு மாநிதி மேதகு வாழ்வுங் கைக்கனி போலருள் காசினி மீது, புண்ணிய மானது தன்னின் மிகுந்து பொன்றில தீவினை போயது கேண்மோ.

(இ-ள்) கோடிக்கணக்கான நதிகள் மகத்துவமுடையதாக விருப்பினும்; ஆகாய கங்கை போன்ற கோமுகி நதி, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செல்வமும் வாழ்வும் அளிக்கவல்லதும், பூமியில் புண்ணியம் மிகுந்திருப்பதால் தீராத பிரம்மகதி நீக்கியதையும் கேளும். உ

சீரிய வெண்டிசை தன்னின் விளங்கு தேயம திற்புகழ் சேரெழில் கொண்ட, ஆரிய மென்பதின் வாமதின் மிக்க வந்தணர் மேவு திசாபுர மென்னும, பேரிய லந்நகர் வாழ்வுறு வேத பிங்கல னென்றோர்பி ராமணன் றேவி, ஏருயர் வாண்முக சீர்வதி நாம மேற்றவள் கூடி யிருந்திடு நாளில்.

(இ-ள்) எட்டுத்திசைகளிலும் விளங்கும் ஆரிய தேயத்தில் அந்தணர்கள் வசிக்கும் திசாபுரமென்னும் நகரில் வாழும் வேதபிங்கலனென்னும் பிராமணன், அழகிய முகமுடைய சீர்வதியென்பாளோடு கூடிவாழும் நாளில்.

செய்தவன் முன்குறை யாலவ னேசச் சீர்வதி தன்வயின் றீங்குரு வேபோ, லையிரு மூன்றெனு மாண்டவை தன்னி லளித்திடு மைந்தனை யன்னைபி தாவு, மெய்தவழ் தேசனி யென்றொரு நாமம் விளக்க வளர்ந்து விதிமுறை தாங்கி, பைவிட மென்ன வெகுண்டெழு சிந்தை பத்தியி லான்செயன் முற்று முரைப்பாம.

(இ-ள்) அவன் முன்செய்த குறையால் மனைவியாகிய சீர்வதி வயற்றில் தீவினையே உருக்கொண்டதுபோல் பதின் மூன்றும் வயதில் ஒரு பிள்ளையைப் பெற்றாள். பெற்றோர் அக்குழந்தைக்குத் தேசனி என நாமஞ் சூட்டி விதிமுறைப்படி சடங்கு செய்தனர். விஷப்பாம்பு போல் வளரும் அச்சிறுவன் செயலைக்கூறுவோம். ௩

நன்மையி லான்புலை நாளு நவின்றே நான்மறை யின்வழி பாடு மறந்து, புன்மையி னூடுற வாகி யறங்கள் புரிந்திடு வோர்களை நிந்தனை செய்வான், கன்மனத் தோன்கொடி தாகிய பாவங் கண்டிடு மன்னவை யேகருத் துள்ளான், துன்மதி கொண்டு முயங் குதலாலே துர்ப்பிர விர்த்தி யெனும் பெயர் பூண்டான்.

(இ-ள்) தேசனி, நன்மார்க்கத்தில் நடவாமல் பொய் பேசுவான், வேத வழிபாடு புரியான், அற்பபுத்தியால் தர்மம் செய்வோர்களைப் பழிப்பான், கல்போன்ற கடின சித்தமுடையான். பாவஞ்செய்வதிலேயே கருத்துடையான், ஆகையால் அவனைத்துர்ப்பிரவிர்த்தி என எல்லோரும் அழைக்கலாயினர். ௫

பின்னு மிடும்பைசெய் வானொரு நாளில் பிதாவை வெகுண்டிகல் கோறல் புரிந்தே, யன்னையை யிச்சையி னோடு புணர்ந்து மியாரையு நிந்தைசெ லத்தகைவாகி, மன்னிய சிந்தை கெடத் தொலை வில்லா வன்கொடு மைப்பிர கத்தி யடைந்தோ, னின்னல பொருந்தி யலைந்தவை கண்டோ ரின்னன வென்று பகர்ந்திடலாமோ.

(இ-ள்) எல்லோருக்கும் துன்பமே செய்பவனை பிரவர்த்தி ஒரு நாள் கோபத்தாற் பிதாவை கொலை செய்து விட்டு, தாயை வலுவில் கற்பழித்து, சகலரையும் நிந்திக்கத் தொடங்கினன். அதனால் அவன் அறிவு மழுங்கி பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டான். அவனைக்கண்டோர் இன்ன நிலைமையுடையானெனக் கூறுவது அரிதாயிருந்தது. ௬

ஞாளியெ னத்திகழ் வீதிக டோறும் நாடி நடுக்க முடன்குலைவுற் றுக், கூளியெ னுங்குறி கொண்டு மருண்டு கூம்புத லென்னுங் குணங்க டெரிக்குந், தேளினும் வன்கொடி தான விடங்கள் தீண்டினர்போல திகைத்து மயங்கித், தூளியு றப்புர ளாநிரு வரணத் தோன்றியு மிருகை விரித்துற வாடும்.

(இ-ள்) அந்த பிரம்ம ஹத்தியின் கொடுமையினால் நாய்போல் வீதி வீதியாகத் திரிவதும், உடல் நடுங்கி பிசாசத்தின் குணம்போல் மனமருண்டு பிரேதம்போல் கிடப்பதும், தேளினும் கொடிய விஷம் தீண்டியவர்போல் கூக்குரலிடுவதும், பூமியில் புழுதிபட புரண்டு நிருவாணமாக இரண்டு கைகளையும் விரித்து ஆடுவதுமாக விருப்பான். ௭

கானிடை யோடி யலைந்து மிருண்ட காவினி லேறி யிழிந்துற நீரின், மீனின மென்ன வுழன்று முயர்ந்த வெற்பினி லேறி மிரும்பசி தன்னா, லூனை யருந்தி யுரைபகர் வின்றி யூமனெனச் சிலபோதவு மண்மே, லீன மிருந்து நவின்றவை கண்டு மேகவர் சீசீ யெனச்சிலர் பின்னும்.

(இ-ள்) காடுகளில் திரிவதும், மரங்களேறி விழுவதும், மடுக்களில் மீன் போல் உழல்வதும், பெரிய மலைகளின்மீதேறி பசிபொறுக்கமாட்டாமல் மாமிசங்களையுண்பதும், வாய்பேசாமலுமிருப்பான். அதைக்கண்டோர் ஊமையெனச் சிலர்கூற, சிலர் இவனது துன்பத்தைக்கண்டு சீசீ தூய்போவென இழித்துரைக்கவுமிருந்தான். ௮

தாப்புலி யையுறப் பட்டவ னைசத் தாலு வெடிப்புற சப்பு
வின்மபோற், கூப்பிடு வன்கவி யின்குல மென்னக் கோடுகள் பற்
றியு லூசலொ டாடுப் பூட்டுபடு கீட வினங்களை யுண்டும் புன்மதி
நன்மதி யென்றுணர் வில்லா, வீப்பட வின்றி யருந்துய ரஞ்செய்
வெவ்வினை வாரியின் மூழ்கின னன்றே.

(இ-ள்) புலியினாலறைப்புப்பட்டவன்போல் நடுங்குவதும், நாக்கு வெடிக்க நரியினம்போற் கூவுவதும், குரங்குகள்போல் மரக்கிளைகளைப் பற்றி ஊசலாடுவதும், பூமியிலுள்ள புழுக்களை யுண்பதும், நன்று தீது என்னும் உணர்வின்றி சாவதுபோலிருப்பது மன்றி துன்பமாகிய கடலிலும் மூழ்கியிருந்தான். கூ

விலங்கொடு புட்குல மேவுறு கான மிகுந்த தனிற்புகுந்
தேகடி தேகி, யிலங்கிய காசிக ஞோசி வவந்தி யேருறு கோசலம்
பல்லவம் வங்கங், கலிங்க மராட விராட குலிங்கங் கன்னட
மொட்டிய மாளுவ மற்றுந், தெலுங்கம் விரைந்தெழு கொங்கு
கடாரஞ் சிங்கள மென்னு மோடி யலைந்தே.

(இ-ள்) பக்ஷிகள், மிருகங்கள் வாழும் கொடிய காட்டிற்புகுந்து பின் காசி, கன்னோசி, கோசலம, பல்லவம், வங்கம், கலிங்கம், மராடம், விராடம், குலிங்கம், கன்னடம், ஒட்டியம், மாளுவம், தெலுங்கம், கொங்கு, கடாரம், சிங்களம் முதலிய தேசங்களில் ஓடியலைந்து க0

அலைந்து திரிந்தே முனைக்கரை யேறி யாங்குள மாநதி
யாவுங் கடந்து, தலந்திகழ் கச்சிக் கழுமலை சோண சயிலந்
திருப்போரூர் திருக்கோவலை, நிலந்திகழ் விருத்த மடைந்தது நீங்கி
நீண்மணி முத்த நதிக்கரை யேறி, நலந்திகழ் நீறணி யம்பிகை
பாகன் நண்ணும் வரஞ்சையி னெல்லையுள் வந்தான்.

(இ-ள்) அலைந்து திரிந்தவன் யமுனை நதி தாண்டி, காஞ்சீபுரம், கழுக்குன்று, திருவண்ணாமலை; திருப்போரூர்; திருக்கோவலூர், இருடிவிந்தம், மணிமுத்தா நதி முதலானவைகளைக்கடந்து நீறணியம்பிகை பாகன் இருக்கும் வரஞ்சரம் வந்தான். கக

வந்திடு பாதக னைப்பிரம ஹத்தி வன்புற மோதி வருந்து
மவற்கு, விந்தன முற்றெழு வெங்கன லென்ன வெரிந்துடல்
வெம்ப சொரிந்திடு கண்ணீர், சிந்த வெழுந்து விழுந்து வெருண்டு
தியங்கி மயங்கி திகைத்தழு கின்றோன், புந்தியொண் முன்செய்
தவஞ்சிறி தூந்தப் பொற்புறு கோமுகி பக்க மடைந்தான்.

(இ-ள்) வரஞ்சரம் வந்த அந்த பாதகனை பிரமகத்தி வருத்துவதால், விறகிற் பிடித்த தீயைப்போல சரீரம் வெதும்பி இரண்டு கண்களிலும் நீர் சொரிய விழுந்து மயங்கி அழுதவன் முன் பிறப்பில் செய்த புண்ணியம் சிறிதிருந்து தூண்ட புத்திகொண்டு கோமுகியை அடைந்தான். கஉ

வந்துழி கும்ப மதிப்பிர வேசம் மன்னிய சாலையி னன்னெறி
யுள்ளோர, ருந்திய மாநதி தன்னிடை மூழ்கி யோங்கிய தீவினை
நீங்கிடு மென்றே, சிந்தனை செய்பவ ரந்நதி யாடித் தேன்மொழி
நீறணி பாகன் மலர்த்தாள், புந்தி யுறத்தொழு தேகுவர் சால
வொழுங்புள கோமுகி நற்செயல் கேண்மோ.

(இ-ள்) அப்பாதகன் வந்ததினம் மாசிமாதப் பிரவேசமானபடியால், அங்குள்ள பெரியோர்கள் தீவினை நீங்குமென்று காலையில் அந்நதியில் நீராடி நீறணி பாகனை வணங்கிச் செல்வார்கள். அந்நதியின் மகிமையைக்கேளு மென மீண்டும் கூறுவார். கச

அந்நதி தன்னி லடைந்த குழுக்க ளந்தணரா தியர் நால்வரு
ணத்தோர், துன்னிய தோயம தாடியு நேம முற்றெழு வோர்மிசை
துர்ப்பிர விர்த்தி, முன்னிய வன்பிர்ம ஹத்தி மயக்கால் மோதி
விழுந்திட வாங்கது கண்டோ, ரென்னிலை யென்னிலை யென்
றிரி வாகி யெஞ்சிய போதொரு வன்னெதி ருற்றான்.

(இ-ள்) அந்நதியில் வந்து நீராடும் அந்தணர் முதலான நான்கு வருணத்தோரும் நியம நிஷ்டை புரிந்து கொண்டிருக்கும்போது துர்ப்பிரவர்த்தி பிரம்மஹத்தி மயக்கத்தால் அவர்கள் மீது விழுந்தான் என்ன என்ன வென்று எல்லோரும் பயந்து ஓடினர். அப்பொழுது ஒருவன் எதிர் வந்து.

சால வளங்கெழு கோமுகி நன்னீர் தாங்கு குடங்கை முகந்
தெதி ருற்று, மேலுற நாடியு துர்ப்பிர விர்த்தி வெம்மைகொ ளம்
முக மீதி லெறிந்தான்; தூல வுடன்முழு தெங்கு நிரம்பிச் சொரி
மழை தன்னி னனைந்தவ னொத்தான், மேல் வுடற்பிர்ம ஹத்தி
யகன்று குலைந்தெழு காக்கை பறந்தன வாமால்.

(இ-ள்) மகிமையுடைய கோமுகி நதியின் நீரை இரண்டு கையினாலும் அள்ளிக்கொண்டு வந்து மேலே விழுந்த துர்ப்பிரவர்த்தியின் முகத்தில் வீசியடித்தான் அப்படி அடித்த நீரானது மழையில் நனைந்தவன்போல உடல் முழுதும் நிரம்பியது. உடனே அவனைப்பிடித்திருந்த பிரம்மஹத்தி நீங்கி ஒரு காக்கை போல பறந்து சென்றது. கரு

வேறு

உருகெழு துயர்கெட வொளிவிழி பிலிகண்
தெரிவுறு பவனென திகழ்மதி யுளனு
யிருவள நகரல விதுவெது வெனநேர்
கருதின னியெழு கனவுகொ ணிலைவால்.

(இ-ள்) கோமுகி தீர்த்த மகிமையால் துன்பமானது குறைந்தோட, குருடன் கண் பெற்றாற்போல் திருந்திய புத்தியுடையவனாய், நாமிருந்த நகரம இதுவல்லவே இது எந்நகரம் என்க் கனவு கண்டெழுந்தவனைப்போற் சிந்திக்கலானான் கசு

துகளறு மொழியுள துணைவர்க டனையு
மிகநிதி பெறுமனை விரவிய கிளையுந்
தகுமறை நெறிவழி தனைநினை பவன்முன்
னகல்வெளி யசரிரி யறிவுற வறையும்.

(இ-ள்) குற்றமற்ற சொல்லுடைய சகோதரர்களையும், செல்வ மிகுந்த வீட்டையும், பந்துக்களையும் நினைத்துக்கொண்டிருப்பவன் கேட்கும்படி ஆகாய வெளியில் அசரீரி சொல்லத்தொடங்கியது. கஎ

மதிநெறி யறிவிலி மறையவ விதுகேள்
விதிமுறை தவறினை பிருதிகொ ணசையாற்
சதிசெய்து வனையினை தழுவினை யதனால்
அதிபவ நரகினி லடைவது முணராய்.

(இ-ள்) பத்தியற்ற பிராமணனே! நீ விதிமுறை தவறி நடந்ததுமன்றி பேராசையால் தந்தைக்குச்சதி செய்து தாயைப்புணர்ந்தாய். அந்த பாவத்தால் நரகமடைவோமென்பதும உணர்ந்திலாய். ௧௮

நிலைபெறு தந்தையை நீபகை யாகக்
கொலையது செய்திடு கொடுமைக ளதனாற்
றொலைவிலை யுனைதொடர் சூழ்பிர மத்தி
யலைவ தகன்றது மாநதி நீரால்.

(இ-ள்) உனது தந்தையைக்கொன்ற கொடுமை பிரம்மஹத்தியாக உன்னைத்தொடர்ந்து துன்பப்படுத்தியது, அது இந்த தீர்த்த மகிமையால் நீங்கியது. ௧௯

பந்தமொ டடர்வினை பாறுமிந் நதியா
லுந்தையை வதைபுரி வுயர்பழி யகலும்
நிந்தனை யாகவு நினையரு ளனையைப்
புந்தியி னசையொடு புணர்ந்ததி னாலே.

(இ-ள்) பாசவினைத்தொடர்பை நீக்கும் இந்நதியின் தீர்த்தத்தால் உனது தந்தையைக்கொலைசெய்த பாவமகலும் அன்னையைப்புணர்ந்த பாவத்தாலே.

அளவில ஜெனனம தவனியின் மிசையே
யுளவின பலவகை யோனிக ளதனிற்
றுளைவுறு பிறவிகள் தொலைவற மருவித்
தளர்வொடு நாள்சில தாழ்நர கடைவாய்.

(இ-ள்) உலகில் பலவகை ஜெனனம் எடுத்தெடுத்து இளைத்து நரக வேதனையை கொஞ்ச நாள் அனுபவிப்பாய். ௨௧

ஆழ்நர கிடைவிழு மதிநெறி வழியே
சூழ்வுள தாகிய துயருறு பினுமா
மூழ்வினை கழிவுற வுயர்தவ முயல்வால்
வாழ்மறை யவனென வாஞ்சையில் வருவாய்.

(இ-ள்) ஆழ்ந்த நரகில் பலகால மிருந்து துயாமுற்றுப் பின் ஊழ்வினை கழிந்து ஊழிக்காலத்திற்செய்த தவமுயற்சியால் மறுபடியும் பிராமணனாக இந்த திருவாஞ்சரத்திற்கு வருவாய். ௨௨

நெறியிவை தெரிதியிந் நீணதி தனினீ
யறிவுடை குரவர்க ளருள்வழி மூழ்கிச்
செறிவுள மாலதி திகழ்வன மருவுங்
குறியுள பசுபதி குரைகழல் பணிவாய்.

(இ-ள்) இதனை அறிவாய் இந்நதியில் குருவுபதேசம் பெற்று மூழ்கி மூலவனஞ்சூழ்ந்து விளங்கும் பசுபதிநாதனை வணங்குவாய். ௨௩

சடைதிசழ் முனிவரர் தவமுறு தலமீ
தடைகுதி யெனவுரை யசரீரி யிரிவா
னிடைமறை தலுமவ னியல்பெறு வகையால்
குடமுனி பகநதி குறுகினெ னனவே.

(இ-ள்) சடையையுடைய முனிவர்கள் தவஞ்செய்யுமிடமித்தலமாகையால் நீ இவிடத்திலேயே இருவென்று அசரீரி மறைந்தபின் அவன் நன்மையடையும் வண்ணம் அகஸ்தியர் அங்கு வந்தார். உச

குறியுட னசரீரி கூறுத லதுகேட்
டறிவினிற் கருதிய வருமறை யவனுஞ்
செறிபுனல் மாநதி சேருத லான
நெறிமுனி மலரடி நினைவொடு பணியா.

(இ-ள்) அசரீரி குறிப்பாகக் கூறியதைக்கேட்ட பிராமணன் புத்தி தெளிந்தவனாய், நதியினிடைவரும் அகஸ்தியமுனிவரைக்கண்டு வணங்கினான். உரு

மலரடி களில்விழு மறையவன் வதன
மெலிவினை நோக்கிய வியன்முனி பகரு
முலர்வுறு மிகுபவ முடையவ னெவனீ
குலமுறை யுனதுயர் கூறுதி யெனவே.

(இ-ள்) பாதங்களில் விழுந்த பிராமணனது முகவாட்டத்தைக்கண்ட முனிவர் மகா பாதகமுடைய நீயார்? உனது குலமும் உனது துயரமும் கூறுவாயாக வென்றனர். உசு

தகைபெறு முலகிடை தனில்வளர் மதியும்
வகைபெறு குலமுமெய் மருவிய பெயரும்
பகையுறு தியின்டு பவம்வரு குறையுந்
தொகையொடு முட்டுப்படு துயர்நனி பகர்வான்.

(இ-ள்) பெருமையுடைய உலகில் தனது நகரமும், குலமும், பெயரும், இடையில் சேர்ந்த பகைமையால் பிரம்ம ஹத்தி தொடர்ந்ததும், அதனால் தானனுபவித்த துயரங்களையும் விவரமாகக்கூறினான். உஎ

பழுதுறு கொலைபுரி பரிவுற நவையா
லழுமன தொடுபுவி யலமவரு தமியேற்
கொழிவுள சிலதுய ருயர்பக நதியின்
மொழியசரீரியிசை முறைமையி தெனவே.

(இ-ள்) தீய கொலை செய்த குற்றத்தால், துன்பத்தோடு பூமியைச்சுற்றி யலைந்தேன். எனது துயர் நீங்க கோமுகி நதி வந்ததாக அசரீரி சொல்லிற்று. உஅ

யாவையு மொழிபவ னெதிர்முக நோக்கி
மேவிய குறுமுனி மீட்டுரை செய்யும்
பூவிடை யுறைபவர் புரிவரி தென்னுந்
தீவினை யானது செய்தனை கேண்மோ.

(இ-ள்) யாவையும் கூறுபவனை அகஸ்தியர் பார்த்து உலகில் உள்ளவர்கள் செய்வதற்கும் அரிதாகிய பாவத்தைச் செய்துள்ளனே. ௨௯

முன்பு தவப்பயன் முற்றிய வாறே
இன்புறு மாநதி யெய்தினை யிதிலுன்
றுன்ப மகற்றிட நூநீ ராடி
யன்பி னியாச விதிப்படி யாக.

(இ-ள்) முன் ஜனனத்தில் செய்த தவப்பயனால் இந்த புண்ணியநதியை அடைந்தனை. இதில் உனது துன்பமகல இந்த பரிசுத்த தீர்த்தத்தில் நீராடி, நியாச விதிப்படி பக்தியோடு. ௩0

நித்திய கருமமு நெறிமுறை அறிவுட்
பத்திய தாய்மறை பண்புட னோதிச்
சுத்திய மாலதி தொல்வன மேவு
மத்தனொ டுமையவ ளாலய மணுகி.

(இ-ள்) நித்திய கருமங்களை முறை தவறாமல் பக்தியோடு கூறி, முல்லைவனத்தில் விளங்கும் நீறணியம்பிகை பசுபதி நாதர் ஆலயம் அடைந்து. ௩௧

அரன்வல சதபிர தக்கண மைந்தக்
கரமொரு பதினா யிரவுரு கருதி
வரமிகு பதினொரு ருத்திர மறைக
ளுரையொடு மொருபொழு துணுநெறி யிதுவே.

(இ-ள்) சிவனை வலமாக நூறு பிரதக்ஷணம் செய்து, பஞ்சாக்ஷரத்தை பதினாயிரம்தரம் ஜபித்து, பதினொருதரம் ருத்திரவேத மந்திரத்தை பாராயணஞ்செய்து ஒரு வேளை உணவு அருந்த வேண்டும். ௩௨

நாடொறு மீது நடாத்திடு வாயே
லோடுவ துந்தையி னுயிர்வதை பவமுன்
பீடுறு மாயினை புணர்வுறு பிழையால்
நீடுறு பிறவியி னீந்திய பின்னும்.

(இ-ள்) நாள்தோறும் இப்படி நடத்தி வருவாயானால் உனது பிதாவைக் கொன்ற பாவ மகன்று போகும். அன்னையைப்புணர்ந்த பாவத்தால் பிறவி சாகரத்தில் மூழ்கி. ௩௩

தேசுறு கோமுகி திகழ்புன லதனின்
மாசியி னுதயம தாடி வரஞ்சை
யீசனை யனுதின மேத்துத லாலே
பேசரு மமரர்கள் பேறுள தவையின்.

(இ-ள்) அழகு மிகுந்த கோமுகி தீர்த்தத்தில் மாசிமாதத்தில் உதய காலத்தில் நீராடி வரஞ்சை நாதனைத் துதித்தால் தேவர்களாகும் பாக்கியம் பெறலாம். ௩௪

நேர்வுறு பலபக னின்று வரஞ்சை
யார்வுறு வேதிய னாகிய மரனை
யோர்வுறு பூசனை யினிதி னியற்றி
தேர்வுறு மெனவுப தேச மளித்தான்.

(இ-ள்) பலபகல் தேவலோகத்திலிருந்து, பின் திருவரஞ்சரத்தில் பிராமணனாகப் பிறந்து, சிவ பூஜை செய்து நலம் பெறுவாயாக வென அகஸ்தியர் உபதேசித்தருளினார். ருரு

வேறு

கௌவை யுற்றிடு மறைய வன்செயல் கருகி வாசக முறை
செய் மாமுனி, செவ்வை யார்குட மருவு திங்களி னுதய காலையிற்
சுரைந திப்புன, லௌவ்வி யாடிநன் னியம முற்றியே யூழி காசி
யென் றுரைபெ ருந்தல, மௌவல் சூழ்வளர் திருவ ரஞ்சையின்
மகிழு மண்ணலார் பதமி றைஞ்சியே.

(இ-ள்) துன்ப முற்ற பிராமணன் கடைத்தேறும் வழியை யுரைத்த அகஸ்திய முனிவர், மாசி மாதம் உதய காலத்தில் கோமுகியில் நீராடி, நித்திய கர்மங்களை, முடித்துக்கொண்டு ஊழி காசியென்று கூறும் முல்லை வனஞ்சூழும் திருவரஞ்சரத்திலுள்ள நீறணியம்பிகையோடு பசுபதி நாதனைத்துதித்து வணங்கி. ருசு

வத்தி னன்மறை யாக மங்களா வின்னி சைக்கொளுஞ்
சொன்ன யம்பெற, நீற்றி னுமகே ரிழைவ லப்புற நேச மாகிய
வீச னன்புற, வூற்ற தாய்மன நெக்கு நெக்கியே யுண்மை ஞானவீ
டுன்னி னுனிளங், காற்று நின்றெழு பொதிகை யானெழு கடலி
னீரையொண் கரம டக்கினன்.

(இ-ள்) இன்னிசையோடு வேதாகமங்களை யோதினர். நீறணியம்பிகையை வலப்பாகத்திலுடைய பசுபதியீசன் மகிழ, மனம் நெக்குருகி, ஊற்றுநீர் போல் ஆனந்த பாஷ்பம் பொழிய சிவத்தோடிரண்டறக்கலந்தனர்; ஏழு கடல்களையும் அகங்கையிலடக்கி, தென்றல் வீசும் பொதியையி லிருக்கும் அகஸ்திய முனிவர். ருஎ

தீட்சை யென்னுமீ ரைந்து நேர்நெறி தெளியு மாதவன்
றிருவ ரஞ்சையிற் காட்சியார்சிவ னுமையை வாழ்த்தியே கண்க
ளிப்புற மதுரை யெய்திமீ, னாட்சி பாதமுஞ் சொக்க நாயக
ரமல பாதமுந் தொழுதி றைஞ்சிமா, மோட்ச வீடரு ளென்று
போற்றியு முயங்கு தென்றிசைப் பொதிகை மேவினன்.

(இ-ள்) பத்துவகை தீட்சையையுமறிந்த முனிவர் திருவரஞ்சையில் காட்சியளிக்கும் சிவனையும் அம்பிகையையும் தொழுது, மதுரை சென்று, மோக்ஷ வீடளிக்குமாறு மீனாட்சி சொக்க நாயகர் பாதங்களை வணங்கி பொதியமலையை அடைந்தார். ருஅ

மலய மாதவன் றொழுது போயபின் மால திப்பொழில் சூழ்வ
ரஞ்சையி, னிலகு மர்நதி யாடி யத்தல மெய்து துர்ப்பிர விர்த்தி
யென்பவன், கலைக ளுள்ளுணர் வாகி நின்றுமுக் கால முந்திகழ்
கோயின் முன்பதா, யுலைவில் சிந்தையிற் பசுபதீசனோ டுமைமல
ர்ப்பதந் தொழுதி றைஞ்சினன்.

(இ-ள்) பொதிய மலைவாழும் அகஸ்திய முனிவர் சிவனை வணங்கிப் போனபிறகு, திருவரஞ்சரத்திலுள்ள துர்ப்பிரவர்த்தியானவன் ஞான மார்க்க முணர்ந்தவனாய், கோமுகி நதியில் நீராடி பசுபதீசரோடு அம்பிகைவதியும் கோயில் முன் மூன்று வேளையும் நீங்காத அன்புடன் தொழுது வணங்கினன். ருகூ

தோயு மாநதி யியல்பி ளுலுடற் சூழ்ந்த வன்பிர மத்தி நீங் கினு, ளாயு ளுள்ளநா டிருவ ரஞ்சையி னமல நாயக னடிவ ணங்கி பின், மாயு வாகியே மீள வும்புவி வந்து யோனியே தங்க ளுற்று டற், றேயு மாறுகொண் டேள்வி லாதடேதார் சென்ன சாகரத் திடை யின் மூழ்கினன்.

(இ-ள்) நதியில் நீராடிய மகிமையால் தேகத்தைப்பற்றிய பிரம்ம ஹத்தி நீங்கியது. ஆயுளுள்ளவரையில் வரஞ்சையில் வாஞ்சை நாதனை வணங்கி உயிர் பிரிந்தபின் பூமியில் பலஜனனங்களெடுத்தான் சுo

ஆசை வாரிதி யர்ன்ம யங்குவா னன்னை யைப்புணர் கின்ற நிந்தையாற், பாச வெவ்வினை பிறவி நீந்திமுன் பரவு கோமுகியாடு மப்பயன், வாச வன்பதஞ் சிலது நாளுற் வாகி மீளவு மகித லத் தூழி, பூசு ரன்குல முற்று வந்தனன் புகழ்வ ரெஞ்சுறத் திருவ ரஞ்சையே.

(இ-ள்) ஆசையால் மயங்கி அன்னையைப்புணர்ந்த பாவத்தால் பல பிறவி எடுத்து, கோமுகி நதியில் மூழ்கிய புண்ணியத்தால் அவை நீங்க, தேவ லோகத்திற் சில நாளிருந்து பின் பிராமணனாகத் திருவாஞ்சரத்திலே பிறந்தனன். சுக

வந்த வேதியன் னெறிவ ழாதுதன் வருண நூல்வழி முறைதெ ரிந்துமா, விந்து சேகரன் பூசை நாடொறு மினிதி யற்றிய கனிவு ளத்தினன், முந்து தீவினைப் புணரி நீந்தியே முத்தியின்கரை பற்றி யேறவும், விந்து நாதமாம் பரம சின்மய வீடு சார்வுற மேவு சிந்தையான்.

(இ-ள்) தன் வருணாசிரம நெறிதவறாமல் சாஸ்திர விதிப்படி சந்திர சேகர மூர்த்தியை நாள் தோறும் சிந்தித்து, தீவினைக்கடலைத்தாண்டி முத்தியாகிய கரையைப்பற்றி ஏற, விந்து நாதமாய் விளங்கும் சின்மய ரூபத்தைச்சார்ந்திருந்தான். சுஉ

தேன திப்புன லாடி வேதியன் சிவனை யேத்தியும் புனித் மாகிய, மோன மேவுசந் யாசி யென்றுள முதன்மை யுற்றுறத் துறவு பூண்டு மெய்ஞ், ஞான போதமுள் ளுணர்வ தாகிநா லாம்ப தந்தனி னண்ண லாயினன், மோகி லந்திகழ் திருவ ரஞ்சையின் மன்னு மாந்தருக் கின்னல் தீருமால்.

(இ-ள்) கோமுகி நதியில் நீராடிய பிராமணன் சிவபிரானைத்துதித்து, பரிசுத்தமாகிய சந்நியாசம் பெற்று ஞான வுணர்வால் நான்காவது பதமாகிய சாயுச்சிய பதவி யடைந்தனன். ஆகையால் வாஞ்சரத்தை வணங்கினவர் கள் துன்ப நீங்கப் பெறுவார்கள். சுங

கமல மலர்வள மான திப்புனல் கருதி யாடியுந் திருவ ரஞ் சையிற், பழமை கொண்டுயர் பசுப தீசர்தாள் பரவி யேதொழு தின்ற வேதியன், விழும முற்றிடு பிரம ஹத்திநோய் வெருவி யோடியு புதுமை யென்றுதாள், தொழுத மன்னனுக் குயர்ச பரலி முன் சொற்ற தென்றுரை சூதன் மற்றுமே.

(இ-ள்) நிறைந்த கோமுகியில் நீராடி திருவரஞ்சை பசுபதீசர் பாதத்தை வணங்கிய வேதியனை விட்டு துன்பந்தரும் பிரம்மஹத்தி பயந்தோடிய புதுமையை பிராட்சேனனுக்குச் சாபாலி முனிவர் கூறிய தென்று சூத முனிவருரைத்துபபின்னும் கூறுவார். ௪௪

*தீதி லாவர முதவு மாதலந் தேவ ராதியர் சேரு மாநதி, கோது நீக்கிவெம் பிறவி தீர்க்குமக் குறிப்பை நோக்கிவந் தடை வர்யாவரும், ஆதி யண்ணல்தன் பாக மேவிய வமல நாயகி கிருபை யாகுமந், நீதி யாகிடு மென்ன வேசவு னதி யர்க்கிவை நெறியு ரைத்தனர்*

(இ-ள்) துன்பம் நீங்க வரமுதவும் தலம் திருவரஞ்சரமாகும். தேவர்கள் வந்து நீராடும் நதி கோமுகியாகும். குற்றமற்ற பிறவி நோயை நீக்குபவர் பசுபதி நாதராகும். நீறணி யம்பிகையின் கிருபையே இவ்வளவிற்குங்காரணமென சவுனகாதியர்க்குச் சூதமாமுனிவர் கூறினர். ௪௫

*மன்னு வன்பிர மத்தி நீங்கிய வாறு தன்னையே மகித லதனுளோர், முன்னி யேவின வுற்ற பேர்களு மோது வோர்களு முவகை நண்ணியே, துன்னு வன்புக ழாகி மேதகு தொல்வ ரஞ்சையி னண்ணல் பாலுறை, கன்னி நீறணி கிருபை யுஞ்சிவ காட்சி யின்செயல் பெற்றும் வாழ்வரே.*

(இ-ள்) தீராத பிரம்மஹத்தி நீங்கிய சரித்திரத்தை அன்போடு கேட்டவர்களும், படித்தவர்களும் சந்தோஷ முற்றவர்களாய், புகழையுடைய வரஞ்சரத்திலுள்ள நீறணி யம்பிகை கிருபையும், சிவ தெரிசனமும் பெற்று வாழ்வார்கள். ௪௬

பிரம்மஹத்தி விமோசனச் சருக்கம் முற்றுப்பெற்றது.

**சருக்கம் ௧௩—க்குத் திருவிருத்தங்கள் ௬௱௪.**

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# சுமணிச் சருக்கம்.

வேறு

வள்ளல் விளங்கும் வரஞ்சையின் மாநதி மருவாமுன்
னெள்ளரி தென்ன வெழும்பிர மத்தி யினைக்காதித்
தள்ளுறு காதை யறிந்தனன் மாதவ தகைவின்றிக்
கள்ளுணு வன்பிழை பொன்றிடு காதை கழறென்றே.

(இ-ள்) வள்ளலாகிய சிவன் விளங்கும் வரஞ்சரத்திற் செல்லும் நதியில் நீராடி பிரம்மஹத்தி நீங்கிய கதையை அறிந்தேன். தவசிரேஷ்டரே! கள்ளுண்பதால் வரும் பாவம் நீங்கிய கதையைக் கூறவேண்டும் என்று. க

அடியுற வாக வணங்கிய வேந்த னருள்சாரும்
படிமுனி சாபா லியுமகிழ் வெய்திப் பார்மீதி
னிடருற வாமோர் மறையவன் முன்னா ளினிதாகக்
கடிமலர் முல்லை சூழ்தல மேவுங் கதைகேண்மோ.

(இ-ள்) பாதத்தில் வணங்கிய அரசன் அருள்பெற, சாபாலி முனிவர் மகிழ்ந்து, பூமியில் முன்னால் துன்பமுற்ற ஒரு பிராமணன் முல்லைவனஞ் சூழ்ந்த திருவாஞ்சரம் வந்து பேறுபெற்ற சரித்திரத்தைக்கேளும், உ

நாகம துற்று விரைந்தெழு கங்கா நதிபாங்கர்
நாக மராவி விரிந்தெழு தண்பூ நறுங்கோட்டில்
நாக மசைத்திட மலரணை போலு நலங்காட்டா
நாக மகிழ்ந்துறை யும்பர் விரும்புறு நகராமால்.

(இ-ள்) பேருபர்வத சார்பு தொடங்கிவரும் கங்கைநதியின் இருபுறங்களிலுமிருக்கும் புன்னை மரங்களிலுள்ள மலர்ந்த வாசனையோடுள்ள புஷ்பங்கள், கிளைகளிலிருந்து குரங்குகள் அசைப்பதால் கீழே விழுந்து கங்கா நதிக்கு மலரணை யிட்டதுபோல் விளங்குவதும், தேவர்கள் விரும்பப்படுவதுமான ஒருநகர முண்டு. ங

ஒருபுடை சோலை யதின்மிகு தோகை யுறவாடு
மொருபுடை யிற்பூம் பொழிலளி ராக முவந்தோது
மொருபுடை கங்கை குளிர்புனல் வாடை யுறவீசு
மொருபுடை நன்னீர்த் தடமதி லன்ன முலாவுங்கால்.

(இ-ள்) ஒரு பக்கத்திலுள்ள சோலைகளில் மயில்கள் ஆடும் ஒரு பக்கமுள்ள நந்தவனத்தில் வண்டுகள் இசைபாடும், ஒரு பக்கத்தில் கங்கை ஜலம்குளிர்ச்சியாக, வாடைவீசும், தடாகத்தில் அன்னங்கள் உலாவும். ச

கமல மலிந்த தடங்கட லிற்செங் கதிர்காணு
கமல மலர்ந்தெழி லாரு மருங்கிற் கடிகாவுட்
கமலம தோங்கு மியாக மியற்றுங் கருவாவி
கமல மகற்று மந்நகர் ஞானங் கனிவாழால்,

(இ-ள்) நீர் நிறைந்த தடாகங்களில் சூரியனைக்கண்டு அழகாக தாமரை மலரும் பக்கத்திலுள்ள சோலையில் அக்கினி யோங்கி யாகமியற்றுவதால் கருவிலுற்ற துர்மலங்களைப்போக்கி ஞானமே பிரகாசித்துக்கொண்டிருக்கும். ௫

கோகுல முற்றெழு மாடம தோறுங் குளிர்சோலை
கோகுல மொத்த மொழிச்சிய ரார்வங் குடைமேவும்
கோகுல வீதியின் மாமுர சார்வங் கொடிதான
கோகுலை செய்தோர் கங்கையி னன்னீர் குடைவார்வம்.

(இ-ள்) ஆகாய மளாவிய மேல் மாடிகளில், சோலையில்வாழும் குயில் போன்ற சொல்லுடைய பெண்களின் சந்தோஷ ஒலியும், பூச்சக்கரகுடையுடைய அரசர் வீதிகளில் முரச வாத்திய ஒலியும், கொடிய பசுக்கொலை செய்தோர் கங்கையில் மூழ்கும் ஒலியும் நிறைந்தது. ௬

யாகஞ் செயுமறை யார்வ மெழாநல் லருளாரு
மாகந் தவழும ராவதி யென்ன வளங்காட்டா
மேகந் தவழ்விரி காவிற் குளிர்புனல் மிகுவாளை
பூகந் தவழ்குலை தாவி யுதிர்க்கும் புகழ்காசி.

(இ-ள்) யாகம் புரியும் வேத ஒலியால் அருள்நிறைந்து அமராவதியென்று சொல்லத்தக்கதும், ஆகாய மளாவிய பூஞ்சோலைகள் நிறைந்ததும், நீரிலுள்ள வாளை மீன்கள் துள்ளிப் பாக்கு மரத்தின் குலைகளை உதிர்க்கும் புகழுடையதும் காசி நகரம். ௭

காசியி னெல்லை விரும்புவர் யார்க்குங் கதிகாட்டா
வீசலை யுற்றெழு சானவி தன்பால் மிகுவேதப்
பூசுரர் மிக்க நேச முடன்பொற் புறவாழுந்
தேசுடை மிர்த்துஞ் செயபுர மொன்று சிறப்பாமால்.

(இ-ள்) காசியை விரும்பி வருவோர்க்கு மோக்ஷமளிக்கும் கங்கை நதியின் பக்கத்தில், வேதியர்கள் வாழும் அழகுடைய மிருத்தியுஞ்செயபுரமென்றொரு நகரமுண்டு ௮

குலமுறை யுற்று நெறிவழு வாது குன்றவில்லாத்
தலைமையில் மேலா நிதிகளின் மாறு தழைவாகி
யிலகிய தேய மதின்வள மேயா மிதுவென்ன
பலகுடி மாக்கண் மிகவும் விளங்கிய பதிமாதோ.

(இ-ள்) குலத்திலும் ஒழுக்கத்திலும் குறையாதவர்களாய், மிகுந்த செல்வந்தழைத்து, இதனிலும் செல்வமுடைய நகர மில்லையென்று சொல்லும் வளப்பமுடைய குடிகள் வாழும்படியானது அந்நகரம். ௯

அப்பதி வாழும் வேதியர் தம்மி னழகாரு
மொப்பனை யில்லான் மெய்ப்புனி தத்தோ டியர்வாகி
கப்பிய வன்பொறி யூடுறு சிந்தை கலங்காதான்
செப்பரி தாகும் பாஷ்கள நாமத் திறலோனே.

(இ-ள்) அந்நகரில் வாழும் வேதியர்களுள் மிக்க அழகுடையவனும், ஒருவரையும் உவமானஞ் சொல்ல முடியாத பரிசுத்த சரீரமுடையவனும், ஐம்பொறிவழி சென்று மனங்கலங்காதவனுமான பாஷ்களனென்றொருவனிருந்தான். ௧௰

ஆகம வேத நீதியி னேர்மை யறிவுள்ளான்
வாகுறு கால மூன்றறி னுண்மை வழிகண்டோன்
போகம் விரும்பிய பாரியின் வாண்முக பொற்பாகும்
பாகுறுமென்மொழி சோபனை யென்னும் பகர்பாவை

(இ-ள்). வேதாகம மெந்றியுணர்ந்தவன், முக்காலமும் அறியும் சக்தியுள்ளான். அவன்து சுகத்தை விரும்பிய மனைவி அழகிய முகமுடையவளும், இனிமையான குரலுடையவளுமான சோபனை என்பவள் கக

மாதவ விரதந் திகழ்மறை நீதி வழிநின்ற
காதல னோடு மருவிய சோபனை கருவாய்ந்தங்
காதர வாய்வயிற் றூன்முதிர் வாகி யருண்மைந்தர்க்
கோதரு நாமம் பூதல மீதைந் தாவாமால்.

(இ-ள்) தவமும் விரதமும் தவறாது வேதவழி நிற்பவனாகிய பிராமணனோடு சோபனை யானவள் சேர்ந்து கருப்பந்தரித்துப்பிறந்த குழந்தைகளை உலகினர் அழைக்கும் பெயர் ஐந்தாகும். கஉ

ஆயுயர் தந்தை யுளங்களி கூர்வோ டகலாத
மேய மிகுந்திறல் சுமணி மணித்திகழ் நெறியுண்மைச்
சேயுயர் சின்மணி தரணி யென்னும்புகழ் செறிகின்ற
மாயா நாச மணிப்பெய ரைந்து மக்வென்றே,

(இ-ள்) தாய் தந்தையர் மனமகிழ்ந்து அன்போடு பெற்ற புதல்வர்கள் சுமணி, மணி, சின்மணி, தரணி, மாயாநாசமணி என ஐவராகும். கங

சேணுயர் தண்மதி யென்ன வளர்ந்து திகழ்நூல்க
டோணுறு சிந்தை தெளிந்தன ராகித் தூய்தாய்மெய்ப்
பூண்ணி யாரந் தாங்கி மிகுந்த புகழ்மேவா
நீணில மீது சிறந்தனர் வேத நெறியோரே.

(இ-ள்) வளர் பிறைச்சந்திரன்போல் வளரும் ஐந்து பிள்ளைகளும், வேதாகமங்களை யுணர்ந்தவர்களாய், தேகத்தில் ஆபரணமணிந்து மிகுந்த புகழோடு விளங்கினர் வேத நெறியுடையோர். கச

ஈன மகற்று நூல்வழி செல்லு மியல்பாகி
மாநில முற்ற வைந்தெனு மைந்தர் வளர்நாளில்
மேனி லனங்க னெனத்திகழ் முன்னோன் விறல்வேதந்
தானவில் வல்ல சுமணி யெனும்பெயர் தகவோனே.

(இ-ள்) குற்றமற்ற நூல்வழியே செல்லுபவர்களான ஐந்து பிள்ளைகளும் வளரும் நாளில், மன்மதன் போன்ற அழகுடையவனும், எல்லோருக்கும் மூத்தவனும், வேத சாஸ்திர விற்பன்னனுமான சுமணி யென்பவன்.

உயர்நெறி யாசான் மலரடி தாழ்ந்தங் குபதேசச்
செயலொடு புனிதத் திறனொடு சிந்தைத் தெளிவாய்நன்
பயனுணர் வாகித் தந்தையொ டன்னை பதமீது
நயமலர் தூவிப் பூசனை நாளு நடாத்துங்கால்.

(இ-ள்) குருவினிடத்தில் உபதேசம் பெற்றுக்கொண்டு, தெளிந்த மனமுடையவனாக, மாதா பிதாக்களின் பாதங்களில் மலர் தூவி பூசை செய்து வருவான். கசு

சால விளங்கு நன்னெறி சிந்தை தன்னால்மூக்
காலமறிந்து நாடொறுஞ் செய்யுங் கருமத்தான்
ஞாலம துள்ள நன்னதி யாடு மனைவநாடி
மாலுற வன்னை பிதாவுரை கொண்டுமகிழ் வானன்.

(இ-ள்) விசாலமுண்டய அறிவினால் மூன்று காலங்களையுமறியும் வல்லமை பெற்று நற்காரியங்கள் செய்பவன் தீர்த்த யாத்திரை செய்ய எண்ணி தாய் தந்தையர்களிடம் அனுமதி பெற்று மகிழ்ந்தனன். ௧௭

மகிழ்வொடு குரவன் மலரடி போற்றி வளமேவுந்
தகவுல கூதி வலம்வரு சிந்தை தனையோதி
யிகபர முஞ்சா தகமுறு கேள்வி யினிதார்ந்து
புகழ்பெறு தீர்த்த மருவிய திசையுட் புகுவானால்.

(இ-ள்) குருவின் பாதத்தை வணங்கி, பூமி வலம் வரவேண்டுமென நினைத்த தனது எண்ணத்தைத் தெரிவித்து, இகபர சாதகமான விஷயங்களையும் அறிந்து கொண்டு தீர்த்தங்களுள்ள திசையிற் செல்வான். ௧௮

நறைகமழ் தீர்த்த நதிபல வாடி நடந்தேகி
மறைபயில் வுற்றுத் திசைக டிரிந்து வருநாளிற்
செறிவுடல் வெம்மை வெதுப்புள வாகத் தீமண்டி
நெறிதடு மாறு மொருநகர் வந்தான் நிசியூடே.

(இ-ள்) வாசனையுடைய புஷ்பங்கணிறைந்த பல தீர்த்தங்களில் மூழ்கி, வேத பாராயணஞ் செய்து கொண்டு வருபவன், தனது தேகத்தில் உண்டான வெப்புநோயால் வழி தடுமாறி இரவில் ஒரு நகரம் வந்தான். ௧௯

துதிபெறு நல்லோர் நனியுடை பிரமேஸ் வரமென்னும்
பதியுறு போதி னிறையிருண் மூடும் படியாலோர்
பொதுமகள் முன்றி லொருமனை தன்னிற் புறமெய்தி
மதிதடு மாறு முடலின் வெதுப்பு மருவுற்றே.

(இ-ள்) புகழ்பெற்ற நல்லோர்களிருக்கும் பிரமேஸ்வரமென்னும் நகரை யடைந்த போது அதிக இருளாகவிருந்தமையால், ஒரு தாசியின் வீட்டுத்திண்ணையை அடைந்ததும் புத்தி தடுமாறி வெப்புநோய் அதிகமானது. ௨௦

காப்பிர ளக்கொண் டேவுயர் சிந்தைக் கரைவாகி
பாப்பனி மாக்க ளில்லிது வல்லென் பதுதேரான்
நாப்புலர் வாலே நீர்கொடு மென்றே நலிசெய்து
கூப்பிடு கின்றவை கேட்டனள் கணிகைக் குலமாது.

(இ-ள்) கால் கைகள் கட்டு விடுவதுபோற் புரளுவதால் மனம் கரைந்து, பிராமணர்கள் வீடு இது வல்லவென்பதை உணராதவனாக நாவரட்சியினால் நீர் வேண்டுமென வருத்தத்தோடு கேட்பதை யறிந்தாள் தேவதாசி.

அன்னவள் யார்கொல் மின்னிருள் யாம மருந்தாக
மன்னிய நன்னீர் வேண்டின னென்னே வழங்கென்னத்
தன்னரு கேவல் புரிந்திடு மாது தனைநோக்கிச்
சொன்னது கேளா வேகின ளப்பைந் தொடியாளே.

(இ-ள்) அர்த்தராத்திரியில் யாரோ தாக சாந்திக்கு நல்ல நீரை விரும்புகிறார்கள் விரைவில் கொண்டுபோய் கொடுவென்று அருகிலிருந்த தாதிக்குச்சொல்ல, அது கேட்டவ்வவள் விரைந்து சென்றாள். ௨௨

பேணினோ டேகி யல்லிருள் சால்பிர மிப்பாற்
றோணிலங் காகி நீர்தரு மைக்குடத் தகரமேந்தி
வாணுதலாளொரு சூமணி தன்கை வழங்கத்தன்
பாணியு றக்கொண் டேகினை யின்றி பருகுற்றான்.

(இ-ள்) அன்போடு சென்ற அத்தாதி மிகுந்த இருளால் மயங்கி ஒன்றுந் தோன்றாதவளாக நீரென்று கள்ளைப் பாத்திரத்தில் (முகந்து மொண்டு) கொண்டுவந்து சூழ்மணி கையில் கொடுக்க அவன் வாங்கி புத்தி தெளிவின்றி அதைக் குடித்தான். ௨௩

பருகிய பின்ன ரிருளது நீங்கிப் பகலோனுந்
தெரிதரு காலைச் சுரபடிவி போதிற் றெளிவர்கிப்
பொருணிகொள் வாசம் புனித முகத்திற் பொற்கட்டா
நிரையமு றாக்கு மதுவென வுள்ளந் தெறிந்தேர்ந்தே.

(இ-ள்) நீரென்று நினைத்துச் சாப்பிட்ட பின் இருள் நீங்கி, சூரியனுதயமாகுங்காலையில் சீர்ம விட்டு புத்தி தெளிந்து, முகத்தில் கள் நாற்றம் வீசுவதால் நரகத்திற்காளாகும் கள்ளை யருந்தி விட்டோமென அறிந்து கொண்டான். ௨௪

அந்தோ இங்கேதோ வென்னினி செய்வ தியாமென்றே
னொந்தோ நொந்து நூனெறி பிழைவா னுகைவோடு
சிந்தா குலமாந் தீவினை யொன்றுஞ் செயல்காணே
னெந்தா யெந்தா யென்றுள் ளைந்து பிளைத்தானே.

(இ-ள்) ஐயோ! ஐயோ! நான் என்ன செய்யப்போகிறேனென்று நொந்து, நூல்வழி தவறிய தீர்வால் வருந்தி, தீவினை தீரும் விதமெப்படி? ஐயா! ஐயா! வென்று மனமுருகினன். ௨௫

வேறு

பொருந்திய வேத வாகமமாம் பெருங்கட னீந்திப் போதமிகுந்
திருந்திடு மென்றன் மாமுறைகள் திறம்பின திண்டிறன் செய்வதென
வருந்துறு கின்ற காலையினீர் வழங்கிடு மென்ற தாசியவள்
தெரிந்துழல் கின்ற வேதியநின் றீங்கினை யீங்கு செப்பெனவே.

(இ-ள்) வேதாகமக்கடலை நீந்தி கண்டுள்ள என் முறைகளெல்லாம் தடுமாறிக்கெட்டதே இனி என்ன செய்வதென்று வருந்தும்போது, தண்ணீர் கொடுக்கச்சொன்ன தாசியானவள் அறிந்து வேதியரே! உமக்கு என்ன தீங்குற்றது சொல்லுமென்றாள். ௨௬

செப்புக வென்ற வாரிழைக்கு தீய வேதப்புத் தாழ்நிலவா
லுப்பு விரும்பிக் கேட்டனைக் காமந்த தக்கா லாவதுவோ
ஒப்புறு பஞ்ச பாதகமுள் ளொன்றிவை யென்றே யோதறிய
விப்புவி தன்னி லின்னறிவீ தென்னறி வென்றே யேசினனால்.

(இ-ள்) சொல்லுமாறு கேட்ட ஆரிழையே! வெப்புநோயால் நீரென்று ஜலம் கேட்டால் கள்ளைக் கொடுக்கலாமோ. பஞ்ச மகா பாதகத்தில் கள் ஒன்றென்றறிந்தும் அதைக் கொடுத்த உனது அறிவு இருந்தவாறு என்னே என்றேசினான் ௨௭

ஏசுதல் கேட்டே யக்கணிகைக் கேவல் திருந்து மாங்கவளைப்
பூசுரர் நிந்தை செய்வதெனப் புடைத்தக தினஞ்சிப் பூங்கொடியு
மாசிரு ளான தாகலினன் மாறும்வழங்கி னேனென்னவே
பேசி வணங்கல் கண்டுபினும் பேதை மகற்றும் விதம் சொல்வாள்.

(இ-ள்) அதைக்கேட்ட கணிகை தனது தாதியை அழைத்து, அந்தணருக்குத் தீங்கிழைக்கலாமோவென அடிக்க, அவள் பயந்து இருளானதால் தவறிக்கொடுத்து விட்டேனென்று சொல்லி வணங்க, தாசி கோபந் தணிந்து சாந்தியாக சில கூறுவாள். ௨௮

பொறியின் வருந்து வுன்பழிநோர் புலன்கொ டறிந்து பூமிதனி
லறங்களின் மூடற்றும் வாறெனவே யறைந்திடும் வேத மாதலினாற்
குறைவிலு வித்து மீய்வனுடற் கொதிக லச்செய் வேதியநின்
னெறியிது வென்று வேந்திழைமுன் னீதியின் வா றங் கோதுவனால்.

(இ-ள்) ஐம்பொறியினால் வருந்துன்பங்களை அறிவினாலே உணர்ந்து, பூமியில் பொருள் கொண்டு தர்மம் செய்யின் நிவர்த்தியாகு மென்பது வேதப்பிரமாணமாகையால் நான் வேண்டிய பொருள் தருகிறேன். அது கொண்டு உனது துயரத்தை நீக்கிக்கொள்வாயென, வேதியன் உண்மை நெறியை அவளுக்குக் கூறுவான். ௨௯

மாதவ முன்னோர் சாபமுடை வாணித மெய்யார் மாந்தர்நெறி
பேதுவி ரா தும் மாந்திரர் கேழேழு சென்மமெய்திடுவார்
போதமி லென்ற னிச்சையினாற் பூண்டிடு புன்மை தீதகல
காதிய செந்தீ யென்னமது காய்ச்சி யருந்துதல் காரணமே.

(இ-ள்) மகா தவமுடைய முன்னோர்களால் இழித்துக் கூறப்பட்ட கள்ளை மனிதர்கள் உண்பார்களாயின் ஏழேழு பிறப்பும் நரகமடைவார்கள் அறிவுமயங்கி என் இச்சையினால் நான்செய்தபாவம் தீர, உலையிற்காய்ச்சிய மழுவைப்போல் மதுவைக்காய்ச்சியருந்துதலே முறைமையாகும. ௩௰

அன்றியறங்கள் செய்திடினு மச்சுவ யாக மேயுறினு
மென்றன தீமை யேகியிடா தென்ன விளம்பிய வேதியனும்
வன்றிற லோமப் பண்பினுயிர் மண்டிய செந்தீ வாயிடையி
னொன்றிய கள்ளை வெம்மையினோ டுங்கொதி கொண்ட காலையுமே.

(இ-ள்) அப்படியன்றி தர்மம் செய்தாலும், அசுவமேத யாகம் செய்தாலும் எனது தீமை தீராதென்று வேதியன் ஓமம் வளர்த்து அதில் மதுவை வைத்துச்சிவக்கக்காய்ச்சி அது கொதிக்கும்போது. ௩௧

வெந்திட வுந்து சஞ்சலநோய் மேவுதல் கண்ட வேளைதனிற்
சிந்தில தாக சானவிசேர் செஞ்சடை யோனைச் சிந்தனையாய்
வந்தனை செய்தினைத்துயரும் வுன்பில தாகி மாறுமெனத்
தந்தை யுரைத்த போதனையை தானினை வுற்ற போதினிலே.

(இ-ள்) தேகத்தைத் தகிக்கும் துன்பநோய் அணுகுமோ? சடையிற் கங்கையை யணிந்த சிவபெருமானை நினைத்தால், எந்த துயரமும் நீங்கி விடுமென்று தனது தந்தை கூறியுள்ளதை நினைத்தான். கஉ

உரைக்கனி வுற்ற தேசிகர் தம் முளத்துள் விளங்கு மாமணியே
வரிக்குல மார்ந்து தேனிதழ் மலர்க்கொன்றை மேவு வார்சடையோய்
கருக்குவை கொண்ட யோனிகளிற் கணக்கில தாய வன்பிறவி
நெருக்குவ தாகி யாழ்நர கினிலைத்துழ லாது நீயருளே.

(இ-ள்) கனிந்த மனமுடைய பெரியோர்கள் மனதில் விளங்கும் மணியே! வண்டுகள் தேனருந்தும் கொன்றைமாலை யணிந்த சடாதரனே! கருக்கள் நிறைந்த பல பிறவிகளில் தோன்றி நரகமடையாமல் அருள் செய்ய வேண்டும். கங

முடித்திகழ் கங்கை தாவுதனி முதற்சுடரேயீ ரேழுலகும்
படைத்தய னாதி தேடரிய பத்தத்துணை யாளே பாடலியாற்
றொடர்ப்படு மாசு கொண்டவெனக் குன்னை யலாதா ருண்மை செய்வா
ரிடைச்செறி புண்டரீகவத ளிலங்கு மணிச்சீ ராதியனே.

(இ-ள்) கங்கை முடித்த முதற்சுடரே! பதினான்குலகும் படைத்த பிரமன் முதலியோர் தேடுதற்கரிய பாதனே! கள்ளுண்ட குற்றமுடைய வெனக்கு உன்னையன்றி உதவி செய்வாரெவர்? புலித்தோலும் ருத்ரமணி மாலையும் விளங்கும் ஆதிபரனே. கச

வேறு

பங்கை யாசன னமைத்ததோ முன்செயும் பழவினைத் தொடர் பன்றே, துங்க நான்மறை யோதி மந்திரந் துதித்தும்வந் தனை யாக, மங்கை பாகனை வாழ்த்தியும் புவிவலம் வந்தருந் தவமுற் றும், கங்கை யாடியும் பவமகன் றிலையெனுங் கதையெனக் குள தாமால்.

(இ-ள்) இது பிரமன் செய்கையோ? முன்செய்த பாவவினைத்தொடர் போ? வேதமோதியும், மந்திரங்களை யுச்சரித்தும், பார்வதி பாகனைத்துதித்தும், பூமி பிரதக்ஷணம் செய்தும், கங்கை நீராடியும் பாவமகலவில்லை யெனும் கதை எனக்கே தக்கதாகவிருக்கிறது. கரு

ஆதி நான்முறை யாகம வழிபுணர்ந் தருட்டுறு முயர்ஞான
போத வாரிதி யூடுற முயங்கினும் புனிதமுற் றறஞ்செய்துங்
கோத கற்றநல் விரதம தியற்றினுங் குலவுமுன் பிழையாலீங்
காத மேகினுந் தன்பவந் தன்னுடன் காண்டவா றிதுவென்றே.

(இ-ள்) ஆதியான நூல் முறை, ஆகமவழி முதலியவற்றை யுணர்ந்து, ஞானக்கடலில் மூழ்கி தர்மஞ்செய்து விரதங்களை அனுஷ்டித்தாலும், முன் செய்த தீவினையானது; 'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னுடனே' என்பதுபோல் நீங்காமலிருப்பதுதான் கண்டோம் என்று. கசு

பாவ வாசகந் தனிலுரைக் கின்றது படிமிசை தெளிவுற்றோர்
புரைகொள் வேதனைக் கஞ்சிடா ரென்பது பொருந்திய துணிவோடு
மருவு வாரணத் துரிபுனை யண்ணலை வாழ்த்திவன் பிழைதீரக்
கூறுவர் சொற்படி தனதுடற் றண்டனைக் கொள்ளுற நினைவுற்றான்.

(இ-ள்) சாஸ்திரங் கூறுகிற்ந்த பூமியில் தெளிந்தோர் வேதனைக்குப்பயப் படமாட்டார்கள். மிருகத் தொனியோடு யானைத்தோலை யணிந்த சிவ பிரானைத் துதித்துக், குற்றந்தீர குருவுபதேசப்படி தனது உடலைத்தண்டனை க்குட்படுத்த வேண்டுமென நினைத்தான். ௰௭

உற்ற மந்திர நவின்றில மாமறை யோதில னயர்வாகி
மற்று நல்லறம் புரிந்துயிர் பவந்தனை மாற்றிடு நினைவின்றிப்
பெற்ற மாவிர தத்தவ றிதுவெனப் பிறங்குளஞ் சலிவுற்றுக்
கற்றை யஞ்சடை யண்ணலார் செயலெனக் கருதியீ திசைப்பானால்

(இ-ள்) மந்திரங்களைச் செபிக்காமலும், வேதபாராயணஞ் செய்யாமலும் மருண்ட சிந்தையோடு தர்மம் செய்து பாவத்தை நீக்கவும் நினைவின்றி, விரதந்தவறியதால் மனங்கசிந்து இது சிவன் செயலென நினைத்துக்கூறு வான். ௰௮

## வேறு

பரவுங் காசித் தலமீ துறையும் பரனே விசுவே சுரனே சர ணம், புரமூன் றெரிசெய் நகையாய் சரணம் புனிதத் திருநீ றொளி யாய் சரணம், கரமான் மழுவோ டபயா வரதக் கருணா கரகண் மணியே சரணஞ், சுரபா னமதால் வருதோ டமுநீ தொலைசெய் தருள்வாய் விமலா சரணம்.

(இ-ள்) காசி க்ஷேத்திரத்திலிருக்கும் விசுவேசுரனே! சரணம் முப்புராதி களை நகைத்தெரித்தவனே! சரணம். திருநீறணிந்தவனே சரணம் மான் மழுவும், அபயவரதாஸ்தமுமுடைய கருணைகனே! சரணம். கள் அருந்திய தோஷத்தைத்தொலைத்து அருள் செய்வாய் சரணம். ௰௯

காவா யெனுநின் னடியார் நினையுங் கருமந் தவறா தருள்வாய் சரணந், தேவா தியர்தந் தேவே சரணந் திரிசூ லகரப் படையாய் சரணம், பூவா லுயர்மா மறையா லுனையே புனிதத் தொடுபூ சனைசெய் திடுவோர், மேவா வமரு மிருசெஞ் சரணா விமலாவெனை யாளமலா சரணம்.

(இ-ள்) காப்பாற்றுமென்று நினைக்கும் அடியார்க்கு அருள் செய்பவனே! சரணம். தேவாதி தேவனே! சரணம் சூலமேந்தியவனே! சரணம். வேதமோதி பூவால் அர்ச்சனை செய்வோரின் இடமகலா திருவடியுடைய வனே! சரணம். விமலனே! என்னை ஆட்கொள்ளும் அமலனே! சரணம்.

கமலா சனிகேள் வனுநான் முகனுங் கருதற் கரிதா னவனே சரணஞ், சமரா கியநீர் தரனைச் சிதையுந் தலைவாகிருபை தருவாய் சரணம், அமரா பதிகாத் திடும்வே லவனே யருள்வா யெனையா ளிறைவா சரணம், உமையாள் கணவா தமியே னுடலின் னுறுதீ வினைதீர்த் திடுவாய் சரணம்.

(இ-ள்) பிரம்ம விஷ்ணுக்களால் நினைத்தற்கு அருமையானவனே! சர ணம். சலந்தரனை சம்மரித்த தலைவனே! அருள் புரிவாய் சரணம். அறு முகனைப்பெற்றவனே! சரணம். பார்வதி கணவனே! எனது உடலி லுள்ள துன்பத்தைப் போக்குவாய் சரணம். ௨௰

வழிபா டிவையே துதிசெய் துலவாய் மழுவா மெனவே கொதிகொண் மனுகன், பழுதே துகர்வா னயமுந் தனி ...

றெதிர்வந் திடலுங் கழலிற், றொழும்வே தியனை வெருவா தொழி
பிச்சுரப்பா னம்தற் குப்பாசந் தீர்த்தும், பழிதீர் வதனுக் கதுபோ
விலேபா ரதனிற் பரிவா மென்னவே பகர்வுற்றார்

(இ-ள்) என்று துதித்து, உலைவாய் மெழுகுபோல் கொதிக்கும் கள்ளை அழுதுகொண்டே குடிக்கப்போகுந் தருணத்தில் சிவபெருமான் எதிரில் தோன்றி, பயப்படாதே கள்ளுண்ட தோஷத்தைத் நீக்குவதும் மகா பாதகத்தை நீக்குவதும் உலகில் வேறில்லையென்று சொல்லத்தக்கதுமாயிருப்பது.

வேறு

மிகுமிப்பதி நேர்வை செந்தழலோன் மேவுந்திசை தன்னில்
விற்றப்பதியாய், திகழ்வுற்றிடு மன்றி பூம்பூடசூழ் செறிமுல்லை
வனந்தனி லாதிசெய், லசமுற்று விளங்கும் வாஞ்சையதா மதி
லெய்திடு பங்குனி யுத்திரநாள், மகிழ்வெய்துவை யங்கதி நீர்படி
யின் மதுமாந்திய பாவ மகன்றிடுமே. ௨௩

(இ-ள்) இந்நகரின் அக்கினி மூலையில் முல்லை வனஞ்சூழ்ந்ததும், கோமுகி தீர்த்த மிருப்பதுமான திருவாஞ்சையென்றும் ஒரு தலமுண்டு பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திர தினத்தில் அங்கு சென்று அந்நதியில் நீராடின் கள்ளருந்திய பாவமொழியும்.

அவிர்மூவிலைச் சூல்மு னாட்டினமங் கதிலாகிய மானத தீர்த்
தமுள, தெவராயினு மின்னல் கொடுத்துயரத் திழிவாகுநர் வந்ததி
னீர்படியிற், றவிர்ந்து றவல்வினை கோடியெனுந் தவிர்கின்றது தன்
னிடை தோய்ந் தெழில்செந், துவர்வாய்வுள நீறணி தன்னொடுநந்
துணைமாமலர் பாத மிறைஞ்சிடுநீ ௨௪

(இ-ள்) ஒளியுடைய சூலாயுதத்தை முன் நாமங்கு நாட்டின விடமானத தீர்த்தமென்று விளங்குகிறது. துன்பமுடையோர் அதில் மூழ்கின், வினைநீங்கப்பெறுவார்கள். நீ அங்கு சென்று நீராடி நீறணியப்பிகையோடுள்ள நம்மை வணங்குவாயாக.

பரிசுத்தம தாகியுடற்செறியும் பவமோடிடு, நாள்சில வைகி
யதி, லரிசுற்றிய தூய்மலர் கொண்டுநம தடிமீதுற வர்ச்சனை செய்து
நனி, விரிவுற்றெழு பூக்கல் மீதினுமுன் வியன்மாநகர் மேவி யிருப்
பமுடன் தெரிவுற்றுள முத்தி யெனும்பதவி திறனுகு நெறிச்
செயல் சேருவையால. ௨௫

(இ-ள்) அப்படிச்செய்யின் உனது தேகம் பரிசுத்தமாகி வினை நீங்கும், அங்கு சிலநாள் தங்கி எம்மை மலர்கொண்டு அர்ச்சித்து மின் பூப்பிரதக்ஷிணமாக உனது நகர் சென்றிருந்து முத்தியடைவாய் என்றனர் சிவபிரான். ௨௬

எனவோதிய வள்ளல் மறைந்திட்டனு மினிதென்றிஞ்ச மாகி
பெயரிற் சுமணி, கனகத்திர ளிலவர் காண்டலெனுங் கோட்சிப்பதி
காண்ப தெனும்பரிவால், மனமேவக மிருந்திட் டியிற்றிகழ்சேர்
வளம்பாவு மறிந்தவன் மாதலமுந், தினதாக விளங்கு வாஞ்சையி
தாஞ் செயல்கண்டு மகிழ்ச்சி யடைந்தனன்றே.

(இ-ள்) என்று கூறிய சிவபெருமான் மறைந்தவுடன், சுமணி தரித்திரன் பொற்குவியலைக்காணச் செல்வதுபோல் மிகுந்த விருப்புடன் சென்று,

வழியிலுள்ள வளப்பங்களை யறிந்துகொண்டு, எல்லாவற்றிலும் மேலானதாக விளங்கும் திருவாஞ்சரத்தைக்கண்டு மகிழ்ச்சியடைந்தனன். சசு

பண்டார்மறை யாகம நூல்வழியின் பகர்பங்குனி யுத்தரநாண்டினியக், கண்டோனதின் முழுகினன் முன்னுகருங் கவ்வைப்பவக் கீங்கின் வொல்லியினிற், தண்டாமரை யோடுயர் மானதநீர்தனினும்படி வாகி யெழுந்திசைகொள், வண்டார்கடி முல்லை வனத்தெழில்சேர் வளரிலயம் வந்து புகுந்தனனே.

(இ-ள்) ஆதி வேதத்தின் முறைப்படியே, பங்குனி உத்திரத்தில் கோமுகி நதியில் மூழ்கி துன்பம் நீங்கிய பின் மானத தீர்த்தத்திலும் நீராடி முல்லை வனஞ்சூழ்ந்த சிவாலயத்துட் பிரவேசித்தான். சஎ

பெற்றபிர்மதி னாலய நேர்வலமாய்ப் புரிவுற்றான் மாதுமை பூசையொடுஞ், சொற்பாவெழு மின்னிசை யானுயர்வாக் துதிசெய்துறு பாவ மகற்றினனாற், கற்போர்புகழ் மேவு வாஞ்சைதனிற் கருதிச்சில நாள்கள் கழித்தபினும், நற்பாரிடு மெய்தியு மன்னவன்முன் நண்ணும்பதி புக்குவ தாயினனே.

(இ-ள்) அழகிய மதிலையுடைய ஆலயத்தை வலம் வந்து, அரனேயும் அம்பிகையையும் பூசித்துத்துதித்து பாவமகன்றபின், சிலதினமங்கிருந்து, பூமி வலமாகத்தனது நகர மடைந்தனன் சஅ

தமக்கவி திதொகை யின்நெறியிற் சார்பாய்நெடுநாண் முயல் வாகியுமுன், னமர்கின்ற வாஞ்சைதன் மீதினுற வாகிச்செய லான வெழிற்சுமணி, யிமையோர்க ளறிந்தில தாயவருளெனுமீச னிடக்கொரு பாகமுளா, வுமையோடினி தேத்திய முத்தியெனு முயர்வீடு பொருந்தி யிருந்தனனே.

(இ-ள்) தங்கள் ஒழுக்க முறைப்படி சிலநாளிருந்து, முன்னுளிருந்த வாஞ்சரத்தையும், தேவர்களுக்குமரிதாகிய ஈசனையும் அம்பிகையையும் துதித்து முத்தி வீடடைந்தனன். சகூ

ஆதிச்செய லான தறிந்துநனி யஞ்ஞானம னத்தின ராயுலகோர், தாமத்திய பானம் விரும்புபவந் தவிர்கிற்பது வாகும் வாஞ்சைதனி, லோமப்பரி வானுயர் வேதியருக் குறுதானமோ டாநதிமானதநீர், நேமப்படி தோய்ந்தெழி னீறணிசேர் நிமலன்பதமேத்தி வணங்கிடவே.

(இ-ள்) இம்மகிமையை யுணர்ந்து, அஞ்ஞான மனமுடையோர் மத்திய பானம செய்தாலும் அப்பாவத்தை நீக்குவது திருவாஞ்சரம் வந்து யாகம் செய்து, வேதியருக்குத்தானமளித்து, கோமுகி நதியில் நியமப்படி நீறணி யம்பிகையோடு கூடிய பசுபதிநாதனைப்பூசித்து வணங்கினவர்களுக்கு. சு)

தவமேருடிடு மென்றா ஞெதியவிச் சரிதந்தனை யுண்மை கொளாதுமனத், தவரந்தக தண்டனை யோடுறவா பருணீணிரையத்தி லடைந்திடுவா, ரிவைகண்டு வாஞ்சை தனிற்பரிவா ராராயினு மீசனை யேத்திடுவோர், பவமுங்கொடி தாமது மாந்தியவன் பழிபற்றறு மென்று பகர்ந்தனனே.

(இ-ள்) பாவம் நீங்குமென்று சிவன் கூறிய இக்கதையை நம்பாதவர்கள் இயம தண்டனைக்கும் நரகத்துக்கும் ஆளாவார்கள் இதையறிந்து வரஞ்சரம் வந்து ஈசனை வணங்குவோர் யாராயினும் அவரது பாவமும், மதுவுண்ட பழியும் நீங்கும். ௯௧

மைக்கந் திகழ் கின்ற வரஞ்சைதனி லுயரீச னருட்பெறு காதையினை, காக்குஞ்சின முள்ளவர் வாதியர் தீங்கு கருகண்டிடு வோர்கரு தாதவரை, நீக்கிச்சிவ நேச முவந்ததவ நெறியோர்க் குரை செய்யு மிடங்கள்தெளி, வாக்கும்புன லார்நதி பாலுமர னாவிராலயம் வேதியர் முற்றமுமே.

(இ-ள்) மைக்கமோடு விளங்கும் வரஞ்சர நாதனது சரித்திரத்தை கோப முள்ளவர்களுக்கும், வாதஞ்செய்வோர்களுக்கும், தீங்கிழைப்போருக்கும் அன்பில்லாதவர்களுக்கும், சொல்லாமல் அவர்களை நீக்கி, சிவநேச முள்ளவர்களுக்கும், தவநெறி யுடையவர்களுக்கும், நதிக்கரை, ஆலயம், பிராமணர் வீட்டுவாயில்கள் முதலிய விடங்களிலிருந்து கூறலாகும். ௯௨

என்றேசுர பான மிரும்பிழைக் ளேகுஞ்செய லாரினி தச்சரிதந் தொன்றுனதி னென்று குறைந்தில்தா யோதுங்கரு தினனேனந் தலெனக், குன்றூர்சவு ஞதிய் ருள்ளமகிழ் கூரும்படி கூறினன் வேதநெறி, யின்றுனுயர் வாகிய சூதன்றருள் நிறைந்துங்கரு ணைக்கடல் நேரனையான்.

(இ-ள்) கள்ளருந்திய பாவம் நீங்கிய இச்சரித்திரத்தை ஒன்றுக்கொன்று குறைவின்றிப்படி சாபாலி முனிவர்கூற பிராட்சேனன் றிந்தனனென்று சவனகாதியர் மனமகிழக் கருணைக்கடலாக விளங்கும் சூதபுராணிகர் கூறினர்.

சுமணிச் சருக்கம் முற்றுப்பெற்றது.

சருக்கம் கச—க்குத் திருவிருத்தங்கள் ௯௯௩.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# இருடி பூசைச் சருக்கம்.

---

வேறு

பெரும்புக ழிருந்த வரஞ்சைதன் மகிமை பேசிய வாறெலா முணர்ந்து, விரும்பிய மனத்தான் மன்பிரட் சேனன் மெய்யகங் குழைந்து நெக்குருகி, வரம்பிலாச் சரிதை முன்றெரிந் ததினும் வளமிதென் றறிந்துள மகிழ்வாற், கரங்குவித் திறைஞ்சிப் பரவச மாகுங் கருத்தின னாகிய பின்னர்.

(இ-ள்) மிகுந்த புகழுடைய திருவரஞ்சரத்தின் மகிமை யுணர்ந்து, அன்புடை மனத்தனான பிராட்சேன மகாராஜன் அகங்குழைந்து நெக்குருகி, நானறிந்துள்ள பல சரித்திரங்களிலும் இது மிக்க மகிமை யுற்றதென்றறிந்து, மகிழ்ச்சியோடு கைகூப்பி வணங்கி ஆனந்த பரவசனாய். க

தாங்குமா மொழி மந்திரிதனைக் குறைத்துத் தன்பதி நிதிவர வழைத்தே, யோங்குநீர் யமுனைக் கங்கையி னடுவோ ருயர்ந்திடுந் தடம்பொழி லிடங்கண், பாங்குநாற் றிசையு மலங்கரித் திலங்கு பன்மணி குயிற்றிய பீட, மாங்குற வமைத்துச் சிவகதை யுரைத்த முனிவனை யாசனத் திருத்தி.

(இ-ள்) மந்திரிகளை யழைத்து தனது நகரம் சென்று திரவியம் கொண்டு வரச்செய்து, யமுனை நதிக்கும் கங்கை நதிக்கும் நடுவிலுள்ள சிங்காரத் தோட்டத்தில் நாற்புறமும் அலங்கரித்து நவரத்தின சிம்மாதனத்தில் சிவ சரித்திரங்கூறிய முனிவனை அதிலிருத்தி. உ

தூசுடைக் கலன்கண் மருவுத லளித்துத் துணைமலர்ப் பதங்களிற் சிறந்த, தேசுயர் கனக மலரிலர்ச் சனையுஞ் செய்துவெண் சாமரை யிரட்டப், பூசிய சுகந்த நறுமலர் தூவிப் புதுப்பனி நீர்கொடு துலக்கி, வாசகப் படியே முறைமுறை யியற்றி வரம்பிலாத் துதியொடு பணிந்தான்.

(இ-ள்) பட்டு வஸ்திராபரணங்களால் அலங்கரித்துப் பாதங்களில் பொன்மலரால் அர்ச்சனை செய்து, வெண்சாமரை வீச, வாசனையுடைய புஷ்பங்களை மழைபோல் பொழிந்து, பன்னீர்கொண்டு அபிஷேகித்து ஆகம விதிப்படி ஸ்தோத்திரஞ் செய்து வணங்கினான். ௩

தவமுனி குழாங்கண் சூழுநின் றவர்க்குத் தனித்தனி யாசன முதவிச், சுவைதரு முணவு நல்கியாங் கவர்தஞ் சுருதியா சியினைப் பெற்று, நவையிலாக் குரவர் தனதுள மகிழ நன்பதி தன்பதி யடைவித், தவிர்மணி மாட வீதிவாய்ச் சிவிகை யதில்வலம் வரவுஞ்செய் வித்தான்.

(இ-ள்) புடைசூழ்ந்துள்ள முனிவர் கூட்டங்களுக்குத் தனித்தனி ஆசனமளித்து, சுவைபொருந்திய உணவளித்து, அவர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, எல்லோரையும் தனது நகரத்திற்கு அழைத்து வந்து நவரத்தின மயமான சிவிகையில் ஏற்றி நகர்வலம் செய்வித்தனன். ௪

குடைநெருங் கிடவே பலபறை முழங்கக் கொடிதுவண் டசைவுற விருபா, லிடையிடை மிகுவெண் சாமரை யிரட்ட வெழுநகர் வலம்வரு பின்னர், கடிகமழ் கலவைச் சேறுட்டிப் பொருந்தக் கனகசிம் மாசனத் திருத்தி, விடியா வலர்ந்த மலர்மழை தூவி வேந்தனன் முறையொடு பணிந்தான்.

(இ-ள்) சந்திர வட்டக் குடைகள் இருபுறமும் நெருங்கிவர, பல வாத்தியங்கள் சப்திக்க, கொடிகளசைய, சாமரம் வீச, வீதிவலம் வந்தபின் சந்தன முதலிய வாசனைத்திரவியங்களளித்து, பொன் சிம்மாசனத்தில் வைத்து அன்றலர்ந்த மலரால் அர்ச்சித்துப் பணிந்தான். ரு

பணிந்தபின் முனிவ ரானவர்க் கெல்லாம் பரவுபசாரமும் வழங்கா, வணங்கக்கண் டவர்தம் முறைமகிழ் வொடுநன் வாக்குற வாசிதந் ததற்பின், நனுகுமா தவஞ்செய் சூழவி னுயர்சா பாலியு முனிவரு நடந்தார், அணிதிகழ் பதியின் வரம்பிலா நிதிகொண் டரசவீற் றிருந்தல காண்டான்.

(இ-ள்) முனிவர்களுக்கெல்லாம் தகுந்த மரியாதை செய்து வணங்க, அவர்கள் அன்போடு அளித்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பின் சாபாலி முனிவரும், முனிவர்களும் தங்கள் தங்களிருப்பிடம் செல்ல, அரசன் அளவில்லா செல்வத்தோடு அவ்வழகிய நகரை ஆண்டு வந்தான். சு

ஆளுமன் புகழும் பேரிசை நிறுத்தி யவனியை மனுமுறை நெறியாற், காளைய ரென்னும் புதல்வருக் களித்துக் கடந்தகத் துவமுடி விருந்த, தாளுடை சருவ லோககா ரணனுஞ் சங்கர னருட்குடி யிருக்கும், நீளகம் பொருந்தி யளவிலா வின்ப நிறைகட லுகந்திருந் தனனால்.

(இ-ள்) பெருங்கீர்த்தியோடு மனுமுறை தவறாமல் உலகாண்ட அரசன், தனது புதல்வர்களுக்குப்பட்டாபிஷேகஞ்செய்வித்து பின் தத்துவ முடிவிலிருக்கும் சருவலோக காரணனை சிவபிரானிருக்கும் கைலாயஞ்சென்று பேரின்பமாகிய கடலில் சுகித்திருந்தான் எ

என்னநற் சவுன காதியர்க் கிவ்வா றிசைவுற வரஞ்சைதன் மகிமை, சொன்னயம் பெறவே யுரைத்திடும் புனிதச் சூதனை முனிவரர் நோக்கி, மன்னிய வெமது கருத்தினுக் குயர்ந்த வரமெலா மளித்திடு மடிகண், மின்னெழி லிருந்த வரஞ்சைத்தன் வளமா வியனதி தெரித்திடு மென்றே.

(இ-ள்) என்று வரஞ்சரத்தலத்தின் மகிமையை சூதபுராணிகர்கூற, அதைக்கேட்ட சௌனகாதியர் எங்களுக்கு வேண்டிய வரமளிக்கும் தேவரீர் அந்நகர் வளமும் தெரிவிக்கவேண்டுமென வேண்டிக்கொண்டனர். அ

பூண்டிடு தாபத் திரையறு மகற்றும் புராதனன் வரஞ்சைதன் முதலூக், காண்டகு விதையச் சவுனகா தியர்தங் கருத்தி

னுக் கிசைவுறக் கூறி, வேண்டிய தவஞ்செய் சூதனு முனிவர்
மிகுதவ வாகன மிசைவாய், நீண்டசெஞ் சடையான் விளங்கிய
கச்சி நிமலனை வணங்கியேத் தினரால்.

(இ-ள்) தாபத் பயங்களை நீக்கும் வாஞ்சா நாதனது புகழை அவர்களின் கருத்துக்கிசைவாகக்கூறி, நேரே அப்பெருமானைக்கண்டு தெரிசிக்கவேண்டு மென்னும் ஆவலுடைய சூதபுராணிகரும் சௌனகாதி முனிவர்களும் தவத்தையே வாகனமாகக்கொண்டு காஞ்சீபுரம் வந்து சிவனை வணங்கினர். ௯

வழிபடு வெண்ணெய் முதலிய தலத்து மயேசனை வணங்கி
யேத் தியபின், குழைவுள மனத்து விருடியார் கடுகிக் குலவுமேர்
வாஞ்சையி னுயர்ந்த, வழகுநீ றணிநற் பசுபதி யொடும்வா ழணி
மதி லாலயங் காணு, விழிசுணீர் ததும்பப் பரவசமாகி மெய்யு
ளங் கனிந்துவந் தடைந்தார்:

(இ-ள்) அதைவிட்டு வழியிலுள்ள திருவெண்ணெய்நல்லூர் முதலாகிய சிவ க்ஷேத்திரங்களிலுள்ள சிவபெருமானது திருவடிகளையெல்லாம் வணங்கித்துதித்துக்கொண்டு விரைவாக திருவாஞ்சயம் வந்து, அங்கு நீறணியம்பிகையோடுகூடிய பசுபதி நாதரது ஆலயத்தைக்கண்டு மனமுருகி ஆனந்த பரவசமடைந்தனர். ௰

அடைந்தவ ரிடுக்க ணகற்றுநீ றணியு மமலனும் விளங்கிய
தலத்திற், புடைபரந் தெழுகோ முகிநிறை வளமும் புதுமை
கொண் மானதப் புனலுங், குடைகுயிற் றெருகுதி யுறைபொழி
லிடமுங் குலவுவெண் முல்லைசேர் குறிப்பும், மிடந்தவை நோக்கி
யிதையமு மகிழ்ந்தார் மேதகு முனிவர்க ளம்மா.

(இ-ள்) தன்னை யடைந்தவர்களது துன்பத்தை நீக்கும் நீறணியம்பிகையும் பசுபதிநாதரும் விளங்கும் ஸ்தலத்திற்குப்பக்கத்தில் ஓடும் கோமுகிநதியையும், மானத தீர்த்தத்தையும், முல்லை வனத்தினழகையுங்கண்டு முனிவர்கள் உள்ளம் பூரித்தனர் ௧௧

## வேறு

மணம லிந்தெழு முல்லை வனத்துறை மங்கை நீறணி யம்
பிகை பாகனை, யணவல் கொண்டிடு சௌனக ராதிய ராதி நான்
மறை யோதிய சூதனும், பணிவொ டுந்திகழ் சிந்தையி னீணிலம்
பரவு கோமுகி யாடி யவ்வருளந், தணிவு கொண்டுயர் நித்திய நேம
மாஞ் சார்பு ளாய்மறை யோதினர் சாலவே.

(இ-ள்) வாசனை மிகும் முல்லை வனத்திலுள்ள நீறணியம்பிகைபாகனைக் காண விரும்பிய முனிவர்களும் சூதமுனிவரும் அன்போடு கோமுகியில் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேத பாராயணஞ் செய்தனர். ௧௨

சால மானதத் தண்புன லாடியுந் தக்க வசகம மாமுறைத்
தாழ்விலாச், சீல மோடிய ரீசன் பசுபதி தேவ னாலயம் வந்து
திருந்துழி, நூனு லைப்படி வைந்துடை சத்தியுந் நேர்பொருந்துக
நோற்ற மனத்தினர், சாலை மாமலர் சேர்திர ளார்வசை கருது
கூவி ள மேவிதழ் கொண்டுமே.

(இ-ள்) மீண்டும் மானத தீர்த்தத்தில் நீராடி, ஆகம விதிப்படி ஆலயம் வலம் வந்து, ஐவகை சுத்தியுஞ்செய்து, தவஞ்செய்த பனத்தினர் காலையில் மலர்ந்த புஷ்பங்களையும், மூன்றிதழுள்ள வில்வங்களையும் கொண்டு வந்து. கங

மேத குந்திகழ் பஞ்ச கௌவ்யமு மிக்க பஞ்சவ மூர்த்தமு
மேவிய, சித பால்தயி ரோதக மாமுறை சேர்வை கொண்ட திர
விய மங்கதால், பாத பங்கய நீறணி மாதுமை பாக னுக்கபி ஷேக
மியற்றியே, சோதி துய்ய கலைதரித் தேறுதற் றுலங்கு கந்த
மலர்த்திரள் சாத்தினர்.

(இ-ள்) பஞ்ச கௌவ்யமும், பஞ்சமூர்த்தத்தோடு பால், தயிர், சுத்தோதக முதலியவற்றால் அம்பிகை பாகனுக்கு அபிஷேகித்து, வஸ்திரமணிவித்து மலர்மாலை சாத்தி கச

சார்பு கொண்டெழு தூபமுந் தீபமுந் தான்வ ழங்கிநி வேத்திய மன்பொடு
மேர்வை யாகப் பசுபதி நீறணி யிருவர் சந்நிதி நேர்வல மாகியே
தேர்வை யாகும் பிரணவ மாதியாஞ் சேர வுந்தெளி வுற்றபஞ் சாக்கர
மார்வு சிந்தைய ராய்ச்சவு னதியர் அரக ராசிவ சங்கர வென்றுமே.

(இ-ள்) தூபதீப நைவேத்தியங்களை அன்போடு அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வழங்கி, பசுபதிநாதர், நீறணியம்பிகையாகிய இருவர் சந்நிதியையும் பிரதக்ஷணஞ்செய்து, பிரணவந்தொடங்கி பஞ்சாக்ஷர மந்திரத்தை தியானித்து, சௌனகாதியர் முதலியோர் பலரும் ஹராஹரா! சிவ சங்கரா! என்றும் கரு

கால கால புராதன காரணா கங்கை வேணி யிளம்பிறை சூடிய
நீல கண்ட வரவணி பூணுறு நேச வீச பசுபதி நீறணி
கோல ரூப முகந்து மகிழ்ந்துள கோடி செங்கதிர் தன்கிர ணொளிட
சூல பாச டமருக மான்மழுச் சோதி தங்கு கரகம லாதியே.

(இ-ள்) காலகாலனே! புராதன காரணனே! கங்கையும், இளம் பிறையும் சூடிய ஜடாதரனே! நீலகண்டனே! அரவாபரணனே! அழகிய நீறணியை வலப்பாகம் வைத்த பசுபதி நாதனே! கோடிசூரிய பிரகாசனே! சூலம், பாசம், டமருகம், மான், மழு முதலியவற்றைத் தாங்கும் கரத்தையுடைய ஆதியே! என்றும். கசு

தவள மால்வரை வாச நிராமய சங்க ராசெஞ் சடாதர வெள்விடைத்
துவச மாமக மேருவு லாசநற் றுலங்கு வெம்மிறை யான்வைந் தானனா
பவளா வாயின மஞ்ஞையி னென் னுமா பார்வ திதிரு நீறணி பங்கின்வாழ்
சிவசி வாசிவ சம்பு மயேசுர தேவ தேவப் பசுபதி யீசனே.

(இ-ள்) வெள்ளியங்கிரி வாசனே! நிராமய! சங்கர! செஞ்சடாதர! ரிஷபக்கொடியாய்! மேருகிரியுல்லாசனே! எமது தலைவரான ஐந்து சிரசையுடையவரே! பவளவாயும், மயில்போன்ற சாயலுமுள்ள நீறணியம்பிகை பாகத்தில் வாழும் சிவசிவா! சம்புவே! மஹேஸ்வரா! தேவ தேவனே பசுபதி யீசனே! என்றும். கஎ

ஆக மாதி தவறில தாயரி தான வர்ச்சனை யாற்றிபு மேத்திய
தாகி நின்ற சவுனக ராதியுஞ் சாத கத்தவ சூத விருடிமுன்

தோகைநீறணி பாகன்விடையின்மேற் றோன்றினார்கணநாதர்கள்சூழ்வுற
தேகசிந்தையி லாமுனி வோர்கணஞ் சிவசிவாசெய வென்றெழுந் தாடினார்.

(இ-ள்) ஆகம விதிதவறாமல் அர்ச்சனை செய்து, துதிக்கும் சௌனகர்தியர் சூதபுராணிகர் முதலியோர் கண்களிக்க, சிவபெருமான், நீறணியம்பிகையோடு கணநாதர் புடைசூழ, ரிஷபத்தின்மேல் தோன்றினார். அதுகண்ட முனிவர் கூட்டங்கள் சிவசிவா! ஜெய ஜெயா! வென்றெழுந்தாடினார்கள். ௧௮

பஞ்ச பூத சொரூபா செயசெய பஞ்ச வானன தேவா செயசெய
வஞ்சி நீறணி பாக செயசெய நாக பூணந்தவழ் மார்ப செயசெய
கஞ்ச நாண்மலர் பாத செயசெய காளை வெள்விடை யாளிசெயசெய
அஞ்சல் தந்தரு ளண்ணல் செயசெய ஐய வெம்மிறை யாதியென் றாடினார்.

(இ-ள்) பஞ்சபூத சொரூபனே! ஜெயஜெய. ஐந்து முகமுடையவரே! ஜெயஜெய. நீறணியம்பிகைபாகனே! ஜெயஜெய. நாகாபரணனே! ஜெயஜெய. தாமரைபாதனே! ஜெயஜெய. ரிஷபவாகனனே! ஜெயஜெய. அபயாஸ்த மளிப்பவனே! ஜெயஜெய. எமது தலைவனாகிய ஐயனே! என்று ஆனந்தக்கூத்தாடினார்கள் ௧௯

ஆடி னார்மறை நான்கொடு மால்பிர மாதிதேவ ரறியவொ
ணாச்செய, னாடி னார்விந்து நாதம தாய்ப்பதி னாலு லோகமு
மாயெழுஞ் சோதியைக், கூடி னார்குறை வில்கரு ணைக்கடல்
கொண்ட வன்புகழ் செங்கரங் கூப்பியே, பாடி னார்பர மானந்தத்
தேன்சுவை பருகி நின்று பரவச மாயினார்.

(இ-ள்) நான்கு வேதங்களும் பாடினார்கள், பிரம்ம விஷ்ணுக்களாலறியவொண்ணாச்செயலை விரும்பி, விந்து-நாதமாய் பதினாலு லோகமும் எழும் சோதியோடு சேர்ந்தார்கள், கருணைக்கடல்போன்ற புகழைக்கைகூப்பி பாடினார்கள். பரமானந்தத்தேனையுண்டு பரவசமானார். ௨௦

பரவ சத்துள மாமுனி வோர்தமைப் பரம னோக்கியிப் பார்
தனி லாதியாம், விரைவு கொண்ட வரஞ்சைதன் மீதுநம் மெய்யு
கந்தபி ஷேக மியற்றலாற், றெரிவ ருஞ்செய வெண்ணினு மெண்
ணிய சிந்தை யின்படி செய்த துமக்கென, வுரைவ தூங்கி யிலிங்
கம தூள்ளுறைந் தோங்கி னருமை யோடும் விளங்கியே.

(இ-ள்) முனிவர்களைப்பரமசிவன் பார்த்து இந்த பூமியில் புராதனமாயுள்ள திருவாஞ்சை வந்து, நமது தேகத்திற்குகந்த அபிஷேகம் செய்தபடியால் நீங்கள் கருதியவற்றை அடையும்படி அனுக்கிரகித்தோம். என்று கூறி உமையவளுடன் சிவலிங்கத்தில் மறைந்தருளினார். ௨௧

ஐய ராதி யருள்வழி கண்டபி னன்பி னுண்மை யறைந்தவச்
சூதர்தன், செய்ய பாத கமலத்தி னோர்மலர் சென்னி மீதுற வாக
வணங்கியே, வைய கத்து ளுயர்ந்த வரஞ்சையில் வந்து மாதவத்
தின்பயன் பெற்றதுன், மெய்யெ னுஞ்செய லென்ன விளம்பியே
மேவு பூசனை தன்னை விரும்பினார்.

(இ-ள்) சிவபிரானது திருவருளை அறிந்து உண்மையைக்கூறிய சூதபுராணிகரது திருவடியில் மலர்சொரிந்து வணங்கி, வாஞ்சாம் வந்து தவத்தின் பலனைப்பெற்றது தேவரீரது கிருபையெனக்கூறி, குருவணக்கஞ் செய்யத் தொடங்கினர். ௨௨

சூரவ ருக்குயர் வந்தனை யாகமங் குறைவிலாதவை வேண்டுவ கொண்டுசெய், கரும மாமுறை யால்மிகு தண்புனல் காலை பஞ்சன மாடிக் கடைபிடித், தருகு சிந்தைய ராய்நறு மாமலரோத கத்திர ளோடுயர் பூசனை, விரிப தத்துணை பங்கய வர்ச்சனை மேவு மாமறை யர்லு மியற்றியே.

(இ-ள்) குருவணக்கஞ் செய்யும் முறை தவறாமல் வேண்டியவற்றைக் குறைவில்லாமல் கொண்டு, ஸ்நானமுதலிய நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு சூதமுனிவர்து திருவடிக்குச் சுத்தோதகத்தால் அபிஷேகஞ் செய்வித்து, மலர்கொண்டு வேதமந்திரத்தோடு அர்ச்சனை செய்து. ௨௧

காட்டு சோடச பேருப காரமுங் கருதி யர்க்கிய முன்பு வழங்கியுந், தீட்டு சிந்தையி னூற்சவு னூதியர் சேர வெண்ணிலி போற்றிசெய் தானபின், நாட்டு மாமணி யின்சிவி கைக்குளாய் நண்ணு வாருயர் சூதனையேத்தியே, கூட்ட முற்றெழு பேரிகை சங்கொலி குலவு மாநகர் நேர்வல மாகியே.

(இ-ள்) சோடசோபசாரம், அர்க்கிய பாத்திய முதலியவைகளைச்செய்து, சௌனகாதியர் பலவாறாக ஸ்தோத்திரம் செய்தபின், நவரத்தின மிழைத்த பல்லக்கிலேற்றி, பேரிகை, சங்க முதலிய வாத்தியங்கள் முழங்க நகர் வலம் வந்து. ௨௨

சந்தி ரக்குடை மேவுவெண் சாமரை தானு கந்திரு பானுமசைந்திட, சுற்று மாமுனி வோர்மறை யோதிடத் தொன்னகர் வலம் வந்துபின் சூதனும், பக்தி யாற்றொழு தேத்திய மாதவப் பண்பி னோர்சவு னூதிய ருக்குயர், வெற்றி நீறணி பாக னருட்பதம் வீற்றி ருப்பதென் றாசி விளம்பினார்.

(இ-ள்) சந்திர வட்டக்குடைகளும், வெண்சாமரையும் இருபக்கமும் விளங்க, முனிவர்கள் வேதமோதிக்கொண்டுவர, நகர்வலம் வந்தபின் சூத மகா முனிவர் தம்மைத்துதித்து வணங்கும் சௌனகாதியர்கட்கு, நீங்கள் வெற்றியுடைய நீறணிபாகன் பதமாகிய மோக்ஷ வீட்டிலிருப்பீர்களென ஆசீர்வாதஞ் செய்தனர் ௨௩

வேறு

நேசமிகு முனிவரரு னெறியாருஞ் சுவையருந்தித்
தேசிருக்கும் பசுபதியார் திருவரஞ்சைத் தலம்பணிந்து
வாசமிகுந் தவச்சார்பின் வளமிகுந்த விடமருவி
காசினிக்கு ஞயர்மகிமை கண்டோமென் றகமகிழ்ந்தார்.

(இ-ள்) அன்புடைய முனிவர்கள் அனைவரும் சிவாமிர்தமுண்டு, பசுபதிநாதர் வீற்றிருக்கும் திருவரஞ்சரத்தலத்தை வணங்கி தங்கள் தங்கள் தவம் புரியுமிடஞ்சென்று பூமியில் மிகுந்த மகிமையுடைய தலத்தைக்கண்டோமென்று மனமகிழ்ந்தார்கள். ௨௪

இந்நெறியா முலகுதனி லினியவள மகிமைநெறி
மன்னியநற் றிருவரஞ்சைப் புராணமதின் வளர்சரிதை
முன்னமறை மொழிநின்ற நிலைவுணர்ந்து முயல்வுற்றோர்
கன்னியுமை நீறணிதன் பாகனருள் காண்டிடுமால்.

(இ-ள்) இவ்வழியாக உலகில் மிகுந்த மகிமையுடைய திருவரஞ்சரத்தின் புராணத்திலுள்ள சரிதங்கள் முன்னமே வேதங்களால் சொல்லப்பட்டதென்று நம்பி அவைகளின் மீது பக்தி செலுத்துவோர், நீறணிபாகரான ஸ்ரீபசுபதிநாதர் திருவருள் பெற்று இகபர சுகம் அடைவார்கள். உஎ.

கார்மருவு மயிராணி களிப்புறவிந் திரன்வாழி
நாமகள்நான் முகன்வாழி நலங்கொடிரு மால்வாழி
பூமகள்வான் மகள்வாழிப் புனல்பொழிந்து பயிர்வாழி
மாமறையா கமம்வாழி வளர்சைவ நெறிவாழி.

தேன்மலிகொண் மாலதிரும் திருவரஞ்சைப் பதிவாழி
பான்மொழிநீ றணியுமையும் பசுபதியீ சனும்வாழி
மேன்மையுறுஞ் சிவனடியார் வேந்தர்கள்செங் கோல்வாழி
நான்முறையிப் புராணமதை நவன்றனர்கேட் குநர்வாழி.

வளமலிசேர் திருவரஞ்சை மருவுசிவன் திருப்பணிகள்
தளர்விலதாய் செய்வோருந் தமிழ்மாலை புனைந்தானை
அளவில்புகழ் பவர்க்குநிதி யளிப்பவர்கண் முதலாக
வளமலிழ்ந்து சிவனருளா லுயர்வாழ்வு பெருகுவரே.

---

இருடி பூசைச் சருக்கம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீநீறணியம்பிகை சமேத ஸ்ரீபசுபதிநாதர் துணை.

சருக்கம் கரு—க்குத் திருவிருத்தங்கள் சுகஎ.

திருவரஞ்சத்தலபுராணம் முற்றுப்பெற்றது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீகாந்தியாய நம:

வடூர் பிரமஸ்ரீ இராம—சடகோபன் அவர்களால்
இயற்றியது.

# விளம்பரம்.

---

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | காந்தி திருநாள் முதற்பாகம் | 0 | 0 | 6 |
| 2 | ௸ இரண்டாம்பாகம் | 0 | 1 | 0 |
| 3 | மகாத்மா காந்தி சரித்திர—திருப்புகழ்ச்சிந்து | 0 | 2 | 0 |

---

| | | | |
|---|---|---|---|
| வீரபோக வசந்த ராயங் | 0 | 1 | 0 |
| குவ்வாகம் கூத்தாண்டவர் பதிகம் | 0 | 0 | 3 |


P. வேணுகோபால முதலியார்,
சொந்தக்காரர்.
ஸ்ரீநாராயண விலாச அச்சுக்கூடம்
திருக்கோவலூர்,
தென்னாற்காடு ஜில்லா.

Printed by S. N. V. Press Tirukoilur.—1924.

திரிசிரபுரம் S. P. G. காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்,

இயற்றமிழாசிரியருமாகிய

கனம் ஆ. கா. பிச்சையிபுருகீம் புலவரவர்கள்

இயற்றிய

# சாற்றுக்கவி

---

### நேரிசையாசிரியப்பா.

உலகு மல்கிரு ளோட்டு வான்றன
திலகிய கரமிரண் டைந்து நூறினுற்
பலகதிர் பரப்பப் பரிவோ டாழியி
னெழுமாப் பிணித்தாங் குறுமோ ராழியோ
டெழுமலை யகந்து விழுமலை பெறற்கு
மேருவை வலங்கொளும் விழுமிய தேரொடு
மாவும் பலாவு மகிழ்பா திரிகல
சோகுஞ் சண்பகத் துரும மேற்செலுங்
காவினிற் றொடை யிருல் காலுந் தேனொரு
வாவியிற் பெருகு வனப்புற் றுயதிற்
செங்கா லெயினநற் சேவலும் பெடையுந்
தங்குநா ராக்களுந் தவளக் கொக்கின
மெங்கணு முழக்கொலி யிசையுங் கொம்பரிற்
பூவையுங் கிள்ளையும் பொருந்து கோகிலப்
பாவையுந் தந்தம் பார்ப்பி னோடுமெங்
கோவலி லின்னிசை யுவப்பு மோங்குற
வுலகளந் தோன்றனை துருவப் பொறபினு
மிலகுநன் னிருடரு மெடு ல தாய தூஉம்
அம்பரஞ் சென்றுயர் சொம்பரார் சோலையாயத்
தோன்றிய கதிரினைத தோமி லார்கபி
தீங்கனி யீதெனத் தின்னு வானசை
யோங்குறக் கடுவனை யுவந்து கேட்டலிற்
ாங்குறப் ாயுநற் பழுவச் சோலையும்
பொன்மணி யியைபுறப் புனைந்த மாமதிற்
பன்மணிக் கோபுரப் பத்தி யெங்கணு
மெழுநிலை யமைதர வெழுந்த மாடமும்
வழுவிலா வாவண வனப்பும் வாவியும்
கரிபரி நிரையுள கவின்செய் பந்தியு
மந்தணர் முதனோன் காகிய வருணமும்
வந்துவந் தவர்முறை வழுவற நடத்தலுங்
கோமகன் றனதிறைக் குடியைக் காத்தலிற்
காமுறை யாசியற் காய மண்டபம்
அறத்துறை யாலன மளிக்குஞ் சாலையும்
இளவல் ராடுதற் கியைந்த சோலையுங்

களவுவஞ் சகமுளார் கரந்த தஞ்சையி
னண்டமோ ராயிரத் தெட்டை யாண்டிடுங்
கண்டக னுயிரினைக் கவருங் காலனைப்
புண்டர நுதற்பொறி போந்து கங்கைவாய்க்
கொண்டிடு மறுமுகக் கோலச் செம்மலும்
எழுவகைத் தோற்றமா யெண்பஃது நான்கெனப்
பெருகிய லெக்கப் பேருயி ரனைத்தையு
மொருநொடிப் போதிலுண் டாக்கிக் கன்னியாம்
பருவ மெய்ந்தவப் பராசத் தியின்கண்
பொருவரு வயிலினைப் போர்க்கெனப் பெற்று
அரிகரி முகத்தோ னும்பத்ம சூரனும்
வேணு கோப விறலோன் றன்னையுஞ்
செருக்களப் படுத்திச் சேவலு மயிலு
மாகிய சூரன்மே லாரோ கணித்துப்
பொன்னா டாளப் புரந்தாற் கீந்து
மன்னான் மகடெய்வ யானையை மணந்த
சின்னக் குழந்தையைச் சேயெனப் பெற்றோன்
திங்களுங் கங்கையுஞ் செறிவுறு மத்தமும்
அரவு மறுகு மணிந்த செஞ்சடைக்
கடவுள ரருளாற் காணுஞ் சேயெனத்
தோலா நாவுடை வேளாண் மரபி
னிராம சாமி யெனப்பெயர் பூண்டோன்
றன்பா லின்புறத் தானவ தரித்தோன்
இலக்கண மிலக்கிய மெனும்பெருங் கடலிற்
றிளைத்தரும் பொருடனைத் தேர்ந்த சிந்தையன்
நன்னூன் முதலாப் பன்னூ லறிந்துந்
தொல்காப் பியமுதற் பல்காப் பியமுங்
கசடறக் கற்றுங் கருத்தினி லுணர்வோன்
மூதறி வுடைய முனிபரஞ் சோதியால்
மதுரைப் பெருமான் மகிழ்வோ டாடிய
திருவிளை யாடலைத் தேம்பிளி ரசமென
அரிதுணர் பொருளோ டமைவிருத் தந்தனை
சொற்சுவை பொருட்சுவை தோன்றுமா றாயும்
யாவரு மெளிதி லறியுமா றாயும்
வெண்பா வாக விரித்துரைத் தனனால்
பழனி வேலெனும் பாவல
னியற்றமிழ் வல்ல வியல்புடை யோனே.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் பிரதம தமிழ்ப்பண்டிதரும்,
இயற்றமிழாசிரியருமாகிய—பின்னத்தூர் :
**பிர்ம்ஹ-ஸ்ரீ அ. நாராயணசாமி ஐயரவர்கள்**
இயற்றிய

**நேரிசையாசிரியப்பா.**

ஆர்கலி யுடுத்த பார்மிசை யாண்டும்
பன்னூறு கற்பமை மாதர் பனுவல்கொள்
நன்னக ரளகை ஞாங்க ரோங்கிய
தாளாண் பகுதியில் வேளாண் மரபிற்
பராவருஞ் சீர்த்தி யிராம சாமியென்
றொருமால் தவத்தின் வருமா வள்ளல்
விருப்புறு சீர்த்தி கறுப்புடை யான்கோத்
திரத்தில் வந்த செம்ம லாளன்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுதல்
பல்காப் பியமும் பளகறப் பயின்றோன்
மெய்வரு மரபிற் சைவசித் தாந்தம்
கைவரு நெல்லியங் கனியிற் பயின்றோன்
அறிவும் பொறையும் அன்பும் அருளும்
செறிவும் திண்மையும் சேர்ந்துவடி வெடுத்தென
வந்து தோன்றிய வாய்மை யாளன்
பழனிவேற் பிள்ளைப் பண்புறு பெயரினன்
கழனிநீர் வேலி கைவறைச் சூழ்ந்த
மாடமலி மறுகிற் கூடலம் பெரும்பதி
நின்றர சாண்ட நிமலன் புராணத்
தோன்றிய காதை யொருங்குறச் சேர்த்துத்
தேனெனப் பாலெனச் சில்லமிழ் தூற்றெனப்
பானவில் வெண்பாப் பனுவ லாக்கி
எல்லையி லாத பல்லலங் காரமும்
சொல்லும் பொருளுந் தொடரப் பிணித்து
நற்றமி ழறிந்தோர் நயந்துறை சங்கத்து
உற்றரங் கேற்றி யொலிநீர் ஞாலம்
முற்ற மகிழ்தரக் கொடுத்துத்
துற்ற பெரும்புகழ் தோய்ந்துநின் றனனே.

**வெண்பா.**

ஈண்டிய கூட லிறைவன் புராணமெலாம்
வேண்டியவெண் பாவால் விளம்பினான்—ஆண்டைக்
கழனிநீர் வேலியள கைப்பதிவே ளாளன்
பழனிவேற் பிள்ளையென் பான்.

**கட்டளைக்கலித்துறை.**

ஆரார் சடைமுடிக் கூடற் பிரான்கண் ணுமாடலெல்லாம்
சீரார் தருபரஞ் சோதிமுன் னாளன்பிற் செப்பியபோல்
வீரா ரளகைப் பதிவந்த வேளாண் மருங்குவரம்
கூரார் பழனிவேற் பிள்ளைவெண் பாவினிற் கூறினனே.

தஞ்சாவூர் கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத்

தமிழ்ப்பண்டிதர்

**கனம் - ல. உலகநாதபிள்ளையவர்கள்**

இயற்றிய

**நேரிசையாசிரியப்பா.**

வானுற வோங்கி மழையக டுருவி
யாடுகொடி துவன்றிய மாடமலி மறுகிற்
பாடல்சான் மதுரைக் கூடலம் பதிய
லருஅ யாணர் மராமுதன் மேவிய
கானவன் சோம சுந்தர மீனவன்
றொல்லைப் பாச மொரீஇ வல்லையிற்
பல்லுயிர்த் தொகையு நல்லுணர் வெய்தி
நீக்கமி லின்ப மாக்கட றிளைப்ப
வாடிய திருவிளை யாட லகந்தழீஇக்
கற்றவர் நெஞ்சங் காமுற விரித்தாங்
கணிநலந் துலங்கப் புனைந்தனர் பலரவை
கலையான் மேம்படூஉ புலவர்க் கல்லதை
யறிவுநிலை கூடா விளைஞர்க் காகாப்
பெற்றி தெரீஇமற் றெவர்க்கு மாம்வகைத்
தொகுத்துமுறை நிறீஇவெண் பாவின் வகுத்தன
னெஞ்சா நல்லிசைத் தஞ்சைமா நகரோன்
றராதல மதிக்கு மிபாயசாம் வேள
ளருந்தவப் புதல்வனும் பெருமை சான்றவன்
குன்றுபக வெறிந்த குரூஉமணிச் சுடர்வேல்
கைத்தலத் தேந்திய முந்தமி ழாசான்
றாளதா மரைமலர் நாளு நினைப்பவ
னிருவே றுலகத் தியற்கையிற் றீர்தரத்
திருவொடு கல்வி யொருங்கு படைத்தவ
னுற்றிடத் துதவலிற் கற்பக நிகர்ப்பவ
னாய்கலை விநோத னாசு கவிபல
வுலக மூவப்பப் பாடு
நலனுறு பழனிவே ணாவல வோனே.

தஞ்சை நடுக்காவிரி மதுரைத் தமிழ்ச்சங்க தமிழ்ப்பண்டிதர்

**மு. வேங்கடசாமி நாட்டாரியற்றிய**

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.**

சீராருந் தமிழ்ச்சங்க நிலவுதிருக் கூடலிடைத் தீய நஞ்சாற்
காராருங் களத்திறையெம் மான்புரிந்த வாடலெல்லாம் காசில் வெள்ளைப்
பேராரும் பாவதனாற் புலவர்செவிக் குறுவிருந்தாய்ப் பிறங்கச் செய்தான்
ஏராரும் பழனிவேற் பிள்ளையெனும் பெருநாமத் தியல்வல் லோனே.

தஞ்சை S. P. G. காலேஜ் தமிழ்ப்பண்டிதர், காலஞ்சென்ற

மகா-௱-௱-ஸ்ரீ ச. விசுவலிங்கம் பிள்ளை அவர்கள்

குமாரன்

## வி. சாமிநாதபிள்ளையெழுதிய

வெண்பா.

ஆலவா யண்ணல்செ யாடலறு பத்தொடுசேர்
நாலைவெண் பாவா னயந்துரைத்தான் — பாலையுளும்
வெள்ளம் புகுதஞ்சை மேவு பழனிவேற்
பிள்ளை யெனுமோர் பிரபு.

---

தஞ்சாவூர் மகரநோன்புச்சாவடி

## S. P. G. ஹைஸ்கூல் முனிஷியாரியற்றிய

நேரிசையகவல்.

திருவுயர்ந் தோங்குஞ் செல்வத் தஞ்சையில்
அருநெறி தவறு தமர்ந்துவீற் றிருக்கும்
விபரீத வையம் வினவித் தெளிந்து
உபநிட தஞ்சொலு முண்மை யறிந்து
என்று மிறைவனை யேற்றித் துதித்து
நன்றென யாவு நலம்பெற நடாத்தும்
இலக்கிய மிலக்கண மிதிகா சங்களும்
புலப்பட வறிந்த புலவ னென்பான்
நற்றவ ராம சாமி யெனப்பெயர்
உற்றவன் மரபினி லுற்பவ மாகிப்
பழனிவேற் பிள்ளை யெனும்பெயர் படைத்தோன்
விழுமிய பொருளால் வியப்புற வழங்கும்
கூடற் புராணங் குறைவிலாச் சரிதையைத்
தேடற் கரிதாந் திகழ்சங் கிரகமாய்ச்
சொற்பொருட் சுவைநனி துலங்க வமுத்தி
நற்பொருட் பயன்றரு நன்மொழி புணர்த்தி
வெண்பா நடையா லெளிதாம்
பண்புற வியற்றினன் பகர்பா வலனே.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 3 | மோாராறுங் | மோராறுங். |
| ,, | 13 | தன் | த |
| 4 | 20 | நன்கு | னன்கு. |
| 5 | 11 | யழைத்தனவாங் | யழைத்திட்டே. |
| 6 | 14 | தன்னி | தம்பி. |
| 7 | 30 | பறித்தனர்கொன | பறித்தார் ந |
| 9 | 20 | மரமின் | மரபின். |
| 11 | 12 | சேர்நதன | சேர்ந்தன. |
| ,, | 15 | தர்னமரர் | தானமரர். |
| 12 | 29 | பெரும்புகை | பெரும்புகழ். |
| 13 | 12 | திங்கலணி | திங்களணி. |
| ,, | 29 | கவினறிந்து | கவினறியார். |
| 14 | 28 | செய்துவித்து | செய்வித்து. |
| 15 | 3 | கொள்ளுவ | கொள்ளுந. |
| ,, | 14 | நகர்வலம் | நகர்வளம். |
| ,, | 17 | புண்டா | புண்டர |
| 16 | 14 | ரானடியை | ரரனடியை. |
| 19 | 3 | மோடு | மொடு. |
| 27 | 16 | பாலருத்துஞ் | பாலருத்து. |
| 37 | 24 | சொல்வாம் | சொல்வா. |
| 41 | 3 | கடற் | கடல். |
| 43 | 21 | கூறும்வரம் பின்னுங் | கூறும் வரம்பின். |
| 44 | 27 | லென்னுசைத் | லென்னுசை. |
| 47 | 20 | பெய்தனைராற் | பெய்தனராற். |
| ,, | 26 | னேவருக | னேவருத. |
| ,, | 27 | ஈாடுவதி | ஞடுவதி. |
| 48 | 16 | திரிபு | திரியு. |
| 50 | 8 | ரித்தல | ரித்தில. |
| 51 | 13 | தக | றக. |
| ,, | 26 | மானுடற்க்கே | மானுடர்க்கே. |
| 52 | 18 | காலாடா ..கண்சிமிட்டாக் | காலாடாக் ..தண்சிமிடடா. |
| 54 | 25 | துடி | றுடி. |
| 55 | 19 | தேன்மாரி | தேமாரி. |
| ,, | 29 | னனி | ணனி. |
| 57 | 19 | தோள் | தோட். |
| 59 | 8 | வாய | வாயி. |
| 60 | 14 | தானந்த | தாஞந்த. |
| 62 | 4 | தேடரிய | றேடரிய. |
| ,, | 22 | குண்டோதரனுகீ | குண்டோதரனுக். |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 62 | 23 | வைகையை | வைகை. |
| 64 | 10 | தத்தவர | தந்தவர. |
| 69 | 14 | பேறுற் | பேற்றுற். |
| 72 | 21 | பூண்டாசு | பூண்டரசு, |
| ,, | 22 | கொழிலுறவே | கெழிலுறவே. |
| 73 | 12 | மெல்லியாளின் கருவிற் | மெல்லியலா ளின்கருவிற். |
| 78 | 24 | கோமற்குப் | கோமகற்குப். |
| 83 | 11 | வேய் ந்ததற்பின் | வேய்ந்ததற்பி. |
| 85 | 2 | றடாதகையுங் தானுமந்த | றடாதகையி னோடுமெந்த. |
| ,, | 3 | மேவினார் | மேவினன். |
| 86 | 8 | னார்வதமை | னார்வமதை. |
| 87 | 4 | கட்கசி | கட்சசி. |
| ,, | 20 | வல்லவெனக் | வல்லையெனக். |
| 89 | 7 | போதும்வகை | போதுவகை. |
| 93 | 28 | பல்கலையுங் | கல்கலையுங். |
| 93 | 15 | கொடுத்து | கெடுத்து. |
| 94 | 28 | வாதடுலா | வாடுதலா. |
| 96 | 15 | கேடிலதோர் | கேடிலவன். |
| 103 | 15 | மிக்காளை யிற் | மிக்காளை யைக். |
| 107. | 14 | குசம்பமலர் | குசும்பமலர். |
| 109 | 23 | வாவின் | வாவிற். |
| 111 | 12 | வதறு | தவறு. |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவிளையாடல் வெண்பா.

## மதுரைக்காண்டம்.

### பாயிரம்.

---

#### விநாயகர் காப்பு.

அத்திமுக னைந்துகர னால்செவிய னால்வாயன்
மத்தமொரு மூன்றுடையான் வன்மருப்பின்—வித்தகமா
யெத்திசையும் போற்று மெழில்பா ரதம்பொறித்த (1)
சித்திவி நாயகன்றாள் சேர்.

#### வாழ்த்து.

மகமோங்க வெங்கு மழையோங்கப் பூமி
தகவோங்கச் செந்நெற் றழைத்தே—மிகவோங்கி
மன்னன்றன் கோனு மறுவில்சை வப்பயிரு
மின்னனுரு வாழ்கவினி தின்று. (2)

#### நூற்பயன்.

கூடலா ரின்புகழைக் கொண்டாடு வார்க்கினிய
நீடனுறுஞ் செல்வ நிலைத்துமே—னாடதனின்
மக்கட்பே றோடு மகிழ்ந்தே சிவபதத்திற்
புக்கப்பேர் கொள்வர் புகுந்து. (3)

#### சிவபெருமான்.

அருவா யுருவா யருவுருவாய் வேதந்
துருவக் கிடையா வொருவன்—மருமலர்த்தா
ளென்னுளத்து மென்சிரத்து மெப்பொழுது மேகொளுவேன்
மன்னுவினை தீர்ப்பான் மகிழ்ந்து. (4)

### சிவசத்தி.

*கருக்கொள்ளா தெவ்வுலகுங் கண்டிடுவாள் கன்னி*
*யுருக்கொள்ளு நல்ல வொயிலாள்—மருட்கொள்*
*மனமுடையார்க் கெட்டா மணிபோல்வாள் பாதந்*
*தனக்கடிமை செய்யுந் தலை.* (5)

### வெள்ளிமன்றவாணர்.

*அன்பருளத் தகத்து மாரணத்தி னற்சிரத்து*
*மென்புருகக் கூவு மெழிலுடையார்—தன்றாயர்க்கே*
*வைகைக் கரையகத்து மன்றிடத்து மாடுபதங்*
*கைவைத்துக் கொண்டாங் களித்து.* (6)

### சோமசுந்தரக்கடவுள்.

*மாமகுடந் தாங்கி மருவுநிம்பத் தாரணிந்து*
*காமர்விடை நீத்துக் கயற்கொடிகொண்—டாமதுரை*
*வந்தரசு பூண்ட வளமார் கடம்பவனச்*
*சுந்தரன்றா ளெற்குத் துணை.* (7)

### தடாதகைப்பிராட்டியார்.

*கங்குற் குழலாள் கதிர்முத்த வாணகையாள்*
*பொங்குகுடம் போன்ற புணர்முலையா—ளெங்குமுற*
*வாணு துலகுயிரை யாக்கு மருளுடைய*
*மீனாட்சி யின்றாள் விரும்பு.* (8)

### தக்ஷிணாமூர்த்தி

*மெய்ப்போ தகவடிவாய் மேவியன்று கல்லாலின்*
*கைப்போதா னால்வருக்குங் காட்டியசொ—லெப்பொழுது*
*மென்னகத்தி னீங்கா திருக்க வருள்புரிவோன்*
*பொன்னடியைப் போற்றுவன்யான் போந்து.* (9)

### சித்திவிநாயகர்.

*கூடமா யன்பருளங் கொண்டே யவர்பிணிக்கு*
*நீடலுறு மன்புதனை நேர்ப்பட்டும்—பீடுலவு*
*மறிவாங் கவளமுண்ணு மைங்கரத்தான் பாதஞ்*
*செறிவாந் தலைக்கணியாச் சென்று.* (10)

### சுப்பிரமணியர்.

சூர்வெல்கை யீராறுந் துய்யமுக மோராறுங்
கார்கண் டெனடிக்குங் கந்துகமா—மோர்கொண்ட
மாமயிலும் வேலுமென்றன் மாமனத்தை நீங்காவா
றுமவினைக் கஞ்சுவனோ நான். (11)

### நாமகள்.

வெண்டா மரையகத்தும் வேதன்ற னாவகத்து
மண்டு கவிவாணர் வாக்ககத்துங்—கண்டு
குடியாகக் கொள்ளுமந்தக் கோகிலத்தின் பாத
முடியாரக் கொள்வா முயன்று. (12)

### நந்திதேவர்.

முக்க ணுடையார்தன் முன்பு பலகலையுஞ்
சிக்கறவே தேர்ந்துணர்ந்த தெள்ளறிவோ—னக்கணத்து
மேலாய நந்தி விணையார் மலர்ப்பதத்தை
மாலாய்த் துதிப்பா மகிழ்ந்து. (13)

### சமயாச்சாரியர் நால்வர்.

கடலதனிற் கன்மிதப்பக் கண்டார் கறைசேர்
மிடறவரைத் தூது விடுத்தார்—புடவிதனிற்
பொற்றாளங் கொண்டார் புனிதமணி வாசகப்பேர்
பெற்றார் மலரடியைப் பேண். (14)

### திருத்தொண்டர்.

தாளரிந்தான் றன்பிறவி தந்தையிரு தாளரிந்துங்
கோளறியான் செய்ய குரைகழலும்—நாளறிந்து
தொண்டு புரியுமற்றைத் தொண்டர்த நற்பதமுங்
கண்டுளத்திற் கொள்வாங் கனிந்து. (15)

### அகத்தியமாமுனிவர்.

உவர்க்கடலை யுண்டாங் குமிழ்ந்தார் தமிழா
நவக்கடலைத் தந்த நலத்தார்—பவக்கடலைப்
போக்குவிக்கு மிந்நூல் புகன்றா ரடிக்கமல
மாக்குவிப்பாஞ் சென்னிக் கணி. (16)

## நூல் செய்தற்குக்காரணம்.

*பரஞ்சோதி மாமுனிவர் பாரித் துரைத்த*
*தரஞ்சேர் விருத்தநூ றன்னை—வரஞ்சேர்*
*அருந்தமிழர் முன்ன ரறைந்தேன்வெண் பாவி*
*னிரும்பிறவி நீங்குதற்கென் றின்று.* (17)

## அவையடக்கம்.

*முற்றுணர்ந்தோர் சொன்ன முதனூ றனைச்சுருக்கிச்*
*சிற்றறிவேன் சொற்றல் செலாதெனினும்—கற்றறிந்தோர்*
*முந்நீர்கால் வாயை முயங்குவபோ லென்சொலையும்*
*மந்நீர்மை காண்ப ரறிந்து.* (18)

---

## நாட்டுவளம்.

*மாலயனுந் தேடரிய மாமறையி னுட்பொருளே*
*கோலமுறப் பாண்டியனாய்க் கோனடத்துஞ்—சீலமுள*
*நன்னாட்டி னல்வளத்தை நானுரைக்கப் போந்தேனு*
*லென்னறிவிற் கெய்தியவா றின்று.* (1)

*அன்ன நிறம்போ லகல்வா னிடைப்படர்ந்து*
*மன்னு குயினிறம்போல் வாரியுண்டு—மின்னிக்*
*குறுமுனிவன் வாழுமந்தக் கோட்டகத்தே கொண்மூ*
*நறியமழை பெய்தனவா நன்கு.* (2)

*எவ்வுயிருங் காக்கு மிறைவியுரு விக்கொண்மூ*
*நவ்வியுறக் கொண்ட நலனதனாற்—செவ்வியுற*
*மண்ணிற் பலவளத்தின் மாண்புறச்செய் தேயுலகை*
*வண்ணமுறக் காக்கு மகிழ்ந்து.* (3)

*வானின் றிழிந்தம் மலைமேற் பொழிமேகங்*
*கானிழிந்த விந்திரன்றன் கைமதமாத்—தானிழிந்த*
*சாபமதை நீக்குந் தனிமுகற்கு நீராட்டிப்*
*பாபமதை நீக்குமந்தப் பண்பு.* (4)

கந்தரமு மாமலையக் கன்னிகையுஞ் சேர்ந்ததனாற்
சுந்தரஞ்சேர் பெண்மகவு தோன்றியே—விந்தைப்
பொருளை யெனும்பெயர்த்தாய்ப் பொன்மா மணியோ
டருண னொளி காட்டுமஃ தங்கு. (5)

வேழ மருப்பும் விரைச்சந் தகின்மணிப்பொன்
றாழருவி வாரித் தருதலாற்—சூழ்கிரணா
நாளுதையன் றோன்ற னலமே வழங்குமிரு
நீள்கரமே பொத்ததந்த நீர். (6)

தாவித் தவழ்பருவந் தான்வந் துறத்தாய்போற்
கூவி யழைத்தனவாங் கோகிலங்கண்—மேவுநீ
ரம்மலையை விட்டிழிந்தே யாய்ருறுமனையைப்
பொம்மலுற மேவிற்றே போந்து. (7)

சேர்ந்தளைபால் வெண்ணெயொடு சேயரிக்கண் ணார்துகிலும்
போந்தள்ளிக் கொண்டு புறப்படலாற்—காந்துபுனல்
பண்ணவரின் மிக்கோனற் பாண்டவர்க்குத் தூதாய
கண்ணனையே யொத்திலங்குங் காண். (8)

முல்லை யிழிந்தம் முறையின் மருதநிலத்
தெல்லை யடைந்த தெழில்வெள்ள—நல்ல
குளங்கூபங் கால்வாய் குறையறமல் கிற்றே
களங்கமிலார் தம்மனம்போற் காண். (9)

வனச முகமாய் வளர்நீலங் கண்ணாய்க்
கனமுலவு வள்ளை யிரு காதாய்த்—தினமுலவு
போர்வை நுரையாய்ப் புனைவஞ்சி யேறுசுப்பா
யார்கலியைச் சேர்ந்த தது. (10)

தற்பிரிந்த காதலனைத் தான்கண்ட காதலிபோ
லற்புறுத்த நோக்குமந்த வார்கலிபா—னற்குணத்த
மான்மதஞ்சேர் சந்தனமு மாமணியா நற்பூணுந்
தான்புனைந்து வந்ததது தான். (11)

கூடிக் கலந்ததந்தக் கோகனகை யைத்திருமால்
நாடிப்புணரு நலமெனலா—நீடுபுகழ்
வெள்ளமே செய்யநிற மேயதனு னற்கருமை
பள்ளநீ ராயதொரு பண்பு. (12)

## குறிஞ்சிவளம்.

கானக் குறத்தி கவணெறிந்த மாமணிக
ளீனமிலா வானத் திடையிருந்த—லூனமிலா
மீன்பொதிந்த தென்று விரிநீர் வியனுலகந்
தான்விளம்பற் காகுந் தகை (13)

தேவர் மருந்தீய்ந்து தேனுந் தினைமாவு
மாவனுறக் கொள்வ ரனுதினமுஞ்—சேவற்
கொடியுடையோன் முன்னங் குறுகிச் சிறைகொள்
கொடியிடையார் தன்னினங்கைக் கொண்டு. (14)

வன்குறிஞ்சிப் பாண்கேட்க வானந் தரமகளிர்
நன்குறுஞ்சில் லோதியர்க ளல்லூசல்—வன்குறிஞ்சி
மாமரத்தி னோயாட வான்செல் லளவையினிற்
றுமிழ்வா ரந்தத் தலம். (15)

வேட்டைக்கு வில்லெடென விண்ணிற் றனுராசி
கேட்டுழியு மந்தக் கிளர்மலைமேற்—கோட்டினுறு
மஞ்சுகத்தின் பாட்டிற் கரமகளிர் வீணையினை
யெஞ்சலிலாக் கண்டா ரிசைப்பு. (16)

மானினத்தை யோடி மறித்த வனவேடர்
வானகத்திற் றுவுதலான் மற்றவரு—மீனமிலா
மாமதியிற் சென்று மறைந்தவெனக் கைச்சரத்தைத்
தாமதித்து விட்டார் தனி. (17)

மாச்சுனையிற் பாசி வழுக்கத் தவறுமொரு
நீச்சறியா ளாயவந்த நேரிழையாள்—காய்ச்சிவிட்ட
பொற்குடமே போன்ற புணர்முலையைக் கைக்கொண்டு
நற்கரையிற் சேர்வா ணனி. (18)

## முல்லைவளம்.

கொல்லையினு மேய்க்குமந்தக் கோவலர்க ளின்னிசையும்
வல்லை யளைகுடைவார் மத்தொலியு—முல்லைநிலத்
தாய்ச்சியர்கண் மோர்விற் பவிரொலியு மாக்கடலின்
கூச்சலினை மாற்றுங் குணம். (19)

மானுமுளார்க் கோர்குறைவு வந்தக்கா றம்முயிர்க்கே
யீனமுறக் காணு மெழிலினவாய்க்—கானகத்திற்
புற்கறித்துத் தத்தம் புகழ்காத் திடுங்கவரி
நிற்குமவ ணெங்கு நிறைந்து. (20)

நன்மொழியை வாசகற்கு நன்குணர்த்த வேகுருந்தின்
னின்மலனார் தோன்று நெறியதுபோற்—புன்மையறக்
காய மொடுக்கியிரு கண்மூடி நற்றவத்தி
னேயமுறு வார்க ணெகிழ்ந்து. (21)

## மருதவளம்.

பம்பை யடித்துப் பறையடித்து நற்கரையி
னிம்பருறக் காண்பா ரெழிலுறவே—யம்பதனைக்
கொண்டுடுத்தா ராங்குக் குளங்கால்கள் செய்நிறையக்
கண்டுடுத்தா ரின்புறவே காண். (22)

இந்திரற்குப் பூசை யியற்றி யெழின்மருதஞ்
சுந்தரஞ்சே ரேர்பூட்டித் தொல்விதியின்—விந்தையுறப்
பூவுடலங் கிண்டார் புறப்படுநற் சோரியென
மேவுமணி யெங்கும் விரைந்து. (23)

படைத்தலைவாய்த் தோன்றும் பணிலத்தை யாங்கு
மடைத்தலைவாய்ப் போக்குவரான் மள்ள—ரிடைப்படருங்
கஞ்சமொடு வள்ளை கருநெய் தலையொருவா
ரெஞ்சலிற்றம் மாதுறுப்பா மென்று. (24)

பரம்படித்துச் செந்நெற் பயிர்கள் பரவித்
திரம்படுமா றெண்ணூர் திறத்தா—ருரம்படவே
நாறு பறித்தனர்கொ னலிமோ யுறப்புவியை
பூறு படுத்து மூவர். (25)

சீயத்திற் றேன்றுமணி சேர்பன்னு டும்பரவி
தூய விழைவளிக்குந் தொல்வளம்போ—னேயமுற
வோரிடநாற் றைப்பறித்தே யுள்ளபல செய்கடமி
னேருறவே செய்வார் நிதம. (26)

அன்னந்தன் பார்ப்போ டுறந்துயில்கொள் நற்கமலத்
தன்னை யுழத்தியர்க ளாங்களைய—வின்னலொடு
காரடுத்த கூந்தலர்கள் கன்னெஞ்சங் கண்டுசிறை
மாரடித்தாற் போற்பறந்த மாண்பு. (27)

தங்க ளுறுப்பதனைத் தாமெள்ளுந் தாமரையுஞ்
செங்குமுதம் வள்ளை திகழ்நீல—மிங்கவற்றை
கொய்தா ருழத்தியர்கள் கோகனக நேர்முகத்தின்
வெய்துயிர்ப்பி னோடும் விரைந்து. (28)

மேக மெனவுழத்தி மென்கூந்தல் கண்டுநட
மாகநெக நின்றாடு மவ்விடத்துத்—தோகைமயி
லன்னார் நடைபயினு மார்வத்தோ டஞ்சமவர்
தந்நிழலே போன்றலவுந் தான். (29)

மாங்கனியுந் தேங்கனியு மன்னுபல வின்கனியுந்
தாங்கனிந்த மாரசங்க டண்பணைவா—யோங்குதலால்
வான்வேண்டாச் சாலி வளருமந்நாட் டின்பெருமை
நான்வேண்டற் காமோ நவில். (30)

கூவுங் குயிலினங்கள் கொம்பனையா ரின்குரலை
மேவுதலால் வாயடக்கி மேற்பறந்த—பூவுலகி
னஞ்சொல்லைக் கொண்டாடு நற்புலவ ரின்னாரின்
றஞ்சொற்கேட் டெள்வரெனத் தான். (31)

மோனநிலை கண்டுணரு முத்தர் மனம்போல
கூனி யிருந்தவந்தக் கொக்கினங்க—ளீனமிலா
தானபொரு டேடு மவர்போற் றனக்குரிய
மீனினத்தைத் தேடும் விரைந்து. (32)

வித்திடத்து நாற்றாய் விளைபயிரா கிக்கதிராய்
முத்துசெந்நெ லாய முறைநோக்கிற்—சுத்த
வெழுத்திடத்துச் சொல்லா யிசைபொருளா யாப்பாய்
வழுத்துமலங் காரமெனு மாண்பு. (33)

கூனிரும்பு கொண்டு குறைத்தனர்வைப் போரதனை
வானிமிர்ந்த செம்பொன் வரைபோலத்—தானிமிரச்
செய்தா ரயல்வரைபோற் செந்நெற் குவியலினைப்
பெய்தா ரழகுறவே பெட்டு. (34)

மன்னவருக் காறிலொன்று மற்றோர்க் குறுகடமைத்
துன்னுநோய் தீர்ப்பார்க்குந் தொல்விதியிற்—சொன்னவழி
யீந்ததற்பின் சேட மிணையெருது சேர்சகட்டி
லாய்ந்தறிவிற் கொள்வா ரகம். (35)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங்
கைம்புலத்தா ரோம்ப றலையெனவே—நன்புலத்தா
ஞயனார் சொன்னவழி நன்குணர்ந்து மவ்வயினி
னேய முறுவார்க ணிதம். (36)

நெய்தல்வளம்.

நந்தியெனு மீன்பிடிக்க நல்ல வலையனெனச்
சுந்தரனே வந்தவந்தத் தொன்மரபின்—விந்தையினைச்
சொல்லுவா னெண்ணுந் துகடீ ரறிவினுக்கு
மொல்லுமோ வொல்லா துரை. (37)

இழிபிறப்பார் நற்குணத்தி னெய்தும் புகழ்போற்
கழிவுளதா நெய்தலுப்பு காணற்—கிழிவிலதோர்
நானிலத்தி லாம்பொருளி னன்குணவுக் கேயிதனை
மேனிலைக்கக் கொள்வர் வியந்து. (38)

முற்று முலைப்பரதர் முத்திற்செய் சிற்றிலினை
யெற்றுதிரை வாரி யெறிதலான்—மற்றவர்க
ளார்கலிக்க ணின்றங் கழைத்தா ரிராமனையே
கார்முகத்திற் கோரெடுக்கக் காண். (39)

நிலவுண் சகோரமந்த நீள்கடலின் சார
விலகுமொரு காரணத்தை யெண்ணி—னிலவினது
தன்னொளிகண் மாறுங்காற் றையன் முகமதியின்
மன்னுநில வுண்பான் மகிழ்ந்து. (40)

செஞ்சொ னுள்த்தியர்கள் செய்யவிதழ் கண்டு துகி
ரஞ்சிப் பயந்தே யடங்குவபோல்—விஞ்சுபுக
மூன்னு ரதரங்க ராகாதா லக்கடலி
லின்னு மிருத்த லிவை. (41)

நாட்டுவளமுற்றிற்று.

---

## நகர்வளம்.

கங்கையொடு தும்பை கரந்திடுமா வேணியினார்
செங்கையினிற் கோல்கொடுதந் தேயமெனுந்—தீங்கமுள
வந்நாட்டின் வண்மை யளப்ப ரறிவுடையோ
ரென்னறிவுக் கென்னு மிது. (1)

### புரிசை.

இந்திரற்குச் சாப மியலும் வகைதெரிந்தத்
தந்திரத்தை யன்னற்குச் சாற்றுவபோன்—முந்த
வெழுந்த புரிசை யெழிலார்பொன் னாட்டைக்
கழிந்துமேற் செல்லுங் கதி. (2)

நாலு திசையினும்வாய் நண்ணுதலாற் றன்னிடத்து
மாலுழக்கும் பல்லுருவு மன்னுதலாற்—சீலமுறு
மாமலரின் மீதுறையு மாமுனிவ னேநிகராங்
காமருவு மப்புரிசை காண். (3)

தோன்றலுறுஞ் சான்றோன் சுடர்மா மதில்கடக்க
வான்ற வலுவிலனு யம்மதிற்கு—மான்றோரைத்
தென்பால் வடபாற் செலுத்த வயனமென
நன்பா லமைந்ததென்பர் நன்கு. (4)

## அகழிவளம்.

மாநகரைச் சூழ்ந்தந்த வாரிதிக ளோரேழுந்
தானமர்ந்த தாகுந் தனியகழி—மீனவனுய்
மாதொருபா கத்தான் வருங்கா னமைக்கூவிற்
போதுமென வாசை புரிந்து. (5)

மிக்கூழ்ந் தகன்று மிகத்தெளிந்து மேபுலம்ப
லொக்கக் கணவ னுடன்பிரிந்தார்—சிக்கறநூ
லாய்ந்தரீர் விருத்தியுரை யாக்குவார் நற்சிவத்திற்
றோய்ந்தா ரகழியெனச் சொல். (6)

## புறச்சோலை.

சேட னுறுமுலகிற் சேர்நதனவச் சோலையின்வேர்
கூடு மினத்தாரின் கொள்கையெனப்—பீடுலவு
மேனாடு சென்ற வியன்கொம்பர் கற்பகத்தைத்
தானமரர் நாடாத் தகை. (7)

மாவு நிழலு மருவுறுபூ காய்கனியு
மேவுமந்தச் சோலை வியனோக்கின்—மாவுலகிற்
பாப்புகழின் மிக்கார் பரிவுடைய நாற்கவிக்கும்
யாப்புறுப்பே யாய வவை. (8)

மும்மதமும் பெய்து முழங்கி யுயர்விறொடு
தம்மிலிரு கொம்பு தயங்கிடவே—பொம்மலுறுங்
கைம்மாவை நோக்கிற் கதிர்வா ளிடித்துமின்னு
மைம்முகிலே போன்றனவா மற்று. (9)

கட்டுத் தறியொசித்துக் காற்றளையைத் தாறொருவி
யிட்டமுள பாக னியம்புரையைத்—தட்டலுறு
மாக்கரியை நோக்கின் வளமானங் கற்பவற்றை
நீக்குமொரு வேசை நிகர். (10)

வாசியெனும் பேர்ச்சாங்கு வாயுவுக்கு மேற்பதனுல்
வீசுயுக மாயவந்த வேகமுறுந்—தேசுலவு
காசிமுதற் கன்னிவரைக் காற்கடிகை யிற்செல்லும்
வாசிநிரா யவ்வளவு மாண்பு. (11)

### தேர்வளம்.

பன்மணியி னாற்கொடிஞ்சி பஃறுகிரி னாற்கால்கள்
பொன்னதிற்செய் நற்சகடு பொற்பினவா—நன்னயஞ்சேர்
முத்திறைற் றொங்கன் முழுமணியி னாற்சிகரம்
பத்திபெறு தேரினது பண்பு. (12)

### படைவீரர்.

மந்தரமு மாமேரு மன்னு மிருபுயமாஞ்
சுந்தரஞ்சேர் வீரர் தொகையிறந்தார்—விந்தையுற
வானத்தை வில்லாய் வளைத்துக் கரத்தேந்து
மானத்தா ருள்ளார் மகிழ்ந்து. (13)

### பரத்தையர்வீதி.

எண்கொண் டளப்பார்க ளெப்பொருளும் வாணிகர்கள்
கண்கொண் டளப்பார்கள் காமுகரை—விண்கொண்ட
சோதியுடை வேசை யுறுமா மறுகதனுக்
கேதுநிக ராகு மினி (14)

எள்ளளவா பெண்ணை யெழும்வகையே கைப்பொருளைக்
கொள்ளளவா மின்பங் கொடுப்பராற்—பள்ளநீ
ராழமறிந் தாலு மறிவி னிவர்மனத்தி
னாழ மறிவ தரிது. (15)

### வேளாளர்வீதி.

மாமாரி பொய்ப்பினுந்தம் வாய்மைபொய்யா வேளாளர்
தாமாறி லாக்கொடுக்குந் தானத்தின்—மாமாரி
வைகைக் கரைபுரள வந்ததென் றாலன்றி
செய்கையெவர் செப்புந் திறம். (16)

வீயாப் புகையதனுன் மேகமென மஞ்ஞையின
மோயா நடமாடு மொண்மறுகின்—மாயா
விருந்தோம்பும் வேளாளர் மிக்க வடிசிற்
பெரும்புகைகண் டவ்வணூறும் பெட்பு. (17)

### வணிகர்வீதி.

மாமணியும் பொன்னும் வணிகரால் குப்பையெனத்
தாமறுகிற் காணுந் தகைமையினாற் — காமருற
வின்றுங் கடைய ரெழிலுறவே சீத்ததிற்பொன்
னன்றடைவர் கோடியின்மே னன்கு. (18)

நா[illegible]த்திற் காணு நறுமலரின் றேன்சிறுகத்
தானெடுத்துக் கூடாக்குந் தன்மையுள — மானிலத்தி
னீப்போல் வணிக ரியைபொருள்சிற் றாதியத்தாற்
சேர்ப்பார் நிதியமிகச் சென்று (19)

தங்கைத் துலாநாப்போற் றஞ்சொற்றவறாது
புங்கமுறக் காக்கும் புனிதமுளார் — திங்களணி
வேணியாற் கேற்ப விரைச்சந் தகிற்கொடுத்துக்
காணுவார் மேலாங் கதி. (20)

### மன்னர்வீதி.

செம்மணியாற் பொன்னாற் செறிந்த நவமணியாற்
கம்மியர்செய் கோமாடங் காணுங்கால் — வெம்மையுறுஞ்
செங்கதிரும் வெண்கதிருஞ் சேர்ந்த வுடுக்களொடு
பொங்கமுறப் பாரிழிந்த பொற்பு. (21)

பாய்மா விலாழி பணைக்கைம்மா வூற்றுமதம்
மேய்மன்னர் தாரின்றேன் வீழுதலா — லோய்வி
லளறு மறுகி லதைநீக்கப் பின்னை
யுளவாம் பலதே ருருள். (22)

கந்தரத்திற் கந்தரங்கள் காணுதலாற் றன்னுடலஞ்
சுந்தரமா நீற்றாற் றுலங்குதலால் — விந்தையுறக்
கைம்மா வதன்புறத்துக் காணுதலான் முக்கணுடை
யெம்மானே போலு மிலம். (23)

வெண்கதிரோன் மேனிலத்து மேவாது சாளரத்தின்
கண்ணுழைந்து செல்லுங் கவினறிந்து — பண்ணுலவு
தம்மாத ரின்முகமீ தாங்கொலெனக் காளையர்கள்
செம்மையுற முக்தமிட்டார் சென்று. (24)

கண்ணிமையா தாயதெந்தக் காரணத்தாற் றேவர்க்கிவ்
வெண்ணமையா மாடத் தெழிற்சிறப்பு—நண்ணியதைப்
பார்த்ததினு லாய பரிசறியா ரன்னோர்கட்
சீர்த்தியலே யென்பார் சிலர். (25)

ஓங்கல் சிறகரிந் தும்பர்கோன் பன்மாடம்
பாங்குபெறச் செய்த பரிசெனலாந்—தீங்கிலதாய்
மாடமொடு கூட மறுகுநிலைக் கோபுரமு
நீடுறவே காணுதலா னேர்ந்து. (26)

அன்னமிடு சாலை யறம்பலவுஞ் செய்சாலை
நன்னயஞ்சே ரும்மடமு நற்றமிழோர்—துன்னுமொரு
கல்வி பயிலிடமுங் காளையர்க ளாடிடமு
மொல்கலிலா தெங்கு முள. (27)

எவ்வுயிர்க்குந் தன்னடியே யேற்ற நிழலைக்கு
மவ்வுருவுக் கோர்நிழலை யாக்குதல்போற்—செவ்வியுற
விந்திரனுற் செய்யு மெழின்மா மணிக்கோயி
னந்தலிலா தாகு நடு. (28)

## வேதியர்வீதி.

ஏந்து கரத்தோ டிமையோ ரெழின்மதுரை
போந்தங் தணர்மறுகு புக்கியே—காந்துமொரு
வங்கிகொண்டாம் யாகத் தவிப்பாகம் வேட்டுணற்குத்
தங்குவா ரந்தத் தலம். (29)

ஈசர் தொழிலைந் திவருக் கறுதொழிலேற்
பேசுவதெவ் வாறிவர்தம் பெட்பதனை—மாசிலதோர்
மந்திரமே யின்னோர் வசமா மி..ர்க்குமிக
ரெந்தவிதத் தானு மிலை. (30)

ஓதலினோ டோதுவித்த லோங்கும்க மேபுரிதந்
தீதகல வேண்டினர்க்குச் செய்துவித்தல்—காதலுற
ஈதல் பிறர்பாற்று மேற்ற லிவையாறும்
பேர்தலுறக் காண்பார் புகழ்ந்து. (31)

கள்ளமிலா தானகர்க்குக் காப்பிலையா லெக்காலு.
கொள்ளுவரி லாதாற் கொடுப்பரிலை—புள்ளிமயிற்
கிந்தனைநேர் காளையர்கள் காமத் தியற்கையுறார்
விந்தையுறக் கற்றதனால் விண்டு. (32)

கற்ப தருநாலே சாண்ப தரனுருவே
பொற்புலவப் பூணுவது பூதியதே—நற்சிறப்பிற்
றேடுவது புண்ணியமே செய்யா றுறைமார்பி
ளுடவருக் காயதொழி லாம். (33)

கற்பினுக்கா நாற்குணமுங் கைக்கோடல் காதலனைப்
பொற்புலவுந் தெய்வமெனப் பூசித்த—னற்குணத்தால்
வந்தவிருந் தோம்பி வளமா ரமுதூட்ட
லிந்துமுகத் தாரி னியல்பு. (34)

நகர்வலம் முற்றிற்று.

---

## புராண வரலாறு.

கண்டங் கரியனுதற் கண்ணுடையா ரின்கயிலை
புண்டாநீற் றின்முனிவர் போயடைந்து—விண்டலத்தைத்
தோயுஞ் சிலம்பிற் றுகடீர் சிவதீர்த்தத்
தாயுநெறி யாலாடி னார். (1)

சந்தி முடித்துத் தவமுடித்துத் தண்ணொளிசேர்
விந்தைபெறு மாயிரக்கான் மேவுமணிப்—பந்தியுள
மண்டபத்தைச் சார்ந்து மறைதெரிந்த சூதனருள்
கண்டடுத்து நின்றனரே காண். (2)

சம்புபத்த னோடு சதானந்த னாமுதலோர்
பம்புதிரை யார்க்கும் பரிசேபோற்—சம்புநிகர்
சூத முனியைத் தொழுதிறைஞ்சி னார்தமக்கா
மேதமதை நீக்குகென வேற்று. (3)

முன்ன மொழிந்த முறைமறந்தோ முக்குணத்தி
னன்மையிலாத் தாமதத்தா னற்றவனே—கன்மவினை
சாராது மேற்பதவி தாமடையு மாறருட்கண்
பாராயென் றேத்தினார் பண்டு. (4)

மிக்க் தலமு மிகுதீர்த் தமுமிறையோன்
புக்கவிட மொன்றதனைப் போதியெனச்—சிக்கறநூற்
றோர்ந்தமுனி யன்னார் திருமா முகநோக்கி
யோர்ந்தறியு மாறுரைத்தா னென்று. (5)

காந்தத்தி லீசனாற் கண்டசங் கிதையினைப்
போந்துமைக்கன் றீசன் புகலுமதை—யோர்ந்துவடி
வேல னகத்தியற்கு விந்தையுறப் போதித்த
கால மகத்தியப்பேர் காண். (6)

அக்கதையைக் கேட்பா ரானடியைச் சேர்வார்கண்
மிக்கதலப் பேருரைப்பார் வீடடைவ—ரொக்கவெனச்
சூத னுரைக்கத் துகடீர் தலப்பெருமை
யோதுகவென் றார்க்குரைத்தா னாற்று. (7)

மேனாண் மலரோன் விதியிற் பரியாகந்
தானடத்தக் காசித் தலமதனி—லீனமிலா
தொத்தம் முனிவருட னோம்பி யுயர்வுபெறு
சத்தியலோ கம்புகுந்தான் றான். (8)

மற்றவர்கண் முத்தியெனு மண்டபஞ்சேர் நாரதனை
யிற்றெமக்கு முச்சிறப்பு மெய்துதலஞ்—சொற்றியென
வன்னான் வியாதன்பா லாயுமென வன்னானுஞ்
சொன்னா னிதனைத் தொடர்ந்து. (9)

நன்று கதிர்வடிவே லையகன்பா லேதெளிந்த
குன்றடக்க வல்ல குறுமுனிபாற்—சென்றதனைக்
கேண்மினென வங்கவர்கள் கேடில் குண்முட்டையான
றாண்மலரைச் சூடினராற் றாழ்ந்து. (10)

எந்தா யெமக்கின் றெழிலுறுமா தீர்த்தமொடு
நந்தா விலிங்கமுறு நற்றலத்தைச்—சிந்தையினி
ஐயமுறு தங்க ளருளுகென வங்கவர்க்குத்
துய்ய முனியுரைப்பான் சூழ்ந்து. (11)

சிந்தையினி லையமறச் செங்கதிர்வே லென்றனக்கு
மு[illegible]வுரைத்த முறையுமக்குப்—பந்தமற
வீடருளு ஞான விளக்கொளிசேர் நற்றலத்தைப்
பீடுலவச் சொல்வனென்றான் பெட்டு. (12)

## தலவிசேடம்.

சைவத் தலங்கடமிற் றன்மைமிகு நாற்றலமா
மைவைத்த கண்டன் வளர்புலியூர்—தெய்வத்
திருவுலவு காளத்தி தேசுலவு காசி
கருவழிக்கு மாலவாய் காண். (13)

காணமுத்தி யாம்புலியூர் காசி யிறக்கமுத்தி
பேணமுத்தி காளத்தி பேசுங்கால்—கோணமதிச்
செஞ்சடையார் வாழுந் திருவால வாயதனை
நெஞ்சுவந்து கேட்கமுத்தி நேர். (14)

மற்றத் தலநூறு மாவருட னோற்றதனு
னூற்றபல னோர்நாளி னூற்றிடுமோ—னற்றவத்தை
யத்தலத்திற் செய்வா ரடையும் பெருப்பேற்றை
யெத்திறத்துச் சொல்வா மினி. (15)

கஞ்சமுளா னோர்நாட் கயிலைமுத லாந்தலமும்
விஞ்சுபுகழ்க் கூடலையு மெய்த்துலையின்—வஞ்சமிலாத்
தட்டிடவவ் வாலவாய் தான்கனக்கக் கண்டயனு
மட்டடங்கா தென்றான் மதித்து. (16)

மங்கையொரு பாகன் மகிழ்விளையாட் டெட்டெட்டை
யிங்குவந்து செய்தா லினியவற்றிற்—றுங்கமுள
வேறு தலமும் விள்ளற் குரியனவோ
சீருடையீ ரேதெரிக தேர்ந்து. (17)

## தீர்த்தவிசேடம்.

கங்கைமுதற் றீர்த்தமெலாங் கண்டவர்நம் போல்பவரே
யிங்கிதமாப் பொற்கஞ்ச மெய்துமிந்தச்—சங்கையிலா
நீத்தமுற்ற வாறு நிகழ்த்துவேன் கேண்மினென்றான்
மாத்தவத்தின் மிக்கான் மகிழ்ந்து (18)

நந்தி கணநாதர் நாரதருஞ் சூழ்தரச்சென்
றெந்தை விளையாட்டா லெவ்வுலகும்—நந்தலிலா
மாக்கடம்பின் சூழன் மருவு மிலிங்கமதின்
வாக்கிறந்தான் போந்தான் மகிழ்ந்து. (19)

வேத்திரத்தா னோடு வியனார் கணுதிபருந்
தோத்திரித்தின் றெந்தாயிச் சுந்தரனுஞ்சேர்—மூர்த்திதனை
ஆட்டிடவு மாடி யடியேங்க ளுய்ந்திட்வு
நாட்டுகவோர் தீர்த்தமென்றார் நன்கு. (20)

அக்கா லருட்சோதி யானவனுங் கீழ்சார்பின்
முக்காலுங் கேடிலதாய் மூவிலைவேன்—மிக்கெறிய
மீக்கிளர்ந்த பாணியிற்றன் வேணியுறு நீர்தூவி
யாக்கினனற் றீர்த்தமதொன் றங்கு. (21)

ஏழு கடலி னெழுநதியி னேழ்புவியிற்
சூழும் பிறநதியிற் றோய்பலனின்—மேலதிகங்
கோடியெனச் சொல்வர் குறிக்கு மதன்பெருமை
நீடியதே யென்று னினைந்து. (22)

## மூர்த்தி விசேடம்.

காசிமுதன் மற்றைலிங்கங் காணுமுன் மிவ்வுருவம்
வீசுபுகழ் நற்கடம்பின் மேவுதலா—லாசிலதோ
ரிவ்வுருவே மூல மிதன்சாகை யேமற்றைச்
செவ்வியுள லிங்கமென்றான் றேர்ந்து. (23)

மூலத்திற் கொண்டநீர் முற்றுஞ் சினைபரவி,
சீலமுற வேதளிர்க்குஞ் செய்கைபோ—லாலமுண்ட
சுந்தரப்பேர் பெற்றவிந்தத் தொல்லுருவைப் போற்றினரே
யெந்தவுருவுங் கண்டா ரேற்று. (24)

மதிகதிரிற் றேயு மதிநா ளாதுவே
விதிபாத மந்நாள் விரைவி—னதிமூழ்கித்
தானமோடு தர்ப்பணஞ்செய் தார்க்காம் பலனென் றுக்
கானதுவே கோடியென்று ணுப்ந்து. (25)

காலையொடு மாலை கதிருச்சி யிற்பொழுது
மாலையொடு யாமம் மகிழ்வுதர—நாலையுணர்ந்
தவ்வழியிற் பூசைவினை யாற்றுவர்க்கா நற்பலனை
யெவ்விதத்திற் சொல்வா மினி. (26)

சுந்தரமா லிங்கப்பேர் சொன்னாற் பிறவிபத்து
விந்தையுறு மவ்வுருவை மேவுநர்க்கு—நிந்தையுறு
மாயிரமாச் சென்ம மதிற்செய் வினையொழிக்கு
மாயிலென்று னங்கவருக் கின்று. (27)

நன்னீரா லாட்டி நறுமலர்கொண் டர்ச்சிப்பார்
மன்னுபல சென்மவினை மாளுவிக்கு—நன்னயமா
மைந்தெழுத்தை யோதி யவணிருப்பார் சீவன்முத்தி
நந்தலிலாக் காண்பரென்று னன்கு. (28)

என்ற முனிவ னிருதா ளிணைப்பணிந்து
குன்றடக்க வல்லோயிக் கூடலின்கண்—மன்றுடையா
னறுபத்து நான்கா யருளும் விளையாட்டைக்
கூறுகெனச் சொன்னார் குறித்து. (29)

ஓதுவான் றன்குருவா மொத்தமயில் வாகனன்று
டிதகலத் தன்மனத்திற் சிந்தைசெய்து—மாதொருபால்
வைத்தபிரா னுடல் வகுத்துரைத்தான் மாமறையோர்
சித்தமகிழ் வெய்தத் தெரிந்து. (30)

புராணவரலாறு முற்றிற்று.

---

## இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல்.

காப்பு:

மருவளரும் பூங்கடம்ப மாவனத்தெம் மண்ண
றிருவிளையாட் டெட்டெட்டைச் செப்ப—வொருதுணையா
ஞானமெனும் பூமியினை நாடினவர்க் கேயருளுந்
தானமத மாமுகத்தோன் றாள். (1)

நூல்.

பொன்னாட்டை யாண்ட புரந்தரனைத் தொட்டபழி
சின்னாள திற்கழிந்து தேசுபெற—வன்னவனா
மாலவாய்ச் சென்றங் கடைந்த பெரும்பேற்றைச்
சீலமுறச் சொல்வாந் தெரிந்து. (2)

ஐந்தருவி னீழ லணிமா மணித்தவிசிற்
சந்திரனைச் சூழ்ந்திருந்த தாரகைபோ—லிந்திரனும்
பொன்னாட் டவர்சூழப் பொற்பணிகள் பூண்டமர்ந்தான்
றன்னார்க ணெஞ்சஞ் சுட. (3)

ஊர்வசியே மற்றங் குளநாட் டியமாத
ரார்வமிக வுண்டாக்கு மாடலினாற்—றேர்விலனா
யிம்பாத ராடலொடு மின்னிசையுங் கேட்டதனா
லம்மா தளர்ந்தா னறிவு. (4)

அத்தகைய காலத் தருந்தவத்தி னேமிக்க
புத்தேள் வியாழனங்கு போதவே—மத்தமொடு
தன்குருவுக் கேற்பத் தகைமை புரிந்திலனாய்
மங்கையர்மேல் வைத்தான் மனம். (5)

கள்ளின் மயக்கமொரு காற்றெளியுந் தீராது
வள்ளைக் குழையாரின் மாமயக்கி—னுள்ளுறலாற்
றாய பதவி துறந்து நலமிழக்குந்
தீயதிடை யானான் றெரிந்து. (6)

பொன்னவனு மொல்கினனவே போர்ந் னவன்றிருவுஞ்
சின்னா ளதற்குளுறு சீர்கெடவே—யன்னான்
குருவை மதிக்காக் குன்றவந்த தென்னாத்
துருவ நினைந்தான் றொடர்ந்து. (7)

உம்ப ருலகோ டியர்வா னவருலகுங்
கிம்புருட ராதி கின்ருலகுந்—தென்புலத்தார்
தங்கு முலகுந் தவத்தோ ருறைவிடமு
மெங்கு மலைந்தா னிறை. (8)

இம்ப ருலகோ டெழுநிலனுந் தான்றிருவிக்
கம்பமுறாத் தன்குருவைக் காணா—யம்புயத்தோன்
வாழுமுல கெய்தி மலரோன் மலரடியிற்
றாழ்வுபெற நின்றான் றனி. (9)

நின்றவனை நோக்கி நின்றயா மனமுடையா
யின்றுனக்கு வந்த விடையூறென்—றன்றியனைப்
போர்புரிய வந்து புகுந்தவரை யோதென்றான்
பேர்பெரிய நான்முகத்தோன் பெட்டு. (10)

எம்பெரும வென்னை யெதிர்த்தா ரொருவரிலை
துன்பமுள தொன்று தொடத்தருள்க—சம்புநிக
ரொன்குரவ னென்னையினி னெய்துறயான் பேணுமொரு
நன்கிலதால் வந்ததிடர் நாடு. (11)

அன்னவனைத் தேடி. யலைந்தே னவற்காணா
தின்ன லுடனின்னைவந்திங் கெய்தினனாற்—பின்னவனைக்
காணும் வகையெனக்குக் காட்டென்றான் கஞ்சமுளான்
கோணும்வகை சொன்னான் குறித்து. (12)

தானவர்க ளிற்சிறந்தோன் றக்க தவமுடையோன்
வானவரின் மிக்க வளமுடையோன்—றானவன்பேர்
விச்சுவ ரூப விறலோன் றனைக்குருவாய்
நிச்சயிப்பை யென்று னினைந்து. (13)

மாமலரோன் சொன்ன வழியே திரிமுகனைக்
காமருற வேகுருவாக் காதலித்தான்—றீமனத்தன்
வஞ்சகனென் றோரா மகவான்செய் யாகமென
வெஞ்சலின்றிக் கண்டா னிசைந்து. (14)

அன்னான்செய் யாகத்தி னுக்க மசுரர்பெறச்
சொன்னான் மனத்திற் றுகளுடையான்—பொன்னுடன்
கண்டான் சிரத்தைக் கதிர்வாட் கிரையெனவே
துண்டுதுண்டாக் கண்டான் சுளித்து. (15)

துகளாய்ச் சிரங்க ளடித்துத் திசைதோ
றுகவே பழிவந் துறவு—மகல்வானை
யாளும் வலாரி யழுங்க வமரரெலா
மீளுவன கண்டார் விரைந்து. (16)

அஞ்சினவ ராகி யரிவையர்மேன் மண்ணின்மேன்
மிஞ்சுமர நீர்மேல் விடுக்கவே—விஞ்சுபுகழ்
வச்சிரத்தோன் றன்னை வடுச்செய் பழிநீங்க
வுச்சிதப்பே றுற்றா னுவந்து. (17)

தன்மகனைக் கொன்றவினை தான்கேட்டு மேதுவட்டா
கன்ம வினையைக் கருதியே—தன்வலத்தா
லிந்திரனைக் கொல்ல வியற்றினான் யாகமொன்று
தந்திரத்தி னாகவே தான். (18)

யாகத்தி னின்றே யழலெரியுங் கண்ணினொடு
மேகத்தைப் போலிருண்ட மேனியொடு—வேகத்தால்
வந்தானோர் வீரன் வடிவாள் கரத்தேந்திச்
சிந்தா குலமறுப்பான் றேர்ந்து. (19)

வந்தவனை நோக்கி வலாரி சிரமதனைச்
சிந்தவே கண்டு திரும்பென்றா—னந்தக்
கொணர்ந்தேனென் றோதிக் குரைசெய் கழலோன்
றணந்தான் றவட்டாவைத் தான். (20)

துவட்டாவை நீங்கித் துரித முடனே
தவத்தா ருறையுந் தலத்தே—யுவப்பாய்
நடந்தான் மகவா னலியத்தோள் கொட்டிப்
படர்ந்தான் செருச்செய் பதி. (21)

ஆர்த்தா ரிமையவர்க ளங்கவனைக் கண்டவுடன்
வேர்த்தார் முகமும் வெளுத்தார்கள்—பார்த்தவுடன்
கைக்குலிசந் தன்னைக் கடுகவிட்டா னிந்திரனுங்
கைக்கவலி யற்றதது தான். (22)

வந்த விருத்திரன்றன் மாப்படைகொண் டோச்சுதலாற்
சுந்தரஞ்சேர் மார்பைத் துளைத்திடவே—யிந்திரனுந்
தோற்றா னெனும்பேர் துலங்க மலரோன்றாள்
போற்றாநின் றேத்தினன் புக்கு. (23)

கொண்டலினை யூர்ந்தான் குறித்து நடந்ததனைப்
புண்டரிகத் தோற்குப் புகலவே—மண்டுதிரை
யாலிற் றுயிலு மவற்கோத மற்றவனுஞ்
சீலமுறச் சொன்னான் றெரிந்து. (24)

இங்கவனை வெல்ல வியலாது நின்குலிசந்
துங்கக் கடல்கடையத் தோன்றுநாள்—பங்கமிலாத்
தேவரொடு தானவர்கொள் திண்படைத நீசியிட
மாவனுடன் வைத்தா ரடைந்து. (25)

அந்த முனிவ னருளாலுட் கொண்டதனை
முந்தமுது கென்பாய் முளைத்தவைதாஞ்—சுந்தரமார்
வச்சிரமாக் கொண்டு வழங்குதற்கு நீயதனை
யிச்சையுறக் கொள்கவென்று னேற்று. (26)

அவ்வச் சிரத்தா லவனைவெலக் கூடுமெனப்
பவ்வமதை நீந்தும் பரிவேபோ—னவ்விமிகு
சீல முனியைத் தெரிந்தவனைக் கேட்டளவி
னேனுமெனத் தீந்தா னெடுத்து. (27)

என்பு கொடுத்தமுனி யெவ்வுலகுந் தான்போற்ற
வின்புபெறு மேலுலகி னெய்தினு—னன்பினர்க்குக்
காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது. (28)

என்றவகை மேவியே யிங்கதனைக் கைக்கொண்டு
வென்ற விருத்திரனை வெல்லவெனத்—துன்றிப்
பெரும்போர் கொடுவெனவே பேசினுன் பேசக்
கருங்கோ ளரிநகைத்தான் கண்டு. (29)

முன்போர் கொடுக்க முடியாத வீரநீ
வன்போர் கொடுக்கவந்த வாறேது—நின்றேரு
மாக்கரியி ளுேடு வயமரைக்கொன் றன்னுயிரும்
போக்குதலைக் காண்பனென்முன் போந்து. (30)

என்முன் வலவசுர னிந்திரனுந் தன்கரத்தே
நன்முக வேதனுமை நாட்டியதிற்—பொன்முந்த
கோடி கணைதொடுத்துக் கொண்மூ விடுயெனவே
நாடி விடுத்தா னக (31)

விட்ட படைகளெலாம் வேறுக்கிப் பல்படைக
டொட்டான் விருத்திரனுந் தோமறுசீ—ரட்டதிக்கிற்
கீழ்பாற் கதிபன் கிளர்படைக ளத்தனையும்
பாழ்படவே செய்தான் பணி. (32)

அட்டதிக்கி லொன்றொழிய வான படைகளெலாம்
விட்டா னசுரன் விலக்கியே—திட்டமுடன்
மூவர் படையை முடுக்கினு னிந்திரனும்
வேவு மனத்தான் வெகுண்டு. (33)

இந்திரனைக் கொல்வா னிசைய விருப்புலக்கை
குந்தமுத லாயுதத்தைக் கொட்டினு—னிந்திரனு
மன்னு மவனுயிரை வாங்கவே யோச்சினு
னன்னயமா வச்சிரத்தை நன்கு. (34)

ஆற்றா தவனா யளக்கர் புகுந்தான்முன்
றோற்ற மலையினது தோற்றமாய்—மாற்றானைத்
தேடி யிவனுந் திரைக்கடலி னேபுகுந்து
நாடினான் காணா னனி. (35)

ஆங்குச் சதுர்முகன்பா லண்மிப் புகலவவன்
தீங்கில் குடமுனிக்குச் செப்பென்றா—னோங்கல்
சிறகரிந்த செம்மல் சிறுமுனியைக் கண்டா
னறவுரையுந் தந்தா னவன். (36)

இங்கு நடந்த விடரனைத்துந் தானுரைக்கத்
துங்க முனியுந் துடைப்பனென—வங்கை
யளவாக முக்கா லருந்தினான் வேலை
யளறாக்க் காணுமா றன்று. (37)

உண்டதொரு காலையங்கோ ரோங்கலினோ டோங்கலெனக்
கொண்டு தவம்புரியுங் கோதினனைக்—கண்டவுடன்
றன்கைக் குலிசத்தாற் றாக்கியுயி ருண்ணவத்தி
வன்மைபெறப் பற்றினதால் வந்து. (38)

வந்து புகுந்திவனை வாட்ட வறிவிலனாய்
நொந்து தளர்ந்து நுணங்கினான்—முந்த
வினையினால் வாவி விரைசேர் கமலத்
தினையே புகுந்தா னிவன். (39)

பொன்னாடு தான்வறிதாய்ப் போக நகுடனையே
தன்னாட் டரசனெனத் தாபித்தார்—விண்ணாடர்
தீங்கு வருவதனைத் தேரான் சசிதனத்தே
பாங்குபெறக் கொண்டானால் பற்று. (40)

ஏவுநரைக் கொண்டந்த வேந்திழையைத் தானழைக்க
மேவு சசியும் விதிர்ப்பெய்திக்—கூவியே
தன்குருவாம் பொன்னவன்பாற் றானுரைசெய் தாளவனு
நன்குறுமாச் சொன்னா னயந்து (41)

சத்த விருடி தரிக்கத்தான் யானமிவர்ந்
தித்திசையா னுயி னெதிர்கொள்வா—யுத்தமியே
யென்றான் மறைபோ னெழிற்சசியு மேவினா
ளின்றிதனைச் செப்பென் றியைந்து (42)

சென்றா ளுழையரவள் செப்பியவா தாமுரைக்கக்
குன்றா முனிவரரைக் கூவினா—னன்றாக
நாஞ்சசிபாற் செல்ல நடத்துஞ் சிவிகையென்றா
னஞ்சழக்கர்க் குண்டோ வறிவு (43)

ஏழு முனிவ ரெடுப்பச் சிவிகையின்மே
லாழுவகை யோடேற்றா னரியரின்—சூழறியான்
பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுந் தரும் (44)

சென்றான் விரையச் செலசர்ப்ப சர்ப்பவென்றான்
குன்றடக்க வல்ல குறுமுனியு—மன்றவனைச்
சர்ப்பமா கென்று சபிக்கவவ் வாறானான்
துர்ச்செயலார்க் குண்டோ துணை (45)

இந்த வகையே யிவனேக வானவர்கண்
முந்தைக் குரவன் முளரித்தாள்—வந்தடைந்தே
யெங்கட் கரசனைநீ யீகென்றார் நன்றெனவே
பொங்குதடம் சென்றான் புகழ்ந்து (46)

வந்துநின்று கூவுதலும் வானவர்கோன் றன்குருவை
முந்திவந்து தாழ்ந்து முழுமனத்தோ—டெந்தா
யெனக்குறுநோய் தீர்த்தெனையு மீடேற்று கென்றான்
றனக்கு நிகரில்லாத் தகை (47)

நன்றிந்நோய் நீங்கு நலம்புவியி னல்லாது
துன்றுமிவ ணீங்குந் துணிபிலதா—லின்றுநீ
வேட்டை புகவே விரும்பென்றா னிந்திரனுந்
தேட்டமுறச் சென்றான் றெரிந்து (48)

குரவன் முதலெவருங் கூடிக் கயிலைத்
திரமா மலையதனைச் சேர்ந்து—வரமீ
குறுமுனிவா ழுந்திசையைக் கூடுவா னெண்ணிப்
பறவை சென்ற வாறடர்ந்தார் பண்டு (49)

கங்கை முதலாங் கணக்கி னதியாடிப்
பொங்கரவம் பூண்ட புனிதனார்—தங்குங்
கடம்ப வனமதனைக் கண்டான் வலாரி
நடந்ததே யன்னா னவை (50)

நவைதீரத் தன்குருவை நாடிப் புகன்றான்
சுவையா ரமுதுண்ட தோன்ற—னவைதீர்
திடம்பெறுமா தீர்த்தமொன்று செங்கண்மா லேற்றான்
படர்விடம் பாரென்றான் பரிந்து (51)

என்று குரவ னியம்பத்தன் னேவுநரைச்
சென்று திருவுமெனச் செப்பினான்—றன்றபசி
புல்வாயின் கன்றுக்குப் போர்ப்புலியே பாலருத்துஞ்
நல்வாய் வளங்கண்டார் நன்கு (52)

பாம்பின் குருளை பரிதவிக்க மஞ்ஞையின
மோம்புசிற கால்வெயிலை யோட்டுவிக்குங்—காம்பீரச்
சீயங் கரியுடனே சேர்ந்துலவு முண்ணாநீர்
நேயம் புலிபசுவு நின்று. (53)

இவ்வளஞ்சே ரும்வனத்தி னேவலர்கள் கண்டொரு
நவ்வி யதனை நவிலுவார்—தெய்வப்பூந்
தாமரைசேர் பொய்கைத் தடமுஞ் சிவவுருவு
நாமடையக் கண்டமென்றார் நன்கு. (54)

கண்டேமென் றோதுமுனங் கண்ணீர் பெருக்கிமனம்
விண்டான் மயிர்சிலிர்ப்ப வேர்த்தானால்—கொண்டவினை
யூர்ந்தா னொருவா றகந்தம் மறைப்பொருளைச்
சேர்ந்தான் வனத்தினிடைச் சென்று. (55)

வந்தனையே யெம்பெரும வாழ்வளித்துன் பாதமலர்
தந்தனையே நாயேற்குத் தாயனையாய்—முந்த
வினையனைத்து மேதுடைத்தாய் வேண்டுபணி நிற்குத்
தினையளவு செய்ததுண்டோ செப்பு. (56)

இன்னதிது வென்றறியா வேழையனை யாண்டளித்த
நின்னருளை நோக்கி னெறியுடையாய்—மன்னுயிர்க
ளத்தனையு நின்னுடைய வல்லாது வேறிலையென்
றுய்த்துணர்ந்தே னென்றா னுவந்து. (57)

என்று பலவா யிறைஞ்சி மணிக்கோவி
லொன்றுசெயக் கம்மியர்கங் கோதினா—னன்றெனவே
கைத்திறத்தி னாலுங் கதிர்செய் மணியானுஞ்
சித்திரித்தான் மிக்குறவே தேர்ந்து. (58)

அத்தகைய மானமொன் றங் கம்பொன் மணியானு
மத்தகயந் தாங்கும் வளத்தானும்—வித்தகமாய்ப்
பொன்னா டிழிந்திவணே போந்ததான் மற்றதனை
யிந்நாட்டிற் கண்டா னிறை. (59)

காட்டின் முளைத்த கவினார்சை வப்பயிர்க்குச்
சூட்டுமொரு வேலியெனச் சூட்டினான்—றேட்டமுறப்
பூசை புரியவொரு போதுகா ணாதி
யாசையெலாஞ் சென்றழிந்தா னன்று. (60)

ஈச னருவா லெழின்மாத் தடத்தினிடை
வாசமுள பொன்மலரும் வந்தனவா—னேகமுறப்
பொற்றா மரைப்பெயரே போந்த ததிற்படியப்
பெற்றார்க்கங் குண்டோ பிறப்பு. (61)

இன்னனவே பல்கா லியற்றுபூ சைக்கிரங்கி
முன்னவனு மன்னன் முகநோக்கிப்—பொன்னுடா
வேண்டு வனநீ வினவென்றான் விந்தையுற
மாண்ட குணத்தான் மகிழ்ந்து. (62)

மற்றவைபொய் யாக மறைதலா னின்னடியைப்
பெற்றிங்கு வைகவருள் பெம்மானே—சிற்றின்பம்
வேண்டே னென்றாற்கு விமல னருள்பெருகி
யாண்டகையே கேளென்றா னன்று. (63)

மேடமதி சித்திரைநாண் மேவுமந்தப் பூரணையி
லாடிநமைப் பூசைபுரி நாமுனக்குத்—தேடரிய
முத்தி யளிப்போநீ முன்போல நின்னுலகிற்
சித்திரக்கோ லோச்சென்றான் சென்று. (64)

என்றதொரு வார்த்தைக் கிறைஞ்சி யவனுலகிற்
குன்றா வளமதுரைக் கொள்ளுமுன—மன்றவனு
மிந்தமணிக் கோவிலின்கண் ணெய்துமவர்க் குள்ளநோய்
நந்துவரங் கொண்டா னயந்து. (65)

இந்தக் கதையை யியம்புநர்க்குங் கேட்குநர்க்குஞ்
சுந்தரப்பே றன்மகவுந் தோன்றிடவே—சந்திரனைச்
செக்கர்ச் சடையுடைய செம்ம லருளினாற்
றக்கவர மருள்வான் றான். (66)

இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் முற்றிற்று.

---

## வெள்ளையானை சாபந்தீர்த்த திருவிளையாடல்.

மட்டவிழ்பூங் கற்பகத்தின் மாலையணி யிந்திரனைத்
தொட்டபழி நீத்தவகை சொன்னேமே—லட்டதிக்கின்
வெள்ளையா னைக்கு விறலோ னிடுசாபம்
விள்ளுமாச் சொல்வாம் விதந்து. (1)

ஈசனிகர் துர்வாச னென்னும் விறன்முனிவன்
வீசுபுகழ் தன்பேர் விளங்குவா—னாசையினாற்
காசியெனு மாநகரிற் கண்மூன் றுடையாற்கு
மாசிறலுஞ் செய்தான் மகிழ்ந்து. (2)

அத்தலத்தி னைமுகவற் காம்பூசை வேதவழி.
சித்தமகிழ் வுண்டாகச் செய்யுங்கால்—வித்தகற்குப்
பேரருளாற் பொன்முடியிற் பேதமிலாப் பொன்மலரை
நீரணிவான் றந்தா னெகிழ்ந்து. (3)

அய்யன் றிருமுடியி னுயமலர் வீழாமுன்
செய்யகர மேந்தித் திருமுகத்திற்—றுய்யவிரு
கண்மார்பி லொற்றிக் கடிமலரைக் கைக்கொண்டு
விண்ணுடு சென்றான் விரைந்து. (4)

கற்பகநா டண்மியந்தக் காவலனைக் காணளவிற்
பொற்புலவு தோளான் புயவலியான்—மற்களத்துத்
தானவரைத் தேய்த்தமரர் தற்சூழ் வேபவனி
வானகநா டுற்றான் மகிழ்ந்து. (5)

நாற்கோட்டு நால்வாயி னன்குவந்தான் வெள்ளிமலை
மேற்காட்டுக் கந்தரத்தின் மேய்பாடே—நூற்றேர்ந்த
மாமுனிவ னன்மலரை வாழ்த்தலொடு போற்றென்று
காமுறவே யீந்தான் கனிந்து. (6)

பொற்கொம் பனைய புணர்முலையா ராடலினுங்
கற்கண்டு சீனி கசப்பிக்கும்—விற்கொண்ட
நன்னுதலார் பாடலினு நன்கமைவான் பொன்மலரின்
றன்மையறி யாதமைந்தான் றான். (7)

ஓங்கல் சிரத்தினிடை யுய்த்தா னறுமலரின்
பாங்கறியா தாய பருவேழந்—தீங்குறவே
காலாற் சிதைப்பக் கடுங்கோபி யாமுனிவ
னாலாலம் போலானா னன்று. (8)

அடடாயீ தென்ன வனியாயம் வேதந்
தொடரான் முடிமலரித் தோசிக்—கிடநாம்
நலன்றியா திந்த நவைசெய் தனனு
விலனெனவோ செப்பவென்று னீங்கு (9)

என்றவனைக் கூய்நின் னிறுமாப்பும் வேழமுற
நின்ற விறுமாப்பு நேர்வலென—வன்றவற்கு
மீனவனு னின்சிரங்கீழ் வீழ விறன்மதமா
கான்கமா வாகுகென்றான் கைத்து. (10)

ஆயதொரு சாப மளிக்க வமரர்பிரான்
றூயமுனி தாளிணையைத் தொட்டடியேன்—வீவிலனைக்
காத்தருள்வ துன்றன் கடனென்றான் கற்பகத்தின்
மாத்தருவிற் காத்தளிக்கு மன். (11)

பேரறிவி லேனடிமைப் பேதமையேன் பித்தனெனை
நீரலது யார்காக்க நேருவது—சீருடைய
என்னாட்டி னல்வளங்க ளெந்தாய் சிதறாது
நன்னாட்டங் கொள்விரென்றா னன்கு. (12)

தொழுவாற் கிரங்கித் துகடீர் முனிவன்
வழுவா தெனதுரையின் மாண்பே—யழுவோய்
தலைபொன்ற துன்முடிக்குத் தானென்றான் கைம்மா
நிலைவருட நூறளவு நின்று. (13)

காட்டானை யாகிக் கழியவென்றான் கற்பகத்தி
னாட்டானு மிக்கு நடுநடுங்கி—யேட்டா
லெழுதாப் பெருங்குணத்தி னெந்தாய்கா வென்று
தொழுதா னிருதாளைத் தொட்டு. (14)

மகுடபங்க மான வகைபின்னும் யானை
வெகுளிமுனி சாப விரைவாற்—றருவனத்திற்
காட்டானை யாகிக் கழித்ததுநூ றாண்டதனை
நாட்டானை யோடு நயந்து (15)

மருப்போ ரிரண்டு மறைந்த மதமா
கருப்பாய மேனி கலந்த—துருப்பு
வடிவுவே றாக மலிந்த மறைதேர்
கொடியமுனி வாய்ச்சொல்லின் கூற்று. (16)

கந்த மிகுமக் கடம்பவனத் தெல்லைபுக
முந்தைவினை யாவு முரிந்தோடச்—சிந்தை
யகமகிழ்வுண் டாய்முன் னறிவுறத்தன் றேக
நெகவுறுமா றுயதங்கு நேர்ந்து. (17)

நைவினையை நீத்த நலத்தா லிவணுறுமாத்
தெய்வத் தலமதனைச் சேவிப்பான்—மைவைத்த
கண்ட னுறைபுங் கதிரொளிசேர் மண்டபத்தி
னண்டையினில் வந்த தது (18)

பொற்கஞ்சம் போந்த புனித முறுதடத்தி
னற்குஞ் சரந்தோய்ந்து நன்மலர்க—ணிற்கும்
வனஞ்சென் றினிய மலர்நீரி னோடு
தினந்தொண்டு செய்ததுவாற் றேர்ந்து. (19)

மாலு மயனு மறியாப் பெரும்பொருளைச்
சீலமுறக் கண்டு தினந்தினமுங்—கோலமுறப்
பூசனைகள் செய்யப் புரிந்த தவப்பேற்றைப்
பேசுவதற் குண்டோ பிரித்து. (20)

அந்தமுள பூசைக் கருளுருவச் சுந்தரனார்
சிந்தைமகிழ் வுண்டாகித் திண்கரியே—விந்தையுற
வேட்ட வரத்தை வினவென்றான் வில்லுமிழ்நாற்
கோட்டுமாத் தன்னைக் குறித்து. (21)

என்பெரும வெற்குவர மெப்பொழுது மிக்கரியோ
டொன்பதெனத் தாங்கவர முய்த்தியென—வன்புறுத்தத்
தேவாதி தேவன் றிருக்கண் ணருணோக்க
மோவாது கொண்டுரைப்பா னென்று. (22)

பொன்னூட்டா னென்னன்பன் போந்தவனைத் தாங்குதலே
நன்னாட்ட மென்றந்த நாயகனுஞ்—சொன்னூட்டி
வேணவர மீந்து விடைகொடுத்தான் மேற்றிசையிற்
காணுந் தலமக் கரி. (23)

அயிரா வதப்பே ரரனுங் குள்ளு
மயிரா வதத்தைங் கரனுஞ்—செயிர்தீரக்
கண்டங் கருச்சனைசெய் கான்மகவா னம்மாவைக்
கொண்டுவரு கென்றான் குறித்து. (24)

தூதனுப்பு மிந்திரனத் தூதுவரை முன்னனுப்பிக்
காதலுறக் கீட்டிசையிற் கண்டதுவா—லோதலரு
மிந்திரப்பேர் கொண்ட வெழின்மாத் தலமொன்று
சுந்தரஞ்சே ரம்மாத் தொடர்ந்து. (25)

அறவழியிற் பூசனைக ளாற்ற மகவான்
றிறமுறுமால் யானையினைத் தேடப்—பறவைநிக
ராசிலதோர் தூதை யனுப்ப வறவோர்வாழ்
வீசுபொன்னு டுற்றதுமேன் மீண்டு. (26)

ஆனையினாற் கானு மயிரா வதமாடி
யீனமிலா விந்திரப்பே ரெய்துமொரு—கோனமரு
மர்தலத்தைக் கண்டார் மறுபிறவி யின்கணுற்றுச்
சர்தனுறு ரெஞ்ஞான்றுந் தான். (27)

வெள்ளையானை சாபந் தீர்த்த திருவிளையாடல் முற்றிற்று.

---

## திருநகரங்கண்ட திருவிளையாடல்.

திடம்பயினும் யானைபழி தீர்த்தவா றீதாங்
கடம்பவன மாநகராய்க் காண—நடந்ததனை
யோதப் புகுந்தே னொருகொம்பு மாமுகனைப்
போதமதி லென்றும் புகழ்ந்து. (1)

தென்னவரின் மிக்ககுல சேகரனாற் கோலோச்சு
மன்னதொரு காலத் தருணிறையுந்—துன்னும்
வணிகன் றனஞ்செயப்பேர் வல்ல புகழோன்
பணிபுரிவ னன்பருக்காம் பாங்கு. (2)

தன்குலத்தோர் செய்முறையிற் றானும் வணிகமதி
னன்கு குடபுலத்தே நண்ணினா—னின்கடம்பி
னச்சரவப் பூணினனை நாடினவர்க் கன்பன்றி
யிச்சையிலான் வேறுபொரு ளேற்பு. (3)

அன்னவனோர் காலத் தருள்சேர் கடம்பவனந்
துன்னுமந்தக் காலிற் சுடரோனுந்—தன்னொளியைத்
தானடக்கி மேற்கடலிற் றாழ்ந்தான் றனஞ்சயன்செய்
மேனாள் வினைபோம் விதம். (4)

துன்னு மிருட்பிழம்பு தோன்ற வதைவிலக்கு
மின்னொளியின் மிக்கு விளக்கொளிபோ—னன்னயமா
யட்டகயந் தாங்குமெழி லாம்பீடிகைகண்டா
னட்டம் பயில்வனொடு நன்கு. (5)

கண்டா னுளமுங் கனிந்தான் கதிரவன்முன்.
புண்டரிக மென்னப் புளகமுறக்—கொண்டா
னிருகண்ணி னீரிறைத்தே யெந்தா யெனக்கூ
யருகிருந்தா னன்றங் கவன். (6)

அன்று மதிவார மானதினாற் றேவரெலாந்
துன்றி யளவிறந்தார் தோமறுசீர்—மன்றுடையாற்
கான பலபொருளோ டாய்மலரி னர்ச்சித்தார்
பானுதய மாகுமட்டும் பண்டு. (7)

அவ்விரவி லையற் கபிடேகஞ் செய்தார்க்குச்
செவ்வித் திரவியங்க டேர்ந்தெடுத்து—நவ்விமிகத்
தந்தான் றனஞ்சயனுந் தாமவ் வினைமுற்றிச்
சந்தார்பே றடைந்தார் தாம். (8)

கங்குற் பொழுது கழிந்த தனஞ்சயன்றன்
பொங்கும் பிறவி புலர்ந்தலா—லெங்கு
நிறைந்தபரஞ் சோதி நிமலற் றொழுது
சிறந்தான்றன் னூர்க்குச் செல. (9)

பாண்டியன்பாற் சொல்லும் பரிவான் மனைக்கேகா
தீண்டினான் கோவி னெழின்மனைக்கே—யாண்டாய்
கடம்ப வனத்தெனது கண்கொள்ளாக் காட்சி
திடம்பெறயான் கண்டேனென்றான் றேர்ந்து. (10)

சுத்தத் தனிமுதலாஞ் சோதி யிலிங்கமொன்று
மெத்திக் கிருளினையு மேகுவிக்கும்—வித்தகமா
ரட்டகயந் தாங்கு மணிமா விமானமொன்றுந்
திட்டமுறக் கண்டேனென்றான் றேர்ந்து. (11)

அன்றிரவங் கான வதிசயங்க ளத்தனையு
மொன்றுங் குறையாம லோதவே—துன்றுமிரு
ளானதினுற் காலை யறிவ மென்னவிருந்த
மீனவனுங் கண்டுயின்றான் மேல். (12)

மறைகடந்த சோதியொரு மாசித்த னாகி
யிறைவ கடம்பவனத் தெல்லை—நிறைவுபெறக்
காணென்றான் மாநகராய்க் கங்கைச் சடிலமதிற்
கோணுமதி கொள்வான் குறித்து. (13)

கங்குற் பொழுது கழியுமா றெண்ணினன்
றிங்கள் குலத்தோன் றினகரனும்—பொங்குகடற்
றோன்ற வமைச்சரொடு சூழ்ந்தான் கடம்பவன
மான்ற வறிவுடையா னன்று. (14)

அவ்விடத்திற் றோன்று மருட்சோ தியைக்கண்டு
பவ்வப் பிறவிப் பவநீக்குஞ்—செவ்வியோ
யிவ்வனத்தின் வந்திங் கெனையாண்ட நின்கருணைக்
கொவ்வுகைம்மா றேதென்று ணோர்ந்து. (15)

என்று பலவாறே யேத்திப்பொற் றாமரையிற்
றுன்றிப் படிந்து துகளறப்பா—னன்று
செயவே யருச்சனைக்குச் சேர்த்தான் பொருளைக்
கயவினையை நீக்கினற்குக் காண். (16)

ஆவலித்துக் கண்ணீ ரருவியுக வன்பினொடு
நாவரர்த்தித் தோத்திரித்தா னயகனைப்—பூவகத்து
நான்முகனுந் தேடரிய நன்முடிக்குப் பன்மலருந்
தானெடுத்துச் சாத்தினன் றான். (17)

ஆவலொடு பூசையினை யாற்றி யமைச்சரொடு
காவினைசெய் வாரைக் கருதென்றான்—கோவுரையான்
மள்ளரினைக் கூவி மரங்களைய வேண்டுமெனத்
துள்ளிவந்தா ராங்கவர்கள் சூழ்ந்து. (18)

கோடரிமண் வெட்டி. கொடுவாள்கை வாட்பாரை
காடெரியு மற்றக் கருவியினு—னீடலுறு
மவ்வனத்தை யெல்லா மழித்தா ரருகினுறுந்
தெவ்வடுவார் போலத் தெரிந்து. (19)

காடனைத்தும் வெட்டிக் களைய மறையானுந்
தேடரியான் சித்தனெனத் தேருருவாய்—மாடனுகி
யாலயங்கள் செய்யென்று னரணறு லின்படியே
சீல விமானமொடு சேர்த்து. (20)

என்றங் கிறைமறைந்தா னேந்தன் மிருகனிவாற்
கன்றிழந்த வாவிற் கதறியே—மன்றுடுந்
தேவா மறையானுந் தேடரியா யென்குலத்தைக்
காவா யெனப்புகன்றான் காண். (21)

முன்னா லுரைத்த முறையேபன் மண்டபமுஞ்
சின்னாளிற் செய்தனனாற் சிக்கறவே—பின்னர்
வருணநான் கிற்கு மறுகதனைக் கண்டா
னிருநிலனு மேத்த விறை. (22)

மன்ன னிருக்க மணிமாட மும்மதுரை
முன்னோன் விழவின் முழுமறுகு—நன்னயமாய்
வாவி பலவும் வகுத்தான் வளமாருங்
கோவுநகர்க் காவல் குறித்து. (23)

கீழ்மேற் றிசைக்குக் கிளரையன் மாவினொடு
தாழ்வில் வடதிசைக்குத் தான்றார்க்கை—சூழுறவே
தென்றிசைக்குச் சத்தகன்னி சேர்ந்தமைத்தான் காவலென
மன்றலுறு மார்புடையம் மன். (24)

சாந்திசெய வையன் றனிப்பிறையி னல்லமுதின்
சாந்தியுறக் கண்டான் கவின்மதுரம்—போந்த
மதுரைப் பெயரே வழங்கி வனப்பார்
விதுரனங்கு சேர்ந்தான் விரைந்து. (25)

குடிபுகுந்து வாழ்ந்தார் குலமுறைக டப்பார்
மிடியுறுநோ யொன்று மிலராய்க்—கடிநகரை
மாமலைய பாண்டியனமேருள் வைத்துச் சிவபதவி
தாமடைந்தா னந்தத் தகை. (26)

குலசே கரன்மதுரைக் கோலங்கா ணித்தைப்
பலகா லுரைக்கும் பரிசாற்—றலமீது
வாழ்வுக் குரிய வளஞ்சேர் நிதிமகவுந்
தாழ்விலதா யென்றுந் தரும். (27)

திருநகரங்கண்ட திருவிளையாடல் முற்றிற்று.

---

## தடாதகைப்பிராட்டியார் திருவவதாரத் திருவிளையாடல்.

கடம்பவன மாநகராய்க் கண்டதனைச் சொற்று
மிடம்படரு மூவுலகு மீன்று—டிடம்பெறவே
மலைபத் துவசன் மகவா யரசு
நிலைபுரிதல் சொல்வாம் நிகழ்ந்து. (1)

வேதத்திற் சொன்ன விதியு மனுநூலி
னோதப் படுவனவு மொத்துளதாப்—போதத்தின்
மெய்ப்பொருளை யோரும் விறலோன் விரையாருங்
கைக்குநிம்பத் தாரனிவன் காண் (2)

வேட்கை யுறுமடவார் மிக்கபதி னாயிரவர்
பூட்கை மதவேழம் போல்வாற்கு—நாட்கமலத்
தோன்றுந் திருவனைய வொப்பில்பொன் மாலையினை
மன்றலுக்கே வைத்தான் மனம் (3)

சூரசே னன்றவத்திற் றோன்றுமந்தக் காஞ்சனையை
வீரன் மணம்புரிந்து மிக்கநா—டேருமொரு
சந்ததியைக் காணாது தான தருமமுதல்
விந்தையுடன் செய்தான் மிக. (4)

கண்ணுதலாற் கேற்பக் கவினார் விழவினொடு
மெண்ணின் மடங்க ளியற்றியே—புண்ணியங்க
ளெத்தனையுண் டத்தனையு மேந்திழையி னோடுசெய்தான்
சித்தமகிழ் வுண்டாகத் தேர்ந்து (5)

அன்னமலை யத்துவச னாண்மையுறு செங்கோலை
முன்னவரின் மிக்கு முறைநடத்தி—நன்னயமா
யாண்டுமகந் தொண்ணூற்றி னாறினொடு மூன்றினிது
காண்டலினை வானவர்கோன் கண்டு. (6)

இன்னுமொரு யாக மியற்றுவனே னம்பதவி
பின்ன முறுமெனவே பேதுற்றுக்—கன்னல்
கமுகெனவே யோங்குங் கவினாரு நாட்டான்
சமுகமது சார்ந்தான் றனி (7)

வந்த மகபதிக்கு வந்தனங்கண் முந்துசெய
சிந்தைமகிழ் வுண்டாயத் தேவர்கோ—னந்தலிலா
வாழ்வு பெறுகவென வாழ்த்தினான் வானாடு
தாழ்வுபெறாச் சூழ்ச்சியொடு தான் (8)

மக்கள் பெருகவொரு மாயாகஞ் செய்யாதே
யிக்கருமஞ் செய்ய வியலுவதென்—மிக்கோய்
மகப்பேறுண் டாக மகஞ்செய்வை யென்று
தகப்பேறு கொண்டுரைத்தான் றான். (9)

என்று வலாரி யிசைத்தமொழி யின்படியே
நன்றறிவார்க் கூவி நலனுறவே—யின்றெமக்குத்
தோன்றலுறு யாகந் துகளறவே செய்வதற்கின்
றான்றபொரு டேடுமென்றா னன்று. (10)

என்றளவே வேதியனோ டெப்பொருளுஞ் சேகரித்தா
னன்றவனுந் தம்பதியோ டங்கிருந்து—நன்றழல்வா
யாவினறு நெய்சமிதை யள்ளி யனற்கடவுண்
மேவியுண்க் கண்டான் விரைந்து. (11)

யாகப் புகையிவ் வகில மனைத்தப்போர்ப்ப
நாகச் சிரமு நடுங்கினவான்—யாகத்தார்
பூமாரி யன்று பொழிந்தார் புவிமடந்தை
தாமா தரவுபெறத் தான். (12)

மிக்க வனற்கடவுண் மேம்பாடும் பாண்டியன்செய்
தக்க தவப்பயனுந் தான்றோன்றச்—சிக்கெனவே
மூவுலகு மீன்று முடித்து மளிக்கவல்ல
தேவிவந்தாள் பெண்வடிவிற் றோர்ந்து. (13)

மூன்று வயதாய் முறுவ லிளநகையுந்
தோன்ற மணிப்பூணுந் தோளதனி—னான்றலவு
மேகலையுங் காற்சிலம்பு மிக்கொலிக்கக் கண்டவரி
னாகநிலை சொல்வதெவ்வா றாம். (14)

சூழியத்திற் கொண்டை சுடரெறிக்குங் காதணியும
பூழியருக் கேற்கும் புகழணியுந்—தாழ்விலதாய்ப்
பூண்டு மலையரசன் பொற்பாவை கஞ்சனைகைத்
தீண்டு மகவானா டோர்ந்து. (15)

மாதங் கழியாது மாவயிறு வீங்காது
சூதங் கருவித் துணைமுலையு—மேதங்க
மிக்கக் கருகா விமலையினை யீன்றாளின்
றக்கதவப் பேறிதுவே தான். (16)

அம்மை மடியிருக்க வார்வமிக வுண்டாகிக்
கொம்மைமுலை பால்சுரந்து கொட்டவே—யெம்மைப்
பவக்கடலில் வீழாப் பரிவொடுகாத் தாள்வா
னுவக்கைகொடு நின்றா னுவந்து. (17)

ஊரார் களித்தா ருறவினர்க ளார்ப்பரித்தார்
சீரார் செழியர்கோன் றீதகன்றான்—பேராரும்
பொக்கிசத்தி னைத்திறந்து போக்கி யிரவலர்கள்
கைக்கிசையத் தந்தான் களித்து (18)

காவற் சிறைநீக்கிக் கால விறைபோக்கிப்
பாவலர்க்கு வேணா பரிசளித்துக்—காவலர்கள்
கப்பத்தை நீத்திருப்புக் காற்றளையை வெட்டென்றா
னுப்பி லரச னுவந்து (19)

ஆன்றசிறப் பாக்கி யமலை முகநோக்கித்
தோன்று மனத்தினொரு துன்புளனாய்—மான்றரித்த
தேவாதி தேவ சிறியனேன் செய்பிழையைக்
காவாய்நீ யென்றான் கலுழ்ந்து. (20)

மகப்பேறு வேண்டியிந்த மாயாகஞ் செய்யத்
தகப்பே றிலாதாகத் தந்த—மகப்பேறு
மும்முலையி னோடுமொரு மொய்குழலே யானதனா
லெம்முனைவ ரேசவெனை யின்று. (21)

என்னப் பலவா றிடருழக்கு மவ்வயினிற்
றான்னு மசரீரி தோன்றியதான்—மன்னவநீ
கவலையுற லென்னிந்தக் காரிகையு மானாய்ப்
புவனமுழு தானுமினிப் போந்து. (22)

ஆண்மகவா யெண்ணி யரிய சடங்கனைத்தும்
வேணபடி செய்தி விரைவிலிவள்—பேணவரு
மன்றல் புரியு மணவா ளனைக்காணிற்
குன்று மொருமுலையின் கோள். (23)

இங்கிவட்கு நாம மிசைப்பை தடாதகையாய்
பொங்குகடற் சூழிப் புவியதனிற்—சிங்கக்
குருளையனை யாயெனவே கூற மனதி
னிருளொழிந்தா னன்றவ் விறை. (24)

சாதகப்பே ரோடு தருபேர் தடாதகையென்
றோதிப் பலவரிசை யுய்த்தனனே—னீதமுற
வெவ்வுயிருந் தான்காக்கு மென்கண் மணியாட்குத்
தெவ்வையடு பாண்டியனுந் தேர்ந்து. (25)

கலைசேர் மதியங் கவினார்வ தென்ன
நிலைசேர் வயது நிரம்பத்—தலைமீதி
லம்மனைபந் தாடலினோ டட்டுணைச்சிற் றில்லிழைத்தா
டம்மனதிற் கேற்பவென்றன் றாய். (26)

ஆடல் புரிந்தா ளகிலமெலா மாட்டவலாள்
கூடலினிற் பல்கலையுங் கோத்தொழிலு—யாடலைப்போல்
வில்வித்தை வாகனங்கள் மீது செலுத்துவதும்
பல்வளமுந் தேர்ந்தாள் பரிந்து. (27)

தக்கவய தானதற்பின் றன்பே ரரசுசெய
மிக்க வளமுடனிம் மெல்லியற்குத்—திக்கனைத்துஞ்
செங்கோல் செலுத்துந் திறமைசே ரோரையினிற்
றங்க முடியமைத்தான் றான். (28)

கன்னிப் பருவமதிற் காத்தலினாற் கன்னிநா
டென்னும் பெயரா யிலகுமிந்த—மன்னியசீர்
கோனா டதனையிந்தக் கொம்பனையாள் பாலிந்து
வானா டடைந்தானம் மன். (29)

மன்னவனும் வானடைய மங்கையிந்த நன்னாட்டை
நன்னயமாய்ச் செங்கோ னடாத்தினாள்—பன்னா
ளிறைசெலுத்து மன்னவரு மெத்திசையு மேத்த
மறைமுடியி னிற்பாள் மகிழ்ந்து. (30)

என்றான் குறுமுனிமற் றெல்லோருங் கைகூப்பி
நின்றார்க ளாகி நிறைதவத்தோய் — குன்றாத
மாத்தொழிலுஞ் செய்யு முதல்வி மகவான
தெத்திறத்தி னென்றார்க் கிசைந்து. (31)

விச்வா வசூவென்னும் விஞ்சைநா டன்மகவாம்
விச்வா வதியெனப்பேர் மெல்லியலு — நச்சரவப்
பூணினான் பாகமமர் பொற்கொடியாட் கன்புசெயப்
பேணினா டந்தகழல் பெட்டு. (32)

வணங்கு மகளை மனமகிழ்ந்து வாழ்த்தி
யிணங்கு மொழிதா லியம்பிக் — கனங்குழைக்கன்
றம்பிகையின் மந்திரத்தை யார்வமதி னோடுரைத்தான்
வெம்பும் பிறவிகெட விண்டு. (33)

உரைத்தவந்த மந்திரத்தை யோம்ப வளமார்
திரத்ததலஞ் செப்பெனுந்தன் சேய்க்கு — விரைத்தார்
மதுவுண்ணா வண்டினங்கள் வாழ்குழலோய் நன்று
விதுசேர் மதுரையென்றான் மேல். (34)

எந்தைமுனோ ரைவரெய்தி யெய்தற் கரியபெரு
நந்தலிலா மெய்ப்பதவி நண்ணினராற் — சுந்தரமா
ரத்தலஞ்செல் வார்க்கே யரிய பதவியுறுஞ்
சித்திரம்போல் வாயென்றான் றேர்ந்து. (35)

என்றதந்தை பாத மிறைஞ்சி யெழின்மருதந்
துன்று வனங்க டுறப்பவே — சென்றுயர்ந்த
கொம்பி லிருலதனைக் கோத்துடைக்குஞ் செந்நெலுறும்
பப்புரீ வைகைகண்டாள் பண்டு. (36)

சேர்ந்தங் கயற்கண்ணாள் சேவைசெயப் பொற்கஞ்சம்
போந்த தடங்குடைந்தப் பொன்னனையாள் — காந்துமதி
செஞ்சடையீ சனைந்துகரச் சித்தி விநாயகன்றன்
செஞ்சரணத் தாளடைந்தாள் சென்று. (37)

விக்கினம்வா ராதருள்க வென்று விமலைநோன்
பொக்கத்தை மாதமுத லோர்வருட—மிக்க
பொசிப்பனைத்து நாணுளாய்ப் போக்கிப் புரையில்
விசித்திரநோன் புற்றாள் விரைந்து. (38)

தேவியரு ளைப்பெருகத் தெள்ளமதைத் தோற்பிக்கு
நாவினொலி யோடு நரம்பொலியு—மேவியுற
வீணை முழுக்கி விரனடத்தி வித்தகிதாள்
காணா வுரைத்தாள் கவி. (39)

சொல்லும் பொருளுந் தொடரப்பல் பாடலினைக்
கல்லுங் கரையுமாக் காணவே—நல்லனவா
முத்தொழிலுஞ் செய்யு முதல்விவந்தாள் ஆலவாயதாஞ்
சித்திரப்பொற் பாவையெனச் சென்று. (40)

நங்காய் நினக்குவர நல்குவேங் கேட்டியெனப்
பங்கமிலா நற்றவத்தின் பண்புபெறத்—துங்கமறை
தேடரிய சோதித் திருவுருவைத் தெள்ளமுதைத்
தாடொழுது நின்றா டக. (41)

தொழுது கரங்கூப்பித் தோத்திரித்தே யெந்தாய்
வழுவில் பதமளித்த வாற்றா—விழுதுடைய
வேறு பொருளெற்கு வேண்டே னெனவிமலை
கூறும்வரம் பின்னுங் கொள. (42)

இவ்வுருவத் தோடே யெனக்கு மகவாகிச்
செவ்வியுற வென்மடியிற் சேரவருள்—தொண்டைக்
கனிவாய் மயிலனைய கற்பகமே யென்றாள்
பணிவாய் மொழியுடையாள் பண்டு. (43)

அவ்வகையே யாமுனக்கு வாகுவது பாண்டியரிற்
செவ்விமலை யத்துவசன் செங்கோலை—நவ்வியுற
நாட்டுங்கா னீயவற்கு நாயகியா மக்காலம்
வேட்டவ்வணஞ் செய்வலென்றாள் மீண்டு. (44)

சொன்னபடி யேயுலகிற் றோன்றவிச்சா வாவதியு
மன்னவரிற் பாண்டியற்கு மாதேவி—யென்னவே
யண்டங்க ளீன்றா ளவட்கு மகளெனவே
கண்டறிதா மென்றான். கனிந்து. (45)

மலைமுனிவ னோதை மருமலர்ந்தா ரந்த
நிலைமுனிவர் கேட்ட நெறியே—மலருலகி
னொத்த மனத்தோ டுரைப்போர்க்குங் கேட்போர்க்கும்
பொத்தமற முத்தியெனப் பேசு. (46)

தடாதகைப்பிராட்டியார் திருவவதாரத் திருவிளையாடல்
முற்றிற்று.

---

## திருக்கல்யாணத் திருவிளையாடல்.

வண்டுமுரல் பூங்கோதை வல்லியந்தப் பொன்மாலை
தொண்டின் மகவாய தோற்றமேற்—கண்டமதி
னஞ்சை யமைபரம னாடாள வந்ததனை
யெஞ்சலறச் சொல்வா மிசைந்து. (1)

தென்னர் குலம்விளக்குந் தேவி மறைநூலிற்
சொன்னவழி நன்னயமாந் தோமறுசீர்—மன்னவரிற்
செங்கோ னடத்தினளத் தேசமெங்கு மும்மாரி
பொங்கி வளமே புக. (2)

காவலர்க டங்களிறைச் சப்பங் கொணர்ந்துவரப்
பாவலர்க ளின்னிசையாற் பாடவிசை—தேவரெலாந்
தேவியது செங்கோற் றிறங்கண் டனுதினமு
மாவலுறு வார்க ளவண். (3)

காணற் கெளிதாகிக் காணாப் பெருஞ்சோதி
மான வரசளித்த மாண்பதனைக்—கோணலுறு
மென்னறிவாற் சொல்ல விசையாதா லென்னைத்
துன்னுவதாற் சொல்வேன் றுணிந்து. (4)

ஐம்பதினோ டாறுநா டாளு மரசரெலாங்
கம்பத்தோ டெம்மிறைவிக் கால்பணியத்—துன்பமுறாக்
காக்குங் கருணைவிழி காரணத்தா ளவ்வவர்க்கங்
காக்கு முகம னறிந்து. (5)

இன்னவிதஞ் செங்கோ லியற்றுமந்தக் காலத்து
மின்ன லிடையை பொலிவிக்கத்—துன்னி
நெருங்கியவாங் கொங்கை நிசியை மருட்டக்
கருங்குணமே கொண்டகுழற் காடு (6)

அக்காலப் பொன்மாலை யன்னை முகநோக்கித்
தக்க பருவமினைச் சார்ந்தனவே—யிக்கால
மன்றல் புரிய மணவாளற் காணெனவோ
வென்று தளர்ந்தா ளவள். (7)

சோர்வுறே லாகுங்கா லாகுந் துணையுடனே
சேர்வேந் திசைவிசயஞ் செய்வதற்குத்—தேர்தலொடு
மிப்பதியி னீயிருக்க வென்றுபல சேனைகள்சூழ்
வைப்பினிடை வைத்தாண் மனம். (8)

மந்திரியைக் கூவியின்று மாபரிதேர் மாமுரசு
மூந்தக்கா லாளு முழங்கமுறச்—சுந்தரமாய்
வீரமிகு சேனையினை மென்மேற் செலுத்தென்றாள்
காரிகையாண் மேருவழி கண்டு. (9)

வாசியினைப் பூட்டிவந்த மாத்தேரி னேறவர்மை
கூசி யிருபாலுங் கொற்றவர்க—ளேசமுறாக்
கற்பிளக்குந் திண்மைக் கவினர் புயமுடையார்
விற்பிடித்துச் சென்றார் விரைந்து. (10)

தேவி வடபாற் செலுத்தென்று தேரதனைக்
கோவிற் பெரிய குபேரனகர்—மேவியவன்
போர்புரிய வாற்றாமைப் போக வவன்றனது
சீர்கெடுத்துக் கொண்டா டிறை. (11)

வேண்டும் வளங்களொடு மெல்லியருந் தான்கொடுக்கப்
பாண்டிநா டாளுமந்தப் பண்புடையாண் — மீண்டு
மெதிர்ப்பவரைக் காணாதே யிந்திரன்மேற் செல்லக்
கொதித்தாடன் சேனைதனைக் கொண்டு. (12)

சேனை நெருங்கிவரச் சென்றா டிசைநடுங்கத்
தேனைக் கசப்பிக்குஞ் செம்மொழியாள் — வானவர்கள்
சென்றரசன் பாற்செப்பச் சீற்றமுடன் சேனையினை
நன்றுசெல்க வென்றா னகைத்து. (13)

வானாட்டான் சேனை வரக்கண்ட மாதுமிகத்
தானாட்டங் கொண்டு தளபதியைப் — பானாட்டு
மென்சொல் லவளாரும் விளித்து விரைவிலரு
மன்சேனை யோட்டுமென்றாண் மாண்பு. (14)

என்றளவே வாள்வே லிசையத்தன் சேனையுளார்
துன்றமைந்த வானவரைத் தோல்விகண்டார் — நின்றவர்க
ளோடி வலாரியிட மோதவே யாயிரங்க
ணாடினொருப் பாயினா னன்கு (15)

தும்பை மலர்மிலைந்து தோள்வீக்கி னம்புட்டி
லம்பைச் சொரியு மளவாகக் — கம்பித்த
சேனையெலாங் கூட்டினான் சென்றா செருநடக்க.
மீனக் கொடியுயர்த்தாண் மேல். (16)

விட்டா னிரதம் வெருட்டி விரைவிலந்தக்
கட்டழகிச் சேனைக் கடல்கலக்கப் — பட்டதினால்
வெங்கோப மாகி விடுத்தாள் பலசரத்தைச்
சங்கோப சங்கமெனத் தான். (17)

வந்த வலாரியது மார்பு கவசமொடு
நந்த மனந்தளர்ந்தா னாயகியை — முந்த
சரணடைந்தா னாகித் தன்னிதியம் யாவுந்
திருனாறவே தந்தான் றெரிந்து. (18)

பணிக்குப் பலமாதும் பாணினைக்கு மாது
மணிக்குட் சிறந்த மணியுங்—கணிப்பிலவாய்த்
தந்தான் றிசையனைத்துந் தான்வென் றரனிருக்கு
நந்தாக் கயிலைகண்டா னன்கு. (19)

வந்த வரவை மதிக்கவே பல்லியமுஞ்
சிந்தெனலா மெம்பெரும சிக்கெனவே—வந்தனையை
மாலையிட்டுக் கைப்பிடித்து வானகரை யாளமுடி
மாலையணி யென்ற மகிழ்ந்து. (20)

சேனைவரக் கண்டவர்க ளோர்ந்துநந்தி தேவரிடஞ்
சோனைமழை யிதென்னச் சொல்லலா—மானைவென்ற
வேல்விழியாள் கூட்டமினி மிக்குவந்த தென்றான்
கால்விரைவிற் சென்றான் கதித்து (21)

முக்க ணுடைய முழுமுதலின் காற்றொழுதே
யிக்கயிலை மாமலையி னெங்கணுமாய்ப்—புக்கினவான்
மீனக் கொடியுடைய மெல்லியலாள் சேனையெனக்
கோனவனுங் கொண்டான் குறிப்பு. (22)

போர்புரியச் செல்கென்றான்- போந்துநந்தி தேவரொடு
கார்விழியாள் கூட்டங் கலந்துமிகப்—பேர்பெரிய
சங்கு முழங்கச் சரமாரி பெய்தனரால்
பொங்குங் கடலதுவே போன்று. (23)

கன்னி படையுங் கணநாதர் தம்படையுந்
துன்னிச் சரமாரி தூர்த்தனவான்—மின்னு
மிடிகண் டரவமென வேங்கிக் கணைத்தார்
கடிகொள் கயிலைசென்றார் கண்டு. (24)

ஓடுவார் தோற்ற முமைவலிதி னேவருக
நாடுவதி லாதவந்த நாயகரைத்—தேடி
யழைத்துவர வென்றே யனுப்புமந்தத் தூதின்
றடைப்பெனவே சொல்லுந் தரம் (25)

ஓடினவர் சென்றங் குரைத்தார் திருமுன்னர்
கூடியொரு பெண்சேனை கொற்றத்தா—னாடிரிக
நஞ்சேனை யாவு நலியுமாச் செய்ததெனு
நஞ்சணிந்த கண்ட னகைத்து. (26)

மால்விடையி னேறினான் மாமேரு கைக்கொண்டான்
சேல்விழியைக் காணுந் திறத்தினான்—கோலப்
புலித்தோலும் புண்டரமும் பொற்புலவ வந்தான்
கலித்தநூன் மார்பிலங்கக் காண் (27)

தன்னைப் பிரிந்துவந்த தையலின்மே லார்வமொடு
துன்னத் தனதுபங்கு தோன்றலான்—மின்ன
லிடையுடையா ளுக்கங் கிடைமுலைதா னேகப்
படைவிழியா ளணினளாற் பண்டு. (28)

திட்டமிலா நாணந் திளைப்ப நிறையப்பூத்
திட்டமலர்க் கொம்பெனவே யேந்திழையா—ணட்ட
தலையி னிலங்கிறத் தன்மந் திரிபு
நிலையறிந்து கொண்டா னினைந்து. (29)

மதியிற் சிறந்தவந்த மந்திரியுங் கிட்டிப்
பதியிற் சிறந்தவெங்கள் பாவாய்—விதியினான்
முன்ன மசரீரி மொழிந்தவா றுனதினு
லின்னவரா நிற்கே யிறை. (30)

என்றான் சுமதி யெழில்கடம்ப மாவனத்தோன்
றுன்று மருள்சுரந்தத் தோகைபாற்—சென்றுநீ
திக்கு விசயஞ் செலுத்தவந்த நாண்முதலா
வொக்கவந்தே னென்றா னுவந்து. (31)

வேந்த ரவையத்து வேத விதிப்படியே
போந்துனது மன்றல் புரியநா—மேந்திழையே
திங்கட் கிழமைத் தினம்வருவே மென்றுரைத்தா
னெங்கு நிறைந்த விறை. (32)

அன்று னுரைத்தமொழி யாரமுதங் காதினகந்
துன்னி யவருடலந் தொக்கியபின் — னின்று
மிருக்க விடமிலதா வின்பு முறுவல்
வருக்கமெனத் தோன்றியநம் மாண்பு. (33)

உள்ளங் குளிர்ந்து வுடலமெலாம் பூரித்துக்
கள்ளுண்ண வண்டினஞ்சேர் கர்ரளகந் — தள்ளச்
சரிந்த நடையுந் தளர்ந்து தகவிலவா
யிருந்த விளைய வினி. (34)

அக்கணமே தேரேறி யம்மை மதுரைநகர்
சிக்கெனவே வந்தடைந்தா டேசமெலா — மொக்க
மணவோலை போக்கி மகிழ்ந்தார் மறையோர்
குணவோரை தன்னைக் குறித்து. (35)

ஆனைமேல் வீக்கி யறைந்தார் மணமுரசங்
கானக் குழலி கடிநாளை — மீனை
வெருட்டும் விழியார் மிகக்களித்து நின்றார்
திருட்டுறுநற் சிந்தையினுற் றேர்ந்து. (36)

இந்த நகரை யெழில் செய்ய வேண்டுமெனச்
சிந்து முரசொலியைத் தேர்ந்தவர்க — ணந்தமிலா
மாமதுரந் தங்குமந்த மாமதுரை யாமாதைக்
காமுருறக் கண்டார் கனிந்து. (37)

சுண்ண மெழுகிச் சுதையினுற் கோகிலமு
மெண்ணி லனப்பெடைக ளெய்துவித்தார் — விண்ணவர்போற்
பார்த்தவர்கள் கண்ணிமையாப் பாலனவாயப் பல்வளமுஞ்
சேர்த்தனரால் கைத்திறத்திற் றேர்ந்து. (38)

வாழை கமுகுபல வாளிரத்தி னங்களினுற்
சூழ வணியணியாய்த் தொங்கவிட்டுத் — தாழ்விலதாய்ப்
பூரணமா கும்பம் பொறித்தபல கோலமுடன்
சீர்வுகச் செய்தாள் சிறப்பு. (39)

உலகியல்பைக் காட்டு மொருவன் கடிக்கே
யிலகுமந்த மண்டபத்தி லெய்து—நலனதனைத்
தேறு மறிவுடையார் தேரா ரெனினஃது
கூறுவதோ வென்றாற் குறித்து. (40)

ஆயிரங்கால் வச்சிரத்தி னாக்கி யழுலெரிக்குஞ்
சேயமணி விட்டமதர்ய்ச் சேகரித்துப்—பாயொளிசேர்
நீலத்தாற் போதி நிலவொழுக நித்தலத்தாற்
சீலமுறு பந்தரெனச் செய்து. (41)

வாழை மரகதத்தான் வைத்துக் கமுகினடி
சூழ்வச்சிரங் துகிர்க்காய்த் தோமறுசீர்—காமுவிரும்
பச்சை யிலையாய்ப் பணிலமலர் பாளையதா
யுச்சிதமாய்க் கண்டா ருவந்து (42)

பந்தர் விதித்துப் பலமணியைக் கைக்கொண்டு
முந்தைநூற் சொன்ன முறைப்படியே—விந்தையுடன்
வேதிகைகுண் டங்கள் விதித்தார் விரையாரும்
போதுலவு மாது புக. (43)

சந்தனமுஞ் சவ்வாதுஞ் தண்பனிநீ ராற்குழைத்துச்
சிந்தி மெழுகினார் சேயிழையார்—நந்தலிலாக்
கோலம் வரைந்தார் குயிற்போலுஞ் சொல்லியர்கள்
சீலமுற வற்றைத் தினம். (44)

அய்யன் முதலா வளவிறந்தார் தாமிருக்கச்
செய்யா தனங்க டெரிந்தமைத்துத்—துய்யதொரு
சந்தனந்தாம் பூலந் தனையளிக்கத் தாமமைத்தார்
சிந்தா மணியதனைத் தேர்ந்து. (45)

இன்ன வகையா லிவணிருக்க முக்கணுடை
யன்னவனும் பண்ணவர்க ளாங்குவரச்—சின்ன
மெடுத்தூத வென்று ணிமையாத நாட்ட
மடுத்தார்கள் வந்தா ரவண். (46)

தேவரெலா மக்கயிலை சேர் விடமிலதா
யாவலிப்புக் கொண்டவர்க ளங்கொருபான்—மேவுதலாற்
சொல்ல வுளதோவித் தொன்மதுரை மாநகரத்
தெல்லையள வின்னதென வின்கு. (47)

புள்ளூர்ந்தா னுந்திருவும் போதன் கலைவாணி
தள்ளூர் குழல்வடமீன் காதலனு—மெள்ளுதலி
லிந்திரனு ருஞ்சசியு மெம்முனிவ ருஞ்சூழ்ந்து
வந்தார் கயிலை வரை. (48)

மணக்கோல மென்ன மறைதேடற் கெட்டாற்
கிணக்குமொரு கோல மிதுவோ—குணக்கோல
மெல்லாங் கடந்த விறைவற் கெழிலெனுமோர்
சல்லாபஞ் செய்தான் தக. (49)

அளகைக் கரச னவன்பதத்தைத் தொட்டுக்
களமேன் முடிவரையுங் கண்டங்—குளவான
வெல்லா வுறுப்புக் கிசைந்த வளவாக
நல்லா பரணமிட்டா னன்கு. (50)

புலித்தோலை நீத்தரையிற் பொன்னுடை கட்டி
மலித்தரவை நீத்து மணிப்பூண்—கலித்திலக
வானை யுரிநீத் தணிந்தான்பி தாம்பரங்கை
மானைப் பிடித்தாற்கம் மன். (51)

சுந்தரற்குச் சுந்தரமாய்த் தோளணியுங் காலணியும்
விந்தையுறச் செய்தான் விடையின்மேல்—கந்தமிகு
பூமாரி பெய்தருகிற் பொன்னுடர். துன்னிவரத்
தாமேறி னைத் தகை. (52)

வந்தா னுலகநடை மானுடற்கே காட்டுதற்குத்
தந்தா னரசுரிமை தான்பெறவே—கந்தாரம்
பாடுமந்த வண்டினங்கள் பண்செய் கடம்பவன
நீடுநக ரானதனை நேர்ந்து. (53)

அட்டதிக்குக் காப்பா ரவரவருக் கேற்றபணி
திட்டமுடன் செய்து திரண்டுவர—மட்டங்காப்
பேரி முழங்கப் பிரம்புகொடு நந்தியிவர்
சேரும் வழிதெரித்தான் சென்று. (54)

மதுரை நகரின் மறுகடைந்தா னுக்கு
மதுர மொழியுடைய மாதர்—கதுமெனவே
நீராஞ் சனத்தை நிரைமணிப்பொற் றட்டேந்திச்
சீரார் வரிசையிட்டார் சென்று. (55)

பார்க்க வழகனையும் பார்த்தவுட னணிறையுங்
காக்கா தவர்வளையுங் கட்டுதுகில்—போக்கிடவே
மாமலரை யிக்கு வளைத்துத் தொடுத்துவிட்டான்
காமனிலை கண்டவர்மேல் காண். (56)

இந்நம்பி நந்நங்கைக் கேற்றவனென் பார்சிலரே
யந்நங்கை நோற்றபய னதென்பார்—பின்னன்பா
லோடோ டியும்பார்ப்பா ருள்ளுடைய வெள்ளவினை
நாடா தறிவிழப்பார் நன்கு. (57)

காலாடா கையாடாக் கண்சிமிட்டாக் நெஞ்சசையா
மேலாடு நற்றுகிலை வேண்டுகிலா—மாலாகி
யெத்திறத்து மேம்பா டிலகி விளங்குகின்ற
சித்திரத்தை யொத்தார் சிலர். 58)

காமன் றனையெரித்த கண்ணுடையா ரென்பதுமெய்
யாமென்ப தென்னளவி லாகியதே—நாமவரைக்
காணுமு னெஞ்சங் கருகி நிறையழிந்து
வீணுகக் கண்டதென்பார் விண்டு. (59)

முன்சிரித்து முப்புரத்தை மொய்யழலாக் கண்டாரின்
புன்சிரிப்பிங் கென்னெஞ்சம் போழ்ந்ததே—நன்சடையிற்
கங்கையினை யேனணிந்தான் கண்வா யழலவிக்கத்
தங்கவைத்த தாமத் தனி. (60)

என்னப் பலமாத ரெங்கெங் கணுநிரையத்
துன்னியவர் கண்ணியர்மேற் றொக்கியவா--னன்னயமாய்ப்
பல்லா யிரங்கண் படைத்தா னிவனெனவே
சொல்லாடற் கொத்தான் சுயம்பு (61)

அன்னான் வரவை யறிந்தே யயனாட்டு
மன்னவரு மந்திரியு மற்றவருந்—துன்னிப்
பலவாத் தியத்தினொடு பண்பார் முடியி
னிலவுடையா னைக்கண்டார் நேர்ந்து (62)

அன்று வணங்கு மவர்க்கெ யருளுருவக்
குன்றவில்லி நன்குரைகள் கூறவே—நன்றவரை
யம்பொன் மணியா லலங்கரித்து மாளிகையிற்
பம்புறக்கொண் டுய்த்தார் பரிந்து. (63)

வேதத்துக் கெட்டா விமலன் விடையிழிந்து
வேந்தத்துப் பாதுகையின் மீதேறிப்—போதுற்ற
வேதனொரு பாற்றுங்க விண்டுமொரு பாற்றுங்கப்
பூதநா தன்புகுந்தான் போந்து. (64)

இட்டவரி யாதனத்தி லெம்மான் றனையிருத்திக்
கட்டழகிக் காஞ்சனையுங் காதலுறத்—திட்டமுடன்
கங்கா சலத்தாற் கழுவிப் புனலதனைப்
பொங்குசிரங் கொண்டாள் புகழ்ந்து.. (65)

பக்க மொதுங்கிப் பரஞ்சோதி கேட்டருள
வொக்க வுரைத்தா ளொருவசன—மிக்கோய்
தவப்பயனா யானீன்ற தையலு மிக்கோனு
முவப்பொடு கொள்கென்றா ளுவந்து. (66)

என்றளவே புன்னகையோ டெப்புவன முங்காப்பான்
றுன்று மணவறையிற் றோன்றவே—யன்றழல்வாய்த்
தோன்றும் பரம்பரையைத் துய்யமணிப் பீடிகையி
லான்றறிவின் வைத்தா ரமைத்து. (67)

பாசங் கழுவிப் பரகதியி லுய்ப்பாட்கு
நேசமுறக் கங்கைமுத னீரினொடு—வாசமுள
நன்னீ ரதனை நளிர்முடியிற் கொட்டினார்
தந்நீர்மை தேர்ந்துணரத் தான். (68)

சீவி முடிக்கவந்தார் சீதேவி வாணியரு
மேவுபய னின்று விளைந்ததெனத்—தேவிபதஞ்
செம்பஞ்சு தீட்டிச் சிறியவிரற் பீலியொடு
பம்புசிலம் பிட்டார் பரிந்து (69)

பாடகமிட் டார்பதத்திற் பட்டு மிடைக்கசைத்துச்
சூடுமந்த மேகலையுந் தொங்கவிட்டு—கோடுநிகர்
கொங்கைக்குக் கச்சணிந்து குங்குமச்சே றப்பினராற்
பங்கமிலா தாகப் பரிந்து. (70)

ஆரமணிக் கோவையினோ டம்பொற் சரப்பளியுஞ்
சீரிலகு கைக்காஞ் சிறப்பணியும்—பேருலவு
நத்துப் புலாக்கினொடு நன்மூக் கணியொளிபா
லெத்திசையுங் காணா திருள். (71)

இன்னும் பலவணிக ளெம்மம்மைக் கெய்துவித்துத்
துன்னு மழகுசெயுந் தோற்றமது—மன்னு
மொளிக்கோ ரொளிசெய்தங் குள்ளொளியை நோக்கிக்
களிக்குமா றுகுங் கவின். (72)

இருபா லினுமிருவ ரேந்தக் கரத்தைத்
தருவூர் சசியடப்பை தாங்க—மருவிக்
கொடிபோ லுடங்கியந்தக் குன்றவில்லி யின்பாற்
றுடியிடைபோய்ச் சேர்ந்தா டொடர்ந்து. (73)

சுத்தநீர் கொண்டு சுயஞ்சோதி யான்பதத்தை
வித்தகத்தி னோடு விளக்கியே—பத்தியினாற்
றீபங் கொடுத்துத் திளைதுயின்றோ னேமுதலோர்
பாபங் கழிந்தார் பரிந்து. (74)

அம்மை கரத்தையெங்க ளையன் கரத்தமைத்துச்
செம்மைநீ ராற்றத்தஞ் செய்தனனால்—மைம்முகிலோன்
றாந்துபிபூ மாரியொடு தோன்ற முனிவர்க
ணந்தலறக் கொண்டார் நயப்பு. (75)

வே.நனு ரக்கினிமுன் வேட்டு வினைபுரியப்
பேூதங் கடந்தாற்கும் பூங்கொடிக்கு—மேதங்க
வவ்வயினிற் றேன்பா லரியமது பர்க்கமிட்டா
ரவ்வுணவு தொட்டனரா லன்று. (76)

உலகநடை காட்டவந்தா ரோம்பும் விளைவை
யிலக வுரைப்ப தெவர்க்கா—நலனுறவே
யக்கினியுஞ் சூடு மரும்புமணம் வெவ்வேறுப்
புக்கியபோ லாயினரார் போந்து. (77)

அக்கினிமுன் னாக வரசாணி யுங்காண
முக்க ணுடையான் முறையதனி—லொக்குமா
மங்கிலியந் தன்னை யணிவிட்டுற்றி னேதரித்தா
னெங்களம்மைக் கெங்க ளிறை (78)

பூமாரி தூர்த்துப் பொருதார் மணமுரச
மாமாரி கார்காலம் வந்தனபோற்—றேன்மாரி
போன்றபல பாடலொடு பொன்னனையா ராடலிட
வான்றோர்க ளாசியிட்டா ரன்று. (79)

அம்மை கரம்பிடித்தே யக்கினியைச் சுற்றியபி
னம்மை பதங்கரத்தா லம்மியிட்டுக்—கொம்மைமுலை
மானே யருந்ததிபார் மாமயிலே யென்றானக்
கோனே யவளைக் குறித்து. (80)

அய்யன் முகமாய வம்புயத்தின் றேனையுண்ணப்
பய்யக்கண் வண்டு பறந்தனபோற்—றுய்ய
முகநோக்கிக் கண்டெனனு முத்த முறுவ
னகநோக்கிக் கொண்டா னணி. (81)

செய்யுஞ் சடங்கனைத்துஞ் செய்து முடிந்ததற்பின்
றுய்ய மறையோர்க டேசிறொடு—செய்ய
சிறப்பளிக்கப் பெற்றார் திறமுறப்பொன் னாட்டர்
நிருப்பிடஞ்சென் றூரா விசைந்து. (82)

விடையவருக் கீந்து விடைமே லழக
னடையுலகத் துக்கினிது நாட்டக்—கடைவாய்
முரசதிர மன்னர் முடியுறத் தன்பாத
மரசியல்கைக் கொண்டா னவன். (83)

சோமசுந் தரப்பெயரே தோன்றுமந்தப் பாண்டியனைக்
காமர்விடை நீத்துக் கயலெடுத்துத்—தேமருவு
கொன்றை தணந்து குலவுநிம்பத் தாரணிந்து
நன்றரசு செய்துவந்தா னன்கு. (84)

திருக்கல்யாணத்திருவிளையாடல் முற்றிற்று.

---

## வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய திருவிளையாடல்.

மன்ற னடந்த வகையுரைத்தேன் வெள்ளிமன்றா
ணின்றவர்கூத் தாடியதோர் நேர்மையினை—நன்றறிந்தோ
ரோதினவா றேசொல்லற் கோரா வுணர்வுடையே
னேதுவதற் கானே னுவந்து. (1)

இந்நாட் டரசரொடு மெம்முனிவ ரும்புசிக்கத்
தன்னாட்டங் கொண்டரனுந் தானுரைக்க—மன்னாட்டின்
மிக்க பதஞ்சலியு மேவு புலிப்பதனுஞ்
செக்கர்ச் சடையவன்பாற் சென்று. (2)

சிற்றம் பலத்தான் றிருநடனங் கண்டடியேங்
குற்ற மறும்புசிப்புக் கொள்வமென—மற்றதனை
யாடுவோங் கண்டிங் ககமகிழ்வீ ரென்றுரைத்தா
னீடருளு மெம்மான் விரைந்து. (3)

உலகுருவ மானவருக் கொப்பில்பொன் மன்ற
மிலகிதய மாமதுரை யீதே—நல்லோர்
துவாதசாந் தம்மெனவே சொல்லரனை மற்றைத்
தவர்தவங்கம் யாதென்றார் தாழ்ந்து. (4)

கேட்டிடுவீ ரின்னிடையின் கீழ்கீ ழுலகேழு
நாட்டிடின்மேன் மேலுலகு நன்கமைந்த—தேட்டமுற
வேழங்க மாரு ரியலானைக் காவருணை
சூழ்தில்லை யென்றான் சுயம்பு. (5)

எண்ணில்கா ளத்தி யியல்காசி யேகயிலை
மண்ணிலங்க மாக மலிந்தனவாற்—பண்ணியலும்
வண்டுமுரன் மாக்கடம்பின் மாமதுரை மிக்கனவாய்ப்
பண்டுபணி ரண்டினந்தம் பார். (6)

மூலசுவா திட்டான முந்துமணி பூரகமுஞ்
சீல வநாகதமுஞ் சேர்விசுத்தி—கோலமுறு
மாக்கினையு மேபிரம ரந்திரது வாதசந்த
நோக்குவீ ரென்று னுனித்து. (7)

அங்கவனைக் கூவியந்த வாலயத்தி னேபுகுதத்
துங்கமத வேழந்தந் தோள்சுமக்கும்—பொங்கும்
விமானத்தின் கீழ்பால் விளங்கியதோர் மன்றை
நமாற்சொல்ல லாமோ நயந்து. (8)

மால்விடையே வேறுருவ மாறியதோ வெள்ளிமலைச்
சீலமுறத் தேடுந் திறனிதுவோ—கோலமுற
மத்திபத்திற் றோன்று மணிப்பீ டிகைதினக்கோ
ளொத்து விளங்கு மொளி. (9)

அப்பீ டிகைமீதி லுறங்கத் துட்பொருளோர
மெய்ப்போ தகவடிவின் மேவியே—யொப்போதற்
கொண்ணாப் பெருஞ்சோதி யோலமிடக் காற்சிலம்பு
தண்ணார் நடஞ்செய்தான் றன். (10)

கண்டார் பிறவிக் கடல்கடக்கக் கர்றாக்கிக்
கொண்டான் முயலகனுங் கொட்புறவே—விண்டலத்தோர்
பூமாரி கொண்டு பொழிந்தார் புவியினுளார்
தாமார்ப் பரிப்புற்றார் தாழ்ந்து. (11)

நாரணனார் மத்தளமும் நான்முகனார் வீணையினிற்
பேரிலகு சாமம் பிறங்கவே—நாரதனு
மற்றை யரும்பஞ்ச வாத்தியத்தை யேமுழக்கச்
சித்துருவாய் நின்றான் சிவன். (12)

நந்தி முதலானோர் நல்வாத் தியமுழக்கப்
பந்தமறை தேடும் பரம்பொருளு—நந்தலிலாப்
பத்துக் கரங்களினும் பல்லா யுதங்களொடு
மத்தியநற் பீடமுற்றான் மாண்பு. (13)

காளமதைக் கண்டமிட்டுக் கற்பகநாட் டைக்காத்த
கோலமதைக் கண்டு குளிர்ந்தனரால்—சீலமுறக்
கண்ணீர் பெருக்கிக் கரங்குவித்து மெய்சிலிர்த்துப்
பண்ணீர்மை கண்டார் பலர். (14)

தோத்திரங்கள் செய்யத் தொடங்கினார் தொண்டருள
மாத்திரமாய்த் தோன்று மணிவிளக்கே—சூத்திரத்தா
லிவ்வுலகை யாட்டு மெழிலுடையா யெம்பிறவிப்
பவ்வமாற் றென்றார் பரிந்து. (15)

அம்பலத்தி லாடு மரசே யருணிறைவே
வெம்பு மிருணீக்கும் விழுப்பொருளே—பம்புதிரை
வைகைநகர் வந்துவெள்ளி மன்றமதி லாடுகின்ற
தெய்வத் திருவுருவே தேற்று. (16)

எங்களுக்கா விவ்விடத்தி லெய்தி நடம்புரிந்த
பொங்கு கருணையினைப் போலுளதோ—கங்கையினைச்
சூடு மவுலித் துரியாதீ தப்பொருளே
சாடுவினை தீருமென்றார் தாழ்ந்து (17)

தொண்டர் பலவாத் துதிக்கத் துகளறுசீர்
வண்டலம்பு கோதை மருங்கிருப்ப—விண்டலர்ந்த
கொன்றையந்தா ரான்காலிற் கோச்சிலம்பி னோசையது
சென்றனவா லெங்குஞ் செறிந்து. (18)

அன்றிருவ ருக்காச்செய் யானந்த நாடகத்தைச்
சென்று முனிவரொடித் தேயத்தார்—கண்டதனான்
மாப்பிறப்பி னுய்க்கு மணிவாய லின்கதவங்
காப்பிடுமோர்க் கண்டார் கதி. (19)

பத்தர்க ளிற்சிறந்த பாம்போய் புலியோய்நீர்
சித்த முறுவதனைச் செப்புகென—வித்தகத்தா
ரித்தலத்தி லிந்நடன மெப்பொழுதுஞ் செய்தியென்ச்
சித்தனுமா மென்றான் றெரிந்து. (20)

பாம்புமுனி பின்னுமெம்மான் பாதங்க ளிற்பணிந்தே
யோம்புநடங் காண லொருவருறிற்—றீம்பதனை
யாக்குவிக்கு நோயை யகற்றி யருட்கண்ணா
னோக்கு வரங் கொண்டா னுனித்து. (21)

என்னு முனிக்கெம் மிறையு மருள்சுரந்து
துன்னு வரமதுவுந் தோன்றுமெனா—மண்ணவரு
மாமுனிவ ருந்துதித்து மார்பிழிகண் ணீரினோடு
வோமெனக்கொண் டார்த்தா ருவந்து. (22)

ஆர்த்துச் சிவகணங்க ளம்முனிவ ரைப்புல்லித்
தீர்த்தனட முன்செய் திறத்ததிக—மாத்திரமாய்க்
கண்டனம்யா நின்றிறத்திற் கண்களிக்கப் பேருவகை
கொண்டனமென் றார்கள் குளிர்ந்து. (23)

இந்த நடன மெழிலா திரைதொட்டுப்
பிந்தா திரையளவும் பேணினர்க்கே—நந்தலிலா
தெக்காரி யங்களும்வந் தெய்திப்பே ரின்பமுற
நக்கனருள் செய்வா னனி. (24)

வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய திருவிளையாடல் முற்றிற்று.

---

## குண்டோதரனுக்கன்னமிட்ட திருவிளையாடல்.

வெள்ளிமன்றி லாடும் விமலன் விளையாட்டை
யுள்ளளவிற் சற்றிங் குரைத்தனமேல்—குள்ளமுறுங்
குண்டோ தரனன்னங் கொள்ளைகொண்ட வாறதனை
விண்டோத லுற்றும் விரித்து. (1)

மன்றனுக்கா வந்தவந்த மாதவரு மன்னவரு
மன்றவரின் சேனை யளவிறந்தார்—துன்றுதிரை
யாரமுதி னுக்கு மறுசுவையோ டன்னமதைச்
சீரிலக வுண்டார் சிறந்து. (2

உண்டாரை மிக்கா வுபசரித்துச் சந்தனமும்
பண்டார் முறைமைப் படியீயக்—கொண்டார்க
ளானந்தம் பொங்கினரா யவ்வவரி னுடைந்தார்
தானந்த வில்லாராய்த் தான். (3)

வந்து பணிந்தார் மடைத்தொழிலின் வல்லார்க
ளெந்தாயாஞ் செய்யடிசி லின்றளவுங்—குன்றிலதா
லாயிரத்தி லோர்பங் களவையினி யாயபணி
சேயினர்பாற் செப்பென்றார் சென்று. (4)

என்றளவே சென்றா ரிறையின் றிருமுன்னர்
நின்றபூங் கொம்பி னிலையுடையா—என்றவன்பாற்
றேவ ருணவினுக்காச் செய்யடிசின் மீந்ததெனை
வாவலித்துச் சொன்னாளவள். (5)

மேருமலை யன்ன மிகுந்தகறி காயவைதாஞ்
சாருமலை போலச் சமைந்தனவால்—யாரிதனை
யுண்ணுந் தகைய ரொருவரையுங் காணேனென்ன
வண்ண லுரைக்குமா லன்று. (6)

மூவேந்த ரிற்சிறந்த மொய்குழலாய் நின்வலியாற்
றேவேந் திரனாட்டின் சீருனதே—காவேய்ந்த
நின்னுக்கத் திற்களகை நேரிலதா மென்றிறையுஞ்
சொன்னான் மிகவாய்த் தொகுத்து. (7)

செய்த வடிசிலினைத் தேர்ந்துண் டவசமுற
நொய்ய பசியுடையார் நோக்குகிலேந்—துய்ய
குண்டைசுமக்கு மிந்தக் குறட்பூதந் திற்கே
யிடுவையென்று னெங்க ளிறை. (8)

வடவனலை யன்னான் வயிற்றினிடைச் செல்லத்
திடமுறவே யுன்னலுமச் செம்மல்—குடவயிற்றோன்
மிக்க பசியால் வெதும்ப வடிசிலிடஞ்
சிக்கெனக்கொண் டுய்த்தார்க டேர்ந்து. (9)

கொண்டுய்த்தா ரன்னங் குறைந்த வழியதனைக்
கண்டெய்த்தா ராங்கவனைக் கண்டவர்கள்—பண்டுதிரை
வாரியினை யுண்ட வடிவென்பா ரிவ்வுலகை
யோரடியாற் கொண்டதென்பா ரோர்ந்து. (10)

ஆமாங் குறியவடி வானதே யின்றய்யன்
மாமாயை யாமிவ் வடிவென்பார்—நாமெல்லாம்
வேமாறு கொண்டு விழுங்குமென வோடினார்
காமா கயற்கணிபாற் கண்டு. (11)

சென்றிதனைத் தேவியிடஞ் செப்புவோ மென்றுசெல
வன்றடிசிற் சாலையுள வத்தனையுந்—தின்றும்
பசிதீரா னாகிப் பழம்பா றயிர்நெய்
புசிதமுறக் கொண்டா னுவந்து. (12)

வேகாக் கறியரிசி வெல்லஞ்சே ரப்பமொடு
வாகார மாக வதிரசமும்—பாகாரும்
பண்டபல பட்சணமும் பாங்குபெற வுண்டுபசி
கொண்டவனு நின்றான் குறள். (13)

ஓமத்தி னெய்சொரிய வுண்டா மனற்போல
வேமப் பசிநோய் விடுகிலதாய்த்—தூமத்தைக்
கக்குகின்ற வாயானைக் கண்டம்மை யும்பயந்து
நக்கனிடஞ் சென்று ணயந்து. (14)

சென்று பணிந்தாள் செழுமலர்ப்பூங் கொம்பன்னாள்
குன்றையொரு வில்லாகக் கோட்டலுறா—மன்றயன்மா
தேடரிய மோனத் திருவுருவத் தெள்ளமுதின்
மாடணுகி நின்றாண் மகிழ்ந்து. (15)

என்றா னினையறிதற் கெய்துமோ வென்றவளுந்
தன்மா முகங்கோட்டித் தன்காலான்—மன்னு
நிலங்கீறி நின்றா ணிமலனறி யான்போற்
கலங்குவதே தென்றான் களித்து. (16)

அச்சிறிய பூதமுணற் காகா தனவுளவே
லுச்சிதமாப் பூதமுள வுண்ணற்கே—யச்சமுறே
லென்றமுன் வாய்பொத்தி யெம்பெரும பூதமுணற்
கன்னமிலை யென்றா ளவண். (17)

இன்னுமொரு பூதமதை யேவுவையே லிவ்வுலகை
மென்றுமோ வென்றே யியம்புமுன—மின்னலுடன்
சங்கு குழையெயிறு தன்னேர் பிறைபோல்வான்
பொங்குபசி யாலயர்வான் போந்து. (18)

அய்யவினி யாற்றேனா னன்ன மலைதொலைந்து
பொய்யெனவே மற்றைவளம் போயினவால்—வெய்யபசி
தீருமென வையன் றிருவருளி னாற்பசியைப்
பேருமாக் கண்டான் பெரிது. (19)

**குண்டோதரனுக் கன்னமிட்ட திருவிளையாடல் முற்றிற்று.**

---

## அன்னக் குழியும் வைகையையுமழைத்த திருவிளையாடல்.

அன்னமிட்ட வாற தறைந்தே மரனவற்குத்
துன்னபசி தீரவனந் தோற்றுவித்து—மின்னுசடைக்
கங்கையினை வைகையெனக் கண்டதும் யாம்புகல்வாஞ்
சங்கையிலா துள்ளளவே தான். (1)

மந்தாரஞ் சூடுகுழன் மாதே மகிமையுறுஞ்
சிந்தா மணியளவு தேர்ந்தனமா—னொந்தபசி
யாற்றாநின் னாக்க மளவிறந்தா ருண்ணச்செய்
தோற்றமென்னாங் கண்டு துணி. (2)

என்றளவே பூமகளை யேவி யிவன்பசிக்குக்
குன்றாத வன்னங் கொடுவெனவே—நன்றாக
நாற்புறத்து நாற்குவிய னன்பா றயிருடனே
யேற்புறவே கொண்டுவந்தா ளிங்கு. (3)

செழியன் மருமகனாய்ச் சேல்விழியாள் பாங்கனுமாய்
வழுதிப் பெயர்பூண்ட வள்ளல்—பழுதில்
குடைசுமக்கும் பூதமந்தக் கூயன்னந் தன்னை
யிடுவயிற்றுக் கென்றா னிறை. (4)

என்ன விருகை யிருகுவிய லைத்தொட்டு
முன்பின்ன தென்ற முறையானே—யன்னமதை
யுண்டுபசி தீர்ந்தா னொருமொழியாற் பல்பிறவி
விண்டொழிந்த வாறே மிக. (5)

மேனியெங்கு மேவயிறாய் வீங்கியே பார்வீழ்ந்து
வேனிற் புழுப்போல் வெதும்பினான்—மாநீரின்
வேட்கையினா லுண்டான் விரைமலர்சேர் பொய்கையினைப்
பூட்கைமத வேழமெனப் போந்து. (6)

உண்டான் குளத்தையதி னுள்ளநண்டு நத்தையெலாங்
கொண்ட வயிற்றைக் குடியாக—மண்டலத்தி
னன்மை யுறவழக்கு நாடாதா னாக்கமுறுந்
தன்மையென வற்றியநீர் தான் (7)

இன்னுமவன் றாகவிடா யேகாதா லெம்பெருமான்
மின்னுசடை தங்குமந்த மெல்லியைக்கூ—யின்னவன்றன்
றாகத்தைத் தீர்க்கத் தனிவைகை யாவருதற்
கேகுவைநீ யென்றா னிறை. (8)

அய்ய னுரைதலைமே லாக்கி யவளுலகிற்
றய்ய பகிரதியாத் தோன்றியபோல்—வெய்யகொடு
பாவமெனுற் போக்குவகை பாலிப்பை யென்றவன்பான்
மேவுவரங் கொண்டாள் விரைந்து. (9)

இப்போது மேநதியா யேகவருள் செய்தவெனை
யொப்போதற் கொண்ணு வொருமுதலே—கைப்போதாற்
றீண்டியுண்டு மேகுடைந்தார் தீயவினை போக்குகென்றாள்.
மாண்ட குணமுடையம் மாது. (10)

தத்தவர மேன்றுகொண்டு தான்வேக மோடமிகு
சிந்து கிளர்ந்தொழுகுஞ் சீர்மையென—முந்த
வறத்தா றிழுக்குரு ணக்கம் பெருகுந்
திறத்தினள வாகவந்தா டேர்ந்து. (11)

கல்லென் றொலிகாட்டிக் கால்வாய் குளநிரப்பிச்
செல்லுமந்த நீத்தத் திறநோக்கி—னல்லது று
மாமாயை நீத்தின்ப வாழ்வடைவா ரின்மனமு
மோமென்ற சொல்லுமா மொப்பு. (12)

திரையா மிருகரமுஞ் சேர்த்தள்ளிப் பொன்னும்
விரையாரு மான்மதமு மென்மேற்—கரைசாரத்
தந்த விரவலர்க்குத் தாங்கொடுக்கும் வள்ளலெனச்
சிந்துமந்த நீத்தந் தெரிந்து. (13)

கரைகடவா வேறுமுகங் காணுக் கவினுர்
விரைமலர்த்தார் சந்தனமும் வேய்ந்து—நிரையநிந்து
செல்லுமந்த நீரின் றிறநோக்கிற் கற்புடைய
மெல்லியரைப் போன்ற மிக. (14)

பன்மணியும் பொன்னும் படுமுத்து மாமலையின்
மன்வளமுங் கொண்டு வருவதனுன்—மன்னுலகின்
மாவணிக ரிற்சிறப்பு வாய்ந்தநதி யைப்பாண்டிக்
கோமருகன் கண்டான் குறித்து. (15)

ஆகம் பெருத்தானை யங்குகூய் நின்னுடைய
தாகந் தவிர்த்தியெனத் தாமுரைக்க—மேகந்
திரைசார வுண்ட திறம்போ லிருகை
கரைசார வுண்டான் கவிழ்ந்து. (16)

கற்றார்கள் பேரறிவுங் காண்பரியா னோடொன்றப்
பெற்றாரைப் போலுமுறப் பெற்றனனாற்—பொற்றாம
வேணியான் பொற்பதத்தை வேண்டித் துதித்தானற்
பாணிவிடாய் நீங்கப் பரிந்து. (17)

கீதத்தி னுக்கினியான் கேட்டின்ப மோடுவந்தான்
காதைப் பொருவுங் கயற்கணிபால்—வேதத்துக்
கெட்டானு நன்கருணை யெய்ந்து மதுரைநகர்
தொட்டரசு கொண்டான் றொடர்ந்து. (18)

அண்ணல் சடையிழிந்த தாற்சிவகங் கைப்பெயரும்
பண்ணவனைத் தேரறிவு பற்றுதலா—னண்ணரிய
ஞானதீர்த் தப்பெயருந் நாடிலுறும் வேகவதி
யூனமிலா வைகையென் றோர்ந்து. (19)

அன்னக் குழியும் வைகையுமழைத்த திருவிளையாடல் முற்றிற்று.

---

## ஏழுகடலழைத்த திருவிளையாடல்.

அன்னமொடு வைகை யழைத்தவா றேவிதந்துப்
பொன்மாலை வேட்ட புணரியினை—மன்னுசடை
முக்கட் பரமன் முதுமந்துரை யேயழைத்த
திக்கதையைச் சொல்வா மினி. (1)

மனுநூல் வகுத்த மறைமுதலே தன்னாற்
பனுநூல் வழிநடத்தப் பாரிற்—றனுநூல்
வழிதெரிந்த பாண்டியனாய் வந்தரசு செய்தாற்
பழியுறுமோ வந்நாட்டின் பண்பு. (2)

முற்றுணர்ந்த மாதவரு மூவா முனிவருமோர்
பற்றுதலி லாவப் பரம்பொருளே—யிற்றுருவாய்க்
கோல்செலுத்த வந்தவிந்தக் கோலமதைக் காணலுற்று
மாலுழக்க வந்தார் மகிழ்ந்து. (3)

தொண்டுபுரி கௌதமனுந் தோமிலா னல்லுருவைக்
கண்டு செலுமந்தக் காலத்தே—விண்டொடர்ந்த
பொன்மாலை மாளிகையிற் போத வவளிவற்கு
முன்வணங்கி நின்றாண் முயன்று. (4)

செய்தவங்கள் யாதோ தெரிகிலேன் றுங்களிவ
ணெய்தப் பெறற்கே யிறையவனே—மெய்யறிவாற்
போதங் கடந்தபரி பூரணத்தைக் கண்டறிவோ
யேதமறக் காணுகென்றா ளெற்கு. (5)

பாவங் கழிக்கவகை பாலிப்பா யென்றளவே
மாவுலகை யீன்றாண் மகளாகச்—சேவேறு
நக்கனே நின்மருக னுகுங்கால் வேறுவினை
புக்குவதுண் டோவென்றான் போந்து. (6)

எம்மைநீ கேட்கையா லேலுமொன் றியாம்புகல்வே
மும்மைவினை கொண்டு முயலுவா—ரிம்மையினில்
வாக்கான் மனத்தான் வளமுறுநற் காயத்தாற்
போக்கிடுவர் பாவப் புணர்ப்பு. (7)

தான தருமங்க டம்மே லுளம்வைத்த
லான பலவுயிரி னன்பார்தன்—மோனத்தா
லந்திவண்ணன் றன்னுருவை யன்பா லகத்திருத்த
னந்தலிலா மானதமா நாடு. (8)

அஞ்செழுத்தை யோத லருளோ டருச்சித்த
றுஞ்சலினு மெய்ப்பொருளைத் தோத்திரித்த—லெஞ்சலிலா
வேதம் பயிறல் வினவுதனற் சாத்திரத்தை
யோதலிவை வாக்குவினை யோர். (9)

அய்ய னுறைதருநல் லாலயங்க டோறுசெல
றுய்யகங்கை தீர்த்தமுத றோய்வுறுதல்—வெய்ய
பவம்போக்கு விப்பான் பரிந்துடல நோவத்
தவஞ்செய்தல் காயவினை தான். (10)

மும்மை வினையின் முதற்றீர்த்த யாத்திரையே
செம்மையுறுங் கங்கையினைச் சேர்ந்தாடி—லும்மைவினை
வாராது காக்கும் வரநதிசே ரும்புணரி
யோரார்நீ ராடுகென்றா னேற்று. (11)

எத்தீர்த்த நற்பலனு மெய்தவளிக் கும்புணரி
யத்தீர்த்த மாடு மமைவுபெற—முத்தி
யளித்துலகைக் காக்குமெங்க ளம்மையிடஞ் சென்று
விளித்திதனைச் சொன்னாள் விரைந்து. (12)

மாயக் கடல்கலக்கி வாழ்வளிக்கு மங்கயற்கண்
டாயதனை யீயுந் தரமிலைபோ—னையகற்குச்
செப்புவே னென்று திருமா மலர்க்கொம்பி
னொப்புடையாள் சென்றா ளுவந்து. (13)

அய்யன் றிருமுன் னடைந்தெம் மருட்கடலே
துய்யவனம் வைகைகண்ட தோன்றலே—யுய்யுமா
றன்னை கடலாடு மார்வமுற்றா ளென்றளவே
யின்னே விளிப்பனென்றா னிங்கு. (14)

கூயினா னேழ்கடலுங் கொற்ற மதுரைகுண
வாயிலோர் பொய்கையிடை வந்தமர்ந்த—தூயநிறச்
சங்கினங்கண் முத்துந் தனியிப்பி யீன்றமுத்தும்
பொங்குநுரை போன்ற புணர்ப்பு. (15)

அண்ட முகடிடிய வார்ப்பரித்த தந்நகரார்
கண்டு மிகவுங் கலங்கினார்—துண்டமதி
வேணியா னாணை விதிப்பாற் பொறியடங்கக்
காணுவர்போ லானதவை காண். (16)

ஏழுகடலழைத்த திருவிளையாடல் முற்றிற்று.

## மலையத் துவசனையழைத்த திருவிளையாடல்.

மலைவுபெறு மேழ்கடலும் வந்தவா சொற்றா
மலையத் துவசன் வருமா—றலைவிலாத்
தன்னந் தனிமுதலே தானழைத்த வாறுசொல்வோ
நன்னெஞ்சார் சொன்னவழி நாம். (1)

பாண்டிநா டாளும் பரனும் பரையாளு
மீண்டு வரும்புணரிக் கேகினா—ராண்டு
மகிழ்முல்லை பாதிரியு மந்தாரை யாதி
மகிழ்வுதரு நந்தனத்தின் மாடு. (2)

சேடியர்க ளோடிச் செழுமலரைக் கொய்தந்த
நீடு கயற்கண்ணி நேர்கொடுக்க—வீடருளு
மெம்மானு மம்மானு மேற்றங்கு கந்ததனை
யம்மா சொலவெவருக் காம். (3)

பூவு மணமும் பொருந்துமா றாகுமவர்
மேவக் கயற்கணியா மெல்லியைக்கூய்—மாவுலகில்
வந்த புணரியினின் மாதாவை யாட்டுவித்து
முந்தைவினை போக்க வென்றான் மூண்டு (4)

எவ்வுயிர்க்குந் தாயாவா ளேற்குந்தாய் காஞ்சனையைப்
பவ்வநீ ராடும் பரிவுடையோய்—செவ்வே
யெழுகடலும் வந்திங் கிருந்தனவாற் சென்றுன்
பழுதகல்வை யென்றாள் பரிந்து. (5)

என்றளவே சென்றா ளெழின்மறையோ ரைக்கூவி
நன்று புணரியிடை நான்மூழ்கக்—குன்றலிலா
வேதத்திற் சொன்ன விதியாது கூறுகென
வோதத் துணிந்தா ருவந்து. (6)

தன்கா தலன்கரமுந் தப்பி றனயன்கை
நன்குறவே யிவ்விரண்டு நல்காதே—றுங்கமுள
வாவினது வால்கொண் டரிய புணரியிடை
மேவிக் குடைதலென்றார் மிக்கு. (7)

என்னு மொழிகேட் டிடருழந்து தன்மகட்குச்
சொன்னா ளதனைத் துகளறுப்பாண் — மின்னுசடை
யண்ணலார்க் கோத வவனுநின் றந்தையினை
மண்ணுலகிற் காண்பனென்றான் மற்று. (8)

எல்லாஞ் செயவல்லா னிந்திரனோ டங்கிருக்குஞ்
சல்லாபப் பாண்டியனைத் தானினைந்தான் — வில்லாக
மேருவினைக் கொண்ட விறலோ னினைவறிந்து
பாருலகன் னானடைந்தான் பண்டு. (9)

ஓங்கல் சிறகரிந்த வும்பர்கோ னாடிழிந்தே
யோங்கலையி னேழ்நிறங்கொ ளோதத்தே — தீங்கிலதோ
ரம்பலத்தி லாடு மருட்கடலை யையமற
விம்பரினிற் கண்டா னிசைந்து. (10)

கண்டான் மகப்பேறாற் காண்பரிய காட்சியினைக்
கொண்டா னுளமகிழ்வு கோதறவே — தொண்டருள
நீங்காக் கருணை நிறைவை யடிபணியப்
பாங்குறச்செல் வான்முன் பரிந்து. (11)

மாம னெனுமுறைமை மன்னுதலாற் புல்லியவன்
றாமமுடி வீழாத் தடுத்தனனாற் — பூமலரி
லொன்றுந் திருவனைய வுன்மா மனைவியொடு
சென்றுகட லாடுகென்றான் சேர்ந்து. (12)

என்றான் பரம னெழின்மலர்ப்பூங் கொம்பொன்று
குன்றாது பூத்தொசிந்த கொள்கையென — நின்றானைக்
கண்டா னினதுமன் றல்காணாக் குறையதனை
விண்டேனென் றானந்த வேந்து. (13)

நானடைந்தே னற்பேறு நாயகியே யென்றுபுல்லி
வானடைந்தா னின்ற வகைநோக்கி — னூனடைந்த
வாக்கைப்பேர் பெற்ற வரசரினி லின்னானி
னாக்கப்பேர் பெற்றாரிங் கார். (14)

மலையரசன் பெற்றபேர் மாட்சிமையோ விந்த
நிலவரசன் பெற்றநெடும் பேர்க்கே—யுலைவிலதோர்
பொன்னாடு பெற்றான் புவிநாட்டின் மீட்டுவந்து
நன்னாடு கண்டா னயந்து. (15)

முல்லை முறுவனகை மொய்குழலக் காஞ்சனையுங்
கல்வியினாற் றற்பிரிந்த காதலன்ற—னல்வரவு
கண்டவிளங் கன்னியர்போற் காமுற்றுக் காதலனைத்
தெண்டனிட்டா ளந்தத் தினம் (16)

வணங்கி மறையோர் வகுத்த வழியே
யிணங்கு பவுத்திரமு மேற்றுக்—கனங்குழையுந்
தன்கா தலன்கரத்தைத் தான்பிடித்தைந் தக்கரமு
நன்சார் புடனவின்றா னன்கு. (17)

ஏழ்கடலின் மூழ்கி யெழுந்தா ரினிப்பிறவி
யாழ்கடலின் மூழ்கா தவரானார்—சூழ்நலத்தா
ரய்யன் றிருவடிவ மாயினா ராலமுண்டான்
செய்யதிரு நோக்கின் செயல். (18)

காளகண்ட நாற்புயமுங் காந்து நுதற்கண்ணுங்
கோளகன்ற மேனிக் குலவுருவு—நீளுலகிற்
கண்டார்கண் மெச்சக் கதிரோ னொளியெனவே
கொண்டார்க ளீசன் குணம். (19)

எந்நாட்டின் மிக்க வெழின்மா கயிலையொரீஇ
யிந்நாட்டிற் றோன்று மெழின்மான—முன்னாகச்
சென்றா னுளமகிழத் தேவன்ற னேவலினாற்
குன்றா முலையொடுமைக் கோன். (20)

ஏறினார் மானத் திறைத்தார் மலர்தேவர்
கூறினவாற் பல்லியமுங் கோதகல—வீறிலா
மாமுனிவ ரேத்த மறையோர் துதிபுகலத்
தோமிலராய்ச் சென்றார் தொடர்ந்து. (21)

அன்னை மகளாயு மப்பன் மருமகனு
மின்னலுறுந் தேக மினியனவாத்—துன்னலுற
வொத்தவங்கள் செய்தேமென் றெண்ணி யிருவருள
மொத்தார்க ளானு ருவந்து. (22)

செல்லுமவர் நம்முருவாய்ச் செங்கோல் செலுத்திப்பின்
நல்வாய்ந்த தன்னுருவை நல்கினனும்—புல்வாய்
விழிமருட்டுந் தம்மகளு மின்னுமனை சேரும்
வழிபார்த்துச் சென்றார் மகிழ்ந்து. (23)

அன்பு பெருகி யவரடிமேல் வைத்தமனத்
தின்பப் பெருக்கவரை யிங்கீர்ப்பத்—துன்பமிலா
நன்னாடு கொண்டுய்க்க நாத னருள்தனாற்
பொன்மான மீர்த்ததுமேற் போந்து. (24)

இந்திரனார் நாடு மெழின்மறையோன் றன்னாடு
நந்தலிலா மாலுறையு நன்னாடும்—பிந்தலுறச்
சென்று விமானஞ் சிவலோகம் போயடைந்தா
ரென்றும் பிறவா தினி. (25)

காதலிப்பார்க் கின்பருளுங் காதலியுந் தற்பெற்றார்க்
கோதலரு நல்லுருவி னுய்த்தானைப்—போதலவு
நற்றேன் செவிவழியே நண்ணுமா றின்சொலினு
லற்றே துதித்தா ளவண். (26)

அன்னை விருப்புகட லல்லாதெழுகடலுந்
துன்ன வருள்புரிந்த தோன்றலே—பொன்னுலகில்
வாழும் வழுதி வரச்செய்து நின்னுருவைத்
தாழ்விலா தீந்தாய் தக. (27)

பொன்மலையைச் சேர்காகம் பொன்னுருவ மாகுமெனி
னின்னடியைச் சேர்வார்க்கு நேருவகை—யென்னறிவாற்
சொல்லத் துணிதல் சுடரோன்முற் றோன்றுமொரு
நல்விளக்கே யாவதென்று ஞான்கு. (28)

வழுதி யரசு வழுவிலா வண்ணம்
பழுதி லரசளித்த பண்போ—யிழுதையுறு
தென்னாடு மிவ்வரசை யேற்கவென்று ளெங்குநிறை
யன்றான் மகிழ்ந்தா னகம். (29)

மலையத்து வசனையழைத்த திருவிளையாடல்
முற்றிற்று.

## உக்கிரகுமாரன் றிருவவதாரத்திரு விளையாடல்.

மண்ணுலகை யாண்ட மலயத் துவசனையெம்
மன்னா லழைத்த தறைந்தனமே—னண்ணுபுக
ழுண்ணு முலையுதரத் துக்கிரனுந் தோன்றிமுலை
யுண்ணுமது சொல்வா முவந்து. (1)

மண்ணைப் புரக்க மறையாலு மோராதா
னெண்ணிறந்த கால மெழிலுறவே—தண்ணிலவைச்
சூடுவான் றன்னடியிற் றோய்வார்போ லிவ்வுலக
நீடுமின்ப மெய்தினவா னின்று. (2)

நுண்ணறிவாற் காண்பரிய நுண்பொருளே தன்னுருவை
மண்ணுலகர் காணும் வகையாகத்—தண்ணளியாற்
பொன்மாலை தன்மகளாய்ப் போக்கி யுமையவளைப்
பின்மருக னாகவந்தான் பெட்டு. (3)

பூண்டரசு கொண்டான் புகழ்ச்சோம சுந்தரனு
மீண்டரசர் மூவர்க் கொழிலுறவே—பாண்டவரிற்
பார்த்தனொடு போர்புரிந்து பாசுபத மீந்துலகு
காத்தழித்துக் காண்பான் களித்து. (4)

மீனக் கொடியுடைய வேந்த னரசுக்குறை
தானவமே யாகாத் தரமுன்னி—மேனளி
னக்கினிக்கட் டோன்று மவனித்தன் றேவிகரு
சிக்கெனச்செல் கென்றான் றெரிந்து. (5)

கண்ட விறைவனது காண்பரிய காட்சியினை
விண்டுரைப்ப தெந்த விரகினாற்—கெண்டைவிழி
மாதரா ரம்மை வனப்பின் றிறநோக்கி
யோதினரா லன்றங் குவந்து. (6)

சூலாய்நின் றேய்ந்தவிடை தோன்றத் துணைமுலையும்
பாலார்ந்து மிக்கப் பசபசப்ப—நாலாறு
திங்கட் கழிந்து தினகரன்போற் சேயினை
லெங்களுவப் பென்று ரிசைந்து. (7)

வருந்துறுவார் மேம்பாடு மாண்புறவுஞ் செங்கோ
றிருந்துமுறை காணுந் திறத்தும்—பொருந்துபுகழ்
வீர மிகுமிளையோன் மெல்லியாளின் கருவிற்
சீரிலக வந்தான் சிறந்து. (8)

ஒன்றுமுதன் மூன்றுதிங்க ளோங்கு மசக்கையுற
நன்றுதிங்க ளைந்தளவி னுவினுக்கே—யின்றுவர்ப்புக்
கார்ப்புப் புளிப்பிற் கனவாஞ்சை யுண்டானு
ளார்ப்பரித்தார் சேடியர்க ளன்று. (9)

பொன்னாட் டமுதினொடு போந்ததெலா மோர்பாலு
மிந்நாட் டறுசுவையு மெய்துவித்துப்—பொன்னய
வித்தகமார் தட்டேந்தி மின்னா ரிடைமாதர்
தத்தைமொழி யாட்களித்தார் தாம். (10)

பல்வகையி னுபவன்னம் பாலித்தா ரெவ்வுயிரு
நல்வகையாப் பாலிக்கு நாயகிக்குத்—தொல்விதியி
னுக்குஞ் சடங்கனைத்து மாற்றுவிப்பா னந்தணர்பாற்
போக்கினார் தூது புகன்று. (11)

கோக்குலத்தி னார்க்குக் குறித்த சடங்கனைத்து
மாக்குவித்தா ரந்தணர்க ளவ்வயினி—னீக்கமிலா
மாமதுரை யெங்கு மணமுரச மேமுழங்கக்
காமருறக் கண்டார் களித்து. (12)

ஐந்துமுதற் பத்தளவு மாஞ்சடங்கு செய்தபின்னர்
நந்தலிலா வாதிரைநா ணற்சோம—னுந்துதினம்
பொற்கோணற் கேந்திரத்திற் புந்தி யுதயமுறு
நற்காலிற் சேயுதித்தா னன்கு. (13)

பொன்மா மலைக்கும் புணரிக்கு மிந்திரற்குங்
கொண்மூவி னுக்குங் குறைகாட்டத்—தன்றோ
ளிடமே துடித்த தெழினகரி னார்க்குந்
திடமாய் வலந்துடித்த தோர்ந்து. (14)

மாமதுரை செய்தவமோ மாமுனிவர் செய்தவமோ
கோமளஞ்சேர் பாண்டியர்செய் கோத்தவமோ—யாமறியோம்
பூச்சுமக்குஞ் சேடன் பொறைமாறத் திக்கயத்தின்
மாச்சுமையுந் தீர்க்கவந்தான் மாண்பு. (15)

தேவர் மலரிறைப்பத் தென்னு ளங்களிப்ப
வாவலுறு சேடியர்க ளார்ப்பரிப்பக்—காவியுறு
மங்கயற்க ணம்மை யருமையுற வீன்றனளிச்
சிங்கக் குருளையினைத் தேர்ந்து. (16)

தென்பா லுதிக்குந் தினகரனைப் போல்வானை
யின்பா லெடுத்துமுத்த மீந்ததற்பி—னன்புடனே
யய்யன் கரத்தேந்தி யம்மையிட மேகொடுப்பத்
துய்யமுலை யுண்டான் றொடர்ந்து. (17)

உண்ணு முலைப்பாலை யுண்டா னுயர்ஞான
மெண்ணுன் கிரீடியுள வெக்கலையு—மண்ணி
லறியுந் தரத்தனவா யாக்கியதே யம்மை
நறியமுலைப் பாலி னலம். (18)

திங்கடமிற் செய்சடங்கு செய்து திறமுறவே
யங்குவரு டச்சடங்கு மாற்றினர்—பொங்கமுற
வைந்தாம் வருடமதி லாம்புரிநூ லின்வதுவை
நந்தாது கண்டார் நயந்து. (19)

வேதியரைக் கூயிவ் விடலைக்குச் சாதகமு
மோதலரு நாம முரைக்கெனவே—போதுலவு
மந்தணனின் மிக்க வறிவுடையோ னேபுகன்றார்
சுந்தரப்பே ருக்கிரனைச் சூழ்ந்து. (20)

மாலிந் திரனயனார் மற்றுமுள தேவரொடு
காணுந்து மிந்நாட்டுக் காவலரு—மானுந்த
வந்தார் மதுரையின்முன் வாரிவந்த வாறேபோ
னந்தலிலான் செய்காண்பா னன்கு. (21)

கண்டானந் தங்கொண்டார் கான்முளையைக் காதலித்துத்
துண்டப் பிறைநீத்த சோதியொடு—கொண்டலென
மோதிப் பிறைநுதலெம் மொப்பிலுமை யைச்சரணப்
போதிணையிற் றாழ்ந்தார் புகழ்ந்து. (22)

தாழ்வார் தமக்குத் தருவார்த்தை யும்முரைத்துக்
காழ்மணிப்பொன் றாசினொடு காசுநல்கித்—தாழ்விலதா
யன்ன மளிக்க வமுதுசெய்து தன்னாட்டைத்
துன்னுமவ ரானார் தொடர்ந்து. (23)

கல்வி பயிற்றக் கனவோரை நேமித்து
நல்வியாழப் புத்தேளை நன்குகூ—யொல்லையினி
லோதுவிப்பா யென்றா னுரைகடந்தா னோர்ந்துகுரு
வோதுவிப்பா னானா னுவந்து. (24)

வேதமுதற் பல்கலையும் வில்லா ரகதமும்
போதகந்தே ரூருதொழிற் போந்ததற்பி—னாதனிடம்
பாசுபதம் பெற்றான் பனையமுத முண்டிலகு
தேசுமிகு நற்றிறத்திற் றேர்ந்து. (25)

எட்டு வயதளவி லெக்கலையுந் தேர்ந்தவனைக்
கட்டழக னுடலுறக் காமுறவே—திட்டமுடன்
சேவற்போ ரோடிளஞ் செங்காடை யின்போரு
மாவலொடு கண்டா னவன். (26)

போதகத்தை முன்னிருத்திப் போர்விசயன் றன்மார்பின்
மோதவிட்டுப் பின்னதனை மோதுவனாற்—காதலொடு
செம்மறியைத் தூண்டித் தினவுதீ ரப்புயத்தை
யம்மறிக்குக் காட்டு மவன். (27)

தன்போ லிளைஞரினந் தம்மோடு தான்போந்தே
யின்புறமா வைகை யிடையணுகி—வன்புவவு
தோளதனைத் தட்டுந் துறையுறுமற் போர்புரிந்தே
நாளதனைப் போக்கினா னன்று. (28)

வேட்டைசெய வேட்டு விரையாருஞ் சந்தனஞ்சேர்
கோட்டி னுறுமுனிவர் கூட்டமொடு—தேட்டமுறச்
செய்விருந்துண் டங்கவர்கள் சீரா தரவினோ
டெவ்வழியுங் கொண்டா னுவந்து. (29)

கந்தனைப்போ லேயழகு காணுதலி னாலிவன்பாற்
சுந்தரஞ்சேர் வேன்மயிலுஞ் சூழ்வனபோல்—விந்தையுள
மாதரார் கண்ணும் வடிவுமிக் சாயலிவை
போதுதலைக் கண்டான் புகுந்து. (30)

தந்தை யிவன்வடிவந் தானோக்கிப் பாதமுதல்
விந்தையுறு கேசவரை மேவியலைச்—சிந்தையினிற்
கொண்டா னிவனின் குறியனைத்துந் தானோக்கிக்
கண்டா னிறைந்த கவின். (31)

பாதம் பதுமமொப்பப் பாதவிர னாலதனி
னோதப் படுவனவா யொத்துளவாற்—றிதில
கணைக்காற் பரடுமுழங் காலும் கவினோ
டிணைப்புறுதல் கண்டா னிறை. (32)

போதகத்தி னற்றுதிக்கை போன்ற குறங்கிரண்டுங்
காதலித்த மார்பகலங் காணலாற்—பேதமிலா
மந்தரமும் பொன்மலையு மானுமிரு தோண்முழந்தாள்
சுந்தரக்கை நீண்டே தொடும். (33)

வலம்புரியு நற்கமல வாண்மலரும் போல
விலங்கு களமுகமு மெய்யா—நலங்குலவு
பொற்புருவ மற்றும் பொதுவகையா னுடினனு
லற்புருவச் சிற்பரனு மங்கு. (34)

தோள்வயிறு நெற்றித் துணைநாசி மார்புபுயம்
வானுறுப்பிவ் வாறுயர்ந்த வானரசன்—கோளிலதோர்
கண்கபோ லஞ்செங்கை காணுமுலை யேநடுமார்
பெண்பெறவே நீண்ட வெழில். (35)

குஞ்சி யுடனகம்பல் கோதில் விரற்கணுவோ
டஞ்சுஞ் சிறியவா லாயுளுறும்—வஞ்சமிலாக்
கோசங்கை நாமுதுகு கோலவுறுப் பிந்நான்கும்
பேசிற் குறியனவால் பெட்பு. (36)

நெற்றி சிரமகன்று நீள்கட் கடையதுவு
முற்றகங்கால் கைநகமு மோங்கிதழு—நற்சொனுரை
நாவண்ணா மேழு நலமுறவே தாஞ்சிவந்த
மேவுஞ் சிறப்பு மிகுந்து. (37)

தாழச் செவியுந்தி தக்கவரை யும்முளதாற்
சூழப் புலியரசுந் தோள்வலியு—மீழமுத
லெந்நாடும் பொன்னுடு மிங்கிவளைத் தாழவள
நன்னுடு கொள்வா னயந்து. (38)

உண்டா மரசுரிமை யோங்குபுகழ் கீர்த்திநலங்
கண்டதிவன் பாலெனவே காதலித்து—மண்டலத்திற்
பொன்னனைய மாதைப் புகுந்துதரு வப்பரமன்
றன்மனங்கொண் டானன்று தான். (39)

மாமதியின் மிக்க வலவனைக்கூய் நம்மகற்குத்
தாழமுடி பின்னர்த் தரிக்குதும்யாங்—காமருற
மன்றல் புரியவொரு மாதினைநீ தேடென்றான்
கொன்றை தணந்திடுமக் கோன். (40)

உக்கிரகுமாரன் றிருவவதாரத் திருவிளையாடல் முற்றிற்று.

## வேல்வளை செண்டு கொடுத்த திருவிளையாடல்.

உக்கிரமா பாண்டியனிவ் வோங்குலகில் வந்துதித்த
வக்கதையைச் சொன்னோ மழகுபெறத்—திக்கனைத்தும்
வெல்லும் புயத்தனுக்கு வேல்வளைசெண் டேகொடுத்த
நல்லகதை சொல்வா நயந்து. (1)

சொல்லுக் கடங்காச் சயஞ்சோதி யின்மகற்கு
நல்லமணப் பெண்ணதனை நாடினரா—லெல்லதினு
மிக்க வறிவினல் மேம்பா டுடையார்க
ளொக்குங் குடிநலனு மோர்ந்து. (2)

சாந்தம் பொறையறிவுந் தன்னே ரிலாவலியுஞ்
சேர்ந்தா னிரவிகுலத் தெள்ளுந்தி—னேந்தலெனு
நற்சோம சேகரன்ற னன்மகளாங் காந்திமதிப்
பொற்பதனைச் சொன்னார் புகழ்ந்து. (3)

நல்ல குணமிக்கா ணாணமட மச்சமொடு
சொல்லுறு நற்பயிர்ப்புந் தோன்றிவட்குப்—பல்வளமு
மேய்ந்த திருவு மெடுத்திங் குவமைசொலப்
போந்தவளோ வென்றார் புகழ்ந்து. (4)

ஆதலினா லெம்பரசுக் காமிவளை யேமணப்பப்
போதுமென்றா ரற்றைப் பொழுதிருள்வாய்ச்—சீதமதி
வேணியுடை யான்மணவூர் மேவினா னவ்வரசன்
காணுமாத் தன்னைக் கனவு. (5)

நாமதுரை யிற்சிவமே நம்மூ ரரசனது
கோமற்குப் பெண்ணைக் கொடுவெனவே—யாமென்றான்
கங்குற் பொழுது கழிந்த தவன்பிறவிப்
பொங்குகடற் போயொழிந்தாற் போல். (6)

பொன்னே யனையாளைப் பொன்னாற் பொதியவைத்துப்
பொன்னார்ந்த தேரிலிவன் போதுவித்தன்—மின்னதனைத்
தேரேற்றித் தென்மதுரைச் செல்ல விடுக்குமந்தச்
சீரேற்ற தாகுமெனத் தேர். (7)

தேருலவு மோனதயினிச் செங்கண்மால் யானையொடு
தாருலவு மாக்க டழங்கொலியும்—பாரி
னுவர்க்கடலி னோதை யொழிக்கவிந்தச் சேனை
நவக்கடலி னோதைமிகு நன்கு. (8)

செல்லென்றான் சேனையினைத் தேர்ச்சோம சேகரனு
மல்லொன்று திண்புயத்தான் மாமதுரை—யல்லொன்றுஞ்
சீத மதிக்குலத்தன் சீரமைச்ச ரோமணவூர்க்
கேதமற வேநடந்தா ரேற்று. (9)

தன்றேரை யூர்ந்தார் தகவார் மணவூர்க்கு
நன்றே மணமுடிக்கு நாட்டத்தா—லன்றிடையிற்
றேர்ச்சோம சேகரனுஞ் செந்திருவுங் கண்டார்கள்
கார்காண் மயிலிற் களித்து. (10)

கண்டா ரகமகிழ்ந்து கல்யாணம் பேசுமுன
மண்டர்பிரான் றன்பா லணுகியதும்—பண்டைக்
குலமுறைமை யெல்லாங் குறித்தோ தியதும்
பலமுறையே சொன்னான் பரிந்து. (11)

அன்னா னுரைகேட் டருட்கடலின் மூழ்கினராய்ப்
பன்னூலுந் தேர்ந்துணர்ந்த பண்டிதரு—முன்னந்
தெரிவிப்பான் றாது செலுத்தினார் தேர்ந்தே
யரியயனுங் காணா தவற்கு. (12)

சந்திரநற் சேகரனுந் தன்னமைச்ச ரோடுமிகு
விந்தையுள மாமதுரை மேயினான்—சந்தமரும்
வேம்பணிந்த தோளான் விரையார் மலர்ப்பதத்தைத்
தாம்பணிந்தா னுள்ளந் தழைந்து. (13)

வந்தாற் கிருக்கைநல்கி வாழ்த்தினா னற்சோம
சுந்தரப்பேர் கொண்டுவந்த தோன்றலுமே—விந்தையுள
நாட்டை யலங்கரிக்க நன்மா மணமுரசஞ்
சூட்டென்றான் யானைமிசைத் தொட்டு. (14)

மாமுரசங் காதமுந்தா மார்திறுர் மாந்தரெலாங்
காமருற வந்நகரங் கண்டவகை—சோமரவி
யென்ற விருகுலமு மெய்தியதா லம்மதுரை
யன்றவர்வாழ் மண்டலமே யாம். (15)

வச்சிரமு முத்தும் வளமா மணியானு
முச்சிதமாப் பந்தரினை யோளிசெய்தா—ரச்சமய
மூருந் தினக்கோ னுவா மதியுந் தோன்றியபோற்
சேரு நகரத் தெரு. (16)

உலகெலாந் தன்னுருவே யொப்பா னரசா
யிலகுமந்த நாட்டி னெழிலைப்—பலகலைதேர்
சேட னுரைப்பான் சிறிதென்று லென்னறிவிற்
கூடுவதோ கூறுங் குணம். (17)

முடங்க லெழுதி முடுக்கினன் றாதை
யிடங்கொ ணக்குடையார்க் கெல்லா—மடங்கலினை
யொப்பான் மணங்கா ணுவகையினே டெங்கரு
மெய்ப்பாலே வந்த வியந்து. (18)

பூம னுறைநாட்டார் பொன்னுட்டார் மானுட்டா
ரேம முறுங்கயிலை யின்னுட்டார்—காமருறு
விஞ்சைநாட் டுள்ளாரு மேவினரா னம்முதல்வன்
பஞ்சவனுத் தோன்றும் பதிக்கு. (19)

எந்நாடு மிந்நாட்டி னெய்தலினுற் ருழ்ந்ததுமற்
றந்நாண் மலைமகளுக் காமணத்தின்—மன்னீட
வன்று குறுமுனியா லக்கோ ளகற்றியபோ
லின்றெவரா லிக்கோ ளிறும். (20)

என்றுபலர் பேசு மெழிலுடைத்தா யந்நகரந்
துன்றுபல சேனைவந்து தொக்குதலா—லன்றுலகை
யோரடியாற் கொள்ள வுவந்தாங் குருவுகொண்ட
கார்நிறமா லின்வயிறே காண். (21)

அன்ன வளம்பதியி னும்மரசு மந்தணரு
பன்னா லறிந்த பனுவலருந்—துன்னுசபை
மின்னலிடை மாதின் மிருவனப்பை நூற்றெரிந்தோ
னுன்னதமாய்ச் சொன்ன னுவந்து. (22)

காருங் கருமணலுங் கங்குல் கருவண்டு
நேருகுழன் மிக்கமணை நீடுதலாற்—பாரிலவ
டன்கணவ னுக்கினியாள் சாந்த குணமுடையா
ளன்கிவட்குச் செல்வமுண்டா நாடு. (23)

எட்டாம் பிறைபோ லெழினெற்றி யெய்யுமலர்க்
கட்டழகன் விற்போலக் காண்புருவந்—திட்டமுறக்
கண்ணின் கடைநீண்டு காரித்து மேசேந்த
வண்ணமுள தாலுண்டு மாண்பு (24)

செந்தா மரைமலரிற் சேர்ந்துவள்ளை யெள்ளிளம்பூ
நந்தாது பூத்திலகு நன்மையெனச்—சுந்தரமார்
மாமுகத்தி னிற்செவியு மன்னுதுண்ட முண்டதனாற்
காமுறும்மாச் செல்வமுறுங் காண். (25)

கொவ்வைக் கனியதரங் கூறுசங்க நற்கழுத்து
நவ்வியுறு முத்துப்பன் னுங்கா—லவ்வயினிற்
றோன்றுங்க போலந் துகளறுநல் லாடிதனைப்
போன்றதனு லுண்டாம் புகழ். (26)

மாங்குயிலே சொல்லொப்ப மாமலையை நேர்குயமுந்
தேங்கிளநீர் போன்று திரண்டதனற்—பாங்குபெற
நன்மையுண்டாந் தந்தைக்கு நாயகற்கு மென்றுரைத்தான்
மன்னுறப்பு நூலான் மதித்து. (27)

கண்டத்தின் மூன்றுவரை காணு மிவள்கணவ
னண்டத்தை யாளு மரசனும்—புண்டரிக
மாதிலவு மார்பு மகிழ்வோ டுயர்ந்ததனு
லோதலரு மின்பமுண்டா மோர். (28)

இசைபெற்ற மூங்கிற் கிணையான தோள்க
டசைபெற்று நீண்ட தக்வர்—விசையுற்ற
நற்கணுக்க ளேசிறிதாய் நாடு நரம்பகன்று
நிற்குமிவட் குண்டா நெறி. (29)

நீண்ட நடுவிரலு நேருகிரங் கைசேப்ப
மாண்ட குணமுடையிம் மாதினுக்கே—பாண்டவர்க்குத்
தூதுசென்ற மாலோன் றுயிலா லிலைபோலென்
றோது வயிற்றுறுப்பி னெப்பு. (30)

உந்திச் சுழிதாழ்ந்து ரோமநிரை யேகறுத்து
விந்தை யிடையு மெலிந்தனவாய்ச்—சுந்தரமார்
மான்குளம்புந் தேர்த்தட்டு மானுமல்குற் பெண்குறியாற்
றானுண்டாஞ் செல்வந்தக. (31)

குறங்கரம்பைத் தண்டினொடு கோட்டானை யின்றுதிக்கை
திறமுறுஞண் டேமுழந்தா டேரி—னரம்பகன்று
மிக்க தசையுறலான் மேன்மையுண்டா நற்கணைக்கா
லொக்கு மிரண்டு மொருங்கு. (32)

அம்புபொதி புட்டிலென லாகும் பரடிரண்டுஞ்
செம்பொனிறை தட்டெனவே செப்பலா—மிம்பரினி
லோங்கு புறவடியு முள்ளங்கா லுஞ்சிவந்த
பாங்குபெறு பெண்ணிவட்குப் பார். (33)

எந்நலமுங் கீர்த்தி யெழிலுமுண்டா மென்று நூற்
சொன்னபடி நாவலவன் சொல்லவே—நன்னயமா
யுக்கிரற்கு வைகைநீ ரோங்கன் மிசைகொணர்ந்து
சிக்கெனவன் றூட்டினார் சென்று. (34)

கந்த பரிமளமுங் காந்துமணிப் பொற்றூசும்
விந்தையுள பல்லணியு மேன்மையுறச்—சுந்தரமாந்
தோளணியும் வீக்கித் துகளறுமார் பிற்கவசம்
வாள்கச்சை கண்டார் வரிந்து. (35)

காலிற் கழல்வீக்கிக் கல்யாண மண்டபத்திற்
சீலமுற வேகொணர்ந்து சேர்த்தார்கள்—வேலனுக்கு
மானீன்ற வள்ளியெனு மாமயிலைச் சேர்த்தாற்போற்
கானீன்ற பூங்குழலைக் கண்டு. (36)

பக்கத் திருப்பாணாற் பார்ப்பதியா வக்காளை
மூக்க னுடைய முதல்வனுமா—வொக்கநினைந்
தம்பொற் கரகத் தமர்நீர் கொண் டார்கழுவப்
பம்புகளி றன்னான் பதம். (37)

காந்திமதி யீன்றான் கழுவி மலர்மாலை
யேந்தலது மார்புக் கிசையவே—வேய்ந்ததற்பின்
னின்னமுத மூட்டி யெழிலுற்றன் கன்னிகர
மன்னவன்கை வைத்தான் மகிழ்ந்து. (38)

சேர்த்தவ் விரவிகுலத் தெள்ளமுதை யிந்து குலங்
காத்தாண் டுலகளிப்போன் கான்முளைக்கு—மாத்திறத்தின்
றந்தேனித் தேவர்முனந் தாமெனவே நீர்வார்த்தான்
மந்திரத்தி னுய மரபு. (39)

பல்லியங்க ளார்ப்பப் பலதே வருமகிழ
நல்லறிவா ரோம நடத்தவே—சில்லரிப்பூண்
பூண்டவடன் கந்தரத்திற் பொற்புலவுப் பொற்றாலி
யாண்டான் மகனணிந்தா னன்று. (40)

ஆய சடங்கனைத்து மாக்கின ரந்தணர்க
ளேய மறையதனிற் சொன்மரபி—னேயமுற
வக்கினியைச் சுற்றி யருந்ததிகண் டாள்பவனி
யக்கணமே வந்தனரா லன்று. (41)

வந்த பவனியினை மாதர்கண்டு வண்ணமுறுங்
கொந்தலருங் கோதை குலைந்தார்கள்—விந்தையுறு
மார்க்கலையுந் தோற்றார் வளைதோற்றார் மன்னுகற்பி
னுக்கமதுந் தோற்றா ரவர். (42)

காமனிவ னென்பார் கட்டழகின் மிக்கதொரு
பூமகளைப் புல்லும் புயலென்பார்—காமருறு
மானை மகளோ டலங்கார மாமயில்கொள்
கோனிவனே யென்பார் குறித்து. (43)

இன்ன வளமா ரெழில்வலம்வந் தான்றனது
மின்னுமணி மொய்ம்மாட மேனிலையின் —மன்னுநிலாத்
தன்னுடலந் தேய்க்குந் தகவுடைய மாளிகையின்
மன்னனுற்று னன்று மகிழ்ந்து (44)

சேர்ந்தப் பரையிணையுஞ் செங்கண்மா லேறுடைய
வேந்தலையுங் கண்டா ரெழிலுறவே—சாய்ந்துமுடி
மண்ணி லுறவே வணங்கினர் மற்றவருந்
தண்ணளியின் மிக்குறவே தான். (45)

புல்லின னெவ்வுயிரும் புல்லி யருட்போக
நல்லருளிற் கூட்டுமெந்த நாயகனு—மல்லலுறு
நற்சுவையோ டின்னமுது நல்கினன் வந்தார்க்குக்
கற்குழைத்த மாண்புடையான் கண்டு. (46)

வந்தார்கள் சென்றார் வளநகர்க்கு வானவரோ
டிந்திரனுஞ் சென்று னெழினகரே—கந்தமமர்
மாமாலை யுக்கிரற்கூய் மைந்தாகொள் கிம்மென்று
நாமாலை யோடுதவ நன்கு. (47)

இந்திரன்றன் மாமுடியி லேவுகநீ யிவ்வளையைச்
சந்தமமர் பொன்மலைமேற் றுக்குசெண்டை—விந்தையுறு
மார்கலிமேல் வேல்விடுக வைப்பிலாச் செங்கோல்செய்
தார்முடிகொள் ளென்றான் றகை (48)

எண்ணில் வரமீந் தெழிற்சுமதி தன்னைக்கூய்க்
கண்ணிமைபோ லின்னைக் காவென்றான்—மண்ணதனை
நீண்டநாள் காக்கு நெறியுமக்குத் தந்தமெனப்
பூண்டார்கண் முன்னுருவப் பொற்பு. (49)

தன்னுருவ மானுன் றடாதகையுந் தானுமந்த
மின்னுலவு கோயிலினை மேவினர்—மன்னுதமிழ்
நாடாண்டான் மாறனெனு நல்லுக் கிரதேவ
ளுடாப் பெரும்புகழி னன்கு. (50)

உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டுகொடுத்த திருவிளையாடல்.

முற்றிற்று.

---

## கடல்சுவற வேல்விட்ட திருவிளையாடல்.

செண்டுவளை வேல்கொடுத்த செய்திசொனேம் பின்பவனே
அண்டர்பிரான் விட்டகட லார்வமதைக்—கண்டளவில்
வேல்விடுத்து நீக்கும் விறலுரைப்போ முன்னுய
நூல்வகுத்தார் மேன்மை நுவன்று. (1)

உக்கிரமாப் பாண்டியனிவ் வோங்குலகைக் காக்குநாள்
சிக்கறநற் புண்ணியத்தைத் தேர்ந்தவனுய்—மிக்கபரி
மேதமதா தோண்ணூற்றின் மேலாறு முற்றினனு
லோது சசிகணவ னோர்ந்து. (2)

மாமதுரை மிக்கவள மன்னுதலா லந்நாட்டிற்
ருமதிக யாகந் தழைப்பதெனக்—காமருவு
பொன்னுட்டா னித்தைப் பொருனுப் புணரியைக்கூய்த்
தென்னுடு கொள் கென்றுன் சென்று (3)

போவென்றுன் றென்மதுரை போகப் புணரியன்றே
யோவென் றலையோ டோங்கவெள்ள—மேவுதல்போற்
சென்றந்த மாநகரஞ் சேருமுன மாநிசியிற்
குன்றவில்லா னத்தைக் குறித்து. (4)

உக்கிரனே நின்னகரை யோங்கலைசூ ழும்புணரி
யிக்கணமே தான்கெடுக்க வெண்ணுதலாற்—சிக்கெனநின்
வேலைவிடு நின்னகரை மேவாமுன் னென்றுரைத்தான்
சீலமறை தேரிந்தான் சென்று. (5)

கண்டெழுந்தா னற்கனவு காளகண்ட னன்மொழியை
விண்டொரு மாறு வினைவாகத்—தொண்டருளங்
கோயிலாக் கொள்ளுங் குணக்குன்றை யேதுதித்தா
ளுயில்பேய் கண்ணுறங்கு மன்று. (6)

சென்று னமைச்சரொடு சேவகனுஞ் சேனுலவ
நன்றூர்ப் பரிக்கு நளிர்ப்புனலை—யன்றுகண்டா
னிக்கடலி னூர்வதமை யெண்ணி யதிசயிப்ப
முக்கணனும் வந்தான் முயன்று. (7)

தோன்றினன் சித்தனெனத் துன்னுகடன் மீதழலைக்
கான்றவயில் விட்டிலைகைக் காவென்று—னுன்றருணை
வுக்கிரனுந் தன்கை யுலவா வயிலைவிடுத்
தக்கணமே செற்று னதை. (8)

வந்த வுவரி வலியிழந்தவ் விந்திரன்மேல்
சிந்தா குலமுடைத்தாய்ச் சென்றதா—னந்தலிலா
மாதவத்தார் சாப மருவ வலியிழந்து
போதுமவர் தன்மையே போல். (9)

கடல்சுவற வேல்விடுத்தான் கண்மூன்றுங் காள
மிடறுமிடை நாற்புயமு மேவப்—படர்சடையு
மம்பிகையோர் பாகத் தமர விடைமீதே
யும்பரிடைக் கண்டா னுவந்து. (10)

பார்த்தின்ப வெள்ளம் படிந்து பலமுறையே
தோத்திரங்கள் செய்து தொழுவானே—டேத்துபுகழ்ப்
பொன்மா மணிக்கோயிற் போகவிறை யவ்வேந்து
நன்மா விடைகொண்டா னன்கு. (11)

தன்மா மனைபுகுந்தான் றூர்வேந்தன் றூழ்வில்தாய்
மன்மா நிதியமுதன் மாவளமுஞ்—சொன்மாண்பி
னெம்பெருமாற் கீந்தே யிருந்தா னெழிலரசன்
பம்புதிரை வைகைப் பதி. (12)

கடல் சுவற வேல்விட்ட திருவிளையாடல் முற்றிற்று.

## இந்திரன் முடியில் வளையெறிந்த திருவிளையாடல்.

வேல்விட்டுப் பவ்வமதை வென்றதனை யோதினமேல்
சேல்பட்ட கட்சகிதோட் சேருமொரு—மால்பட்ட
விந்திரன்றன் மாமுடியை யெய்வளையி னுற்றகர்த்த
வந்தவகை சொல்வா மறிந்து (1)

சுந்தரனு மீன்றவந்தத் தோன்ற லரசுசெய்நா
ளந்தமிலாக் கோண்மாற லானதினு—னிந்தையுற
வானஞ் சுருங்க வளநாட் டுருவேந்து
மீனவனுஞ் சென்றான் விரைந்து. (2)

கும்ப முனிபாற் குறையுரைத்தார் மூவேந்துஞ்
சம்புநிக ரன்னானுந் தானுரைப்பான்—வம்பவிழ்தார்
வேந்தர்கா ணுந்நாடு மிக்கபனி ரண்டாண்டு
காந்துமழை யில்லையென்றான் கண்டு. (3)

சங்கனுமே பின்புசெலச் சூரியன்சேய் முற்செலலா
லிங்குமழை பெய்யா தினிநீவிர்—துங்கமுள
பொன்னாடு சென்றரசைப் போற்றுகென்றான் பொற்புலவு
நுந்நாடு பெய்ய நுவன்று. (4)

என்றளவே யந்நாட்டிற் கேக வரமருள்வாய்
குன்றடர்த்த வல்லவெனக் கூறினார்—நன்றுணர்வீர்
மாமதிநா ளொன்பு மறுவிலதா நோற்றக்காற்
காமரு பொன்னாடெலாங் காண். (5)

அவ்விரத நோற்கு மடைவுகே டேவர்தமுட்
செவ்வியுள தேவன் சிவனேயா—நவ்வியுள
சத்திதமு ளுத்தமியென் றாயுமையே நோன்பவையு
ளுத்தமமாந் திங்களென்று ளோர்ந்து. (6)

காசிமுதலீ லாம்பதியிற் காண்பலனிற் கோடியுள
மாசின் மதுரை வளம்பதிக்கே—நேசமுறச்
சூரியனு மாமதியுந் தோய்ந்தொன்றாய்ச் சேருமதி
வாரமென்றான் மேவ வளம். (7)

அருக்கனலூ ணின்றியயலிற் றயிலா
திருக்க மதிநா ளெழுந்தே—மருக்கமுள
குற்றநீத் தம்பொற் குலவு மணிக்கோயி
லுற்றிடுவீ ரென்று னுவந்து. (8)

பொற்றா மரைத்தடத்துப் போய்ப்படிய வந்தணரால்
பெற்ற பவுத்திரத்தைப் பேணிமிகச்—செற்றமுள
மாமாயை நீத்த மனத்தினற் றூழ்கவென்றான்
மாமாயை நீத்தான் மகிழ்ந்து. (9)

தந்தருள வேண்டியதிற் றன்படிந்து வேழமுகத்
தெந்தை யடியை யிறைஞ்சியே—விந்தையுள
நீறணிந்தே யக்கமணி நேர்ந்து நினைகென்று
றறணிந்தான் றன்னை யகத்து. (10)

உன்னி யிருகரமு மோங்குவிரற் பன்னிரண்டுஞ்
சென்னியின்மே லாகுந் திறஞ்சேர்த்து—மன்னியசீ
ரைந்தெழுத்தை யோதி யருளுருவைச் சேர்மினென்றான்
சந்தமரு மாமலையோன் றான். (11)

பன்னீர் முதலாப் பலநீருஞ் சேர்த்தினிய
மன்னுமலர்ச் சந்தனமு மாண்புபெறு—கன்னலொடு
தேன்பாற் றிரவியமுஞ் சேர்த்தபிடே கஞ்செய்யத்
தான்மகிழ்வ னென்றான் றகை. (12)

முக்க ணுடையாற்கு முன்புசெய்து சேல்விழிக்கு
மக்கணமே யவ்வா றனுட்டித்து—மிக்கபுகழ்
வில்வத்தா லாயிரம்பேர் வேண்டி விரதமுறிற்
கல்விசெய முண்டென்றான் கண்டு. (13)

இவ்விரத நோற்றற் கெழில்கார்த் திகைரவியே
நவ்வியுள தாகு நவைதீர்வீ—ரவ்வயினி
லுத்யா பனமதனை யோரம்பித் தொட்டங்குதலா
னெத்திறத்து முண்டா மெழில். (14)

இவ்விரத மைவகையி னேனு மிரவூணு
நவ்வியுறு மெல்லூணு நாடாதே—செவ்வியிரு
போதூ ணிலாதுறங்கா பொற்புறுநான் கியாமத்துங்
காதலுறு வார்க்காங் கவின். (15)

ஆதலினு லிவ்வகையி லாம்விரத நுங்கட்குப்
போதும்வகை செய்கவினிப் போமென்று—னீதமுற
வேக்காலு மோம்புநர்க ளேற்குமுத்தி யாபனமுன்
சிக்கறவே செய்கவென்றான் றேர்ந்து. (16)

அம்முனிவன் வார்த்தையெனு மாரமுத முண்டமர்ந்த
தெம்முனையை வெல்லுந் திரடோளார்—பொம்மலுறக்
கும்ப முனிபதத்தைக் கொண்டாடி யன்னுன்றன்
பம்புவிடை கொண்டார் பரிந்து. (17)

வந்தார் கடம்புமுளை மாமணியை மாசிலதோர்
சுந்தரமாச் சோதிச் சுடரொளியைச்—சந்தவரை
மாமுனிவன் சொன்ன வழியே வழிபட்டார்
சோம விரதமதைத் தொட்டு. (18)

ஆண்டொன்று செய்ததற்பின் னய்ய னருளுறவே
காண்டரிய விண்ணூடு காணவே—மீண்டிவர்க
ளாகாய வீதியதே யாரு வடைந்தார்க்கங்
காகாய நாட்டா னறிந்து. (19)

இட்டா னிருக்கை யினிதினிவர் மூவர்க்குங்
கட்டழகர் கீழிருந்து காணுவதாய்த்—திட்டமுறச்
சேரனொடு சோழனதிற் சேரச் செழுநிம்பத்
தாரனுமேற் சென்றமர்ந்தான் றான். (20)

தன்னோ டிருந்தானைத் தானோக்கா தன்மனத்தி
லின்ன லுறவே யெதிர்நோக்கி—மன்னவரோ
வந்த வரவை வழுத்துகென வானாட்டா
னந்தமுறச் சொன்னார்க ளன்று. (21)

சொன்னார்க ளெந்நாடு தூய மழைபெருக
நின்றடி வந்ததென நின்றவர்க்கே—யுந்நாடு
கார்பொழியு மென்னக் கவினார் வரிசையொடு
சேர்கநுந் நாடென்றான் சென்று. (22)

சேர்ந்தா ரிருநாட்டார் செங்கண்ணே ராயிரத்தான்
காந்து மனத்துடனிக் காவலனை—வீந்துவிழ
வெண்ணிப் பலரா லெடுக்கு மெழிலுடைய
கண்ணிகொடு வாவென்றான் காண். (23)

அம்மாலை தன்னை யலர்மா துறைமார்பி
லம்மா வெடுத்தன் றணிந்தானு—லம்மானை
யேந்துபிரான் றன்மகனுக் கிஃதோர்மாப் பாரமெனப்
போந்துளதோ சொல்லப் புகின். (24)

மாலையணிந்தான் மலர்முகத்தை நோக்கி முனம்
வேலை கெடுத்த விறனினைந்து—கோலமுற
மாவாரந் தாங்கு மணிப்பாண் டியனெனப்பேர்
நாவாரச் சொன்ன னயந்து. (25)

என்ற வலாரியிட மேற்குங் குறைநேராக்
குன்றுறழுந் தோள்கள் குலுங்கவே—சென்றவனு
மாமதுரை சேர்ந்தான் வளநா டிரண்டினுங்கொண்
மூமழையே பெய்தனவான் மொண்டு. (26)

கன்னி வளநாடு காரிலதாய் முன்னொத்தே
யின்னலுறு காலத் தெழிலுறவே—மன்னியசீர்
வேட்டமது செய்வான் வினையாருஞ் சந்தமரும்
கோட்டகமே சென்றானக் கோன். (27)

மாவிலங்கு புள்ளும் வரியுழுவை மானேனந்
தாவிலங்கு மாமரையுந் தான்வீழ்த்தான்—மேவிலங்கு
புட்களா வர்த்தமுதற் போந்துமுகி லன்குலவக்
கட்கமுளான் றனதனைக் கண்டு. (28)

இட்டான் றளையை யிருகாற்கு மேசிறையிற்
பட்டிடவே செய்தானப் பாண்டியனுந்—திட்டமுற
வீந்திரனுங் கேட்டங் கிருகண் சிவக்கப்போர்
தந்திடவே வந்தான் றரை. (29)

தேவர்கோ னல்வகையாஞ் சேனை வரவதனைக்
காவலர்கள் கண்டு கடுகியே—மாவலவா
பொன்னாட்டார் நந்நாட்டிற் போந்தா ரெனவரசன்
றன்னாட்டஞ் சேந்தனவாற் றான். (30)

சொற்கானு முன்சேனை தூண்டென்றான் மந்திரியை
மற்கானுந் திண்புயத்து மன்னவனு—மெற்கானு
மாப்பணிபோ லன்னார் மடிய மலர்க்கரத்துத்
தாப்பணிந்த வில்லெடுத்தான் றான். (31)

கொண்டான் மகமேரு கோட்டிப் புரங்கெடுத்த
வண்டர்பிரான் றன்னை யணுகியே—கொண்டலையூ
ரிந்திரன்றன் சேனை யெழில்கெடுத்தா ளுன்புவரிச்
சந்தங் குறைத்தியென்றான் றாழ்ந்து. (32)

கொண்மூ வனையவிரு கோட்டானை மீதேறிக்
கொண்மூச் சொரிவனபோற் கோல்பரப்பி—மண்மூடக்
கண்டான் மிகையாகக் காகுத்தன் ராவணன்மேற்
கொண்டபோ ரொப்பாக் கொள. (33)

தேவர்கோன் சேனை செழியர்பிரான் றன்சேனைக்
காவலர்கண் மீது கடுகியதான்—மாவுலகோ
டாகாய வீதி யடைந்திரவி கண்பொத்து
மாகாலி னலெழுந்த மண். (34)

காலுங் கரமுங் கதிர்முடியுந் தாமிழந்து
கோலுழக்க மேனி குறைந்திடுமா—சேலுழக்கு
மக்கடலை மால்கலக்க வத்திரியைக் கொண்டாற்போ
லிக்கடற்கு வரீன்கொண்டா னின்று. (35)

சேனைகெட விந்திரனுஞ் செய்யகண்க ளேசிவப்ப
மீனைக் கொடியாக்கொள் வேந்தனொடு—மானமிகக்
கொக்கரித்துக் கார்முகத்தைக் கோட்டிக் கொடியசர
மக்கணமே விட்டா னதிர்ந்து. (36)

விட்ட கணையனைத்தும் வேறுக்கிப் பல்படைக
டொட்டான் செழியர்கோன் றிண்மார்பிற்—பட்டள வில்
வச்சிரத்தை விட்டான் வலாரி வரைப்புயத்தோ
னுச்சிதக்கோ லாலதனை யுண்டு. (37)

'ஈச னளித்த வெழில்வளையைக் கையெடுத்து
வீசச் .சிரமதனின் மேலிலகு—தேசார்
முடியைத் தகர்த்தொளிரு மொய்ம்மணியைச் சிந்திக்
கடிகைதனிற் போயதது காண். (38)

வீரங் குலைந்து விறலழிந்து வென்றியுறும்
போரங் கிலாதொழிந்த போகிக்கே—நீரணிந்த
வம்மான்றன் பூசை யருட்பேற்றி னலன்றே
கம்மரியா தாய கதி. (39)

வீரங் குலைந்தானும் வேல்வேந்தே நின்னாட்டி
னீரங் குலவுமழை யெந்நாளும்—வாரங்
குலையா தளிப்பேமெங் கொண்மூவைத் தந்து
நிலையாக் குகவென்பா னேர்ந்து. (40)

முடங்கலொடு தூது முடிக்க முனிவான்
மடங்க லணையான் மறுப்பத்—தடம்புயங்கொ
ளிந்திரன்ற னணைப னெழில்குலத்து வேளாளன்
றந்தான் பிணையதற்குத் தான். (41)

உயிர்நீத்து மாய்மை யுரைகாக்க வல்ல
செயிர்தீர் குலத்தைத் தெரிந்து—மயிர்நீப்ப
வாழாக் கவரி மரபனையான் சொற்கேட்டுத்
தாழாது நீத்தான் றளை. (42)

மேகங்க ளெல்லாம் விரைந்தேகப் பொன்னாட்டா
ருகங் குளிர்ந்தா னதுமுதலா—மேகங்கண்
மாரி சொரிந்த வளம்பெருகக் கன்னிநா
டேரி பெருகியநீ ரேற்று. (43)

இன்ன வளமா ரெழினாட்டை யாண்டிருந்தான்
மன்னவரி லுக்கிரனு மாச்செழியன்—மின்னுசடை
யண்ண லருளை யடைந்தார்க்கு முண்டாமோ
தண்ணளியல் லாற்படரே தான். (44)

இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடல்
முற்றிற்று.

---

## மேருவைச் செண்டாலடித்த திருவிளையாடல்.

கடியவிழ்பூங் கோதைசசி காதலனு வான்றன்
முடி தகர்த்த வாறு மொழிந்தாம்—படியதனிற்
செண்டதனன் மேரின் றிறல்கொடுத்து மேனிதியங்
கொண்டதனைச் சொல்வாங் குறித்து. (1)

மன்னவன்றன் செங்கோல் வழிநடத்து மெல்லையினின்
மன்னுமுனி சொல்விரத மாண்பினாற்—றன்னுபுகழ்க்
காந்தி மதியுதரங் கண்ட தொருமகவை
வாய்ந்ததுரு வென்ன வயம். (2)

காளை யுதிக்கக் களிப்படைந்தான் மன்னுபுகழ்ப்
பாளைவிரி தேன்பாயும் பாண்டியநா—டாளுடையா
னந்தணரைக் கூவி யருள்வீர பாண்டியப்பேர்
தந்தா னவன்றனக்குத் தான். (3)

மைந்தன் பெயர்க்கேற்ப வாள்வேல் கதைமுதலா
நந்தலிலா விற்றொழிலு நன்குணர்ந்தான்—விந்தையுறு
வாணி யிருந்து வளரு மிட்டமெனவே
காணுவனாற் பல்கலையுங் கண்டு. (4)

தேர்ந்தான் வளருமந்தச் செவ்வியினிற் கோண்மாறிக்
காந்த மழையிலதாக் காணுவதாற்—பாந்தளினாற்
றாங்கு முலகுயிர்க டாம்வாட மன்னடைந்தா
னாங்கு விடையவன்பா லன்று. (5)

சென்றிரந்தே வேண்டுவான் சேல்விழிபா காவுலகை
நன்றறிந்தே காக்கவல்ல நாயகமே—குன்றவில்லா
யிவ்வுலகர் வாடற் கிரங்காத தென்னையோ
நவ்வியொரு கையாய் நவில். (6)

ஆக்குவர் யெவ்வுலகு மாக்கி யளித்தழியப்
போக்குவா யுன்றன் புணர்ப்பினா—னீக்கா
துயிருக் குயிரா யுலவு மொருவ
செயிர்தீரொன் றானத் தினம் (7)

என்று துதிப்பாற் கிரங்கா திருப்பவவ
னன்று தரைதுயில்வ தாயினான்—மன்றுடையா
னங்கவன்ற னற்கனவி லாகிமக மேரடித்துப்
பொங்குநிதி கொள்கென்றான் போந்து. (8)

ஐயன் றிருவாக் கருள வரியகடற்
றுய்யவழிக் கொள்ளுமந்தத் தோற்றம்போற்—பைய
நடத்தினான் சேனை நளிர்புனல்கொ ளாற்றைக்
கடத்தினான் மேருவழி கண்டு. (9)

பொன்னிநா டோடு புகழ்சேர னாடொரீஇ
மன்னியசீ ராயமலைநாடும்—பின்னடப்பப்
பத்தினோ டெட்டாய பாடைநா டெங்கடந்தான்
வித்தகனப் பொன்மலையை வேட்டு. (10)

மால்வரைக்கு மேலாய மன்னரசே யென்றந்தை
கோல்விடுக்கக் கொண்ட குனிசிலையே—சால்புடைத்தா
மென்னாடு வான்சுருங்கி யெவ்வுயிரும் வாதடுலா
னின்னாடி வந்ததென்றா னோர்ந்து. (11)

கூவி யழைக்கவந்தக் கோட்டரசன் கேளான்போன்
மேவி யிருக்க விறல்வேந்தன்—மாவலத்தாற்
செண்டெடுத்து வீசித் திறலொழித்தா னற்பவனன்
பண்டடுத்த வாறும் படி. (12)

நிலைகுலைந்தான் மிக்க நெடுமூச் செறிந்து
கலையுணர்ந்தோ மென்பிழையைக் காத்தி—மலையரிந்தோன்
மாமுடியைச் செற்ற வலனறிவே னென்னுனிற்
காமுடிபைக் கூறென்று னன்று. (13)

நின்வரவு தாழ்த்த நெறியுரைத்தி யென்றுமுன்
றன்வரவு தாழ்த்த தகையுரைப்பான்—மின்னனிடை
மாதரது காம மயக்கினில் வந்தொரு
தீதெனவே சொன்னான் றெரிந்து. (14)

தத்துவத்துக் கெட்டாத் தனிப்பொருளே நின்வயினில்
வைத்திருக்கு மாநிதிய வாயிலின்கண்—முத்திரையை
நீக்கி நிதிபெறவே நேரொன்று னம்மலையும்
பாக்கியப்பே றென்றதுவாம் பண்டு. (15)

அன்னேடு டவ்வயிற்சென் றந்நிதிய வாய்திறக்க
மன்னு நிதியமதை வாரினனாற்—பின்னதனை
வாயடைத்து முத்திரையும் வைத்து மலைவேந்தைக்
கூயிதைக்கா வென்றான் குறித்து. (16)

ஆணையின்மேற் பாரமென வாக்கினு ணைந்தொழில்செய்
மீனைவெலுங் கண்ணாள் விறன்மைந்தன்—றானையினைச்
செல்லென்றான் றென்னுடு தேவ ருலகொருவி
மல்லொன்று திண்புயத்து மன். (17)

மன்னன் வரவேற்பார் வங்கமுதற் பன்னாட்டார்
மின்னுமணி பொன்னினொடு மேவினு—ரன்னார்க்
குரைத்தான் முகமனுரை யுண்மகிழ்ந்து நற்றேன்
விரைத்தார் மலர்மாலை வேந்து. (18)

காடொருவி மிக்கபல காவதமுந் தாண்டியே
நீடொருவு சேனை நிரைவெள்ளந்—தேடரிய
முக்கணன் செங்கோன் முறைசெலுத்துங் கன்னிநா
டக்கணமே சேர்ந்த வவை. (19)

வைகைக் கரையை மருவியதே மான்றேரு
மைவைத்த கண்டன் மணிக்கோயின்—மொய்வித்த
மாமணியின் கோபுரத்தை மன்கண்டான் மண்ணினுறத்
ருமமுடி தாழ்த்தான் றக. (20)

சென்னியின்மேற் கைகூப்பிச் செய்யகண்க ணீராக்கிக்
கன்னியொரு பாகன் கழலூக்கி—மன்னியசீர்
பாடினன் பாட்டின் பயனாய மெய்ப்பொருளைத்
தேடினனாற் றெள்ளறிவாற் றேர்ந்து. (21)

அட்டகயந் தாங்கு மருணனொளிக் கோபுரத்தைக்
கிட்டியத னுட்புகுந்து கேடிலதோர்—நட்டம்
பயிலம் பலத்தைப் பணிந்தான் பரைசேர்
குயினுந்து மிஞ்சிமனங் கொண்டு. (22)

கோயிற் புகுந்தந்தக் கோகிலத்தின் றாள்பணிந்து
நேயவருள் பெற்று நிரைகவரி—யாயத்தார்
கொண்டிருபால் வீசக் குலவுமணி மண்டபத்திற்
சென்டெறிந்தான் வந்தனனாற் றேர்ந்து. (23)

நீதியறிந்தார் நிறையறிந்தா ரோடு மற்றைச்
சாதியரும் வந்தார் தரங்கம்போன்—மாதிரத்தை
விண்டா னவரவர்க்காம் வேண்டு முகமனுரை
கண்டான் கவினுறவே காண். (24)

வந்த நிதியமெலாம் வானவர்க்கு மண்ணவர்க்குந்
தந்தா னவரவர்க்குத் தக்கனவே—சிந்தா
குலமொழிந்தா ராகங் குளிர்ந்தார் குணஞ்சேர்
நலமிகுந்த தாயதந்த நாடு. (25)

கோணிலைகண் மாறிக் குளிர்வான மேசுரப்ப
நீணலங்க ளெங்கு நிறைந்தனவான்—மாணலத்தா
னந்நாட்டைத் தன்மகனுக் காக்கி யரனருள்சேர்
நன்னாடு சேர்ந்தா னனி. (26)

மேருவைச்செண்டாலடித்த திருவிளையாடல் முற்றிற்று.

---

## வேதத்துக்குப் பொருளுரைத்த திருவிளையாடல்.

செண்டுகொடு கற்புடைத்த செய்யவள மோதியபின்
கண்டமதி னஞ்சுடைய கண்ணுதலோன்—றொண்டருக்கா
வேதப் பொருளுரைத்த வித்தகஞ்சே ருங்கதையை
யோதப் புகுந்தனம்யா மோர்ந்து. (1)

பூதங்க ளொன்றொடொன்றாய்ப் போகப் புவியினொடு
வேதன்மா லிந்திரனார் மேவுலகுந்—தீதா
முருத்துறுமவ் வூழி யுலவுங்கால் வேதந்
திருத்தமறக் கெட்டனவாஞ் சென்று. (2)

போதங் கடந்தபரி பூரணத்தி னேசேர
மீதம் பரஞ்சுடரோ மிஞ்சியதா—னாத
னருளா லுலகதனை யாக்கத் திகிரித்
திருமாலைக் கண்டான் றெரிந்து. (3)

மாலுந்தி யின்கண் மலரோ னுதித்துலகேழ்
காலுந்தீ பூதமெலாங் கண்டதற்பின்—மேலுந்து
மூன்றுகா லங்கடந்த முத்தன் றிருவாக்கிற்
றோன்றியதே மூலத் தொனி. (4)

மூலப் பிரணவத்தின் முன்றோன்று நால்வேதச்
சீலப் பொருளறியாச் சிந்தையராய்—மாலுழக்கக்
கண்ணுவரோ யாதி கலங்குழந்த வெல்லைவயினின்
மண்ணினர பத்தனுற்றான் மாடு. (5)

தோன்ற முனிவர் தொழுதிருக்கை வேறுநல்க
வான்ற குணத்தா னவணிருந்து—மான்றே
னிரவிமுனம் வாரிசம தென்றமுகம் வாடுந்
தரமதுசொல் கென்றான் றக. (6)

என்றளவே வேதத் திரும்பொருளைக் காணாது
கன்று மனத்தாற் கலங்கினே—னென்றவுட
னப்பொருளை வேத மறைந்தோனே கூறுமுறை
செப்புவன்யா னென்றான் றெரிந்து. (7)

மண்ணிற் சிவதலத்தே மாண்புபெறு நோன்பதனைத்
திண்ணமுறச் செய்யிற் சிறப்புடைத்தாம்—பண்ணியலும்
வண்டுமுரல் பூஞ்சோலை வைகையுடை மாமதுரை
கண்டுசெய்வீ ரென்றான் களித்து. (8)

அத்தலமே சைவ வழகுடைய மாத்தலங்க
ளத்தலத்து மேலா மெழிலாகுஞ்—சித்துருவ
நாத னுறையு நளிர்துவாத சாந்தமென
வோதுதல மென்றா னுவந்து. (9)

அங்குத் தவம்புரியி னஃதுமக்காம் போந்துநீர்
துங்கவட நீழலமர் சோதியிடம்—பங்கமிலா
மாதவத்தைச் செய்யின் மறுவிலா நால்வருக்கும்
போதித்தா னேவருவான் போந்து. (10)

சொல்லு மறைப்பொருளைத் தோமறுசீ ராமெனவே
நல்லுமையான் சொன்ன நயம்பற்றிச்—செல்லுலவு
மம்பொனணிக் கோபுரஞ்சூ ழாலயத்திற் சென்றடைந்தா
ரம்பொன்மலர் சேர்தடமே யன்று. (11)

ஆடினார் தீர்த்தத்தி லஞ்செழுத்தை நெஞ்சிருத்திச்
சூடினார் சென்னிகரந் தொல்வினைக—ளோடிடமா
றங்கயற்க ணம்மை யமருமொரு பாகத்துச்
செங்கரும்பைக் கண்டனராற் றேர்ந்து. (12)

குன்றவில்லான் முப்புரத்தைக் கோளுறச்செய் தோய்வெள்ளி
மன்றினட மாடுகின்ற மாமணியே—யின்றெமக்கு
வேதப் பொருளை விரித்துரைக்கு மாறினிய
போதகனைய் வாவென்றார் போந்து. (13)

இன்ன பலவாறே யேத்தியந்த வங்கயற்க
ணன்னை பதம்போற்றி யாலநிழன்—மன்னியதோர்
தட்சணா மூர்த்தத் தனியுருவந் தங்குமிடம்
பட்சமுறச் சென்றார் பரிந்து (14)

வேத விதிப்படியே மிக்க தவம்புரிந்தார்
சீதமதி வேணித் திருமுடியான்—காதலுற
வன்னார் தவத்துக் கருள்சுரந்து வேதியரின்
மன்னினன் காளையுரு வாய்ந்து. (15)

புண்டரத்தி னீறு புகைநெற்றிக் கண்மறைப்பக்
குண்டலங்கள் காதிற் குலவவே—கண்டமதி
லக்க மணியொளியா லன்பர் மனத்திருளை
யக்கணமே யோட்டுமோ லன்று. (16)

மார்பிற் புரிநூல் வயங்கன் மலையருவி
யார்வத்தி னோடுவரு மத்தகைய—சீரொத்த
வெண்பட்டுப் போர்வை விரவ திருநீற்றின்
பண்பொத்த தாமுடலப் பாங்கு. (17)

பாதுகையுங் காலிற் பவித்திரமுங் கையிலிட்டுப்
போதகனாய் வந்து புகுந்தானை—யேதமிலா
மாமுனிவ ரேத்தி வணங்கினார் வண்டுமுரல்
பூவனைய பாதமதைப் போந்து. (18)

கல்லாலின் கீழிருந்து காண்பரிய மெய்யுரையைச்
சொல்லாமற் சொல்வந்த தோற்றமே—நல்ல
மறைப்பொருளை யெங்கண் மனமார சகல
நிறைத்தியென வேண்டினார் நின்று. (19)

மாதவர்க்குத் தாமுன் மறைப்பொருளைக் காட்டுதற்குப்
போத வருணனொளி பொற்பீட—மீதுவைவு
சுத்த சுயஞ்சோதித் தொல்லுருவைக் காட்டினான்
பத்தருக்குத் தோன்றுமா பண்டு. (20)

ஆறு தொழிலுடையீ ராகு மறைப்பொருளை
வேறுபடாச் சிந்தையொடு மேயறிவீ—ரீறுபடப்
சு மறுத்துப் பரகதியி லுய்ப்பிக்கு
று மொன்று னெகிழ்ந்து. (21)

வேதத் தரும்பொருள தாயதிந்தச்
ச் சோதியே—நித்தபர
துதிக ரில்லாத
ரிந்து. (22)

லகு மூன்றுகண்டான்
தா
ர்கி
(23)

அவ்விரண்டி னால்வேத மாகி யளவிறந்த
செவ்வியுள மந்திரமுந் தேர்ந்ததனி—னவ்வி
யகரமுத லக்கரங்க ளான நடுவிற்
றிகழ்கீழ் முகமதனிற் றேர். (27)

இருக்குப் பிறந்த தெழிறென் முகத்திற்
பெருக்கமுள தைத்திரியம் பேணு—நெருக்கு
குடமுகத்திற் சாமங் குதித்த குறைதீர்
வடபா லதர்வணத்தின் மாண்பு. (28)

இத்தகையே வேதனான் கென்னும் பெபரதனா
லத்தகையே சாதியினோ டாச்சிரம—முத்தமமா
நூலிரண்டு ஞானகன்ம நோக்கிற் கருமநா
னாலெட் டறமொழியு நன்கு. (29)

ஓதுமந்த ஞானநூ லொன்றிரண்டற் றானுருவைத்
தீதகலக் காட்டித் தெரிவிக்கும்—பேதமிலர்க்
கன்மத்தா னுண்டாங் கருதரிய சித்தசுத்தி
தன்ம வழிக்குத் தக (30)

வேதங்க டேடரிய வித்தகமிச் சித்துருவே
போதங் கடந்ததிந்தப் பூரணமே—பாதங்கண்
மானாடிக் கானா வடிவா மிலிங்கமிதன்
பானாடிப் பூசைசெயிற் பண்டு. (31)

ஆய வினைக ளனைத்தும்போய்ச் சாந்தியுண்டாந்
தூயவட்ட யோகமது தோன்றுமே—நேயமுள
ஞான முதிரு நடுவிகந்த பூரணத்திற்
றாமிருக்க லாகுமென்றான் றான். (32)

வேதப் பொருளை விரித்துரைத்தோ நாங்களுக்கே
யீதலது வேறுபொரு ளில்லையாற்—போத
மருணீக்கிச் சொன்ன வழிகண் டுணர்வீர்
தெருளாக்கங் கொள்ளவென்றான் றேர்ந்து. (33)

என்றவரைத் தாய்போ லெழிலுறக்கூ யின்பமுற
நன்ருய்ப் புறந்தடவி நாயகனு—மன்றவர்முன்
சென்றடைந்தே யந்தச் சிவலிங்கத் தேபுகுந்தா
னன்றடைந்த தேசிகனே யாம். (34)

வேதத்துக்குப்பொருளுரைத்த திருவிளையாடல் முற்றிற்று.

---

## மாணிக்கம் விற்ற திருவிளையாடல்.

வேதப் பொருளை விரித்துரைத்த வர்றுசொன்னோம்
போதகனும் வந்து புகுந்தவனுங்—கோதிலதோர்
மன்று ணடமாடு மணியு மணிபகர்ந்த
தின்றுரைக்க லானோ மிசைந்து. (1)

மீனக் கொடியான் விறல்வீர பாண்டியனு
லீனமிலாக் கோனடத்து மெல்லையின்வாய்த்—தானூவினும்
போக மடவாரின் புத்திரர்கண் டேகுலத்திற்
காகுமக வுக்கழிந்தா னன்று. (2)

ஆய மகப்பே றரியதா லங்கயற்கண்
ணேய முறுவானை நெஞ்சிருத்தித்—தூய
விரதநோற் பார்க்கு விமல னளித்தா
னிரவியொளி போற்சேயை யீங்கு. (3)

கற்புடையா டன்னுதரங் கண்டி தொருமகவு
பொற்புலவு மூவுல்கும் பூண்டரசி—னிற்குஞ்
செழியர் குலத்துத் திலகமே யாக
வழிவிலாக் கீர்த்தியுற்று னன்று. (4)

ஆயமகப் பேறு லரசன் மனமகிழ்ந்து
தூய மறையிற் சொனபடியே—நேயமுறச்
செய்தான் சடங்கனைத்துஞ் சேயுஞ் சிறுபிறையி
னெய்தில் வளர்ந்துவந்தா னொத்து. (5)

மைந்தன் வளரவந்த மன்னவனுக் கூழ்வினையா
லைந்துவிழுங் காலமது நண்ணியதாற்—சிந்தையினில்
வேட்டம் புகுந்தான் விரைவிற் புலியதனாற்
காட்டகத்தின் மாண்டானக் கால். (6)

இந்த வகையே யிவன்மாள விந்நாட்டார்
நொந்து தளர்ந்து நுவலருஞ்சீர்க்—கொந்தலருங்
கோதையந்த மன்னன் குடித்தேவி தானழுவே
பூதலமுந் தானழுத போந்து. (7)

வானாட்டு மங்கையொடு வாரிசத்தா ளுங்கலையைத்
தானாட்டுந் தேவியவ டானழுதாள்—பானாட்டுஞ்
சொல்லா டனமுந் துணைக்கரத்தி னாற்சேப்பப்
பால்லா ரழப்புடைத்தாள் பண்டு. (8)

அக்காலின் விண்ணடைந்தாற் காய சடங்கனைத்து
மிக்கானை யிற்கொண் டியற்றுங்கான்—மிக்காகக்
காமக் கிழத்தியர்தங் கான்முளைகள் கள்ளமுறச்
சேமத் தறைதிறந்தார் சென்று. (9)

வவ்வினார் பல்வளமு மாநிதியும் பன்மணியு
நவ்வியுறச் செய்த நளிர்முடியு—மவ்வயினிற்
கன்னிநாட் டின்னுரிமை காண்பா னமைச்சரெலா
முன்னினா ராங்கே யுவந்து. (10)

மாமகுடஞ் சூட்டவிந்த மைந்தனுக்கு நல்லோரை
தாமணுகுங் காலமதிற் றனிதியச்—சேமவறை
தன்னைத் திறந்தந்தத் தார்முடியைத் தேடினார்
மின்னுமுடி காணார் மெலிந்து. (11)

மாற்றார்கள் கொண்டு மறைந்தா ரெனவுமிக
வாற்றா தவரா யழுங்கினார்—தேற்றமுற
மன்னோர் முடிகாண்பான் வரன்மணியி லாதிவர்கள்
கற்றோ ருரைவழியே கண்டு. (12)

சித்துருவர் மந்தச் சிவத்தை வழிபட்டா
னத்துமந்த மாமணியை நல்குமென—வித்தகமார் (13)
மாமனையை நீத்தவர்கண் மாதேவர் வாழுமந்தக்
கோமனையைக் கண்டார் குறித்து.

பெத்தமற முத்தியெனும் பேரின்ப வாழ்வளிக்கும்
வித்தகனோர் வாணிபரின் மேதாவாய்க்—கொத்துமணி (14)
யன்றுகொண்டு வந்தான்ற னன்பருக்காய் முன்பரவை
முன்றிலிடைச் சென்ற முறை.

வந்தா னவர்முனநீர் வாடு முகத்தோடு
சிந்தா குலமுறுதற் செப்பென்றான்—முந்த (15)
வினையமெலாஞ் சொல்லி விதக்க விமல
னினையதனைச் சொன்னா னெடுத்து.

கவலையென்னை நுங்கள் கதிர்மா முடிக்குத்
தவமணிக ணம்பாற் றரிக்கு—நவமணியு (16)
மிக்கவிலை போயதனுன் மேவும் விலைகொடுத்தே
யிக்கணநீர் கொள்கவென்றா னின்று.

கரிய நிறமுடைய கம்பளத்தி னென்பான்
பெரிய மணியைப் பிரித்துப்—பிரியமுடன் (17)
காந்தொளிசேர் செம்மணியைக் காட்டினான் கற்குழைத்த
வேந்தலொரு வாணிபனா யின்று.

வைத்திவைகள் யாவும் வலன்றனுடற் சின்னமென
வத்திறத்தான் றன்மை யறைகெனவே—மெய்த்திறத்தி (18)
னன்னான் வளமு மவன்செய் தவப்பேறுஞ்
சொன்னான் மிகவாய்த் தொகுத்து.

வலவசுர னற்றவத்னித மாதேவன் மெச்சி
நலமாக வேட்டவர நல்கத்—தலமீது (19)
வந்திவனைக் கேட்க வரந்தன்க்கு வெஞ்சமரி
னந்தனுருப் பெற்று னயந்து.

முன்னை வினையான் முடிந்திடிலோ வென்னுடல
மின்னு நவமணியாய் மேவவரு—ளென்னுமுன்
றந்தா னமலன் றருவரங்கள் பெற்றவுட
னிந்திரன்மேற் சென்றான்போர்க் கேற்று. (20)

வானொடு சேர்ந்தான் வலாரியிவற் காற்றாது
தானோடு மாறு தடிந்தானக்—கோனு
மெதிர்த்துவெல நம்மா லியலா திவன்சொன்
முதித்திவனைக் கொல்வலென்றான் மற்று. (21)

சூழ்ச்சியொடு மன்னனின் றோள்வலியை மெச்சிநிற்கு
தாழ்ச்சியிலா நல்வரங்கொ டக்கவென—வீழ்ச்சியுறு
நின்வரத்தை வேட்டலெற்கு நீதியோ நிற்கிவன்
வன்மையுறக் கொள்கவென்றான் வந்து. (22)

எற்குவர நீகொடுக்க வேணுவையேல் வெள்ளியென
நிற்குமலைச் சாரலொரு நீள்யாகத்—திற்கே
பசுவாக வந்தப் பதிசே ருவதே
விசுவாச மென்றான் விரைந்து. (23)

என்பீந்த மாமுனிவ னேற்றபுக ழொன்றேயா
மென்பானீ கேட்டவர மீதலிலோ—தென்பா
மிருமைப் புகழான தெய்து மதனி
னுரிமையைக்கே ளென்றா னுவந்து. (24)

நின்போல்வார் முன்னோடா நீள்புகழோன் றென்னுடல
மின்போ லொளிர்மணியா மேம்பாடொன்—றின்புறவே
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (25)

என்றதனால் யாகமதற் கேற்ற பசுவாவோ
நன்றுபுரி யாகபல னம்பாலாம்—பொன்றுவதோ
வெக்காலு முள்ள தியல்பே யிருங்கருமத்
தொக்குதலே நன்றென்றா னோர்ந்து. (26)

என்ன மகன்றனக்கே யீந்தா னரசரிஃம
முன்னமறை யோது முறையாவா—யன்னவனுஞ்
சென்றான் மகச்சாலை சேர்வானைத் தர்ப்பைகொடு
வன்றமரர் கட்டினரா லங்கு (27)

கட்டினார் மேருவினைக் கண்டொருநா விற்பிணிக்கப்
பட்டதுபோ னின்றானப் பண்புடையான்—திட்டமுற
வாய்மைகாத் தின்னுயிரை மாய்த்த தசரதனின்
றாய்மையா மின்னான்வாய்ச் சொல். (28)

வேள்வி முடிக்க் விறலோன்ற னங்கமதிற்
கோளி லுறுப்பெடுத்துக் கொண்டுவந்த—நாளுதிர
மாணிக்கம் பச்சைபித்த மாம்யிரே வைடூர்யங்
காணிற் றுகிர்தசையாங் காண். (29)

வெண்ணிணமே கோமேத மேலென்ப தேவயிரங்
கண்ணிரண்டு நீலமெனக் காணலா—மண்ணதனிற்
பன்முத்தங் கோழை படுபுட்ப ராகமொடு
நன்மணிக ளொன்பதென்றா னன்கு (30)

மாமணிக ளொன்பானு மாசில்வாய்த் தேர்ந்தெடுத்துத்
தாமணியப் பெற்றார் தலமீது—காமருவு
பொன்னாடோ டிந்தப் புவிநாடுங் கீழ்நாடு
மெந்நாடு மாள்வரென்றா னேற்று. (31)

மக்கமொடு காளமிகு மாண்புலவு துந்துபர
மிக்குமந்த சிங்களத்தின் மேவுவதா—லொக்குமிவை
நான்குகத்து நான்கிடத்து நண்ணும் வருணமிவை
நான்குவகை யென்றா னனி. (32)

சாதரங்க மோடு சவுகந் திகமிக்கு
மோதுகுரு விந்த முயர் பதனாற்—காதலுறுங்
காவாங்க நான்குமுதற் கண்ட தொளியுளதை
யோவாது சொல்வலென்று ணோர்ந்து. (33)

கச்சோதங் கோபமழல் கார்விளக்கு மாதளம்பூ
மெச்சுவித்து நீலமலர் மேவுகதிர்—நச்சுங்
கமலமொளி பத்தெனவே காண்சாத ரங்க
மழலுமுறு மென்றா னறிந்து. (34)

வெள்ளிலோத் தம்மலரு மேவு திலகமொடு
கள்ளுலவு செம்பரத்தை காரணரிபொன்—முள்ளிலவு
குன்றி முயற்குருதி கோதில் பலாசமலர்
நன்றுகுரு விந்தமென்று னன்கு. (35)

செம்பஞ் சசோகின் செழுந்தளிரோ டம்பொன்னு
மிம்பர் குயிற்க ணிலவின்பூ—வம்பவிழு
மைவண்ணத் தோடே யறுக்ணஞ்சௌ கந்தியென
வுய்வண்ணங் காண்கவென்று னோர்ந்து. (36)

குரவு குசும்பமலர் கொவ்வைக் கனியும்
விரவுசெங்கல் நான்கொளியே மேவும்—பரவலுறுங்
காவாங்க மென்றுரைத்தான் கங்கைச் சடிலமுடைத்
தேவாதி தேவன் றெரிந்து. (37)

முற்சாதி யேவயிர முத்த முறைசெலுத்து
நற்சாதி மாணிக்க நற்பவளம்—பிற்சாதி
வைடூரி யம்புருட மாராக கோமேத
மைநீலம் பச்சைகடை மாண்பு. (38)

முத்துப் பிறக்குமிட முந்நான்கொ டொன்றாகும்
வித்தகஞ்சேர் சங்கமிப்பி வேய்கரும்பு—சுத்தமுகில்
பாம்புதலை பன்றிப் பருங்கோ டிபமருப்பு
மோம்புகின்ற சாலியுமா மோர் (39)

சிங்கமொடு மானுஞ் சிறகுடைய கொக்கினொடு
பங்கமிலாப் பெண்கண்டம் பாற்றோன்றுந்—துங்கமுள
வமமுத் தணிவார்க் கெழிற்பாற் கடற்றோன்று
மம்மையருள் மேவுமென்று னன்று. (40)

மாணிக்கம் விற்கவந்த வாணிகனும் வானினிடைக்
காணச் சதுர்ப்புயமுங் காளகண்டங்—கோணுமதிச்
செஞ்சடையி னோடு திரிபுண் டரநுதலும்
பஞ்சவற்குக் காணவந்தான் பண்டு. (55)

காட்டினான் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தான்முன்
காட்டானை சாபங் கழித்தானோர்—கோட்டானை
யின்ற பெருமா னெழின்மதுரைக் கோயிலுற
வான்றனமைச்ச ரோடுசென்றா னங்கு. (56)

கோமகனோ டேகியந்தக் கோயிலுறை வான்பதத்தின்
காமருறு மர்ச்சனையைக் கண்டதற்பின்—சோமனன்னப்
பேர்பூண் டரசாண்ட பெற்றியனைத் தாழ்ந்தார்கள்
கார்பூண்ட மஞ்ஞையெனக் கண்டு. (57)

காணற் கெளியதோ கைம்மாறு வேறுளதோ
பேணுமுட லாவிபொருள் பெட்புறவே—கோணவிலா
துன்னவெனத் தந்தே முடையா யெனப்பரவி
மன்னனொடுஞ் சென்றார் மகிழ்ந்து. (58)

ஐய னளித்தவந்த வாய்மணியான் மாமகுடஞ்
செய்திவற்குச் சூட்டியபின் செங்கோன்மை—துய்ய
வபிடேக பாண்டியப்பே ராகி யரசாண்டான்
விபுதேயத் தோடு விரைந்து. (59)

மாற்றார்கள் வவ்வும் வளநிதிய மத்தனையு
மாற்றா தவரா யழுங்குறவே—சீற்றமுறக்
கைச்சிலையி னவ்வரைக் கண்டித்துத் தன்வளத்தை
மெச்சலுறக் கொண்டான் விரைந்து. (60)

மாணிக்கம்விற்ற திருவிளையாடல் முற்றிற்று.

## வருணன் விட்ட கடலை வற்றச்செய்த திருவிளையாடல்.

வண்ண மணிபகர்ந்த வாறுரைத்தோ மாமுகிலா
னுண்ணக் கடலி னுதகத்தைக்—கண்ணுதலான்
செய்த வினையின் றிறனுரைத்து மின்வுடலை
ய்தற் பொருட்டா னுவந்து (1)

இந்திரனார் பூசைக் கிசையுமந்த மேடமதி
நந்திலிலாப் பூரணையு நண்ணுதினம்—விந்தையுறப்
பாண்டியன்றான் மிக்க பரிவோ டருச்சனைக்கு
வேண்டுவன கொண்டான் விரைந்து. (2)

ாம வரையுங் வதறு தருச்சிக்கப்
பரமலியும் பொன்னாட்டுப் பார்த்திபனு—மாமதுரைச்
சொக்கேசர் பூசனையின் றொண்டியங்கா தங்கொருபாற்
புக்கிருந்தா னெஞ்சு புலர்ந்து. (3)

செழியன்றன் பூசைத் திறனொழிந்த பின்னர்
விழியா யிரத்தான் மிலைந்த—பழிநந்த
முன்செய்த வெம்மான் முழுமலர்த்தா ளைப்போற்றி
நன்செயலாச் சென்றா னயந்து. (4)

பொன்னாட்டான் மண்ணாட்டுப் போர்வேந்தன் செய்தவத்தா
னன்னாட்ட மூன்றுடைய நாயகனு—மந்நாட்டிற்
போந்தா னவன்பெருமை போற்றற் கரியதெனத்
தேர்ந்துணர்ந்தா னந்தத் தினம் (5)

மகவான் பதிக்கன்று வந்த வருணன்
நகமார் சிறகரிந்த நண்ப—மிகவே
வனச முகமும் வடிவிலதா வாடிக்
கனமிழந்த தென்னென்றான் கண்டு. (6)

அப்பொருளுந் தானா மிறைவ னெழின்மதுரை
யப்பனுக்குத் தொண்டுசெயு மக்காலந்—தப்ப
மனமறுக்கங் கொள்ளும் வினைவந்த தென்றான்
கனவருக்கத் தேறுமனன் கண்டு. (7)

அன்ன தலப்பெருமை யாதென்று ஞற்கடலோன்
முன்னை வினை நீக்கி முழுமுதலான்—மன்னுமோ
ரென்பழியும் வேழத் திரும்பழியுந் தீர்த்ததென
வன்புறவே சொன்னு னவன். (8)

ஆயதே லென்னே யகலும் வகையவன்றன்
றாயவரு ளுண்டாமோ சொல்லென்றான்—காயப்
பிறப்பிறப்பாந் துன்பப் பிணிதீர்ப்பார்க் கிந்நோய்
குறைப்பரிதோ வென்றான் குறித்து. (9)

நிற்காண்பான் யான்வருகை நேருங்கா னற்சகுன
மற்கானுந் திண்புயத்தோய் மன்னியதா—லெற்குறுநோய்
தீருமா றுய திறத்தான் புகழ்மதுரை
சேருமாக் கண்டனென் றான் றேர்ந்து. (10)

மன்னு முவரியையுநின் மாண்பினுன் மாமதுரை
தன்னை யழிக்கத் தலைப்படென்று—னந்நீரும்
பொங்கியெழ வந்நகரார் பொங்கியந்த மன்னனுறை
துங்கமனைச் சென்றார் தொடர்ந்து. (11)

கோவேநம் மாநகரைக் கொள்ளைகொள்ள வேபுணரி
மாவேக மோடு வருவதா—லாமேகி
நங்குலத்தைக் காக்குமந்த நாயகன்பாற் சொல்லிலவன்
பங்கமதை நீக்குமென்றார் பண்டு. (12)

வேண்டுவோ மாகிலந்த வேத முடியதனிற்
றுண்டவமே செய்வான் றவிர்ப்பனென—வாண்டகைபு
மன்னவதே நற்கரும மாகுமென வந்தரத்தை
மன்னுதலங் கண்டான் மகிழ்ந்து. (13)

கூடினன் கூடிக் குதித்தான் குரைகழலைப்
பாடினன் மிக்குப் பரிதவித்தா—னீடுபுகழ்ப்
பாண்டியனு மிந்தப் பதிகாத்தோ மிந்நகர்பேற்
றாண்டுவரி போக்கவென்றான் பட்டு. (14)